தமிழ்நாடு அரசு

# சமூக அறிவியல்

## பத்தாம் வகுப்பு

தீண்டாமை
மனித நேயமற்ற செயல் – பெருங்குற்றம்

### பள்ளிக் கல்வித்துறை

தமிழ்நாடு அரசு
இலவசப் பாடநூல் வழங்கும்
திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது
( விற்பனைக்கு அன்று )

© தமிழ்நாடு அரசு
முதல் பதிப்பு – 2011
சமச்சீர்க் கல்வி பொதுப் பாடத் திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட நூல்

**குழுத்தலைவர்**

**வரலாறு & குடிமையியல்**

Prof. A.P. ஜனார்த்தனம்,
முதல்வர்(ஓய்வு),
எஸ்.எஸ். அரசு கலைக் கல்லூரி,
திருத்தனி, திருவள்ளூர் மாவட்டம்.

**புவியியல் & பொருளியல்**

Dr. D. வெங்கட்ராமன்,
துணைப் பேராசிரியர்,
கல்வியியல் மேம்பாட்டு நிறுவனம் (IASE),
சைதாப்பேட்டை, சென்னை–15.

**மேலாய்வாளர்கள்**

Dr. M.N. ராஜேந்திரன்,
உதவிப் பேரசிரியர்,
மாநிலக் கல்லூரி,
சென்னை–5.

Dr. M. மணிமேகலை,
முதல்வர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம்,
திருவல்லிக்கேணி, சென்னை–5.

திரு. P. முத்துசாமி,
தலைமை ஆசிரியர்,
வெள்ளாலர் பெண்கள் உயர்நிலைப் பள்ளி,
திண்டல், ஈரோடு மாவட்டம்–12.

திருமதி. V. மீனாட்சி,
முதல்வர்,
KRP அகாடெமி,
சித்தோடு, ஈரோடு மாவட்டம்.

**நூல் ஆசிரியர்கள்**

Dr. A. சுப்ரமணியன்,
விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம்,
கிருஷ் ணகிரி.

திருமதி. P. கௌரி சண்முகம்,
தலைமை ஆசிரியர்,
அரசு மேல் நிலைப் பள்ளி,
புதுப்பாளையம், திருவண்ணாமலை மாவட்டம்.

திருமதி. மேரி செல்வா,
முது கலை ஆசிரியர்,
HNUPR பெண்கள் மேல்நிலைப் பள்ளி,
நிலக்கோட்டை, திண்டுக்கல் மாவட்டம்.

திரு. M. சாமிநாதன்,
விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம்,
கோத்தகிரி, நீலகிரி மாவட்டம்.

திரு. K.கோவிந்தராஜன்,
பட்டதாரி ஆசிரியர்,
BVB. மெட்ரிக். மேல்நிலைப் பள்ளி,
திண்டல், ஈரோடு–12.

திருமதி. M. ஹேமலதா,
பட்டதாரி ஆசிரியர்,
BVB மேட்ரிக். மேல்நிலைப் பள்ளி,
திண்டல், ஈரோடு–12.

திருமதி. C.வள்ளியம்மை
பட்டதாரி ஆசிரியர்,
BVB. மெட்ரிக். மேல்நிலைப் பள்ளி,
திண்டல், ஈரோடு–12.

திரு. P. தியாகராஜன்,
முது கலை ஆசிரியர்,
மறைமலை அடிகள் அரசு மேல்நிலைப் பள்ளி,
பல்லாவரம், சென்னை–43.

கணினி அச்சு: R.சாமுண்டீஸ்வரி M.இராஜலட்சுமி S.சரத்சந்தின் வடிவமைப்பு : என்.செல்வமணி
அட்டை வடிவமைப்பு: என்.செல்வமணி வரைகலை: என்.செல்வமணி, எம். கார்த்திகேயன், வ. சபாஷ்குமார்

நூல் அச்சாக்கம்
தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்,
கல்லூரிச்சாலை, சென்னை–600 006.

**விலை: ரூ.**

இந்நூல் 80.ஜி.எஸ்.எம். மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது.

ஆப்செட் முறையில் அச்சிட்டோர்:

## பொருளடக்கம்


| அலகு | பாட எண் | பாடம் | பக்க எண் |
|---|---|---|---|
| | | **வரலாறு** | |
| I. | 1. | ஏகாதிபத்தியம் | 1 |
| II. | 2. | முதல் உலகப்போர் கி.பி.1914 – கி.பி.1918 – சர்வதேச சங்கம் | 11 |
| III. | 3. | இருஉலகப்போர்களுக்கிடையே உலக நிலை கி.பி.1919–கி.பி.1939– பொருளாதார பெருமந்தம் | 23 |
| | 4. | இத்தாலியில் பாசிசம் கி.பி.1922–கி.பி.1945 | 27 |
| | 5. | ஜெர்மனியில் நாசிசம் கி.பி1933–கி.பி.1945 | 31 |
| IV. | 6. | இரண்டாம் உலகப் போர் கி.பி.1939–கி.பி.1945 | 36 |
| | 7. | ஐக்கிய நாடுகள் சபை – 1945 | 44 |
| | 8. | ஐரோப்பிய ஒன்றியம் | 50 |
| V. | 9. | 1857 ஆம் ஆண்டு மாபெரும் கிளர்ச்சி அல்லது முதல் இந்திய சுதந்திரப் போர் | 55 |
| VI. | 10. | 19 ஆம் நூற்றாண்டில் சமூக மற்றும் சமய சீர்திருத்த இயக்கங்கள் | 65 |
| VII. | 11. | இந்திய விடுதலை இயக்கம் – முதல் நிலை–காந்திக்கு முந்தைய சகாப்தம் கி.பி.1885 – கி.பி.1919 | 76 |
| | 12. | இந்திய விடுதலை இயக்கம் – இரண்டாம் நிலை – காந்திய சகாப்தம் கி.பி. 1920– கி.பி1947 | 85 |
| | 13. | இந்திய விடுதலை இயக்கத்தில் தமிழ் நாட்டின் பங்கு | 100 |
| VIII. | 14. | தமிழ்நாட்டில் சமுதாய மாற்றங்கள் | 108 |
| | | **புவியியல்** | |
| I. | 1. | இந்தியா அமைவிடமும் இயற்கை அமைப்பும் | 118 |
| | 2. | இந்தியா – காலநிலை | 143 |
| II. | 3. | இந்தியா – இயற்கை வளங்கள் | 156 |
| III. | 4. | இந்தியா – வேளாண்தொழில் | 177 |
| IV. | 5. | இந்தியா – தொழிலகங்கள் | 193 |
| V. | 6. | சுற்றுச்சூழல் பிரச்சனைகள் | 206 |
| VI. | 7. | இந்தியா – வணிகம், போக்குவரத் மற்றும் தகவல் தொடர்பு | 214 |
| VII. | 8. | தொலை நுண்ணுணர்வு | 232 |

## குடிமையியல்


| | | | |
|---|---|---|---|
| I. | 1. | இந்தியாவும் உலக அமைதியும் | 240 |
| II. | 2. | மக்களாட்சி | 245 |
| | 3. | வேற்றுமையில் ஒற்றுமை | 253 |
| III. | 4. | நுகர்வோர் உரிமைகள் | 257 |


## பொருளியல்


| | | | |
|---|---|---|---|
| I. | 1. | நாட்டு வருமானம் | 263 |
| II. | 2. | விடுதலைக்குப்பின் இந்திய பொருளாதாரம் | 271 |

## சமச்சீர்க் கல்வி திட்டம் – வினாத்தாள் வடிவமைப்பு – 10 ஆம் வகுப்பு
## வரலாறு மற்றும் குடிமையியல்

| வரலாறு | புறவய வினாக்கள் (1 மதிப்பெண்) | | | குறு வினாக்கள் (2 மதிப்பெண்) | | | தலைப்பு வினாக்கள் (4 மதிப்பெண்) | | | பத்தி வினாக்கள் (5 மதிப்பெண்) | | | வரைபடம் (1 மதிப்பெண்) | காலக் கோடு | மொத்த மதிப்பெண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அ | பு | ப | அ | பு | ப | அ | பு | ப | அ | பு | ப | | தி | |
| அலகு-I | - | 1 | - | 1 | 1 | - | - | - | 1 | 1 | - | - | 5 | | |
| அலகு-II | 1 | - | - | | | | | | | | | | | ✓ | |
| அலகு-III | 1 | - | - | | | | - | - | 1 | | | | | | |
| அலகு-IV | 1 | - | - | | | | | | | | | | | ✓ | |
| அலகு-V | - | 1 | - | 1 | 1 | - | - | 1 | - | - | - | 1 | | ✓ | |
| அலகு-VI | 1 | - | - | | | | | | | | | | | | |
| அலகு-VII | - | 1 | - | 1 | 1 | - | 1 | - | - | - | 1 | - | | ✓ | |
| அலகு-VIII | 1 | 1 | - | | | | | | | | | | | | |
| மொத்த மதிப்பெண் | 9 | | | 12 | | | 16 | | | 15 | | | 5 | 5 | 62 |
| **குடிமையியல்** | | | | | | | | | | | | | | | |
| அலகு-I | 1 | - | - | 1 | - | - | | | | 1 | - | - | | | |
| அலகு-II | - | 1 | - | - | 1 | - | | | | - | 1 | - | | | |
| அலகு-III | - | - | 1 | - | - | - | | | | - | - | 1 | | | |
| மொத்த மதிப்பெண் | 3 | | | 4 | | | - | | | 15 | | | | | 22 |

குறிப்பு: "✓" காலக்கோடு அட்டவணை கேட்கப்படும் அலகுகள்
"உ" உலக வரைபடம்
"இந்தியா" இந்தியா வரைபடம்
"அ" அறிதல், "பு" புரிதல், "ப" பயன்படுத்துதல், "தி" திறன்

## சமச்சீர்க் கல்வி திட்டம் – வினாத்தாள் வடிவமைப்பு – 10 ஆம் வகுப்பு
## புவியியல் மற்றும் பொருளியல்

| புவியியல் | புறவய வினாக்கள் (1 மதிப்பெண்) | | | குறு வினாக்கள் (2 மதிப்பெண்) | | | வேறுபடுத்துதல் (2 மதிப்பெண்) | | | பத்திவினாக்கள் (5 மதிப்பெண்) | | | வரைபட திறன் (2 மதிப்பெண்) | மொத்த மதிப்பெண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அ | பு | ப | அ | பு | ப | அ | பு | ப | அ | பு | ப | | |
| அலகு-I | 2 | - | - | 1 | 1 | - | 1 | - | 1 | - | 1 | - | 5 | |
| அலகு-II | 2 | - | - | - | - | 1 | - | 1 | - | - | | - | | |
| அலகு-III | 2 | - | - | 1 | - | - | - | - | 1 | - | 1 | - | | |
| அலகு-IV | 2 | - | - | - | 1 | - | 1 | 1 | - | - | | - | | |
| அலகு-V | 1 | - | - | 1 | - | - | - | - | - | - | - | 1 | | |
| மொத்த மதிப்பெண் | 9 | | | 12 | | | 12 | | | 15 | | | 10 | 58 |
| | | | | | | | | | | | | | | |
| **பொருளியல்** | | | | | | | | | | | | | | |
| அலகு-I | 1 | - | - | - | 1 | - | - | - | - | 1 | - | - | - | 8 |
| அலகு-II | 2 | - | - | - | - | 1 | - | - | - | - | 1 | 1 | - | 14 |
| மொத்த மதிப்பெண் | 3 | | | 4 | | | - | | | | 15 | | | 22 |

# வரலாறு

## 1. ஏகாதிபத்தியம்

### அ. ஏகாதிபத்தியம்

ஐரோப்பாவில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி மற்றும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் அரசியலிலும் பொருளாதாரத்திலும் ஒரு மாபெரும் எழுச்சி ஏற்பட்டது. இந்த எழுச்சியால் ஐரோப்பிய வல்லரசுகள் தங்களின் ஆதிக்கத்தை மற்ற நாடுகளின் அரசியலிலும், பொருளாதாரத்திலும் நிலைநாட்ட முற்பட்டன. இதையே நாம் ஏகாதிபத்தியம் என அழைக்கின்றோம். ஏகாதிபத்தியம் என்ற சொல் Imperium என்ற லத்தின் சொல்லிருந்து வந்தது. இதன் பொருள் ஆதிக்கம் (Power) என்பதாகும்.

ஏகாதிபத்தியம் என்பது ஒரு நாடு பிற நாடுகளின் பகுதிகளை வலுக்கட்டாயமாக வென்று அவற்றை தனது ஆட்சியின் கீழ் கொண்டு வருதல் (அல்லது) ஒரு நாட்டின் ஆட்சி மற்றொரு நாட்டின் மீது திணிக்கப்படுதல் (அல்லது) ஒரு நாடு மற்றொரு நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதார அதிகாரங்களைத் தன் வசப்படுத்தி அந்நாட்டின் இயற்கை வளங்களை பயன்படுத்திக் கொள்ளுதல் ஆகும்.

### காலனி ஆதிக்கம் மற்றும் ஏகாதிபத்தியம்

கி.பி.1492ஆம் ஆண்டு முதல் கி.பி.1763ஆம் ஆண்டு வரையில் ஐரோப்பிய நாடுகள் பின்பற்றிய கொள்கை காலனிஆதிக்கம்என அழைக்கப்படுகிறது. இக்காலக் கட்டத்தில் இங்கிலாந்து, பிரான்சு, ஸ்பெயின் மற்றும் போர்ச்சுகல் ஆகிய நாடுகள் தங்களின் குடியேற்றங்களை ஆசியா மற்றும் அமெரிக்க கண்டங்களில் ஏற்படுத்தின.

காலனி ஆதிக்கம் என்பது குடியேற்றங்களை அந்நிய நாட்டில் ஏற்படுத்தி அதன் இயற்கை வளங்களைச் சுரண்டுதல் ஆகும். மேலும், இது உள்நாட்டு பெரும்பான்மையினருக்கும் அந்நிய சிறுபான்மையினருக்கும் இடையில் ஏற்பட்ட நெருடலான உறவு ஆகும்.

ஏகாதிபத்தியம் என்பது ஒரு நாட்டின் கொள்கையாகும். இது கொள்கை ரீதியாகவும், பொருளாதார காரணங்களுக்காகவும் ஏற்படுத்தப்பட்டது. ஏகாதிபத்தியம் என்பது கொள்கை, காலனி ஆதிக்கம் என்பது நடைமுறைபடுத்தப்பட்ட ஆதிக்கம் ஆகும்.

கி.பி.1763 ஆம் ஆண்டு முதல் கி.பி.1870 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் ஐரோப்பிய நாடுகள் பல போர்களிலும், நாட்டின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டன. இத்தாலி மற்றும்ஜெர்மனியின் ஒருங்கிணைப்பிற்குப் பிறகு, அந்நாடுகள் ஆசியா மற்றும் ஆப்பிரிக்க கண்டங்களில் தங்களின் ஆதிக்கத்தை நிலை நாட்ட முயற்சித்தன. கி.பி.1870 ஆம் ஆண்டு முதல் கி.பி.1945ஆம் ஆண்டு வரை ஐரோப்பிய நாடுகளால் பின்பற்றப்பட்ட ஏகாதிபத்தியக் கொள்கை புதிய ஏகாதிபத்தியம் என அழைக்கப்பட்டது.

### முக்கிய ஏகாதிபத்திய அமைப்புகள்

19 ஆம் நூற்றாண்டில் ஏகாதிபத்தியம் இரண்டு முக்கிய அமைப்புகளாகக் காணப்பட்டன.

நாடுகள் தங்களின் படைகளை அனுப்பி மற்ற நாடுகளில் நேரடி ஆதிக்கத்தை ஏற்படுத்துதல்

நாடுகளின் தலைவர்களைத் தன் ஆளுமையின் கீழ் கொண்டு வந்து, அவர்கள் மூலம் மறைமுக ஆட்சியை ஏற்படுத்துதல்.

### இராணுவ ஏகாதிபத்தியம்

அமெரிக்கா ஈராக்கின் மீது படையெடுத்து அங்கு தன் நாட்டிற்குச் சாதகமான ஒரு அரசை ஏற்படுத்தியது.

இது இராணுவ ஏகாதிபத்தியம் என அழைக்கப்படுகிறது.

### அரசியல் ஏகாதிபத்தியம்

ஆங்கிலேயர்கள் இந்தியாவைக் கைப்பற்றி தங்களுடைய அலுவலர்களை நியமித்து ஏற்கனவே இருந்த அரசியல் அமைப்பைத் தங்களுக்குச் சாதகமான முறையில் மாற்றி அமைத்துக் கொண்டனர். இத்தகைய ஏகாதிபத்தியம் அரசியல் ஏகாதிபத்தியம் என அழைக்கப்படுகிறது.

### பொருளாதார ஏகாதிபத்தியம்

மஞ்சு வம்ச அரசர்கள், சீனாவை அரசியல் ரீதியாக சுதந்திரமாக ஆட்சி செய்த போதும், ஐரோப்பியர்களும், அமெரிக்கர்களும் அதன் பொருளாதாரத்தை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டனர். இதுவே பொருளாதார ஏகாதிபத்தியம் என அழைக்கப்படுகிறது.

### ஏகாதிபத்தியம் ஏற்படக் காரணங்கள்

### தொழிற்புரட்சி (Industrial Revolution)

ஐரோப்பாவில் ஏற்பட்ட தொழிற் புரட்சியின் காரணமாக பொருள்களின் உற்பத்தி அதிகரித்தது. எனவே, ஐரோப்பிய நாடுகளுக்கு உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்களும், உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் விற்பனைக்கான சந்தைகளும் தேவைப்பட்டன. தொழிற்புரட்சி, போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்புத்துறையில் முன்னேற்றத்தை ஏற்படுத்தியது. இரயில்வே துறையில் ஏற்பட்ட முன்னேற்றம் மூலப்பொருட்களை தொழிற்சாலைகளுக்கும், விற்பனை பொருள்களைச் சந்தைக்கும் விரைவாக எடுத்துச் செல்ல பேருதவி புரிந்தது. ஐரோப்பிய நாடுகளில் தொழில் பாதுகாப்புச் சட்டம் பின்பற்றப்பட்டதால், உள்நாட்டு சந்தைகளில் தங்களின் பொருள்களை விற்க இயலவில்லை. எனவே தொழிற்புரட்சி மலராததின் காரணமாக ஆசியா மற்றும் ஆப்பிரிக்கக் குடியேற்ற நாடுகள் நல்ல சந்தைகளாகவும் மூலப் பொருள்களை அளிக்கும் இடங்களாகவும் செயல்பட்டன. எனவே ஐரோப்பியர்கள் அந்நாடுகள் மீது உரிமை கொள்ள விழைந்தனர்.

### தேசியப் பாதுகாப்பு (National Security)

தனது நாட்டின் செல்வ வளம் அயல்நாட்டில் முதலீடு செய்யப்படும்போது அதன் பாதுகாப்பிற்காக அந்நாடுகளைத் தங்களின் கீழ்க்கொண்டுவர ஐரோப்பிய நாடுகள் விரும்பின.

### தேசியமயமாக்கல் (Nationalisation)

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற் பகுதியில் அதிதீவிர நாட்டுப்பற்றுக் கொள்கை ஐரோப்பாவில் ஏற்பட்டது. பல நாடுகள் தங்களின் இனப்பெருமை, பண்பாட்டுப்பெருமை, மொழிப்பற்று ஆகியவற்றைப் பெரிதும் வளர்த்துக் கொண்டன. அந்நாடுகள் தம் நாட்டு பெருமையை நிலைநாட்ட வளர்ச்சி குன்றிய நாடுகளின் மீது ஆதிக்கம் செய்ய விரும்பின. தம் நாட்டின் கௌரவத்தை அதிகரிக்கச் செய்யும் பொருட்டு அதிகக் குடியேற்ற நாடுகளை அடைய விரும்பின. ஏகாதிபத்தியம் அக்கால நாகரிகமாகக் கருதப்பட்டது. மேலும் ஐரோப்பிய வெள்ளை இன மக்கள் தங்களை உயர்வாகவும், கருப்பின ஆப்பிரிக்க ஆசிய மக்களுக்கு நாகரிகம் கற்றுத்தருவது தங்களின் பெரும் சுமை என்று கருதியதும் ஏகாதிபத்தியம் ஏற்பட வழிவகை செய்தது எனலாம்.

### சமநிலை ஆதிக்கம் (Balance of Power)

சமநிலை ஆதிக்கம் பெற ஐரோப்பிய நாடுகள், தங்களுக்குப் போட்டியாக உள்ள நாடுகள் மற்றும் அண்டை நாடுகளுக்கு இணையாக குடியேற்ற நாடுகளை ஏற்படுத்த முற்பட்டன.

### புதிய வழித்தடங்கள் கண்டுபிடிப்பு

ஆப்பிரிக்க, ஆசியக்கண்டங்களை அடையக் கண்டுபிடிக்கப்பட்ட புதிய வழித் தடங்கள் ஏகாதிபத்தியக் கொள்கையை ஊக்குவித்தன. புதிய கடல் வழித்தடங்கள் வணிகர்களுக்கும், இராணுவத்திற்கும் குடியேற்ற நாடுகளில் உள்ள பெரும்

செல்வத்தைச் சுரண்ட பேருதவியாக இருந்தன.

### மக்கள் தொகைப்பெருக்கம் (Growth of Population)

மக்கள்தொகைப் பெருக்கம், அதன் விளைவாக ஏற்பட்ட வேலையின்மை ஐரோப்பியர்களை குடியேற்றங்களுக்காகவும் மற்றும் வேலைவாய்ப்பிற்காகவும் வேறு நாடுகளைத் தேடிச் செல்லத்தூண்டியது

### சட்ட ஒழுங்கின்மை (State of Anarchy)

முதலாம் உலகப்போருக்கு முன் உலக நாடுகளைக் கட்டுப்படுத்தி நாடுகளுக்கிடையே அமைதியை வளர்க்கவும் பாதுகாப்பை வலுப்படுத்தவும் சட்டங்கள் இயற்றக் கூடிய சர்வதேச அமைப்பு இல்லை. இந்த சட்ட ஒழுங்கற்ற நிலை குடியேற்றங்களைக் கைப்பற்றுவதற்கு வழி வகுத்தது.

### ஏகாதிபத்தியம் – வழிமுறைகள்

### போர் மற்றும் கையகப்படுத்துதல் (Conquest and Annexation)

ஏகாதிபத்தியத்தை ஏற்படுத்த பல வழிமுறைகள் கையாளப்பட்டன. நவீன காலத்தின் தொடக்கத்தில் ஸ்பெயின், பிரான்சு, இங்கிலாந்து போன்ற நாடுகளால் அனுப்பப்பட்ட படை வீரர்கள் பல நாடுகளின் தலைமையை வீழ்த்தி, அங்கு ஏகாதிபத்தியத்தை நிலைநாட்டினர். இது போர் மூலம் நாடுகளைக் கையகப்படுத்துதல் முறையாகும்.

### சலுகைகள் அல்லது உரிமைகள்

சில நேரங்களில் தீவிர அமைப்புகள், பிற்படுத்தப்பட்ட நாடுகளின் பொருளாதார வளங்களை சுரண்டும் பிரத்தியேக உரிமையைப் பெற்றிருந்தன. இதற்கு சலுகைகள் அல்லது உரிமைகள் முறை என்று பெயர். துருக்கியில் நீண்ட இரயில்பாதை அமைக்கும் பிரத்தியேக உரிமையை ஜெர்மனியைச் சேர்ந்த வணிகர்கள் மற்றும் பொறியாளர்கள் குழு பெற்றிருந்தது.

### குத்தகை உரிமை (Leasehold)

சில நாடுகள் தங்கள் குடியேற்ற நாடுகளிடமிருந்து ஒரு நிலப்பகுதியை குத்தகைக்குப் பெற்று அங்குள்ள பொருளாதார வளங்களைச் சுரண்டி வந்தன. பின்னர் அந்தக் குத்தகை நிலங்களின் மீது தங்களது அரசியல் ஆதிக்கத்தை ஏற்படுத்தின. ஜெர்மானியப் பேரரசு சீனாவிடம் இருந்து ஷாண்டுங் தீபகற்பத்தின் மீது 99 ஆண்டுகளுக்கான குத்தகை உரிமம் பெற்றிருந்தது.

### செல்வாக்கை நிலைநாட்டுதல் (Sphere of Influence)

'செல்வாக்கை நிலைநாட்டுதல்' என்னும் முறைப்படி சில நாடுகள் குடியேற்ற நாடுகளில் சில பகுதிகளில் பொருளாதாரத்தைச் சுரண்டும் தனி உரிமையை ஏற்படுத்திக் கொண்டன. உதாரணமாக 1907 ஆம் ஆண்டு பிரிட்டன் மற்றும் ரஷ்யா, பாரசீக நாட்டைத் தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டன. ஐரோப்பிய நாடுகள் சீனாவிலும் இதே வழிமுறையையே பின்பற்றின.

### பாதுகாப்பு ஏற்படுத்துதல் (Protectorate)

பெரும்பான்மையான ஐரோப்பிய நாடுகள் ஆப்பிரிக்க நாடுகளின் தலைமைப் பொறுப்பில் இருப்பவர்களுடன் (puppet ruler) உடன்படிக்கை ஏற்படுத்திக்கொண்டு மாபெரும் நிலப்பரப்பைத் தங்கள் வசப்படுத்தி, பின்னர் அதனைச் சுரண்ட முற்பட்டனர். இத்தகைய முறைக்கு 'பாதுகாப்பு ஏற்படுத்துதல்' என்று பெயர். உதாரணம், 1912–ஆம் ஆண்டு பிரான்ஸ் மொராக்கோ மீது தனது பாதுகாப்பை நிலை நாட்டியது.

### பொருளாதாரம் அல்லது வரிக்கட்டுப்பாடு (Economic or Tariff control)

சில சமயங்களில் வலிமையான ஒரு நாடு வலிமை குறைந்த ஒரு நாட்டின் மொத்த பொருளாதார அதிகாரங்களை தன் வயப்படுத்திக் கொள்ளுதல் பொருளாதார அல்லது வரிக்கட்டுப்பாடு முறையாகும். உதாரணமாக முதலாம்

உலகப்போருக்கு முன் துருக்கியில் அனைத்துப் பொருளாதார அமைப்புகளும், ஆட்டோமான் பொது கடன் நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது. இந்த நிர்வாகத்தில் இருந்த அனைவருமே ஐரோப்பிய அதிகாரிகள் ஆவர்.

### ஒப்படைப்பு முறை (Mandate system)

இது புதிய ஏகாதிபத்தியத்தின் இறுதி வழிமுறையாகும். இது 1919 ஆம் ஆண்டு நடைபெற்ற பாரீஸ் அமைதி மாநாட்டில் தென்னாப்பிரிக்காவைச் சேர்ந்த ஜெனரல் ஜான் ஸ்மட் என்பவரின் ஆலோசனைப்படி உருவாக்கப்பட்டது. முந்தைய கால குடியேற்ற நாடுகளில் பலவும், பிற்படுத்தப்பட்ட பகுதிகளும் சர்வதேச சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டன. இச்சங்கம் சில கட்டுப்பாடுகளுடன், இத்தகைய நாடுகளைப் பராமரிக்கும்படி பல நாடுகளிடம் கேட்டுக்கொண்டது. இத்தகை நாடுகளை, நிர்வாக ஒப்படைப்பு ஏற்ற நாடுகள் என்று அழைக்கின்றோம்.

### ஏகாதிபத்தியத்தின் விளைவு

சாதகமாகக் கூறுவதானால் வலிமை மிக்க நாடுகள் வலிமையற்ற நாடுகளில் போக்குவரத்து மற்றும் தொடர்புத்துறையில் பல முன்னேற்றங்களை ஏற்படுத்தின. அந்நாடுகள், குடியேற்ற நாடுகளுக்கு கல்வி வழங்கி. மருத்துவம் மற்றும் சுகாதாரத்துறைகளை மேம்படுத்தின. புதிய விவசாய முறைகளைக் கையாண்டு உணவுப்பொருள்களின் உற்பத்தியை அதிகரித்தன. இத்தகைய மாற்றங்கள் குடியேற்ற நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தின. இது நாடுகளில் அமைதி, கட்டுப்பாடு மற்றும் ஒற்றுமையை வளர்த்தன.

பாதகமாகக் கூறுவதானால் குடியேற்ற நாடுகள் தங்களின் சுதந்திரத்தை இழந்தன. மக்களின் உழைப்பு உறிஞ்சப்பட்டதோடு அவர்கள் அடிமைகளாகவும் நடத்தப்பட்டனர். குடியேற்ற நாடுகள் மூலப்பொருட்களை வழங்குவதற்கும் பொருள்களின் விற்பனைச் சந்தைகளாகவும் மட்டுமே விளங்கின. அந்நாடுகளில் உள்நாட்டு தொழில்கள் நசுக்கப்பட்டு, ஏழ்மையும், வேலையின்மையும் அதிகரித்தன. பாரம்பரிய விவசாய முறை மாற்றப்பட்டு, உணவுப் பொருள் உற்பத்திக்குப் பதிலாக மூலப்பொருட்களை பயிரிடும்படி அந்நாட்டு மக்கள் நிர்பந்திக்கப்பட்டனர். மேற்கத்திய கலாச்சார அறிமுகம், பாரம்பரிய கலாச்சாரத்தின் அழிவுக்கு வழிகோலியது. அடிமை வியாபாரத்தின் காரணமாக சில ஆப்பிரிக்க இனங்களின் மறைவுக்கும் இதுவே காரணமாயிற்று. சில குடியேற்ற நாடுகளில் இன வேறுபாட்டுக் கொள்கை பின்பற்றப்பட, ஏகாதிபத்தியமே காரணமாயிற்று.

### ஆ. இந்தியாவில் ஏகாதிபத்தியம்

இந்தியாவில் அரசர்களுக்கிடையே ஏற்பட்ட போட்டி மனப்பான்மையும் ஒற்றுமையின்மையும் ஏகாதிபத்தியம் தோன்றக்காரணமாகும். ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக்குழு கி.பி.1600 ஆம் ஆண்டு, இங்கிலாந்தில் தோற்றுவிக்கப்பட்டது. அது பின்னர் இந்தியாவில், அப்போது ஆட்சி செய்த முகலாயப் பேரரசர் ஜஹாங்கீரின் அனுமதி பெற்று சூரத்தில் தனது வியாபாரத் தளத்தை ஏற்படுத்தியது. அதன் பின் முகலாயர்கள் ஆங்கிலேயர்களுக்கு வணிகம் புரிவதற்கான உரிமையை வழங்கியதோடு, தொழிற்சாலைகள் அமைப்பதற்கான உரிமைகளை வழங்கினர். இதற்கு பதிலாக ஆங்கிலேயக் கப்பற்படை, முகலாயர்களை போர்ச்சுக்கீசியர்களிடமிருந்து பாதுகாத்தது, கி.பி.1664 ல் பிரெஞ்சு கிழக்கிந்திய வணிகக் குழு பதினான்காம் லூயியின் அமைச்சராக விளங்கிய கால்பெர்ட் என்பவரால் உருவாக்கப்பட்டது. இது இந்தியாவில் தங்களது வணிகத்தளங்களை ஏற்படுத்தியது. அதன் காரணமாக பிரான்சு– இங்கிலாந்து இடையே பகைமையை உருவாக்கியது. இதன் காரணமாக கர்நாடகப் போர்கள் ஏற்பட்டன. இறுதியில் இந்தியாவில், ஆங்கிலேயர்கள் பிரான்சின் செல்வாக்கை அடியோடு அழித்தனர்.

ஆங்கிலேயர்கள் கொண்டு வந்த வரியில்லா வணிகம் என்னும் முறைக்கு, வங்காள நவாப் சிராஜ்உத் தௌலா எதிர்ப்பு தெரிவித்தார். இது 1757–ஆம் ஆண்டு இராபர்ட் கிளைவின் தலைமையில் பிளாசிப்போர் ஏற்படக் காரணமாயிற்று. இப்போரின் முடிவில் கிழக்கிந்திய வணிகக்குழு வங்காளம், பீகார், ஒரிசா மற்றும் கல்கத்தா அருகிலுள்ள 24 பர்க்கானாக்கள் ஆகிய இடங்களில் வரியில்லா வணிகம் செய்ய தடையில்லா உரிமையைப் பெற்றது. கிழக்கிந்திய வணிகக்குழு பக்சார் போருக்குப் (கி.பி.1764) பிறகு, வங்காளத்தை ஆளும் தனி உரிமையை முகலாய மன்னர் இரண்டாம் ஷா ஆலமிடமிருந்து பெற்றது. இதுவே கிழக்கிந்திய வணிகக்குழு ஆட்சியின் ஆரம்பமாகும். வெல்லெஸ்லி பிரபு தனது துணைப் படைத்திட்டத்தின் மூலமும், டல்ஹௌசி தனது வாரிசு இழப்புக் கொள்கை மூலமும், கிழக்கிந்திய வாணிகக் குழுவின் ஆட்சியை விரிவுபடுத்தினர். இதனை எதிர்த்து 1857ல் மாபெரும் புரட்சி ஏற்பட்டது. இதனை அடக்கிய பின், ஆங்கில அரசு மகாராணியார் விக்டோரியா அவர்களின் பெயரால் 1857–ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட பேரறிக்கை மூலம் கிழக்கிந்திய வணிகக்குழு ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தது. விக்டோரியா மகாராணியார் இந்தியாவைத் தனது நேரடி ஆட்சியின் கீழ் கொண்டுவந்தார். அன்று முதல் 1947–ல் சுதந்திரம் பெறும் வரை இந்தியா, ஆங்கில அரசின் கீழ் ஒரு குடியேற்ற நாடாகவே விளங்கியது.


## இ. சீனாவில் ஏகாதிபத்தியம்

சீனாவில் ஏகாதிபத்தியம் ஏற்பட்டது ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும். பழமையான நாகரிகத்தைத் தன்னகத்தே கொண்ட சீனர்கள் தங்களை மற்றவர்களைவிட உயர்வாகவும் நாகரிகம் மிக்கவர்களாகவும் கருதினர். ஆசிய நாடுகளைச் சார்ந்த வணிகர்கள் சீனக்கலாச்சாரத்தை ஏற்ற போதிலும், ஐரோப்பிய வணிகர்கள் அதனை ஏற்க மறுத்தனர். எனவே 1757 ல் சீனப்பேரரசர் அந்நிய வணிகத்தை காண்டன் (Canton) மற்றும் மக்காவோ (Macao) நகரங்களுடன் நிறுத்தும்படி கட்டளையிட்டார். இதனால் ஐரோப்பியர்கள், சீனா மீது சினங்கொண்டனர். அவர்கள் முறையற்ற வாணிகத்தைக் கடைபிடித்தனர். இதுவே புகழ்பெற்ற அபினிப்போருக்கு அடிகோலியது.

## முதலாம் அபினிப் போர்
## கி.பி1839 – கி.பி1842

ஆங்கிலேயர்கள் அபினிச் செடியை இந்தியாவில் வளர்த்து அதனைச் சட்ட விரோதமாக சீனாவில் சீனப் பொருள்களுக்கு மாற்றாகவும் சில சமயங்களில் தங்கத்திற்கு ஈடாகவும் விற்பனை செய்தனர் இது தங்களின் மன நிம்மதியைக் குலைப்பதாக, சீனர்கள் எண்ணினர். அதேசமயம் அதிக சுங்கவரி விதிப்பும், வளர்ந்துவரும் அபினி வணிகத்தை ஒடுக்க சீன அரசாங்கம் எடுத்த நடவடிக்கையும், ஐரோப்பிய வணிகர்களை எரிச்சலடைய வைத்தன. 1800 ஆம் ஆண்டில், சீனப் பேரரசு அபினி வணிகத்தைத் தடை செய்தது. எனினும் அபினி வணிகம் மேன்மேலும் வளர்ந்து கொண்டேதான் இருந்தது. அபினி வணிகத்தில் பெரும்பங்கு வகித்த ஆங்கிலேயர்கள் சீனப்பேரரசின் தடையை ஒரு முடிவுக்குக் கொண்டுவர எண்ணி, சீனாமீது 1840ல் போர் தொடுத்தனர். இதுவே முதலாம் அபினிப்போர் என அழைக்கப்பட்டது. இப்போரில் சீனா தோற்கடிக்கப்பட்டு கிபி1842–ல் நான்கிங் உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி சீனா ஹாங்காங் தீவை நிரந்தரமாக இங்கிலாந்துக்குத் தாரை வார்த்துக் கொடுத்தது மற்றும் போர் இழப்பீடாக பெரும்தொகையை வழங்கியதோடு ஐந்து துறைமுகங்களில் வணிகம் செய்ய ஆங்கிலேயர்களுக்கு அனுமதி வழங்கியது. குற்றவியல் வழக்குகளில் ஆங்கிலேயர்களுக்கு அதிகப்படியான சலுகைகள் வழங்கப்பட்டன.

# ஆசியாவில் ஏகாதிபத்தியம்



### தைப்பிங் கிளர்ச்சி கி.பி.1854

நான்கிங் உடன்படிக்கையைப் பின்பற்றி அமெரிக்கர்களும், பிரெஞ்சுக்காரர்களும் மற்றும் பிற அந்நிய நாட்டவர்களும் பல ஒப்பந்தங்களை சீனாவுடன் ஏற்படுத்திக்கொண்டனர். எனவே 1854–ஆம் ஆண்டு மஞ்சு அரசுக்கும், வெளிநாட்டவர்களுக்கும் எதிராக சீனர்கள் கலகத்தில் ஈடுபட்டனர். இக்கலகம் தைப்பிங் கலகம் (Taiping Rebellion) என்றழைக்கப்பட்டது. இக்கலகம் விரைவில் ஒடுக்கப்பட்டது.

### இரண்டாம் அபினிப் போர் கி.பி.1857–கி.பி.1860

வெளிநாட்டவர்கள், தங்களுக்கு பல துறைமுகங்கள் திறக்கப்படவேண்டும் என்று கோரினர். இதை மஞ்சு அரசு நிராகரித்தபோது ஆங்கில மற்றும் பிரெஞ்சுப் படைகள் காண்டன் துறைமுகத்தை தாக்கிக் கைப்பற்றின. இது இரண்டாவது அபினிப்போர் என்று அழைக்கப்படுகிறது. இதில் சீனர்களின் தோல்வி கி.பி1860–ல் பீகிங் உடன்படிக்கை ஏற்படக் காரணமாயிற்று. இவ்வுடன்படிக்கையின் மூலம் ஆங்கிலேயர்கள் கௌலூன் (Kowlon) துறைமுகத்தைப் பெற்றனர். மேலும்,பல துறைமுகங்களையும் சீன அரசு வெளிநாட்டவர்களுக்கு தாரை வார்த்தது.

### பாக்சர் புரட்சி

இரண்டாவது அபினிப் போருக்குப் பின் சீனாவில் சிறிது காலம் அமைதியான சூழ்நிலை நிலவியது. 1894–ஆம் ஆண்டு நடைபெற்ற சீன–ஜப்பானியப் போரில் படுதோல்வியடைந்ததன் காரணமாக, சீனா ஃபார்மோசாத் (Formosa) தீவை ஜப்பானியர்களிடம் ஒப்படைத்தது. இதனால் சீனர்கள் மஞ்சு அரசர்கள் மீது கோபம் கொண்டனர். பழைய புத்தர் என அழைக்கப்பட்ட சீனப் பேரரசி தவோகர் (Empress Dowagar) அரசின் மீது கோபமுற்ற சீன இளைஞர்களை, வெளிநாட்டவர்களின் மீது திசை திருப்பினார். அரசியாரின் தூண்டுதலின் படி சீன இளைஞர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். கிளர்ச்சியாளர்கள் (பாக்சர்கள்) ஆங்கில, பிரெஞ்சு மற்றும் ஜெர்மானியக் குடியேற்றங்களையும் கிறிஸ்துவர்களையும் 1899 – ல் தாக்கினார்கள். இது பாக்சர் புரட்சி என்று அழைக்கப்பட்டது.



பேரரசி தவேகர் சூசி

### ஏகாதிபத்திய முடிவு

வெளிநாட்டவர்களின் கூட்டுப்படை, பாக்சர் கலகத்தை அடக்கிய பின்னர் சீனத் தலைநகர் பீகிங் வந்தடைந்தது. ஆனால் அரசியார் தவேகர் தலைமறைவாகி தப்பி ஓடினார். பின்னர் அமெரிக்காவும் இங்கிலாந்தும் திறந்தவெளிக் கொள்கையை (Open door Policy) உருவாக்கின. இதன்படி சீன நாட்டை, வெளிநாட்டவர்கள் தங்களுக்கிடையே வாணிக உரிமைக்காகப் பங்கிட்டுக் கொண்டனர். இவ்வாறாக சீனா பன்னாட்டுக் குடியேற்ற நாடாக மாறியது. பாக்சர் கலகத்தின் படிப்பினை, 1911–ம் ஆண்டு புரட்சிக்கு வித்திட்டு, சீனா குடியரசு நாடாக டாக்டர். சன்யாட்சென்னின் தலைமையில் உருவாகக் காரணமாக அமைந்தது.

## பயிற்சி

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. ஜெர்மனி மற்றும் இத்தாலி ஒன்றிணைக்கப்பட்ட ஆண்டு

அ) 1870 ஆ) 1872 இ) 1780 ஈ) 1782

2. மூலப்பொருட்களின் தேவையை அதிகப்படியாக உருவாக்கியது

அ) தொழிற்புரட்சி ஆ) தகவல் தொழில் நுட்ப புரட்சி

இ) பிரெஞ்சு புரட்சி ஈ) வேளாண்மைப் புரட்சி

3. 1870 முதல் 1945 வரை ஐரோப்பிய நாடுகள் பின்பற்றிய ஏகாதிபத்தியக் கொள்கை

அ) நவீன ஏகாதிபத்தியம் ஆ) அரசியல் ஏகாதிபத்தியம்

இ) புதிய ஏகாதிபத்தியம் ஈ) இராணுவ ஏகாதிபத்தியம்

4. சீனா அரசியல் ரீதியான சுதந்திரம் பெற்ற ஆட்சிக் காலம்

அ) சின் ஆட்சிக் காலம் ஆ) ஷாங் ஆட்சிக்காலம்

இ) சூ ஆட்சிக்காலம் ஈ) மஞ்சு ஆட்சிக்காலம்

5. பொருள்களின் போக்குவரத்தை அதிகரிக்கச் செய்தது.

அ) இரயில்வே அ) சாலை இ) வான் ஈ) நீர்

6. ஐரோப்பிய நாடுகளில் 'செல்வாக்கை நிலைநாட்டுதல்' என்ற கொள்கையைப் பின்பற்றியது.

அ) ஜப்பான் ஆ) சீனா இ) இந்தியா ஈ) பர்மா

7. ஆங்கில கிழக்கிந்திய வணிகக்குழு தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு

அ) கி.பி.1600 ஆ) கி.பி.166 4 இ) கி.பி.1644 ஈ) கி.பி.1700

8. பிரெஞ்சு கிழக்கிந்திய வணிகக்குழுவை நிறுவியவர்.

அ) பதினான்காம் லூயி ஆ) கால்பர்ட் இ) பதினாறாம் லூயி ஈ) டி பிராஸா

9. இரண்டாம் அபினி போரை முடிவுக்குக் கொண்டு வந்த உடன்படிக்கை

அ) பீகிங் ஆ) நான்கிங் இ) காண்டன் ஈ) ஷான்டுங்

10. அமெரிக்க ஐக்கிய நாடுகள் மற்றும் இங்கிலாந்து சீனாவிற்காக ஏற்படுத்திய கொள்கை

அ) திறந்த வெளிக் கொள்கை ஆ) வாரிசு இழப்புக் கொள்கை

இ) பாதுகாக்கப்பட்ட வியாபாரக் கொள்கை ஈ) நிலம் அழித்தல் கொள்கை

11. ஆங்கிலேய கிழக்கிந்தியக் குழுமத்திற்கு சூரத்தில் வணிக மையம் அமைக்க அனுமதியளித்த முகலாய மன்னர்.

அ) ஷாஜகான் ஆ) ஜஹாங்கீர் இ) ஔரங்கசீப் ஈ) ஹூமாயூன்

12. சீனக் குடியரசை உருவாக்கியவர்.

அ) டாக்டர் சன் யாட்சென் ஆ) சூ – யென் – லாய்

இ) மா சேதுங் ஈ) சீயாங் கே ஷேக்

## ஆ. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. | கர்நாடகப் போர்கள் | ஆசியா |
| 2. | பாதுகாப்பு ஏற்படுத்துதல் | சீனா |
| 3. | இனவெறிக் கொள்கை | இங்கிலாந்து |
| 4. | ஹாங்காங் தீவு | இந்தியாவில் பிரெஞ்சு ஆதிக்க முடிவு |
| 5. | பன்னாட்டு குடியேற்றம் | பிரான்ஸ் |
| | | ஏகாதிபத்தியம் |
| | | ஆப்பிரிக்கா |

## இ. குறுகிய விடையளி.

1. ஏகாதிபத்தியம் வரையறு.
2. காலனி ஆதிக்கம் என்றால் என்ன ?
3. இராணுவ ஏகாதிபத்தியம் பற்றி எழுதுக.
4. ஏகாதிபத்தியம் தோன்ற தொழிற் புரட்சி எவ்வாறு முக்கியக் காரணமாக அமைந்தது ?
5. பொருளாதாரம் அல்லது வரிக்கட்டுப்பாட்டைப் பற்றி எழுதுக.
6. ஒப்படைப்பு முறை பற்றி சுருக்கமாக எழுதுக.
7. முதலாம் அபினிப் போருக்கான காரணங்கள் யாவை ?
8. சீனா பன்னாட்டு குடியேற்ற நாடாக எவ்வாறு மாறியது ?
9. ‘தைபிங் கலகம்’ பற்றி எழுது.

## ஈ. கீழ்க்கண்ட தலைப்புகளில் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

### 1. ஏகாதிபத்தியம் உருவாகுவதற்கு காரணங்கள்.

அ) பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் நாகரிகமானதாகக் கருதப்பட்டது எது ?

ஆ) வெள்ளையர்களின் சுமை என ஐரோப்பியர்களால் கருதப்பட்டது யாது ?

இ) ஐரோப்பிய நாடுகள் குடியேற்ற நாடுகளை ஏற்படுத்த முனைந்தது ஏன் ?

ஈ) ஏகாதிபத்தியக் கொள்கையை ஊக்குவித்தது யாது ?

### 2. பிளாசி மற்றும் பக்சார் போர்.

அ) 1757 ம் ஆண்டு வங்காளத்தின் நவாப்பாக இருந்தவர் யார் ?

ஆ) துணைப் படைத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியவர் யார் ?

இ) டல்ஹௌசி பிரபுவின் கொள்கை யாது ?

ஈ) விக்டோரியா மகாராணியின் பிரகடனம் எப்பொழுது வெளியிடப்பட்டது ?

**3. சீனாவில் ஏகாதிபத்தியம்.**

அ) மாக்காவோ மற்றும் காண்டன் நகரங்களுக்கு வியாபாரத் தடை ஏன் விதிக்கப்பட்டது ?

ஆ) சீனா எந்தெந்த பொருட்களை இங்கிலாந்திற்கு விற்பனை செய்தது ?

இ) சீன அரசியின் பெயர் என்ன ? அவர் எவ்வாறு அழைக்கப்பட்டார் ?

ஈ) திறந்த வெளிக் கொள்கையைக் உருவாக்கியவர்கள் யாவர் ?

**4. பாக்சர் புரட்சி.**

அ) சீன–ஜப்பானிய போரின் விளைவு யாது ?

ஆ) சீனா, ஜப்பானிற்கு அளித்த தீவு எது ?

இ) பாக்சர் கலகத்திற்கான காரணம் யாது ?

ஈ) பாக்சர்கள் என்ன செய்தார்கள் ?

## உ. கீழ்க்கண்ட வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.

1. ஏகாதிபத்தியத்திற்கான காரணங்கள் யாவை ?
2. ஏகாதிபத்தியம் எந்தெந்த வழிமுறைகளில் ஏற்படுத்தப்பட்டது ?
3. ஏகாதிபத்தியத்தின் விளைவுகள் யாவை ?
4. முதலாம் மற்றும் இரண்டாம் அபினிப் போர்களைப் பற்றி விவரி.

## ஊ. செயல் முறை.

ஆசியா வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும்.

பீகிங், காண்டன், ஹாங்காங், பார்மோசா, கொரியா, நான்கிங், மஞ்சூரியா, சாகலின் தீவுகள், ஜப்பான், பசிபிக் பெருங்கடல்.

# 2. முதல் உலகப்போர் (கி.பி 1914 –கி.பி 1918)

## சர்வதேச சங்கம்

கி.பி.19–ஆம் நூற்றாண்டின் ஆட்சியாளர்கள் மற்றும் அறிவியல் அறிஞர்கள் எதிர்பார்த்த வண்ணம் உலக அமைதிக்கு ஏற்பட்ட பங்கமே முதல் உலகப்போர் என்று கருதப்படுகிறது,

உலக வரலாற்றில் முதல்முறையாக உலகின் பெரும்பான்மை நாடுகள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ இப்போரில் பங்கேற்றன. எனவே இப்போர் உலகப்போர் என அழைக்கப்பட்டது. உலகிலுள்ள அனைத்து நாடுகளின் மனித மற்றும் பிற வளங்களின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தியதால், இப்பெரும்போர் முதல் உலகப்போர் என அழைக்கப்பட்டது.

### போருக்கான காரணங்கள்
### ஜெர்மனியின் பேராசை

1870 ஆம் ஆண்டு ஜெர்மனி ஒருங்கிணைந்த பிறகு, அங்கு தொழிற்துறையில் வளர்ச்சி ஏற்பட்டது. இதன் விளைவாக ஏராளமான மூலப்பொருட்களும், பொருள்களை விற்பனைச் செய்ய சந்தையும் தேவைப்பட்டன. இங்கிலாந்து மற்றும் பிரான்சு போன்று ஜெர்மனியின் குடியேற்ற நாடுகள் வளம்மிக்கவைகளாக இல்லை. கெய்சர் இரண்டாம் வில்லியம் உலகம் முழுவதும் ஆதிக்கம் செலுத்தும் உரிமை மற்றும் திறமை ஜெர்மனிக்கு மட்டுமே உள்ளது என்று கருதினார். அவரால் ஆங்கிலேயர்களின் கூற்றான 'ஆங்கிலேயர்களின் பேரரசில் சூரியன் மறைவதேயில்லை' என்பதை ஏற்றுக்கொள்ள இயலவில்லை. உலக அரங்கில் தனது மதிப்பை உயர்த்துவது மட்டுமின்றி வளர்ந்து வரும் மக்கள் தொகைப் பெருக்கத்திற்கும் ஜெர்மனிக்கு குடியேற்றங்கள் தேவைப்பட்டன. எனவே ஜெர்மனியின் பாதுகாப்பிற்கு கெய்சர் இரண்டாம் வில்லையம் படை வலிமையைப் பெருக்கி வடகடலில் உள்ள ஹெலிகோலாண்ட் (Heligoland) என்னுமிடத்தில் கப்பற்படையை நிறுத்தினார். ஜெர்மனியின் இத்தகைய பேராதிக்க நடவடிக்கைகள் முதல் உலகப் போருக்கு முக்கியக் காரணமாக அமைந்தன.

### இரகசிய உடன்படிக்கைகள் (Secret Alliances)

ஐரோப்பிய நாடுகள் இருபெரும் பகை பிரிவுகளாகப் பிரிந்திருந்தன. இந்த இரு பகைப் பிரிவு நாடுகளிடையே உருவான இரகசிய உடன்படிக்கைகள் மற்றும் இராணுவ ஒப்பந்தங்கள், பகைமையையும், சந்தேகங்களையும் ஏற்படுத்தி முதல் உலகப்போருக்கு வழிவகுத்தது.

முக்கூட்டு உடன்படிக்கை (Triple Alliance) 1882 ஆம் ஆண்டு இத்தாலி, ஜெர்மனி, ஆஸ்திரியா–ஹங்கேரி ஆகிய மூன்று நாடுகளுக்கிடையே ஏற்பட்டது. 1907 ஆம் ஆண்டு இங்கிலாந்து, பிரான்சு, இரஷ்யா முதலிய நாடுகள் தங்களுக்கிடையே முக்கூட்டு நட்புறவு உடன்படிக்கை (Triple Entente) செய்து கொண்டன. இத்தகைய இரகசிய இராணுவ உடன்படிக்கைகள் ஐரோப்பாவில் பெரும் போர்ச் சூழலை ஏற்படுத்தின.

### சர்வதேச அமைப்பு இல்லாமை (Lack of International Organisation)

உலக நாடுகளுக்கிடையே காணப்பட்ட ஆதிக்க வெறியை தடுப்பதற்கான, வலிமைபெற்ற சர்வதேச அமைப்புகள் இல்லை. 1882 மற்றும் 1907 ஆம் ஆண்டு நடைபெற்ற தி ஹேக் (The Hague) மாநாடு, சர்வதேச அமைப்பு ஏற்பட எடுத்துக்கொண்ட முயற்சி பயனற்று போனது.

### இராணுவக்கொள்கை (Militarism)

இராணுவக் கொள்கை போருக்கு முக்கிய காரணமாகும். ஐரோப்பிய

வல்லுனர்கள் 'அமைதி வேண்டின் போருக்குத் தயாராகுங்கள்' என முழங்கினர். புதிய திட்டங்களின் மூலம் இரஷ்யா, பிரான்சு, ஜெர்மனி தங்களின் படைபலத்தை விரிவுபடுத்தின. பிரிட்டன் கப்பல் படைக்காக அதிகம் செலவிட்டது. பிரான்சு தன்னைத் தாக்கும் என்ற எண்ணத்தில் ஜெர்மனி தனது பலத்தை அதிகரிக்கத் தொடங்கியது.

### குடியேற்றம் மற்றும் வணிகப்போட்டி (Colonial and Commercial rivalry)

பதினைந்து மற்றும் பதினாறாம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட நிலவியல் கண்டுபிடிப்புகளின் விளைவுகள் ஐரோப்பிய நாடுகளுக்கிடையே குடியேற்றங்களை ஏற்படுத்துவதில் ஒரு புதிய வேகத்தை ஏற்படுத்தியது. தொழிற்புரட்சியின் விளைவாக மூலப் பொருட்களுக்கும் அதே சமயம் தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களை விற்பதற்கான சந்தையும் தேவைப்பட்டன. ஆசியா மற்றும் ஆப்பிரிக்க நாடுகளில் ஏற்கெனவே ஐரோப்பிய நாடுகள் தங்கள் காலனிகளை ஏற்படுத்தியிருந்தன. ஜெர்மனி ஒருங்கிணைப்பிற்கு பிறகு தன் நிலையை வலுப்படுத்திக் கொண்டது. இந்நிலையில் தொழில் துறையிலும் வணிகத்துறையிலும் ஜெர்மனியின் முன்னேற்றம் இங்கிலாந்தை வெறுப்புறச் செய்தது. இது போருக்கு வித்திட்டது.

### மொராக்கோ பிரச்சனை

ஆப்பிரிக்க நாடான மொராக்கோவை பிரான்சு கைப்பற்றியது. இதனை பிரிட்டன் அங்கீகரித்தது. ஆனால், ஜெர்மானியப் பேரரசர் இரண்டாம் கெய்சர் வில்லியம், மொராக்கோவை ஒரு சர்வதேச குடியேற்ற நாடாக்க விரும்பினார். எனவே, அவர் பெர்லின், பான்தர் என்ற இருபோர்க் கப்பல்களை மொராக்கோவிற்கு அனுப்பினார். ஆனால், இங்கிலாந்து மொராக்கோ பிரச்சனையில் தலையிட்டதால், ஜெர்மனி தனது இரு போர்க்கப்பல்களையும் மொராக்கோவிலிருந்து விலக்கிக் கொண்டது. எனவே ஜெர்மனி இங்கிலாந்தை பழி வாங்க விரும்பியது. இது போருக்கு வழி வகுத்தது.

### பால்கன் பிரச்சனை

ஆட்டோமானிய துருக்கியின் கட்டுப்பாட்டிலிருந்த பால்கன் பகுதி நாடுகளான செர்பியா, பல்கேரியா, அல்பேனியா, கிரீஸ் மற்றும் மாண்டி நீக்ரோ போன்ற நாடுகள், துருக்கி பலவீனமடைந்ததையடுத்து தங்களது சுதந்திரத்தை அறிவித்துக்கொண்டன. 1912 ஆம் ஆண்டு பால்கன் நாடுகள்– துருக்கிக்கு எதிராகப் போரை அறிவித்தன. இது முதல் பால்கன் போர் எனப்பட்டது. இப்போரில் துருக்கி தோற்கடிக்கப்பட்டு, லண்டன் உடன்படிக்கையின் மூலம் போர் முடிவுக்கு வந்தது. போரின் முடிவில் கிடைத்த பகுதிகளைப் பிரித்துக் கொள்வதில் செர்பியாவிற்கும் பல்கேரியாவிற்குமிடையே பிரச்சனைகள் ஏற்பட்டன. இதனால் 1913 ஆம் ஆண்டு பால்கன் நாடுகள் பல்கேரியா மீது போரை அறிவித்தது. போரில் பல்கேரியா தோற்கடிக்கப்பட்டு, செர்பியா பெரும் பகுதிகளைத் தன்னோடு சேர்த்துக்கொண்டது. தோற்கடிக்கப்பட்ட துருக்கியும், பல்கேரியாவும் தங்களது பகுதிகளைத் திருப்பிப் பெற ஜெர்மனியிடம் உதவி கோரின. இது போருக்கு வழி வகுத்தது.

### பிரான்சின் ஆர்வம்

பிரான்சு – பிரஷ்யா இடையே நடைபெற்ற பிராங்கோ–பிரஷ்யப் போரின் விளைவாக தான் இழந்த அல்சேஸ், லொரைன் பகுதிகளை ஜெர்மனியிடமிருந்து திரும்பப் பெற வேண்டுமென்று பிரான்சு விரும்பியது. இப்பகுதிகள் ஜெர்மனியினுடைய தொழில் வளர்ச்சிக்கு மூலக்காரணமாக விளங்கின. எனவே இப்பகுதிகளை திரும்பப்பெற வேண்டுமென்று பிரான்சு நினைத்தது.

### உடனடிக்காரணம் (செராஜிவோ படுகொலை)

1878 ஆம் ஆண்டு நடைபெற்ற பெர்லின் மாநாட்டில் பாஸ்னியா மற்றும்

ஹெர்சகோவினா பகுதிகளை ஆட்சி செய்யும் உரிமை ஆஸ்திரியா – ஹங்கேரிக்கு வழங்கப்பட்டது. ஆனால் அவற்றை இணைத்துக்கொள்ள கூடாது என அறிவிக்கப்பட்டது. செர்பியர்கள் அதிகமாக வாழும் பாஸ்னியா மற்றும் ஹெர்சகோவினா பகுதிகளை செர்பியாவிற்கு வழங்கியிருக்கவேண்டும். ஆனால் 1908 ஆம் ஆண்டு, பெர்லின் மாநாட்டு முடிவிற்கு மாறாக, செர்பியப்பகுதிகளை ஆஸ்திரியா தன் நாட்டுடன் இணைத்துக் கொண்டது. இது ஆஸ்திரியா, செர்பியா இடையே பகைமையை ஏற்படுத்தியது.

இச் சூழ்நிலையில் 1914–ஜீன் 28 ஆம் நாள் பாஸ்னிய தலைநகர் செராஜிவோ நகரில் செர்பிய தீவிரவாத இளைஞன் ஒருவனால் ஆஸ்திரிய நாட்டு பட்டத்து இளவரசர் பிரான்சிஸ் பெர்டினான்டும், அவரது மனைவி இசபெல்லாவும் சுட்டுக் கொல்லப்பட்டனர். இது குறித்து விளக்கம் அளிக்கவேண்டும் என ஆஸ்திரியா கோரியது. ஆனால் செர்பியாவின் பதில், ஆஸ்திரியாவிற்கு திருப்தி அளிக்காததால், ஆஸ்திரியா 1914 ஆம் ஆண்டு ஜீலை 28 ம் தேதி செர்பியா மீது போரை அறிவித்தது.

இரஷ்யா, ஆஸ்திரியாவிற்கு எதிராக செர்பியாவிற்கு உதவிக்கரம் நீட்டி, தனது படைகளை அனுப்பியது. இதனைக் கண்ட ஜெர்மனி, இரஷ்யாவிற்கு எதிராக போரை அறிவித்தது. பிரான்சு தனது நட்பு நாடான இரஷ்யாவிற்கு ஆதரவாக போரில் இறங்கியது. எனவே ஜெர்மனி, பிரான்சு மீது போர் அறிவிப்பு செய்தது. இதனைக் கண்ட இங்கிலாந்து, பிரான்சுடன் சேர்ந்து கொள்ளவே முதல் உலகப்போர் தொடங்கியது.

### போரின் போக்கு

முதல் உலகப் போர் 1914 ஆம் ஆண்டு சூலை மாதம் 28–ம் நாள் தொடங்கி 1918 ம் ஆண்டு நவம்பர் மாதம் 11–ம் நாள் முடிவுற்றது. போரின்போது ஜெர்மனியும் அதன் கூட்டணி நாடுகளும் மைய நாடுகள் (Central Powers) எனவும், இங்கிலாந்தும் அதன் நட்பு நாடுகளும் நேசநாடுகள் (Allied) எனவும் அழைக்கப்பட்டன. பீரங்கிப்படை மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்கள் போரில் உபயோகப்படுத்தப்பட்டன.

### மேற்கு முனைப் போர்க்களம்

ஜெர்மனி, பெல்ஜியம் வழியாக பிரான்சின் மீது படையெடுத்தது. ஜெர்மனியின் முன்னேற்றத்தை ஆங்கிலேய–பிரெஞ்சுப் படைகளால் தடுத்து நிறுத்த முடியவில்லை. ஆங்கில–பிரெஞ்சுப் படைகள் மார்ன் நதிக்கரைப் போரில் ஜெர்மானியப் படைகளைத் தடுத்து முன்னேறாமல் இருக்கச் செய்தனர். இரு படைகளும் பதுங்கு குழிப்போர் முறையைப் பின்பற்றினர்.

### கிழக்கு முனைப் போர்க்களம்

இரஷ்யப் படைகள் ஜெர்மனியையும், ஆஸ்திரியாவையும் தாக்கின. ஆனால் டானென்பர்க் போரில் இரஷ்யா படுதோல்வியுற்றது. இச்சமயத்தில் ஆஸ்திரியா துன்புறவே, ஜெர்மனி அதற்கு ஆதரவு அளித்தது. ஜெர்மனியின் கடுமையான தாக்குதலை எதிர்கொள்ள இயலாமல் இரஷ்யப் படைகள் ஆஸ்திரியப் பகுதிகளை விட்டு வெளியேறின.

### கிழக்குமுனை அருகாமைப் போர்க்களம்

1914 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் துருக்கி, மைய நாடுகளுக்கு ஆதரவாக போரில் இறங்கியது. இது ரஷ்யாவுக்கும் அதனோடு உள்ள கூட்டணி நாடுகளுக்கும் ஒரு சாட்டை அடியாக மாறி, இறுதியில் இரு நாடுகளுக்கிடையே இருந்த தொடர்பு துண்டிக்கப்பட்டது. ஆங்கிலப் படை டார்டானலஸ் பகுதியை கட்டுப்படுத்தும் பொருட்டும், கான்ஸ்டாண்டிநோபிளைக் கைப்பற்றி கலிபோலி (Gallipoli) பகுதிகளைப் பிடிக்கத்திட்டமிட்டது. ஆனால் டார்டனாலஸ் பகுதியைப் பிடிக்கும் முயற்சியில் முற்றிலும் தோல்வியைத் தழுவியது.

## போரில் பல்கேரியா மற்றும் ருமேனியா


1915ஆம் ஆண்டு டார்டனலஸ் போரில் ஆங்கிலப் படைக்கு ஏற்பட்டதோல்வி பல்கேரியாவை மைய நாடுகள் பக்கம் சேர வைத்தது. 1916 ஆம் ஆண்டு ருமேனியா, நேச நாடுகளுடன் சேர்ந்தது.

## கடற்போர்

ஆங்கில கப்பற்படை வடகடல் பகுதியை தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும்போது, பிரெஞ்சுப்படையும் இத்தாலியப்படையும் சேர்ந்து பிரிட்டனின் ஆதரவுடன் மத்தியத் தரைக்கடல் பகுதியில் ஆதிக்கம் செலுத்தின. டாகர் நதிக்கரை போரில், ஜெர்மானியப் படைகள் ஆங்கில படைகளால் அழிக்கப்பட்டன. 1916 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜட்லாண்டு போரில் ஜெர்மானியப் படைகள் தோல்வியுற்று பின்வாங்கின. ஆங்கிலேயர்களின் கப்பற்படைக் கட்டுப்பாட்டைத் தகர்க்க முடியாததால், ஜெர்மனி நீர்மூழ்கிக் கப்பல்களைப் போரில் இறக்கியது. நீர்மூழ்கிக் கப்பல் போர் முறையினால் நேசநாடுகளின் போர்க்கப்பல்கள் பல மூழ்கடிக்கப்பட்டு பெருமளவு உயிரிழப்பு ஏற்பட்டது.

## அமெரிக்கா போரில் ஈடுபடுதல்

1917 ஆம் ஆண்டு அமெரிக்கச் கொடிகளை ஏந்திய லூசிடானியா உட்பட நான்கு வணிகக்கப்பல்களை ஜெர்மானிய நீர்மூழ்கிக்கப்பல் மூழ்கடித்தன.



லூசிடானியா – அமெரிக்க கப்பல்

இதில் நூற்றுக்கணக்கான அமெரிக்கர்கள் கொல்லப்பட்டனர். இந்நிகழ்ச்சி அமெரிக்க குடியரசுத்தலைவர் உட்ரோவில்சனை கோபமுறச் செய்தது. எனவே அவர் 1917 ஆம் ஆண்டு ஏப்ரல்–6 ஆம் நாள் புனித வெள்ளியன்று ஜெர்மனி மீது போர் அறிவிப்பு செய்தார்.

## இரஷ்யா பின் வாங்குதல்

முதல் உலகப் போரினால் இரஷ்யா பெருமளவு பாதிக்கப்பட்டது. பெருமளவு உயிரிழப்பும், பொருளாதார சீரழிவும் ஏற்பட்டது. இதனால் மக்களிடையே அதிருப்தி ஏற்பட்டது. இதன் வெளிப்பாடாக 1917ஆம் ஆண்டு அக்டோபர் புரட்சி இரஷ்யாவில் தோன்றியது. இப்புரட்சியினால், இரஷ்யாவை ஆட்சி செய்து வந்த சார் மன்னரின் ஆட்சி, லெனினால் தூக்கி எறியப்பட்டது. எனவே இரஷ்யா போரிலிருந்து தன்னை விலக்கிக் கொண்டது. 1918ஆம் ஆண்டு பிரஸ்ட்–லிட்வோஸ்க் உடன்படிக்கையினை மைய நாடுகளுடன் ஏற்படுத்திக்கொண்டது.

## போரின் முடிவு

ஆரம்பத்தில் மையநாடுகள் சில வெற்றிகளைப் பெற்றபோதிலும் இறுதியில் அவை தோல்வியையே தழுவின. ஜெர்மனி போரில் தோல்வியைத் தழுவியது. இதனை கண்ணுற்ற துருக்கியும், பல்கேரியாவும் அச்சமடைந்தன. ஆஸ்திரியா சமாதானத்தை எதிர் நோக்கியது. ஜெர்மானியப்பேரரசர் இரண்டாம் கெய்சர் வில்லியம், போரைச் சமாளிக்க முடியாமல் தனது பதவியைத் துறந்து ஹாலந்து நாட்டுக்கு தப்பியோடினார். எனவே வேறு வழியின்றி ஜெர்மனி, 1918 ஆம் ஆண்டு நவம்பர் 11 ஆம் நாள் அமைதியை நாடியது.

## போரின் விளைவுகள்

1919 ஆம் ஆண்டு பாரீசில் நடைபெற்ற அமைதி மாநாட்டின் மூலம் முதல் உலகப்போர் முடிவுக்கு வந்தது. இம்மாநாட்டில் கலந்து கொண்ட முக்கியத் தலைவர்கள், பிரான்சு நாட்டு கிளமென்சு, பிரிட்டன் நாட்டு லாயிட் ஜார்ஜ், இத்தாலி நாட்டு ஆர்லண்டோ, அமெரிக்க ஜனாதிபதி உட்ரோ வில்சன் ஆகியோர் ஆவர். ஜெர்மனி அமைதி


# முதல் உலகப் போரில் ஐரோப்பா



உடன்படிக்கையில் கையெழுத்திட்டது. இது வெர்செயில்ஸ் உடன்படிக்கை என்று அழைக்கப்பட்டது. மேலும் இம் மாநாட்டில் பல்வேறு உடன்படிக்கைகள் தோல்வியுற்ற நாடுகளுடன் செய்து கொள்ளப்பட்டன. ஜெர்மெயின் உடன்படிக்கை (Treaty of Germaine) ஆஸ்திரியாவுடன் செய்து கொள்ளப்பட்டது. ஹங்கேரியுடன் டிரியனான் (Traianon) உடன்படிக்கையும், பல்கேரியாவுடன் நியூலி (Neuilly) உடன்படிக்கையும், துருக்கியுடன் செவ்ரேஸ் (Severes) உடன்படிக்கையும் செய்து கொள்ளப்பட்டன. அமெரிக்க அதிபர் உட்ரோ வில்சன் தனது 14 அம்சக் கோட்பாடுகளையும் வெளியிட்டார்.

**வெர்செயில்ஸ் உடன்படிக்கையின் முக்கிய அம்சங்கள்**

1. சர்வதேச சங்கத்தின் வடிவமைப்பு வரையறுக்கப்பட்டது.
2. ஜெர்மனியின் படைகள் குறைக்கப்பட்டு, அதன் மீது பெரும் போர் இழப்பீடு சுமத்தப்பட்டது.
3. ஜெர்மனி தன்னிடமிருந்த அல்சேஸ், லொரைன் பகுதிகளை பிரான்சிடம் ஒப்படைத்தது. மேலும் நிலக்கரி சுரங்கம் அமைந்துள்ள சார் பகுதிகளை 15 ஆண்டுகளுக்கு வைத்துக் கொள்ளும் குத்தகை உரிமையையும் பிரான்சுக்கு அளித்தது.
4. ஜெர்மனியின் கடல்கடந்த குடியேற்றங்களை, வெற்றி பெற்ற நாடுகள் தங்களுக்குள் பங்கிட்டுக்கொண்டன.
5. ஜெர்மனி, இரஷ்யா, ஆஸ்திரியா மற்றும் துருக்கி ஆகிய நாடுகளில் மன்னராட்சி ஒழிக்கப்பட்டது.
6. இப்போர் பெருத்த பொருளாதாரச் சேதத்தையும், உயிர்ச் சேதத்தையும் ஏற்படுத்தியது.
7. பல்வேறு நாடுகளில் மன்னராட்சி ஒழிக்கப்பட்டு, ஜனநாயக ஆட்சி மலர்ந்தது. செக்கோஸ்லேவேகியா மற்றும் போலந்து நாட்டில், குடியரசுகள் தோன்றின.
8. ஆஸ்திரியா மற்றும் ஹங்கேரி குடியரசுகள் அங்கீகரிக்கப்பட்டன.
9. லிதுவேனியா, லாட்வியா மற்றும் எஸ்தோனியா நாடுகளுக்குச் சுதந்திரம் வழங்கப்பட்டது.



பாரிஸ் மாநாட்டில் கலந்து கொண்ட பிரதிநிதிகள்

10. வெற்றிபெற்ற நாடுகள் தோல்வியுற்ற நாடுகள் மீது தேவையற்ற, சாதகமற்ற உடன்படிக்கைகளை ஏற்றுக்கொள்ளுமாறு வற்புறுத்தின. இது மற்றுமொரு உலகப்போருக்கு வித்திட்டது.

11. டான்சிக் நகருக்கு சர்வதேச அங்கீகாரம் அளிக்கப்பட்டது.

## சர்வதேச சங்கம் 1920 (League of Nations)

முதல் உலகப் போர், உலக நாடுகளில் மிகப்பெரும் பொருள் சேதத்தையும், உயிர்சேதத்தையும் ஏற்படுத்தியது. உலக நாடுகள் அனைத்தும் நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ, இப்போரினால் பெரிதும் பாதிக்கப்பட்டன.



உட்ரோ வில்சன்

எனவே இனி உலகில் இத்தகைய போர் ஏற்படாமல் தடுக்க ஒரு சர்வதேச அமைப்பு தேவை என்பதை உலக நாடுகள் உணர்ந்தன. அமெரிக்க ஜனாதிபதி உட்ரோ வில்சன் முயற்சியால் 1919 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பாரிசில் அமைதி மாநாடு கூட்டப்பட்டது. இதில் 42 நாடுகள் கலந்து கொண்டன. இம்மாநாட்டில் பத்து உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. இக்குழுவில் இடம் பெற்ற முக்கியத் தலைவர்கள்உட்ரோ வில்சன்(அமெரிக்கா), லாயிட்ஸ் ஜார்ஜ் (பிரிட்டன்), ஜார்ஜ் கிளமென்சு (பிரான்சு) மற்றும் ஆர்லாண்டோ (இத்தாலி) ஆவர். இக்குழுவின் ஆலோசனைப்படி உலகத்தில் அமைதியை நிலைநாட்டவும், போர் மூளுவதைத் தடுக்கவும் மற்றும் நாடுகளிடையே ஒற்றுமையை வளர்க்கவும் சர்வதேச சங்கம் தேவை என்று முடிவு செய்யப்பட்டது. இதன் அடிப்படையில் 1920 ஆம் ஆண்டு ஜனவரி 20 ஆம் நாள் சர்வதேச சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. இதன் தலைமையகம் சுவிட்சர்லாந்து நாட்டில் உள்ள ஜெனீவா நகரில் நிறுவப்பட்டது.



சர்வதேச சங்கம் தலைமையகம் –ஜெனீவா

சர்வதேச சங்கம் அமைக்கப்படுவதற்கு முன்பே 1. சர்வதேசச் சமுதாயம் (1915) 2. உலக அமைதிக் கூட்டமைப்பு (1917) 3. சுதந்திர நாடுகளின் சர்வதேச சங்கம் (1918) போன்ற அமைப்புகள் தோற்றுவிக்கப்பட்டன.

## சர்வதேச சங்கத்தின் அடிப்படைக் கொள்கைகள்

1. உலகநாடுகளிடையே ஒற்றுமை, பாதுகாப்பு மற்றும் அமைதியை நிலைநாட்டுவது.

2. உறுப்பு நாடுகள் தங்கள் அண்டை நாடுகளின் எல்லைகளை மதித்து நடத்தல், அந்நாடுகளில் ஆக்கிரமிப்பு செய்யாமலிருத்தல்.

3. உறுப்பு நாடுகள் தங்களுக்குள் ஏற்படும் பிரச்சனைகளை சர்வதேச சங்கத்தின் மூலம் சுமூகமான முறையில் தீர்த்துக்கொள்ள வேண்டும். மேலும் நாடுகள் குறைந்தது மூன்று மாதங்களாவது சர்வதேச சங்கத்தின் முடிவுக்காகக் காத்திருக்க வேண்டும்.

4. உறுப்பு நாடுகள் ஏதேனும் சர்வதேச சங்கத்தின் விதிமுறைகளை மீறி மற்ற நாடுகளை ஆக்கிரமிப்பு செய்தால், பாதிப்புக்குள்ளான நாட்டை ஆயுதங்களைக் கொடுத்தாவது பாதுகாக்க வேண்டும்.

5. சர்வதேச சங்கத்தின் கொள்ளைகளுக்கு எதிரான எல்லா உடன்படிக்கைகளையும் கைவிடுதல் போன்றவை சர்வதேச சங்கத்தின் அடிப்படைக் கொள்கைகளாகக் கருதப்பட்டன.

## சர்வதேச சங்கத்தின் அங்கங்கள்

1. பொதுச்சபை
2. மன்றம்
3. செயலகம்
4. சர்வதேச நீதி மன்றம்
5. சர்வதேச தொழிலாளர் அமைப்பு

## சர்வதேச சங்கத்தின் சாதனைகள்

சர்வதேச சங்கம் நடைமுறையிலிருந்த 20 ஆண்டுகளில் பல்வேறு பிரச்சனைகளுக்குத் தீர்வு நல்கி, சமாதானத்தை ஏற்படுத்த முயற்சி செய்ததில் ஓரளவு வெற்றி பெற்றது.

1. பின்லாந்து - சுவீடன் இடையே பால்டிக் கடல்பகுதியில் அமைந்துள்ள ஆலந்து தீவு உரிமைப் பிரச்சினையை தீர்த்து வைத்தது.
2. சைலீசியாவின் எல்லைப் பிரச்சனையைத்தீர்த்து போலாந்து–ஜெர்மனி இடையே போர் ஏற்படுவதை தடுத்தது .
3. கிரீஸ் நாட்டிற்கும் இத்தாலிக்கும் இடையே ஏற்பட்ட கார்ஃபூ தீவுப்பிரச்சினையை தீர்தது வைத்தது.
4. கிரீஸ் நாட்டிற்கும் பல்கேரியாவிற்கும் இடையே ஏற்பட்ட எல்லைப் பிரச்சனையைத் தீர்த்து வைத்தது.
5. ஜெர்மனி 1926–ம் ஆண்டு சர்வதேச சங்கத்தில் இணையவும், அதனைத் தொடர்ந்து 1934 ஆம் ஆண்டு சோவியத் ரஷ்யா சங்கத்தில் இணையவும் நடவடிக்கை மேற்கொண்டது.
6. பெரு நாட்டிற்கும், கொலம்பியாவிற்கும் இடையே ஏற்பட்ட எல்லைப் பிரச்சனையைத் தீர்த்து வைத்தது.
7. தனது பிற அமைப்புகள் மூலம் உலக நாடுகளில் பரவிய பல்வேறு நோய்களைதீர்க்கப் பாடுபட்டது.
8. அகதிகள் மற்றும் தொழு நோயாளிகள் மறு வாழ்விற்காக பேருதவி புரிந்தது. இதன் மூலம் நாடுகளிடையே பண்பாடு கூட்டுறவு வளரவும் பாடுபட்டது.
9. உலக நாடுகளின் கல்வித் தரத்தை உயர்த்தவும் பாடுபட்டது.
10. சர்வதேச நீதி மன்றம் 30 வழக்குகளை சந்தித்து அதில் சில வழக்குகளுக்கு தீர்வுகளையும் சில வழக்குகளுக்கு ஆலோசனைகளையும் வழங்கியுள்ளது.

## சர்வதேச சங்கத்தின் தோல்விக்கான காரணங்கள்

சர்வதேச சங்கம் தன்னுடைய கொள்கையான, நாடுகளுக்கிடையே ஏற்படும் பிரச்சனைகளை அமைதியான முறையில் தீர்த்து வைப்பது என்ற அடிப்படைக் கொள்கையில் முழுமையாக வெற்றிபெற இயலவில்லை. இது உறுப்பு நாடுகளால் உருவாக்கப்பட்ட குறையேயன்றி, சர்வதேச சங்கத்தினால் ஏற்பட்ட குறையன்று.

1. சர்வதேச சங்கம் அமைவதற்குக் காரணமாக இருந்தவர் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் குடியரசுத் தலைவர். ஆனால் அமெரிக்கா சர்வதேச சங்கத்தில் உறுப்பினராக ஆகவில்லை. இதனால் சர்வதேச சங்கம் வலுவான அடித்தளமில்லாத கட்டிடம் போல் வலுவிழந்து போனது.

2. சங்கத்தின் முடிவுகளுக்கு உடன்படாத உறுப்பு நாடுகள் சங்கத்திலிருந்து வெளியேறலாம் என்ற உரிமை வழங்கப்பட்டு இருந்தது, சங்கத்தைச் செயல் இழக்கச் செய்தது.

3. 1931 ஆம் ஆண்டு ஜப்பான் மஞ்சூரியாவைக் கைப்பற்றி. மஞ்சுக்கோ எனப்பெயர் மாற்றம் செய்து அதில் ஒரு பொம்மை அரசாங்கத்தை ஏற்படுத்தியது. இதனை சர்வதேச சங்கம் எதிர்த்த போது, ஜப்பான் உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்து வெளியேறியது. இது சர்வதேச சங்கத்தை செயல் இழக்கச் செய்தது.

4. சர்வதேச சங்கம் தனக்கென ஒரு நிரந்தர படையினை வைத்துக் கொள்ளவில்லை. இதனால் தனது முடிவுகளை செயல்படுத்த இயலவில்லை.

5. ஜெர்மனி, இத்தாலி மற்றும் ஜப்பானில் தோன்றிய சர்வாதிகாரம், சர்வதேச சங்கத்தின் தோல்விக்கு முக்கியக் காரணம் ஆகும்.

6. சர்வதேச சங்கத்தில் செல்வாக்கு பெற்றிருந்த தலைவர்கள் நடைமுறைச் சிக்கலுக்கு தீர்வு காண தவறினர். எனவே இச்சங்கம் முட்டாள்களின் சங்கம் என குறிப்பிடப்பட்டது.

இக்குறைகள் அனைத்தும் சர்வதேச சங்கம் தோல்வி அடைவதற்கு காரணங்களாக அமைந்தன. இருப்பினும் தன்னால் இயன்றவரை பிரச்சனைகளுக்கு சர்வதேச சங்கம் தீர்வு காண முயற்சி செய்தது. இது பின்னர் ஐக்கிய நாடுகள் சபை (UNO) அமைய முன்னோடியாக அமைந்தது.

## பயிற்சி

### அ. சரியான விடை தருக.

1. உலகம் முழுவதையும் ஆதிக்கம் செலுத்தும் திறமை ஜெர்மனிக்கு மட்டுமே உள்ளது எனக் கூறியவர்.

   அ) பிஸ்மார்க் ஆ) கெய்சர் இரண்டாம் வில்லியம்

   இ) ஹிட்லர் ஈ) முசோலினி

2. கெய்சர் இரண்டாம் வில்லியம் கப்பற்படையை நிறுத்தியிருந்த இடம்.

   அ) ஹெலிகோலாந்து ஆ) ஆலாந்து இ) ஜீலாந்து ஈ) அயர்லாந்து

3. பிரான்சு திரும்பப் பெற விரும்பிய இடங்கள்.

   அ) அல்சேஸ் மற்றும் லொரைன் ஆ) போஸ்னியா மற்றும் ஹெர்சகோவினா

   இ) ஆஸ்திரியா மற்றும் ஹங்கேரி ஈ) எஸ்தோனியா மற்றும் லாட்வியா

4. ஆஸ்திரிய பட்டத்து இளவரசர்

   அ) பிரான்சிஸ் பெர்டினான்ட் ஆ) பிரான்சிஸ் டியூக்

   இ) பிரான்சிஸ் டி லெசப்ஸ் ஈ) பிரான்சிஸ் பேயாகன்

5. ஆஸ்திரியா செர்பியா மீது படையெடுத்த நாள்

   அ) ஜூலை 28,1914 ஆ) ஜூன் 28, 1914

   இ) மார்ச் 28, 1914 ஈ) ஆகஸ்ட் 28, 1914

6. ஜெர்மனி பிரான்சின் மீது படையெடுக்க இதன் வழியாகச் சென்றது

   அ) நெதர்லாந்து ஆ) லக்ஸம்பர்க்

   இ) ரைன்லாந்து ஈ) பெல்ஜியம்

7. துருக்கி தனது ஆதரவை வழங்கியது.

அ) கூட்டு நாடுகள் ஆ) அச்சு நாடுகள்

இ) மைய நாடுகள் ஈ) வளர்ச்சியடைந்த நாடுகள்

8. ஆங்கிலேயர்களுக்கு படுதோல்வியாக அமைந்தது.

அ) ஜெர்மானியப் படையெடுப்பு ஆ) பிரெஞ்சுப் படையெடுப்பு

இ) டார்டனல்ஸ் படையெடுப்பு ஈ) கியூபா படையெடுப்பு

9. ஜெர்மனியால் மூழ்கடிக்கப்பட்ட அமெரிக்காவின் புகழ் பெற்ற வணிக கப்பல்

அ) லுப்டாப் ஆ) ராயல் இ) லூசிட்டானியா ஈ) பெர்லின்

10. ரஷ்யாவில் சார் வம்ச ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்தவர்.

அ) லெனின் ஆ) கார்ல் மார்க்ஸ் இ) மார்டோவ் ஈ) ஸ்டாலின்

11. ஜெர்மானிய கப்பற்படை தகர்க்கப்பட்ட கடல்போர்

அ) ஜூட்லாந்து ஆ) டாகர் பாங்க் இ) வடகடல் ஈ) பால்டிக்கடல்

12. ஜெர்மனி அமைதியை வேண்டிய நாள்.

அ) நவம்பர்11, 1918 ஆ) நவம்பர் 21,1918

இ) நவம்பர் 12,1918 ஈ) நவம்பர் 22,1918

13. முதல் உலகப் போரை முடிவுக்குக் கொண்டு வந்தது.

அ) லண்டன் அமைதி மாநாடு ஆ) ரோம் அமைதி மாநாடு

இ) பெர்லின் அமைதி மாநாடு ஈ) பாரிஸ் அமைதி மாநாடு

14. சர்வதேச சங்கம் அதிகாரபூர்வமாகத் தோன்றிய நாள்.

அ) மார்ச் 7, 1930 ஆ) மார்ச் 2, 1928

இ) ஜனவரி 20, 1920 ஈ) ஜனவரி 20, 1924

## ஆ. பொருத்துக.

| | I | |
|---|---|---|
| 1. | கிளமன்சோ | பிரிட்டன் |
| 2. | ஆர்லாண்டோ | பிரான்சு |
| 3. | லாயிட்ஸ் ஜார்ஜ் | ஜெர்மனி |
| 4. | உட்ரோ வில்சன் | ஆஸ்திரியா |
| 5. | கெய்சர் வில்லியம் II | ரஷ்யா |
| | | அமெரிக்கா |
| | | இத்தாலி |

II

| | | |
|---|---|---|
| 1. | வெர்சேல்ஸ் உடன்படிக்கை | ருமேனியா |
| 2. | டிரையனான் உடன் படிக்கை | துருக்கி |
| 3. | நியூலி உடன் படிக்கை | இத்தாலி |
| 4. | செவ்ரேஸ் உடன் படிக்கை | ஹங்கேரி |
| 5. | ஜெர்மைன் உடன் படிக்கை | ஆஸ்திரியா |
| | | ஜெர்மனி |
| | | பல்கேரியா |

## இ. சுருக்கமான விடையளி.

1. ஜெர்மனிக்கு குடியேற்றங்கள் ஏன் தேவைப்பட்டது ?
2. மொராக்கோ பிரச்சனை – குறிப்பு வரைக.
3. முதல் உலகப் போருக்கான உடனடிக் காரணம் யாது ?
4. கிழக்கு முனைப் போர்களம் – விவரி.
5. கடற்போர் பற்றி சிறு குறிப்பு தருக.
6. முதல் உலகப் போரில் அமெரிக்கா ஈடுபட்டதற்கான காரணம் என்ன ?
7. வெர்சேல்ஸ் உடன்படிக்கையின் ஷரத்துக்களில் இரண்டினைக் குறிப்பிடுக.
8. சர்வதேச சங்கத்தின் அடிப்படைக் கொள்கைகளில் எவையேனும் இரண்டினை எழுதுக.
9. சர்வதேச சங்கத்தின் அங்கங்கள் யாவை ?
10. சர்வதேச சங்கத்தின் தோல்விக்கான எவையேனும் இரண்டு காரணங்களைக் குறிப்பிடுக.

## ஈ. ஒவ்வொரு தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

1. ஜெர்மனியின் பேராசை

அ) முதல் உலகப் போரின் போது ஜெர்மனியின் அரசர் யார் ?

ஆ) அவரின் நம்பிக்கை என்ன ?

இ) அவரால் சகித்துக் கொள்ள முடியாதது எது ?

ஈ) எங்கு கப்பற்படைத் தளம் அமைத்திருந்தார் ?

2. பால்கன் பிரச்சனை

அ) பால்கன் நாடுகளைக் குறிப்பிடுக.

ஆ) முதல் பால்கன் போர் எவ்வாறு முடிவுக்கு வந்தது ?

இ) ஏனைய பால்கன் நாடுகள் பல்கேரியா மீது ஏன் போர் தொடுத்தன ?

ஈ) இரண்டாம் பால்கன் போரின் முடிவு என்ன ?

3. உடனடிக்காரணம்

அ) பாஸ்னியா மற்றும் ஹெர்சகோவினாவை எப்பொழுது ஆஸ்திரியா இணைத்தது ?

ஆ) ஆஸ்திரிய நாட்டு பட்டத்து இளவரசர் யார் ?

இ) அவருக்கு நேர்ந்தது என்ன ?

ஈ) ஆஸ்திரியா என்ன செய்தது ?

4. போரின் போக்கு

அ) முதல் உலகப் போரின் காலம் என்ன ?

ஆ) மைய நாடுகள் யாவை ?

இ) நேச நாடுகள் யாவை ?

ஈ) போரில் உபயோகப்படுத்தப்பட்ட போர்க் கருவிகள் யாவை ?

5. கிழக்கு முனைப் போர்க்களம்

அ) துருக்கி எந்த ஆண்டு போரில் ஈடுப்பட்டது ?

ஆ) இது ஏன் ஒரு சாட்டையடியாகக் கருதப்படுகிறது ?

இ) பிரிட்டன் கலிபோலி தீபகற்பத்தை பிடிக்க விரும்பியது ஏன் ?

ஈ) டார்டானல்ஸ் படையெடுப்பின் விளைவுகள் யாவை ?

6. போர் விளைவுகள்

அ) உடன் படிக்கையின் ஷரத்துகள் எவ்வாறு எழுதப்பட்டன ?

ஆ) ஜெர்மனி பிரான்சிடம் இழந்தவை யாவை ?

இ) மன்னராட்சியை முடிவுக்குக் கொண்டு வந்த நாடுகள் யாவை ?

ஈ) புதிதாகத் தோன்றிய குடியரசுகள் யாவை ?

7. சர்வதேச சங்கம்

அ) சர்வதேச சங்கத்திற்கு முன் தோன்றிய சில சர்வதேச அமைப்புகளின் பெயர்களை எழுதுக.

ஆ) சர்வதேச சங்கத்தின் தலைமையகம் எங்கு அமைந்துள்ளது ?

இ) உறுப்பு நாடுகள் தங்கள் பிரச்சனைகளுக்கு எவ்வாறு தீர்வு காண வேண்டும் ?

ஈ) ஜப்பான் எப்போது மஞ்சூரியாவைக் கைப்பற்றியது.

**உ. கீழ்க் கண்ட வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.**

1. பால்கன் பிரச்சனை முதல் உலகப் போருக்கு வழிவகுத்தது எவ்வாறு ?
2. முதல் உலகப் போரின் விளைவுகள் யாவை ?
3. சர்வதேச சங்கத்தின் சாதனைகளை விளக்குக.
4. சர்வதேச சங்கத்தின் தோல்விக்கான காரணங்களை விவரி.

**ஊ. செயல்முறை.**

உலக வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும்.

அ) டானின் பெர்க் ஆ) மார்ன் ஆறு இ) ஜுட்லாந்து

ஈ) டார்டெனல்ஸ் உ) டான்சிக்

# 3. இரு உலகப்போர்களுக்கிடையே உலக நிலை கி.பி.1919–கி.பி.1939

## பொருளாதார பெருமந்தம்

1930–ம் ஆண்டின் தொடக்கத்தில் ஏற்பட்ட பொருளாதார பெருமந்தம் இரு உலகப்போர்களுக்கிடையில் உலக நாடுகளிடையே ஏற்பட்ட முக்கிய நிகழ்வாகும். இது சோவியத் இரஷ்யாவைத் தவிர மற்ற பெரிய நாடுகளை அதிக அளவில் பாதித்தது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் தொடங்கிய இப்பொருளாதாரச் சரிவு ஏறக்குறைய எல்லா ஐரோப்பிய நாடுகளையும் பாதித்தது.

### காரணங்கள்

அமெரிக்கப் பங்குச் சந்தையில் ஏற்பட்ட சரிவே பொருளாதாரப் பெருமந்தத்திற்கு முக்கியக் காரணமாகக் கருதப்படுகிறது. பங்குகளின் விலை உயரும் என்ற அனுமானத்தின் அடிப்படையில் மக்கள் கடன் வாங்கி பங்குச் சந்தைகளில் முதலீடு செய்தது இப்பெருமந்தத்தின் காரணமாகும்.



ஹெர்பர்ட் ஹூவர்

1929 ஆம் ஆண்டு அமெரிக்க குடியரசு தலைவராகப் பொறுப்பேற்ற ஹெர்பர்ட் ஹூவரின் காலத்தில் பங்கு வணிகம் உச்சக்கட்டத்தை அடைந்தது. பங்கு வர்த்தகத்தில் முதலீடு செய்வதில் அமெரிக்க மக்கள் பேரார்வத்துடன் ஈடுபட்டனர். சமுதாயத்தில் உள்ள அனைத்துத் தரப்பினரும் பங்குகள் தரும் பங்காதயத்திற்கு மட்டுமின்றி அவற்றை மறுவிற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் இலாபத்திற்காகவும் பெருமளவில் பங்கு வணிகத்தில் முதலீடு செய்தனர். இதன் மூலம் வேகமாக செல்வந்தர்கள் ஆகலாம் என்ற எண்ணம் மக்களிடையே ஏற்பட்டது. 1929 ஆம் ஆண்டு அக்டோபர் 24–ம் நாள் பங்குகளில் மிகப் பெரியச் சரிவு ஏற்பட்டு, பங்குகளின் விலை சரியத்தொடங்கின.

இது மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியது. இதனால் மக்கள் விரைவாகத் தங்கள் பங்குகளை விற்க முற்பட்டனர். இதனால் பங்குகளின் விலை மேலும் வீழ்ச்சியடைந்தது. இதனைத் தொடர்ந்து வங்கிகள் செயல்பட முடியாதநிலை ஏற்பட்டதாலும், கடன் வழங்க இயலாததாலும் விவசாய உற்பத்தி, தொழில் வளர்ச்சி ஆகியவை வீழ்ச்சியடைந்தன.

### ஹூவரது மீட்பு நடவடிக்கைகள்

ஹூவர் அமெரிக்க ஜனாதிபதியாக பொறுப்பேற்று பல்வேறு மீட்பு நடவடிக்கைகளை மேற்கொண்டார். 1932–ம் ஆண்டு ஹூவரால் அமைக்கப்பட்ட புனரமைப்பு நிதி நிறுவனம், வங்கிகளுக்கும், தொழிற்சாலைகளுக்கும் கடனுதவி அளிக்க முன்வந்தது. இம்முயற்சி உடனடித் தீர்வைத் தராத காரணத்தால் ஹூவரின் ஆட்சியின் மீது அமெரிக்க மக்கள் நம்பிக்கை இழந்தனர்.

1932 ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாடுகளில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் எப்.டி.ஆர் (FDR) என்றழைக்கப்பட்ட பிராங்களின் டி.ரூஸ்வெல்ட் "நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன், அமெரிக்க மக்களுக்கு புதிய பயனுரிமைக்கொள்கையை அர்பணிக்க நான் உறுதியளிக்கிறேன்" என்று தமது

தேர்தல் அறிக்கையில் உறுதி அளித்தார். இதனால் தேர்தலில் வெற்றி பெற்று 1933ஆம் ஆண்டு மார்ச் 4–ம் நாள் அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்றார்.



பிராங்களின் –டி–ரூஸ்வெல்ட்

## எப்.டி.ரூஸ்வெல்ட்

- பொருளாதாரப் பெரும் தாழ்வை முடிவுக்குக் கொண்டுவர எப்.டி.ரூஸ்வெல்ட் (FDR) புதிய பயனுரிமை(New Deal) என்ற புதிய சீரமைப்புக் கொள்கையை உருவாக்கினார். இது உதவி, மீட்பு, சீர்திருத்தம் என்ற மூன்று அம்சங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது.
- புதிய சீரமைப்பு திட்டத்தின் அடிப்படையில் டென்னசி பள்ளத்தாக்கு திட்டம் அறிவிக்கப்பட்டது. இத்திட்டம் மூலம் இயற்கைவளத்தைக் கொண்டு தொழிற் பெருக்கத்தை ஏற்படுத்துவது மற்றும் விவசாயத்தை ஊக்குவிப்பது ஆகும். அதன்படி அணைகள் கட்டுதல், மின்உற்பத்தி செய்தல், கப்பல் போக்குவரத்துக்கு வழி வகுத்தல், வெள்ளத்தடுப்புப் பணிகளில் ஈடுபடுதல், மண்வளத்தைப் பாதுகாத்தல் வனவளப் பாதுகாப்பை ஏற்படுத்துதல் போன்றவை மேம்படுத்தப்பட்டன.
- கூட்டாட்சி அவசர நிவாரண நிர்வாகம்(Federal Emergency Relief Administration) மூலம் ஐநூறு மில்லியன் டாலர்கள் மாநில மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதியாக வழங்கப்பட்டது.
- கூட்டாட்சி ரிசர்வ் வங்கி (Federal Reserve Bank) அமைக்கப்பட்டு வங்கி நிறுவனங்களுக்கும் தொழிற் சாலைகளுக்கும் கடன் வழங்கப்பட்டது.
- பாதுகாப்பு பரிவர்த்தனைச் சட்டம் (The Security Exchange Act) மூலம் பங்குச் சந்தையில் ஈடுபடும் நிறுவனங்களுக்கு உரிமம் வழங்கப்பட்டது.
- தேசிய தொழில் மீட்புச் சட்டம் (The National Industrial Recovery Act) கொண்டுவரப்பட்டு தொழிற் சாலைகளில் சம்பள உயர்வு, பணிநேரக்குறைப்பு போன்ற சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன.
- வேளாண்மைப் பொருள் சீரமைப்புச் சட்டம் இயற்றப்பட்டது. இதன் மூலம் அரசு விவசாயிகளுக்கு மானியங்கள் வழங்க வகை ஏற்பட்டது. இம்மானியம் அவர்கள் உற்பத்தி செய்யும் தானியத்தின் அளவைக் குறைத்து விலை உயர்வுக்கு வழிவகுத்தது.

## விளைவுகள்

- புதிய பயனுரிமைச் சட்டத்தின் ஒரு சில திட்டங்களைத் தவிர்த்து மற்ற அனைத்தும் அமெரிக்க பொருளாதாரத்தை வலுவடையச் செய்தன. மக்களுக்கு அரசின் மீது நம்பிக்கை ஏற்படச் செய்தன. பொருளாதார மேன்மைக்கும் உற்பத்திப் பெருக்கத்திற்கும்

உறுதியான அடித்தளம் அமைத்துக் கொடுத்தன.

- புதிய பயனுரிமைச் சட்டத்தின் சில திட்டங்களான முதலாளி, தொழிலாளி கூட்டுப் பேச்சுவார்த்தை, பங்கு வர்த்தனை முறைப்படுத்துதல் மற்றும் வேலை நேரக்கட்டுப்பாடுகள் முதலியன இன்றும் அமெரிக்கர்களின் வாழ்க்கையின் ஒரு அங்கமாகத் திகழ்கின்றன. இந்த பயனுரிமைத் திட்டம் உலக நாடுகளின் சீர்திருத்தங்களுக்கு வழிகாட்டியாக உள்ளது. இதன் விளைவாக மீண்டும் 1940 ஆம் ஆண்டில் அமெரிக்கப் பொருளாதாரம் இயல்பு நிலைக்குத் திரும்பியது.

## பயிற்சி

### அ. சரியான விடை தருக.

1. பொருளாதாரப் பெருமந்தம் தோன்றிய நாடு.

   அ) இங்கிலாந்து ஆ) அமெரிக்கா இ) பிரான்சு ஈ) ஜெர்மனி

2. 1929 இல் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தவர்.

   அ) தியோடர் ரூஸ்வெல்ட் ஆ) உட்ரோ வில்சன்

   இ) ஹெர்பர்ட் ஹூவர் ஈ) எப்.டி.ரூஸ்வெல்ட்

3. அமெரிக்கர்கள் பேரார்வத்துடன் ஈடுபட்ட துறை

   அ) வணிகம் ஆ) சூதாட்டம் இ) சினிமா ஈ) பங்கு வணிகச்சந்தை

4. எப்.டி.ரூஸ்வெல்ட் பதவியேற்ற நாள்

   அ) மார்ச் 4,1933 ஆ) மார்ச் 4,1993 இ) ஏப்ரல் 6,1933 ஈ) ஏப்ரல் 6, 1943

5. அமெரிக்கப் பொருளாதாரம் இயல்பு நிலைக்குத் திரும்பியது.

   அ) 1930 ஆ) 1940 இ) 1950 ஈ) 1945

### ஆ. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. | பங்குச் சந்தை சரிவு | வங்கிகள் மற்றும் தொழிற்சாலைகள் |
| 2. | புனரமைப்பு நிதி நிறுவனம் | கடனுதவிகள் |
| 3. | பொருளாதாரப் பெருமந்தம் | பங்குச் சந்தை உரிமம் |
| 4. | கூட்டாட்சி ரிசர்வ் வங்கி | விவசாயிகளுக்கு மானியம் |
| 5. | பாதுகாப்பு பரிவர்த்தனைச் சட்டம் | பங்குச் சந்தைகளில் கடன் முதலீடு |
| | | 1930–களில் ஆரம்பம் |

### இ. சுருக்கமான விடை தருக.

1. பொருளாதாரப் பெருமந்தம் தோன்றக் காரணங்கள் என்ன ?
2. தேசிய தொழில் மீட்புச் சட்டம் – குறிப்பு வரைக.
3. விவசாயத்தைச் சரிசெய்யும் சட்டம் பற்றி உனது கருத்துக்களை எழுதுக.

## ஈ. ஒவ்வொரு தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்ட அனைத்து வினாக்களுக்கும் விடையளி :

1. பிராங்க்ளின் டி. ரூஸ்வெல்ட்

   அ) ஜனாதிபதி தேர்தல் எப்பொழுது நடைபெற்றது ?

   ஆ) பிராங்க்ளின் டி. ரூஸ்வெல்ட் எவ்வாறு அழைக்கப்பட்டார் ?

   இ) அவரது தேர்தல் அறிக்கை யாது ?

   ஈ) அவர் உருவாக்கிய கொள்கையின் பெயர் என்ன ?

2. நிவாரணப் பணிகளின் விளைவுகள்

   அ) மக்களுக்கு யார் மீது நம்பிக்கை ஏற்படச் செய்தது ?

   ஆ) எதற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தது ?

   இ) அமெரிக்கர்களின் வாழ்க்கையில் ஒரு அங்கமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட சில கருத்துக்களை எழுதுக.

## உ. பத்தி வினா.

1. பிராங்க்ளின் டி.ரூஸ்வெல்ட் அறிவித்த நிவாரணம், புனரமைப்பு மற்றும் சீர்திருத்தங்கள் பற்றி விரிவான விடையளி.

# 4. இத்தாலியில் பாசிசம் கி.பி.1922–கி.பி.1945

பாசிசம் என்னும் சொல் 'பாசிஸ்' என்னும் இலத்தீன் வார்த்தையில் இருந்து தோன்றியது. இதற்கு 'கூட்டு' அல்லது 'குழு' என்று பொருள். இத்தாலிய பாசிசத் தலைவர் முசோலினி எழுச்சி மிக்க இத்தாலிய இளைஞர்களை ஒருங்கிணைத்து அவர்களுக்குப் பாசிஸ் என்று பெயரிட்டார். இப்பாசிஸ் நாட்டுக்கு எதிராகச் செயல்பட்டவர்களுக்குப் பதிலடி கொடுத்தது.

ஒரே தலைமை, சர்வாதிகாரியின் கீழ் ஒரே கட்சி ஆட்சி, பயங்கரவாதம், பொருளாதார ஆளுமை–இவைகளே பாசிசமாகிய கட்டிடத்தின் நான்கு முக்கியத் தூண்களாகும்.

முசோலினி பாசிசக் கொள்கைகளை அதிகமாக நம்பியதோடு, அதனோடு தொடர்புடைய 'நம்பு', 'கீழ்ப்படி' , 'போராடு' என்று மூன்று கட்டளைகளையும், 'அதிகப்படை, அதிக மதிப்பு' என்ற முழக்கத்தையும் நடைமுறைப்படுத்தினார்.

## பாசிசம் – எழுச்சிக்கான காரணங்கள்

இத்தாலியின் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் சூழ்நிலைகள் பாசிசம் தோன்றுவதற்கு ஏதுவாக அமைந்தன.

## பொருளாதாரச் சிக்கல்

முதலாம் உலகப்போரில் ஈடுபட்டதின் விளைவாக இத்தாலிக்கு பொருளாதாரச் சீரழிவு ஏற்பட்டது. நாட்டின் கடன் சுமை பன்மடங்காக அதிகரித்தது. பாரிஸ் அமைதி மாநாட்டில் இத்தாலிக்கு அரசியல் நன்மைகளைப் பெறவும் மற்றும் சட்ட ஒழுங்கை நிலை நாட்டவும் அரசாங்கம் தவறிவிட்டது என்று இத்தாலிய மக்கள் அதிருப்தி அடைந்தனர். நிலையான ஆட்சியைத் தரவும் அரசாங்கத்தால் இயலவில்லை. 'இத்தாலி போரில் வென்றது ஆனால் அமைதியை இழந்தது'.

## சோசலிஸ்டுகள் செயல்பாடுகள்

நாட்டில் நிலவி வந்த சோஷலிசக் கருத்துக்கள் மேலும் அமைதியைக் குலைத்தது எனலாம். இம்மாதிரியான அரசியல் குழப்பங்கள் 1919இல் இத்தாலியில் பாசிசம் தோன்ற ஏதுவாக அமைந்தன. இத்தகைய சூழ்நிலையை மாற்றத் தேவையான ஒரு மாபெரும் தலைமை முசோலினி மூலம் பூர்த்தி செய்யப்பட்டது.

## பெனிடோ முசோலினி (1883 –1945)

பொனிடோ அமில்கேர் ஆண்டிரியா முசோலினி 1883 ஆம் ஆண்டு ஜீலை 29–ம் நாள் மத்திய இத்தாலியில் ரோமக்னா என்ற இடத்தில் பிறந்தார். இவர் தந்தை ஒரு தொழிலாளி. தாயார் ஆரம்ப பள்ளி ஆசிரியர் ஆவார்.



முசோலினி

1902–ம் ஆண்டு பட்டம் பெற்ற முசோலினி ஒரு பள்ளி ஆசிரியர் ஆனார். பிறகு அப்பதவியை விட்டுவிட்டு சுவிட்சர்லாந்து வந்தடைந்தார். அங்கு லெனினை சந்தித்து அவரது கோட்பாடுகளைக் கற்றார். பிறகு ஆஸ்திரியா சென்று அங்கு இத்தாலிய சமதர்ம பத்திரிக்கை ஆசிரியரானார். இதனால் ஆஸ்திரியாவிலிருந்து வெளியேற்றப்பட்டார். இத்தாலி திரும்பிய இவர் இத்தாலிய சமதர்ம பத்திரிக்கை

'அவந்தி'யின் ஆசிரியரானார். முதல் உலகப்போரில் ஒரு சாதாரண வீரராகப் பங்கேற்றார். போருக்குப் பிறகு இத்தாலிய இளைஞர்களை ஒன்று திரட்டினார். இவர்கள் பாசிஸ்டுகள் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் உதவியோடு முசோலினி 1921 நவம்பர் திங்களில் தேசிய பாசிசக் கட்சியை உருவாக்கினார்.

## அதிகாரத்தைக் கைப்பற்றுதல்

1922– ஆம் ஆண்டு அக்டோபர் 30–ம் நாள் முசோலினி தலைமையில் பாசிஸ்டுகள் ரோம் நகரை நோக்கி அணிவகுத்துச் சென்று தங்கள் பலத்தைக் காட்டினர். இதனையறிந்த அரசர் இரண்டாம் விக்டர் இம்மானுவேல் அரசாங்கத்தை அமைக்கும்படி முசோலினுக்கு வேண்டுகோள் விடுத்தார். இதனைத் தொடர்ந்து எத்தகைய இரத்தமும் சிந்தாமல் பாசிஸ்டுகள் அதிகாரத்தைக் கைப்பற்றினர். இருப்பினும் பின்னர் அடக்குமுறை, கொலை மற்றும் நாடு கடத்துதல் பெருகின. இறுதியில் முசோலினியின் சர்வாதிகார ஆட்சி இத்தாலியில் மலர்ந்தது. இந்த சர்வாதிகார ஆட்சி கி.பி. 1922 முதல் கி.பி. 1945 வரை நீடித்தது.

## பாசிசக் கட்சி

முசோலினியின் கொள்கைகளைப் பின்பற்றியவர்கள் 'கருஞ்சட்டையினர்' என அழைக்கப்பட்டனர். அவர்கள் முசோலினியை 'டியூஸ்'(DUCE) என்றழைத்தனர். இவருடைய இரகசியக் காவல் படை 'ஒவ்ரா'(OVRA) என்றழைக்கப்பட்டது.

## பாசிசக் கொள்கையின் நோக்கம்

நாட்டை உயர்நிலைக்குக் கொணர்தல்

தனிமனிதனின் உடைமைகளைப் பாதுகாத்தல் மற்றும்

ஆற்றல் மிக்க வெளியுறவுக் கொள்கை

## பாசிசக் கொள்கையின் இலக்கு (Motto)

எல்லாம் நாட்டிற்காகவே

நாட்டிற்கு எதிராக எதுவுமில்லை

நாட்டிற்கு வெளியே எதுவுமில்லை

## முசோலினியின் சாதனைகள்

முசோலினி ஒரு சிறந்த தலைவராக விளங்கினார். இத்தாலியை ஒரு வலிமை பொருந்திய நாடாக்க விரும்பினார். எனவே, பல்வேறு நடைவடிக்கைகளை மேற்கொண்டார். இத்தாலியில் அமைதி மற்றும் ஒழுங்கை நிலைநாட்டினார். நிலையான அரசை நிறுவினார். தொழில் துறையில் ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும் கொண்டுவந்தார்.



ஹிட்லருடன் முசோலினி

இவரால் வெளியிடப்பட்ட தொழில் பட்டயம் (Charter of Labour) தொழிலாளர்களின் நலனுக்கு மிகவும் உகந்ததாக அமைந்தது. அதன் மூலம் தொழிலாளர்களின் போராட்டத்தை ஒடுக்கி பொருட்களின் உற்பத்தியைப் பெருக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டார். நீர்பாசன வசதிகளை மேம்படுத்தினார். தரிசு நிலங்களை மாற்றியமைத்து விளைச்சலைப் பெருக்கினார். நீர் மின்சக்தி உற்பத்தியை உருவாக்கினார். இவரது காலத்தில் போக்குவரத்து துறை மற்றும் இரயில்வேத்துறை முன்னேற்றம் கண்டது. இவற்றின் மூலம் இத்தாலி தனது சுய தேவைகளைப் பூர்த்தி செய்யும் நாடாக முன்னேற்றம் கண்டது.

திறமையான நிர்வாகியான முசோலினி 1929–ம் ஆண்டு போப்புடன் லேட்டரன் உடன்படிக்கை ஒன்றை மேற்கொண்டார். இதன் மூலம் சுமார்

அறுபது ஆண்டு காலமாக போப்பிற்கும், இத்தாலிய அரசுக்குமிடையே நிலவிவந்த போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தார். இந்த உடன்படிக்கை மூலம் வாடிகன் நகரில் போப்பாட்சியை முசோலினி அங்கீகரித்தார். இதற்கு மாறாக போப் ரோம் நகரில் அரசரின் மேலாண்மையை அங்கீகரித்தார். இந்த உடன்பாடு முசோலினியின் பெருமை மற்றும் புகழை மேலும் உயர்த்தியது.

### முசோலினியின் வெளியுறவுக் கொள்கை

முசோலினி தீவிரமான மற்றும் முற்போக்கான அயல்நாட்டுக் கொள்கையைப் பின்பற்றினார். இத்தாலியின் பெருமை மற்றும் புகழை உலக அரங்கில் உயரச் செய்தார். பண்டைய பெருமைமிக்க ரோமானியப் பேரரசை மீண்டும் உருவாக்குவதே அவரின் நோக்கமாக இருந்தது. இத்தாலியை பேரரசாக மாற்றவேண்டும் அல்லது அழிக்கப்பட வேண்டும் என்பதே முசோலினியின் முழக்கம் ஆகும். 1936–ல் முசோலினி எத்தியோப்பியாவைக் கைப்பற்றினார். 1937–ல் இவர் சர்வதேச சங்கத்தில் இருந்து வெளியேறினார்.

1939–ல் இவர் அல்பேனியாவைப் கைப்பற்றினார். ஹிட்லரின் பொதுவான கொள்கையை ஏற்றுக் கொண்டார். இரண்டாம் உலகப்போர் ஏற்படக்காரணமான ரோம்–பெர்லின்–டோக்கியோ உடன்படிக்கையில் இணைந்தார். இரண்டாவது உலகப்போர் இத்தாலிக்கு பெரும் இழப்பினைத் தேடித்தந்தது. இரண்டாம் உலகப்போர் நடைபெற்ற போது 1941 ல் இத்தாலி தனது ஆப்பிரிக்கக் குடியேற்றங்களை இழந்தது. முசோலினியால் இத்தாலியின் அழிவை தடுக்க இயலவில்லை. 1943 ஆம் ஆண்டு நேச நாடுகளின் கூட்டுப் படைகள் சிசிலித் தீவை பலமாக குண்டு வீசித் தாக்கிக் கைப்பற்றியது. முசோலினி தப்பிச் செல்ல முயன்ற போது ஒரு இத்தாலியக் குடிமகனால் சுட்டுக்கொல்லப்பட்டார். இத்தாலியில் முசோலினியின் மறைவு பாசிச ஆட்சிக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தது. பின்னர் இத்தாலியில் பாராளுமன்ற மக்களாட்சி முறை மலர்ந்தது.

## பயிற்சி

### அ. சரியான விடை தருக.

1. பாசிச கட்சியைத் தோற்றுவித்தவர்

   அ) ஹிட்லர் ஆ) முசோலினி இ) ஸ்டாலின் ஈ) லெனின்

2. முசோலினி தேசிய பாசிச கட்சியைத் தோற்றுவித்த ஆண்டு

   அ) நவம்பர், 1921 ஆ) டிசம்பர், 1921

   இ) ஜனவரி, 1921 ஈ) பிப்ரவரி, 1921

3. முசோலினியால் ஏற்படுத்தப்பட்டது.

   அ) ஜனநாயக ஆட்சி ஆ) கம்யூனிச ஆட்சி

   இ) நிலையான ஆட்சி ஈ) குடியரசு

4. தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட சிறந்த நிவாரணம்

   அ) சர்வதேச தொழிலாளர் அமைப்பு ஆ) ஆலைச் சட்டம்

   இ) தொழில் பட்டயம் ஈ) தொழிலாளர் ஒன்றியம்

5. முசோலினியுடன் பொதுக் கொள்கையை ஏற்படுத்திக் கொண்டவர்

   அ) சர்ச்சில் ஆ) ஹிட்லர் இ) ஸ்டாலின் ஈ) லெனின்

6. சர்வதேச சங்கத்திலிருந்து முசோலினி விலகிய ஆண்டு

அ) 1931 ஆ) 1932 இ) 1935 ஈ) 1937

## ஆ. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. | டியூஸ் | முசோலினியின் இரகசிய காவல்படை |
| 2. | கருஞ்சட்டை | 1922 |
| 3. | ஒவரா | 1924 |
| 4. | ரோம் அணிவகுப்பு | முசோலினி |
| 5. | அல்பேனியா | முசோலினியன் தொண்டர்கள் |
| | | 1939 |

## இ. குறுவினா.

1. பாசிசம் – பொருள் கூறுக.
2. பாசிசத்தின் நான்கு தூண்கள் யாவை ?
3. பாசிசம் தோன்றுவதற்கான காரணங்களை எழுதுக.
4. முசோலினி எவ்வாறு அதிகாரத்தைக் கைப்பற்றினார் ?
5. முசோலினியின் சாதனைகளில் ஏதேனும் இரண்டினை எழுதுக.
6. முசோலினி, அரசருக்கும் போப்பாண்டவருக்கும் இடையே இருந்த வேற்றுமையை எவ்வாறு களைந்தார் ?

## ஈ. ஒவ்வொரு தலைப்பின் கீழ் வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. பாசிசக் கட்சி

அ) பாசிசக் கட்சியைத் தோற்றுவித்தவர் யார் ?

ஆ) முசோலினியின் முழக்கம் பற்றி எழுதுக

இ) பாசிசத்தின் நோக்கங்கள் என்ன ?

ஈ) பாசிசத்தின் குறிக்கோள் என்ன ?

2. பாசிசத்தின் சாதனைகள்

அ) தொழில் உற்பத்தியில் முசோலினி அறிவித்த மாற்றங்கள் யாவை ?

ஆ) தொழில் பட்டயம் பற்றி நீ அறிந்தவற்றை எழுதுக.

இ) வேளாண்மைத் துறையில் முசோலினி எடுத்த நடவடிக்கைகள் யாவை ?

ஈ) லேட்டரன் உடன்படிக்கை எப்பொழுது கையெழுத்தானது ?

3. முசோலினியின் தீவிர வெளியுறவுக் கொள்கை

அ) தேசத்தின் முன் முசோலினியின் முழக்கம் என்ன ?

ஆ) முசோலினி எப்பொழுது அல்பேனியாவைக் கைப்பற்றினார் ?

இ) கூட்டு நாடுகள் குண்டு வீசிய தீவு யாது ?

ஈ) முசோலினியின் முடிவு என்ன ?

## உ. பத்தி வினா.

1. முசோலினியின் தலைமையில் பாசிசம் படைத்த சாதனைகள் யாவை ?
2. முசோலினியின் தீவிர வெளியுறவுக் கொள்கை பற்றி ஒரு பத்தி எழுதுக.

# 5. ஜெர்மனியில் நாசிசம் கி.பி1933–கி.பி.1945

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நடைபெற்ற முதல் உலகப்போரில் (1914 – 1918) வலிமைமிக்க ஜெர்மனி, நேச நாடுகளை எதிர்த்துப் போரிட்டது. போரின் ஆரம்பக் கட்டத்தில் பிரான்சு, பெல்ஜியம் போன்ற நாடுகளைக் கைப்பற்றி வெற்றி முகம் கண்டது. ஆனால் 1917 ஆம் ஆண்டு அமெரிக்கா நேசநாடுகளுடன் சேர்ந்து அதனை பலமடையச் செய்தது. இதனால் நேசநாடுகள் ஜெர்மனி மற்றும் மைய நாடுகளை 1918ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தோற்கடித்தது.

## ஜெர்மனியின் தோல்வி

முதல் உலகப் போரில் ஜெர்மனி தோல்வியடைந்து அதன் அரசர் கெய்சர் இரண்டாம் வில்லியம் பதவி துறந்ததால் பாராளுமன்றக்கட்சிகளுக்கு ஜெர்மனியில் அரசியலை மாற்றியமைக்கும் வாய்ப்புக் கிட்டியது. ஜெர்மனியின் தேசிய பேரவை, வெய்மார் (Weimar) நகரில் கூடி விவாதித்து, கூட்டாட்சி தன்மை வாய்ந்த ஜனநாயக அரசியலமைப்பை உருவாக்கியது. எனினும் மக்களிடையே இக்குடியரசிற்கு வரவேற்பில்லை.

வெர்சேல்ஸ் உடன்படிக்கையின்படி ஜெர்மனி ஒரு கடுமையான, பெரும் அவமானத்திற்கு உட்படுத்தப்பட்டது. இந்த உடன்படிக்கையின்படி, தனது குடியேற்ற நாடுகளையும், பத்தில் ஒரு பங்கு மக்கள் தொகையையும் இழந்தது. ஜெர்மனியின் வலிமையைக் குறைக்கும் பொருட்டு நேச நாடுகள் அதன் படைபலத்தைக் குறைத்தன. ஜெர்மனி ஆறு பில்லியன் டாலர்கள் போர் இழப்பீடாக வழங்கும்படி வற்புறுத்தப்பட்டது. மேலும் நேசப்படைகள் வளமிக்க ரையின் (Rhine) பகுதியை ஆக்கிரமித்துக்கொண்டன. ஜெர்மானியர்கள் வெய்மாரில் ஏற்படுத்தப்பட்ட குடியரசே போரின் தோல்விக்கும், வெர்சேல்ஸ் உடன்படிக்கையில் ஏற்பட்ட அவமானத்திற்கும் காரணம் என்று கருதினர்.

1929 ல் ஏற்பட்ட பொருளாதாரப் பெருமந்தம் ஜெர்மனியை பெரிதும் பாதித்தது. இக்கட்டான இத்தகையச்சூழலில் இருந்து ஜெர்மனியைக் காப்பாற்ற நெஞ்சுரம் மிக்க ஒரு பெரும் தலைவரை மக்கள் எதிர் நோக்கி காத்திருந்த வேளையில் அவர்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அடால்ஃப் ஹிட்லர் தோன்றினார்.

## அடால்ஃப் ஹிட்லர் (கி.பி 1889– கி.பி. 1945)

அடால்ஃப் ஹிட்லர் 1889 – ம் ஆண்டு ஆஸ்திரியாவில் பிறந்தார். இவரது தந்தை ஒரு சுங்க அதிகாரி ஆவார். சிறு வயதிலேயே தந்தையை இழந்த ஹிட்லர், வேலைத் தேடி வியன்னா வந்தடைந்தார். அங்கு சிறிது காலம் பெயின்டராகப் பணியாற்றினார்.



அடால்ஃப் ஹிட்லர்

முதல் உலகப்போரின் போது இராணுவத்தில் சேர்ந்து தைரியமாகப் போரிட்டார். இதனால் பாராட்டுப்பெற்றார்.

போருக்குப் பிறகு வேலையை இழந்தார். எனவே, அரசியலில் ஈடுபட்டார். தனது ஆதரவாளர்களை ஒன்று திரட்டினார். இவர்கள் தேசிய சமதர்மவாதிகள் என்று அழைக்கப்பட்டனர். இவர்களே 1919–ம் ஆண்டு நாசிசக் கட்சியினராக மாறினர். ஹிட்லர் தனது கட்சியினருக்கு கொள்கைகள், சின்னம் மற்றும் சீருடைகளை வழங்கினார். ஹிட்லரின் ஆதரவாளர்கள் பழுப்பு நிற சீருடை அணிந்திருந்ததால் அவர்கள் 'பழுப்புச்சட்டையினர்' என அழைக்கப்பட்டனர். இவர்கள் ஹிட்லரை ஃபரர் (Fuhrer) தலைவர் என்று அழைத்தனர். நாசிசக் கட்சியின் சின்னம் சுவஸ்திகா (卐) இவரது ரகசியப் படை கெஸ்டபோ (Gestapo) ஆகும்.

ஹிட்லர் ஒரு எதிர்ப்பாளராக தனது அரசியல் வாழ்க்கையைத் தொடங்கினார். 1923–ம் ஆண்டு அதிகாரத்தை கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டார். இதற்கு 'பீர் மண்டபப் புரட்சி' என்று பெயர். ஆனால் தோல்வி கண்டார். இதனால் அவர் மீது தேசத் துரோகக்குற்றம் சுமத்தப்பட்டு கைது செய்யப்பட்டார். ஐந்து ஆண்டுகள் சிறையிலடைக்கப்பட்டார். சிறையில் இருந்த போது 'மெயின் காம்ப்' (Mein Kampf) (எனது போராட்டம்) என்ற நூலை எழுதினார். இது நாசிசத்தின் வேத நூலாக விளங்கியது. பின்னர் ஹிட்லர் விடுதலை ஆனார்.

## அதிகாரத்தைக் கைப்பற்றுதல்

ஹிட்லர் தலைமையில் நாசிசக் கட்சி ஒரு பெரிய கட்சியாக வளர்ந்தது. 1932–ம் ஆண்டு தேர்தலில் அதிக இடங்களில் வெற்றி பெற்று, ஜெர்மானியப் பாராளுமன்றத்தில் இரண்டாவது பெரிய கட்சியாக மாறியது. 1933–ம் ஆண்டு ஹிட்லர் ஜெர்மனியின் சான்சலரானார். ஹிண்டன்பர்க் குடியரசு தலைவரானார். 1934–ம் ஆண்டு ஹிண்டன்பர்க் காலமானதைத் தொடர்ந்து, ஹிட்லர் தானே குடியரசுத் தலைவரானார். வெய்மார் குடியரசை கலைத்து தன்னை ஜெர்மனியின் அரசராக அறிவித்துக்கொண்டார்.

'ஒரே மக்கள்'

'ஒரே நாடு'

'ஒரே தலைவர்'

என்ற கொள்கையை ஹிட்லர் அறிவித்தார்.

## ஹிட்லரின் சாதனைகள்

ஜெர்மனியின் பெருமையை வெளிப்படுத்தினார். ஜெர்மானியர்கள் உலகில் மிக உயர்ந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதில் அவர் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தார். நார்டிக் ஜெர்மானிய இனத்தினர் மிக உயர்ந்தவர்கள் என்றும், செமிடிக் யூதர்கள் மிகவும் தாழ்ந்தவர்கள் என்றும் கருதினார். நார்டிக் இனத்தின் தனித்தன்மையைக் காக்கும் பொருட்டு செமிடிக் யூதர்களை வெறுத்து ஒதுக்கினார். அவரது வெறுப்பின் உச்சக்கட்டமே யூதர்களின் படுகொலை ஆகும். ஹிட்லர் செயல்பாடு, வன்முறை, தீவிரவாதம் ஆகியவற்றில் நம்பிக்கை கொண்டிருந்தார். மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டன. நாசிசக் கட்சி தவிர பிற கட்சிகள் ஒழிக்கப்பட்டன. பாராளுமன்ற நிறுவனங்கள் தடைச்செய்யப்பட்டன. மக்களின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டன. ஜெர்மனிக்கு புதிய அந்தஸ்தை வழங்கினார். கூட்டாட்சி அரசியலமைப்பு ஒழிக்கப்பட்டு, வலிமையான ஒன்றுப்பட்ட மைய வல்லரசை ஏற்படுத்தினார்.

ஜெர்மனியின் பொருளாதாரத்தை மேம்படுத்த பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். போரினால் பாதிக்கப்பட்ட ஜெர்மனியின் பொருளாதாரத்தை மேம்படுத்தினார். தொழிற் சங்கங்களுக்குப் பதிலாக முதலாளிகள் மற்றும் தொழிலாளர்கள் பிரதிநிதிகளைக் கொண்ட தொழில் முன்னேற்ற அமைப்பை உருவாக்கினார். இதன் மூலம் தொழிலாளர்களின் நலனை மேம்படுத்தினார். கதவடைப்புகள் மற்றும்

வேலைநிறுத்தங்கள் தடைச்செய்யப்பட்டன. உணவு உற்பத்தி, கச்சாப்பொருட்கள் மற்றும் தொழில் உற்பத்தியில் ஜெர்மனியைத் தன்னிறைவு பெற்ற நாடாக மாற்றினார். அறிவியல் முறைகள் புகுத்தப்பட்டு, ஏராளமான நிலங்கள் விளைச்சலுக்கு பயன்படுத்தப்பட்டன. போர்க் கருவிகளை அதிக அளவில் உற்பத்தி செய்ததின் மூலம் ஏராளமானவர்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்கி வேலையின்மைப் பிரச்சனையைப் போக்கினார். நாடு முழுவதும் பள்ளிகள் திறக்கப்பட்டு கல்வியறிவின்மையைப் போக்கினார். மாணவர்களுக்கு நாசிசக் கலாச்சாரம் போதிக்கப்பட்டது. நாசிசத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டனர். நாசிசப் பாடத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட பாடப்புத்தங்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டன. பெண்கள் புறக்கணிக்கப்பட்டனர். இவர்கள் பிள்ளைகளை பெறும் இயந்திரங்களாக கருதப்பட்டனர். அனைத்து வகையான சமூக நிறுவனங்களும் தடைச்செய்யப்பட்டன.

### ஹிட்லரின் தீவிரமான அயல்நாட்டுக் கொள்கை

ஹிட்லர் ஒரு தீவிரமான, முற்போக்கான, அயல்நாட்டுக் கொள்கையைப் பின்பற்றினார். இவரது அயல்நாட்டுக் கொள்கை ஜெர்மனிக்கு ஆபத்தையும், அழிவையும் தேடித் தந்ததோடு மக்களுக்கு வேதனைகளையும், இன்னல்களையும் உருவாக்கியது. ஹிட்லர் கட்டாய இராவணுவச்சேவையை அறிமுகப்படுத்தினார். ஆயுதங்களை பெருமளவில் உற்பத்தி செய்து குவித்தார். ஜெர்மனியின் வளங்களைப் பெருக்குவதற்கும், பெருகி வரும் மக்கள்தொகைக் குடியேற்றத்திற்காகவும் பிற நாடுகளைக் கைப்பற்ற முனைந்தார். **1933**–ம் ஆண்டு சர்வதேச சங்கத்தில் இருந்து விலகினார். **1936** –ஆம் ஆண்டு இராணுவ விலக்கு பெறப்பட்ட ரைன்லாந்தைக் (Rhine Land) கைப்பற்றினார். இதன் மூலம் **1925** –ஆம் ஆண்டின் லொகர்னோ ஒப்பந்தத்தை மீறினார். **1937**–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இத்தாலி மற்றும் ஜப்பானுடன் சேர்ந்து ரோம்–பெர்லின்–டோக்கியோ உடன்படிக்கையை ஏற்படுத்தினார். **1938** ஆம் ஆண்டு ஆஸ்திரியாவை ஜெர்மனியுடன் இணைத்தார். அதே ஆண்டு செக்கோஸ்லோவாக்கியாவின் ஒரு பகுதியான சூடட்டன்லாந்தை (Sudetenland) கைப்பற்ற விரும்புவதாக அறிவித்தார். எனவே, இங்கிலாந்துப் பிரதமர் நிவில் சேம்பர்லைன் (Neville Chamberlain) என்பவரை ஹிட்லர் மியூனிச் (Munich) என்னும் இடத்தில் சந்தித்து ஒரு அமைதி உடன்படிக்கை செய்து கொண்டார். அதன்படி ஹிட்லர் சூடட்டன்லாந்தை மட்டும் ஆக்கிரமிப்புச் செய்யலாம் என்றும் பிற இடங்களைக் கைப்பற்றுதல் கூடாது என்ற உறுதிமொழியை பெற்றுக்கொண்டார். ஆனால் **1939** ஆம் ஆண்டு மியூனிச் உடன்படிக்கையை மீறி செக்கோஸ்லாவாக்கியா முழுவதையும் ஜெர்மனியுடன் இணைத்தார். இது இங்கிலாந்து மற்றும் பிரான்சிற்கு பெரும் அதிர்ச்சியைத் தந்தது.

**1939** ஆம் ஆண்டு ஹிட்லர் ஜெர்மனியையும் கிழக்கு பிரஷ்யாவையும் போலந்து வழியாக இணைக்கும், இராணுவச்சாலை அமைக்கும் உரிமையை வழங்குமாறு போலந்து நாட்டை நிர்ப்பந்தித்தார் மற்றும் டான்சிக் (Danzig) துறைமுகத்தைத் தன்னிடம் ஒப்படைக்கவும் வலியுறுத்தினார். இதனைப் போலந்து மறுக்கவே, **1939** ஆம் ஆண்டு செப்டம்பர் ஒன்றாம் நாள் ஹிட்லர் அந்நாட்டின் மீது மின்னல் வேகத்தாக்குதல் நடத்தி போலந்தைக் கைப்பற்றினார். இதுவே, இரண்டாம் உலகப்போர் ஏற்படக் காரணமாயிற்று.

ஹிட்லர் 1941 ஆம் ஆண்டு இரஷ்யாவுடன் செய்து கொண்ட ஆக்கிரமிப்பு தடை ஒப்பந்ததை மீறி இரஷ்யாவுக்கு எதிராகப் படையெடுத்தார். இந்த இரஷ்யப் படையெடுப்பு பெரும் தோல்வியைத் தழுவியது. 1945 ஆம் ஆண்டு இரஷ்யப் படைகள் பெர்லின் நகருக்குள் நுழைந்தன. தன்னால் வெற்றி பெறமுடியாது என்பதை உணர்ந்த ஹிட்லர் தனது சுரங்க அறையில் தற்கொலைச் செய்துகொண்டார். ஹிட்லரின் மறைவை தொடர்ந்து இரண்டாம் உலகப்போர் முடிவுக்கு வந்தது. அவரது நாசிக் கட்சியும் வலுவிழந்தது.

## பயிற்சி

### அ. சரியான விடை தருக.

1. தேசிய அவை ஒரு ஜனநாயக சட்ட அமைப்புடன் கூடிய கூட்டாட்சி முறையை ஏற்படுத்த கூடிய இடம்.

   அ) பெர்லின் ஆ) வெய்மார் இ) பிராங்க்பர்ட் ஈ) பின்லாந்து

2. கூட்டுப்படை வளம் மிக்க இடத்தை ஆக்கிரமிப்பு செய்தது.

   அ) ரைன்லாந்து ஆ) சூடட்டன்லாந்து இ) கிரீன்லாந்து ஈ) பின்லாந்து

3. ஹிட்லரின் செமிட்டிக் எதிர்ப்புக் கொள்கை யாரை கொல்லும் அளவிற்குச் சென்றது

   அ) ஆரியர்கள் ஆ) மங்கோலியர்கள்

   இ) யூதர்கள் ஈ) ஆஸ்திரேலியர்கள்

4. ஹிட்லர் வியன்னாவில் பணியாற்றியது.

   அ) பெயிண்டர் ஆ) தையற்காரர் இ) ஆசிரியர் ஈ) வங்கி ஊழியர்

5. 1941 ஆம் ஆண்டு ஹிட்லர் படையெடுத்த நாடு

   அ) ரஷ்யா ஆ) பிரான்சு இ) பிரஷ்யா ஈ) பாரசீகம்

6. கூட்டு நாடுகள் இந்நாட்டின் வருகையால் வலிமை பெற்றன

   அ) ஆஸ்திரியா ஆ) அமெரிக்கா இ) பின்லாந்து ஈ) போலந்து

### ஆ. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. | காக்கிச் சட்டைகள் | நாசி சின்னம் |
| 2. | ஃபரர் | எனது போராட்டம் |
| 3. | ஸ்வஸ்திகா | தலைவர் |
| 4. | கெஸ்டபோ | சான்சலர் |
| 5. | மெயின் காம்ப் | ஹிட்லரின் தொண்டர்கள் |
| | | ஆளுநர் |
| | | ஹிட்லரின் இரகசிய காவல்படை |

## இ. சுருக்கமான விடை தருக.

1. ஹிட்லர் என்ன அறிவித்தார் ?
2. 1923 ஆம் ஆண்டு ஹிட்லர் என்ன செய்தார் ? அதன் விளைவு என்ன ?
3. ஹிட்லர் எவ்வாறு ஜெர்மனியின் அதிபரானார் ?
4. மியூனிச் உடன் படிக்கை சிறு குறிப்பு தருக.
5. ஹிட்லர் நார்டிக் இனத்தின் தனித் தன்மையை எவ்வாறு பாதுகாத்தார் ?

## ஈ. ஒவ்வொரு தலைப்பின் கீழ் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. அடால்ஃப் ஹிட்லர்

   அ) அடால்ஃப் ஹிட்லர் எங்கு பிறந்தார் ?

   ஆ) அவர் தந்தையின் தொழில் என்ன ?

   இ) ஹிட்லர் எதனைத் தோற்றுவித்தார் ?

   ஈ) ஹிட்லர் எழுதிய புத்தகத்தின் பெயர் என்ன ?

2. ஹிட்லரின் தீவிரக் கொள்கை

   அ) ஹிட்லர் எதற்காக நாடுகளைக் கைப்பற்றினார் ?

   அ) 1925 ஆம் ஆண்டு ஏற்பட்ட லொகார்னோ உடன்படிக்கையை எவ்வாறு மீறினார் ?

   இ) ஹிட்லர் போலந்திடம் வேண்டியது என்ன ?

   ஈ) ஹிட்லர் போலந்து மீது எப்பொழுது போர் தொடுத்தார் ?

## உ. பத்தி வினா.

1. ஜெர்மனியில் ஹிட்லர் நாசிச ஆட்சியை ஏற்படுத்தியது குறித்து ஒரு பத்தி எழுதுக.
2. ஹிட்லரின் தீவிர ஆக்கிரமிப்புக் கொள்கை பற்றி விளக்கு.

# 6. இரண்டாம் உலகப் போர் கி.பி.1939–கி.பி.1945

கி.பி.1939 முதல் கி.பி.1945 வரை நடைபெற்ற இரண்டாம் உலகப்போர், உலகளாவிய ஒரு பெரும் போராக கருதப்படுகிறது. இராணுவ உடன்படிக்கைகளால் பெரிய வல்லரசுகள், நேச நாடுகள் மற்றும் அச்சு நாடுகள் என இரு எதிரெதிர் அணிகளாகப் பிரிந்து போரில் ஈடுபட்டன. இப்போரில் அதிக அளவிலான நாடுகள் பங்கேற்றன. போரில் ஈடுபட்ட அனைத்து நாடுகளும் எதிரி நாட்டின் குடிமக்கள், உடமைகள், இராணுவ வளங்களை அழிப்பதற்காக தங்கள் பொருளாதார வளங்களை முழுமையாகப் பயன்படுத்தின.

## இரண்டாம் உலகப்போருக்கான காரணங்கள்

### வெர்செயில்ஸ் உடன்படிக்கையின் குறைபாடுகள்

வெர்செயில்ஸ் உடன்படிக்கையின் படி முதல் உலகப்போர் முடிவுக்கு வந்தது. இவ்வுடன்படிக்கை, பழிவாங்கும் அடிப்படையில் அமைந்து பல நாடுகளுக்கு அதிருப்தியை தந்தது. இந்த உடன்படிக்கையின்படி, ஜெர்மனி போருக்கான முக்கிய குற்றவாளி என்று குற்றம் சாட்டப்பட்டு, ஜெர்மனியின் குடியேற்றங்கள் பறிக்கப்பட்டன. கனிம வளம் மிக்க அல்சேஸ், லொரைன் பகுதிகள் திரும்ப பெறப்பட்டன. சார் நிலக்கரி வயல்களும் பிரான்சுக்கு 15 ஆண்டுகளுக்கு இலவசமாக அனுபவித்துக் கொள்ளும் உரிமையை அளித்தது. அதன் இராணுவ பலம் குறைக்கப்பட்டது. ஜெர்மனியை இழிவுபடுத்தும் நோக்கத்தோடு எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கைகள் அனைத்தும் இரண்டாம் உலகப்போருக்கு வித்திட்டன.

### தேசிய உணர்வு

ஜெர்மனி ஜெர்மானியர்களுக்கே, இத்தாலி இத்தாலியர்களுக்கே போன்ற கொள்கைகள் மக்களிடையே தேசிய எழுச்சியை ஏற்படுத்தின. ஜெர்மானியரே உலகை ஆளத்தகுதியுடையவர்கள் என்று கருதினர். ஒரு நாட்டின் தேசிய உணர்வு அந்நாட்டின் வளர்ச்சிக்கு பயன்பட்டபோதிலும், அதன் தன்மையை மீறி குறுகிய தேசிய உணர்வாக மாறும்போது பயனற்றுப்போகிறது.

### சர்வதேச சங்கத்தின் தோல்வி

உலகில் அமைதி மற்றும் பாதுகாப்பை நிலைநிறுத்த முதல் உலகப்போருக்குப்பின் உருவாக்கப்பட்டது சர்வதேச சங்கம். இச்சங்கம் தன்னுடைய முக்கிய நோக்கத்திலிருந்து தவறியது. தனது முக்கிய நோக்கமான படை குறைப்பையும், அமைதியைக் காக்கவும் தவறியது. வல்லரசு நாடுகள் இச்சங்கத்தில் அதிக செல்வாக்குப் பெற்று சங்கத்தை மதிக்க தவறின. இது போருக்கு வழிவகுத்தது.

### ஜப்பானின் எழுச்சி

முதல் உலகப்போருக்குப்பின் ஜப்பான் ஒரு வலிமைமிக்க நாடாக உருவாகியது. அந்நாட்டில் தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டதால் ஏகாதிபத்திய கொள்கையை பின்பற்றத் தொடங்கியது. இத்தாலி, ஜெர்மனி, ஜப்பான் ஆகிய மூன்று நாடுகளும் ரோம்–பெர்லின்–டோக்கியோ அச்சு ஒப்பந்தத்தை ஏற்படுத்தின. இது இரண்டாம் உலகப்போருக்கு வித்திட்டன.

### சர்வாதிகார எழுச்சி

முதல் உலகப்போருக்குப் பிறகு உலகில் ஜனநாயகம், பொதுவுடமைக் கொள்கை, பாசிசம், நாசிசம், போன்ற கொள்கைகள் தோன்றின. ஐரோப்பிய நாடுகளில் உருவான புதிய குடியாட்சியின் தோல்வி, ஹிட்லர், முசோலினி ஆகியோரின் சர்வாதிகார வளர்ச்சிக்கு வழிவகைச் செய்தன. இது சர்வதிகாரிகளின் கொள்கைகளான போர் மற்றும் கைப்பற்றுதுலே இரண்டாம் உலகப் போருக்கு வழி வகுத்தன.

## சிறுபான்மையினரின் பிரச்சனைகள்

முதல் உலகப்போருக்குப்பின் உலகில் பல புதிய நாடுகள் உருவாக்கப்பட்டன. ஆனால் அந்நாடுகளுக்கு தேசியக் கொள்கைகள் கிடையாது. போலந்து, ஆஸ்திரியா, செக்கோஸ்லோவேகியா போன்ற நாடுகளில் சிறுபான்மையினரின் சுயநிர்ணய உரிமை மறுக்கப்பட்டது.

## போலியான அமைதிக்கொள்கை

வல்லரசு நாடுகளின் பெருந்தலைவர்கள் தங்களது கொள்கைகளை மறந்து போலியான அமைதி கொள்கையினைப் பின்பற்றினர். அவர்களது கொள்கையினை ஏகாதிபத்திய நாடுகள் ஏற்றுக்கொள்ள மறுத்தன. இது இரண்டாம் உலக போருக்கு வழி வகுத்தது.

## அச்சு நாடுகளின் கூட்டு

நாசிசத் தலைவர் அடால்ஃப் ஹிட்லர் இனவெறிப் பிரச்சாரத்தில் ஈடுபட்டார். வெர்செயில்ஸ் உடன்படிக்கையில் காணப்பட்ட ஆயுதக் குறைப்பு அம்சத்தைக் கைவிட்டு, விமானப்படைப்பிரிவை ஏற்படுத்தினார். கட்டாயமாக இராணுவச்சேவையை நடைமுறைப்படுத்தினார். இத்தாலி மற்றும் ஜப்பானுடன் சேர்ந்து ரோம்–பெர்லின்–டோக்கியோ கூட்டணியை 1936–ல் உருவாக்கினார். இது போருக்கு வித்திட்டது.

## ஜெர்மனியின் ஆக்கிரமிப்புக் கொள்கை

1938–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஹிட்லர் சூடட்டன்லாந்தைக் கைப்பற்றப் போவதாகக் கூறி செக்கோஸ்லோவாகியாவை அச்சுறுத்தினார். இதனால் இங்கிலாந்து பிரதமர் நிவில் சேம்பர்லைனுக்கும் ஹிட்லருக்கும் மியூனிச் என்னுமிடத்தில் ஒரு உடன்படிக்கை ஏற்பட்டது. இதன்படி செக்கோஸ்லோவோகியாவின் எந்தப் பகுதியையும் (மியூனிச் தவிர) இணைத்துக் கொள்ள மாட்டேன் என்று உறுதியளித்தார். ஆனால் ஆறு மாதத்திற்குள்ஹிட்லர் செக்கோஸ்லோவேகியாவின் எஞ்சிய பகுதிகளைக் கைப்பற்றி மியூனிச் உடன்படிக்கையை மீறினார். அது இரண்டாம் உலகப் போருக்குப் காரணமாயிற்று.

## உடனடிக் காரணம்

1939 ஆம் ஆண்டு ஹிட்லர் ஜெர்மனியையும் கிழக்கு பிரஷ்யாவையும் போலந்து வழியாக இணைக்கும் இராணுவச்சாலை அமைக்கும் உரிமையை வழங்குமாறு போலந்து நாட்டை நிர்ப்பந்தித்தார் மற்றும் டான்சிக் (Danzig) துறைமுகத்தைத் தன்னிடம் ஒப்படைக்கவும் வலியுறுத்தினார். இதனைப் போலந்து மறுக்கவே 1939 ஆம் ஆண்டு செப்டம்பர் 1–ம் தேதி ஹிட்லர் அந்நாட்டின் மீது மின்னல் வேகத்தாக்குதல் நடத்தி போலந்தைக் கைப்பற்றினார். இதுவே, இரண்டாம் உலகப்போர் ஏற்பட உடனடிக் காரணமாயிற்று.

## ஆரம்ப நிகழ்வுகள் (1939)

1939 ஆம் ஆண்டு செப்டம்பர் 1–ம் தேதி அதிகாரப்பூர்வமாக இரண்டாம் உலகப்போர் துவங்கியது. பிரிட்டனும், பிரான்சும் ஹிட்லர் அதிர்ச்சியுறும் வகையில், ஜெர்மனிக்கு எதிராக போர் அறிவிப்பைச் செய்தன.

## சோவியத் ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு (1939–1941)

சோவியத் ரஷ்யா ஜெர்மனியுடன் செய்து கொண்ட இரகசிய ஆக்கிரமிப்பு உடன்படிக்கையின் விளைவாக நடுநிலை வகித்தது. இந்த உடன்படிக்கையின்படி பிரிந்து சென்ற எஸ்தோனியா, லாட்வியா, லிதுவேனியா மற்றும் கிழக்குப்போலந்து பகுதிகள் போருக்குப்பிறகு சோவியத் ரஷ்யாவுடன் இணைக்கப்பட்டன.

இந்நிலையில் முசோலினி நேச நாடுகளுக்கு எதிராக போர் அறிவிப்பு செய்து பிரான்சினுடைய பல பகுதிகளைக் கைப்பற்றினார்.

# இரண்டாவது உலகப் போரில் ஐரோப்பா



## பிரிட்டனுக்கு எதிராகப் போர் (1940)

ஹிட்லர், பிரிட்டனுக்கு எதிராக தனது கவனத்தைத் திருப்பினார். குறிப்பாக லாஃப்ட்வோஃப் (Luftwaffe) என்ற வான் தாக்குதலை நடத்தினார். 'U' வடிவ நீர் மூழ்கிக் கப்பல் மூலம் இங்கிலாந்து கப்பல்கள் பலவற்றைத் தோற்கடித்தார். முதலில் சிறு சிறு தோல்விகளைச் சந்தித்த இங்கிலாந்து பின்னர் ஜெர்மனியின் தாக்குதலை சர் வின்ஸ்டன் சர்ச்சில் தலைமையில் தடுத்து முன்னேறவிடாமல் செய்ததோடு ஜெர்மனிக்குஎதிராக வான்வழித் தாக்குதலையும் தொடுத்தனர்.

## பார்பேரிய கடல்போர் நடவடிக்கைகள் (1941)

இரஷ்ய அதிபர் ஸ்டாலினுடன் போர்த்தடை ஒப்பந்தம் ஏற்பட்ட போதிலும், பிரிட்டிஷ் வான்வெளித்தாக்குதலில் தோல்வியடைந்த ஹிட்லர், தனது கவனத்தை இரஷ்யா மீது திருப்பினார். கம்யூனிசத்தை அது தோன்றிய மண்ணிலேயே அழிக்க ஹிட்லர் விரும்பினார். அல்பேனியாவில் இருக்கும் முசோலினியின் இத்தாலியப் படைகளுக்கு உதவும் பொருட்டு தனது பெரும்படையை அனுப்பினார். அப்படை யூகோஸ்லாவியா, ருமேனியா, பல்கேரியா ஆகிய நாடுகளை எளிதில் வென்றது. இத்தாலி மற்றும் ஜெர்மானியப் படைகள் கிரீஸ் நாட்டையும் கைப்பற்றியது. ஆனால் அச்சு நாடுகள் பால்கன் நாடுகளை ஏப்ரல் மாத இறுதிக்குள் மீண்டும் தங்களது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தன.

## சோவியத் யூனியன் தாக்குதல்

1941 ஆம் ஆண்டு ஜூன் 22ம் நாள் இரஷ்யாவுடன் செய்து கொண்ட போர்தொடுக்காத ஒப்பந்தத்தை மீறி ஹிட்லர் இரஷ்யா மீது படையெடுத்தார். இந்த இக்கட்டான சூழ்நிலையில் ரஷ்யாவில் குளிர்காலம் தொடங்கியது. எனவே, ஜெர்மானியப் படைகள் மாஸ்கோவில் தங்கிவிட்டன. ஸ்டாலின் மாஸ்கோ நகரத்தை அழித்ததோடு மட்டுமல்லாமல், அரசு அலுவலகங்கள் அனைத்தையும் வெளியேறச் செய்தார். இரஷ்யர்கள் அழித்துப் பின்வாங்கும் கொள்கையினைப் பின்பற்றினர். அதன் மூலம் பயிர்கள்,பாலங்கள், இருப்புப் பாதைகள் போன்றவற்றை எதிரிகள் கைப்பற்றாமல் இருக்க அவற்றை தாங்களே தீயிட்டு அழித்துக் கொண்டு முன்னேறினர். ஜெர்மானியப் படைகளுக்கு எதுவும் கிடைக்கவில்லை. ஐந்து மாதங்களுக்குப்பின் மிகுந்த சிரமத்திற்குப் பிறகு மாஸ்கோவை ஜெர்மனியர்கள் கைப்பற்றினர். ரஷ்யாவில் ஏற்பட்ட படுதோல்விக்குப் பின் ஜெர்மனி 1944 ஆம் ஆண்டு சனவரி மாதம் நாடு திரும்பியது.

## அட்லாண்டிக் சாசனம்

1941 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இங்கிலாந்து பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் மற்றும் அமெரிக்க ஜனாதிபதி எஃப்.டி.ரூஸ்வெல்ட் அட்லாண்டிக் கடலில் அகஸ்டா என்ற போர்க்கப்பலில் சந்தித்து அட்லாண்டிக் சாசனத்தில் கையெழுத்திட்டனர். பின்னர் பிரிட்டனும், அமெரிக்காவும் சேர்ந்து ஜெர்மனிக்கு எதிராக ஒரு பெரும் படையெடுப்பை மேற்கொள்ளுவதென ஒப்புக்கொண்டனர்.

## அமெரிக்காவின் தலையீடு



முத்துத் துறைமுகம் தாக்கப்படுதல்

1941 ஆம் ஆண்டு டிசம்பர் 7–ம் தேதி முத்துத் துறைமுகத்தில் (Pearl Harbour) இருந்த அமெரிக்க கடற்படைத் தளத்தை ஜப்பான் தாக்கியது. இந்த தாக்குதலால் ஏற்பட்ட அழிவு அமெரிக்காவை போரில்

இறங்கும்படிச் செய்தது. இதனைத் தொடர்ந்து அமெரிக்கா ஜப்பான் மீது போர் அறிவிப்புச் செய்தது.

### ஆப்பிரிக்க பகுதிகள் மீது முசோலினியின் ஆக்கிரமிப்பு (1940 – 1942)

முசோலினி எத்தியோப்பியாவை கைப்பற்றிய பிறகு கென்யா, சூடான் மற்றும் சோமாலியா நாடுகள் மீது தனது படையெடுப்பை நிகழ்த்தினார். இங்கிலாந்து படைகள் எதிர்தாக்குதல் நடத்தி எரிட்டிரியா, சோமாலியா, எத்தியோப்பியாவின் தலைநகரான அடிஸ் அபாபாவை கைப்பற்றியது.

### போரின் முடிவு

கூட்டுப்படைகள் இங்கிலாந்திலிருந்து பிரான்சை தாக்க முடிவு செய்தன. 1944 ஆம் ஆண்டு மே மாதம் அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து படைகள் நார்மண்டி என்ற இடத்தில் முகாமிட்டன. இப்படைகளுடன், பிரான்சில் இருந்த உளவுப்படையும் சேர்ந்து கொண்டன. ஜெர்மனி அனைத்துப் பகுதிகளிலிருந்தும் தாக்கப்பட்டது. கிழக்குப் பகுதியிலிருந்து இரஷ்யப்படைகள் ஜெர்மானியப் படையைத் தாக்கின. இரண்டு பக்கங்களிலிருந்து படைகள் முன்னேறி பெர்லினை நோக்கி வருவதை அறிந்த ஹிட்லர் தற்கொலை செய்து கொண்டார்.



அணுகுண்டு வெடித்தல்

இத்தாலி தோற்கடிக்கப்பட்டு கூட்டு நாடுகளால் கைப்பற்றப்பட்டது. முசோலினி கொல்லப்பட்டார். கூட்டு நாடுகள் படை ஜெர்மனிக்குள் நுழைந்தது. எனவே வேறு வழியின்றி ஜெர்மனி 1945 ஆம் ஆண்டு மே 7–ம் நாள் சரணடைந்தது. ஜெர்மனியின் வீழ்ச்சியை தொடர்ந்து அமெரிக்கா 1945 ஆகஸ்ட் 6 மற்றும் 9 –ம் தேதி ஹீரோஷிமா மற்றும் நாகசாகி ஆகிய ஜப்பானிய நகரங்களை அணுகுண்டு வீசி அழித்தது. இதனால் ஜப்பான் நிபந்தனையின்றிச் சரணடைந்தது. இத்துடன் இரண்டாம் உலகப்போர் முடிவுக்கு வந்தது.

### போரின் விளைவுகள்

முதல் உலகப்போரைக் காட்டிலும் இரண்டாம் உலகப் போர் ஏராளமான உயிரிழப்பையும், பொருளாதார அழிவையும் ஏற்படுத்தியது. சுமார் 50 மில்லியன் மக்கள் உயிர் இழந்தனர்.

இத்தாலியிலும், ஜெர்மனியிலும் செயல்பட்டுவந்த சர்வாதிகார ஆட்சிக்கு சாவுமணி அடிக்கப்பட்டது. ஜெர்மனி கூட்டு நாடுகளால் கைப்பற்றப்பட்டு இருபகுதிகளாகத் துண்டாக்கப்பட்டது. மேற்கு ஜெர்மனி, பிரிட்டன், பிரான்சு, அமெரிக்கா ஆகிய மூன்று நாடுகளால் கட்டுப்படுத்தப்பட்டது. கிழக்கு ஜெர்மனி இரஷ்யாவால் கட்டுப்படுத்தப்பட்டது. போரின் முடிவில் அமெரிக்க படைத் தளபதி ஜெனரல் மெக் ஆர்தர் தலைமையில் ஜப்பானைக் கைப்பற்றியது. இப்போர் பிரிட்டனையும், பிரான்சையும் வலுவிழக்கச் செய்து இரண்டாம் நிலைக்குத் தள்ளியது. அமெரிக்காவும் இரஷ்யாவும் உலகில் முதல்தர வல்லரசுகளாக உருவாகின. இப்போரினால் இரஷ்யாவின் எதேச்சதிகாரம் முடிவுக்கு வராததால், ரஷ்யாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையே பனிப்போர் தொடங்கியது.

இரண்டாவது உலகப் போர், ஆசியா மற்றும் ஆப்பிரிக்க நாடுகளில் சுதந்திரப்போராட்டத்தை தீவிரப்படுத்தியது. இந்தியா, இலங்கை, பர்மா, எகிப்து, மலேசியா ஆகிய நாடுகள் பிரிட்டன் பிடியிலிருந்தும், அமெரிக்காவிடமிருந்து பிலிப்பைன்ஸ்

தீவுகளும், பிரான்சிடமிருந்து இந்தோ–சீனாவும், டச்சுக்காரர்களிடமிருந்து இந்தோனேஷியாவும் விடுதலை பெற்றன. ஐரோப்பிய நாடுகள் குடியேற்றக்கொள்கை மற்றும் ஏகாதிபத்திய கொள்கைகளை கைவிட்டன.

உலக அரங்கில் அமைதியைப் பாதுகாக்கவும், உலக மக்களிடையே ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் ஐக்கிய நாடுகள் சபை நிறுவப்பட்டது.

## பயிற்சி

### அ. சரியான விடை தருக.

1. இரண்டாம் உலகப் போருக்கு முக்கிய காரணமாக அமைந்த உடன்படிக்கை.

அ) வெர்சேல்ஸ் உடன்படிக்கை ஆ) ரோம் உடன்படிக்கை

இ) லண்டன் உடன் படிக்கை ஈ) ஆக்ஸ் லா சாபேல் உடன்படிக்கை

2. பிரான்சுக்குக் கொடுக்கப்பட்ட நிலக்கரிச் சுரங்கம்

அ) ஜாரியா ஆ) சார் இ) பொகாரோ ஈ) ராணிகஞ்ச்

3. முதல் உலகப் போருக்குப் பின் வல்லரசாக எழுச்சி பெற்ற நாடு

அ) சீனா ஆ) ஜப்பான் இ) இந்தியா ஈ) கொரியா

4. சண்டையும், கைப்பற்றுதலும் என்ற கொள்கையைப் பின்பற்றியவர்கள்

அ) மிதவாதிகள் ஆ) தீவிரவாதிகள் இ) சர்வாதிகாரி ஈ) புரட்சியாளர்கள்

5. செப்டம்பர் 1938–ல் ஹிட்லர் படையெடுப்பதாக மிரட்டப்பட்ட நாடு

அ) யுகோஸ்லாவியா ஆ) போலந்து

இ) பின்லாந்து ஈ) செக்கோஸ் லேவேகியா

6. ஹிட்லர் தன்னிடம் கொடுக்கும்படி கேட்டது

அ) டானன்பர்க் அ) டான்சிக்

இ) ஜட்லாந்து ஈ) எஸ்தோனியா

7. பிலிட்ஸ்கிரீக் என்றால்

அ) மின்னல் போர் ஆ) குழிப்போர்

இ) நீர்மூழ்கிக் கப்பல் போர் ஈ) கொரில்லாப் போர்

8. இரண்டாம் உலகப் போரின் போது பிரிட்டிஷ் பிரதமராக இருந்தவர்

அ) சர் வின்ஸ்டன் சர்ச்சில் ஆ) கிளமெண்ட் அட்லீ

இ) தாட்சர் ஈ) லாயிட்ஸ் ஜார்ஜ்

9. ஹிட்லருடன் போர் தொடுக்காத உடன்படிக்கையைச் செய்து கொண்டவர்

அ) கார்பச் சேவ் ஆ) போரிஸ் எல்ஸ்டின்

இ) ஸ்டாலின் ஈ) லெனின்

## ஆ. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. | அழித்துப் பின் வாங்கும் கொள்கை | ஜெர்மனி |
| 2. | 'U' வகைப் படகுகள் | தியோடர் ரூஸ்வெல்ட் |
| 3. | லுப்டாப் | இங்கிலாந்து |
| 4. | இராயல் விமானப்படை | சீனா |
| 5. | அட்லாண்டிக் சாசனம் | ரஷ்யா |
| | | எப்.டி. ரூஸ்வெல்ட் |
| | | ஜெர்மானிய நீர்மூழ்கிக் கப்பல் |

## இ. குறுகிய வினா.

1. தேசப் பற்று இரண்டாம் உலகப் போருக்கு எவ்வாறு காரணமாயிற்று ?
2. ஜப்பான் இரண்டாம் உலகப் போருக்கு காரணமாக அமைந்தது எவ்வாறு ?
3. மியூனிச் உடன்படிக்கை சிறிது காலம் அமைதியை ஏற்படுத்தியது. விளக்குக.
4. இரண்டாம் உலகப் போருக்கான உடனடிக் காரணம் என்ன ?
5. அழித்துப் பின்வாங்கும் கொள்கை பற்றி சிறு குறிப்பு வரைக.
6. பிரிட்டன் போர்க்களம் பற்றி சுருக்கமாக எழுது.
7. அமெரிக்கா ஜப்பான் மீது போர்தொடுக்கக் காரணம் யாது ?

## ஈ. தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளி.

1. இரண்டாம் உலகப் போர் – காரணங்கள்

   அ) ஜப்பான்– இத்தாலி–ஜெர்மனி செய்து கொண்ட உடன்படிக்கை யாது ?

   ஆ) முதல் உலகப் போருக்குப் பின் ஏற்பட்ட சில அரசியல் கொள்கைகளைக் குறிப்பிடுக.

   இ) வல்லரசு நாடுகளின் தலைவர்கள் பின்பற்றிய கொள்கைகள் பற்றி எழுதுக.

   ஈ) ஹிட்லர் எதை மீறினார் ?

2. பார்பேரிய கடல்போர் நடவடிக்கைகள்

   அ) பார்பேரிய கடல்போர் எந்த ஆண்டு தொடங்கியது ?

   ஆ) ஹிட்லர் விரும்பியது யாது ?

   இ) ஹிட்லரின் உத்தரவு என்ன ?

   ஈ) அச்சு நாடுகள் பால்கன் நாடுகளை எப்போது தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தன ?

3. போர் முடிவு

   அ) அமெரிக்க பிரிட்டிஷ் படைகள் எங்கு களமிறங்கின ?

   ஆ) இவர்கள் யாருடன் இணைந்து கொண்டனர் ?

   இ) ஹிட்லர் என்ன செய்தார் ?

   ஈ) அமெரிக்கா ஹிரோஷிமா மற்றும் நாகசாகி மீது எப்பொழுது அணுகுண்டுகளை வீசியது ?

4. போரின் விளைவுகள்

அ) ஜப்பானைக் கைப்பற்றியது யார் ?

ஆ) இரண்டாம் உலகப் போருக்குப் பின் தோன்றிய இரு வல்லரசுகள் யாவை ?

இ) போருக்குப் பின் சுதந்திரம் பெற்ற நாடுகள் யாவை ?

ஈ) ஐக்கிய நாடுகள் சபை தோற்றுவிக்கப்பட்டது ஏன் ?

## உ. பத்தி வினா.

1. இரண்டாம் உலகப் போர் ஏற்படக் காரணங்களில் ஏதேனும் ஐந்தினைக் குறிப்பிடுக.
2. ரஷ்யத் தாக்குதல் மற்றும் பிரிட்டிஷ் போர்க்களம் பற்றி ஒரு பத்தி எழுதுக.
3. இரண்டாம் உலகப் போரின் விளைவுகள் யாவை ?

## ஊ. செயல்முறை.

ஐரோப்பா வரைபடத்தில் கீழ்க்கண்டவற்றைக் குறிக்கவும்.

அச்சு நாடுகள் : இத்தாலி, ஜெர்மனி

நேச நாடுகள் : இங்கிலாந்து, பிரான்சு, ரஷ்யா

நடுநிலை நாடுகள் : போர்ச்சுகல், ஸ்பெயின், சுவிட்சர்லாந்து

# 7. ஐக்கிய நாடுகள் சபை – 1945

ஐக்கிய நாடுகள் சபை என்ற பன்னாட்டு நிறுவனம் 1945 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இரண்டாம் உலகப்போர் நடைபெற்றுக்கொண்டிருந்தப்போது (1941) அமெரிக்க குடியரசுத் தலைவராக இருந்த எப்.டி.ரூஸ்வெல்ட்டும், இங்கிலாந்து பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சிலும் அட்லாண்டிக் பெருங்கடலில் ஒரு போர்க்கப்பலில் சந்தித்து அட்லாண்டிக் சாசனத்தை முடிவு செய்தனர். அதன் சரத்துகள் பல்வேறு மாநாடுகளில் விவாதிக்கப்பட்டன. இறுதியில் 1945 ஆம் ஆண்டு சான்பிரான்ஸிஸ்கோவில் நடைபெற்ற மாநாட்டிலும் விவாதிக்கப்பட்டு, 1945 ஜூன் 26–ல் கையெழுத்திடப்பட்டது. இதன்படி ஐ.நா. சபை, அக்டோபர் 24, 1945 ல் தோன்றியது. ஐ.நா. சபை தற்சமயம் 192 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. இதன் தலைமையகம் நியூயார்க் நகரில் அமைந்துள்ளது.



ஐ.நா. தலைமையகம் – நியூயார்க்

## முக்கிய நோக்கங்கள்

உலக அரங்கில் அமைதி மற்றும் பாதுகாப்பை நிலைநாட்டுதல்.

அனைத்து நாடுகளுக்கிடையே நட்புறவை வளர்த்தல்.

நாடுகளுக்கிடையேயான சிக்கலை அமைதியான முறையில் தீர்த்தல்.

மேற்கூறிய நோக்கங்கள் அனைத்தையும் எல்லா நாடுகளிலும் சாத்தியப்படுவதற்கான ஒரு மையமாகத் திகழ்கிறது.

## ஐ.நா. சபையின் உறுப்புகள்

ஐ.நா. சபை ஆறு முக்கிய உறுப்புகளை கொண்டு உள்ளது. அவை,

1. பொதுச் சபை
2. பாதுகாப்பு மன்றம்
3. பொருளாதார மற்றும் சமூக மன்றம்
4. தர்மகர்த்தா அவை
5. பன்னாட்டு நீதி மன்றம்
6. செயலகம்

## 1. பொதுச் சபை

பொதுச்சபை ஐ.நா வின் நிரந்தர அமைப்பு ஆகும். இந்த அவை ஐ.நா.வின் அனைத்து நடவடிக்கைகளையும் கலந்தாய்வு செய்து, தனது பரிந்துரைகளை வழங்கும் அதிகாரம் பெற்றுள்ளது. ஐ.நா. சபையில் உறுப்பினராக உள்ள அனைத்து நாடுகளும் பொதுச் சபையில் உறுப்பினராக உள்ளன. ஒவ்வொரு நாடும் பொது அவைக்கு 5 பிரதிநிதிகளை அனுப்பலாம்.

எனினும் உறுப்பு நாடு ஒவ்வொன்றுக்கும் ஒரு வாக்குதான் உண்டு. பொதுவாக இந்த அவை ஆண்டிற்கு ஒரு முறை மட்டுமே கூடும்.

**1953–ம்ஆண்டு திருமதி.விஜயலட்சுமி பண்டிட் அவர்கள் இதன் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.**

## 2. பாதுகாப்பு மன்றம்

இது ஐ.நா.வின் முக்கிய உறுப்பு ஆகும் இந்த அவை உலகில் அமைதியையும், பாதுகாப்பையும் நிலைநாட்டுகிறது. பாதுகாப்பு மன்றத்தில் ஐந்து நிரந்தர உறுப்பினர்களாக அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், இரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகள் இடம் பெற்றுள்ளன. இவை தவிர பத்து தற்காலிக உறுப்பினர்களும் உள்ளனர். இவர்கள் பொதுச்சபையால் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். நிலையான உறுப்பினர்களுக்கு அவையின் முடிவுகளை ரத்து செய்யும் (VETO) உரிமை உள்ளது.

## 3. பொருளாதார மற்றும் சமூக மன்றம்

பொருளாதார மற்றும் சமூக மன்றத்தில் 54 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களின் பதவி காலம் ஒன்பது ஆண்டுகள் ஆகும். இருப்பினும், மூன்றில் ஒரு பகுதியினர் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை பதவி விலகுவார்கள். இந்த மன்றம் ஐ.நா. மற்றும் அதன் சிறப்பு நிறுவனங்களின் மூலம் உறுப்பு நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக செயல்பாடுகளை ஒருங்கிணைக்கிறது.

## 4. தர்மகர்த்தா அவை

ஐ.நா. அவையின் கீழுள்ள சில நாடுகளை தர்மகர்த்தா அவை கண்காணிக்கிறது. இதில் உறுப்பு நாடுகளாக இருக்கும் ஒவ்வொரு நாட்டிலிருந்தும் தகுதியுள்ள ஒரு பிரதிநிதியை இந்த மன்றத்திற்கு அனுப்பவேண்டும்.

## 5. பன்னாட்டு நீதி மன்றம்

ஐ.நா.அவையின் நீதி மன்றம் பன்னாட்டு நீதிமன்றம் எனக் கருதப்படுகிறது. இந்த நீதிமன்றம் நெதர்லாந்தில் தி ஹேக் நகரில் அமைந்துள்ளது.




இதில் 15 நீதிபதிகள் இடம் பெற்றுள்ளனர். இவர்களை பொதுச்சபை மற்றும் பாதுகாப்பு மன்றம் தேர்ந்தெடுக்கிறது. உறுப்பு நாடுகளின் வழக்குகளை விசாரித்து தீர்ப்பு வழங்குகிறது. மேலும் பொதுச்சபை, பாதுகாப்பு மன்றம் மற்றும் ஐ.நா.வின் பிற உறுப்புகளுக்கு ஆலோசனை வழங்கி வருகிறது.

## 6. செயலகம்

ஐ. நா, சபையின் நிர்வாகப் பணிகள் அனைத்தையும், தலைமைச் செயலகம் நிறைவேற்றுகிறது.



பான்கீ மூன்

ஐ.நா.வின் கொள்கைகளை நடைமுறைபடுத்தி அதன் கீழ் அனைத்து அவைகளையும் செயல்படச் செய்கின்றது. தலைமைச் செயலகத்தின் தலைமை நிர்வாகி, பொதுச் செயலாளர் ஆவார். அவருடைய பதவிக்காலம் 5 ஆண்டுகள் ஆகும். பாதுகாப்பு அவையின் பரிந்துரையின் பேரில் பொதுச் சபை, பொதுச் செயலரைத் தேர்வு செய்கிறது. தற்போது உள்ள பொதுச் செயலர் தென் கொரியாவைச் சேர்ந்த பான்கிமூன் ஆவார்.

## ஐ.நா.அவையின் சிறப்பு நிறுவனங்கள்

ஐ.நா. சபை பல்வேறு சிறப்பு நிறுவனங்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் சில

1. உலக சுகாதார நிறுவனம் (WHO)
2. ஐ.நா. கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு அமைப்பு (UNESCO)
3. ஐ.நா. குழந்தைகள் அவசர கால நிதி நிறுவனம் (UNICEF)
4. பன்னாட்டுத் தொழிலாளர் நிறுவனம் (ILO)
5. உணவு மற்றும் வேளாண்மை நிறுவனம் (FAO)
6. உலக வங்கி ( IBRD)

மேற்குறிப்பிட்ட நிறுவனங்கள், ஐ.நா. அவையின் உறுப்பு நாடுகளின் சமூகம் மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்காகப் பாடுபடுகின்றன.

## அலுவல் மொழிகள்

ஐ.நா. சபையின் அலுவல் மொழிகளாக அராபிக், சைனீஷ், ஆங்கிலம், பிரெஞ்சு, ரஷ்யன் மற்றும் ஸ்பானிய மொழிகள் உள்ளன. இருப்பினும் ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு மொழிகள் நடைமுறையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

## கொடி

இளம் நீல நிற பின்னனியைக் கொண்ட வெள்ளை நிற ஐ.நா. சின்னம் இரண்டு ஆலிவ் கிளைகள் மேலேயும், அவற்றின் இடையே உலக வரைபடமும் ஐ.நா.வின் கொடியாக திகழ்கிறது.

## நிதி

ஐ.நா.வின் நிதி பெரும் பகுதி அமெரிக்காவிடமிருந்தும், மற்றும் பிற உறுப்பு நாடுகளிடமிருந்தும் பெறப்படுகின்றன.

## ஐ.நா. அவையின் சாதனைகள்

பல்வேறு பன்னாட்டு பிரச்சனைகளுக்கு ஐ.நா. சபை அமைதியான பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்வு கண்டு உலக அமைதியைப் பாதுகாத்து வருகிறது. அரசியல் பிரச்சனைகளுக்கு பாதுகாப்பு மன்றம் மூலமும், சட்டப்பிரச்சனைகளுக்கு பன்னாட்டு நீதி மன்றம் மூலமும், பிற பிரச்சனைகளுக்கு சிறப்பு அமைப்புகள் மூலமும் தீர்வு காணப்படுகிறது.

இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனம் , ஈரான் மற்றும் ஈராக் சிக்கல்களை முடிவுக்கு கொண்டு வந்துள்ளது. ஆப்கானிஸ்தானில் இருந்த இரஷ்யப்படைகளை வெளியேறும்படியும் செய்தது.

1963 ஆம் ஆண்டு அணு சோதனை தடைச்சட்டத்தையும் (NTBT) 1996 ஆம் ஆண்டு தொடர் அணு சோதனை தடைச் சட்டத்தையும்(CTBT) நிறைவேறச் செய்தது.

1992 ல் ரியோ–டி–ஜெனிரோவில் ஐ.நா.வின் சுற்றுச்சூழல் மற்றும் மேம்பாட்டு மாநாடு நடத்தப்பட்டது. இம்மாநாட்டில் ‘அறிக்கை 21’ என்ற கோட்பாட்டினை அனைத்து நாடுகளும் ஏற்று இயற்கைச் சூழலை பாதுகாத்து, பொருளாதார மேம்பாடு அடைய உறுதி பூண்டன.

ஐ.நா.வின் பெண்கள் மேம்பாட்டு நிதி, பன்னாட்டு ஆய்வு மற்றும் பெண்களின் முன்னேற்றத்திற்கான பயிற்சி நிறுவனங்கள் மூலம் 100 நாடுகளில் பெண்களின் வாழ்க்கைத் தரத்தினை


உயர்த்துவதற்கான நிகழ்வுகளையும் செயல்பாடுகளையும் ஊக்குவித்தது.


1956 ஆம் ஆண்டில் எகிப்து அதிபர் நாசர், சூயஸ் கால்வாயை நாட்டுடமையாக்கினார். இதனை பிரிட்டன், பிரான்சு, இஸ்ரேல் ஆகிய நாடுகள் எதிர்த்தன. ஐ.நா. தனது அமைதிப்படையை எகிப்துக்கு அனுப்பி சூயஸ் கால்வாய் சிக்கலை முடிவுக்கு கொண்டுவந்தது.

இதோடு மட்டுமல்லாமல் கொரியப்போர், வியட்நாம் போர், மற்றும் இஸ்ரேல் பாலஸ்தீனத்திற்கிடையேயான பிரச்சினைகளையும் முடிவுக்குக் கொண்டு வந்தது.

**ஒட்டு மொத்த பார்வையில் ஐ.நா. சபை**
**ஐ.நா.வின் 50 வது பொன்விழா**

1995 ஆம் ஆண்டு ஐ.நா. சபை உலக சமுதாயத்திற்கான தனது சேவையில் 50 வது ஆண்டு பொன்விழாவை கொண்டாடியது. இந்த விழாவின் கருத்தாக **'ஐ.நா. சபையின் மக்களாகிய நாம், நல்லதொரு உலகத்திற்காக ஒன்று கூடுவோம்'** என்று பொது சபையில் அக்டோபர் 1993 ல் எடுத்துரைக்கப்பட்டது. எதிர்காலத்தில் ஐ.நா. அவை செயல்படுவதற்கு ஐ.நா.வின் 50 ஆண்டு கால நிகழ்வுகள் பற்றி படித்த மக்களிடையே எடுத்துரைக்கப்பட்டது. 1995 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அமெரிக்க விண்வெளி வீரர்கள் அட்லாண்டிஸ் என்ற விண்கலம் மூலம் சென்று, விண்வெளியில் ஐ.நா. கொடியை பறக்கவிட்டு, உலக அமைதிக்காக பாடுபட்ட ஐ.நா.வின் ஐம்பதாண்டு சேவைகளுக்கு வணக்கம் செலுத்தினர்.



## பயிற்சி

### அ. சரியான விடை எழுது.

1. ஐக்கிய நாடுகள் சபை தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு

   அ) 1955 ஆ) 1945 இ) 1965 ஈ) 1975

2. ஐக்கிய நாடுகள் சாசனம் கையெழுத்தானது

   அ) நியூயார்க் ஆ) ஜெனிவா

   இ) சான் பிரான்சிஸ்கோ ஈ) கலிபோர்னியா

3. ஐ.நா.வின் நிரந்தர அவை

   அ) பொதுச் சபை ஆ) தலைமைச் செயலகம்

   இ) பாதுகாப்பு அவை ஈ) தர்மகர்த்தா அவை

4. பன்னாட்டு நீதிமன்றத்தின் தலைமையகம் அமைந்துள்ளது.

   அ) தி ஹேக் ஆ) பெர்லின் இ) ரோம் ஈ) டோக்கியோ

5. ஐ.நா.வின் பொன்விழா ஆண்டு.

   அ) 1985 ஆ) 2005 இ) 1995 ஈ) 1975

### ஆ. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. | நியூயார்க் | எதிர்வாக்கு |
| 2. | ரத்து செய்யும் உரிமை | 1963 |
| 3. | தற்போதைய ஐநா பொதுச் செயலாளர் | 1969 |
| 4. | அணு சோதனை தடைச்சட்டம் | ஐ.நா. தலைமையகம் |
| 5. | தொடர் அணுசோதனை தடைச்சட்டம் | கோபி அனான் |
| | | 1996 |
| | | பான்கி மூன் |

### இ. குறுவினா.

1. ஐக்கிய நாடுகள் சபையின் முக்கிய நோக்கங்கள் யாவை ?
2. பாதுகாப்பு மன்றம்–சிறுகுறிப்பு வரைக.
3. ஐக்கிய நாடுகள் சபையின் சாதனைகளில் ஏதேனும் இரண்டினைக் குறிப்பிடுக.
4. ஐக்கிய நாடுகள் சபையின் பொன்விழா பற்றி சிறுகுறிப்புத் தருக.
5. ஐ.நா வின் சிறப்பு நிறுவனங்கள் சிலவற்றைக் குறிப்பிடுக.

## ஈ. தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளி.

1. ஐ.நா. சபையின் அங்கங்கள் .

அ) ஐ.நா.வின் முக்கிய அங்கங்களைகுறிப்பிடுக.

ஆ) 1953 ஆம் ஆண்டு பொது அவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார் ?

இ) தர்மகர்த்தா சபையின் பணிகள் யாது ?

ஈ) ஐ.நா.வின் தலைமைச் செயலளர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார் ?

2. ஐ.நா.வின் முக்கிய சாதனைகள்.

அ) ஐ.நா.செய்து கொண்ட முக்கிய உடன்படிக்கைகளைக் குறிப்பிடுக.

ஆ) சுற்றுச்சூழல் மற்றும் மேம்பாட்டு மாநாடு எங்கு நடத்தப்பட்டது ?

இ) அனைத்து நாடுகளும் எதனை ஏற்றுக் கொண்டன ?

ஈ) சூயஸ் கால்வாய் பிரச்சனையை ஐ.நா. எவ்வாறு முடிவுக்குக் கொண்டு வந்தது ?

## உ. பத்தி வினா .

1. ஐ.நாவின் அங்கங்களின் பணிகள் பற்றி விவரி.

2. ஐ.நா.வின் முக்கியமான சாதனைகள் யாவை ?

# 8. ஐரோப்பிய ஒன்றியம்

இரண்டாம் உலகப்போரின் முடிவில் ஐரோப்பாவில் ஏற்பட்ட அரசியல் மற்றும் பொருளாதார ஒற்றுமை, போருக்குப்பின் நடைபெற்ற மறுசீரமைப்புப் பணியின் முக்கிய அம்சமாகும். ஐரோப்பிய கண்டத்தின் அரசியல் மற்றும் வளமையை பிரான்சு மற்றும் ஜெர்மனி நாடுகளுக்கிடையிலான போர் ஒரு போதும் பாதிக்கக் கூடாது என்று ஜீன் மோனட் (Jean Monnet) என்னும் பிரான்சு அரசியல்வாதி வெளிப்படுத்தினார். இத்தகைய ஒற்றுமை ஏற்பட இத்தாலி மற்றும் பெனிலக்ஸ் (பெல்ஜியம், நெதர்லாந்து, லக்ஸம்பர்க்) நாடுகளும் தங்களது கரங்களை நீட்டின.

## நிறுவன நாடுகள்

பெல்ஜியம், பிரான்சு, இத்தாலி, லக்ஸ்ம்பர்க், நெதர்லாந்து மற்றும் மேற்கு ஜெர்மனி போன்ற நாடுகள் ஐரோப்பிய ஒன்றியத்தை நிறுவின.

## தோற்றம்

பிரான்சு வெளியுறவுத்துறை அமைச்சர் இராபர்ட் ஸ்கூமான் (Robert Schuman) 1950 ஆம் ஆண்டு, மே மாதம் 9ம் தேதி வெளியிட்ட கருத்தின் அடிப்படையில் 1951 இல் ஏற்படுத்தப்பட்ட ஆறு நாடுகளின் ஐரோப்பிய நிலக்கரி மற்றும் இரும்பு சமூகமே (ECSC) ஐரோப்பிய ஒன்றியத்தின் மூலமாகக் கருதப்படுகிறது.



ரோமில் ஒப்பந்தம் கையெழுத்து

ரோம் உடன்படிக்கையின் படி ஐரோப்பிய பொருளியல் சமூகம் (EEC) மற்றும் ஐரோப்பிய அணுவாற்றல் சமூகம் (EURATOM) ஏற்படுத்தப்பட்டது. பின்னர் இம்மூன்று சமூகங்களும் 1967 இல் செய்து கொள்ளப்பட்ட ஒருங்கிணைப்பு ஒப்பந்தத்தின் மூலம் ஐரோப்பிய ஒன்றியம் தோன்றியது.

## முக்கியநோக்கங்கள்

ஐரோப்பிய குடியுரிமை ஏற்படுத்துதல்.

ஐரோப்பியக் குடிமக்களுக்கு குடிமை உரிமைகளை உறுதி செய்தல்.

சமுதாய முன்னேற்றத்தை உயர்த்துதல்.

ஐரோப்பியப் பாதுகாப்பைப் பலப்படுத்துதல்.

சமநீதியை உறுதிசெய்தல்.

## குறிக்கோள் : வேற்றுமையில் ஒற்றுமை
## ஐரோப்பியக் கூட்டமைப்பின் அங்கங்கள்

ஐரோப்பிய நிறுவனத்தில் ஐந்து அங்கங்கள் உள்ளன. அவை,

ஐரோப்பிய நாடாளுமன்றம்

ஐரோப்பிய ஒன்றிய மன்றம்

ஐரோப்பிய ஆணையம்

ஐரோப்பிய நீதிமன்றம்

ஐரோப்பிய கணக்கீட்டாளர்கள் மன்றம்.



ஐரோப்பிய ஒன்றிய சின்னம்

## ஐரோப்பிய நாடாளுமன்றம்

இது ஐரோப்பியக் கூட்டமைப்பின் சட்டம் இயற்றும் அமைப்பாகும். இதன்

அங்கத்தினர்கள் உறுப்பு நாடுகளின் குடிமக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.



ஐரோப்பிய நாடாளுமன்றம்

1979 ஆம் ஆண்டு முதல் ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் தேர்தல் மக்களாட்சி முறைப்படி நடைபெற்றது. இதன் தலைமையகம் பிரான்சில் உள்ள ஸ்டராஸ்பர்க் (Strasburg) என்னுமிடத்தில் உள்ளது. தற்பொழுது இதில் 736 அங்கத்தினர்கள் உள்ளனர். இவர்களின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள் ஆகும். இது ஐரோப்பிய சட்டமன்றத்தின் பாதிப் பகுதி ஆகும்.

### நாடாளுமன்றத்தின் முக்கிய அதிகாரம்

ஐரோப்பிய ஆணையத்தில் சமர்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை அங்கீகரிப்பது அல்லது மாற்றங்கள் செய்வதாகும்.

### ஐரோப்பிய ஒன்றிய மன்றம்

ஐரோப்பிய ஒன்றிய மன்றம் சில நேரங்களில் 'அமைச்சர்களின் கூட்டமைப்பு மன்றம்' என்று அழைக்கப்படுகிறது. இது ஐரோப்பியச் சட்டமன்றத்தின் மறு பாதியாகும். ஒவ்வொரு உறுப்பு நாடுகளில் இருந்தும் ஒருவர் இந்த அவைக்கு அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். 2009 ஆம் ஆண்டு நவம்பர் 19 ஆம் தேதி ஹெர்மான் வான் ராம்பே (Herman Van Rampay) என்பவர் இந்த அவையின் முதல் நிரந்தரத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 2009 ஆம் ஆண்டு, டிசம்பர் ஒன்றாம் தேதி இவர் பதவியேற்றார்.

### ஐரோப்பிய ஆணையம்

இது ஐரோப்பிய ஒன்றியத்தின் நிர்வாகத் துறையாகச் செயல்படுகிறது. மேலும் சட்டம் இயற்றுவதற்கு தூண்டுதலாக இருந்து ஐரோப்பியர் கூட்டமைப்பின் அன்றாடப் பணிகளைச் செய்கிறது. ஐரோப்பியக் கூட்டமைப்பின் சட்டங்களை வடிவமைத்து, அதனை ஐரோப்பிய நாடாளுமன்றத்திலும், ஐரோப்பிய ஒன்றிய மன்றத்திலும் சமர்ப்பிப்பது இதன் முதன்மைப் பணியாகும்.

### ஐரோப்பிய நீதி மன்றம்

இது லக்ஸம்பர்க் நகரில் அமைந்துள்ளது. இதில் 15 நீதிபதிகள் இடம்பெற்றுள்ளனர்.



ஐரோப்பிய நீதி மன்றம்

ஐரோப்பிய ஒன்றியம் மேற்கொள்ளும் அனைத்து உடன்படிக்கைகளும், மன்றத்தின் சட்டங்களுக்கு உட்பட்டதா என்பதை தீர்மானிக்கிறது. இம்மன்றத்தின் தீர்ப்புகளும், ஒன்றியத்தின் சட்டங்களும் உறுப்பு நாடுகள் அனைத்தையும் கட்டுப்படுத்தும்.

### ஐரோப்பியக் கணக்கீட்டாளர்கள் மன்றம்

இம்மன்றம் ஐரோப்பிய ஒன்றியத்தின் வரவு செலவுக் கணக்குகளை நிர்வகிக்கிறது. ஐரோப்பிய நாடாளுமன்றத்துடன் இணைந்து வளங்கள் மற்றும் நிதியை சிறந்த முறையில் பங்கீடு செய்கிறது.

### ஐரோப்பிய மத்திய வங்கி

இது ஒரு சுதந்திரமான அமைப்பாகும். ஐரோப்பிய ஒன்றியத்தில் விலைவாசியைக்



ஐரோப்பிய மத்திய வங்கி

கட்டுப்படுத்துதல் மற்றும் பொருளாதாரக் கொள்கைகளைக் கவனித்து வருகிறது. அந்நியப் பரிவர்த்தன முறைகள் மற்றும் அந்நிய செலாவணி நிர்வாகம் ஆகிய இரண்டும் இவ்வங்கியின் முக்கியப் பொறுப்புகள் ஆகும்.

### ஐரோப்பிய ஒன்றியத்தின் சாதனைகள்

### ஒற்றைச் சந்தை

நிலையான சட்டங்களின் மூலம் ஐரோப்பிய ஒன்றியம் ஒற்றைச் சந்தை முறையை அமல்படுத்தியுள்ளது. இச்சட்டங்கள் எல்லா உறுப்பு நாடுகளுக்கும் பொருந்துவது மட்டுமன்றி, தனது உறுப்பு நாடுகளிடையே பொருள்கள், சேவைகள் மற்றும் முதலீடு ஆகியவற்றின் நுகர்வுகளுக்கு உத்திரவாதம் அளிக்கிறது.

இது பொதுவான வணிகக் கொள்கை, விவசாயக் கொள்கை, மீன் வளர்ப்புக் கொள்கை போன்றவற்றுடன் பிரதேச வளர்ச்சிக் கொள்கையையும் பேணி வருகிறது.

### பொதுவான வெளியுறவு மற்றும் பாதுகாப்புக் கொள்கை

ஐரோப்பிய ஒன்றியம் பிற நாடுகளுடன் உடன்படிக்கைகளை ஏற்படுத்துவதுடன், ஒன்றியத்திற்காக உள்விவகார சட்டங்களை பாரபட்சமின்றி இயற்றி வருகிறது. ஐரோப்பிய ஒன்றியம் நிரந்தர அரசியலாண்மைக் கொள்கையை உருவாக்கியதுடன், உலக வணிக அமைப்பு, ஜி. 8, ஜி.20 போன்ற முக்கியப் பொருளியல் அமைப்புகள் மற்றும் ஐ.நா. சபை போன்றவற்றிலும் தனது சார்பாண்மையை நிலைநாட்டியுள்ளது.

### ஒற்றை நாணய முறை

சனவரி 1, 2002 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒற்றை நாணய முறை 'யூரோ' என்றழைக்கப்படுகிறது. இதன் குறியீடு € ஆகும். ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆரம்பக்காலம் முதல் 2002 வரையிலான இடைப்பட்ட காலக்கட்டத்தில் உறுப்பு நாடுகள் தங்களின் நாணய முறையையே பின்பற்றினர். ஐரோப்பிய ஒன்றிய 'யூரோ' ஐரோப்பிய எல்லையைக் கடந்து வெளிநாடுகளில் வணிகம் செய்யும் குழுமத்திற்கு ஏற்படும் வணிகப் பரிவர்த்தனைக்கான தடைகளைக் களைகிறது. மேலும் இது தடையற்ற வணிகத்தை மேன்மையுறச் செய்கிறது.

### ஐரோப்பிய ஒன்றிய விரிவாக்கம்

ஆரம்பக்கட்டத்தில் ஆறு நாடுகளுடன் தோன்றிய ஐரோப்பிய ஒன்றியம், இன்று 27 உறுப்பு நாடுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்நாடுகள் உடன்படிக்கைகளுக்கு உட்பட்டு, தங்களுடைய மேலாண்மையை இழக்காமல் ஐரோப்பிய ஒன்றியத்தின் அங்கங்களுக்கு தங்களின் உறுப்பினர்களை அனுப்பி வருகின்றன.

### 27 உறுப்பினர் நாடுகள்

ஆஸ்திரியா, பெல்ஜியம், பல்கேரியா, சைப்ரஸ், செக் குடியரசு, டென்மார்க், எஸ்தோனியா, பின்லாந்து, பிரான்சு, ஜெர்மனி, கிரீஸ், ஹங்கேரி, அயர்லாந்து, இத்தாலி, லைபீரியா, லிதுவேனியா, லக்ஸம்பர்க், மால்டா, நெதர்லாந்து, போலந்து, போர்ச்சுகல், ருமேனியா, ஸ்லாவாக் குடியரசு, ஸ்லோவேனியா, ஸ்பெயின், சுவீடன் மற்றும் ஐக்கியப்பேரரசு.

## அறிவியல் ஆராய்ச்சி

அறிவியல் முன்னேற்றத்திற்கான வசதிகளை செய்து கொடுப்பது ஐரோப்பிய ஒன்றியத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். அறிவியல் ஆராய்ச்சிக்குத் தூண்டுகோலாய் இருப்பதும், அதற்கு ஒத்துழைப்பதும் இவ்வொன்றியத்தின் முக்கிய நோக்கமாகும். ஐரோப்பிய ஆராய்ச்சி ஆணையம் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் தனிப்பட்ட நாடுகளின் அறிவியல் ஆராய்ச்சித் திட்டங்களுக்கும் நிதியுதவி அளித்து வருகிறது.

ஐரோப்பிய ஒன்றியம் ஐக்கிய நாடுகள் சபையுடன் வலிமையான உறவு கொண்டுள்ளது. முன்னேற்றம், பருவ நிலை மாற்றம், பாதிக்கப்பட்ட நாடுகளில் அமைதிக்காகப் பாடுபடுதல், நெருக்கடிக் காலங்களில் மனிதாபிமான உதவிகள், உலக சுகாதாரம் பேணுதல், தொழிலாளர் பிரச்சனைகள் மற்றும் கலாச்சார சீர்திருத்தங்கள் போன்ற மிகப்பெரிய திட்டங்களில் ஐக்கிய நாடுகளின் சபை ஒத்துழைப்புடன் ஐரோப்பிய ஒன்றியம் சிறந்த முறையில் பணியாற்றி வருகிறது. ஐக்கிய நாட்டுச் சபையின் திட்டங்களுக்கு பேச்சளவு ஒத்துழைப்பு மட்டுமன்றி, பொருளாதார ரீதியாகவும் உதவிகள் செய்து வருகின்றது. உலக அந்நிய செலவாணியில் ஐரோப்பிய ஒன்றியத்தின் பங்களிப்பு மிகப்பெரியதாகும். 2006 ஆம் ஆண்டு ஐரோப்பிய ஒன்றியத்தின் பட்ஜெட் மதிப்பு 671 மில்லியன் 'யூரோ' ஆகும். இதில் 48 சதவிகிதம் ஆப்பிரிக்க, கரீபிய மற்றும் பசிபிக் நாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும் ஐரோப்பிய ஒன்றிய எல்லைக்குள் ஒற்றுமை வளரச் செய்துள்ளது.

## பயிற்சி

### அ. சரியான விடை தருக.

1. ஐரோப்பிய ஒன்றியத்தின் தோற்றம் காணப்படுவது.

   அ) ஈ.சி.எஸ்.சி  ஆ) இ.இ.சி  இ) ஐரோப்பிய அணுவாற்றல் சமூகம்  ஈ) இ.டி.சி

2. ஐரோப்பிய அணுவாற்றல் சமூகத்தை ஏற்படுத்திய உடன்படிக்கை.

   அ) நான்கிங் உடன்படிக்கை  ஆ) லண்டன் உடன்படிக்கை

   இ) ரோம் உடன்படிக்கை  ஈ) வெர்சேல்ஸ் உடன்படிக்கை

3. ஐரோப்பிய ஒன்றிய மன்றம் சில நேரங்களில் அழைக்கப்படுவது.

   அ) வணிகர் ஒன்றியம்  ஆ) விவசாயிகள் ஒன்றியம்

   இ) நுகர்வோர் ஒன்றியம்  ஈ) மந்திரிகளின் கூட்டமைப்பு

4. ஐரோப்பிய ஒன்றிய மன்றத்தின் முதல் நிரந்தரத் தலைவர் ஆவார்.

   அ) ராம் சே மெக் டொனால்டு  ஆ) ஹெர்மன் வான் ராம்ப்பே

   இ) விஜயலக்ஷ்மி பண்டிட்  ஈ) பிஸ்மார்க்

5. ஐரோப்பிய கூட்டமைப்பின் பொருளாதாரக் கொள்கைகளை கவனித்து வருவது

   அ) மத்திய வங்கி  ஆ) ரிசர்வ் வங்கி

   இ) ஸ்டேட் வங்கி  ஈ) சுவிஸ் வங்கி

6. ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒற்றை நாணயம்

   அ) டாலர்  ஆ) யென்  இ) யூரோ  ஈ) பவுண்ட்

7. ஐரோப்பிய ஒன்றியம் வலுவான உறவை ஏற்படுத்திக் கொண்டிருப்பது.

அ) அமெரிக்கா ஆ) ரஷ்யா இ) ஐ.நா.சபை ஈ) ஐக்கிய அரபு நாடுகள்

## ஆ. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. | ஒன்றிணைப்பு உடன்படிக்கை | பிரான்ஸ் வெளியுறவு |
| 2. | யூரோ | ஐரோப்பிய கணக்கீட்டாளர்கள் மன்றம் |
| 3. | இராபர்ட் ஸ்கூமான் | 2002 |
| 4. | ஜி.என். மோனட் | ஐரோப்பிய நீதிமன்றம் |
| 5. | ஐரோப்பிய ஒன்றிய வரவுசெலவு | பிரான்சு அரசியல் பிரமுகர் |
| | | 1967 |
| | | 2007 |

## இ. சுருக்கமான விடை தருக.

1. ஐரோப்பிய ஒன்றியத்தின் நிறுவன நாடுகள் யாவை ?
2. ஐரோப்பிய ஒன்றியத்தின் முக்கிய நோக்கங்கள் யாவை ?
3. ஐரோப்பிய ஒன்றியத்தின் அங்கங்களைக் குறிப்பிடுக.
4. ஐரோப்பிய நாடாளுமன்றம் பற்றி சிறு குறிப்பு வரைக.
5. ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தின் பணிகளைக் குறிப்பிடுக.
6. யூரோவின் முக்கியத்துவம் பற்றி நீ அறிந்தவற்றை எழுதுக.

## ஈ. தலைப்பின் கீழ் உள்ள வினாக்களுக்கு விடையளி.

1. ஐரோப்பிய ஒன்றியத்தின் அங்கங்கள்

அ) ஐரோப்பிய ஒன்றியத்தின் சட்டம் இயற்றும் அமைப்பு எது ?

ஆ) ஐரோப்பிய ஆணையத்தின் செயல்பாடுகள் யாவை ?

இ) ஐரோப்பிய நீதிமன்றம் எங்கு அமைந்துள்ளது ?

ஈ) அந்நியப் பரிவர்த்தன முறைகள் யாருடைய முக்கியப்பொறுப்பாகும் ?

2. ஐரோப்பிய ஒன்றியத்தின் சாதனைகள்

அ) ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒற்றை நாணயத்தின் குறியீடு என்ன ?

ஆ) ஐரோப்பிய ஒற்றை நாணயம் எதைக் களைகிறது ?

இ) ஐரோப்பிய ஒன்றியத்தில் தற்போது எத்தனை உறுப்பு நாடுகள் உள்ளன ?

ஈ) ஐரோப்பிய ஒன்றிய ஆராய்ச்சித் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கும் அமைப்பு எது ?

## உ. பத்தி வினா.

1. ஐரோப்பிய ஒன்றியத்தின் சாதனைகள் குறித்து விரிவான விடை தருக.


# 9. 1857 ஆம் ஆண்டு மாபெரும் கிளர்ச்சி
# அல்லது
# முதல் இந்திய சுதந்திரப் போர்




இந்திய வரலாற்றில் 1857 ஆம் ஆண்டு ஒரு முக்கியத்துவம் வாய்ந்த ஆண்டாகக் கருதப்படுகிறது. இவ்வாண்டில் மாபெரும் புரட்சி ஏற்பட்டு, இந்தியாவை ஆட்சி செய்து வந்த ஆங்கில கிழக்கிந்திய வணிகக் குழுவின் ஆட்சியை அதிர்ச்சியடையச் செய்தது. இப்புரட்சியை ஆங்கில வரலாற்று அறிஞர்கள் **'படைவீரர்கள் கிளர்ச்சி'** என்றும், இந்திய வரலாற்று அறிஞர்கள் **'முதல் இந்திய சுதந்திரப் போர்'** என்றும் வர்ணிக்கின்றனர்.



கானிங் பிரபு




ஆங்கில கிழக்கிந்தியக் குழுவின் அடக்குமுறை ஆட்சியால் இந்திய

மக்களுக்கு ஏற்பட்ட மனக்கசப்பும், பல காலமாக தேக்கி வைக்கப்பட்டிருந்த துயரங்களின் வெளிப்பாடுமே, 1857 ஆம் ஆண்டு புரட்சியாக வெடித்தது எனலாம். அச்சமயத்தில் கானிங் பிரபு இந்தியாவின் தலைமை ஆளுநராக இருந்தார்.

### புரட்சிக்கான காரணங்கள்

#### அரசியல் காரணங்கள்

ஆங்கிலேயர்களின் நாடு இணைப்புக் கொள்கை மிக முக்கியக் காரணங்களுள் ஒன்றாகும். வெல்லெஸ்லி பிரபுன் துணைப்படைத்திட்டம் இந்திய அரசர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியது. டல்ஹௌசி பிரபுவின் நாடு இழக்கும் கொள்கை இந்தியர்களிடையே ஒரு பயத்தையும், அமைதியின்மையையும் ஏற்படுத்தியது. இக்கொள்கையின் மூலம் சதாரா, நாக்பூர், ஜான்சி போன்ற அரசுகள் ஆங்கிலேயர்களால் இணைத்துக் கொள்ளப்பட்டன. இதனால் இந்தியர்கள் மனஅமைதியை இழந்தனர்.



டல்ஹௌசி பிரபு

அயோத்தி நவாப், ஆங்கிலக் கிழக்கிந்திய குழுவினருடன் ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்காலம் நட்புக்கொண்டிருந்த பொழுதும் கூட, அயோத்தியை ஆங்கில அரசு இணைத்துக் கொண்டது. இதனைக் கண்டு இஸ்லாமியர்கள் மட்டுமன்றி மற்ற இந்திய அரசர்களும் ஆங்கில அரசின் மீது சினங்கொண்டனர்.

முகலாய வம்சத்தின் கடைசிப்பேரரசர் இரண்டாம் பகதூர் ஷாவிற்குப் பிறகு, அவரது வாரிசுகள் தங்களது பரம்பரை அரண்மனை மற்றும் செங்கோட்டையை ஆங்கில அரசிடம் ஒப்படைக்கவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டனர்.

மராத்தியத் தலைவர் இரண்டாம் பாஜிராவின் மரணத்திற்குப்பிறகு, அவரது வளர்ப்பு மகன் நானாசாகிப்பிற்கு வழங்கப்பட்டு வந்த ஒய்வூதியம் நிறுத்தப்பட்டது. இதனால் மராத்தியர்கள் ஆங்கில அரசுக்கு எதிரிகளாக மாறினர்.

மேலும் முஸ்லீம்கள், ஆங்கில அரசின் போக்கில் அதிருப்தி கொண்டிருந்தனர். ஆங்கில ஆட்சியில் அவர்கள் தங்கள் அரசியல் அதிகாரத்தை இழந்து விட்டதாகக் கருதினர்.

#### நிர்வாகக் காரணங்கள்

இந்தியர்களுக்கு ஆங்கில நிர்வாகத்தின் மீது நம்பிக்கையின்மையும், வெறுப்பும் ஏற்பட்டது. உதாரணமாக நீதிமன்றங்களில் பாரசீக மொழிக்குப் பதிலாக ஆங்கில மொழியைப் புகுத்தியதை மக்கள் விரும்பவில்லை. ஆங்கிலேயரின் நீதி வழங்கும் முறை அதிக செலவுடையதாகவும் இயந்திரத் தன்மை உடையதாகவும் (Mechanical), காலவிரயத்தை கொண்டதாகவும் இருந்தது. எனவே, மக்கள் தங்கள் உடைமைக்கும், உயிர் மற்றும் கௌரவத்திற்கும் பாதுகாப்பு இல்லை என்பதை உணர்ந்தனர். ஆங்கில நிர்வாகத்தில் அதிகமான பாதிப்பினை ஏற்படுத்தியது நிலவரி முறையாகும். நிலப்பிரபுக்களும், குடியானவர்களும் அதிகமாகப் பாதிக்கப்பட்டனர். அவர்கள் அதிகமான நிலவரி செலுத்த வேண்டியிருந்தது. இந்தியர்களுக்கு அரசியலிலும், இராணுவத்திலும் உயர் பதவிகள் மறுக்கப்பட்டன. நல்ல கல்வி கற்ற இந்திய இளைஞர்கள் ஆங்கில வணிகக்குழு நிர்வாகத்தில் நல்ல வேலை கிடைக்குமென்று எதிர்பார்த்து ஏமாற்றம் அடைந்தனர்.

### பொருளாதாரக் காரணங்கள்

நாட்டின் பொருளாதாரச் சுரண்டலில் ஏராளமான செல்வம் வெளியேற்றப்பட்டது மற்றும் இந்தியக் கைத்தொழில்கள் அழிவு ஆகியவை இந்திய மக்களின் பொருளாதார வாழ்க்கையை சீர்குலைத்தன. இந்தியப்பொருட்களுக்கு இங்கிலாந்தில் அதிக காப்பு வரியும், ஆங்கில பொருள்களுக்கு இந்தியாவில் குறைந்த இறக்குமதி வரியும் விதிக்கப்பட்டன. இந்திய நெசவாளர்கள் மற்றும் கைவினை கலைஞர்கள் ஆங்கில அலுவலர்களின் விருப்பத்திற்கேற்ப தொழில் புரியுமாறு கட்டாயப்படுத்தப்பட்டனர். அதற்கு அவர்களுக்கு குறைந்த ஊதியமே வழங்கப்பட்டது. எனவே அவர்களுக்கு தொழிலின் மீது இருந்த ஆர்வம் குறைந்தது. இதனால் மிகப்பெரிய அளவிலும், மிகப் பயனுடையதாகவும் விளங்கிய இந்தியாவின் நெசவுத்தொழில் அழிந்து, மக்களின் வாழ்க்கை பாதிப்பிற்குள்ளாகி, வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டது. பெண்டிங் பிரபு காலத்தில் கொண்டுவரப்பட்ட வங்காள நில குத்தகை சட்டத்தின்படி குத்தகை சுதந்திரம் கொண்ட நிலங்கள் அரசின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டதால் நிலச் சொந்தக்காரர்கள் பலர் வறுமைக்குத் தள்ளப்பட்டனர். கி.பி.19 ஆம் நூற்றாண்டின் முதல் பாதியில் தொடர்ந்து ஏற்பட்ட ஏழு பஞ்சங்கள் நாட்டின் பொருளாதார நிலையை பெரிதும் பாதித்தன.


### சமூக மற்றும் சமயக் காரணங்கள்

இந்தியாவில் வேகமாகப் பரவிய மேலைநாட்டுப் பண்பாடும் ஆங்கிலக் கல்விமுறையும் பழமைவாதிகளை பீதியடையச் செய்தன. சதி என்னும் உடன்கட்டை ஏறும் வழக்கம் ஒழிக்கப்பட்டது. பெண் சிசுக் கொலை தடுக்கப்பட்டது. விதவைகள் மறுமணம் சட்டபூர்வமாக்கப்பட்டது. இத்தகைய நடவடிக்கைகள் மூலம், இந்துக்கள் தங்களின் சமய பழக்கவழக்கங்களில் ஆங்கில அரசு தலையிடுவதாகக் கருதினர். இந்துக்களின் சொத்துரிமைச் சட்டம் மாற்றப்பட்டு, கிறிஸ்துவர்களாக மாறியவர்களுக்கும் தங்களின் முன்னோர்களின் சொத்துகளில் பங்குபெறும் உரிமை வழங்கப்பட்டது. இந்துக்களை, கிறிஸ்துவர்களாக மதம் மாற ஊக்குவிக்கவே இச்சட்டம் கொண்டுவரப்பட்டதாக கருதப்பட்டது. கோயில்களுக்கும், மசூதிகளுக்கும் சொந்தமான நிலங்களின் மீது ஆங்கிலேயர் விதித்த வரி, மக்களின் சமய உணர்வினைப் பெரிதும் பாதித்தது.

### இராணுவக் காரணங்கள்

இந்திய சிப்பாய்களிடையே காணப்பட்ட அதிருப்தி புரட்சிக்கு வழிவகுத்தது. இந்திய வீரர்களிடையே ஆங்கில ஆட்சிக்கு எதிரான வெறுப்பு நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே வந்தது. இராணுவத்தில் இந்தியப் படைவீரர்களுக்கு வழங்கப்பட்ட மிக உயர்ந்த பதவி சுபேதார் ஆகும். அந்த உயர்ந்த பதவிக்கு அளிக்கப்பட்ட ஊதியம் புதியதாகச் சேர்ந்த ஆங்கில சிப்பாய்களின் ஊதியத்தைவிடக் குறைவாக இருந்தது. பதவி உயர்வுக்கான சாத்தியக் கூறுகளும் இல்லை. இந்தியச் சிப்பாய்களை ஆங்கிலேயர் இழிவாகவும், தாழ்வாகவும் நடத்தினர். 1856 ஆண்டு கானிங்பிரபு பொதுப்பணிப் படைச் சட்டத்தைக் (The General Service Enlistment Act) கொண்டுவந்தார். இச்சட்டம் தேவை ஏற்பட்டால் இந்தியச் சிப்பாய்கள் கடல் கடந்து சென்றும் போரில் ஈடுபடவேண்டும் என்று கூறியது. இந்தியப்படை வீரர்கள் எண்ணிக்கை ஆங்கிலேய படை வீரர்களைவிட 5 மடங்கு அதிகம் இருந்தது. மேலும், போர் முக்கியத்துவம் வாய்ந்த முக்கிய இடங்களான டெல்லி மற்றும் அலகாபாத் ஆகியவை இந்தியப் படைவீரர்களின் கட்டுப்பாட்டில் இருந்தன. இவை அனைத்தும் இந்தியச் சிப்பாய்களை ஆங்கிலேயருக்கு எதிராக புரட்சி செய்யத் தூண்டுகோலாக அமைந்தது.

## 1857 ஆம் ஆண்டு கிளர்ச்சி நடைபெற்ற மையங்கள்



## உடனடிக் காரணம்

இந்திய இராணுவத்தில் ஆங்கிலேயரால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய என்பீல்டு ரக துப்பாக்கிகளில் பயன்படுத்த, கொழுப்புத் தடவிய தோட்டாக்கள் அறிமுகப்படுத்தப்பட்டது புரட்சிக்கு உடனடிக்காரணமாக அமைந்தது. இந்த தோட்டாக்களை துப்பாக்கியில் நிரப்புவதற்கு முன்பு அதன் கடினமான மேலுரைகளைப் பற்களால் கடித்து அப்புறப்படுத்தவேண்டும். இந்த மேலுறைகளில் ஒருவிதமான பசை தடவப்பட்டிருந்தது. இது பசுவின் நெய் என்றும் பன்றியின் கொழுப்பு என்றும் வதந்தி கிளப்பப்பட்டது. பசுக்களை இந்து சமயத்தினர் புனிதமாகவும், பன்றியை இஸ்லாமியர்கள் வெறுப்புக்குரிய விலங்காகவும் கருதினர். எனவே, அப்புதியவகை தோட்டாக்களை உபயோகிப்பது தங்களது சமயக் கோட்பாட்டிற்கு எதிரானது என்றும் இரு சமயத்தினரும் கருதினர். 1857 ம் ஆண்டு மார்ச் 29–ம் நாள் கல்கத்தாவிற்கு அருகிலுள்ள பராக்பூரில் வங்காள படைப்பிரிவைச் சார்ந்த மங்கள்பாண்டே என்ற இளம் இந்தியப் பிராமணப் படைவீரர் கொழுப்புத்தடவிய தோட்டாவை உபயோகிக்க மறுத்தார். இவர் கட்டாயப்படுத்தப்படவே, வேறுவழியின்றி தனது மேலதிகாரியைச் சுட்டுக்கொன்று, தனது எதிர்ப்பை வெளிப்படுத்தினார். ஆனால், அவர் கைது செய்யப்பட்டு, நீதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு பின்னர் தூக்கிலிடப்பட்டார். பராக்பூரிலிருந்து காலாட் படைப்பிரிவு மீரட்டிற்கு மாற்றப்பட்டது. இச்செய்தி பரவத் தொடங்கியதால் இந்தியப்படைவீரர்கள் வெவ்வேறு பகுதிகளில் புரட்சியைத் தொடங்கினர்.

## புரட்சி பரவுதல் மற்றும் அடக்கப்படுதல்

1857–ல் வங்காளத்தில் பராக்பூரில்தான் முதலில் புரட்சி வெடித்தது. ஆனால் புரட்சி உடனடியாக அடக்கப்பட்டு புரட்சியாளர்கள் தண்டனைக்கு உட்படுத்தப்பட்டனர். 1857–ம் ஆண்டு மே



இராணி லட்சுமி பாய்

மாதம் மீரட்டிலிருந்த படைப்பிரிவினர் வெளிப்படையாகப் புரட்சியில் ஈடுபட்டனர். இவர்கள் சிறைச் சாலையைத் தகர்த்து, சிறையில் அடைக்கப்பட்டிருந்த சகபடைவீரர்களை விடுவித்தனர். பின்னர் டெல்லியை நோக்கிச் சென்று, டெல்லியைக் கைப்பற்றி அதனைத் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர். இதனைத் தொடர்ந்து லக்னோ, ப்ரெய்லி, கான்பூர், ஆக்ரா, ஜான்சி, பனாரஸ், மத்திய இந்தியா, பண்டேல்கண்டு போன்ற பகுதிகளிலும் புரட்சி பரவியது.

இப்புரட்சியில் ஈடுபட்ட முக்கிய தலைவர்களாக ஜான்சியின் இராணி இலட்சுமிபாய், நானாசாகிப், தாந்தியாதோப் பேகம் ஹஸ்ரத் மஹால், கன்வர்சிங் ஆகியோர் திகழ்ந்தனர். இப்புரட்சி நடைபெற்ற முக்கிய நகரங்கள் டெல்லி, கான்பூர் மற்றும் லக்னோ ஆகியவையாகும்.

## கான்பூர்

மராத்திய பீஷ்வா இரண்டாம் பாஜிராவின் தத்துப் புதல்வரான நானாசாகிப் கான்பூரில் புரட்சியாளர்களுடன் இணைந்து, புரட்சிக்கு தலைமை தாங்கித் தன்னை பேஷ்வா என அறிவித்துக் கொண்டார். நானாசாகிப்பின் படைக்கு தாந்தியாதோப் என்ற விசுவாசமும் வீரமும் பொருந்திய படைத்தளபதி தலைமை பொறுப்பேற்றார். ஆங்கிலப்படை கலகக்காரர்களிடம் சரணடைந்தது. போரில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் இரக்கமின்றி

கொல்லப்பட்டனர். இறுதியில் சர் காலின் காம்ப்பெல் என்பவரால் நானாசாகிப் தோற்கடிக்கப்பட்டு நேபாளத்திற்குத் தப்பி ஓடினார். பின்னர் சிறிது காலம் கழித்து அவர் இறந்தார். 1857–ல் நவம்பரில் கான்பூர் ஆங்கிலேயர் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.

### டெல்லி

புரட்சியாளர்கள் வசம் இருந்த டெல்லியை சர் ஆர்ச்டேல் வில்சன், நிக்கல்சன் மற்றும் சர் ஜான் லாரன்ஸ் ஆகிய இராணுவ அதிகாரிகள் மீட்டனர். டெல்லி கைப்பற்றப்பட்டு ஆயிரக்கணக்கான மக்கள் ஆங்கிலேயர்களால் இரக்கமின்றி கொல்லப்பட்டனர். மொகலாய மன்னரான இரண்டாம் பகதூர் ஷா சிறைபிடிக்கப்பட்டு ஆயுள் கைதியாக ரங்கூனுக்கு நாடு கடத்தப்பட்டார். அவர் அங்கு தனது 87வது வயதில் இறந்தார்.

### லக்னோ

லக்னோ புரட்சியின் ஒரு மையமாக விளங்கியது. தலைமை ஆணையர்களான சர் ஹென்றி லாரன்ஸ், கர்னல் நீல் ஆகியோர் கொல்லப்பட்டனர். அயோத்தி நவாப்பின் மனைவியான பேகம் ஹஸ்ரத்மஹால் ஆங்கிலேயருக்கு எதிராக கலகக்காரர்களுடன் சேர்ந்து புரட்சியில் ஈடுபட்டார். இறுதியாக சர் காலின் கேம்ப்பெல் என்பவரால் லக்னோ 1858 மார்ச் மாதம் மீட்கப்பட்டது.

### மத்திய இந்தியா

மத்திய இந்தியாவில் நடைபெற்ற புரட்சிக்கு ஜான்சிஇராணி இலட்சுமிபாய், கான்பூரிலிருந்து வந்த தாந்தியாதோப் ஆகியோர் தலைமை தாங்கினார். இருவரும் வீரத்துடன் போரிட்டனர். ஆணுடை தரித்து இராணுவத் தந்திரத்துடன் இராணி இலட்சுமிபாய் உண்மையான ஒரு வீரனைப்போல் வீரப்போர் புரிந்து குவாலியரை கைப்பற்றினார். இருப்பினும் ஜான்சி இராணி இலட்சுமிபாய் 1858 ம் ஆண்டு ஜூன் மாதம் நடைபெற்ற போரில் கொல்லப்பட்டார். தப்பிச் சென்ற தாந்தியதோப்பும் கைது செய்யப்பட்டு கொல்லப்பட்டார்.

### ப்ரெய்லி

ரோகில்கண்டின் தலைநகரான பிரெய்லியில் படைவீரர்கள் புரட்சி செய்தனர். அவர்கள் தங்கள் (ரோகில்லர்களின்) தலைவனை தங்கள் பகுதிக்கு ஆளுநராக அறிவித்தனர்.

### பீகார்

பீகாரில் உள்ள ஆராவில், ஜகதீஷ்பூரின் நிலப்பிரபுவும், 80 வயது நிரம்பியவருமான கன்வர்சிங் புரட்சிக்குத் தலைமைத்தாங்கி, 1858 தான் இறக்கும் வரையிலும் வீரத்துடன் சண்டையிட்டார். இவர் மேற்குப் பீகாரின் மிகச் சிறந்த இராணுவத் தளபதியாகத் திகழ்ந்தார். அவருக்குப்பின் அவருடைய சகோதரர் அமர்சிங் புரட்சிக்குத் தலைமை தாங்கினார். ஆனால் புரட்சி விரைவில் முறியடிக்கப்பட்டது.

### புரட்சியின் தோல்விக்கான காரணங்கள்

புரட்சியாளர்களிடையே காணப்பட்ட ஒற்றுமையின்மையே இப்புரட்சியின் தோல்விக்கு முதல் மற்றும் முக்கிய காரணமாகும்.

புரட்சி நாடு முழுவதும் பரவவில்லை. வட இந்தியாவில் மட்டுமே புரட்சி மையம் கொண்டிருந்தது. தென்னிந்தியா, பஞ்சாப், சிந்து மற்றும் இராஜஸ்தான் இப்புரட்சியில் பங்கேற்கவில்லை.

இந்தியாவின் பல்வேறு மன்னர்களும், செல்வம் மிக்க ஜமீன்தார்களும் இப்புரட்சியில் பங்கு கொள்ளவில்லை.

புரட்சியை ஆதரிக்காத இந்திய அரசர்கள் நடுநிலை வகித்தனர்.

பொதுவாக படித்த இந்தியர்கள் இப்புரட்சியை ஆதரிக்கவில்லை.

தந்தி மற்றும் தபால் துறை ஆங்கிலேயர் கட்டுப்பாட்டில் இருந்ததால்

தக்க இராணுவ நடவடிக்கை எடுக்கவும், தங்களது படைப்பிரிவுகளை வெகு விரைவில் புரட்சி நடந்த இடங்களுக்கு அனுப்பவும் பேருதவி புரிந்தது.

புரட்சியாளர்கள் நவீன போர்க்கருவிகளைக் கொண்டிருக்கவில்லை. அவர்கள் தங்களது பழமையான ஆயுதங்களைக் கொண்டு ஆங்கில இராணுவத்தை எதிர் கொண்டனர். இவ்வாயுதங்கள் ஆங்கிலேயர்களின் நவீன போர்க்கருவிகளுக்கு ஈடாகவில்லை.

புரட்சியின் தலைவர்கள் நானாசாகிப், தாந்தியாதோப் ஆகியோர் ஆங்கிலக் படைத் தளபதிகளுக்கு ஈடானவர்கள் அல்ல.

1857, மே 31ஆம் நாள் திட்டமிடப்பட்டிருந்த புரட்சி, திட்டமிடப்பட்ட நாட்களுக்கு முன்னதாகவே தொடங்கிவிட்டது. எனவே, புரட்சிக்கு தேவையான முன்னேற்பாடுகள் முழுமையடையாமல் தோல்விக்கு வழி வகுத்தன.

புரட்சியாளர்கள் திட்டமிடுதல் மற்றும் செயல்பாடுகளில் மிகக் குறைந்த பயிற்சியே பெற்றிருந்தனர். இந்தியத் தலைவர்கள் வீரத்திலும் தியாகத்திலும் சிறந்தவர்கள் எனினும், படைகளை தலைமையேற்று நடத்திச் செல்வதிலும், வீரர்களைக் கட்டுப்பாட்டில் வைத்து இருப்பதிலும் தவறிவிட்டனர்.

புரட்சியாளர்களிடையே ஒருமித்த குறிக்கோள் இல்லை. இஸ்லாமியர்கள் முகலாய அரசை மீண்டும் ஏற்படுத்தவேண்டும் என்று எண்ணினார்கள். இந்துக்கள் மராத்திய செல்வாக்கை மீண்டும் நிறுவ முயற்சித்தனர்.

ஆங்கிலேயர்கள் தங்களின் அரசியல் தந்திரமான பிரித்தாளும் கொள்கையின் மூலம் இந்திய அரசர்களை ஒரு பொதுவான காரணத்திற்காக ஒன்று சேரவிடாமல் தடைசெய்தனர்.

### புரட்சியின் விளைவுகள்

பெரும்புரட்சி எந்த நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்டதோ அந்த நோக்கத்தை அடையவில்லை. எனினும் பல்வேறு விளைவுகளை ஏற்படுத்தின. இப்புரட்சி இந்திய ஆட்சியில் மாற்றங்களை கொண்டு வந்தது. ஆங்கில வணிகக் குழுவின் ஆட்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. இந்தியாவில் ஆங்கில அரசின் நேரடி ஆட்சி நடைமுறைக்கு வந்தது. 1858 ல் ஒரு சிறப்புச்சட்டம் கொண்டு வரப்பட்டது இச்சட்டத்தின் படி கட்டுப்பாட்டுக் குழுவும் (Board of Control) மற்றும் இயக்குநர் குழு (Board of Directors) கலைக்கப்பட்டன. இவற்றிற்குப் பதிலாக இந்திய நிர்வாகப் பொறுப்பை கவனிக்க இந்தியச் செயலாளரும், அவருக்கு உதவி செய்ய 15 உறுப்பினர்களைக் கொண்ட இந்தியக் குழுவும் அமைக்கப்பட்டது. இந்தியத் தலைமை ஆளுநர், இந்திய வைசிராய் என்று அழைக்கப்பட்டார். வைசிராய் என்பதற்கு அரசப்பிரதிநிதி என்று பொருள். இந்திய மன்னர்களுக்கு தத்து எடுக்கும் உரிமை வழங்கப்பட்டது. இரக்கமற்ற முறையில் இந்திய அரசுகளை இணைத்துக்கொள்ளும் கொள்கை கைவிடப்பட்டது. இந்திய இராணுவம் முற்றிலும் மாற்றியமைக்கப்பட்டது. இந்தியாவின் பழமையான பண்பாடு பழக்கவழக்கங்கள் இனி மதிக்கப்படும் என்று உறுதி அளிக்கப்பட்டது. இந்தியர்களுக்கு முழு சமயச் சுதந்திரம் வழங்கப்பட்டது. அனைத்து இந்தியர்களும் இனக்கொள்கை வேறுபாடு இன்றி, தகுதி மற்றும் திறமை அடிப்படையில் அரசு நிர்வாகப் பணிகளில் நுழைய தகுதியுடையவர்கள் எனவும் அறிவிக்கப்பட்டது. இராணுவத்தில் ஆங்கிலேயர்களின் எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட்டது. பீரங்கிப்படை ஆங்கிலேயர்களின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது. இந்தியா சுதந்திரம் பெறுவதற்கான விதை இப்புரட்சியின் மூலம் விதைக்கப்பட்டது. இது 1947 ஆம் ஆண்டு ஆங்கில ஆதிக்கத்தை

முடிவுக்கு கொண்டுவந்து இந்தியா விடுதலை பெறச் செய்தது.

### விக்டோரியா மகாராணி பேரறிக்கை 1858

1858 ஆம் ஆண்டு நவம்பர் 1ம் தேதி இந்தியாவின் கடைசி தலைமை ஆளுநரும் முதலாம் வைசிராயும் ஆன கானிங்பிரபு அலகாபாத்தில் நடைபெற்ற மாபெரும் கூட்டத்தில் விக்டோரியா மகாராணியின் பேரறிக்கையை வெளியிட்டார்.



விக்டோரியா மகாராணி

அது இந்திய மக்களின் மகாசாசனம் (உரிமை சாசனம்) என்று கருதப்பட்டது. இப்பேரறிக்கையின் படி இந்தியாவின் ஆட்சிப்பொறுப்பை இனி இங்கிலாந்து அரசி நேரடியாக மேற்கொள்வார் என அறிவிக்கப்பட்டது. எனவே அவருக்கு பதிலாக அவரது பிரதிநிதி இந்தியாவின் ஆட்சிப்பொறுப்பை மேற்கொள்வார் என அறிவிக்கப்பட்டது. இதன்படி கானிங்பிரபு முதல் அரசப்பிரதிநிதியானார். இந்திய அரசர்களுடன் ஆங்கில வணிகக் குழு கொண்டிருந்த உடன்படிக்கைகளுக்கு உறுதியளிக்கப்பட்டன. அனைவருக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டது. இந்தியாவின் பழமையான பண்பாடும் பழக்கவழக்கங்களும் மதிக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது. புரட்சியின்போது ஆங்கிலேயரின் மரணத்திற்கு காரணமாக இருந்தவர்கள் தவிர, மற்ற அனைவருக்கும் நிபந்தனையற்ற பொது மன்னிப்பு வழங்கப்பட்டது.

இப்புரட்சியானது தேசப்பற்றை மக்களிடையே விழித்தெழச் செய்து தேசிய இயக்கம் தோன்றுவதற்கு வழிவகுத்தது. இப்புரட்சி பின்னர் நடந்த இந்திய சுதந்திரப் போராட்டத்திற்கு ஒரு மூலகாரணமாக அமைந்து, 1947–ல் இந்தியா சுதந்திரமடைய உதவியது.

### புரட்சியின் தலைவர்கள்

| | | |
|---|---|---|
| டெல்லி | – | இரண்டாம் பகதூர்ஷா |
| மத்திய இந்தியா | – | ஜான்சிஇராணி இலட்சுமிபாய் |
| லக்னோ | – | பேகம் ஹஸ்ரத் மஹால் |
| கான்பூர் | – | நானாசாகிப், தாந்தியாதோப் |

## பயிற்சி

### அ. சரியான விடையை தேர்ந்தெடு.

1. 1857 ஆம் ஆண்டு பெரும்புரட்சியை ஆங்கில வரலாற்றிஞர்கள் அழைத்தது.
   அ) படைவீரர் கலகம்　　ஆ) பெரும் கலகம்
   இ) இந்திய சுதந்திரப் போர்　　ஈ) சுதந்திரப் போராட்டம்
2. இந்திய வரலாற்றறிஞர்கள் 1857–ஆம் ஆண்டு பெரும் புரட்சியை அழைத்தது.
   அ) சிப்பாய் கலகம்　　ஆ) பெரும் புரட்சி
   இ) முதல் இந்திய சுதந்திரப் போர்　　ஈ) படைவீரர் கலகம்
3. 1857 பெரும் புரட்சியின் போது இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்தவர்.
   அ) லிட்டன் பிரபு　ஆ) ரிப்பன் பிரபு　இ) கானிங் பிரபு　ஈ) வெல்லெஸ்லி பிரபு

4. குடியானவர்கள் அதிகமாகச் செலுத்த வேண்டியிருந்த வரி.

அ) நிலவரி ஆ) சுங்க வரி இ) வருமான வரி ஈ) சேவை வரி

5. குத்தகை நிலங்களை அரசின் கட்டுபாட்டில் கொண்டு வந்தவர்.

அ) லின்லித்தோ ஆ) டல்ஹௌசி பிரபு

இ) பெண்டிங் பிரபு ஈ) மவுண்ட் பேட்டன்

6. பொது இராணுவப் பணியாளர் சட்டம் கொண்டு வரப்பட்ட ஆண்டு.

அ) 1856 ஆ) 1857 இ) 1858 ஈ) 1859

7. முதன் முதலில் புரட்சி வெடித்தது.

அ) மீரட் ஆ) ப்ரெய்லி இ) பாரக்பூர் ஈ) கான்பூர்

8. படை வீரர்கள் வெளிப்படையாகப் புரட்சியில் ஈடுபட்டது

அ) மீரட் ஆ) ப்ரெய்லி இ) பாரக்பூர் ஈ) கான்பூர்

9. அயோத்தி நவாபின் மனைவி

அ) மும்தாஜ் ஆ) பாத்திமா பேகம் இ) பேகம் ஹஜ்ரத் மகால் ஈ) ரசியா சுல்தானா

10. 1857 ஆம் ஆண்டு புரட்சிக்கு பின் இந்திய கவர்னர் ஜெனரல் அழைக்கப்பட்டது.

அ) இந்திய அரசப் பிரதிநிதி ஆ) இந்திய அரசர்

இ) இந்திய ஆளுநர் ஈ) இந்திய அமைச்சர்

## ஆ. பொருத்துக.

I

| | | |
|---|---|---|
| 1. | மங்கள் பாண்டே | கான்பூர் |
| 2. | இரண்டாம் பகதூர் ஷா | லக்னோ |
| 3. | நானா சாகிப் | மத்திய இந்தியா |
| 4. | பேகம் ஹஜ்ரத் மஹால் | ஆரா |
| 5. | இராணி இலட்சுமி பாய் | பராக்பூர் |
| | | அயோத்தி |
| | | டெல்லி |

II

| | | |
|---|---|---|
| 1. | இராணி இலட்சுமி பாய் | முகலாயப்பேரரசர் |
| 2. | இரண்டாம் பகதூர் ஷா | காலின் கேம்பெல் |
| 3. | பெரும் புரட்சி | ஜான்சி |
| 4. | லக்னோ | மகாசாசனம் |
| 5. | விக்டோரிய மகாராணியின் பேரறிக்கை | 1856 |
| | | 1854 |
| | | 1857 |

## இ. சுருக்கமான விடையளி.

1. 1857 ஆம் ஆண்டு பெரும் புரட்சிக்கான சமூகம் மற்றும் சமய காரணங்கள் யாவை ?
2. பெரும்புரட்சியில் ஈடுபட்ட முக்கியத் தலைவர்கள் மற்றும் முக்கிய இடங்களைக் குறிப்பிடுக.
3. டெல்லியில் நடைபெற்ற பெரும் பரட்சி பற்றி எழுதுக.
4. விக்டோரியா மகாராணியின் பேரறிக்கையின் முக்கியத்துவம் யாது ?
5. இந்தியாவின் வாணிபத்தை ஆங்கிலேயர் எவ்வாறு முடக்கினர் ?
6. 1857 ஆம் ஆண்டு நடந்த புரட்சியின் உடனடிக் காரணம் யாது ?
7. புரட்சி ஏன் இந்தியா முழுவதும் பரவவில்லை ?

## ஈ. பின்வரும் வினாக்களுக்கு விடையளி.

1. 1857ஆம் ஆண்டு புரட்சிக்கான அரசியல் காரணங்கள்

   அ) துணைப்படைத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியவர் யார் ?

   ஆ) டல்ஹெளசி பிரபு அறிமுகப்படுத்திய கொள்கை யாது ?

   இ) இரண்டாம் பகதூர்ஷா மீது ஆங்கிலேயர் மேற்கொண்ட நடவடிக்கை யாது ?

   ஈ) நானாசாகிப் தனது வெறுப்பை ஆங்கிலேயர் மீது அதிகப்படுத்தியது ஏன் ?

2. கான்பூர்

   அ) கான்பூரில் நடந்த புரட்சியாளர்களுடன் இணைந்தது யார் ?

   ஆ) ஆங்கிலேயர்களுக்கு ஏற்பட்ட நிலை என்ன ?

   இ) நானாசாகிப்பை தோற்கடித்தது யார் ?

   ஈ) கான்பூர் எப்பொழுது ஆங்கிலேயர் வசம் வந்தது ?

3. மத்திய இந்தியாவில் பெரும் புரட்சி

   அ) மத்திய இந்தியாவில் புரட்சியை வழிநடத்திச் சென்றவர் யார் ?

   ஆ) இராணி இலட்சுமி பாய் கைப்பற்றிய நகரம் எது ?

   இ) இராணி இலட்சுமி பாயின் முடிவு என்ன ?

   ஈ) தாந்தியா தோப்பிற்கு நிகழ்ந்தது என்ன ?

## உ. பத்தி அளவில் விடையளிக்க.

1. 1857 ஆம் ஆண்டு பெரும் புரட்சிக்கான நிர்வாக மற்றும் இராணுவக் காரணங்களை விவரி.
2. 1857 ஆம் ஆண்டு புரட்சி தோல்விடைந்தற்கான காரணங்களை விவரி.
3. 1857 ஆம் ஆண்டு புரட்சிக்கான விளைவுகள் யாவை ?

## ஊ. செய்முறை.

இந்திய வரைபடத்தில் கீழ்கண்ட இடங்களை குறிக்கவும்.


| | | | | |
|---|---|---|---|---|
| அ) டெல்லி | ஆ) மீரட் | இ) ப்ரெய்லி | ஈ) லக்னோ | உ) கான்பூர் |
| ஊ) ஜான்சி | எ) குவாலியர் | ஏ) பாரக்பூர் | ஐ) அலகாபாத் | ஒ) ஆரா |

# 10. 19 ஆம் நூற்றாண்டில் சமூக மற்றும் சமய சீர்திருத்த இயக்கங்கள்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியாவில் சமூகம் மற்றும் சமயத்தில் பல சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்திய மக்கள் மேற்கத்திய கருத்துக்களான பகுத்தறிதல், சமத்துவம், சுதந்திரம் மற்றும் மனிதாபிமானம் போன்ற கருத்துக்களால் மிகவும் கவரப்பட்டனர். இந்தியப் பண்பாட்டில் இருந்த குறைகளைக் களைந்து, இந்தியாவின் பழம்பெரும் கலாச்சார புகழை மீண்டும் கொண்டுவர விரும்பினர். அவர்கள் பல்வேறு சமூக மற்றும் சமய சீர்திருத்த இயக்கங்களைத் தோற்றுவித்தனர். இதன் மூலம் இந்திய சமுதாயத்தில்இருந்த குறைகளைக் களைய முற்பட்டனர். இத்தகைய சமூக – சமய சீர்திருத்த இயக்கங்கள் இந்தியாவின் மறுமலர்ச்சி இயக்கங்கள் என அழைக்கப்பட்டன.

## பிரம்ம சமாஜம் – 1828

இந்திய சீர்திருத்தங்களின் முன்னோடியாகத் திகழ்ந்த இராஜாராம் மோகன்ராய், வங்காளத்தில் செல்வ வளமிக்க பிராமணர் குடும்பத்தில் பிறந்தார்.



இராஜாராம் மோகன்ராய்

இவர் அராபிக், சமஸ்கிருதம் போன்ற மொழிகளைக் கற்றார். பின்னர் பாரசீகம், ஆங்கிலம், பிரெஞ்சு, இலத்தீன், கிரேக்கம் மற்றும் ஹீப்ரு போன்ற மொழிகளையும் கற்றுத் தேர்ந்தார். அவர் வங்காளம், இந்தி, சமஸ்கிருதம், பாரசீகம் மற்றும் ஆங்கிலத்தில் பல நூல்களை எழுதியுள்ளார். 'ஏசு கிறிஸ்துவின் கட்டளைகள்' (Precepts of Jesus Christ) 'அமைதிக்கும் மகிழ்ச்சிக்கும் வழி' (The Guide to Peace and Happiness) போன்றவை குறிப்பிடத்தக்க நூல்கள் ஆகும். உலகின் பல்வேறு சமயங்களை நன்கு கற்றறிந்தார். ஆங்கில கிழக்கிந்திய நிறுவனத்தில் 1805 ஆம் ஆண்டு பணியில் சேர்ந்து 1814 ஆம் ஆண்டுவரை பணியாற்றினார். முகலாயப் மன்னர் இரண்டாம் அக்பருக்கு வழங்கப்பட்டு வந்த ஓய்வு ஊதியத்தை உயர்த்திப் பெற இங்கிலாந்து சென்றார். இவர் 1833 ஆம் ஆண்டு பிரிஸ்டல் என்னும் இடத்தில் இறந்தார். இவருக்கு முகலாய மன்னர் 'இராஜா' என்ற பட்டத்தை வழங்கினார். இவர் நவீன இந்தியாவின் 'விடிவெள்ளி' என்று அழைக்கப்பட்டார். (Herald of New age in India)

## சாதனைகள்

இராஜாராம் மோகன்ராய் இந்து சமுதாயம் மற்றும் சமயத்தில் காணப்பட்ட பல்வேறு மூடப்பழக்கவழக்கங்களை நீக்கப் பாடுபட்டார். 1815 ஆண்டு ஆத்மீய சபாவைத் தோற்றுவித்தார். இதுவே பின்னர், 1828–ம் ஆண்டு முதல் பிரம்ம சமாஜமாக வளர்ந்தது. 'ஒரே கடவுள்' என்ற கொள்கையின் அடிப்படையில் 'பொது சமயத்தில்' நம்பிக்கை கொண்டவர்களின் சபையாக பிரம்ம சமாஜம் இருந்தது. இராஜாராம் மோகன்ராய் உருவ வழிபாடு, ஆடம்பரமான சடங்குகள், சமய விதிகள், சாதி வேறுபாடு, தீண்டாமை மற்றும் உடன்கட்டை ஏறும் பழக்கம் போன்றவற்றை வன்மையாகக் கண்டித்தார். இவரது சீரிய முயற்சியினால் 1829 –ம் ஆண்டு ஆங்கில ஆளுநர்

வில்லியம் பெண்டிங் பிரபு 'சதி தடை சட்டத்தை' கொண்டுவந்தார். இதன்படி சதி என்னும் உடன்கட்டை ஏறும் பழக்கம் தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்பட்டது. இச்சட்டம் அதிகபட்ச தண்டனையாக மரணதண்டனை விதிக்கவும் வழிவகுத்தது. இவர் பலதார மணமுறை மற்றும் குழந்தைகள் திருமணத்திற்கு எதிராகப் போராடினார். விதவைகள் மறுமணம், பெண் கல்வி, பெண்கள் முன்னேற்றம், கலப்புத் திருமணம் ஆகியவற்றை ஆதரித்தார். இவர் மேலை நாட்டுக் கல்வி மற்றும் கலாச்சாரத்தை இந்தியர்கள் பெறுமாறு வற்புறுத்தினார். மேலைநாட்டுக் கல்வி, அறிவியல் மற்றும் எண்ணங்களையும், மூடநம்பிக்கைகளையும், கண்மூடித்தனமான பழக்க வழக்கங்களையும் நீக்க வழிவகுக்கும் என நம்பினார்.

இராஜாராம் மோகன்ராயின் மறைவிற்குப் பிறகு, திரு.கேசவ் சந்திரசென் மற்றும் தேவேந்திரநாத் தாகூர் போன்றோர் இச்சபையை ஏற்று நடத்தினர். கேசவ் சந்திரசென் முயற்சியால் 1872 ஆம் ஆண்டு, பலதார மணமுறை மற்றும் குழந்தைகள் திருமணம் போன்றவற்றை தடைசெய்யும் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம் கலப்புத் திருமணத்தையும், விதவைகள் மறுமணத்தையும் ஆதரித்தது.

## பிரார்த்தனா சமாஜம் – 1867

பிரார்த்தனா சமாஜம், டாக்டர் ஆத்மாராம் பாண்டுரங் என்பவரால், 1867 ஆம் ஆண்டு மும்பையில் தோற்றுவிக்கப் பட்டது. இச்சபை பல்வேறு சமூக சீர்திருத்தங்கள் ஏற்படக் காரணமாக இருந்தது. இச்சபை சமுதாய சீர்திருத்தங்களான சமபந்தி உணவு, கலப்புத்திருமணம், விதவைகள் மறுமணம், பெண்கள் நலனை மேம்படுத்துதல், பின்தங்கிய மக்கள் நலனை உயர்த்துதல், பர்தா அணியும் முறையை ஒழித்தல் மற்றும் குழந்தைகள் திருமணம் ஒழிப்பு போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டது. இச்சபை தாழ்த்தப்பட்ட மக்களுக்காக இரவுப் பள்ளிகள், அனாதை இல்லங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்களை நடத்தியது. மகாதேவ கோவிந்தரானடே இச்சபையின் முன்னேற்றத்திற்காக தன் வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணித்தார்.

## ஆரிய சமாஜம் 1875

சுவாமி தயானந்த சரஸ்வதி என்பவரால் ஆரிய சமாஜம் 1875 ம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இவர் குஜராத் மாநிலத்தில் கத்தியவார் மாகாணத்தில் 'மூர்வி' என்னும் இடத்தில் பாரம்பரியம் மிக்க பிராமணர் குடும்பத்தில் பிறந்தார்.



சுவாமி தயானந்த சரஸ்வதி

இவரது இயற்பெயர் 'மூல் சங்கர்' என்பதாகும். சிறுவயதிலேயே துறவறம்பூண்டு பல்வேறு இடங்களில் சுற்றித்திரிந்து, சமஸ்கிருதம் பயின்று அம்மொழியில் புலமை பெற்று விளங்கினார். இவர் சுவாமி விராஜனந்தரின் (Virajanand) சீடராவார்.

சுவாமி தயானந்தர் வேதங்களில் கூறப்பட்டுள்ள அனைத்துமே உண்மை என கண்டறிந்தார். எனவே, வேதங்களை பரப்புவதிலேயே தன் வாழ்க்கையை அர்ப்பணித்தார். அவர் இந்து சமூகத்தைச் சீர்திருத்த எண்ணினார். 'வேதங்களை நோக்கிச் செல்' (Go back to the vedas) என்பதே இவரின் குறிக்கோளாகும். எனவே, தயானந்த சரஸ்வதியின்

கூற்றுப்படி வேதங்கள் எல்லா உண்மைகளையும் உள்ளடக்கியுள்ளன. வேதகால சமூகத்தில் நிலவிய நல்ல பண்புகளை எடுத்துக் கூறி மக்களிடையே சுயமரியாதையும், தன்னம்பிக்கையும் வளர்த்தார்.

ஆரிய சமாஜம் விலங்குகளைப் பலியிடுதல், உருவ வழிபாடு, மூடப்பழக்கங்கள், சொர்க்கம், நரகம் போன்ற கோட்பாடுகளை எதிர்த்தது. மதம்மாறிய இந்துக்களை மீண்டும் இந்து சமயத்தில் சேர்ப்பதற்காக 'சுத்தி இயக்கம்' (Suddhi Movement) என்ற இயக்கத்தைத் தொடங்கினார்.

ஆரிய சமாஜம் குழந்தை மணம், பலதார மணமுறை, பர்தா அணியும் முறை, சாதி வேறுபாடுகள் மற்றும் உடன் கட்டை ஏறும் வழக்கம் போன்றவற்றை எதிர்த்தது. பெண் கல்வி, கலப்பு மணம், சமபந்தி உணவு முறை, பெண்கள் மற்றும் தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றம் ஆகியவற்றிற்காக பாடுபட்டது. வேதம் மற்றும் ஆங்கில வழி கல்வியை பயிற்றுவிப்பதற்காக தயானந்தா ஆங்கிலோ வேதிக் பள்ளிகள் (D A V Dayanand Anglo Vedic Schools) மற்றும் கல்லூரிகளை நிறுவினார்.

தயானந்தரின் முக்கிய சீடர்களான லாலாலஜபதிராய், லாலா ஹன்ஸ்ராஜ் மற்றும் பண்டித குருதத் ஆகியோர் ஆரிய சமாஜக் கொள்கைகளைப் பரப்பினர். பாலகங்காதர திலகர் மற்றும் கோபாலகிருஷ்ண கோகலே போன்றோர் ஆரிய சமாஜத்தின் தத்துவங்களிலும் கோட்பாடுகளிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தனர். 'சுதேசி' மற்றும் 'இந்தியா இந்தியருக்கே' போன்ற முழக்கங்களை முதன் முதலில் முழங்கியவர் சுவாமி தயானந்தர் ஆவார். இவர் இந்து சமயத்தின் 'மார்ட்டின் லூதர்' என அழைக்கப்பட்டார்.

### பிரம்மஞான சபை 1875

இரஷ்ய பெண்மணி மேடம் பிளாவட்ஸ்கி மற்றும் அமெரிக்காவின் ஹென்றி எஸ் ஆல்காட் என்பவரால் 1875ம் ஆண்டு அமெரிக்காவில் நியூயார்க் நகரில் கடவுள் பக்தி மற்றும் உண்மை அறிவை பெறுவதற்காக பிரம்மஞான சபை நிறுவப்பட்டது. 'தியோஸ்' என்றால் 'கடவுள்' என்றும் 'சோபாஸ்' என்றால் 'அறிவு' என்றும் பொருள்படும். ஆகவே, 'தியோசோபி' என்றால் 'கடவுளைப்பற்றிய அறிவு' என்று பொருள்படும்.

மக்களிடையே சகோதரத்துவ உணர்வை வளர்ப்பதற்காகவும், பண்டைய சமயங்களைப் பற்றியும் மற்றும் தத்துவங்கள், அறிவியல், மற்றும் இயற்கையின் நியதிகளை அறிந்து மக்களிடையே தெய்வீக சக்திகளை வளர்ப்பதுமே இச்சபையின் முக்கிய நோக்கங்கள் ஆகும்.



அன்னிபெசன்ட்

திருமதி. அன்னிபெசன்ட் அவர்கள் 1893 ஆம் ஆண்டு இச்சபையின் தலைவராகப் பொறுப்பேற்று, இந்து சமயத்தின் மறுமலர்ச்சிக்காகவும், இந்தியக் கல்விக்காகவும் தன்னை அர்ப்பணித்துக்கொண்டார். கல்விப்பணியில் இவர் ஆற்றிய பணிகள் மிக முக்கியமானவையாகும். இவரால் பனாரசில் (காசி) தோற்றுவிக்கப்பட்ட மத்திய இந்துக் கல்லூரி இறுதியில் பனாரஸ் இந்து பல்கலைக்கழகமாக வளர்ச்சி அடைந்தது.

மெய்ஞான சபையின் நோக்கங்களை பரப்புவதற்காக அன்னிபெசன்ட் அவர்கள் நியூ இந்தியா (New India) என்ற செய்தித்தாளை நடத்தி வந்தார். அரசியலில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு இந்தியர்கள் சுயாட்சி பெறுவதற்காக தன்னாட்சி (Home Rule Movement) இயக்கத்தை உருவாக்கினார். இவ்வியக்கம் இந்தியத்தேசிய இயக்கத்திற்கு உத்வேகம் அளித்தது. இச்சபையின் தலைமையிடத்தை சென்னையில் அடையார் என்னும் இடத்தில் நிறுவினார். அடையாறில் ஒரு நூலகத்தை நிறுவி பழமையான சமஸ்கிருத நூல்களைப் பாதுகாத்து வந்தார். இச்சபை இந்தியர்களின் மறுமலர்ச்சிக்காக ஓர் முன்னோடி இயக்கமாகச் செயல்பட்டது.

### இராமகிருஷ்ண இயக்கம் – 1897

இராமகிருஷ்ண இயக்கம், இராமகிருஷ்ண பரமஹம்சரின் பெயரை அடிப்படையாகக் கொண்டு ஏற்படுத்தப் பட்டது. இது ஒரு தன்னார்வத்தொண்டு நிறுவனம். சுவாமி விவேகானந்தர் என்பவரால் 1897–ம் ஆண்டு மே 1–ம் நாள் துவங்கப்பட்டது. இராமகிருஷ்ணரின் முக்கிய சீடர்களில் விவேகானந்தரும் ஒருவராவர். இராமகிருஷ்ணரின் போதனைகளை உலகம் முழுவதும் பரப்பினார். இராமகிருஷ்ண மடம் 1897 ஆம் ஆண்டு கொல்கத்தாவிற்கு அருகில் உள்ள பேலூரில் சுவாமி விவேகானந்தரால் நிறுவப்பட்டது. இராமகிருஷ்ண மடத்தின் கிளைகள் இந்தியாவில் மட்டுமின்றி உலகின் பல பகுதிகளிலும் நிறுவப்பட்டன. உடல்நலம், பேரழிவு நிவாரணம், கிராம முன்னேற்றம், ஆதிவாசிகள் நலன் மற்றும் துவக்கக் கல்வி மற்றும் உயர் கல்வி , கலாச்சார முன்னேற்றம் போன்றவற்றிற்காக பெரும் தொண்டாற்றி வருகிறது.

இராமகிருஷ்ண பரமஹம்சர் வங்காளத்தில் ஓர் பிராமணக் குடும்பத்தில் 1836–ம் ஆண்டு பிறந்தார். இவரது துணைவியார் பெயர் சாரதாமணிதேவி. இவர் தட்சிணேசுவர் என்னும் இடத்தில் உள்ள காளி கோயிலில் அர்ச்சகராகப் பணியாற்றினார். அனைத்துச் சமயங்களின் அடிப்படை உண்மைகளிலும் அவருக்கு ஆழ்ந்த நம்பிக்கை இருந்தது. பல வடிவங்களில் இருந்தாலும் கடவுள் ஒருவரே என்ற தீர்க்கமான கொள்கையைப் கொண்டிருந்தார். மனிதனுக்கு செய்யும் பணி கடவுளுக்குச் செய்யும் பணியாகக் கருதப்படும் என்று உறுதியாக நம்பினார். இவர் 1886 ம் ஆண்டு இறந்தார்.



இராமகிருஷ்ண பரமஹம்சர்

இராமகிருஷ்ணரின் மறைவுக்குப்பின் அவரது முக்கிய சீடரான விவேகானந்தர் என அழைக்கப்பட்ட நரேந்திரநாத் தத்தா, இராமகிருஷ்ணரின் கொள்கைகளை உலகம் முழுவதும் பரப்பினார். 1893–ம் ஆண்டு அமெரிக்காவின் சிகாகோ நகரில் நடைபெற்ற உலக சமய மாநாட்டில் கலந்துகொண்டு **'என் சகோதர, சகோதரிகளே'** என தனது முதல் உரையின் மூலம், இந்தியப் பண்பாட்டின் சிறப்பையும் இந்து சமயத்தின் மேன்மையையும் உலகறியச் செய்தார்.

இராமகிருஷ்ண இயக்கத்தின் நோக்கங்கள் மற்றும் கருத்துக்கள் அனைத்தும், சமயம் மற்றும் மனிதாபிமானம் அடிப்படையில் அமைந்தன. இவ்வியக்கம் அரசியல் நோக்கம் கொண்டது அல்ல.

விவேகானந்தர் 'துறத்தல் மற்றும் சேவை' இரண்டுமே நவீன இந்தியாவின் இரு கொள்கைகளாக இருக்கவேண்டும் எனக் கூறி, அதன் அடிப்படையிலேயே உழைத்தார். 'ஜீவாவே (உயிர்) சிவா' என்ற நம்பிக்கையின் அடிப்படையில் 'மக்கள் பணியே கடவுள் பணி' என்று கூறித் தொண்டாற்றினர். இராமகிருஷ்ண இயக்கம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது.



சுவாமி விவேகானந்தர்

* கல்விப் பணி, உடல் நல, கிராம வளர்ச்சி, ஆதிவாசிகள் முன்னேற்றம் மற்றும் இளைஞர் நலம் ஆகியவற்றிற்காகப் பாடுபட்டு வருகிறது.

* இவ்வியக்கம் மருத்துவ மனைகள், அறக்கட்டளை மருத்துவ மனைகள், மகப்பேறு மருத்துவமனைகள், ஆதரவற்றோர் இல்லங்கள், முதியோர் இல்லங்கள், செவிலியர் பயிற்சிப் பள்ளிகள் போன்றவற்றை நடத்தி மக்களுக்குத் தொண்டாற்றி வருகிறது.

* இந்தியா முழுவதும் புகழ் பெற்ற கல்வி நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள், தொழிற்கல்வி பயிற்சி மையங்களை நிறுவி, கல்வி வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு வருகிறது. இயற்கை சீற்றங்களான பஞ்சம், வெள்ளம், நிலநடுக்கம், புயல் மற்றும் கொடிய தொற்று நோய்களில் இருந்து மக்களைக் காப்பாற்றுவதற்காக பல நிவாரண முகாம்களை நடத்தி மிகச் சிறந்த முறையில் சேவையாற்றி வருகிறது.

* மேற்கு வங்காளத்தில் உள்ள சுந்தரவனப்பகுதியில் சூரிய ஒளியைப்பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டம் (Photo Voltaic (P.V.) Lighting System) தோன்றுவதற்கு முக்கியப்பங்கு வகித்தது இராமகிருஷ்ண இயக்கம் ஆகும். இதன் விளைவாக, தொன்றுதொட்டு மண்ணெண்ணெய் பயன்படுத்தி வந்த மக்களுக்கு மின்சாரத்தைப் பயன்படுத்தும் நிலையை உருவாக்கியுள்ளது. ஐக்கிய நாடுகளின் கல்வி அறிவியல் மற்றும் கலாச்சாரக் குழுவின் (U N E S C O) தலைமை இயக்குநர் பெடரிக்கோ மேயர் (Federico Mayor)1993 ஆம் ஆண்டில் சொற்பொழிவாற்றும் பொழுது '1897 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இராமகிருஷ்ண இயக்கத்தின் அமைப்பு மற்றும் செயல்பாடுகள் 1945–ல் ஏற்படுத்தப்பட்ட 'யுனஸ்கோ'வின் அமைப்பைப்போன்றே இருப்பதால்தான்' மிகவும் ஈர்க்கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

## சமரச சுத்த சன்மார்க்க சங்கம்

சமரச சுத்த சன்மார்க்கச் சங்கம், வள்ளலார் என அனைவராலும் அன்புடன் அழைக்கப்படும் இராமலிங்க அடிகளார் அவர்களால் நிறுவப்பட்டது. இவர் சிதம்பரத்திற்கு அருகில் உள்ள சின்ன மருதூர் என்னும் கிராமத்தில் 1823 ம் ஆண்டு பிறந்தார். 19 ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் தோன்றிய சமூக–சமய சீர்திருத்த இயக்கத்தில் முக்கிய பங்கு வகித்தார். இவர் ஆன்மீகத்தில் கொண்ட பற்று காரணமாக அவரது பாடல்களில் சமுதாய சீர்திருத்தங்கள் மற்றும் சமய உணர்வுகள் இரண்டறக் கலந்திருந்தன. ஆன்மீக விழிப்புணர்வு வாயிலாக சமூகத்தில் நிலவும் தீமைகளைக் களையமுடியும் என்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டார்.

இராமலிங்க அடிகள், தமிழ் மக்களிடையே சமய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டை ஏற்படுத்தினார். கடவுள் வழிகாட்டுதலால் மட்டுமே சாதி வேறுபாடற்ற சமுதாயத்தை உருவாக்க முடியும் என்று எடுத்துரைத்ததோடு, 'இறைவன் ஜோதி வடிவானவன்' என்றும் 'அருட்பெரும் ஜோதியாக' இருக்கிறார் என்றும் குறிப்பிட்டார். அடிகளார் பிறப்பினால் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளை எதிர்த்தார். சாதி–சமூக வேறுபாடுகள் அர்த்தமற்றவை என்று குறிப்பிட்டதோடு, அன்பு மற்றும் சகோதரத்துவம் நிலவ வேண்டும் என்றும் பாடுபட்டார்.



இராமலிங்க அடிகள்

பசி மற்றும் வறுமையே சமுதாயத்தின் அனைத்துத் தீமைகளுக்கும் காரணம் என வள்ளலார் நம்பினார். ஏழைக்கு உணவு அளிப்பதே சிறந்த வழிபாடு என உறுதியாக நம்பினார். எனவே ஏழைகளின் பசியைப் போக்குவதற்காகவே 'சத்திய தருமசாலையை' வடலூரில் நிறுவினார். சத்திய தருமசாலையின் தொடக்க நாளன்று அடுப்பிற்கு தீமூட்டி, இந்தத் தீ எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கட்டும். அப்பொழுதுதான் ஏழைகளுக்கு எப்பொழுதும் உணவு அளிக்க முடியும் என உறுதியுடன் கூறினார். இவர் மேற்கொண்ட உறுதி மொழிக்கு ஏற்றவண்ணம் ஆண்டு முழுவதும் சாதி–சமய வேறுபாடின்றி அனைவருக்கும் இன்றும் உணவளித்து வருகிறது.

வள்ளலார் அன்பு வழியில் ஆன்மீகத்தை அடையலாம் என்ற உறுதியான எண்ணம் கொண்டிருந்தார். ஆகவே, மனிதர்களிடத்து மட்டுமன்றி தாவரங்கள், புழு, பூச்சிகள் மற்றும் விலங்குகள், பறவைகள் போன்ற அனைத்து உயிர்களிடத்தும் அன்பு செலுத்தினார். இதனையே 'ஜீவ காருண்யம்' (உயிர்களிடத்து அன்பு செலுத்துதல்) என்று அழைக்கிறோம். 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' எனக் கூறிய அடிகளார், தான் உயிர்களிடத்து எவ்வாறு அன்பு கொண்டிருந்தார் என்பதை அறிகிறோம். மூடப்பழக்க வழக்கங்களையும், சமய சடங்குகளையும் எதிர்த்த வள்ளலார் உணவுக்காக விலங்குகள் கொல்லப்படுவதை வன்மையாகக் கண்டித்தார். சைவ உணவிற்கு முக்கியத்துவம் கொடுத்தார்.

'மனித இனத்திற்கு செய்யும் தொண்டே மோட்சத்தை அடைவதற்கான வழி' என்பது வள்ளலாரின் போதனைகளில் மிக முக்கியமானதாகும். கடவுள், கருணை மற்றும் அறிவு வடிவமாகத் திகழ்கின்றார். ஆகவே கடவுளை அடையும் வழி உயிர்களிடத்து காட்டும் கருணையும், இரக்கமும் ஆகும் என்று குறிப்பிட்டார்.

தியானம் செய்வதே சிறந்த வழிபாடு எனக் கருதிய வள்ளலார், 1870 ஆம் ஆண்டு சத்திய ஞான சபையை நிறுவினார். இங்கு வழிபாட்டுக் கூட்டங்கள் மத வேறுபாடின்றி நடைபெறுவதை உறுதிப்படுத்தினார். இவரது பக்திப் பாடல்கள் தொகுக்கப்பட்டு , அத்தொகுப்பு திருவருட்பா என்றழைக்கப்படுகிறது..

### அலிகார் இயக்கம்

அலிகார் இயக்கம், சர் சையது அகமதுகான் என்ற ஆங்கில அரசாங்கத்தில் பணியாற்றிய நீதித்துறை அலுவலரால் தோற்றுவிக்கப்பட்டது. இது நவீனக் கல்வியையும், சமூகச் சீர்திருத்தங்களையும் முஸ்லீம்களிடையே பரப்ப அமைக்கப்பட்ட முதல் மற்றும் மிக

முக்கியமான இயக்கம் ஆகும்.

1864 ஆம் ஆண்டு காசிப்பூர் என்னும் இடத்தில் சையது அகமதுகான் ஓர் பள்ளியை நிறுவினார். பின்னர் இது அறிவியல் கழகம் (Scientific Society) என்று அழைக்கப்பட்டது. அக்கழகம் பல்வேறு அறிவியல் நூல்களை உருது மொழியில் மொழி பெயர்த்து வெளியிட்டது. 1875 ம் ஆண்டு அலிகாரில் இவரால் தோற்றுவிக்கப்பட்ட முகமதியன் ஆங்கிலோ ஓரியண்டல் (MAO) கல்லூரி இவரது சிறந்த சாதனையாகத் திகழ்கின்றது. இக்கல்லூரி நாளடைவில் இந்திய முஸ்லீம்களின் மிக முக்கியமான கல்வி நிறுவனமாக மாறியது.

இக்கல்லூரியே பிற்காலத்தில் அலிகார் முஸ்லீம் பல்கலைக்கழகமாக வளர்ச்சி அடைந்தது. சர் சையது அகமதுகான் தொடங்கிய சீர்திருத்த இயக்கம், அலிகார் இயக்கம் என அழைக்கப்பட்டது. தன்னுடைய எழுத்தாற்றலால் முஸ்லீம் சமுதாயத்தில் சீர்திருத்தத்தைக் கொண்டுவந்தார். பெண்கள் முகத்திரை (பர்தா) அணிவதை நீக்கவும், பெண் கல்வி வளரவும் பாடுபட்டார். முஸ்லீம்களிடையே தன்னுடைய சீர்திருத்தக் கொள்கைகளைப் பரப்புவதற்காக தாசில்–உத்–அஃலக் என்னும் தினசரி பத்திரிக்கையை நடத்தினார். இந்துக்களும், முஸ்லீம்களும் இந்தியா என்கின்ற அழகிய பறவையின் இரு கண்கள் என்று கூறினார். முஸ்லீம்களின் சமூக முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட தன்னலமற்ற தலைவர் சர் சையது அகமதுகான் ஆவார்.

## பிற சீர்திருத்தவாதிகள்


### ஜோதிபாபூலே

இந்தியாவில் 19ம் நூற்றாண்டில் தோன்றிய சிறந்த சமூக சீர்திருத்தவாதிகளில் ஜோதிபாபூலே ஒருவராவர். சாதிக் கட்டுப்பாடுகளுக்கு எதிராகப் போரிட ஓர் இயக்கத்தை தோற்றுவித்தார். பிராமண மேலாதிக்கத்தை உறுதியாக எதிர்த்தார். விவசாயிகள் மற்றும் தாழ்த்தப்பட்டோர் உரிமைகளுக்காகவும் போராடினார். ஆதரவற்ற குழந்தைகளுக்காக ஆதரவற்றோர் இல்லத்தை நிறுவிய முதல் இந்து இவர்தான் என உறுதியாகக் கூறலாம்.

1873ஆம் ஆண்டு 'சத்திய சோதக் சமாஜ்' (உண்மை தேடுவோர் சங்கம்) என்ற அமைப்பை ஏற்படுத்தினார். இதன் நோக்கம் பிராமணர்கள் பிடியில் இருந்து தாழ்த்தப்பட்டோரை விடுதலைபெறச் செய்வதாகும். தாழ்த்தப்பட்டோரின் நிலமையை மேம்படுத்த தன்வீட்டின் அருகிலேயே குளம் அமைத்து தாழ்த்தப்பட்டோர் நீர் எடுத்து பயன்படுத்துமாறு செய்தார். அனைவரோடும் ஒன்றாக அமர்ந்து, சாதியை மறந்து உணவு உண்ணுதலை (சமபந்தி) விரும்பினார்.

### ஸ்ரீ நாராயண குரு

கேரளத்திலிருந்து தோன்றிய புகழ் பெற்ற சமூக சீர்திருத்தவாதி ஸ்ரீ நாராயண குரு ஆவார்.



ஸ்ரீ நாராயண குரு

தான் சார்ந்த ஈழவ மக்களின் சமூக, பொருளாதார மற்றும் கல்வி முன்னேற்றத்திற்காகவும், பிற ஒடுக்கப்பட்ட கேரள மக்கள்

முன்னேற்றத்திற்காகவும் 1903ஆம் ஆண்டு ஸ்ரீ நாராயண குரு தர்ம பரிபாலன யோகம் என்ற இயக்கத்தைத் தொடங்கினார். இவர் விலங்குகளை பலிகொடுத்தல், சாதி வேறுபாடு, தீண்டாமை போன்ற சமூகக் கொடுமைகளைக் கண்டித்தார்.

### ஸ்ரீ பாத சாது மகாராஜா

சாது மகாராஜா மூங்கிர் மாவட்டத்தில் உள்ள செல்வச் செழிப்பான குடும்பத்தில் பிறந்தார். இவர் வைணவராக மாறினார். இவருக்கு முன் இவரது குடும்பத்தினர் அனைவரும் சைவ சமயத்தை சார்ந்து சிவனை வழிபட்டனர். இவர் சைத்தனியரைக் கௌரவிக்கும் வகையில் பிரேம மந்திர் என்னும் கோயிலைக் கட்டினார். மனித சேவை செய்வதற்காகவே பல தொண்டு இல்லங்களை (ஆசிரமங்கள்) நிறுவினார்.

### டாக்டர் B.R.அம்பேத்கார்

டாக்டர் B.R.அம்பேத்கார் அவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் தலித் மக்களின் கடவுளாகக் கருதப்படுகின்றார். இவர் இந்திய அரசியல் சட்டம் படைப்புக் குழுவின் தலைவராக விளங்கினார்.



டாக்டர் B.R.அம்பேத்கார்

இந்தியாவின் முதல் சட்ட அமைச்சராகப் பணியாற்றினார். இவரது சீரிய தொண்டினைப் பாராட்டி இவருக்கு 1990 ம் ஆண்டு இந்தியாவின் மிகப்பெரிய விருதான 'பாரத ரத்னா' விருது வழங்கப்பட்டது. அம்பேத்கார் 1891 ஆம் ஆண்டு ஏப்ரல் 14–ம் நாள் மகவு ( Mhow ) என்னும் ஊரில் பிறந்தார். 1924 ஆம் ஆண்டு ஜூலை மாதம் சாதியிலிருந்து விலக்கப்பட்டோர் நலச் சங்கம் (பாசிகிருத் கித்காரணி சபா) (Outcastes Welfare Association) என்று அமைப்பை ஏற்படுத்தினார். தாழ்த்தப்பட்ட மக்களை மற்றவர்களுக்கு இணையாக சமுதாயத்திலும் அரசியலிலும் உயர்த்துவதே இச்சங்கத்தின் நோக்கம் ஆகும்.

தீண்டத்தகாத மக்களுக்கு மனுஸ்மிருத்தி என்ற பொதுக் குளத்தில் குடிநீர் எடுக்கும் உரிமையைப் பெறுவதற்காக, 1927ஆம் ஆண்டு மும்பையில் மகத் மார்ச் என்ற பேரணியை தலைமை ஏற்று நடத்தினார்.

### தந்தைப் பெரியார்

தென்னிந்தியாவில் தோன்றிய மாபெரும் சீர்திருத்தவாதிகளில் பெரியார் ஈ.வே.ராமசாமியும் ஒருவர் ஆவார். ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காகவே, தன் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டார். 19ம் நூற்றாண்டில் பெரியார் அறிவித்த சமூக சீர்திருத்தங்கள் 20–ம் நூற்றாண்டின் சமூக சீர்திருத்தங்களுக்கு அடிகோலிற்று.

### சமூக–சமய சீர்திருத்த இயக்கங்களின் விளைவுகள்

சமூக–சமய சீர்திருத்த இயக்கங்கள், சமூகத்திலும், சமயத்திலும் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தின.

சமூகத்தில் பரவியிருந்த கொடுமைகளான உடன்கட்டை ஏறுதல், குழந்தைத் திருமணங்கள், தீண்டாமை போன்றவை ஒழிய பெரும் உதவியாக அமைந்தன.

பெண்கல்வி, விதவைகள் மறுமணம், கலப்புத் திருமணங்கள், சமபந்தி உணவு முறை ஆகியவை பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. மக்களிடையே சமுதாய எழுச்சி, தேசிய உணர்வு பெருகிட வழிவகுத்தன.

மக்கள் தங்களின் கலாச்சாரம் மற்றும் அதன் பெருமைகளை அறிந்து கொள்ளச் செய்தன. அனைத்திற்கும் மேலாக இவ்வியக்கங்கள் அறிவியல் மற்றும் நேர்மையான வழியில் மக்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காணவும் செய்தனர்.

## பயிற்சி

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

1. சீர்திருத்த இயக்கங்களின் முன்னோடியாகத் திகழ்ந்தவர்

   அ) இராஜாராம் மோகன் ராய் ஆ) தயானந்த சரஸ்வதி

   இ) கேசப் சந்திர சென் ஈ) தேவேந்திர நாத் தாகூர்

2. 1829–ஆம் ஆண்டு வில்லியம் பெண்டிங் பிரபு சதி என்னும் உடன்கட்டை ஏறும் பழக்கத்தை ஒழிக்க உறுதுணையாக இருந்தவர்.

   அ) திருமதி. அன்னிபெசன்ட் ஆ) சுவாமி விவேகானந்தர்

   இ) இராஜாராம் மோகன் ராய் ஈ) லாலா ஹன்ஸ்ராஜ்

3. சுவாமி தயானந்த சரஸ்வதியால் நிறுவப்பட்டது

   அ) பிரம்ம சமாஜம் ஆ) ஆரிய சமாஜம்

   இ) பிரார்த்தன சமாஜம் ஈ) அலிகார் இயக்கம்

4. இராமகிருஷ்ண மடத்தின் தலைமையகம் அமைந்துள்ள இடம்

   அ) காஞ்சிபுரம் ஆ) பேலூர் இ) மேலூர் ஈ) ஹம்பி

5. வள்ளலார் பக்திப் பாடல்கள் அடங்கிய தொகுதி

   அ) தேவாரம் ஆ) திருவாசகம்

   இ) எட்டுத்தொகை ஈ) திருவருட்பா

6. சர்.சையது அகமதுகான் தொடங்கியது

   அ) அலிகார் இயக்கம் ஆ) பிரம்ம ஞான சபை

   இ) சமரச சுத்த சன்மார்க்க சங்கம் ஈ) முஸ்லீம் லீக்

7. சர் சையது அகமதுகான் பள்ளியை நிறுவியது

   அ) அலிப்பூர் ஆ) ஆலப்புழை

   இ) காசிப்பூர் ஈ) கான்பூர்

8. கேரளாவைச் சேர்ந்த சிறந்த சமூக சீர்திருத்த வாதி

   அ) ஸ்ரீ நாராயண குரு ஆ) குரு பிரசாத்

   இ) குரு நானக் ஈ) குரு சாயி

## ஆ. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. | நவீன இந்தியாவின் விடிவெள்ளி | சுவாமி தயானந்த சரஸ்வதி |
| 2. | இந்து சமயத்தின் மார்டின்லூதர் | இராமகிருஷ்ண மடம் |
| 3. | நியூ இந்தியா | அன்னி பெசன்ட் |
| 4. | சூரிய ஒளியின் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டம் | இராமலிங்க அடிகள் |
| 5. | வள்ளலார் | டாக்டர். தருமாம்பாள் |
| | | இராஜாராம் மோகன் ராய் |

## இ. சுருக்கமான விடையளி.

1. பிரார்த்தனை சமாஜம் குறிப்பு வரைக.
2. ஆரிய சமாஜத்தின் பணிகள் யாவை ?
3. பிரம்மஞான சபையின் கொள்கைகள் யாவை ?
4. வள்ளலாரின் போதனைகள் யாவை ?
5. தாழ்த்தப்பட்டோர் (சாதியிலிருந்து விலக்கப்பட்ட) நலச் சங்கத்தின் குறிக்கோள் என்ன ?
6. 19 ஆம் நூற்றாண்டின் சமூக மற்றும் சமய சீர்திருத்த இயக்கங்களின் விளைவுகளை குறிப்பிடுக.

## ஈ. பின்வரும் தலைப்புகளின் கீழ் உள்ள வினாக்களுக்கு விடையளி.

1. பிரம்ம சமாஜம்

அ) பிரம்ம சமாஜத்தினை நிறுவியவர் யார் ?

ஆ) இராஜா ராம் மோகன் ராய் பயின்ற மொழிகள் யாவை ?

இ) இராஜாராம் மோகன் ராய் எழுதிய புத்தகங்கள் யாவை ?

ஈ) பிரம்ம சமாஜத்தின் நம்பிக்கை யாது ?

2. ஆரிய சமாஜம்

அ) சுவாமி தயானந்த சரஸ்வதியின் இயற்பெயர் என்ன ?

ஆ) சுவாமி தயானந்த சரஸ்வதியின் குரு யார் ?

இ) சுவாமி தாயனந்த சரஸ்வதியின் கொள்கை என்ன ?

ஈ) ஆரிய சமாஜம் எதனை ஆதரித்தது ?

3. பிரம்மஞான சபை

அ) பிரம்மஞான சபையை நிறுவியவர் யார் ?

ஆ) பிரம்மஞான சபை நிறுவப்பட்டது ஏன் ?

இ) 1893 ஆம் ஆண்டு பிரம்மஞான சபையின் தலைவர் யார் ?

ஈ) பிரம்ம ஞான சபையின் தலைமையகம் எங்குள்ளது ?

4. இராமகிருஷ்ண மடம்.

அ) இராமகிருஷ்ண பரமஹம்சர் என்பவர் யார் ?

ஆ) இராமகிருஷ்ண மடத்தினை நிறுவியது யார் ?

இ) உலக சமய மாநாடு எங்கு, எப்பொழுது நடைபெற்றது ?

ஈ) உலக சமய மாநாட்டில் இந்து சமயத்தின் பிரதிநிதியாக கலந்து கொண்டவர் யார் ?

5. அலிகார் இயக்கம்

அ) முஸ்லீம்களின் முதல் சமய இயக்கத்தின் பெயர் என்ன ?

ஆ) சர் சையது அகமது கான் உறுதியாக நம்பியது என்ன ?

இ) சர் சையது அகமது கானின் சாதனை யாது ?

ஈ) சர் சையது அகமது கான் வெளியிட்ட செய்தி தாளின் பெயர் என்ன ?

6. டாக்டர்.பி.ஆர். அம்பேத்கார்

அ) தலித்துக்கள் மற்றும் தாழ்த்தப்பட்டோர்களின் மீட்பாளர் யார் ?

ஆ) இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர் யார் ?

இ) இந்திய அரசாங்கத்தால் இவர் எவ்வாறு சிறப்பிக்கப்பட்டார் ?

ஈ) மும்பையில் மகத் மார்ச் என்ற பேரணியை தலைமை எற்று நடத்திது ஏன் ?

## உ. பத்திகளில் விடையளி.

1. பிரம்ம சமாஜத்தை பற்றி விரிவாக எழுதுக.
2. இராமகிருஷ்ண மடத்தின் செயல்பாடுகளை விவரி.
3. சமூக மற்றும் சமய சீர்திருத்த இயக்கங்களில் இராமலிங்க அடிகளார் முக்கிய பங்காற்றினார். விவரி.

# 11. இந்திய விடுதலை இயக்கம் – முதல் நிலை
# காந்திக்கு முந்தைய சகாப்தம் கி.பி.1885 – கி.பி.1919

1857 ஆம் ஆண்டு தோன்றிய பெரும்புரட்சியின் மூலம் உருவானது இந்திய தேசிய இயக்கம். இது மாபெரும் போராட்டமாக மாறி, இறுதியில் 1947 ஆம் ஆண்டு இந்தியாவிற்கு விடுதலை பெற்றுத் தந்தது. இந்திய தேசிய இயக்கம் வளர்வதற்கு பல்வேறு சூழ்நிலைகள் அடிப்படையாகத் திகழ்ந்தன.

## அ. தேசிய இயக்கம் தோன்றுவதற்கான காரணங்கள்

### ஆங்கில ஏகாதிபத்தியம்

இந்திய தேசியம் ஏற்பட ஆங்கில ஏகாதிபத்தியம் ஒரு முக்கியமான காரணமாகும். ஆங்கிலேயர்கள் இந்தியா முழுவதையும் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவந்ததின் மூலம் ஒற்றுமையை நிலைநாட்டினர். இதனால் இந்தியா ஒரே நாடு என்ற எண்ணத்தை மக்களிடையே உருவாக்கினர். இது தேசிய இயக்கம் மலர வழிசெய்தது.

### ஐரோப்பிய நாடுகளுடன் தொடர்பு

ஆங்கில ஏகாதிபத்தியத்தின் விளைவாக இந்தியா மேலை நாடுகளுடன் தொடர்பு கொண்டது. படித்த இந்தியர்களின் மொழியாக ஆங்கிலம் அமைந்தது. அதனால், அவர்கள் மேலை நாட்டினரின் கருத்துக்கள் மற்றும் கலாச்சாரங்களை உணரத் தொடங்கினர். மேலும், இந்தியர்கள் ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகள் ஐக்கியமடைந்ததைக் கண்டு ஊக்கம் அடைந்தனர். எனவே தாங்களும் விடுதலைபெறவேண்டும் எனக்கருதி போராட எண்ணினர்.

### நவீன தகவல் தொடர்பு மற்றும் போக்குவரத்து

நவீன தகவல் தொடர்பு மற்றும் போக்குவரத்து வளர்ச்சியினால் மக்களின் கருத்துக்கள் நாட்டின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் சென்றடையத் தொடங்கின. தேசத்தலைவர்களின் சந்திப்பு மற்றும் மக்களுடனான நெருக்கமான தொடர்பு இந்தியா முழுவதும் பரவி, தேசிய இயக்கம் தோன்ற வழி வகுத்தது.

### இந்தியத் தலைவர்கள்

இந்தியாவில் தோன்றிய தலைவர்கள் அறிஞர்கள், கவிஞர்கள் மற்றும் சமூக–சமய சீர்திருத்தவாதிகள் இந்தியாவின் பெருமைகளை மக்களிடையே எடுத்துரைத்து நாட்டுப்பற்றைத் தூண்டினார். இராஜாராம் மோகன்ராய், ஈஸ்வர சந்திர வித்யாசாகர், சுவாமி தயானந்த சரஸ்வதி, இராமகிருஷ்ண பரமஹம்சர் மற்றும் சுவாமி விவேகானந்தர் ஆகியோர் இந்தியர்களிடையே தன்னம்பிக்கை மற்றும் புத்துணர்வை ஏற்படுத்தினர். இந்தியா மற்றும் இந்தியரின் புகழினைப் புத்துயிர் பெறச் செய்தனர். இவை இந்தியாவில் தேசிய இயக்கம் தோன்றுவதற்கு அடித்தளமாக அமைந்தன.

### அச்சகமும் செய்தித்தாள்களும்

தேசியம் தோன்றவும், வளரவும் அச்சகமும், இந்தியப் பத்திரிக்கைகளும் மிக முக்கியச் சக்திகளாக செயல்பட்டன. பல்வேறு வட்டார மொழிகளில் ஏராளமாக செய்தித்தாள்கள் வெளியிடப்பட்டன. அவைகளில் பெரும்பாலானவை ஆங்கிலேயருக்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டன. இந்தியன் மிரர் என்ற பத்திரிக்கையும், பம்பாய் (மும்பை) சமாட்சர், அமிர்த பஜார் பத்திரிகா, இந்து, கேசரி, மராத்தா போன்ற பத்திரிக்கைகள் பொதுமக்களின் கருத்துக்களைப் பிரதிபலித்ததுடன், மக்களிடையே தேசிய விழிப்புணர்வையும் ஏற்படுத்தின. பக்கிம் சந்திர சட்டர்ஜி, இரவீந்திரநாத் தாகூர், சுப்பிரமணிய பாரதியார் மற்றும் பல தேச பக்த எழுத்தாளர்களின் எழுத்துக்கள் இந்திய மக்களிடையே தேசிய உணர்வைப் பொங்கியெழச் செய்தன. 1878–ல் கொண்டுவரப்பட்ட தாய் மொழிப்

பத்திரிக்கைத் தடைச் சட்டம் பத்திரிக்கை சுதந்திரத்தைப் பறித்தது. இது ஆங்கிலேய ஆட்சிக்கு எதிரான எதிர்ப்பை வலுப்பெறச் செய்தது.

### 1857 ஆம் ஆண்டு புரட்சி

1857 ஆம் ஆண்டு தோன்றிய மாபெரும் கலகம் அடக்கப்பட்டது. இதன் மூலம் இந்தியர்கள் ஆங்கிலேயர்களின் அட்டூழியங்களைக் கண்டு அதிர்ச்சி அடைந்திருந்தனர். இக்கலகம் ஆங்கிலேயருக்கும், இந்தியருக்கும் இடையே தீராத வெறுப்புணர்வையும், பரஸ்பர சந்தேக உணர்வையும் ஏற்படுத்தியது. முழுமையாக ஒடுக்கப்படாத இக்கலகம், தேசியவாதம் மலர்வதற்குக் காரணமாக அமைந்து முடிவில் இந்திய விடுதலைக்கு வழி வகுத்தது.

### இனப்பாகுபாடு

ஆங்கிலேயர்கள் பிரித்தாளும் கொள்கையைப் பின்பற்றினர். இதன்படி இன வேறுபாட்டுக் கொள்கையினை கடைபிடித்தனர். இதனால் ஆங்கிலேயர்கள் தங்களை உயர்வாகவும், இந்திய மக்களைத் தாழ்வாகவும், இழிவாகவும் கருதினர். அனைத்து உயர்பதவிகளும் ஆங்கிலேயருக்கே வழங்கப்பட்டன. இந்தியர்களுக்கு எந்த உயர் பதவியும் வழங்கப்படவில்லை.

இல்பர்ட் மசோதா இந்தியர்களுக்கு எந்த பலனும் அளிக்கவில்லை. இதனால் ஆங்கிலேயர்களிடமிருந்து சரியான நீதியை எதிர்பார்க்க முடியாத நிலை ஏற்பட்டது. இது தேசியம் வளர்வதற்கு வழிவகுத்தது.

## ஆ. இந்திய விடுதலை இயக்கம் முதல் நிலை காந்திக்கு முந்தைய காலம் கி.பி.1885–கி.பி.1920

இந்தியர்களுக்கு பல்வேறு உயர் பதவிகள் அளிக்கும்பொருட்டு சாசனச்சட்டம் 1833 மற்றும் 1858 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டன. ஆனால், எந்த இந்தியருக்கும் உயர்பதவி வழங்கப்படவில்லை. ஆங்கில அரசு அடக்குமுறைக் கொள்கையினையும், இனப் பாகுபாடு கொள்கையினையும் தொடர்ந்து கடைபிடித்தது. இது இந்தியர்களுக்கு மேலும் வெறுப்பைத் தந்தன. இதற்கிடையில் இந்திய மக்களிடையே தேசிய உணர்வுதோன்றி, தங்களுக்கு நிறைய அதிகாரங்கள் வழங்க வேண்டுமென்று கோரினர். 1878–ல் கொண்டுவரப்பட்ட ஆயுதச் சட்டமும் மற்றும் பிராந்திய மொழிச் சட்டங்களும் இந்தியர்களின் தேசிய உணர்வுகளை மேலும் அதிகப்படுத்தின.

### இந்திய தேசிய காங்கிரஸ் தோற்றம் 1885

ஆங்கில ஆட்சியில் நம்பிக்கை இழந்த இந்திய மக்கள் இந்திய தேசிய காங்கிரஸ் என்ற அமைப்பை ஏற்படுத்தினர். 1885ஆம் ஆண்டு ஓய்வு பெற்ற ஆங்கில அதிகாரியான ஆலன் ஆக்டேவியன் ஹியூம் என்பவரின் ஆலோசனை பேரில் இந்திய தேசிய காங்கிரஸ் தோற்றுவிக்கப்பட்டது. காங்கிரசின் முதல் கூட்டம் மும்பையில் நடைபெற்றது. அக்கூட்டத்திற்கு டபிள்யூ.சி.பானர்ஜி (W.C. Banerjee) தலைமை வகித்தார். இந்தியா முழுவதிலுமிருந்து 72 பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்துகொண்டனர். தாதாபாய் நௌரோஜி, சுரேந்திரநாத் பானர்ஜி, மதன்மோகன் மாளவியா, எம்.ஜி.ரானடே, கோபாலகிருஷ்ண கோகலே, பெரோஷாமேத்தா, ஜி. சுப்ரமணிய அய்யர் போன்ற தாராள எண்ணம் கொண்ட பல தலைவர்கள் இம்மாநாட்டில் பிரதிநிதிகளாக கலந்துகொண்டனர்.

### இந்திய தேசிய காங்கிரசின் நோக்கங்கள்

1. சட்டமன்றங்கள் விரிவுபடுத்தப்பட வேண்டும், அதிகப்படியான பிரதிநிதித்துவம் வழங்கப்படவேண்டும்.

2. கல்வியைப் பரப்ப நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

3. பத்திரிக்கைச் சுதந்திரம் வழக்கப்படவேண்டும்.

4. இந்திய நிர்வாகப்பணித் தேர்வுகளை (ICS) இந்தியாவிலேயே நடத்த வேண்டும்.

5. இராணுவச் செலவுகளைக் குறைக்க வேண்டும்.

6. வரிமுறையை எளிமையாக்க வேண்டும் மற்றும் அயல்நாட்டுப் பொருள்கள் மீதான இறக்குமதி வரியை அதிகரிக்க வேண்டும்.

7. இந்தியர்களை உயர்பதவிகளில் நியமிக்க வேண்டும்.

8. இலண்டனில் உள்ள இந்தியன் கவுன்சில் சபை கலைக்கப்படவேண்டும் போன்ற கோரிக்கைகளை கொண்டு இந்திய தேசியக் காங்கிரஸ் செயல்பட்டது.

## மிதவாதிகள்

ஆரம்பகாலத்தில் காங்கிரஸ் தலைவர்கள் படித்த, நடுத்தர வர்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். எனவே இவர்கள் மிதவாதிகள் என்றழைக்கப் பட்டனர். அவர்கள் ஆங்கிலேயரின் நேர்மையான அணுகுமுறையில் நம்பிக்கை கொண்டிருந்தனர். தங்கள் கோரிக்கைகளையும், வாதங்களையும் அமைதியான முறையில் கோரிக்கை மனுக்கள் மூலம் நிறைவேற்ற விரும்பினர்.



பாலகங்காதர திலகர்

காங்கிரசின் தலைவர்களாக சுரேந்திரநாத் பானர்ஜி, தாதாபாய் நௌரோஜி, பெரோஷா மேத்தா, கோபாலகிருஷ்ண கோகலே, எம்.ஜி.ரானடே போன்றோர் விளங்கினர். மிதவாதிகளின் கோரிக்கைகள் அரசியல் பிச்சை போல் உள்ளது எனக் காங்கிரசில் இருந்த இளைய தலைமுறையினர் வர்ணித்தனர். தொடக்க காலத்தில் ஆங்கில அரசு காங்கிரசுடன் நட்பு பாராட்டியது. ஆனால், காங்கிரஸ் அதிகபடியான சீர்திருத்தங்களைக் கோரியதால், காங்கிரசுடனான ஆங்கில அரசின் போக்கில் மாறுதல் ஏற்பட்டு காங்கிரசின் கோரிக்கைகளுக்கு அரசு எத்தகைய கவனத்தையும் செலுத்தவில்லை.

## தீவிரவாதிகள்

காங்கிரசில் ஒரு பிரிவினர் மிதவாதிகளின் அணுகுமுறையில் நம்பிக்கை இழந்தனர். அவர்களில் முக்கியமானவர்கள் பாலகங்காதர திலகர் (பால்), லாலாலஜபதிராய்(லால்), பிபின் சந்திரபால்(பால்), அரவிந்த கோஷ் ஆகியோர் ஆவர். அவர்கள் இந்திய சுதந்திரத்திற்காகப் போராடுவதில் உறுதி கொண்டிருந்தனர். அவர்கள் சுதந்திரத்திற்காக அரசின் கருணையைச் சார்ந்திருக்கவில்லை. தீவிர போக்கை கடைபிடித்தனர். சுதந்திரம் பெறுவது தங்கள் உரிமை என்று நம்பினர். அவர்களது தீவிரக் கொள்கையினால் அவர்கள் தீவிரவாதிகள் என அழைக்கப்பட்டனர்.

லோகமான்ய திலகர், மராத்தியில் கேசரி என்ற பத்திரிக்கை மூலம் பிரிட்டிஷாரின் கொள்கைகளைச் சாடினார். ‘சுயராஜ்யம் எனது பிறப்புரிமை, அதை அடைந்தே தீருவேன்’ என்று முழங்கினார். அவர் கணபதி மற்றும் சிவாஜி பண்டிகைகள் மூலம் தேசிய உணர்வைத் தூண்டினார். இவ்வாறு தீவிரவாதப் பிரிவினர், காங்கிரசின் நோக்கத்தை மாற்றுவது மட்டுமல்லாமல் அவற்றினை அடையும் முறைகளையும் மாற்ற விரும்பினர்.

### வங்கப்பிரிவினை கி.பி.1905

1905–ம் ஆண்டு கர்சன் பிரபு வங்காளப் பிரிவினையை மேற்கொண்டார். ஆட்சியின் எளிமைக்கும், நிர்வாக வசதிக்கும் வங்காளத்தை, கிழக்கு வங்காளம் மற்றும் அசாமை இணைத்து ஒரு மாகாணமாகவும், மேற்கு வங்காளம் மற்றும் பீகாரை இணைத்து மற்றொரு மாகாணமாகவும் அறிவித்தார். நிர்வாக வசதிக்காக வங்காளம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது என்ற கர்சனின் கூற்றை இந்தியர்கள் நம்பவில்லை. இச்செயல் இந்துக்களையும், முஸ்லீம்களையும் பிரிப்பதற்காக செய்யப்பட்ட சூழ்ச்சி என்று கருதினர். இதைத் தீவிரவாதிகளும், மிதவாதிகளும் பிரித்தாளும் கொள்கையின் அறிமுகம் என்று கருதினர். தீவிர வன்முறையினாலும், எதிர்ப்பினாலும் 1911–ம் ஆண்டு வங்காளம் மீண்டும் ஒன்றாக இணைக்கப்பட்டது. வங்கப்பிரிவினை பொருளாதாரப் புறக்கணிப்பு என்னும் சுதேசி இயக்கம் தோன்றுவதற்குக் காரணமாயிற்று.



கர்சன் பிரபு

சுதேசி என்பதன் பொருள் சொந்த நாடு என்பதாகும். இவ்வியக்கத்தின்படி நாட்டின் தொழில்கள் மேம்பாடு அடைவதை ஊக்குவித்து, அயல்நாட்டுப் பொருள்கள் பயன்பாட்டைப் புறக்கணிப்பதாகும். பக்கிம் சந்திர சட்டர்ஜி என்பவரால் இயற்றப்பட்ட 'வந்தேமாதரம்' என்னும் தாய்நாட்டு பற்றுமிக்க முழக்கத்தை காங்கிரசார் எழுப்பினர்.

### முஸ்லீம் லீக் தோற்றம் – 1906

1857 ஆம் ஆண்டு தோன்றிய பெரும் புரட்சியில் முஸ்லீம்கள் ஈடுபட்டனர். ஆனால் இந்திய தேசிய காங்கிரசின் நடவடிக்கைகள் முஸ்லீம்களிடையே ஒருவித பயத்தை ஏற்படுத்தியது. தங்கள் முன்னேற்றத்திற்கு தனியாக ஒரு அமைப்பு தேவை என்பதை உணர்ந்தனர். பிரித்தாளும் கொள்கையைப் பின்பற்றிய ஆங்கில அரசு, முஸ்லீம்களின் வேண்டுகோளை ஏற்றது. 1906 ஆம் ஆண்டு டாக்கா நகரைச் சேர்ந்த நவாப் சலிமுல்லாகான் என்பவரது தலைமையில் முஸ்லீம்லீக் கட்சி தோற்றுவிக்கப்பட்டது. முஸ்லீம்களின் உரிமைகளைப் பாதுகாப்பது, அவர்களுக்கு மேலும் பல சலுகைகளைப் பெறுவது, காங்கிரஸிலிருந்து அவர்களை தனியாகப் பிரிப்பது, ஆங்கிலேயருக்கு விசுவாசமாக நடந்து, தனித்தொகுதி பெறுவது ஆகியவற்றை நோக்கங்களாக கொண்டிருந்தது.

### சூரத் பிளவு 1907

காங்கிரஸில் மிதவாதிகளுக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் அதிகரித்துக் கொண்டே வந்தன. 1907ஆம் ஆண்டு நடந்த சூரத் மாநாட்டில் மிதவாதிகளுக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே காங்கிரஸ் தலைவரைத் தேர்ந்தெடுப்பதில் மோதல் ஏற்பட்டது. இதனால் காங்கிரஸ் இரண்டாகப் பிரிந்து தீவிரவாதிகள் வெளியேறினர். பாலகங்காதர திலகர் தீவிரவாதிகளின் தலைவராகவும், கோபாலகிருஷ்ண கோகலே மிதவாதிகளின் தலைவராகவும் திகழ்ந்தார்.

### மிண்டோ–மார்லிச் சீர்திருத்தங்கள் 1909

முஸ்லீம்களை திருப்திபடுத்த, 1909ஆம் ஆண்டு மிண்டோ–மார்லி சீர்திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இச்சட்டத்தின்படி முஸ்லீம்களுக்கு தனித்தொகுதிகள் வழங்கப்பட்டன.

ஆனால் இதனை காங்கிரஸ் கடுமையாக எதிர்த்தது.

### முதல் உலகப்போர் 1914 – 1918

கி.பி.1914 ஆம் ஆண்டு முதல் உலகப்போர் தோன்றியது. இப்போரில் பிரிட்டன், பிரான்ஸ், இரஷ்யா ஆகிய மூன்று நாடுகளும் ஒன்றாக சேர்ந்து செயல்பட்டன. ஆங்கிலேயரின் சார்பில் இந்தியர்கள் இப்போரில் தீவிரமாக பங்குபெற்றனர். இதன்மூலம் ஆங்கிலேயர்கள் தங்களுக்கு பொறுப்பாட்சி வழங்குவார்கள் என்ற நம்பிக்கை இந்தியர்களுக்கு ஏற்பட்டது.

### தன்னாட்சி இயக்கம் 1916

பாலகங்காதர திலகர் 1916–ம் ஆண்டு தன்னாட்சி கழகத்தை மும்பையில் நிறுவினார். அயர்லாந்தைச் சேர்ந்த அன்னிபெசன்ட் அம்மையார் சென்னையில் தன்னாட்சி கழகத்தின் கிளையினைத் தொடங்கினார். இவ்விரு கழகங்களும் சேர்ந்து இந்தியர்கள் தன்னாட்சி அல்லது சுய ஆட்சி பெறுவதற்கு பிரச்சாரம் செய்தன. அன்னிபெசன்ட் அம்மையார் தம் பேச்சாலும், எழுத்தாலும் இந்திய மக்களிடையே மிகப்பெரிய அளவில் உற்சாகத்தைத் ஏற்படுத்தினார். இதனால் அன்னிபெசன்ட் அம்மையார் நடத்திய நியூ இந்தியா பத்திரிக்கையை ஆங்கில அரசு தடை செய்தது. மோதிலால் நேரு மற்றும் சி.ஆர்.தாஸ் தன்னாட்சி இயக்கத்திற்கு தங்கள் முழு ஆதரவை தந்தனர்.

### லக்னோ ஒப்பந்தம் 1916

இந்திய தேசிய காங்கிரசின் ஆண்டு மாநாடு 1916ஆம் ஆண்டு லக்னோ நகரில் நடைபெற்றது. இம் மாநாட்டில் இரு முக்கிய வரலாற்று நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

1. மிதவாதிகளும், தீவிரவாதிகளும் ஒன்றுபட்டனர்.

2. காங்கிரசும், முஸ்லீம் லீக்கும் சுய ஆட்சி பெறுவதில் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு நல்கிட ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டனர். அந்த மாநாட்டில்தான் ஜவஹர்லால் நேரு, காந்தியை முதன்முதலாகச் சந்தித்தார்.

### ஆகஸ்ட் அறிக்கை கி.பி.1917

1917 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஆகஸ்ட் அறிக்கை இந்தியாவின் எதிர்கால அரசியல் சீர்திருத்தங்கள் பற்றியும் இந்தியாவில் படிப்படியாக தன்னாட்சி நிறுவனங்கள் ஏற்படுத்தப்படும் என்றும் உறுதியளித்தது. இதனால் தன்னாட்சி இயக்கம் படிப்படியாக முடிவுக்கு வந்தது.


### மாண்டேகு – செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள் 1919

முதல் உலகப்போரின்போது இந்தியர்கள் ஆங்கிலேயருக்கு முழு ஆதரவு கொடுத்தனர். இதனால் ஆங்கிலேயர்கள் வெற்றி பெற்றனர். இதற்கு மாறாக, 1919 ம் ஆண்டு ஆங்கிலப் பாராளுமன்றம், மாண்டேகு – செம்ஸ்போர்டு சீர்திருத்தச் சட்டத்தை இயற்றியது. இச்சட்டத்தின்படி மத்திய மற்றும் மாகாண சட்டமன்றங்கள் விரிவுபடுத்தப்பட்டன. மாகாணங்களில் இரட்டை ஆட்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும் இச்சட்டத்தின்படி ஆங்கிலோ – இந்தியர்கள், சீக்கியர்கள் மற்றும் கிறித்துவர்கள் ஆகியோர்களுக்கு தனித்தனி தொகுதிகள் வழங்கப்பட்டன. எனினும் இந்திய தேசிய காங்கிரஸ் இச்சட்டத்தை நிராகரித்தது. இச்சட்டத்தை வெளியிட்டது ஆங்கிலேயரின் பெருந்தன்மையற்ற செயல் எனவும் அதனை ஏற்றுக்கொள்வது இந்தியருக்கு மதிப்புடையதாகாது எனவும் அன்னிபெசன்ட் விவரித்தார்.

### ரௌலட் சட்டம் 1919

ஆங்கில அரசு இந்திய சுதந்திரப் போராட்டத்தை தீவிரமாக எதிர்கொள்ள 1919 ஆம் ஆண்டு ரௌலட் சட்டத்தை கொண்டுவந்தது. இச்சட்டத்தின்படி, உத்தரவின்றி எவரையும் கைது செய்யவும் விசாரணையின்றி சிறையில் அடைக்கவும் ஆங்கில அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. இந்திய மக்கள்

# தேசிய இயக்கம் நடைபெற்ற மையங்கள்



காந்தியடிகளின் தலைமையில் ரௌலட் சட்டத்தை கடுமையாக எதிர்த்தனர். இதன் விளைவாக 1919 ஏப்ரல் 6–ம் நாள் நாடு முழுவதும் கடையடைப்பு மற்றும் மறியல் போராட்டங்கள் (Hartals) மேற்கொள்ளப்பட்டன.

### ஜாலியன் வாலாபாக் படுகொலை 1919

1919 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 ம் நாள் பஞ்சாபின் முக்கியத் தலைவர்களான டாக்டர் சத்தியபால் மற்றும் டாக்டர் சாய்ப்புதீன் கிச்லு ஆகியோர் கைது செய்யப்பட்டனர். இதனை எதிர்த்து சுமார் பத்தாயிரம் மக்கள் அமிர்தசரஸில் உள்ள ஜாலியன் வாலாபாக் பூங்காவில் அமைதியாகக் கூடியிருந்தனர்.



ஜாலியன் வாலாபாக் – அமிர்தசரஸ்

அப்பூங்கா நாற்புறமும் உயர்ந்த சுவர்களால் சூழப்பட்டு ஒரு சிறிய நுழைவுவாயில் மட்டுமே கொண்டதாக இருந்தது. இராணுவத் தளபதியான ஜெனரல் டயர் தம் படை வீரர்களுடன் அங்குச் சென்று வாயிலை அடைத்தபடி, எவ்வித முன்னறிவிப்பின்றி அப்பாவி மக்கள் மீது துப்பாக்கி சூடு நடத்த உத்தரவிட்டார். அக்கூட்டத்தில் பல பெண்களும், குழந்தைகளும் கூடியிருந்தனர். இச்சம்பவத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். ஆயிரக் கணக்கானோர் படுகாயமுற்றனர். இக்கொடூர படுகொலை, இந்தியர்களை கடுந்துயரத்தில் ஆழ்த்தியது. இப்படுகொலைக்கு எதிர்ப்பு தெரிவித்து இரவீந்திரநாத் தாகூர் தனது நைட்வுட்(Knight Hood)பட்டத்தை துறந்தார்.

### கிலாபத் இயக்கம் 1920

இந்திய முஸ்லீம்கள் ஆங்கிலேயர்களுக்கு எதிராக பல குறைபாடுகளை கொண்டிருந்தனர். முதல் உலகப்போரில் ஜெர்மனியும் அதன் நட்பு நாடான துருக்கியும் தோல்வியடைந்தன. துருக்கி பேரரசு துண்டாக்கப்பட்டு பிரிட்டனும், பிரான்சும் தங்களுக்குள் பங்குபோட்டுக்கொண்டன. உலக முஸ்லீம் மக்களின் சமயத் தலைவரான காலிப் அவமதிக்கப்பட்டார். இதனை முஸ்லீம்கள் பெருத்த அவமானமாகக் கருதினர். எனவே ஆங்கில அரசுக்கு எதிராக இந்தியாவில் முகமது அலி, சவுகத் அலி என்ற அலி சகோதரர்கள் கிலாபத் இயக்கத்தைத் தொடங்கினார்கள். முஸ்லீம் லீக் கட்சியும், காங்கிரஸ் கட்சியும் நெருங்கி வர நல்ல சந்தர்ப்பம் என எண்ணி காந்தி முழு மனதுடன் இவ்வியக்கத்தை ஆதரித்தார்.

## பயிற்சி

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. பிரிட்டிஷார் ஒன்றுபட்ட நாட்டை உருவாக்கியது.

   அ) ஏகாதிபத்தியம் ஆ) அரசியல் இ) படையெடுப்பு ஈ) பேச்சு வார்த்தை

2. படித்த இந்தியர்களின் மொழியாக அமைந்தது

   அ) பிரெஞ்சு ஆ) ஆங்கிலம் இ) இந்தி ஈ) வங்காளம்

3. சமய மற்றும் சமூக சீர்திருத்தவாதிகளால் உருவானது.

அ) தேசியம் ஆ) புரட்சி இ) கலகம் ஈ) கிளர்ச்சி

4. மிதவாதிகளின் கோரிக்கைகளை தீவிரவாதிகள் வர்ணித்தது.

அ) அரசியல் பிச்சை ஆ) இரண்டாம் பட்சமானது

இ) கட்டளைகள் ஈ) திறந்த வெளிக்கொள்கை

5. காங்கிரசில் பிளவை ஏற்படுத்திய மாநாடு

அ) சூரத் ஆ) லாகூர் இ) திரிபுரா ஈ) மதராஸ்

6. மிண்டோ–மார்லி சீர்திருத்தச் சட்டம் தனித் தொகுதிகளை அறிமுகப்படுத்தியது

அ) இந்துக்கள் ஆ) முஸ்லீம்கள் இ) சீக்கியர்கள் ஈ) கிறித்துவர்கள்

7. பம்பாயில் தன்னாட்சி கழகத்தை தோற்றுவித்தவர்.

அ) நேரு ஆ) திருமதி.அன்னிபெசன்ட் இ) திலகர் ஈ) பாரதியார்

## அ. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. | ஈஸ்வர சந்திர வித்யா சாகர் | நாட்டுபற்றுமிக்க எழுத்தாளர் |
| 2. | சுப்பரமணிய பாரதி | ஒருவருடைய சொந்த நாடு |
| 3. | சுதேசி | பாலகங்காதர திலகர் |
| 4. | நியூ இந்தியா | சமய மற்றும் சமூக சீர்திருத்தவாதி |
| 5. | கேசரி | அன்னிபெசன்ட் |
| | | பிபின் சந்திர பால் |

## இ. சுருக்கமாக விடையளி.

1. இந்திய பத்திரிக்கை மற்றும் இலக்கியம் இந்திய தேசிய இயக்கம் உருவாக எவ்வாறு வழி வகுத்தது.
2. இந்திய தேசிய காங்கிரஸின் குறிக்கோள்கள் யாவை ?
3. சில முக்கிய மிதவாதிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
4. முஸ்லீம் லீக் தோற்றம் பற்றி சிறு குறிப்பு வரைக.
5. 1916– ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸின் லக்னோ மாநாட்டின் முக்கியத்துவத்தை கூறு.

## ஈ. கீழ்க்கண்ட தலைப்புகளிலுள்ள வினாக்களுக்கு விடையளி.

1. தேசிய இயக்கம் தோன்றுவதற்கான காரணங்கள்.

அ) தேசியத் தலைவர்கள் எவ்வாறு மக்களை கவர்ந்தனர்

ஆ) வட்டார மொழிப் பத்திரிக்கை சட்டம் எப்பொழுது கொண்டுவரப்பட்டது ?

இ) ஆங்கிலேயர்கள் பின்பற்றிய கொள்கை யாது ?

ஈ) ஆங்கிலேயர்கள் இந்தியரை எவ்வாறு கருதினர் ?

2. இந்திய தேசியக் காங்கிரஸ்

அ) இந்திய தேசிய காங்கிரஸ் எப்பொழுது தோற்றுவிக்கப்பட்டது ?

ஆ) இந்திய தேசிய காங்கிரஸ் யாருடைய ஆலோசனையால் தோற்றுவிக்கப்பட்டது ?

இ) காங்கிரசின் முதல் மாநாடு எங்கு நடைபெற்றது ? இதற்கு தலைமை தாங்கியவர் யார் ?

ஈ) காங்கிரசின் முதல் மாநாட்டில் கலந்து கொண்ட தலைவர்கள் சிலரைக் குறிப்பிடு.

3. தீவிரவாதிகள்

அ) சில தீவிரவாத தலைவர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

ஆ) திலகரின் அறிவிப்பு என்ன ?

இ) திலகர் புதுப்பித்த பண்டிகைகளை குறிப்பிடுக.

ஈ) தீவிரவாத தேசியவாதிகளின் விருப்பம் யாது ?

4. ஜாலியன் வாலாபாக் படுகொலை

அ) கைது செய்யப்பட்ட முக்கியமான தலைவர்கள் யார் ?

ஆ) மக்கள் எங்கு கூடினர் ?

இ) அமிர்தசரஸின் ஆங்கில இராணுவ தளபதி யார் ?


ஈ) இரவீந்திரநாத் தாகூர் செய்தது என்ன ?

## உ. விரிவான விடையளி.

1. தேசிய இயக்கம் தோன்றுவதற்கான ஐந்து காரணங்களைக் கூறுக.
2. வங்காளப் பிரிவினை பற்றி விவரி.

# 12. இந்திய விடுதலை இயக்கம் – இரண்டாம் நிலை காந்திய சகாப்தம் கி.பி. 1920–கி.பி1947

பாலகங்காதர திலகர் 1920–ம் ஆண்டு மறைந்ததைத் தொடர்ந்து காந்தியடிகள் காங்கிரசின் தலைவரானார். காந்தியடிகள் தலைமையில் இந்திய தேசிய இயக்கம் நுழைந்தது. இது இந்திய மக்களிடையே புதிய ஆரம்பத்தையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்தியது. இந்திய அரசியலில் காந்தியடிகளின் வருகையால் மக்கள் புத்துணர்வும், பெருமையும் அடைந்தனர். தேசத்தந்தை என்று அழைக்கப்பட்ட காந்தியடிகள் விடுதலைப் போராட்டத்தில் சத்தியாகிரகம் என்ற புதிய யுக்தியைக் கையாண்டார். இது உண்மை மற்றும் அகிம்சையை அடிப்படையாகக் கொண்டது.



மகாத்மா காந்தி

## ஒத்துழையாமை இயக்கம் கி.பி1920–கி.பி.1922

ரௌலட் சட்டத்தை எதிர்த்தும், ஜாலியன் வாலாபாக் படுகொலையைக் கண்டித்தும், மாண்டேகு–செம்ஸ் போர்டு சீர்திருத்தச் சட்டத்தின் பயனின்மையை ஆங்கிலேயருக்கு உணர்த்தவும் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் ஒத்துழையாமை இயக்கத்தை மேற்கொள்வது என காந்தியடிகள் அறிவித்தார். இதன்படி காங்கிரஸ் கட்சி 1920 ஆம் ஆண்டு ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கியது. இவ்வியக்கம் மூன்று நிலைகளில் கடைபிடிக்கப்பட்டது. முதற்கட்டமாக ஆங்கில அரசிடமிருந்து பெற்ற பதவிகளையும், பட்டங்களையும், விருதுகளையும் துறந்தனர். இரண்டாவது கட்டமாக வேலைநிறுத்தம் உட்பட பெரும் போராட்டங்களை நடத்தினர். அனைத்து அரசு அலுவலகங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் சட்ட மன்ற நடவடிக்கைகள் அனைத்தும் புறக்கணிக்கப்பட்டன. முக்கியத் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர்.

மூன்றாவது முக்கிய மற்றும் கடைசிக் கட்டமாக வரிகொடா இயக்கம் தொடங்கப்பட்டது. 1921 ஆம் ஆண்டு அகமதாபாத்தில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்தில் அரசு தங்களது தேவைகளைப் பூர்த்தி செய்யும் வரை மக்கள் அரசுக்கு வரிசெலுத்தக் கூடாது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஒத்துழையாமை இயக்கம் முழுவீச்சில், கடையடைப்பு, வேலை நிறுத்தம் போன்ற முறைகளில் நாடுமுழுவதும் தீவிரமாக நடைபெற்றது. வன்முறைகள் தலைவிரித்தாடின.

## சௌரி சௌரா சம்பவம் 1922

ஒத்துழையாமை இயக்கத்தின்போது காந்தியடிகள், எத்தகைய வன்முறையிலும் ஈடுபடவேண்டாம் என்று நாட்டு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். எனினும் வன்முறைகள் பல இடங்களில் தொடர்ந்தன. 1922 ஆம் ஆண்டு சனவரி 5 ஆம் நாள் உத்திரப்பிரதேசத்தில் சௌரி சௌரா (கோரக்பூர்) என்னுமிடத்தில் ஆயிரம் விவசாயிகள் பங்கேற்ற பேரணி நடைபெற்றது. இப்பேரணியின்போது காவலர்கள் விவசாயிகளின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதனால் கோபமடைந்த விவசாயிகள் துப்பாக்கிச்

சூட்டிற்கு எதிராக காவல் நிலையத்தை தாக்கி தீயிட்டுக் கொளுத்தினர். இதில் 22 காவலர்கள் உயிரிழந்தனர். இதனைக் கண்டு வருத்தமடைந்த காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை உடனடியாக கைவிட்டார். ஆனால் காந்தியடிகள் உடனடியாக கைது செய்யப்பட்டார். இதனால் தேசிய இயக்க நடவடிக்கைகள் சில ஆண்டுகள் நிறுத்தி வைக்கப்பட்டன. காந்தியடிகள் இந்து–முஸ்லீம் ஒற்றுமை, தீண்டாமை ஒழிப்பு மற்றும் பெண்கள் முன்னேற்றம் போன்றவற்றிற்காகப் பாடுபட்டார்.

## சுயராஜ்ஜியக் கட்சி 1923 – 1925

1923 – ஆம் ஆண்டு தேசிய இயக்கத்தை வழி நடத்த தேசத் தலைவர்களான சி.ஆர்.தாஸ் மற்றும் மோதிலால் நேரு ஒன்று சேர்ந்து சுயராஜ்ஜியக் கட்சியைத் தோற்றுவித்தனர். இக்கட்சி, காந்தியடிகள் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, சுதந்திர போராட்டத்தை தலைமையேற்று நடத்தியது. இக்கட்சி நிறுவனர் சி.ஆர். தாஸ் மரணமடைந்ததால் 1925ஆம் ஆண்டு சுயராஜ்ஜியகட்சியும் கலைக்கப்பட்டது.

## சைமன் தூதுக்குழு 1927 – 1928

1919 – ம் ஆண்டு சட்டம் எந்த அளவிற்கு பயன்பட்டுள்ளது என்பதனை ஆராயவும், இந்திய நிர்வாகத்தை மேம்படுத்த மேலும் பல ஆலோசனைகளை வழங்கவும், சர் ஜான் சைமன் தலைமையில் 7 பேர் கொண்ட ஒரு குழுவை 1927ஆம் ஆண்டு ஆங்கில அரசு நியமித்தது. இதற்கு **சைமன் குழு** என்று பெயர். இக்குழுவில் இடம் பெற்றிருந்தவர்கள் அனைவரும் ஆங்கிலேயர்கள். ஒரு இந்தியர்கூட இதில் இடம் பெறவில்லை. எனவே இக்குழு 1928ஆம் ஆண்டு இந்தியா வந்தபோது கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. இக்குழுவிற்கு சென்ற இடமெல்லாம் கருப்புக்கொடி போராட்டமும், எதிர்ப்பும் தெரிவிக்கப்பட்டன. **சைமனே திரும்பிப்போ** என்று நாடு முழுவதும் குரலெழுப்பப்பட்டது. ஆங்கில அரசு எதிர்ப்பாளர்களை கடுமையாகத் தாக்கியது.




சைமன் தூதுக்குழு

**பஞ்சாபின் சிங்கம்** என்றழைக்கப்பட்ட லாலா லஜபதிராய், சைமன் குழுவிற்கு எதிர்ப்பு தெரிவித்ததால், காவலர்கள் நடத்திய தடியடியால் தாக்கப்பட்டு உயிர் துறந்தார். பகத்சிங் மற்றும் ஏராளமான கிளர்ச்சியாளர்கள் ஆங்கிலேயர்களால் கொல்லப்பட்டனர்.

## லாகூர் மாநாடு 1929

1929 –ம் ஆண்டு காங்கிரஸ் மாநாடு லாகூரில் ஜவஹர்லால் நேரு தலைமையில் நடைபெற்றது. இம்மாநாட்டில் **பூரண சுதந்திரம் பெறுவதே இந்தியாவின் நோக்கம்** என அறிவிக்கப்பட்டது. டிசம்பர் 31 , 1930 –ம் ஆண்டு நள்ளிரவில் **'வந்தே மாதரம்'** என்ற பாடலுக்கிடையே ராவி நதிக்கரையில் இந்திய மூவர்ணக்கொடி ஏற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து, ஜனவரி 26, 1930 ஆம் ஆண்டு நாடு முழுவதும் விடுதலை நாளாக கொண்டாடப்பட்டது. இதே நாளில் 1950ஆம் ஆண்டு ஜனவரி 26ம் நாள் இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தது. எனவே ஜனவரி 26–ம் நாள் இன்றும் குடியரசு தினமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது.

## சட்ட மறுப்பு இயக்கம் (அ) உப்புச் சத்தியாகிரகம் 1930

முழு சுதந்திரம் பெறுவதை நோக்கமாகக் கொண்டு காந்தியடிகள் 1930–ம் ஆண்டு சட்ட மறுப்பு இயக்கத்தைத் தொடங்கினார். பல லட்சக்கணக்கான மக்கள் பயன்படுத்திவரும் உப்பு மீது ஆங்கில அரசு வரி விதித்தது. இது ஏழை, எளிய மக்களைப் பெரிதும் பாதித்தது. எனவே இதனை எதிர்த்து காந்தியடிகள் மார்ச் 12, 1930–ம் ஆண்டு சட்டமறுப்பு போராட்டத்தை மேற்கொண்டார்.



தண்டி யாத்திரை

சரோஜினி நாயுடு உட்பட 78 தொண்டர்களுடன் காந்தியடிகள் அகமதாபாத்திலுள்ள சபர்மதி ஆசிரமத்திலிருந்து பாதயாத்திரை தொடங்கி, சுமார் 400 கி.மீ. பயணம் மேற்கொண்டு குஜராத் கடற்கரை பகுதியிலுள்ள தண்டி வந்தடைந்தார். இது தண்டி யாத்திரை அல்லது உப்புச் சத்தியாகிரகம் என்றழைக்கப்பட்டது. வழி நெடுகிலும் ஆயிரக்கணக்கான மக்கள் காந்தியடிகளுடன் சேர்ந்து பாதையாத்திரை மேற்கொண்டனர்.

தண்டியில் கடல் நீரிலிருந்து உப்பு காய்ச்சி ஏப்ரல் 6–ம் நாள் உப்புச் சட்டங்களை மீறினார். காந்தியடிகள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். தமிழ்நாட்டில் சி.ராஜகோபாலாச்சாரியார் தலைமையில் திருச்சியிலிருந்து தொண்டர்கள் பாதயாத்திரை மேற்கொண்டு தஞ்சாவூர் கடற்கரைப் பகுதியில் வேதாரண்யத்தில் உப்புச் சட்டங்களை மீறி, உப்பு காய்ச்சினர்.

## வட்டமேசை மாநாடுகள் 1930–1932

## முதல் வட்டமேசை மாநாடு 1930

சட்ட மறுப்பு இயக்கத்தை ஆங்கில அரசால் கட்டுப்படுத்த முடியவில்லை. எனவே இந்திய அரசியல் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் முயற்சியில் ஆங்கில அரசு ஈடுபட்டது. இதனால் 1930–ம் ஆண்டு லண்டன் நகரில் முதல் வட்டமேசை மாநாட்டைக் கூட்டியது. சட்ட மறுப்பு இயக்கம் இந்தியாவில் நடைபெற்றுக் கொண்டிருந்ததால், காங்கிரஸ் கட்சி இம்மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை. இதனால் இம்மாநாடு தோல்வியில் முடிந்தது.

## காந்தி–இர்வின் ஒப்பந்தம் 1931

முதல் வட்டமேசை மாநாடு தோல்வியில் முடிந்ததால், எந்த முடிவும் எட்டப்படவில்லை. எனவே பிரிட்டிஷ் அரசு இர்வின் பிரபுவை, காந்திஜியை சந்திக்க இந்தியாவிற்கு அனுப்பியது. இருவருக்கும் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதன் முடிவில் 1931 ஆம் ஆண்டு காந்தி – இர்வின் ஒப்பந்தம் கையெழுத்தானது. இவ்வொப்பந்தத்தின்படி சட்டமறுப்பு இயக்கத்தை கைவிடுவது என்றும் இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்வது என்றும் காங்கிரஸ் ஒப்புக்கொண்டது. இதற்கு கைமாறாக, ஆங்கில அரசு போராட்டத்தில் ஈடுபட்ட அனைவரையும் விடுதலை செய்வதென்றும், உப்புச் சட்டங்களை திரும்ப பெறுவது என்றும் ஒப்புக்கொண்டது.

## இரண்டாம் வட்டமேசை மாநாடு 1931

இரண்டாம் வட்டமேசை மாநாடு இலண்டனில் 1931–ல் நடைபெற்றது. காந்தி–இர்வின் ஒப்பந்தத்தின்படி, காந்தியடிகள் இம்மாநாட்டில் கலந்துகொண்டார். முழு சுதந்திரம், வகுப்பு பிரச்சினை போன்றவற்றிற்கு எந்த தீர்வும் இந்த மாநாட்டில் எட்டப்படவில்லை. எனவே காந்தியடிகள் பெருத்த ஏமாற்றத்துடன் நாடு திரும்பினார். காந்திஜி நாடு



இரண்டாவது வட்டமேஜை மாநாடு

திரும்பியவுடன் கைது செய்யப்பட்டார். காங்கிரஸ் தடை செய்யப்பட்டது, இதனால் சட்ட மறுப்பு இயக்கம் மீண்டும் தொடங்கப்பட்டது.

## வகுப்புவாத அறிக்கையும், பூனா ஒப்பந்தமும் 1932

1932 இல் காந்திஜி சிறையில் அடைக்கப்பட்டிருந்த போது, இங்கிலாந்து பிரதமர் இராம்சே–மெக்டொனால்டு வகுப்புவாத அறிக்கையை வெளியிட்டார். இந்த அறிக்கையில் சிறுபான்மையினருக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் தனி இட ஒதுக்கீடு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அத்திட்டத்தை தாழ்த்தப்பட்ட இன மக்களின் தலைவரான டாக்டர் பி.ஆர்.அம்பேத்கார் வரவேற்றார். காந்தி இதனை ஏற்க மறுத்து சாகும் வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டார். 1932ஆம் ஆண்டு அம்பேத்காருடன் ஏற்பட்ட பூனா உடன்படிக்கைக்குப்பின் தனது உண்ணாவிரதத்தை கைவிட்டார். இவ்வுடன்படிக்கையின்படி தாழ்த்தப்பட்ட மக்களுக்கான தனித் தொகுதி ஒதுக்கீடு கைவிடப்பட்டது. சட்டசபையில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கு அதிக அளவு எண்ணிக்கையில் இடங்கள் வழங்க ஒப்புக்கொள்ளப்பட்டது. இதன் மூலம் இந்துக்களிடமிருந்து தாழ்த்தப்பட்டவர்களை தனியாக பிரிக்கும் ஆங்கிலேயரின் சூழ்ச்சி தோல்வியடைந்தது.

## மூன்றாம் வட்டமேசை மாநாடு 1932

1932–ம் ஆண்டு மூன்றாவது வட்டமேசை மாநாடு லண்டனில் நடைபெற்றது. காங்கிரஸ் தலைவர்கள் இதில் பங்கு பெறவில்லை. எனவே இம்மாநாடு தோல்வியில் முடிந்தது.

## 1935 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம்

இந்திய அரசுச் சட்டம் 1935 ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. இச்சட்டம் சைமன் குழுவின் அறிக்கை மற்றும் மூன்று வட்டமேசை மாநாடுகளில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் இயற்றப்பட்டது. இச்சட்டம், பல்வேறு மாற்றங்களை அறிமுகப்படுத்தியது.

1. மாகாணங்களில் தன்னாட்சி அறிமுகப்படுத்தப்பட்டது.

2. மாகாணங்களில் செயல்பட்டு வந்த இரட்டை ஆட்சி ஒழிக்கப்பட்டது.

3. மத்தியில் கூட்டாட்சி அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டது.

4. மாநிலங்களுக்கிடையே ஏற்படும் சிக்கல்களை தீர்த்து வைக்க கூட்டாட்சி நீதி மன்றம் நிறுவப்பட்டது,

5. கூட்டாட்சி ரிசர்வ் வங்கி நிறுவப்படுதல் ஆகியனவாகும்.

## இரண்டாம் உலகப்போர் 1939 – 1945

1935 ஆம் ஆண்டு இந்திய அரசியல் சட்டத்தின் படி, 1937 ஆம் ஆண்டு மாநிலங்களில் பொதுத் தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில் காங்கிரஸ் கட்சி 8 மாநிலங்களில் வெற்றி பெற்று, மந்திரி சபை அமைத்தது. காங்கிரஸ் அமைச்சரவை பொதுமக்கள் நன்மைக்கென பல திட்டங்களைத் தீட்டி அவற்றை நிறைவேற்றுவதில் பெருமளவு வெற்றியும் கண்டது. ஆனால் இத்திட்டங்கள் எல்லாம் 1939 ஆம் ஆண்டு இரண்டாம் உலகபோர் தொடங்கும் வரை அமைதியாகச் செயல்படுத்தப்பட்டன.

இந்நிலையில் ஆங்கில அரசு காங்கிரஸ் தலைவர்களைக்

கலந்தாலோசிக்காமல் இந்தியாவை இரண்டாவது உலகப்போரில் ஈடுபடுத்தியது. இந்தியாவை போரில் ஈடுபடுத்தியதைக் காங்கிரஸ் விரும்பவில்லை. எனவே, தங்களது எதிர்ப்பை வெளிக்காட்டும் வகையில் 1939–ல் காங்கிரஸ் 8 மாநிலங்களில் அமைச்சரவைகளை ராஜினாமா செய்தன . காங்கிரஸ் கட்சி ராஜினாமா செய்ததை, முஸ்லீம் லீக் கட்சித் தலைவரான முகமது அலி ஜின்னா வரவேற்று, உற்சாகமாகக் கொண்டாடினார். அவர் அந்நாளை, 1939 செப்டம்பர், 22 ஆம் நாளை விடுதலை நாளாகக் கொண்டாடினார். அதன் பின்னர், அவர் இந்துக்களும், முஸ்லீம்களும் ஒன்றாக இருக்கமுடியாது என்றும் அவர்களுக்கு தனித்தனியாக இரு நாடுகள் தேவை என்றும் கூறினார்.

## பாகிஸ்தான் கோரிக்கை 1940

முகமது அலி ஜின்னா 1940 ஆம் ஆண்டு லாகூரில் நடைபெற்ற முஸ்லீம் லீக் மாநாட்டில் தனது தனிநாடு கோரிக்கையை வெளியிட்டார். தனது இரு நாட்டு கொள்கையின் மூலம் இந்திய நாட்டை இந்துக்களுக்கு இந்தியா என்றும், முஸ்லீம்களுக்கு பாகிஸ்தான் என்றும் பிரிக்க வேண்டுமென்று வலியுறுத்தினார். முஸ்லீம்களின் தாய்நாடாக பாகிஸ்தான் விளங்க வேண்டும் எனவும், முஸ்லீம்கள் அதிகமாக வாழும் மாநிலங்கள் பாகிஸ்தானில் அடங்கும் எனவும் அறிவித்தார்.

## ஆகஸ்டு நன்கொடை 1940

ஆங்கில அரசப் பிரதிநிதி லின்லித்கோ இந்தியர்களை இரண்டாம் உலகப்போரில் ஈடுபடுத்தினார். இதனை காங்கிரஸ் எதிர்த்தது. காங்கிரஸ் ஆட்சி செய்யும் மாநிலங்களிலிருந்தும் பதவி விலகியது. இதனால் காங்கிரசை திருப்தி செய்ய சில உறுதி மொழிகளை லின்லித்கோ வழங்கினார். இதன் மூலம் போர் முடிந்ததும், இந்தியாவிற்கு நிர்ணயசபை அமைக்க ஒரு குழு நியமிக்கப்படும் என்றும், அரசப் பிரதிநிதியின் நிர்வாகக் குழுவில் இந்தியருக்கு இடம் அளிக்கப்படும் என்றும் உறுதியளிக்கப்பட்டது. இது ஆகஸ்டு நன்கொடை என்று அழைக்கப்பட்டது. இதனை காங்கிரஸ் முற்றிலுமாக நிராகரித்தது.

## கிரிப்ஸ் தூதுக்குழு 1942

இரண்டாவது உலகப்போரில் ஜப்பான் இங்கிலாந்திற்கு எதிராக ஈடுபட்டது. இங்கிலாந்து போரில் வெற்றி பெற, இந்தியாவின் ஆதரவு தேவைப்பட்டது. எனவே காங்கிரசின் ஒத்துழைப்பைப் பெறவும், இந்திய அரசியல் பிரச்சனைகளுக்கு தீர்வு காணவும், 1942ஆம் ஆண்டு சர்.ஸ்டாபோர்டு கிரிப்ஸ் தலைமையில் ஒரு தூதுக்குழுவை இந்தியாவிற்கு அனுப்பியது. இக்குழு கிரிப்ஸ் தூதுக்குழு என்று அழைக்கப்பட்டது. இக்குழு இரண்டாம் உலகப் போரில் ஆங்கிலேயருக்கு உதவிகரமாய் இந்தியா இருக்க வேண்டும் என அறிவித்தது. போருக்குப்பின், இந்தியர்களுக்கு டொமினியன் அந்தஸ்து வழங்கப்படும் எனவும், இந்திய அரசியல் அமைப்பினை வரைவதற்கு புதிய திட்டம் அறிவிக்கப்படும் எனவும் அறிவித்தது. ஆனால் இந்தியாவிற்கு முழு சுதந்திரம் வழங்குவது பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. எனவே காந்தியடிகள் கிரிப்ஸ் தூதுக்குழு உறுதி மொழிகளை திவாலாகிக் கொண்டிருக்கும் வங்கியின் பின் தேதியிட்ட காசோலை எனக் குறிப்பிட்டார். கிரிப்ஸ் தூதுக்குழு தோல்வியடைந்தது.

## வெள்ளையனே வெளியேறு இயக்கம் 1942

கிரிப்ஸ் தூதுக்குழுவின் தோல்வி, காந்தியடிகளின் போக்கில் மாற்றங்களைக் கொண்டு வந்தது. அதுவரை அவர் பின்பற்றி வந்த அகிம்சை வழிகள் எத்தகைய பலனையும் அளிக்கவில்லை என்பதை உணர்ந்தார். எனவே, அவர் ஆங்கிலேயர் இந்திய நாட்டைவிட்டு வெளியேற வேண்டுமெனக் கோரினார்.

இரண்டாம் உலகப்போரில் ஜப்பான் வெற்றிமேல் வெற்றிகளை குவித்துக்கொண்டே சென்றது. எனவே ஆங்கிலேயர்கள் இனி இந்தியாவில் இருந்தால் ஜப்பான் இந்தியா மீது படையெடுக்கக் கூடும் என காங்கிரஸ் தலைவர்கள் உணர்ந்தனர். இதனால் 1942–ம் ஆண்டு ஆகஸ்டு 8–ம் நாள் காங்கிரஸின் செயற்குழு, ஆங்கிலேயர்கள் இந்தியாவை விட்டு உடனடியாக வெளியேற வேண்டும் என்று ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தது. மும்பையில் நடந்த செயற்குழு கூட்டத்தில், காந்தியடிகள் ஆற்றிய மறக்க முடியாத சொற்பொழிவைத் தொடர்ந்து அத்தீர்மானம் நிறைவேறியது. முழுச்சுதந்திரம் தவிர வேறு எதனாலும் நான் திருப்தி அடையமாட்டேன். நாம் அதற்காக வாழ்வோம் அல்லது வீழ்வோம். இந்தியாவை விடுதலை பெறச் செய்வோம் அல்லது அதற்காக செத்து மடிவோம் என்றார். உண்மையில் அவரது பேச்சு மிகப்பெரிய அளவிலான ஆயுதமற்ற புரட்சிக்கு எழுச்சி குரலாக அமைந்தது. அதற்கு அடுத்தநாளே காந்திஜி, நேருஜி, அபுல் கலாம் ஆசாத் மற்றும் முக்கிய காங்கிரஸ் தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர். சரியான வழிகாட்டுதல் இல்லாமையால், நாடெங்கும் வன்முறைக் கலவரங்கள் வெடித்தன.

இரண்டாம் உலகப்போர் 1945–ம் ஆண்டு முடிவடைந்தது. போருக்குப் பின் இங்கிலாந்தில் தொழிற்கட்சி வெற்றி பெற்று கிளமண்ட் அட்லி தலைமையில் ஆட்சி அமைத்தது. தொழிற்கட்சியின் தலைவர் அட்லி இந்திய சுதந்திரப் போராட்டத்திற்கு ஆதரவு அளித்தார். அவர் இங்கிலாந்தின் பிரதமரானார். அவர் காங்கிரசின் மீது ஆங்கில அரசு விதித்திருந்த தடை உத்தரவுகளையும் விலக்கினார். அட்லி இந்தியாவின் பிரச்சனைகளை தீர்க்க ஒரு குழுவை அமைத்தார். அக்குழு இந்தியாவிற்கு சுதந்திரம் வழங்க பரிந்துரைத்தது.

### சுபாஷ்சந்திரபோஸ்–இந்திய தேசிய ராணுவம் (ஐ.என்.ஏ.) 1942

நேதாஜி (தலைவர்) என அழைக்கப்படும் சுபாஷ் சந்திரபோஸ் புகழ்பெற்ற தேசத்தலைவர்களில் ஒருவராவார். அவர் 1927 ஆண்டு இந்திய தேசிய காங்கிரசில் சேர்ந்தார். ஜவஹர்லால் நேருவுடன் இணைந்து பணியாற்றினார். நேதாஜி இளைஞர்களும், பொதுமக்களும் தேசிய உணர்வு பெறக் காரணமாய் திகழ்ந்தார். ஏராளமான இளைஞர்களை தேசிய இயக்கத்தில் பங்கு பெறச் செய்தார்.



சுபாஷ் சந்திரபோஸ்

1938–ம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரசின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். 1939–ல் அவர் முற்போக்கு கட்சியை தொடங்கினார். பல நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, இந்தியா மீது அந்நாடுகளின் அனுதாபத்தைப் பெற்றார். அவர் சிறிது காலம் வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டார். அவர் ஆப்கானியர் போல மாறுவேடமிட்டு, இந்தியாவிலிருந்து தப்பி ஜெர்மனியை அடைந்து, ஹிட்லரைச் சந்தித்து உதவி கோரினார். பின்னர் 1942ஆம் ஆண்டு பர்மாவிற்கு சென்றார். ஜப்பானியர்களால் பர்மா ஆக்கிரமிக்கப்பட்டது. அச்சமயத்தில்

பிரிட்ஷாரின் பிடியிலிருந்த ஏராளமான இந்தியக் கைதிகளை ஜப்பான் கைப்பற்றியது. ஜப்பானிய அரசாங்கத்துடன் கூட்டுச்சேர்ந்து சுபாஷ் சந்திரபோஸ் இந்தியர்களுக்காக இந்திய தேசிய இராணுவத்தை அமைத்தார். 1943ல் சிங்கப்பூர் சென்றார். அங்கு இந்திய விடுதலைக் கழகத்தின் தலைமைப் பொறுப்பை இராஷ்பிகாரி போஸ், சுபாஷ்சந்திர போசிடம் ஒப்படைத்தார். ஆசாத் ஹிந்த் ஃபவுஜ் என்று அழைக்கப்பட்ட இந்திய தேசிய இராணுவத்தின் தளபதியாக சுபாஷ் சந்திரபோஸ் பொறுப்பேற்றார். இதனைத் தொடர்ந்து சுபாஷ் சந்திரபோஸ் 'நேதாஜி' என்றழைக்கப்பட்டார். நேதாஜி என்றால் தலைவர் என்று பொருள். இந்திய தேசிய ராணுவத்தின் பெண்கள் பிரிவு தமிழ்நாட்டைச் சேர்ந்த லஷ்மி என்ற பெண்ணின் தலைமையில் ஜான்சி ராணி பெயரில் அமைக்கப்பட்டது. இந்திய தேசிய ராணுவம், ஆங்கிலேயருக்கு எதிராக இந்திய விடுதலைக்குக் கடுமையாக போராடியது.

ஜெய்ஹிந்த் என்ற சுபாஷ் சந்திரபோசின் முழக்கம் புகழ் பெற்ற முழக்கமாக மாறி, இந்தியா முழுக்க எதிரொலித்தது. 'டெல்லியை நோக்கிச் செல்' என்ற மற்றொரு புகழ்பெற்ற முழக்கமும் போசினுடையதாகும். இரண்டாம் உலகப்போரில், 1945–ம் ஆண்டு ஜப்பான் சரணடைந்தது. இந்திய தேசிய இராணுவ வீரர்கள் கைது செய்யப்பட்டனர். நேதாஜி பாங்காக்கிலிருந்து டோக்கியோவிற்கு தப்பிச் சென்றார். அவ்வாறு செல்லும் வழியில் அவர் விமான விபத்தில் உயிர் இழந்ததாக நம்பப்படுகிறது.

## அமைச்சரவைத் தூதுக்குழு 1946

1946 ஆம் ஆண்டு பெதிக் லாரன்ஸ், ஏ.வி. அலெக்சாண்டர் மற்றும் சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் ஆகிய மூவர் அடங்கிய குழு இந்தியாவிற்கு வந்தது. அவர்கள் மூவருமே பிரிட்டிஷ் அமைச்சரவையில் உறுப்பினர்களாக இருந்தனர். எனவே, இக்குழு காபினெட் அல்லது அமைச்சரவை தூதுக்குழு என்றழைக்கப்பட்டது. இக்குழு இந்தியத் தலைவர்களிடம் ஆட்சி மாற்றம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தியது. இக்குழு கூட்டாட்சி அரசு அமைய பரிந்துரை செய்தது. அரசியல் நிர்ணய சபை தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்திய அரசியலமைப்புச் சட்டம் எழுதப்படவேண்டுமென்றும், அச்சட்டம் தயாராகும் வரை அனைத்துக்கட்சி பிரதிநிதிகளைக்கொண்ட இடைக்கால அரசு ஒன்று மத்தியில் அமைக்கவேண்டும் என்றும் பரிந்துரை செய்தது.

## இடைக்கால அரசாங்கம் 1946

ஜவஹர்லால் நேருவைப் பிரதமராகக் கொண்ட இடைக்கால அரசு 1946–ல் நிறுவப்பட்டது. இவ்வரசை ஏற்படுத்த நேரு ஜின்னாவின் உதவியை நாடினார். ஆனால் ஜின்னா மறுத்துவிட்டார். தனது பாகிஸ்தான் கோரிக்கையில் பிடிவாதமாக இருந்தார். எனவே, இந்தியப் பிரிவினை தவிர்க்க முடியாத ஒன்றாயிற்று.



ஜவஹர்லால் நேரு

## மவுண்ட்பேட்டன் திட்டம் 1947

1947–ஆம் ஆண்டு மவுண்ட்பேட்டன் ஆங்கில அரசுப் பிரதிநிதியாக பதவியேற்றார். இவரே ஆங்கில அரசின் கடைசித் தலைமை ஆளுநர் ஆவார்.

இவர் இந்திய அரசியல் பிரச்சனைகளுக்கு தீர்வு காண முயற்சி மேற்கொண்டார். எனவே, 1947 ஜுன் 3–ல் மவுண்ட்பேட்டன் ஒரு முக்கிய அறிவிப்பை வெளியிட்டார். அது மவுண்ட்பேட்டன்

திட்டம் அல்லது ஜுன் 3–ம் நாள் திட்டம் என்றழைக்கப்பட்டது. இத்திட்டத்தின்படி இந்தியா, இந்திய யூனியன் என்றும், பாகிஸ்தான் யூனியன் என்றும் இருநாடுகளாகப் பிரிக்கப்படும்.



மவுண்ட்பேட்டன் பிரபு

இந்திய சுதேசி அரசுகள், இவ்விரு நாடுகளில் ஏதாவது ஒன்றுடன் சேர்ந்து கொள்ளவோ அல்லது சுதந்திரத்துடன் இருக்கவோ செய்யலாம் என அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தை காங்கிரசும், முஸ்லீம் லீக்கும் ஏற்றுக்கொண்டன.

## இந்திய விடுதலைச் சட்டம் 1947

மவுண்ட்பேட்டன் திட்டத்தின் அடிப்படையில், இங்கிலாந்து அரசு 1947 ம் ஆண்டு ஜுலை மாதம் இந்திய விடுதலைச் சட்டத்தினை நிறைவேற்றியது. இச்சட்டத்தின்படி இந்தியப் பிரிவினை 1947–ம் ஆண்டு நடைமுறைப்படுத்தப் பட்டது. ஆங்கில அரசிடமிருந்து அதிகாரங்கள் இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு மாற்றப்பட்டன. புதிய நாடான பாகிஸ்தானில், முஸ்லீம்கள் அதிகம் வாழும் பகுதிகளான மேற்கு பஞ்சாப், சிந்து, வடமேற்கு எல்லைப்புற மாகாணம் மற்றும் கிழக்கு வங்காளம், அசாம் மாநிலத்திலுள்ள சில்ஹட் மாவட்டமும் இடம்பெற்றன. மீதமுள்ள பகுதிகள் இந்தியாவில் இடம் பெற்றன.

இந்தியா 1947 ஆம் ஆண்டு ஆகஸ்டு 15–ம் நாள் விடுதலை பெற்றது. டெல்லியில் உள்ள வரலாற்றுப் புகழ்பெற்ற செங்கோட்டையில் ஆங்கிலக்கொடி (யூனியன்–ஜாக்) இறக்கப்பட்டு, இந்திய மூவர்ணக் கொடி ஏற்றப்பட்டது. மவுண்ட்பேட்டன் பிரபு சுதந்திர இந்தியாவின் முதல் தலைமை ஆளுநராகவும், பண்டித ஜவஹர்லால் நேரு முதல் பிரதமராகவும் பொறுப்பேற்றனர். பின்னர் சி.இராசகோபாலாச்சாரியார் சுதந்திர இந்தியாவின் முதல் இந்திய தலைமை ஆளுநராகப் பதவி ஏற்றார்.

தேசிய விடுதலைக்காக பாடுபட்ட நம் தேசத் தலைவர்களுக்கு நாம் மிகவும் நன்றிக்கடன்பட்டுள்ளோம். அதிலும் மகாத்மா காந்தியோடு ஒப்பிடுவதற்கு ஒருவரும் இல்லை. இந்தியா பிரிக்கப்பட்டபோது, இந்து–முஸ்லீம் இனக் கலவரங்கள் பல இடங்களில் தோன்றின. காந்தியடிகள் இந்த இனக் கலவரங்களைத் தடுத்து, இந்து முஸ்லீம்களுக்கிடையே சமாதானத்தையும், ஒற்றுமையையும் ஏற்படுத்தினார். 1948 ம் ஆண்டு சனவரி 30ம் நாள் காந்திஜி சுட்டுக்கொல்லப் பட்டார். இதனை ஜவஹர்லால் நேரு நம் வாழ்வில் ஒளி மறைந்து எங்கும் இருள் சூழ்ந்துவிட்டது என்றார்.

## சுதேசி சமஸ்தானங்களின் இணைப்பு

இந்திய அரசுகளை ஒன்றிணைத்தது சர்தார் வல்லபாய் பட்டேலின் மாபெரும் சாதனையாகும். இந்தியா சுதந்திரம் அடைந்த போது நாட்டில் ஏறத்தாழ 565 சுதேசி அரசுகள் இருந்தன. அவற்றை நவாப்புகள், அரசர்கள் மற்றும் நிஜாம்கள் ஆட்சிசெய்து வந்தனர். இந்த அரசுகளை இந்தியாவுடன் இணைக்கும் பொறுப்பு சர்தார் வல்லபாய் பட்டேலிடம் விடப்பட்டது.

தொடக்கத்தில் சுதேசி அரசர்கள் பலர் தனித்துச் செயல்படவே விரும்பினர். பட்டேல் அவர்களை இந்திய யூனியனுடன் சேரும்படி அழைப்புவிடுத்தார். பலர் அவ்வழைப்பை உடனடியாக ஏற்றனர். ஏறத்தாழ 562 சுதேசி

# இந்தியப் பிரிவினை 1947



அரசுகள் இந்திய யூனியனுடன் இணைந்தன. ஆனால் காஷ்மீர், ஐதராபாத் மற்றும் ஜூனாகத் ஆகியவை இந்தியாவுடன் இணையத் தயங்கின.



வல்லபாய் பட்டேல்

பட்டேல் தனது அரசியல் திறமையினாலும், கடுமையான நடவடிக்கைகளாலும், அந்தப் பகுதிகளை இந்திய யூனியனுடன் இணைத்தார். இதனால் 'இந்தியாவின் பிஸ்மார்க்' என்றும் இந்தியாவின் இரும்பு மனிதர் என்றும் போற்றப்பட்டார்.

## பிரெஞ்சுப் பகுதிகள் இணைக்கப்படுதல் 1954

பிரெஞ்சு அரசின் அனுமதியுடன் பாண்டிச்சேரி, காரைக்கால், மாஹி, ஏனாம் மற்றும் சந்திரநாகூர் ஆகிய பகுதிகள் 1954–ம் ஆண்டு இந்திய யூனியனுடன் இணைக்கப்பட்டன.

## போர்ச்சுக்கீசியர்கள் பகுதிகள் இணைப்பு 1961

கோவா, டையூ மற்றும் டாமன் ஆகிய பகுதிகள் போர்ச்சுக்கீசியரின் வசமிருந்த பகுதிகளாகும். அப்பகுதி மக்கள் இந்தியாவுடன் இணைய விரும்பினர். எனவே, இந்திய அரசு தனது இராணுவ நடவடிக்கைகளின் மூலம் 1961ஆம் ஆண்டு அப்பகுதிகளை இந்தியாவுடன் இணைந்தன. இவை இந்திய யூனியன் பகுதிகளாக மாறின.

## புதிய இந்தியா உருவாக்கம்

பல அரசியல் தலைவர்களும், அறிஞர்களும் ஒன்றுகூடி, அரசியல் நிர்ணய சபையை ஏற்படுத்தி இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கினர். இந்திய அரசியலமைப்பு நிர்ணய சபைக்கு டாக்டர்.இராசேந்திரபிரசாத் தலைமை தாங்கினார். இந்திய அரசியலமைப்பை எழுத சட்டவரைவுக் குழு டாக்டர் அம்பேத்காரை தலைவராக கொண்டு அமைக்கப்பட்டது. இக்குழு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை எழுதி வழங்கியது. இதன்படி 1950 ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் நாள் இந்தியா குடியரசு நாடாக அறிவிக்கப்பட்டது. அன்று முதல் இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தது. டாக்டர்.இராசேந்திரபிரசாத் சுதந்திர இந்தியாவில் முதல் குடியரசுத் தலைவரானார்.

## காலக்கோடு அட்டவணை

1885 – இந்திய தேசிய காங்கிரசின் தோற்றம்

1890 –

1895 –

1900 –

1905 – வங்காளப் பிரிவினை, சுதேசி இயக்கம்

**1906 –** முஸ்லீம் லீக் கட்சித் தோற்றம்

**1907 –** சூரத் பிளவு

**1908 –**

**1909 –** மிண்டோ மார்லி சீர்திருத்தம்

**1910 –**

**1911 –** வங்காளப் பிரிவினை நீக்கம்

**1912 –**

**1913 –**

**1914 –** முதல் உலகப்போர் தொடக்கம்

**1915 –**

**1916 –** தன்னாட்சி இயக்கம், லக்னோ உடன்படிக்கை

**1917 –** ஆகஸ்டு அறிக்கை

**1918 –** முதல் உலகப்போர் – முடிவு

**1919–** மாண்டேகு–செம்ஸ்போர்டு சீர்திருத்தம், ரௌலட் சட்டம், ஜாலியன் வாலாபாக் படுகொலை

**1920 –** கிலாபத் இயக்கம், ஒத்துழையாமை இயக்கம்.

**1921 –**

**1922 –**சௌரி சௌரா சம்பவம், ஒத்துழையாமை இயக்கம் கைவிடல்

**1923 –**

**1924 –**

**1925 –**

**1926 –**

**1927 –** சைமன் குழு அமைத்தல்

**1928 –** சைமன் குழு இந்தியா வருகை

1929 – லாகூர் காங்கிரஸ்

1930 – உப்புச் சத்தியாகிரகம், முதல் வட்டமேஜை மாநாடு

1931 – காந்தி–இர்வின் ஒப்பந்தம் , இரண்டாம் வட்டமேஜை மாநாடு

1932 –வகுப்புவாத அறிக்கை , பூனா ஒப்பந்தம், மூன்றாம் வட்டமேஜை மாநாடு

1933 –

1934 –

1935 – இந்திய அரசியல் சட்டம்

1936 –

1937 –

1938 –

1939 – இரண்டாம் உலகப்போர் தொடக்கம்

1940 – பாகிஸ்தான் தனிநாடு கோரிக்கை, ஆகஸ்டு நன்கொடை

1941 –

1942 –கிரிப்ஸ் தூதுக்குழு இந்தியாவருகை

1943 –

1944 –

1945 – இரண்டாம் உலகப் போர் முடிவு

1946 – காபினெட் தூதுக்குழு இந்தியாவருகை

1947 – மவுண்ட்பாட்டன் திட்டம், இந்தியவிடுதலை

1948 – காந்தியடிகளின் மறைவு

1949 –இந்திய அரசியலமைப்பு சட்டம் ஏற்பு

1950–இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வருதல்–இந்தியா ஜனநாயக குடியரசாக மலர்தல்.

## பயிற்சி

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. சுதந்திர போராட்டத்தில் காந்திஜி உபயோகித்த புதிய யுக்தி முறை

அ) சத்தியாகிரகம் ஆ) வெளிப்படைக் கொள்கை

இ) நீண்ட பயணம் ஈ) வன்முறை

2. சி.ஆர்.தாஸ் மற்றும் மோதிலால் நேரு தோற்றுவித்த கட்சி

அ) கதர் ஆ) திமுக

இ) சுயராஜ்ஜியம் ஈ) அகாலிதளம்

3. இந்திய அரசியலமைப்பு நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டு

அ) ஜனவரி 26,1950 ஆ) பிப்ரவரி 26,1950

இ) ஆகஸ்ட் 26, 1950 ஈ) மார்ச் 26, 1950

4. 1932, ஆங்கிலேய அரசு அறிமுகப்படுத்தியது

அ) மதிய உணவு திட்டம் ஆ) திறந்த வெளி பல்கலைக்கழகம்

இ) வயது வந்தோர் கல்வி ஈ) வகுப்புவாத அறிக்கை

5. இரண்டாம் உலகப்போரில் இந்தியர்களை ஈடுபடுத்தியவர்

அ) கானிங் பிரபு ஆ) டல்ஹௌசி

இ) லின்லித்கோ ஈ) லிட்டன் பிரபு

6. நேரு இடைக்கால அரசை அமைக்க உதவி கோரியது

அ) அபுசல் கலாம் ஆசாத் ஆ) ஜின்னா

இ) சலிமுல்லாகான் ஈ) கான் அப்துல் காபர்கான்

7. இந்தியாவின் முதல் மற்றும் கடைசி கவர்னர் ஜெனரல்

அ) மவுண்ட் பேட்டன் பிரபு ஆ) நேரு

இ) இராஜகோபாலாச்சாரி ஈ) காமராஜர்

8. இந்திய சமஸ்தானங்களை இணைக்கும் பணியை மேற்கொண்டவர்.

அ) டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கார் ஆ) இராஜேந்திர பிரசாத்

இ) இராஜாஜி ஈ) சர்தார் வல்லபாய் படேல்

9. இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவர்

அ) டாக்டர் இராஜேந்திர பிரசாத் ஆ) காந்திஜி

இ) டாக்டர். இராதாகிருஷ்ணன் ஈ) சத்தியமூர்த்தி

## ஆ. பொருத்துக.

I

| | | |
|---|---|---|
| 1. | சர்தார் வல்லபாய் படேல் | டச்சு பகுதிகள் |
| 2. | பாண்டிச்சேரி | வரைவுக் குழு |
| 3. | கோவா | சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல் |
| 4. | டாக்டர் பி.ஆர். அம்பேத்கார் | இந்தியாவின் பிஸ்மார்க் |
| 5. | மவுண்ட்பேட்டன் பிரபு | போர்ச்சுக்கீசிய பகுதிகள் |
| | | பிரெஞ்சு பகுதிகள் |
| | | பிரிட்டிஷ் பகுதிகள் |

II

## ஆ. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. | மோதிலால் நேரு | உத்திர பிரதேசம் |
| 2. | சௌரி சௌரா | சுயராஜ்ஜிய கட்சி |
| 3. | பஞ்சாப் சிங்கம் | கான் அப்துல் காபர்கான் |
| 4. | வகுப்புவாத அறிக்கை | லாலா லஜபதி ராய் |
| 5. | எல்லை காந்தி | ராம்சே மெக்டொனால்டு |
| | | பகவத் சிங் |
| | | முஸ்லீம் லீக் |

## இ. சுருக்கமாக விடையளி.

1. 1935 ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டம் புகுத்திய மாற்றங்கள் யாவை ?
2. லாகூர் காங்கிரஸ் மாநாட்டில் முஸ்லீம் லீகின் முக்கியத்துவம் என்ன ?
3. 1929 ஆம் ஆண்டு லாகூர் காங்கிரஸ் மாநாட்டில் இயற்றப்பட்ட தீர்மானங்கள் யாவை ?
4. அமைச்சரவை தூதுக் குழு – குறிப்பு வரைக.
5. பாகிஸ்தானில் உள்ளடக்கிய மாநிலங்களின் பெயர்களை குறிப்பிடு.

## ஈ. பின்வரும் தலைப்புகளின் கீழுள்ள வினாக்களுக்கு விடையளி.

1. சைமன் குழு

அ) சைமன் குழு ஏன் நியமிக்கப்பட்டது ?

ஆ) இந்தியர்கள் இக்குழுவை ஏன் நிராகரித்தனர் ?

இ) சைமன் குழு எப்படி வரவேற்கப்பட்டது ?

ஈ) சைமன் குழு எதிர்ப்புப் போராட்டத்தின் போது இறந்த இந்திய தலைவரின் பெயரைக் குறிப்பிடுக.

2. ஆகஸ்ட் நன்கொடை

அ) ஆகஸ்ட் நன்கொடை எப்பொழுது அறிவிக்கப்பட்டது ?

ஆ) இரண்டாம் உலகப் போருக்குப் பின் இந்தியாவிற்கு அளிக்கப்பட்ட உறுதியளிக்கப்பட்டது என்ன ?

இ) போர்க் குழு அமைக்கப்பட்டது என்ன ?

ஈ) போர்க் குழு பிரதிநிதியாக நியமிக்கப்பட்டவர் யார் ?

3. மவுண்ட் பேட்டன் திட்டம்

அ) 1947–ஆம் ஆண்டு இந்திய கவர்னர் ஜெனரலாகப் பதவி யேற்றவர் யார் ?

ஆ) ஆங்கிலேய கடைசி கவர்னர் ஜெனரல் யார் ?

இ) மவுண்ட்பேட்டன் திட்டம் என்றால் என்ன ?

ஈ) மவுண்ட் பேட்டன் திட்டத்திற்கு காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீகின் பிரதிபலிப்பு என்ன ?

## உ. பத்தி வினா.

1. 1920–22 ஆம் ஆண்டு ஒத்துழையாமை இயக்கத்தின் படிநிலைகளை விளக்குக ? ஒத்துழையாமை இயக்கம் கைவிடப்பட்டது ஏன் ?
2. உப்பு சத்தியாகிரகம் – குறிப்பு வரைக.
3. மூன்று வட்டமேஜை மாநாடுகளின் முக்கியத்துவத்தை விளக்கு.
4. வெள்ளையனே வெளியேறு இயக்கம் – குறிப்பு வரைக.
5. விடுதலைப் போரில் சுபாஷ் சந்திர போஸ் மற்றும் இந்திய தேசிய இராணுவத்தின் பங்கினை விவரி.

## ஊ. 1930 முதல் 1950 ஆம் ஆண்டு வரையிலான நிகழ்வுகளைக் காலக்கோட்டில் வரைக.

இந்திய வரைபடத்தில் கீழ்கண்ட இடங்களைக் குறிக்கவும்.

1. அ) அமிர்தசரஸ் ஆ) லாகூர் இ) லக்னோ ஈ) சௌரி சௌரா உ) சூரத் ஊ) தண்டி எ) தூத்துக்குடி ஏ) வேதாரண்யம் ஐ) சென்னை ஒ) பூனா

2. அ) போர்ச்சுகீசியப் பகுதிகள் – டையூ, டாமன், கோவா

ஆ) பிரெஞ்சுப் பகுதிகள் – பாண்டிச்சேரி, காரைக்கால், ஏனாம், மாஹி

இ) மேற்கு பாகிஸ்தான் ஈ) கிழக்கு பாகிஸ்தான் உ) ஹைதராபாத் ஊ) ஜுனாகத் எ) காஷ்மீர்

# 13. இந்திய விடுதலை இயக்கத்தில் தமிழ் நாட்டின் பங்கு

இந்திய விடுதலை போராட்ட இயக்கத்தில் தமிழ்நாடு மிக முக்கியப் பங்காற்றியது. புலித்தேவர், கட்டபொம்மன், மருது சகோதரர்கள், வேலுத்தம்பி போன்ற மாபெரும் தலைவர்கள் முக்கியப் பங்காற்றினர். இவர்கள் அனைவரும் தேசப்பற்று, தைரியம், சுயமரியாதை மற்றும் தியாகம் ஆகியவற்றிற்கு பெயர் பெற்றவர்கள். ஆங்கில ஆட்சியின் போது மாபெரும் தலைவர்கள், அறிஞர்கள் மற்றும் சமூக சீர்திருத்தவாதிகளான ஜி.சுப்பிரமணிய அய்யர், வ.உ.சிதம்பரம்பிள்ளை, சுப்பிரமணிய பாரதி, சி. இராசகோபாலாச்சாரி, பெரியார் ஈ.வெ.இராமசாமி, திருப்பூர் குமரன், கே.காமராஜ் மற்றும் பலர் சுதந்திரப்போராட்டத்தில் பெரும்பங்காற்றி இந்திய விடுதலைக்குப் பாடுபட்டனர்.

## வேலூர் கலகம் 1806

ஆங்கிலேயர்கள் இராணுவத்தில் புகுத்திய சில கட்டுப்பாடுகள் வேலூர் கலகத்திற்கு வழிவகுத்தது. இந்து வீரர்கள் தங்கள் நெற்றியில் சமயக் குறிகளை இடக்கூடாது என்றும், முஸ்லீம் வீரர்கள் தங்கள் தாடி மீசைகளை வெட்டி சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும் என்றும் தடைவிதிக்கப்பட்டது. இது ராணுவ வீரர்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியது. திப்புவின் பிள்ளைகள் இவர்களை ஆங்கிலேயர்களுக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபடத் தூண்டினர்.

1806 ஜூலை 9–ம் நாள் வேலூர் கோட்டையில் திப்புவின் மகள் திருமணம் நடைபெற்றது. இத்திருமணத்தில் கலந்து கொள்ளுவதற்காக வீரர்கள் வேலூர் கோட்டையில் கூடினர். நள்ளிரவில் இங்கு கூடியிருந்த வீரர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டு, ஆங்கிலேயர்களைத் தாக்கி கோட்டையைக் கைப்பற்றினர். திப்புவின் கொடி, வேலூர் கோட்டையில் ஏற்றப்பட்டது. திப்புவின் இரண்டாவது மகன் பதேக் ஹைதர் அரசராக அறிவிக்கப்பட்டார். இருப்பினும் இக்கிளர்ச்சி ஆங்கிலேயர்களால் அடக்கப்பட்டது.

## சென்னை மகாஜன சபை

சென்னை மாகாணத்தில் மக்கள் உரிமைகளை நிலைநாட்ட ஏற்படுத்தப்பட்ட முதல் அமைப்பு சென்னை சுதேசி சங்கம். இதனை 1852–ம் ஆண்டு ஹார்லி, இலஷ்மி நரசுச் செட்டி மற்றும் சீனிவாசப் பிள்ளை ஆகியோர் நிறுவினர். இச்சங்கம் ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனியின் கொள்கைகளை விமர்சனம் செய்தது. 1884 ஆம் ஆண்டு சென்னை சுதேசி சங்கம், சென்னை மகாஜனசபையுடன் இணைக்கப்பட்டது. எஸ்.இராமசாமி முதலியார், பி.அனந்தாசாருலு, மற்றும் இரங்கய்யா நாயுடு ஆகியோர் இதனை ஏற்படுத்தினர். இச்சபை சென்னை அண்ணாசாலையில், எல்லிஸ் சாலையில் அமைந்துள்ள இந்து பத்திரிக்கை அலுவலகத்தில் செயல்படத் துவங்கியது

சென்னை மகாஜன சபையின் முதல் தலைவராக பி.இரங்கையா நாயுடு தேர்ந்தெடுக்கப்பட்டார். இச்சபை பல்வேறு நோக்கங்களைக் கொண்டு செயல்படத் துவங்கியது. இந்திய அரசப் பிரதிநிதி எல்ஜின் பிரபு, டிசம்பர் 1895 ஆம் ஆண்டு சென்னைக்கு பயணம் மேற்கொண்ட போது சென்னை மகாஜன சபை வழங்கிய வரவேற்புரையை ஏற்க மறுத்தார். சென்னை மகாஜன சபை சுதந்திரப்போராட்டத்தில் பெரும் பங்காற்றியது. இந்திய மக்களின் அடிப்படை உரிமைகளுக்காக குரல் எழுப்பியது. 1920–ம் ஆண்டு முதல் இந்திய தேசிய காங்கிரசுடன் இணைந்து செயல்பட்டது. 1930–ம் ஆண்டு உப்புச் சத்தியாகிரகப் போராட்டத்தை சென்னையில் ஜார்ஜ்டவுன், யானைக்கவுனி, உயர்நீதிமன்றம் மற்றும் கடற்கரைப்பகுதியில் தலைமையேற்று நடத்தியது. அப்போராட்டத்தின்போது உறுப்பினர்கள் கடுமையாகத்


தாக்கப்பட்டனர். இதனை விசாரிக்க மூன்று பேர் கொண்ட குழு நீதிபதி டி.ஆர்.இராமச்சந்திர அய்யர் தலைமையில் அமைக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு அரசிடம் அறிக்கை சமர்ப்பித்தது.

ஆங்கில அரசு காங்கிரஸ் கட்சிக்குத் தடை விதித்த போது, சென்னை மகாஜன சபை பல்வேறு பொருட்காட்சிகளை நடத்தி, குறிப்பாக அனைத்திந்திய காதி (கைத்தறி) கண்காட்சி மற்றும் சுதேசி பொருட்கள் கண்காட்சி மூலம் மக்கள் மனதில் தேசியப்பற்றை வளர்த்தது.

1896 அக்டோபர் 24ம் நாள் தேசத்தந்தை மகாத்மா காந்தி சென்னை மகாஜன சபையில் உரையாற்றினார். இச்சபையின் பொன்விழா கொண்டாட்டத்தில் ஜவஹர்லால்நேரு கலந்துகொண்டார்.

## வ.உ. சிதம்பரம் பிள்ளை

செக்கிழுத்த செம்மல் என்றும், கப்பலோட்டிய தமிழன் என்றும் அழைக்கப்பட்ட சிதம்பரம்பிள்ளை செப்டம்பர் 5, 1872–ம் ஆண்டு ஓட்டப்பிடாரத்தில் பிறந்தார்.



வ.உ. சிதம்பரம் பிள்ளை

திருநெல்வேலியில் வழங்குரைஞராக தமது வாழ்க்கையைத் தொடங்கினார். வ.உ.சிதம்பரம்பிள்ளை, வியாபார சங்கம் மற்றும் தொழிலாளர்கள் அமைப்பினை ஊக்குவித்தார். சுதேசி தர்ம சங்க நெசவாளிகள் சங்கம் மற்றும் சுதேசி கூட்டுறவு அங்காடிகளை தூத்துக்குடியில் தோற்றுவித்தார். பின்னர், சுதேசி கப்பல் நிறுவனத்தை தோற்றுவித்து, தூத்துக்குடி–கொழும்பு இடையே கப்பல் போக்குவரத்தைத் துவங்கினார். 1905ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட வங்காளப் பிரிவினை இவரை அரசியலில் ஈடுபடச் செய்தது. தூத்துக்குடி அருகில் பவள ஆலை வேலை நிறுத்தப்போராட்டத்தில் ஈடுபட்டார். இதன் விளைவாக தொழிலாளர்கள் வேலை நேரம் குறைக்கப்பட்டு, ஊதியம் உயர்த்தப்பட்டது. 1907–ம் ஆண்டு சூரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் கலந்துகொண்டார். இம்மாநாட்டில் மிதவாதிகள், தீவிரவாதிகள் என காங்கிரஸ் இரண்டாகப் பிரிந்தது. வ.உ.சி., பாலகங்காதர திலகரைப் பின்பற்றி தீவிரவாதத்தை ஆதரித்தார். தமிழகத்தில் தீவிரவாதத்தை தீவிரமாக பரப்பினார். இவர் மீது தேசத் துரோகக் குற்றம் சுமத்தப்பட்டு, 40 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. இவருடைய வலதுகால் சங்கிலியால் கோர்க்கப்பட்டு மாடுபோல் சிறையில் செக்கிழுத்தார். இவர் முறையீடு செய்ததால் இந்த தண்டனை பின்னர் குறைக்கப்பட்டது.

## சுப்பிரமணிய சிவா

சுப்பிரமணிய சிவா, திண்டுக்கல் மாவட்டத்தில் வத்தலக்குண்டு கிராமத்தில் பிறந்தார். இவர் ஒரு சிறந்த விடுதலைப்போராட்ட வீரராகவும், சிறந்த எழுத்தாளராகவும் விளங்கினார். ஆங்கிலேயருக்கு எதிரான நடவடிக்கை ஈடுபட்டதால் 1908–1921 இடைபட்ட காலத்தில் பலமுறை கைது செய்யப்பட்டார். சிறையில் இருந்தபோது தொழு நோயால் பாதிக்கப்பபட்டார். இதனால் சேலம் சிறைக்கு மாற்றப்பட்டார். இவரால் நடக்கமுடியாத நிலை ஏற்பட்டது. இதற்கிடையில் ஆங்கில அரசு இவருக்காகவே தொழு நோயாளிகள் இரயிலில் பயணம் செய்யக்கூடாது என்று சட்டம் ஒன்றை கொண்டுவந்தது. இதன் விளைவாக சுப்பிரமணிய சிவா உடல்

முழுவதும் தொழுநோய் புண்களுடன் தமிழகம் முழுவதும் நீண்ட நடை பயணமாகவே சுற்றிவந்தார். பின்னர் தனது நோயின் காரணமாக ஜூலை 23, 1925–ல் காலமானார்.

## சுப்பிரமணிய பாரதியார்

சுப்பிரமணிய பாரதியார் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள எட்டயபுரத்தில் டிசம்பர் 11, 1882 ஆம் ஆண்டு பிறந்தார். மதுரையில் தமிழாசிரியராக சிறிது காலம் பணியாற்றினார்.



சுப்பிரமணிய பாரதியார்

சுதேசிமித்ரன் பத்திரிக்கையின் உதவி ஆசிரியராகப் பணியாற்றினார். 1907–ம் ஆண்டு சூரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் கலந்துகொண்டார். பாலகங்காதர திலகர் மற்றும் அரவிந்தோவுடன் சேர்ந்து சுயராஜ்ஜியத்திற்கு ஆதரவாகச் செயல்பட்டார். 1907–ம் ஆண்டு தமிழ் வாரப் பத்திரிக்கையான 'இந்தியா' பத்திரிக்கையின் ஆசிரியரானார். அதே சமயத்தில் 'பாலபாரதம்' என்ற ஆங்கிலப் பத்திரிக்கையை வெளியிட்டார்.

1908–ம் ஆண்டு சென்னையில் மாபெரும் கூட்டத்தை நடத்தி, சுயராஜ்ஜிய நாளை கொண்டாடினார். அவரது பாடல்களான வந்தே மாதரம், அச்சமில்லை–அச்சமில்லை, எந்தையும் தாயும், ஜெயபாரதம் போன்றவை அச்சிடப்பட்டு தமிழ் மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

1908–ம் ஆண்டு, வ.உ.சி க்கு எதிரான வழக்கில் சாட்சி வழங்கினார். இதனால் ஆங்கில அரசு இவரை கைது செய்ய ஆணை பிறப்பித்தது. எனவே பாரதியார் பிரஞ்சுக்காரர்களின் கட்டுப்பாட்டிலிருந்து புதுவைக்கு தப்பி ஓடினார். அங்கிருந்து தினசரி, வார இதழ் மற்றும் மாத இதழ்களில் தனது படைப்பினைத் தொடர்ந்து வெளியிட்டார். ஆனால் ஆங்கில அரசு 1909–ம் ஆண்டு பாரதியின் படைப்புகளுக்கு தடை விதித்தது.

முதல் உலகப்போருக்குப் பிறகு நவம்பர் 1918ஆம் ஆண்டு, பாரதியார் கடலூருக்கு வந்தார். அச்சமயத்தில் அவர் கைது செய்யப்பட்டார். ஆனால் மூன்று வார காவலுக்குப் பிறகு விடுவிக்கப்பட்டார். பல்வேறு இன்னல்கள் மற்றும் வறுமைக்குப் பிறகு பாரதி சென்னையிலிருந்து சுதேசிமித்ரன் பத்திரிகையின் ஆசிரியராக மீண்டும் பணியாற்றினார். செப்டம்பர் 11, 1921–ம் ஆண்டு காலமானார். ஏறத்தாழ 90 ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்றும் பாரதியார் நம்மிடையே தமிழ் தேசியம் மற்றும் இந்திய ஒற்றுமையின் ஒரு சின்னமாக வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்.


## வாஞ்சிநாதன்

வாஞ்சிநாதன் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் பணியாற்றினார். தீவிரவாதிகளின் செயல்பாடுகள் பிரிட்டிஷ் அரசாங்கத்தை அச்சுறுத்தியது. எனவே திருநெல்வேலி மாவட்ட ஆட்சியாளராக இருந்த ஆஷ் என்பவர் நான்கு பேரை திருநெல்வேலியில் சுட்டுக்கொன்றார். இக்கொடுஞ்செயலுக்குப் பழிதீர்க்க எண்ணிய வாஞ்சிநாதன், இரகசியமாக மணியாச்சி புகைவண்டி நிலையத்திற்குச் சென்று 1911, ஜீன் 17 ஆம் நாள் மாவட்ட ஆட்சியர் ஆஷ் அவர்களைச் சுட்டுக் கொன்று விட்டு, தாமும் தற்கொலை செய்து கொண்டார். வாஞ்சிநாதன் இறந்தபின் அவர் சட்டைப்பையில் இருந்த

ஒரு கடிதம் இருந்தது. அக்கடிதத்தில், ஆட்சியர் ஆஷின் கொலை சென்னை வரும் அரசர் ஐந்தாம் ஜார்ஜை கொலை செய்வதற்கான ஒத்திகையே ஆகும் என்று எழுதப்பட்டிருந்தது

## திருப்பூர் குமரன்

ஈரோடு மாவட்டத்தில் சென்னிமலையில், திருப்பூர் குமரன் 1904ஆம் ஆண்டு பிறந்தார். இவர் மாபெரும் கிளர்ச்சியாளர்.



திருப்பூர் குமரன்

இவர் தேசியக்கொடிக்கெதிரான கிளர்ச்சியில் ஈடுபட்டு காவல் துறையினரின் தாக்குதலால் உயிர் துறந்தார். சாகும் தருவாயில் தேசியக்கொடியைக் கையில் ஏந்தியபடி தனது தேசப்பற்றை வெளிப்படுத்தினார். இவர் தமிழக வரலாற்றில் கொடிகாத்த குமரன் என்று போற்றப்பட்டார். தமிழக அரசு திருப்பூர் இரயில் நிலையத்திற்கு அருகிலுள்ள பூங்காவில் இவரது சிலையை நிறுவியுள்ளது.

## எஸ். சத்தியமூர்த்தி

காமராசரின் அரசியல் குருவான சத்தியமூர்த்தி ஒரு சிறந்த அரசியல்வாதி மற்றும் நாட்டுப் பற்றாளர். 1930ஆம் ஆண்டு இராஜகோபாலாச்சாரியார் தனக்குப்பின் சத்திய மூர்த்தியை அகில இந்தியக் காங்கிரஸ் தமிழ்நாட்டுப் பிரிவின் தலைவர் ஆக்கினார். 1939 ஆம் ஆண்டு சென்னை மேயராக இருந்த போது பொதுக் கல்வி, தரமான குடிநீர் வழங்கல் மற்றும் வளமான வாழ்வு போன்றவைகளை மக்களுக்கு வழங்க பாடுபட்டார்.



எஸ்.சத்தியமூர்த்தி

சத்தியமூர்த்தி 1887–ம் ஆண்டு ஆகஸ்டு 19ஆம் நாள் சென்னை மாகாணத்திலுள்ள திருமையம் என்னும் ஊரில் பிறந்தார். தேசியப் போராட்டத்தில் பங்கேற்பதற்கு முன் வழக்கறிஞராகத் தன் வாழ்க்கையைத் தொடங்கினார். சிறு வயதிலேயே அரசியலில் ஈடுபட்டு இந்திய தேசியக் காங்கிரசின் முக்கியத் தலைவர்களில் ஒருவராக உயர்ந்தார். 1919ஆம் ஆண்டு மாண்டேகு–செம்ஸ்போர்டு சீர்திருத்தம் மற்றும் ரௌலட் சட்டத்தை எதிர்ப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த கூட்டுக் குழுவில் ஒரு உறுப்பினராக காங்கிரசால் நியமிக்கப்பட்டார்.


1939 ஆம் ஆண்டு சென்னை மேயராக இருந்த போது, சென்னையில் மிக மோசமான குடிநீர் பஞ்சம் நிலவியது. மக்களின் குடிநீர் பற்றாக்குறையைப் போக்குவதற்காக சென்னைக்கு மேற்கே 50கி.மீ தூரத்திலுள்ள பூண்டி என்னுமிடத்தில் ஒரு குடிநீர்த் தேக்கம் கட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். இக்குடிநீர்த் தேக்கம் பின்னர் காமராசர்

அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. சத்தியமூர்த்தியை நினைவு கூறும் வகையில் சத்தியமூர்த்தி சாகர் என்று இதற்கு பெயரிடப்பட்டது. மேலும் தமிழ்நாடு காங்கிரசுக் கமிட்டி தலைமையகத்திற்கு சத்தியமூர்த்தி பவன் எனப் பெயரிடப்பட்டது.

சுதேசி இயக்கம், வெள்ளையனே வெளியேறு இயக்கம் போன்ற இயக்கங்களில் பங்கேற்று, பலமுறை சிறை சென்றுள்ளார். சத்தியமூர்த்தி அரசியல்வாதிகளுள் ஒரு சிறந்த மனிதர். இந்திய விடுதலைக்காகவும், சமுதாய நீதிக்காகவும், மக்கள் நலனுக்காகவும் தன் வாழ்வையே அர்ப்பணித்த சத்தியமூர்த்தி அவர்கள் 1943 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28 ஆம் நாள் காலமானார்.

## சி. இராசகோபாலாச்சாரி

இராஜாஜி என்று புகழப் பெற்ற இராஜகோபாலாச்சாரி, டிசம்பர் – 10, 1987 ம் ஆண்டு தொரப்பள்ளி என்ற கிராமத்தில் பிறந்தார். சட்டம் பயின்று வழக்கறிஞராக சேலத்தில் தன் வாழ்க்கையைத் தொடங்கினார். இந்திய தேசிய காங்கிரசில் உறுப்பினரானார். 1906–ம் ஆண்டு கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் கலந்துகொண்டார். 1907–ம் ஆண்டு சூரத் மாநாட்டில் கலந்துகொண்டார். காந்தியின் தீவிர ஆதரவாளர் ஆனார். 1930–ம் ஆண்டு வேதாரண்யம் சத்தியாகிரத்தை தலைமையேற்று நடத்தினார். தமது தலைமையில் திருச்சியில் இருந்து 100 தொண்டர்களுடன் வேதாரண்யத்திற்கு பயணம் மேற்கொண்டு, உப்பு காய்ச்சி உப்புச்சட்டங்களை மீறினார். 1937–ம் ஆண்டு நடைபெற்ற மாநிலத் தேர்தலில் போட்டியிட்டு சென்னை மாகாண முதலமைச்சரானார். தனது ஆட்சிக்காலத்தில் மதுவிலக்கை அமுல்படுத்தினார். ஆதிதிராவிடர் மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களின் நலனை மேம்படுத்த பல்வேறுச் சட்டங்களைக் கொண்டுவந்தார். இந்தி மொழியை கட்டாயப் பாடமாக பள்ளிகளில் அறிமுகப்படுத்தினார். இதற்கு கடும் எதிர்ப்பு தோன்றியது. பெரியார் ஈ.வெ.ராமசாமி தலைமையில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் தீவிரமடைந்தது. இரண்டாவது உலகப்போரின் போது ஆங்கில அரசு இந்தியத் தலைவர்களைக் கலந்தாலோசிக்காமல் இந்தியாவைப் போரில் ஈடுபடுத்தியதைக் கண்டித்து, 1939–ம் ஆண்டு தனது முதலமைச்சர் பதவியை இராஜினாமா செய்தார்.




சி. இராசகோபாலாச்சாரி

சுதந்திர இந்தியாவின் முதல் இந்திய கவர்னர் ஜெனரலாகப் பொறுப்பேற்றார். மீண்டும் தமிழக முதலமைச்சராக 1952 –ம் ஆண்டு மீண்டும் பதவி ஏற்றார். குலக்கல்வித் திட்டத்தை தமிழகத்தில் அறிமுகப்படுத்தினார். ஆனால் இதற்கு காமராஜர் மற்றும் பெரியார் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். எனவே இராஜாஜி தனது முதலமைச்சர் பதவியை 1954 –ம் ஆண்டு இராஜினாமா செய்தார். பின்னர் காங்கிரசிலிருந்தும் வெளியேறினார். சுதந்திரக் கட்சியைத் தோற்றுவித்து இளம் இந்தியா என்ற பத்திரிக்கையை நடத்தினார். சக்ரவர்த்தி திருமகள் (இராமாயணம்), வியாசர் விருந்து (மகாபாரதம்) போன்றவை இவர் எழுதிய உரைநடை நூல்களாகும். மற்றும் இவர், கீதை மற்றும் உபநிடதங்களுக்கு உரை எழுதியுள்ளார். 1955–ஆம் ஆண்டு இவருக்கு பாரத ரத்னா விருது

வழங்கப்பட்டது. இவர் டிசம்பர் 25, 1972–ம் ஆண்டு காலமானார். இவருடைய தந்திரமான அரசியல் செயல்களால் 'சாணக்கியர்' என அறியப்படுகிறார்.

## காமராஜர்

கர்ம வீரர் என்று போற்றப்பட்ட காமராஜர், விருதுநகருக்கு அருகில் உள்ள விருதுப்பட்டி கிராமத்தில் ஜூலை 15, 1903ஆம் ஆண்டு பிறந்தார்.



கே.காமராஜர்

தமிழக விடுதலைப்போராட்ட வீரர்களில் சிறந்தவராக போற்றப்படுகிறார். 1924–ம் ஆண்டு வைக்கம் சத்தியாகிரகப் போராட்டத்தில் ஈடுபட்டதின் மூலம் சுதந்திரப்போராட்ட இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். 1929–ம் ஆண்டு முதல், காங்கிரஸ் கட்சியின் முழுநேர உறுப்பினரானார். 1930–ம் ஆண்டு காந்தியடிகள் சட்ட மறுப்பு இயக்கத்தை தொடங்கியபோது, தமிழகத்தில் இராஜாஜியுடன் சேர்ந்து வேதாரண்ய உப்புச் சத்தியாகிரகத்தை மேற்கொண்டார். ஆனால் கைது செய்யப்பட்டு இரண்டாண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டு அலிப்பூர் சிறையில் அடைக்கப்பட்டார். இருப்பினும் காந்தி–இர்வின் ஒப்பந்தத்தின்படி விடுவிக்கப்பட்டார். 1940–ஆம் ஆண்டு தனது சத்தியாகிரகப் போராட்ட திட்டங்களுக்கு காந்தியிடம் அனுமதி பெற வார்தா பயணமானார். ஆனால் செல்லும் வழியில் கைது செய்யப்பட்டு, வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார். பின்னர் விடுவிக்கப் பட்டார். 1942 ஆம் ஆண்டு வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் ஈடுபட்டு, மீண்டும் கைது செய்யப்பட்டு, மூன்று ஆண்டுகள் அமராவதி சிறையில் அடைக்கப்பட்டார். 1947ஆம் ஆண்டு இந்தியா விடுதலை அடைந்தபோது சத்தியமூர்த்தியின் வீட்டில் இந்திய தேசியக் கொடியை ஏற்றினார்.

காமராஜர் தமிழக முதலமைச்சராக 9 ஆண்டுகள் பணியாற்றினார். பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தினார். மதிய உணவுத்திட்டம், புதிய பள்ளிகளைத் திறந்து, இலவச கல்வி வழங்குதல், வேளாண்மையை மேம்படுத்துதல், கால்வாய்களை வெட்டுதல், அணைகளைக் கட்டுதல் மற்றும் புதிய தொழிற்சாலைகளை அமைத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டார். தேசிய அரசியலில் முக்கிய பங்கு வகித்தார். இதனால் அரசரை உருவாக்குபவர் எனப் போற்றப்பட்டார். லால்பகதூர் சாஸ்திரியை 1964–ம் ஆண்டு இந்தியப் பிரதமராகவும், அவரது மறைவிற்குப் பிறகு இந்திரா காந்தியை 1966–ம் ஆண்டில் இந்தியப் பிரதமராகவும் உருவாக்கியதில் முக்கியப் பங்கு வகித்தார். காமராஜர் திட்டம் என்ற திட்டத்தின்படி கட்சிப் பணிக்காக தனது பதவியை இராஜினாமா செய்தார் அக்டோபர் 2, 1975–ல் காலமானார். இவரை மக்கள் அன்போடு பெருந்தலைவர் என்றும் கர்ம வீரர் என்றும் அழைத்தனர். இவ்வாறாக, நமது நாட்டின் சுதந்திர போராட்டத்தில் தமிழ்நாடு முக்கியப் பங்காற்றியது.

## பயிற்சி

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. வேலூரில் இந்திய வீரர்களை ஆங்கிலேயருக்கு எதிராகச் செயல்படத் தூண்டியவர்.

   அ) ஹைதர் அலி ஆ) திப்பு சுல்தானின் மகன்கள்

   இ) சிவாஜியின் மகன்கள் ஈ) ஷாஜகானின் மகன்கள்

2. மக்கள் உரிமைகளை நிலைநாட்ட ஏற்படுத்தப்பட்ட மதராஸ் மாகாணத்தின் முதல் அமைப்பு.

   அ) இந்திய தேசிய காங்கிரஸ் ஆ) முஸ்லீம் லீக்

   இ) சுயராஜ்ஜிய கட்சி ஈ) மதராஸ் மாகாண அமைப்பு

3. மதராஸ் மகாஜன சபையின் முதல் தலைவர்

   அ) பி.இரங்கையா நாயுடு ஆ) இராஜாஜி இ) காமராஜர் ஈ) பாரதியார்

4. வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகத்தை நடத்தியவர்

   அ) டி.எஸ். ராஜன் ஆ) பக்தவச்சலம் இ) இராஜகோபாலச்சாரி ஈ) வ.உ.சி

5. 1908 ஆம் ஆண்டு பாரதியார் சென்னையில் மாபெரும் பொதுக் கூட்டத்தைக் கூட்டி கொண்டாடியது.

   அ) சுயராஜ்ஜிய நாள் ஆ) பிறந்த நாள்

   இ) குடியரசு நாள் ஈ) சேவை நாள்

6. பிரிட்டிஷாரின் கைது ஆணைக்கு எதிராக பாரதியார் தப்பியோடியது

   அ) சென்னை அ) பெங்களூர் இ) ஹைதராபாத் ஈ) பாண்டிச்சேரி

7. தமிழ்நாட்டில் காங்கிரஸ் தலைமையிடத்தின் பெயர்

   அ) ராஜ்பவன் ஆ) ராஷ்டிரபதி பவன் இ) சத்தியமூர்த்தி பவன் ஈ) விதான் சபா

8. 1940 ஆம் ஆண்டு காமராஜர் வார்தா சென்று சந்தித்தது

   அ) நேரு ஆ) காந்திஜி இ) திலகர் ஈ) ஜின்னா

9. தமிழ்நாட்டின் முதலமைச்சராக காமராஜர் பதவி வகித்தது

   அ) 9 வருடங்கள் ஆ) 8 வருடங்கள் இ) 10 வருடங்கள் ஈ) 7 வருடங்கள்

10. காமராஜரின் பிரபலமான கொள்கை

    அ) 'எஸ்' திட்டம் ஆ) 'எல்' திட்டம் இ) 'கே' திட்டம் ஈ) 'ஜெ'திட்டம்

### ஆ. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. | சுதேசி பொருட்கள் கண்காட்சி | சிப்பாய் கலகம் |
| 2. | சாணக்கியர் | காமராஜர் |
| 3. | அரசை உருவாக்கியவர் | பூண்டி நீர் தேக்க நிலை |
| 4. | சத்திய மூர்த்தி | வேலூர் கலகம் |
| 5. | பதேக் ஹைதர் | பெரியார் ஈ.வெ.ரா |
| | | சென்னை மகாஜன சபை |
| | | இராஜாஜி |

## இ. சுருக்கமாக விடையளி.

1. வேலூர் கலகம் – குறிப்பு வரைக.
2. திருப்பூர் குமரன் பற்றி உமக்கு என்ன தெரியும் ?
3. சுப்ரமணிய சிவா பற்றி எழுதுக.
4. சுதந்திர போராட்டத்தில் வாஞ்சிநாதனின் பங்கு பற்றி எழுதுக.
5. 1907ஆம் ஆண்டு பாரதியார் வெளியிட்ட பத்திரிக்கைகளை குறிப்பிடுக.
6. சுப்ரமணிய பாரதியாரின் ஒரு சில பாடல்களை எழுதுக.
7. மேயராக சத்தியமூர்த்தியின் சேவைகள் யாவை ?
8. காமராஜரின் நலத்திட்டப் பணிகள் பற்றி குறிப்பு வரைக.
9. அரசை உருவாக்குபவர் என காமராசர் கருதப்படுவது ஏன் ?

## ஈ. பின்வரும் தலைப்புகளின் கீழுள்ள வினாக்களுக்கு விடையளி.

1. சி. இராஜ கோபாலச் சாரியார்

   அ) இராஜகோபாலாச்சாரியார் எங்கு பிறந்தார் ?

   ஆ) 1939ம் ஆண்டு இராஜகோபாலாச்சாரி முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்தது ஏன் ?

   இ) இவர் தனது இரண்டாவது ஆட்சிக் காலத்தில் அறிமுகப்படுத்திய திட்டம் யாது ?

   ஈ) சாணக்கியர் என்று அழைக்கப்படுவது ஏன்

2. கே. காமராஜர்

   அ) காமராஜர் எப்படி அரசியலில் நுழைந்தார் ?

   ஆ) 1930 ல் எங்கு சிறையில் அடைக்கப்பட்டார் ?

   இ) 1947ம் ஆண்டு இந்திய தேசிய கொடியை எங்கு ஏற்றினார் ?

   ஈ) காமராஜர் எப்பொழுது இறந்தார் ?

## உ. விரிவான விடையளி.

1. சென்னை மகாஜன சபையின் பணியினை விவிரி.
2. பாரதியார் ஒரு சுதந்திர போராட்ட வீரர்–நிரூபி.

# 14. தமிழ்நாட்டில் சமுதாய மாற்றங்கள்

19 மற்றும் 20–ம் நூற்றாண்டில் மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு, பாலகங்காதர திலகர், இராஜாஜி போன்ற தேசத் தலைவர்கள் இந்திய விடுதலைப் போராட்டத்தில் முழுமையாகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டு செயலாற்றி வந்தனர். தமிழ்நாட்டில் பல்வேறு தலைவர்கள் அரசியல் சுதந்திரத்திற்கு மட்டுமல்லாமல் சமூக விடுதலைக்கும் போராடி வந்தனர். அரசியல் சுதந்திரம் என்பது சமூக நீதி, சுயமரியாதை மற்றும் கௌரவம் இல்லையெனில் அர்த்தமற்றது என்று அவர்கள் கருதினர்.

## நீதிக்கட்சி

தென்னிந்திய வரலாற்றில் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் சென்னை மாகாணத்தில் நீதிக் கட்சியின் ஆட்சி குறிப்பிடத்தக்க நிகழ்வாக அமைந்தது. நீதிக்கட்சி, கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் பிராமணர்களின் ஆதிக்கத்திற்கு எதிராக பிராமணர்கள் அல்லாதவர்களால் தொடங்கப்பட்ட சமூக இயக்கமாகும்.



டி.எம். நாயர்

நீதிக்கட்சி என்றழைக்கப்பட்ட தென்னிந்திய நல உரிமைக்கழகம் ஆங்கிலேயர் ஆட்சியில் சென்னை மாகாணத்தில் தோன்றிய அரசியல் கட்சியாகும். இக்கட்சி 1916–ம் ஆண்டு டி.எம்.நாயர் மற்றும் தியாகராயசெட்டி ஆகியோரால் தோற்றுவிக்கப்பட்டது. நீதிக்கட்சி தொடக்க காலத்தில் கோரிக்கை மனுக்கள் மூலம் பிராமணர் அல்லாதவர்களுக்கு நிர்வாகத்தில் அதிக பிரதிநிதித்துவம் கோரியது. இக்கட்சி தமிழில் 'திராவிடன்', தெலுங்கில் 'ஆந்திர பிரகாசிகா' மற்றும் ஆங்கிலத்தில் 'ஜஸ்டிஸ்' என்ற பத்திரிக்கையையும் அச்சிட்டு வெளியிட்டது. எனவே, இக்கட்சி நீதிக்கட்சி (Justice Party) என்றழைக்கப்பட்டது.



தியாகராய செட்டியார்

## நீதிக்கட்சியின் ஆட்சி

1920ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில், நீதிக்கட்சி பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றி திரு. சுப்பராயலு தலைமையில் ஆட்சி அமைத்தது. 1923ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்று திரு.டி.எம். சிவஞானம் பிள்ளை தலைமையில் ஆட்சி அமைத்தது. 1926ஆம் ஆண்டுத் தேர்தலில் சுயராஜ்ஜியக் கட்சி வெற்றி பெற்றது. ஆனால் ஆட்சி அமைக்க மறுத்துவிட்டது. எனவே சுயேட்சை வேட்பாளரான திரு.சுப்பராயலு,

சுயராஜ்ஜியக் கட்சியின் உதவியுடன் ஆட்சி அமைத்தார். 1930 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் நீதிக்கட்சி மீண்டும் வெற்றி பெற்று ப.முனிசாமி நாயுடு தலைமையில் ஆட்சி அமைத்தது. ஆனால் 1932 ஆம் ஆண்டு இவரை பதவி நீக்கிவிட்டு, பொப்பிலி இராஜா பதவியேற்றார். 1934 ஆம் ஆண்டுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றது. ஆனால் ஆட்சி அமைக்க மறுத்து விட்டது. எனவே நீதிக்கட்சி மீண்டும் ஆட்சி அமைத்தது. 1937 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் நீதிக்கட்சி படுதோல்வியடைந்து மீண்டும் எழவேயில்லை. பெரியார் மற்றும் அவரது சுய மரியாதை இயக்கத்தின் கட்டுப்பாட்டில் சிறிது காலம் நீதிக்கட்சி செயல்பட்டது. பெரியாருக்கும் பார்ப்பனத் தலைவர்களுக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக, 1944–ஆம் ஆண்டு சேலத்தில் நடந்த மாநாட்டில் பெரியார் நீதிக்கட்சியின் பெயரை திராவிடர் கழகம் என மாற்றம் செய்து அதை ஒரு சமுதாய இயக்கமாக மாற்றினார். இதன் மூலம் நீதிக்கட்சி அரசியல் இயக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டது.

## நீதிக்கட்சியின் சாதனைகள்

நீதிக்கட்சியின் ஆட்சி சாதி அடிப்படையில் கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு மற்றும் மதச் சீர்திருத்தங்களுக்காக அனைவராலும் நினைவு கூறப்படுகிறது. இந்திய அரசியலில் ஒரு இக்கட்டான சூழ்நிலையில் இக்கட்சி ஆட்சிப் பொறுப்பேற்று, பல பிரச்சனைகளை மன உறுதியோடு சந்தித்து, சிறிது காலம் நல்லாட்சி வழங்கியது. பொருளாதாரம் மற்றும் சமூக சீர்த்திருத்தங்கள் மூலம் கிராமங்கள் முன்னேற்றம் என்ற புதிய சகாப்தத்தை அறிமுகப்படுத்தியது.

நீதிக்கட்சி அனைத்து சமூகத்தினரும் சமமான பிரதிநிதித்துவம் பெற வழிசெய்து தாழ்த்தப்பட்ட மக்களின் நிலையை உயர்த்தியது.

சமூக அரசாணை 1921 மற்றும் 1922 மூலம் பார்ப்பனர் அல்லாதவர்களுக்கு கல்வி மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களின் நியமனங்களில் இட ஒதுக்கீடு வழங்கியது.

எதேச்சதிகாரம், செல்வாக்கு, அனுகூலத் தேர்வு முறையை ஒழிக்க, 1924 ஆம் ஆண்டு பணியாளர் தேர்வு வாரியத்தை ஏற்படுத்தியது. இது 1929 ஆம் ஆண்டு பொதுப் பணி தேர்வாணையமாக மாறியது.

உயர்க் கல்வி நிலையங்களை நெறிப்படுத்துவதற்காகவும், அனைத்து சமூகத்தினரும் பயன்பெறவும் கல்லூரிக் கமிட்டிகள் அமைக்கப்பட்டன.

1925 ஆம் ஆண்டு ஆந்திரா பல்கலைக்கழகம் மற்றும் 1929 ஆம் ஆண்டு அண்ணாமலை பல்கலைக் கழகமும் தொடங்கப்பட்டன.

கோவில் வரவு – செலவுக் கணக்குகளை முறைப்படுத்த, கோயில் குழுக்கள் அமைக்கப்பட்டன. 1926 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையச் சட்டம் கொண்டு வரப்பட்டது.

1921 ஆம் ஆண்டு பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது. தேவதாசி முறை ஒழிக்கப்பட்டது. பெண்கள் வன் கொடுமைத் தடைச்சட்டம் மற்றும் தொழிலாளர் நலச் சட்டங்கள் இயற்றப்பட்டன.

ஏழைகளுக்கு இலவச வீட்டு மனைப் பட்டா வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

சென்னை ஆயிரம் விளக்குப் பகுதியில் தியாகராயச் செட்டியாரால் இலவச மதிய உணவுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டது.

இக்கட்சி ஆயுர்வேதம், சித்தமருத்துவம் மற்றும் யுனானி மருத்துவக் கல்விக்கு ஊக்கமளித்தது.

## நீதிக்கட்சியின் வீழ்ச்சி

1937–ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் நீதிக்கட்சி பெரும் தோல்வியடைந்தது. ராஜாஜி தலைமையில் காங்கிரஸ் கட்சி வெற்றிபெற்று அமைச்சரவை அமைத்தது. நீதிக்கட்சி அதன் வீழ்ச்சியிலிருந்து எழவேயில்லை. இதற்குப் பல காரணங்கள்.

உலகில் பொருளாதார பெரும் மந்தம் நிலவியிருந்த காலத்தில் இக்கட்சி பொறுப்பேற்றது. இதனால் இக்கட்சியால் நிலைக்கமுடியவில்லை.

தேசிய இயக்கம் தீவிரமாக நடைபெற்றுக்கொண்டிருந்ததால் இதன் செல்வாக்கு சரியத்தொடங்கியது.

சாதி மற்றும் பணம் செல்வாக்கு பெறத்தொடங்கியதால் இக்கட்சி பலவீனமடைந்தது.

காந்தி தலைமையில் காங்கிரஸ் கட்சி பலம்பெற்று விளங்கியது, இக்கட்சிக்கு பெரும் சவாலாக அமைந்தது. எனவே நீதிக்கட்சியின் செல்வாக்கு சரியத்தொடங்கி தோல்வியைத் தழுவியது.

## சுய மரியாதை இயக்கம்

தமிழ்நாட்டின் மிகச் சிறந்த சமூக சீர்த்திருத்தவாதி பெரியார் ஈ.வே.இராமசாமி நாயக்கர் ஆவார். மக்கள் மனதில் சுயமரியாதை, பகுத்தறிவு, பெண் விடுதலை, ஏற்றத் தாழ்வற்ற சமுதாயம் ஆகியவற்றிற்கு வித்திட்டவர் பெரியார்.

ஈ.வே. இராமசாமி, 1879 ஆம் ஆண்டு செப்டம்பர் 17 ஆம் நாள் ஈரோட்டில் செல்வ வளம் மிக்க இந்து குடும்பத்தில் பிறந்தார். தமது 13ஆம் வயதில் திருமணம் செய்து கொண்ட பெரியார், தனது 19 வது வயதில் இல்லற வாழ்வைத் துறந்தார். துறவறம் பூண்டு காவி உடை தரித்து, பல புனித இடங்களுக்குச் சென்றுவந்தார். இவர் காசி சென்றிருந்த போது பார்ப்பனர்கள் மற்ற இனத்தவர்களை இழிவுபடுத்துவதைக் நேரடியாகக் கண்டு அதனைக் கடுமையாக கண்டித்தார். பின்னர் தமிழ்நாட்டிற்குத் திரும்பி, தமது கொள்கைகளைப் பரப்புவதற்காக 1919ஆம் ஆண்டு காங்கிரசில் இணைந்தார். 1921 ஆம் ஆண்டு சென்னை மாநில காங்கிரஸ் கமிட்டியின் தலைமை நிர்வாகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பிறகு 1923 ஆம் ஆண்டு அதன் தலைவரானார்.

ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்றார். 1924ஆம் ஆண்டு, கேரளாவில் உள்ள வைக்கத்தில் நடைபெற்ற சத்தியாகிரகப் போராட்டத்தில் பங்கேற்று தாழ்த்தப்பட்ட மக்களின் ஆலய நுழைவுத் தடைச் சட்டத்தை எதிர்த்துப் போராடினார். இறுதியில் திருவிதாங்கூர் அரசு ஆலய நுழைவு தடைச் சட்டத்தை தளர்த்தி, அனைவரும் ஆலயத்திற்குள் நுழையலாம் என அறிவித்தது. இதன் காரணமாக பெரியாருக்கு **‘வைக்கம் வீரர்’** என்ற பட்டம் வழங்கப்பட்டது.



ஈ.வே. இராமசாமி

காங்கிரசின் நிதியுதவியுடன் சேரன்மான்தேவி என்னும் இடத்தில் நடத்தப்பட்ட குருகுலம் பள்ளியை பெரியார் பார்வையிட்டார். அப்பள்ளியில் பார்ப்பனர் மற்றும் பார்ப்பனரல்லாத மாணவர்களுக்குத் தனித்தனியே உணவு மற்றும் குடிநீர் வழங்கப்பட்டது. இதனைக் கண்டு கொதித்தெழுந்த பெரியார், அத்திட்டத்தைக் கண்டித்ததோடு தனது சென்னை மாநில காங்கிரசுத் தலைவர் பதவியையும் இராஜினாமா செய்தார்.

காஞ்சிபுரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநில மாநாட்டில் பார்ப்பனர் அல்லாதவர்களுக்கு அரசுப்பணியில் இட ஒதுக்கீடு வழங்கும் தீர்மானத்தை கொண்டுவந்தார். காங்கிரஸ் கட்சி அதை ஏற்க மறுத்ததால், பெரியார் அம்மாநாட்டிலிருந்து வெளியேறினார். தனது கொள்கைகளை பரப்பவும், அதனை நடைமுறைப் படுத்துவதற்காகவும் 1925 ஆம் ஆண்டு சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தார்.

## நோக்கங்கள்

சுயமரியாதை இயக்கம் மதம், ஜாதி, அரசியல் மற்றும் சமுதாயத்தில் பார்ப்பனர்களின் ஆதிக்கத்தைக் கடுமையாக எதிர்த்தது.

மூடநம்பிக்கைகளையும், பழமை வாதத்தையும் ஒழிக்கப் பாடுபட்டது.

பெண்கல்வி, விதவைகள் மறுமணம், கலப்புத்திருமணம் மற்றும் குழந்தைத் திருமணமுறை ஒழிப்பு ஆகியவற்றிற்காகக் குரலெழுப்பியது.

## சாதனைகள்

பெரியார், அர்த்தமற்ற கொள்கைகள், மூடநம்பிக்கைகள் மற்றும் நம்பகத் தன்மையற்ற புராணக் கதைகளை கண்டித்து பொது மேடைகளில் சாடினார். அவர் தனது சுயமரியாதைக் கொள்கைகளை, குடியரசு, புரட்சி மற்றும் விடுதலை போன்ற பத்திரிகைகளின் மூலம் பரப்பினார். இவர் சமுதாயத்தில் நிலவிய தீமைகளைப் பற்றி பல புத்தகங்கள் வெளியிட்டார்.

பெரியார் பல ஐரோப்பிய நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் செய்து அவர்களின் வாழ்க்கை முறைகளைக் கற்றறிந்தார். ஏழ்மையே சமுதாயத்தில் நிலவும் தீமைகள் அனைத்திற்கும் காரணம் என்பதை உணர்ந்தார். தாய்நாடு திரும்பியவுடன், 14 அம்ச சோஷலிச அறிக்கையினை வெளியிட்டார். நீதிக்கட்சி இதனை ஏற்றுக்கொண்டு அதனைப் பரப்பும் முயற்சியில் ஈடுபட்டது.

பெருகி வரும் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தவும், மக்களின் ஆரோக்கிய வாழ்விற்காகவும் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை அறிவுறுத்தினார். தமிழ் எழுத்து சீர்த்திருத்தத்தை இவர் தூண்டியது மட்டுமல்லாமல் எளிமையாகக் கல்வி கற்க ரோமானிய எழுத்து முறையைப் பின்பற்றவும் அறிவுறுத்தினார். இவருக்கு சென்னையில் நடைபெற்ற பெண்கள் மாநாட்டில் 'பெரியார்' என்ற பட்டம் வழங்கப்பட்டது.

1937 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில், நீதிக்கட்சி தோல்வியைத் தழுவியது. இதனால் நீதிக்கட்சியின் வீழ்ச்சி தவிர்க்க முடியாததாயிற்று. 1944ஆம் ஆண்டு சேலத்தில் நடைபெற்ற மாநாட்டில் நீதிக்கட்சி 'திராவிடர் கழகம்' என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

பெரியாரின் ஆசைகளை தி.மு.க மற்றும் அ.தி.மு.க கட்சிகள் நிறைவு செய்து வருகின்றன.

## சி.என். அண்ணாதுரை

தமிழக மக்களால் அன்புடன் பேரறிஞர் அண்ணா என்று அழைக்கப்படும் சி.என்.அண்ணாதுரை, 1909 ஆம் ஆண்டு, செப்டம்பர் 15 ஆம் நாள் காஞ்சிபுரத்தில் பிறந்தார். இவர் தனது எம்.ஏ பட்டத்தை, சென்னை பச்சையப்பன் கல்லூரியில் முடித்தார். இவர் திராவிட

முன்னேற்றக்கழகத்தின் நிறுவனர் ஆவார். அண்ணா, நீதிக்கட்சியின் வாயிலாக அரசியலில் நுழைந்தார். சமுதாயத்தை முன்னேற்ற வேண்டும் என்ற தாக்கமே இவரை நீதிக்கட்சியில் இணைய வைத்தது. இவர் சாதி மற்றும் ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற கொள்கையுடன் தன்னை நீதிக்கட்சியில் இணைத்துக் கொண்டார்.



சி.என். அண்ணாதுரை

அண்ணா ஒருசிறந்த பேச்சாளர். அக்காலத்தில் புகழ்பெற்ற பேச்சாளர்களில் ஒருவராகத் திகழ்ந்தார். நீதிக்கட்சியில் இணைந்த போது பெரியாரின் தலைமையின் கீழ் பணிபுரியும் பாக்கியம் கிடைத்தது. நீதிக்கட்சி இவருக்கு சரியான பாதையைக்காட்டி சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபடச்செய்தது. இதன்மூலம் சமுதாயத்தில் காணப்பட்ட ஏற்றத்தாழ்வுகளை நீக்கும் பணியைத் தொடங்கினார்.

தமிழ் மொழி மீது அதிக பற்று கொண்ட அண்ணா, காஞ்சிபுரத்தில் பெரியாரால் துவங்கப்பட்ட இந்தி எதிர்ப்பு மாநாட்டில் கலந்து கொண்டு இந்தி மொழிக்கெதிராக குரல் எழுப்பினார். நன்கு வளர்ச்சியடைந்த தமிழின் இடத்தை இந்தி ஒரு போதும் எடுத்துக் கொள்ள முடியாது என்றும் முழங்கினார்.

1944 ஆம் ஆண்டு சேலத்தில் நடைபெற்ற மாநாட்டில் நீதிக்கட்சியின் பெயரை திராவிடர் கழகம் என மாற்றினார். இதன் மூலம் பெரியாருக்கு மிகவும் நெருக்கமானார். 1947 ஆம் ஆண்டு நடைபெற்ற பெரியார்–மணியம்மை திருமணம் திராவிடக் கட்சிக்கு ஒரு பெரிய அதிர்ச்சியைக் கொடுத்தது. இத்திருமணத்திற்கு எதிர்ப்புக் தெரிவித்து அண்ணா அவர்கள் அக்கட்சியிலிருந்து விலகி 1949 ஆம் ஆண்டு செப்டம்பர் 17 ஆம் நாள் திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் புதிய கட்சியைத் தொடங்கினார். அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் நோக்கம் மற்றும் கொள்கைகளை தெளிவாக எடுத்துரைத்தார். இவர் பொதுச்செயலாளர் ஆனார்.

இவர் 1967– ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்று, அண்ணா தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். தனது ஆட்சிக்காலத்தில் படி அரிசி திட்டத்தை அறிமுகப்படுத்தினார். (ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி). ஆனால் நிதி நெருக்கடியால், இத்திட்டத்தை தமிழகம் முழுவதும் செயல்படுத்த இயலவில்லை. அண்ணா தமிழ் மொழி வளர்ச்சித் திட்டத்தைத் அறிவித்தார்.

சித்திரை முதல் தேதியை தமிழ் புது வருட நாளாக அறிவித்தார். (14.04.1967) 1967ஆம் ஆண்டு ஏப்ரல் 16ஆம் நாள் சென்னை மாநிலம் என்பதை தமிழக அரசு அல்லது தமிழகம் என பெயர்மாற்றம் செய்தார்.

புனித ஜார்ஜ்கோட்டையில் அமைந்துள்ள செக்ரடேரியட் என்பதை தலைமைச் செயலகம் எனப் பெயர் மாற்றம் செய்தார். அதே தேதியில் சத்யமேவ ஜெயதே என்ற அரசுக் குறிக்கோளை வாய்மையே வெல்லும் என்று மாற்றி அறிவித்தார். இதுபோன்று ஸ்ரீ, ஸ்ரீமதி மற்றும் குமாரி போன்ற சமஸ்கிருத வார்த்தைகளுக்கு மாற்றாக திரு. திருமதி

மற்றும் செல்வி என்ற தமிழ் சொற்களை அறிவித்தார்.

அண்ணாவின் தலைமைப்பண்பு, நிர்வாக நேர்மை, அரசியல் பண்பாடு ஆகியவற்றை சிறப்பிக்கும் வகையில், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 1968ஆம் ஆண்டு கௌரவ டாக்டர் பட்டம் அளித்து அண்ணாவைப் பாராட்டியது. இத்தகைய பெருமைமிகு அண்ணாதுரை, பிப்ரவரி 3, 1969–ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

## சமுதாய மாற்றத்தில் பெண்களின் பங்கு

சீர்திருத்தம் என்பது சமூகத்தில் பல நூற்றாண்டுகளாக வேரூன்றிக்கிடக்கும் சமுதாய கொடுமைகளை ஒழிப்பதாகும். இச்சீர்கேடுகள் ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு தடைக்கற்களாக அமைந்துள்ளன.

இந்த சமுதாய மாற்றங்களைக் கொண்டு வர, ஆண்கள் மட்டுமல்லாமல் பெண்களும் பெரும்பங்கு ஆற்றினார். அவர்களுள் சிலரது பங்களிப்பு குறிப்பிடத் தக்கதாகும்.

## டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி

சமுதாய மாற்றத்திற்கு முன்னோடியாக தமிழ்நாடு விளங்குகிறது. தமிழ் சமூகத்தில் கரும்புள்ளிகள் போல சில சீர்கேடுகள் காணப்பட்டு அவை நீக்கப்படுகின்றன. அவற்றுள் ஒன்று தேவதாசி முறையாகும். இந்த சமூக அவலத்தைப் போக்க டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி தீவிரமாக போராடிய பெண்மணிகளில் முக்கியமானவர்களில் ஒருவராவர்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி ஜூலை 30, 1886 ஆம் ஆண்டு புதுக்கோட்டையில் பிறந்தார். இந்தியாவின் முதல் பெண் மருத்துவராவார். 1923ஆம் ஆண்டு இவரது தங்கை புற்றுநோயால் பாதிக்கப்பட்டு இறந்தார். அதனால் புற்று நோயை அடியோடு ஒழிக்கவேண்டும் என்று சபதம் மேற்கொண்டார். எனவே 1949–ம் ஆண்டு புற்றுநோய் மருத்துவ நிவாரண மருத்துவமனையை தொடங்கினார். இவரது சீறிய முயற்சியால் சென்னை அடையாறு புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டது. இந்தியப்பிரதமர் ஜவஹர்லால் நேரு இந்த மருத்துவமனைக்கான அடிக்கல்லை நாட்டினார்.



டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி

டாக்டர் முத்துலட்சுமி மருத்துவம் மட்டுமின்றி அரசியல் மற்றும் சமூக சீர்திருத்தங்களில் ஆர்வம் கொண்டிருந்தார். தமிழ்நாட்டில் காணப்பட்ட கொடிய பழக்கமான தேவதாசி முறையை ஒழிக்க தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தார்.

தேவதாசி முறை ஒழிப்பில் ஆர்வம் கொண்டிருந்ததால், மகாத்மா காந்தி இவரது சமூக பணிகளை பாராட்டி பேசினார். தேவதாசி முறை ஒழிப்பில் இவர் கொண்டிருந்த ஈடுபாட்டின் காரணமாக 1929–ம் ஆண்டு தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டார். தந்தை பெரியார், திரு.வி.கல்யாணசுந்தரம் போன்றவர்கள் இவரது கருத்தை தீவிரமாக ஆதரித்தனர். இதன் விளைவாக நீதிக்கட்சி அரசாங்கம் தேவதாசி ஒழிப்பு சட்டத்தை நிறைவேற்றியது.

1930–ம் ஆண்டு பூனாவில் அனைத்திந்தியப் பெண்கள் மாநாட்டை நடத்தினார். 1933 முதல் 1947 வரை இடையில் இரு வருடங்கள் தவிர தொடர்ந்து இந்திய மாதர் சங்கத் தலைவியாக இருந்தார். ஆதரவற்றவர்களுக்கு மறுவாழ்வு தரும் பொருட்டு அவ்வை இல்லம் என்ற அடைக்கல நிலையத்தை சாந்தோமில் தொடங்கினார். தற்சமயம் இவ்வில்லம் சென்னை அடையாறில் செயல்பட்டு வருகிறது. இலட்சிய வேட்கை கொண்ட எந்தப் பெண்ணுக்கும் தோல்வி இல்லை என்பதை வாழ்ந்து நிரூபித்த டாக்டர் முத்து லட்சுமி ரெட்டி 1968–ம் ஆண்டு தனது 82–வது வயதில் இந்த உலக வாழ்வைத் துறந்தார்.

## டாக்டர் எஸ். தருமாம்பாள்

படிப்பு, பதவி, பணம், அந்தஸ்து இவை எதுவுமே இல்லாமல், மக்களுக்குச் சேவை செய்வதின் மூலம் மனிதாபிமானம் என்ற ஒரு குணத்தின் மூலம் பலர் புகழ் பெற்றுள்ளனர். அவர்களில் ஒருவராக டாக்டர் எஸ்.தர்மாம்பாள். கருதப்படுகிறார். சமூக சேவையில் அதிக ஈடுபாடு கொண்ட தர்மாம்பாள் சித்த மருத்துவம் பயின்று சென்னையில் மருத்துவமனை ஒன்றை தொடங்கினார். பின்னர் பொதுச்சேவையில் ஈடுபட்டார். தஞ்சாவூருக்கு அருகில் கருன்தட்டான்குடி என்ற இடத்தில் பிறந்தார்.

தந்தை பெரியாரின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்ட இவர் விதவைகள் மறுமணம், கலப்பு மணம் மற்றும் பெண் கல்வி போன்றவற்றில் ஆர்வம் காட்டினார்.

தமிழ் இலக்கிய வளர்ச்சியிலும், தமிழ் இசை வளர்ப்பதிலும் அதிக ஆர்வம் கொண்டிருந்தார். இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு பல முறை சிறை தண்டனை பெற்றார். 1940 ஆம் ஆண்டுவரை சமுதாயத்தில் தமிழாசிரியர்களுக்கு மதிப்பு இல்லை. ஊதியம் உயர்த்தப்படவில்லை. எனவே இழவு வாரம் என்ற போராட்டத்தை தொடங்கினார். இதன் விளைவாக கல்வி அமைச்சராகஇருந்த திரு.அவிநாசிலிங்கம் செட்டியார் பிற ஆசிரியர்களுக்கு இணையான ஊதியத்தைத் தமிழ் ஆசிரியர்களுக்கும் வழங்க உத்தரவிட்டார்.

தமிழ்நாடு முழுவதும் உள்ள பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் தமிழறிவை வளர்க்கவும், அரசுத் தேர்வுகளில் அவர் நல்ல மதிப்பெண்கள் பெறவும், பேச்சாற்றல், எழுத்தாற்றலை வளர்த்துக் கொள்ளவும் சென்னை மாணவர் மன்றம் உருவாக்கப்பட்டது , இந்த அமைப்பின் தலைவராக பத்து ஆண்டுகள் பணியாற்றினார்.

இவர் தமிழ் மொழி மற்றும் தமிழ் இலக்கியத்திற்கு ஆற்றிய சேவைகளை பாராட்டி 'வீரத்தமிழன்னை' என்ற பட்டம் வழங்கப்பட்டது. இப்பட்டம் பெற்ற தருமாம்பாள் ஈ.வே ராமசாமி நாயக்கருக்கு பெரியார் என்ற பட்டத்தையும், எம்.கே. தியாகராஜ பாகவதருக்கு ஏழிசை மன்னர் என்ற பட்டத்தையும் வழங்கினார்.

தனது உழைப்பு, சிந்தனை அனைத்தையும் தமிழ், தமிழ் மொழி, தமிழிசை, தமிழ் மக்கள் இவற்றுக்காக அர்ப்பணித்த அம்மையார் தனது 69வது வயதில் 1959 ம் ஆண்டு காலமானார்..

## மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ்நாட்டில் தோன்றிய பெண் சீர்திருத்தவாதிகள் பெரும் பாலானவர்கள் தேச விடுதலைக்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டனர். இதில் சிலர் தேச விடுதலையோடு சமூக விடுதலைக்கும் பாடுபட்டனர். அவர்களில் மிக முக்கியமானவர் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார். 1883–ஆம் ஆண்டு திருவாரூரில் பிறந்த இவர் மயிலாடுதுறைக்கு அருகிலுள்ள மூவலூர் கிராமத்தில் வளர்ந்தார். எனவே மூவலூர் இராமாமிர்தம் என்றழைக்கப்பட்டார்.

இவர் இசை வேளாளர் குலத்தைச் சார்ந்தவர். பழங்காலத்தில் இக்குலத்தில்

பிறந்த பெண்கள் இறைப்பணி மற்றும் கலைப்பணிக்காக அர்பணிக்கப்பட்டனர். இச்சமூகம் காலமாற்றத்தில் சிக்கிச் சீரழிந்தது. பிரபுக்கள் மற்றும் ஜமீன் தார்களால் அவமானப்படுத்தப்பட்டனர்.

தம் குலத்துப் பெண்கள் தாழ்ந்த நிலையில் இருப்பதையும், பல்வேறு வழிகளில் துன்புறுத்தப்படுவதையும் உணர்ந்த இராமாமிர்தம் அம்மையார், அவர்களின் விடுதலைக்காக தனது வாழ்வை அர்ப்பணிக்க முடிவு செய்தார். நாடு முழுவதும் தங்கள் இனப் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை எடுத்துக் சொல்லி, அவர்களது விடுதலைக்கு ஆதரவு திரட்டினார்.

காங்கிரஸ் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டார். 1925 ஆம் ஆண்டு மயிலாடுதுறையில் இசை வேளாளர் மாநாட்டைக் கூட்டினார். இம்மாநாட்டில் தமிழறிஞர் திரு.வி.க. பெரியார், மயூரமணி சின்னையா பிள்ளை, எஸ்.இராமநாதன் போன்றோர் கலந்துகொண்டனர். இவர்கள் தேவதாசி முறைக்கு எதிராகக் குரலெழுப்பினர். இதன் விளைவாக டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம் கொண்டுவர ஆணிவேராக அமைந்தது.

தேவதாசி முறைக்கு எதிரான இவரது போராட்டம் தமிழகப் பெண்களை மட்டுமல்லாது தேசிய அளவிலும் பெண்களை விழிப்படையச் செய்வதற்கு உறுதுணையாக அமைந்தது.

சமூகப்பணிகளில் மட்டுமல்லாமல் தேசிய இயக்கத்திலும் தன்னை இணைத்துக் கொண்ட அம்மையார், பெண்கள் பெருமளவில் தேசிய இயக்கத்தில் ஈடுபட ஊக்குவித்தார். தந்தை பெரியார், இராஜாஜி, திரு.வி.க. இவர்களின் உறுதுணையால் இவர் சிறப்பாக செயலாற்றினார்.

இவரது அரிய உழைப்பையும், தியாகத்தையும் போற்றும் வகையில் தமிழக அரசு, ஏழைப் பெண்களுக்கு திருமண நிதி உதவியளிக்கும் ஒரு சமூகத் திட்டத்தை ஏற்படுத்தி அதற்கு மூவலூர் இராமாமிர்தம் அம்மாள் நினைவு திருமண உதவித் திட்டம் என்று பெயரிட்டு இவரைக் கௌரவித்தது.

எந்த உயர்ந்த இலட்சியத்துக்காகப் பொது வாழ்வில் ஈடுபட்டாரோ, அந்த இலட்சியம் முழுமையாக நிறைவேறியதைக் கண்குளிரக் கண்டு அனுபவித்த பிறகு 1962 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27ம் தேதி இந்த உலகை விட்டு மறைந்தார்.

பரம்பரை பரம்பரையாக வரும் பழக்கங்கள் நிறைந்த தமிழ் சமுதாயம் இன்றளவும் அதனுடைய பழைய மதிப்புகளைக் கொண்டுள்ளது. 1856 இல் விதவை மறுமணச் சட்டம் இயற்றப்பட்ட போதிலும் இன்றும் விதவைகள் சமுதாய விழாக்களில் புறக்கணிக்கப்படுகின்றனர். 20 ஆம் நூற்றாண்டில் நீதிக் கட்சி மற்றும் சுயமரியாதை இயக்கங்கள் கொண்டு வந்த சமுதாய முன்னேற்றக் கொள்கைகள் சட்டங்கள் மூலம் கொண்டு வரப்பட்டு விதவை மறுமணம் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தாகத் தமிழகத்தில் மாறியது. சதி ஒழிப்பு, விதவைகள் திருமணம் மற்றும் குழந்தைகள் திருமணம் ஒழிப்பு போன்றவை தமிழக வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றமாகும்.

சாதி ஏற்றத் தாழ்வு சமுதாயத்தில் மற்றுமொரு குறைபாடு ஆகும். ஆலய நுழைவு இயக்கம் இதற்கு ஒரு பொருத்தமான எடுத்துக்காட்டாகும்.

கோவில்கள் ஒரு காலத்தில் உயர்சாதியினருக்கு மட்டுமே உரியதாக இருந்தது. அங்கு தாழ்ந்த சாதியினர் நுழைய அனுமதி மறுக்கப்பட்டது. பல சீர்திருத்தவாதிகளான ஈ.வே.இராமசாமி, டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி, வள்ளலார், பாரதி, பாரதிதாசன்,மூவலூர் இராமாமிர்தம் அம்மாள் மற்றும் டாக்டர் எஸ். தர்மாம்பாள் போன்றோர் இத்தகைய சமுதாய தீய பழக்க வழக்கங்களை ஒழிக்கப் போராடினார்கள். இவ்வாறு பெண்கள் தமிழக சமுதாய மாற்றத்திற்கு பெரும் பங்காற்றியுள்ளனர்.

## பயிற்சி

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. தென்னிந்திய நல உரிமைக் கழகத்தை இவ்வாறும் அழைக்கலாம்.

அ) திராவிடக் கட்சி ஆ) ஜனதா கட்சி இ) தெலுங்கு தேசம் ஈ) நீதிக் கட்சி

2. நீதிக் கட்சியை பெரியார் மாற்றி அமைத்தது

அ) அகாலி தல் ஆ) பாட்டாளி மக்கள் கட்சி இ) திராவிடர் கழகம் ஈ) சுயராஜ்யம்

3. தமிழ்நாட்டின் தலை சிறந்த சமுதாய சீர் திருத்தவாதி

அ) ஈ.வே. ராமசாமி நாயக்கர் ஆ) நேரு

இ) காந்தி ஈ) ராஜாராம் மோகன் ராய்

4. வைக்கம் அமைந்துள்ள இடம்

அ) தமிழ்நாடு ஆ) ஆந்திரப் பிரதேசம் இ) கர்நாடகம் ஈ) கேரளா

5. சி.என். அண்ணாதுரை மக்களால் அன்போடு அழைக்கப்படுவது

அ) சாச்சா ஆ) நேதாஜி இ) அண்ணா ஈ) பெரியார்

6. திராவிட முன்னேற்றக் கழகத்தை தோற்றுவித்தவர்

அ) சி.என். அண்ணாதுரை ஆ) எம். கருணாநிதி

இ) காமராஜர் ஈ) எம்.ஜி. ராமச்சந்திரன்

7. சி.என். அண்ணாதுரைக்கு முனைவர் பட்டம் வழங்கியது

அ) அண்ணா பல்கலைக் கழகம் ஆ) அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

இ) மணிப்பால் பல்கலைக் கழகம் ஈ) பாரதியார் பல்கலைக் கழகம்

8. டாக்டர்.முத்துலட்சுமியின் சீரிய முயற்சியால் புற்றுநோய் மருத்துவமனை தொடங்கப்பட்ட இடம்

அ) அண்ணா நகர் ஆ) செங்கல்பட்டு

இ) காஞ்சிபுரம் ஈ) அடையார்

9. அகில இந்திய மகளிர் மாநாடு நடைபெற்ற இடம்

அ) பூனா ஆ) பம்பாய் இ) தானா ஈ) சதாரா

10. டாக்டர். முத்துலட்சுமியால் தொடங்கப்பட்ட அனாதை இல்லம்

அ) அன்பு இல்லம் ஆ) சரஸ்வதி இல்லம்

இ) அவ்வை இல்லம் ஈ) லட்சுமி இல்லம்

11. டாக்டர். எஸ்.தருமாம்பாள் தமிழ் ஆசிரியருக்காக நடத்திய போராட்டம்.

அ) நல்ல வாரம் ஆ) இந்தி வாரம் இ) தமிழ் வாரம் ஈ) இழவு வாரம்

12. மூவாலூர் இராமாமிர்தம் பிறந்த ஆண்டு

அ) 1885 ஆ) 1887 இ) 1889 ஈ) 1883

**ஆ. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. | நீதி | ஈ.வே.ராமசாமி பெரியார் |
| 2. | வைக்கம் வீரர் | டாக்டர்.எஸ்.தருமாம்பாள் |
| 3. | தேவதாசி முறை | மூவாலூர் இராமாமிர்தம் |
| 4. | வீரத் தமிழன்னை | டி.எம். நாயர் |
| 5. | நீதிக்கட்சி | சத்திய மூர்த்தி |
| | | டாக்டர்.முத்துலட்சுமி ரெட்டி |
| | | ஆங்கில செய்தித்தாள் |

**இ. சுருக்கமான விடையளி.**

1. நீதிக்கட்சியின் ஆட்சிப் பற்றி சுருக்கமாக விடையளி.
2. சுயமரியாதை இயக்கத்தின் நோக்கங்கள் யாவை ?
3. பெரியார் வைக்கம் வீரர் என ஏன் அழைக்கப்பட்டார் ?
4. தமிழக முதலமைச்சராக சி.என்.அண்ணாதுரை ஆற்றிய பணிகளைக் குறிப்பிடுக.
5. தேவதாசி முறை ஒழிப்பிற்கு முத்துலட்சுமி ரெட்டியின் போராட்டத்தை விளக்கு.
6. தமிழ் ஆசிரியர்களுக்காக டாக்டர். தர்மாம்பாளின் தொண்டினை விளக்கு.
7. மூவாலூர் இராமாமிர்தம் தனது சமுதாயத்திற்கு ஆற்றிய பணிகளைப் பற்றி எழுதுக.

**ஈ. தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளி.**

1. நீதிக்கட்சி

அ) நீதிக்கட்சியை தோற்றுவித்தவர் யார் ?

ஆ) நீதிக்கட்சி எப்பொழுது ஆட்சிக்கு வந்தது ?

இ) நீதிக்கட்சி எப்பொழுது தோற்கடிக்கப்பட்டது.

ஈ) நீதிக்கட்சியின் சாதனைகள் இரண்டினை எழுது.

2. சுயமரியாதை இயக்கம்.

அ) சுயமரியாதை இயக்கத்தை தோற்றுவித்தவர் யார் ?

ஆ) சுயமரியாதை இயக்கம் ஏன் தோற்றுவிக்கப்பட்டது ?

இ) இந்த இயக்கம் எப்பொழுது தோற்றுவிக்கப்பட்டது ?

ஈ) சுயமரியாதை இயக்கத்தின் தொடர் போராட்ட விளைவாக அரசு இயற்றிய சட்டங்களை எழுது.

**உ. பத்தி விடையளி.**

1. நீதிக்கட்சியின் தோற்றம் மற்றும் சாதனைகளை பற்றி ஒரு பத்தியில் விடையளி.
2. தமிழ் சமுதாயத்திற்கு டாக்டர்.முத்துலட்சுமி ஆற்றிய தொண்டுகள் அளவிடமுடியாதவை– நிருபிக்க.
3. மூவாலூர் ராமாமிர்தம் ஒரு சுதந்திர போராட்ட வீரர் மற்றும் ஒரு சமூக சீர்திருத்தவாதி– இக்கூற்றை நிரூபி.

## புவியியல்


# 1. இந்தியா – அமைவிடமும் இயற்கை அமைப்பும்

### அமைவிடம்

இந்தியா ஆசியாக் கண்டத்தின் தென் பகுதியில் அமைந்துள்ளது. இது ஒரு வளமையான நாகரிகம் கொண்ட மிகப் பெரிய நாடு ஆகும். இது தன்வரையறுக்கப்பட்ட சாதி முறைகளாலும், கொள்கைகளாலும், பாரம்பரியம் மிக்க மதச் சகிப்புத் தன்மையாலும், வாழ்வதற்கேற்ற சூழலாலும், காலவரையறையற்ற பண்பாட்டை பேணுதலாலும் மற்ற உலக நாடுகளை தன்பால் ஈர்த்து வியக்கச் செய்கிறது. இந்தியக் கலாச்சாரத் தாக்கம் இந்திய எல்லையையும் தாண்டி வெகுகாலத்திற்கு முன்னரே அயல்நாடுகளையும் சென்றடைந்துள்ளது.

உலகின் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கும், வளர்ந்து வரும் நாடுகளுக்கும் இடையே இந்தியா ஒரு பாலமாக அமைந்து கீழை நாடுகளையும், மேலை நாடுகளையும் இணைக்கிறது. இந்தியா தமது கலாச்சாரத்தினால் எவ்வளவு பலம் பெற்றுள்ளதோ அவ்வளவு பலத்தை தமது புவியியல் அமைப்பாலும் பெற்றுள்ளது. வரலாற்றுக் காலத்தில் இந்தியா, "பாரதம்" என்றும் "இந்துஸ்தான்" என்றும் அழைக்கப்பட்டது. முற்காலத்தில் வலிமை வாய்ந்த அரசனாக இருந்த பரதன் என்பவரைப் பின்பற்றி இந்தியாவை பாரதம் என்றும் சிந்து ஆற்றின் பெயரால் "இந்துஸ்தான்" என்றும் அழைக்கப்பட்டது. இதன் பின் வந்த ஐரோப்பியர்கள் 'சிந்து' என்ற சொல்லின் அடிப்படையிலேயே இந்தியா என்று பெயரிட்டனர். தற்பொழுதும் இந்தியா என்ற பெயரால் அதிகாரப் பூர்வமாக மற்ற நாடுகளால் அழைக்கப்பட்டு வருகிறது.

உலகில் இந்தியாவின் அமைவிடம்



## இந்தியா, ஒரு துணைக் கண்டம்

கண்டம் என்பது பல்வேறு வகையான

1) இயற்கை அமைப்புப் பிரிவுகளையும்

2) காலநிலைகளையும்

3) இயற்கைத் தாவரங்களையும்

4) கனிம வளங்களையும்

5) மனித வாழிடங்களையும்

6) கலாச்சார கூறுகளையும்

7) முற்கால இனங்களையும் மொழிகளையும்

8) மிகப்பரந்த நிலப் பரப்பையும் கொண்டது.

ஒரு கண்டத்திற்குரிய பண்புகள் அனைத்தும் இந்தியாவில் காணப்படுவதால், இந்தியாவை **'ஒரு துணைக் கண்டம்'** என்று அழைக்கிறோம்.

### நினைவு கூறுவோம் !


அட்சக்கோடுகளும், தீர்க்கக் கோடுகளும் ஓர் இடத்தின் இருப்பிடத்தை அறிந்துகொள்ள உதவுகின்றன.

## அமைவிடமும் பரப்பளவும்

இந்தியா 8° 4’ வட அட்சம் முதல் 37° 6’ வட அட்சம் வரையிலும் 68° 7’ கிழக்கு தீர்க்கம் முதல் 97° 25’ கிழக்கு தீர்க்கம் வரையிலும் பரவியுள்ளது. 23° 30’ வடக்கு அட்சமான கடகரேகை இந்தியாவின் குறுக்காக சென்று நாட்டை இரு பகுதிகளாக பிரிக்கின்றது.

இந்தியா 32,87,263 ச.கி.மீ பரப்பளவை கொண்டுள்ளது. 2001 ல் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 1028 மில்லியன் மக்கள்தொகையை பெற்றுள்ளது. இந்தியா வடக்கே **காஷ்மீர்** முதல் **கன்னியாகுமரி**

இந்தியாவும் அதன் எல்லைகளும்



வரை 3214 கி.மீ. நீளத்தையும், மேற்கே குஜராத் முதல் அருணாசலபிரதேசம் வரை 2933 கி.மீ. அகலத்தையும் கொண்டுள்ளது. இந்தியக் கடற்கரையின் நீளம் 6100 கி.மீ.

ஐரோப்பிய நாடுகளுடன், சூயஸ் கால்வாய் வழியாகவும், சீனா, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா நாடுகளுடன் மலாக்கா நீர்ச்சந்தி வழியாகவும், வணிகம் மற்றும் பொருளாதார செயல்களில் ஈடுபட இந்தியாவின் அமைவிடம் ஏதுவாக உள்ளது.

### இந்தியாவின் உருவ அளவை நினைவில் கொள் !

ஆசியாவிலேயே இரண்டாவது மிகப் பெரிய நாடு இந்தியா. இது பாகிஸ் தானைவிட 4 மடங்கு பெரியது. ஜப்பானை விட 8 மடங்கு பெரியது. இங்கிலாந்தைவிட 12 மடங்கு பெரியது. ஆனால், ஐக்கிய அமெரிக்க நாட்டை விட 3 மடங்கு சிறியது.

### இந்தியத் திட்டநேரம்

தீர்க்கக் கோடுகள் ஓர் இடத்தின் நேரத்தைக் கணக்கிடப் பயன்படுகின்றது. இந்தியாவின் நடுவே அலகாபாத் வழியாகசெல்லும் $82^0$30' கிழக்குத் தீர்க்கம் இந்தியத் திட்ட நேரத்தை கணக்கிட உதவும் தீர்க்கமாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. இந்தியத் திட்ட நேரம் கிரின்விச் $0^0$ தீர்க்கநேரத்தைவிட 5 மணி 30 நிமிடம் முன்னதாக உள்ளது.

1947 ஆம் ஆண்டு இந்திய சுதந்திரத்திற்குப்பின் இந்திய அரசு நாடு முழுமைக்குமான அலுவலக நேரமாக இந்திய திட்ட நேரத்தையே பயன்படுத்தி வருகிறது.

### இந்தியத் திட்ட நேரத்தை கடைபிடிக்க வேண்டிய காரணங்களை அறிவாயா ?

இந்தியாவின் கிழக்கு மேற்கு பரவல் சுமார் $30^0$ தீர்க்கங்களைக் கொண்டது. இம்மிகப்பெரிய தீர்க்கப் பரவலால் சூரியன் இந்தியாவின் மேற்கு பகுதியைக் காட்டிலும் கிழக்குப் பகுதியில் 2 மணிநேரம் முன்னதாக உதிக்கவோ அல்லது மறையவோ செய்கின்றது. இதனால் நம் நாட்டில் ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு நேரமிருந்தால் குழப்பம் நேரிடும். இதனைத் தவிர்ப்பதற்காக பெரும்பாலும் நாட்டின் நடுவில் செல்லும் $82^0$ 30' கிழக்குத் தீர்க்கத்தை தேர்வு செய்து அப்பகுதியில் நிலவும் நேரத்தையே நம்நாடு முழுவதற்கும் திட்டநேரமாக பயன்படுத்தப்படுகிறது.

### இந்தியாவும் அதன் அண்டை நாடுகளும்

இந்தியாவில் கிழக்கே உள்ள மலைத் தொடர்கள் இந்தியாவை மியான்மாரிலிருந்து பிரிக்கிறது. இந்தியாவின் அண்டைநாடுகள் பின்வருமாறு: 1. மேற்கிலுள்ள பாகிஸ்தான் 2.கிழக்கில் ஆப்கானிஸ்தான், நேபாளம், பூடான் மற்றும் சீனா 3.கிழக்கில் வங்காளதேசம் மற்றும் மியான்மர்.

இந்தியா தென்மேற்கு திசையில் அரபிக் கடலாலும், கிழக்கு மற்றும் தென் கிழக்கில் வங்காளவிரிகுடாவாலும், தெற்கில் இந்தியப் பெருங்கடலாலும் சூழப்பட்டுள்ளது. இந்திய தீபகற்பத்தின் தென் முனையாக கன்னியாகுமரி அமைந்துள்ளது.

இந்தியாவிலிருந்து தெற்கில் உள்ள இலங்கை பாக் நீர்ச்சந்தி பிரிக்கிறது. இந்துகுஷ் மற்றும் காரகோரம் மலைகளைக் கொண்ட இமயமலைத் தொடர்கள் இந்தியாவின் வடக்கு இயற்கை எல்லையாக அமைந்து உள்ளன.

வங்காளவிரிகுடாவில் உள்ள அந்தமான் நிக்கோபார் தீவுகளும், அரபிக்கடலில் உள்ள இலட்சத் தீவுகளும் இந்திய யூனியன் பிரதேசங்களாக அமைந்துள்ளன.

### வேற்றுமையில் ஒற்றுமை

1. இந்தியாவில் மிக உயர்ந்த மலைச் சிகரங்கள் முதற்கொண்டு மிகக் குறைந்த சமவெளிகள் வரை தனித்துவம் மிக்க நில அமைப்புக்களைக் கொண்டுள்ளது. உதாரணமாக இந்தியாவின் மிக உயர்ந்த மலைச்சிகரமாக விளங்கும் K2 எனப்படும் காட்வின்ஆஸ்டின் வட

இந்தியாவிலும், மிகத் தாழ்வான கடற்கரைச் சமவெளிகள் தென்னிந்தியாவிலும் காணப்படுகின்றன.

**இமயமலையின் மிக உயர்ந்த சிகரம் எது ?**

நேபாளத்திலுள்ள எவரெஸ்ட் சிகரம் இமயமலையின் மிக உயர்ந்த சிகரமாகும்.

இதன் உயரம் கடல் மட்டத்திலிருந்து 8848 மீ ஆகும்.

2. இந்தியா வெப்ப மண்டலத்திலிருந்து மித வெப்ப மண்டலம் வரை மாறுபட்ட காலநிலையைக் கொண்டுள்ளது. மிக அதிக மழை பெறும் பகுதியான மேகாலயாவிலுள்ள சிரபுஞ்சியும், மிகக் குறைந்த மழை பெறும் பகுதியான தார் பாலைவனமும் இங்குதான் அமைந்து உள்ளது.

3. மேற்கு தொடர்ச்சி மலையில் ஈரமிக்க அடர்ந்த வெப்ப மண்டலக் காடுகளும் மேற்கு வங்கத்தில் மாங்குரோவ் மரங்கள் கொண்ட சுந்தரவனங்களும், தார் பாலைவனத்தின் புதர்களும் ஆங்காங்கே பரவிக்காணப் படுகின்றன.

4. வேறுபட்ட இயற்கைச் சூழ்நிலையும், காலநிலையும் இந்தியாவை பல்வேறு வகையான தாவரங்களுக்கும், விலங்குகளுக்கும் உகந்த ஓர் வாழிடமாகத் திகழச் செய்கின்றது.

5. இந்தியா, எக்கடவுளையும் வழிபட முழுச் சுதந்திரமும் அளிக்கும் ஓர் மதச் சார்பற்ற நாடு. பல கலாச்சார மாறுபாடுகளுடன் இந்திய மக்கள் இந்து, கிறிஸ்துவம் , இஸ்லாமியம், சீக்கியம், புத்தம், ஜைனம் மற்றும் ஜொராஸ்டிரியம் போன்ற மதங்களைப் பின்பற்றி வாழ்கின்றனர். இவ்வாறு இந்தியாவில் பல வேற்றுமைகள் நிறைந்த இயற்கைச் சூழ்நிலை, மதங்கள் மற்றும் இனங்கள், இருப்பினும் 'இந்திய கலாச்சாரம்' மக்கள் அனைவரையும் ஒன்று சேர்க்கிறது. இதனால்தான் இந்தியா வேற்றுமையில் ஒற்றுமை நிறைந்த நாடு என அறியப்படுகின்றது.

எப்போதெல்லாம் பிரச்சனைகள் எழுகின்றனவோ அப்போதெல்லாம் மக்கள் தங்களிடையேயுள்ள வேற்றுமைகளை உதறிவிட்டு, ஒன்று கூடி நின்று பிரச்சனைகளை எதிர் கொள்கின்றனர். இதற்கு சிறந்த எடுத்துகாட்டுகளாக, கார்கில் படையெடுப்பின் போதும், இயற்கை சீற்றங்களான சுனாமியும், வெள்ளமும் ஏற்பட்டபோதும் மக்கள்ஒன்று கூடியதைக் கூறலாம்.

நம் கலாச்சாரப் பண்புகளைப் பாதுகாத்து வருவதும் அவற்றை நம் நாட்டினர் அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துக் கூறுவதும் நம் அனைவரின் கடமையாகும். அத்துடன் நாம் அனைவரும் இந்தியர் என்பதை பெருமையுடன் நிரூபிப்பதும் நமது கடமையே.


## இந்தியா – அரசியல் பிரிவுகள்

இந்தியா 28 மாநிலங்களாகவும், 7 யூனியன் பிரதேசங்களாகவும், மொழி அடிப்படையில் நிர்வாக வசதிக்காக பிரிக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவின் இயற்கையமைப்பு

ஒரு நாட்டின் இயற்கை நிலத் தோற்றங்களைப் பற்றி விவரிப்பதே இயற்கையமைப்பு எனப்படும். இந்தியா பெரிதும், மாறுபட்ட நிலத்தோற்றங்களைக் கொண்ட நாடு ஆகும். இந்திய தீபகற்ப பீடபூமி புவியிலுள்ள நிலையான, தொன்மையான பாறை அமைப்புகளில் ஒன்றாக விளங்குகிறது. இமயமலைகளும் பெரும் சமவெளிகளும் இந்தியாவில் அமைந்துள்ளன. பல்வேறு புவியியல் காலகட்டங்களில், பல்வேறு புவியியல் செயல் முறைகளினால் உருவான பலதரப்பட்ட இந்திய இயற்கை அமைப்புப்

# இந்தியா – அரசியல் பிரிவுகள்



## மாநிலங்களைப் பற்றிய தகவல்கள்

| வ.எண் | மாநிலங்கள் | தலைநகரம் | பரப்பு ச.கி.மீ | மக்கள் தொகை (மில்லியனில்) 1 மி = 10 இலட்சம் | 2001 மக்கள் தொகை அடர்த்தி/ ச.கி.மீ |
|---|---|---|---|---|---|
| 1 | ஆந்திரபிரதேசம் | ஹைதராபாத் | 275.008 | 76 | 275 |
| 2 | அருணாச்சலபிரதேசம் | இட்டாநகர் | 83.743 | 1.1 | 13 |
| 3 | அஸ்ஸாம் | திஸ்பூர் | 78.483 | 2.7 | 340 |
| 4 | பீகார் | பாட்னா | 99.200 | 83 | 880 |
| 5 | சட்டீஸ்கர் | ராய்ப்பூர் | 135.194 | 21 | 154 |
| 6 | கோவா | பனாஜி | 3,702 | 1.3 | 363 |
| 7 | குஜராத் | காந்திநகர் | 196.024 | 50 | 258 |
| 8 | ஹரியானா | சண்டிகர் | 44.212 | 21 | 477 |
| 9 | இமாச்சலபிரதேசம் | சிம்லா | 55.673 | 6 | 109 |
| 10 | ஜம்மு–காஷ்மீர் | ஸ்ரீநகர், ஜம்மு | 222.236 | 10 | 99 |
| 11 | ஜார்கண்ட் | ராஞ்சி | 74.677 | 26 | 338 |
| 12 | கர்நாடகா | பெங்களூர் | 191.791 | 52 | 275 |
| 13 | கேரளா | திருவனந்தபுரம் | 38.863 | 31 | 819 |
| 14 | மத்தியபிரதேசம் | போபால் | 308.252 | 60 | 196 |
| 15 | மகாராஷ்டிரம் | மும்பை | 307.690 | 96 | 314 |
| 16 | மணிப்பூர் | இம்பால் | 22.327 | 2 | 107 |
| 17 | மேகாலயா | சில்லாங் | 22.429 | 2 | 103 |
| 18 | மிசோரம் | ஐஸ்வால் | 21.081 | 0.8 | 42 |
| 19 | நாகாலாந்து | கோஹிமா | 16.579 | 1 | 120 |
| 20 | ஒரிசா | புவனேஸ்வர் | 155.707 | 36 | 236 |
| 21 | பஞ்சாப் | சண்டிகர் | 50.362 | 24 | 482 |
| 22 | ராஜஸ்தான் | ஜெய்ப்பூர் | 343.239 | 56 | 165 |
| 23 | சிக்கிம் | காண்டக் | 7096 | 0.5 | 76 |
| 24 | தமிழ்நாடு | சென்னை | 130.058 | 62 | 478 |
| 25 | திரிபுரா | அகர்த்தாலா | 10.486 | 3 | 304 |
| 26 | உத்தர்கண்ட் | டேராடூன் | 51.125 | 8 | 159 |
| 27 | உத்திரபிரதேசம் | லக்னோ | 243.286 | 166 | 689 |
| 28 | மேற்கு வங்களம் | கொல்கத்தா | 88.752 | 80 | 904 |
| | | **யூனியன் பிரதேசங்கள்** | | | |
| 1 | டெல்லி | டெல்லி | 1.438 | 13 | 9294 |
| 2 | அந்தமான் – நிகோபர் தீவுகள் | போர்ட் பிளேயர் | 8.249 | 0.3 | 43 |
| 3 | சண்டிகர் | சண்டிகர் | 114 | 0.9 | 7903 |
| 4 | தாதர் – நாகர்கவேலி | சில்வாசா | 491 | 0.2 | 449 |
| 5 | டாமன் – டையூ | டாமன் | 112 | 0.1 | 1411 |
| 6 | இலட்சத்தீவு | கவரத்தி | 32 | 6 | 1894 |
| 7 | புதுச்சேரி | புதுச்சேரி | 492 | 0.9 | 2029 |

பிரிவுகளைப் பற்றி நாம் புரிந்து கொள்வது மிகவும் அவசியம்.

## இந்தியாவின் இயற்கை அமைப்பு பிரிவுகள்

இந்திய நிலப்பகுதி பல மாறுபட்ட புவியியல் நிலத் தோற்றங்களைப் பெற்றுள்ளது. நிலத்தோற்றங்களின் அடிப்படையில் இந்தியாவின் இயற்கையமைப்பை ஐந்து பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

அவையாவன:

1) வடக்கு மலைகள்
2) வடஇந்திய பெரும் சமவெளிகள்
3) தீபகற்ப பீடபூமி
4) கடற்கரைச் சமவெளிகள்
5) தீவுகள்

## அறிந்து கொள்வோம்

இந்தியாவின் நிலப் பரப்பில் 29.3% மலைகளாகவும், குன்றுகளாகவும், 27.7% பீடபூமிகளாகவும் 43% சமவெளிகளாகவும் உள்ளது.


## 1) இமயமலைகள்

வடக்கு மலைகள் என்பது இமய மலைகளை குறிப்பதாகும். இது உலகிலேயே மிக உயர்ந்த மலைகளாகும். இம்மலைகளின் உயர்ந்த சரிவுப் பகுதிகள் எப்போதும் நிரந்தமான பனியால் மூடியுள்ளதால் இமயமலைகளை 'பனி உறைவிடம்' என்று அழைப்பார்கள்.

இமயமலைகள் 'வில்' போன்ற வடிவத்தில் 2500 கி.மீ நீளத்திற்கு மேற்கு–கிழக்காக அமைந்துள்ளன. மேற்கே ஜம்மு காஷ்மீரில் உள்ள சிந்து பள்ளத்தாக்கிலிருந்து கிழக்கே அருணாச்சலப் பிரதேசத்திலுள்ள பிரம்மபுத்திரா பள்ளதாக்கு வரை நீண்டு செல்கின்றன. இங்குள்ள பல மலைகள் கடல் மட்டத்திலிருந்து 8000 மீட்டருக்கு மேல் உயரம் கொண்டவை. இம்மலைகள் ஜம்மு–காஷ்மீர், இமாச்சலப்பிரதேசம், உத்திரப்பிரதேசம், உத்ராஞ்சல், மேற்கு வங்காளம், சிக்கிம் மற்றும் அருணாச்சலப்பிரதேசம் ஆகிய மாநிலங்களிடையே பரவியுள்ளன.

## இமயமலை உருவான விதம்

இமயமலைகள் ஒரே தொடர்ச்சியான மலைத்தொடர் அல்ல. ஆனால் பல மலைகள் ஏறத்தாழ இணையாகவும் பள்ளதாக்குகளாலும் பீடபூமிகளாலும் பிரிக்கப்பட்டுள்ளன. இவை எவ்வாறு உருவாயின என்பதைப் பார்ப்போம்.




பல மில்லியன் வருடங்களுக்கு முன்பு ஒரே ஒரு நிலப்பகுதிதான் இருந்தது. இதைச்சுற்றி பெருங்கடல்கள் சூழ்ந்திருந்தன. இவ்வாறு இருந்த நிலப்பகுதிக்கு 'பாஞ்சியா' என்றும் அதைச் சுற்றியுள்ள நீர்ப் பகுதிக்கு 'பாந்தலாசா' என்றும் அழைக்கப்பட்டது. இவ்வாறு பரந்த நிலப்பகுதி இரு பகுதிகளாகப் பிரிந்தது. வடபகுதி 'அங்காரா' என்றும் தென்பகுதி 'கோண்டுவானா' என்றும் பெயரிடப்பட்டன. இந்த இரண்டு நிலப்பகுதியை பிரிக்கும் நீர்ப்பகுதிக்கு 'டெத்தீஸ் கடல்' என்று அழைக்கப்பட்டது. இக்கடல் கிழக்கு மேற்காக பரவியிருந்தது. அங்காரா மற்றும் கோண்டுவானா பகுதியிலிருந்து உருவாகி வரும் ஆறுகள், தான் கொண்டு வந்த படிவுகளை டெத்தீஸ் கடலில் படியவைத்தன. நீண்ட காலத்திற்கு பிறகு இப்படிவுகள் புவியின் உள்இயக்க

விசைகளால் உயர்ந்து இமயமலைகள் என்றழைக்கப்படும் மடிப்பு மலைகளை உருவாக்கின.

இந்தியாவிலுள்ள ஆரவல்லி மலைத் தொடர் உலகின் பழமையான மலைத் தொடர்களுள் ஒன்றாகும். இமயமலை, மடிப்பு மலைகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்

இமயமலைகளை மேற்கிலிருந்து கிழக்காக மேலும் மூன்று உட்பிரிவுகளாக பிரிக்கலாம். அவையாவன

அ) மேற்கு இமயமலைகள் ஆ) மத்திய இமயமலைகள் இ) கிழக்கு இமயமலைகள்

### அ) மேற்கு இமயமலைகள்

வடமேற்கு இந்தியாவிலுள்ள பாமீர் முடிச்சிலிருந்து கிழக்காக காரகோரம் மலைகள் செல்கின்றன. தென்மேற்கு காஷ்மீரில் அமைந்துள்ள இம்மலைகள் ஆப்கானிஸ்தானத்திற்கும், சீனாவிற்கும் இடையில் இந்திய எல்லைகளாக அமைந்துள்ளன. உலகின் இரண்டாவது உயர்ந்த சிகரமான k2 எனப்படும் காட்வின் ஆஸ்டின் இம்மலைத்தொடரில் அமைந்துள்ளது. தற்போது காரகோரம் கணவாய் சிறப்பான இடத்தைப் பெறுகிறது. பல்டோரா மற்றும் சியாச்சின் எனும் இரு பெரும் பனியாறுகளும் காரகோரம் மலைகளின் தெற்கே அமைந்துள்ளன. லடாக் மற்றும் ஜாஸ்கர் என்ற இரு மலைத் தொடர்கள் காரகோரம் மலைத் தொடர்களுக்கு இணையாக அமைந்துள்ளன. லடாக், மலைத்தொடரின் தொடர்ச்சி லடாக் பீடபூமி எனவும் அதுவே இந்தியாவிலுள்ள மிக உயர்ந்த பீடபூமியாகவும் அமைகிறது. இது வடமேற்கு காஷ்மீரில் அமைந்துள்ளது.

### ஆ) மத்திய இமயமலைத் தொடர்கள்


பாமீர் முடிச்சிலிருந்து தென்கிழக்கு திசை நோக்கிச் செல்லும் இமயமலைகளை மத்திய இமயமலைகள் என்கிறோம். இம்மலைகளின் அகலம் மேற்கில் 400 கி.மீ. முதல் கிழக்கே செல்லச் செல்ல 50 கி.மீ. வரை மாறுபடுகிறது. இதன் உயரம் மேற்கிலிருந்து கிழக்காக அதிகரித்துக்கொண்டே செல்கிறது. இமயமலைகள் இளம் மடிப்பு மலைகளால் ஆனது என்பதை மத்திய இமயமலைகளிலுள்ள உயர்ந்த சிகரங்கள் அதிகமாக இருப்பதைக் கொண்டே அறியலாம். இம்மலைத்தொடர்கள் பள்ளத் தாக்குகளாலும், பீடபூமிகளாலும் அறுபட்டுக் காணப்படுகின்றன. மத்திய இமயமலைகளில் வடக்கு தெற்காக மூன்று இணையான மலைத்தொடர்கள் காணப்படுகின்றன.

1. ஹிமாத்ரி
2. ஹிமாச்சல்
3. சிவாலிக்


### 1. ஹிமாத்ரி

இமயமலையின் வடக்கு மலைத்தொடரை ஹிமாத்ரி என்கிறோம். இதன் சராசரி உயரம் 6000 மீ ஆகும். இம்மலைத்தொடர் வடக்கே சிந்து பள்ளத்தாக்கிலிருந்து தென்கிழக்கில் உள்ள பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கு வரை நீண்டு செல்கின்றன. உலகிலுள்ள மிக உயர்ந்த சிகரங்களில் பல இம்மலைத் தொடரில் அமைந்துள்ளன. உலகிலேயே மிக உயரமுள்ள 8848 மீ உயரம் கொண்ட எவரெஸ்ட் மலைச்சிகரம் இங்கு அமைந்துள்ளது. கஞ்சன்ஜங்கா (8598 மீ) நங்கபர்வத் (8126மீ) தவளகிரி (8167மீ) மற்றும் நந்ததேவி (7817மீ) ஆகிய சிகரங்களும் இங்கு அமைந்துள்ளன. பல ஆறுகளின் உருவாக்கத்திற்கு ஆதாரமாக விளங்கும் பனியாறுகள் இங்கு அமைந்துள்ளன. உதாரணமாக கங்கையின் பிறப்பிடமான கங்கோத்ரி பனியாறும், யமுனையின் பிறப்பிடமான யமுனோத்திரி பனியாறும் இங்கே அமைந்துள்ளன. மலைகளின் குறுக்கே காணப்படும் இயற்கைப் பாதைகளை கணவாய்கள் என்கிறோம். அவை அண்டை நாடுகளுக்குச் செல்ல உதவும் பாதைகளாக உள்ளன. எடுத்துக்காட்டாக காஷ்மீரிலுள்ள சொஜிலா கணவாய், இமாச்ச பிரதேசத்திலுள்ள ஷிப்கிலா

## இந்தியா – இயற்கை பிரிவுகள்




## வடக்கு மலைகள்




### மலைச் சிகரங்கள்

1. ம. K2 ( 8611 மீ )
2. நங்க பர்வத் ( 8126 மீ )
3. காமெட் ( 7756 மீ )
4. நந்ததேவி ( 7817 மீ )
5. தவளகிர ( 8172 மீ )
6. ம.எவரெஸ்ட் ( 8848 மீ )
7. கஞ்சன்ஜங்கா ( 8598 மீ )
8. நம்சபர்வ ( 7756 மீ )

கணவாய், சிக்கிமில் உள்ள நாதுலா மற்றும் ஜலப்புலா போன்றவை ஹிமாத்திரியிலுள்ள முக்கிய கணவாய்களாகும்.

### 2. இமாச்சல்

வடக்கே இமாத்ரி மலைக்கும் தெற்கே சிவாலிக் மலைக்கும், இடையே இமாச்சல் மலைத்தொடர் அமைந்துள்ளது. இதன் சராசரி அகலம் 80 கி.மீ ஆகும். இதன் சராசரி உயரம் 3700 மீ முதல் 4500 மீ வரை மாறுபடுகிறது. இது குன்றுகளையும் பிளவுபட்ட மேட்டு நிலங்களையும் மிகவும் கரடுமுரடான தரையமைப்பையும் கொண்டது. இப்பகுதியில் உள்ள நீண்ட மலைத் தொடராக காஷ்மீரின் பீர்பாஞ்சால் தொடர் உள்ளது. இமாச்சலப் பிரதேசத்தில் ஜம்மு–காஷ்மீரில் இருந்து வரும் தவ்லதார் மலைத்தொடர் நீண்டு செல்கிறது. இம்மலைத்தொடர்களுக்கு இடையே காஷ்மீர், காங்கிரா, குலு பள்ளத்தாக்குகள் அமைந்துள்ளன. புகழ்பெற்ற மலை வாழிடங்களான ஸ்ரீநகர் பாகல்கம், குல்மார்க், மூசோரி மற்றும் நைனிடால் போன்றவைகளும் இங்கு அமைந்துள்ளன. புனித இடங்களான அமர்நாத், கேதார்நாத், பத்ரிநாத் மற்றும் வைஷ்ணவிதேவி கோயில்களும் சிறப்பு மிக்க இடங்களாக இமாச்சல் மலைத்தொடரில் அமைந்துள்ளன.

### 3. சிவாலிக்

சிவாலிக் இமயமலையின் தென்பகுதியில் சிவாலிக் மலைகள் உள்ளன. இதன் சராசரி உயரம் 1000 மீ ஆகும். இது களிமண்ணாலும், மென்பாறைகளாலும் ஆன தொடர்ச்சியற்ற மலையாகும். குறுகலான நீண்ட டூன் எனப்படும் பள்ளத்தாக்குகள் சிவாலிக் மலைத்தொடரில் காணப்படுகின்றன. சிறந்த எடுத்துக்காட்டாக டேராடூனைக் கூறலாம். ஆறுகளால் கொண்டுவரப்படும் கூழாங்கற்கள், பாறைகளும் சிவாலிக் மலைகளின் அடி வாரத்தில் படிய வைக்கப்படுகின்றன சிவாலிக்கின் தென்பகுதியில் மென்துகள்களான படிவுகள் தராய் சமவெளியை உருவாக்குகின்றன. இது அடர்ந்த காடுகள் வளர்வதற்கும் சதுப்பு நிலங்கள் உருவாவதற்கும் துணைபுரிகின்றன.

### இ) கிழக்கு இமயமலைகள்

பிரம்மபுத்திரா ஆறு இமயமலைகளின் கிழக்கோரப் புவி எல்லையாக அமைகிறது. இந்தியாவின் கிழக்கு எல்லைகளுடன் உள்ள இம்மலைகளை 'பூர்வாச்சல்' என்று அழைக்கின்றோம். இவை நடுத்தர உயரம் கொண்டவை. வடக்கில் பட்காய் மற்றும் நாகா குன்றுகளும், தெற்கில் மீசோ குன்றுகளும் கிழக்கு இமயமலையில் அடங்கியுள்ளன. இம்மலைகள் இடையில் மேற்கு முகமாக திரும்பி மேகலாயாவில் உள்ள வங்கதேச எல்லை வழியாகச் செல்கிறது. இங்கு ஜெயந்தியா, காரோ மற்றும் காசி குன்றுகள் கிழக்கு மேற்காக காணப்படுகின்றன.

### 2. வட பெரும் சமவெளிகள்

இமயமலையின் தெற்கே அமைந்துள்ளவை வட பெரும் சமவெளிகளாகும். இவை சிந்து கங்கை மற்றும் பிரம்மபுத்திரா ஆறுகளின் படிவுகளால் உருவானதாகும். இச்சமவெளி 2400 ச.கி.மீ. நீளம் கொண்டது. ஏறத்தாழ 7 இலட்சம் கி.மீ. அளவிற்கு பரவியுள்ளது. இப்படிவுகள் பாபர் எனப்படும் கரடுமுரடான படிவுகளையும், தராய் எனப்படும் சதுப்புப் படிவுகளையும் பங்கார் எனப்படும் பழைய வண்டல் படிவுகளையும் காடர் எனப்படும் புதிய வண்டல் படிவுகளையும் கொண்டது. பாபர் மண் படிவுகள் மலையடிவாரத்தில் ஏறத்தாழ 8 முதல் 16 கி.மீ வரை அகலத்திற்கு படிந்துள்ளது மலைகளிலிருந்து வரும் ஆறுகள் தாங்கள் கொண்டு வரும் படிவுகளை வண்டல் விசிறிகளாக மலையடிவாரங்களில் படிய வைக்கின்றன. இப்படிவுகளில் நுண் துளைகள் அதிகமாக உள்ளதால், அதன் வழியாக ஓடும் ஆறுகள் உள்வாங்கப்பட்டு, நிலத்தடி நீராக ஓடுகின்றன. இதனால் ஆற்றின் மேற்பரப்பு வறண்ட ஆற்றுப் பகுதியாகக் காணப்படுகிறது.




## தராய்

தராய் என்பது சேறும், சகதியும் கொண்ட ஒரு நிலப்பகுதி ஆகும். பாபர் படிவுகளில் மறைந்திருந்த ஆறுகள் மீண்டும் இப்பகுதியில் தோன்றுகின்றன. இத்தராய், பாபர் பகுதிக்கு தெற்கில் அமைந்துள்ளது. இது சுமார் 15 கி.மீ. முதல் 30 கி.மீ வரை அகலம் கொண்டது. இது ஈரப்பதம் கொண்ட பகுதியாகும். இது காடுகள் வளர்வதற்கும், பல்வேறு விதமான காட்டு விலங்குகள் வாழ்வதற்கும் துணைபுரிகின்றன. பெரும்பாலான தராய் பகுதிகள் தோட்டப் பகுதிகளாக மாற்றப்பட்டு வருகின்றன.

பங்கார் என்பது வண்டல் படிவுகளால் உருவான நிலத்தோற்றம். இங்குள்ள படிவுகள் யாவும் பழைய வண்டல் மண்ணால் ஆனவை. இவை வெள்ளப்பெருக்குச் சமவெளிகளில் அமைந்துள்ளன. இவை பெரும்பாலும் களிமண்ணால் ஆனவை.

காடர் என்பது ஆறுகளால் கொண்டு வரப்படும் புதிய வண்டல் மண். இது வெள்ளப் பெருக்கு சமவெளியின் இரு கரைகளின் மீதும் படியவைக்கப்படும் படிவுகளாகும். வெள்ளப் பெருக்கு ஏற்படும் காலங்களில் இப்படிவுகள் மீது மேலும் புதிய படிவுகள் வந்து சேருகின்றன.

வட இந்தியச் சமவெளியை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன

1. ராஜஸ்தான் சமவெளி
2. பஞ்சாப்–ஹரியானா சமவெளி
3. கங்கைச் சமவெளி
4. பிரம்மபுத்ரா சமவெளி

## 1. ராஜஸ்தான் சமவெளி

ராஜஸ்தான் சமவெளி, ஆரவல்லி மலைத்தொடருக்கு மேற்கில் அமைந்துள்ளது. இது சராசரியாக 300 கி.மீ. அகலத்துடன், ஏறத்தாழ 640 கி.மீ. தூரத்திற்குப் பரவியுள்ளது. மூன்றில் இரண்டு பகுதி பாலைவனமாக காணப்படும் மேற்கு ராஜஸ்தான் இச்சமவெளியில் அடங்கும். இது கடல் மட்டத்திலிருந்து சுமார் 300 மீட்டர் உயரம் கொண்டது. பொதுவாக பாலைவனத்தின் கிழக்குப் பகுதி பாறைகளாகவும், மேற்குப் பகுதி நகரும் மணல் திட்டுகளாகவும் உள்ளன.

ஆரவல்லி மலைத்தொடரிலிருந்து உருவாகும் பற்பல பருவகால நீரோடைகள், இச்சமவெளியில் காணப்படுகின்றன. இப்பகுதியின் முக்கிய ஆறாகத் திகழ்வது 'லூனி ஆறு'. இது கட்ச் குடாவில் கலக்கிறது. லூனி ஆற்றின் வடபகுதி உள்நாட்டு வடிகால் அமைப்புகள் கொண்டு பெரும் பகுதியாக காணப்படுகிறது. வறண்ட ஆற்றுப் படுகைகள் பலவற்றையும் இங்கு காணலாம்.

**ஆறு எவ்வாறு மறைகிறது ?**

சமீபத்திய புவி அமைப்பியல் வரலாற்றுக் காலத்தில் பல ஆறுகள் மறைந்து போயின. சில ஆறுகள் தங்களது போக்கை மாற்றிக்

கொண்டன. சில ஆறுகள் முழுவதுமாக மறைந்தே போயின. வேத காலத்திலும் வேதத்திற்கு முற்பட்ட காலத்திலும் வலிமையான ஆறாக இருந்த 'சரஸ்வதி ஆறு' பெருகி வரும் பாலைவனப் பரப்பிற்குள் சிறிது சிறிதாக மறைந்து போயிற்று. தற்போது உள்ள 'காக்ரா' ஆறு மறைந்துபோன சரஸ்வதி ஆற்றின் தொடர்ச்சி என்று நம்பப்படுகிறது.

பல உப்பு ஏரிகளும் ராஜஸ்தான் சமவெளியில் அமைந்துள்ளன. இவற்றுள் ஜெய்ப்பூருக்கு மேற்கே சுமார் 65 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள 'சாம்பார் ஏரி' மிகப்பெரிய ஏரியாகும்.

### 2. பஞ்சாப் – ஹரியானா சமவெளிகள்

வளமான பஞ்சாப் – ஹரியானா சமவெளிகள் இந்தியப் பாலைவனத்தின் வடகிழக்கே அமைந்துள்ளன. இவை வடக்கிலிருந்து தென்மேற்காக சுமார் 640கி.மீ. தூரத்திற்கும் மேற்கிலிருந்து கிழக்காக சுமார் 300 கி.மீ. தூரத்திற்கும் பரவியுள்ளது. டெல்லி முகடு (ridge) பஞ்சாப் ஹரியானா சமவெளிகளை கங்கைச் சமவெளியிலிருந்து பிரிக்கிறது.

பஞ்சாப் ஹரியானா சமவெளி, சட்லெஜ், பியாஸ், ராவி ஆறுகளால் ஏற்படும் படிவுகளால் ஆனது. ராஜஸ்தான் சமவெளியை ஒட்டியுள்ள இச்சமவெளியின் தென்கிழக்கு பகுதி மணற்பாங்கானதாகவும் நகருகின்ற மணற்திட்டுக்களைக் கொண்டதாகவும் உள்ளது. ஹரியானாவிலுள்ள காக்ரா நதிக்கும் யமுனா நதிக்கும் இடைப்பட்ட நிலபரப்பே ஹரியானா சமவெளியாக அமைகிறது.

### 3. கங்கைச் சமவெளி

கங்கைச் சமவெளி மிகப் பரந்த சமவெளி. இது மேற்கிலுள்ள யமுனா ஆற்றிலிருந்து கிழக்கிலுள்ள வங்கதேசம் வரை சுமார் 1500 கி.மீ. நீளத்துடனும், சராசரி 300 கி.மீ. அகலத்துடனும் பரவியுள்ளது. இது உத்திரப்பிரதேசம், பீகார், மற்றும் மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களில் பரவியுள்ளது. ராம்கங்கா, கோமதி, காக்ரா, காண்டக், கோசி, யமுனா போன்ற நதிகள் வடக்கிலிருந்தும், சோன், சம்பல், பீட்வா போன்ற நதிகள் தெற்கிலிருந்தும் உருவாகி கங்கை ஆற்றின் துணையாறுகளாக கங்கையுடன் சேருகின்றன. இவ்வாறுகள் முறையே மலைகளிலிருந்தும் பீடபூமிகளிலிருந்தும் அதிக அளவில் மணலையும் வண்டலையும் படிய வைத்து மிகப்பெரிய சமவெளியை உருவாக்குகின்றன. கங்கைச் சமவெளியினுடைய சரிவு கிழக்கு மற்றும் தென்கிழக்கு நோக்கி மென்சரிவாக அமைந்துள்ளது. இதன் சராசரி உயரம் கடல் மட்டத்திலிருந்து 200 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது.

இச்சமவெளியின் மேற்பகுதியில் கங்கை, யமுனையின் ஆற்றிடைச் சமவெளி (Doab) அமைந்துள்ளது.

இச்சமவெளியின் கிழக்கில் ரோஹில்கண்ட் தாழ்நிலம் அமைந்துள்ளது. ஆற்றுப் பாதையின் மையப்பகுதியில் படிவுகள் நிறைந்துள்ளதால், ஆற்றுநீரின் போக்கு மாறிக்கொண்டே வருகிறது. இதனால், இப்பகுதி முழுவதும் அடிக்கடி வெள்ளப்பெருக்கு ஏற்பட வாய்ப்பு உள்ளது.

இந்து மதத்தினை பின்பற்றும் மக்கள் கங்கை மற்றும் யமுனை ஆற்றினை புனிதமானதாகக் கருதுகின்றனர். எனவே புனிதமாக கருதப்படும் ஆறுகளின் கரைப் பகுதிகளில் ஹரித்துவார், மதுரா, வாரனாசி, அலகாபாத் போன்ற புனிதத் தலங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மேன்மேலும் வளர்ச்சி அடைந்து கல்வி, பண்பாடு மற்றும் சுற்றுலாத் தலங்களாகவும் உள்ளன.

பீகாரின் துயரம் என்றழைக்கப்படும் கோசி ஆறு தன் ஆற்றுப்போக்கை சமீப காலத்தில் சுமார் 100 கி.மீ. வரை மாற்றியமைத்துள்ளது.

கங்கைச் சமவெளியின் தாழ்ந்த பகுதியில் கங்கா–பிரம்மபுத்திரா ஆறுகள் பல்வேறு இணையாறுகளாகப் பிரிந்து, உலகிலேயே மிகப்பரந்த சமவெளியை

உருவாக்கி உள்ளன. இச்சமவெளியின் தாழ்பகுதி சுந்தரவனம் என அழைக்கப்படுகிறது. இப்பகுதி ஓதத்தால் ஏற்படும் அடர்ந்த சதுப்பு நிலக் காடுகளைக் கொண்டுள்ளது. இச்சமவெளி கழிமுகங்கள், சதுப்புநிலக்காடுகள், மணல் திட்டுக்கள் மற்றும் தீவுகளைக் கொண்டுள்ளது.

### 4. பிரம்மபுத்ரா சமவெளி

இது வடபெரும் சமவெளியின் கிழக்கோரப்பகுதி பிரம்மபுத்ரா ஆற்றினையும் அதன் பல்வேறு துணையாறுகளையும் கொண்டுள்ளது. பிரம்மபுத்ரா ஆறு சாங்போ என்ற பெயருடன் திபெத்தில் உருவாகிறது. அது இந்தியாவிற்குள் நுழையுமுன் 'திகாங்' ஆழப் பள்ளத்தாக்கை உருவாக்கி, அஸ்ஸாம் பள்ளத்தாக்கில் நுழைகிறது. இச்சமவெளி 720 கி.மீ. நீளத்தையும் சுமார் 60 முதல் 100 கி.மீ. அகலத்தையும் பெற்றுள்ளது. இச்சமவெளி வடகிழக்கிலிருந்து தென்மேற்கு நோக்கி சரிந்து காணப்படுகிறது. மேற்குப் பகுதியைத் தவிர இச்சமவெளி உயர்ந்த மலைகளால் சூழப்பட்டுள்ளது.



பிரம்மபுத்ரா ஆறு – அஸ்ஸாம்

வடகிழக்கிலுள்ள அஸ்ஸாம் குன்றுகளிலிருந்து பல்வேறு துணையாறுகள் தோன்றி பிரம்மபுத்ரா ஆற்றுடன் இணைந்து, வண்டல் விசிறிகளை ஏற்படுத்துகின்றன. களிமண் நிறைந்த சதுப்பு நிலங்கள் மிக அதிக அளவில் காணப்படுகின்றன. வண்டல் விசிறிகளால் 'தராய்' எனப்படும் சதுப்பு நிலக்காடுகளை உருவாகியுள்ளன.

### 3. தீபகற்ப பீடபூமி

தீபகற்ப பீடபூமி வட இந்திய சமவெளிக்கு தெற்கே அமைந்துள்ளது. இது முக்கோணவடிவம் கொண்டது. சுமார் 16 இலட்சம் ச.கி.மீ. பரப்பளவைக் கொண்டது. இதனைச் சுற்றி வடக்கே ஆரவல்லி, விந்தியா, சாத்பூரா, ராஜ்மகால் மலைத்தொடர்களும், மேற்கே மேற்கு தொடர்ச்சி மலைகளும், கிழக்கே கிழக்குத்தொடர்ச்சிமலைகளும் அமைந்துள்ளன.

இப்பீடபூமி வடக்கு தெற்காக 1600கி.மீ. தூரத்திற்கு பரவியுள்ளது. இது கடல் மட்டத்திலிருந்து சராசரியாக 600 – 900 மீட்டர் உயரத்தையும் கொண்டது. இது, மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சரிந்து உள்ளது. ஆனால் நர்மதை–தபதி பகுதிகளில் கிழக்கிலிருந்து மேற்காக சரிந்துள்ளது. நர்மதை ஆறு தீபகற்ப பீடபூமியை இரு சமமற்ற பகுதிகளாகப் பிரிகின்றது. இதன் வடபகுதியை மத்திய உயர்நிலங்கள் என்றும், தென் பகுதியை தக்காண பீடபூமி என்றும் அழைப்பர்.

### அ) மத்திய உயர்நிலங்கள்
### 1. மாள்வா பீடபூமி

ஆரவல்லி மலை, விந்திய மலை மற்றும் பண்டல்கான்ட் ஆகியவற்றால் சூழப்பட்டுள்ளது. இது லாவா எனப்படும் எரிமலைக் குழம்பால் உருவாகி கருப்பு மண்ணால் ஆன பகுதியாகும். சம்பல் நதியும் அதன் துணையாறுகளும் சேர்ந்து பீடபூமியின் வட பகுதியில் பல பிளவுகளை (ravines) உண்டாக்கியுள்ளது.

### 2. பண்டல்கான்ட் உயர்நிலம்

இது யமுனையாற்றின் தென் பகுதியில் அமைந்துள்ளது. இது தீப்பாறைகளாலும் உருமாறிய பாறைகளாலும் ஆக்கப்பட்டது. இதன் வட பகுதியில் கங்கா மற்றும் யமுனை ஆறுகள் வண்டல் மண்ணைப் படிய வைக்கின்றன. இதன் குன்றுப்பகுதிகள்

மணற்பாறைகளாலும், கருங்கற்களாலும் ஆக்கப்பட்டவை. பீட்வா மற்றும் கென் போன்ற ஆறுகள் ஆழமான பள்ளத்தாக்குகளை உருவாக்கியுள்ளன.

### 3. பகல்கண்ட்

பகல்கண்ட் மைக்காலா மலைத் தொடரின் கிழக்கே அமைந்துள்ளது. இது மேற்கில் மணற்பாறைகளாலும் சுண்ணாம்பு பாறைகளாலும் கிழக்கில் கருங்கற்கலாலும் ஆனது. பீடபூமியின் மத்தியப்பகுதி சோன் ஆற்றுக்கும் மகாநதி ஆற்றுக்கும் இடையே நீர்ப்பிரிமேடாக அமைந்துள்ளது.

### 4. சோட்டாநாகபுரி பீடபூமி

சோட்டா நாகபுரி பீடபூமி மத்திய உயர் நிலங்களின் வட கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது. தாமோதர், சுபர்ணரேகா, கோயல் மற்றும் பராக்கர் ஆறுகள் இதன் வழியாகப் பாய்கின்றன. இப்பகுதியின் மத்தியில் தாமோதர் ஆறு மேற்கிலிருந்து கிழக்காகப் பாய்கிறது. இப்பகுதி பீடபூமிகளாலும், மலைகளாலும் சூழப்பட்டுள்ளது. ஹசாரிபாக் பீடபூமி, தாமோதர் ஆற்றின் வடக்கிலும், ராஞ்சிப் பீடபூமி தெற்குப் பகுதியிலும் இராஜ்மகால் குன்றுகள் வடகிழக்கிலும் அமைந்துள்ளன.

### ஆ) தக்காண பீடபூமி

சுமார் 5 இலட்சம் ச.கி.மீ. பரப்பளவில் தக்காணப்பீடபூமி அமைந்துள்ளது. வட மேற்கு திசையில் விந்திய சாத்பூரா மலைத் தொடர்களையும் வடக்கில் மகாதேவ் மற்றும் மைக்லா மலைத்தொடர்களையும் மேற்கில் மேற்குத் தொடர்ச்சி மலைகளையும், கிழக்கில் கிழக்குத்தொடர்ச்சி மலைகளையும் எல்லைகளாக கொண்டுள்ளது. தக்காணபீடபூமி மேற்கிலிருந்து கிழக்காகச் சரிந்துள்ளது. அதன் காரணமாக மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா மற்றும் காவிரி ஆறுகள் கிழக்கு நோக்கிப் பாய்ந்து வங்காளவிரிகுடா கடலுடன் கலக்கிறது தக்காண பீடபூமியின் வட பகுதி தீப்பாறைகளையும் கரிசல் மண்ணையும் கொண்டுள்ளது. இப்பீடபூமியின் தென்பகுதியான கர்நாடகா பீடபூமி நீலகிரி மலைத்தொடருடன் இணைகிறது. தெலுங்கானா பீடபூமியிலிருந்து கோதாவரி, கிருஷ்ணா மற்றும் பெண்ணாறு ஆறுகள் ஓடுகின்றன.

### தீபகற்ப இந்தியாவிலுள்ள மலைத்தொடர்கள்

### 1. ஆரவல்லி மலைத்தொடர்

ஆரவல்லி மலைத்தொடர் உலகிலேயே மிகப்பழமையான மடிப்பு மலைத் தொடராகும். இது வடகிழக்கிலிருந்து தென்மேற்காக சுமார் 800 கி. மீ. வரை பரவியுள்ளது. வடக்கில் சராசரியாக சுமார் 400 மீ உயரத்தையும் தெற்கில் 900 மீ உயரத்தையும் கொண்டுள்ளது. ஆரவல்லி மலைக் தொடரின் மிக உயர்ந்த 'குருசிகார்' (1722மீ) சிகரம் அபு மலையில் அமைந்துள்ளது. ஆரவல்லி மலைத்தொடர் பெரிதும் அரிக்கப்பட்டும் பிளவுபட்டும் காணப்படுகின்றது.

### 2. விந்திய மலைத்தொடர்

விந்திய மலைத்தொடர் நர்மதை ஆற்றின் பள்ளத்தாக்கிற்கு மேல் செங்குத்து சரிவாக உயர்ந்து காணப்படுகின்றது. இது நர்மதை ஆற்றிற்கு இணையாக கிழக்கிலிருந்து மேற்காக சுமார் 1200 கி.மீ. வரை நீண்டு செல்கிறது. இம்மலை மணற்பாறைகள், சுண்ணாம்பு பாறைகள் மற்றும் மென் களிமண்ணாலும் உருவாக்கப்பட்டுள்ளது. இம்மலைத் தொடர் கங்கையாற்றின் தொகுதிகளுக்கும் தென்னிந்திய ஆறுகளுக்கும் இடையே நீர்ப்பிரிமேடாக இருக்கிறது.

### 3. சாத்பூரா மலைத்தொடர்

இம்மலைத்தொடர் நர்மதை மற்றும் தபதி ஆறுகளுக்கு நடுவில் அமைந்துள்ளது. இது ஏழுமலைகளைக் கொண்ட மலைத் தொடர்ச்சியாகும். இது சுமார் 900 கி.மீ. வரை நீண்டு காணப்படுகின்றது. சாத்பூரா

மலைத்தொடரின் உயரம் 900 மீ. மேல் உள்ளது.

### இ) மேற்குத் தொடர்ச்சி மலைத் தொடர்கள்

மேற்குத் தொடர்ச்சி மலைத் தொடர்கள் வடக்கு தெற்காக நீண்டு, தக்காண பீடபூமிக்கு மேற்கு எல்லையாக அமைகின்றன. இவைகள் வடக்கே தபதி நதியிலிருந்து தெற்கே கன்னியாகுமரி வரை சுமார் 1600 கி.மீ. வரை பரவியுள்ளன. மேற்குத்தொடர்ச்சி மலையானது மேற்கு கடற்கரைச் சமவெளியில் செங்குத்தாக உயர்ந்து காணப்படுகின்றது. இதன் காரணமாக, மேற்கில் நதிகள் வேகமாக பாய்கின்றன. மேலும் சாராவதி ஆற்றில் ஜோக் நீர்வீழ்ச்சி (270 மீட்டர்) போன்ற பல நீர்வீழ்ச்சிகளை உருவாக்குகின்றன. இம்மலைத்தொடரின் கிழக்குப் பகுதி மென்சரிவாகக் காணப்படுகிறது. கோதாவரி, கிருஷ்ணா மற்றும் காவிரி ஆறுகள் கிழக்குச் சரிவில் உருவாகி கிழக்காகப் பாய்ந்து வங்காளவிரிகுடாவில் கலக்கின்றன.

தார் கணவாய், போர் கணவாய் மற்றும் பாலக்காட்டு கணவாய் ஆகியவை மேற்குத் தொடர்ச்சி மலையில் காணப்படும் முக்கிய கணவாய்கள் ஆகும். மேற்கில் கொங்கண கடற்கரைப்பகுதிக்கும் கிழக்குத் தக்காணபீடபூமிக்கும் இடையில் சாலைகள் மற்றும் இரயில் போக்குவரத்திற்கு இக்கணவாய்கள் பெரிதும் பயன் படுகின்றன.

கிழக்குத்தொடர்ச்சி மலைகளும், மேற்குத் தொடர்ச்சி மலைகளும் நீலகிரி மலையில் ஒன்றிணைகின்றன. இங்கு மிக உயரமான தொட்டபெட்டா (2637 மீ) மலைச்சிகரம் அமைந்துள்ளது.

மேற்குத் தொடர்ச்சி மலையின் தென் பகுதியில் உள்ள பாலக்காட்டு கணவாய் கேரள கடற்கரையை தமிழ்நாட்டுடன் சாலைகள் மற்றும் இரயில் பாதைகள் மூலம் இணைக்கிறது.

தென்னிந்தியாவின் மிக உயரமான சிகரம் ஆனைமுடியாகும். (2695மீ) இதிலிருந்து வடக்கில் ஆனைமலையும், வடகிழக்கில் பழனி மலையும் மற்றும் தெற்கில் ஏலமலையும் பிரிந்து செல்கின்றன.



மேற்கு தொடர்ச்சி மலை

மலை வாழிடமான 'கொடைக்கானல்' பழனிமலையின் தென் முனையில் அமைந்துள்ளது. மேற்குத்தொடர்ச்சி மலை கன்னியாகுமரிக்கு 20 கி.மீ தூரத்தில் முடிவடைகிறது.

### ஈ) கிழக்குத் தொடர்ச்சி மலைத்தொடர்

கிழக்குத்தொடர்ச்சி மலைகள் பெரும்பாலும் கிழக்கு கடற்கரைக்கு இணையாகச் செல்லுகின்றன. இவை ஒரிசாவிலுள்ள மகாநதிக்கும், தமிழ்நாட்டிலுள்ள வைகை ஆற்றிற்கும் இடையில் பிளவுபட்ட குன்றுகளாக காணப்படுகின்றன. இவை தொடர்ச்சியான மலைகள் அல்ல. கோதாவரி மற்றும் கிருஷ்ணா ஆறுகளுக்கு இடைப்பட்ட பகுதியில் இம்மலைகள் காணப்படவில்லை. கோதாவரி ஆற்றுப் பள்ளத்தாக்கு கிழக்குத் தொடர்ச்சி மலைகளை வடபகுதி மற்றும் தென் பகுதி என இரு பிரிவுகளாகப் பிரிக்கிறது. இதன் வடக்குப் பகுதி 200கி.மீ. அகலத்தையும், தென் பகுதி 100 கி.மீ. அகலத்தையும் கொண்டுள்ளது. இதன் வடக்குப் பகுதியில் மிக உயர்ந்த மகேந்திரகிரி (1501 மீ) என்ற சிகரம் காணப்படுகிறது. தென் பகுதியில் நல்லமலை என்ற பிரசித்தி பெற்ற தொடர் உள்ளது. இது பளிங்கு மற்றும் களிமண்ணின் ஒரு வகையான சிலேட்டு மண்ணால் உருவானது. கிழக்குத் தொடர்ச்சி மலையின் தென்பகுதியிலுள்ள

குன்றுகளும் பீடபூமிகளும் உயரம் குறைந்து நீலகிரியில் மேற்குத்தொடர்ச்சி மலையுடன் இணைந்துவிடுகிறது.

தீபகற்ப பீடபூமியில் அமைந்துள்ள மலைவாழிடங்கள் உதகமண்டலம், கொடைக்கானல், பச்சைமலை, மகாபலேஸ்வர், காண்ட்லா போன்றவையாகும்.

### 4. கடற்கரை சமவெளிகள்

தீபகற்ப பீடபூமியைச் சுற்றியுள்ள கடற்கரை சமவெளிகள் மாறுபட்ட அகலத்தைக் கொண்டவை. இது மேற்கில் ரான்ஆப் கட்சிலிருந்து கிழக்கே கங்கை–பிரம்மபுத்ரா சமவெளி வரை 6000 கி.மீ. தூரம் பரவிக் காணப்படுகின்றது. மேற்குத் தொடர்ச்சி மலைக்கும் அரபிக் கடலுக்கும் இடைப்பட்ட நிலப்பகுதி மேற்குக் கடற்கரைச் சமவெளி எனப்படுகிறது. கிழக்குத் தொடர்ச்சி மலைக்கும் வங்காள விரிகுடாவிற்கும் இடைப்பட்ட நிலப்பகுதி கிழக்குக் கடற்கரைச் சமவெளி எனப்படுகிறது. இரண்டு கடற்கரைச் சமவெளிகளும் இந்தியாவின் தென்கோடியில் அமைந்துள்ள கன்னியாகுமரியில் சந்திக்கின்றன.

### மேற்குக் கடற்கரைச் சமவெளி

மேற்குக் கடற்கரை சமவெளி வடக்கில் கட்ச் பகுதியில் உள்ள ரான் முதல் தெற்கே கன்னியாகுமரி வரை நீண்டுள்ளது. இது குஜராத்தைத் தவிர மற்ற பகுதிகளில் குறுகலாக இருக்கிறது. இதன் சராசரி அகலம் சுமார் 65 கி.மீ. ஆகும்.

குஜராத் சமவெளி, கட்ச் மற்றும் கத்தியவார் பகுதிகளின் கிழக்குப் பகுதியில் நர்மதை, தபதி, மாகி மற்றும் சபர்மதி ஆறுகளால் உருவாக்கப்பட்டது. குஜராத்தின் தென் பகுதி மற்றும் காம்பட்டின் கடற்கரைப் பகுதியும் சேர்ந்து குஜராத் சமவெளி என்றழைக்கப்படுகிறது. இது சதுப்பு நிலங்களின் தொடர்ச்சியாகும், உயர் ஓதங்களின் போது கடற்கரையில் வெள்ளப்பெருக்கு ஏற்படுகிறது.

கொங்கண சமவெளி, குஜராத்திற்கு தெற்கிலிருந்து கோவா வரை சுமார் 500 கி.மீ. வரை பரவியுள்ளது. இதன் அகலம் சுமார் 50 முதல் 80 கி.மீ. வரை காணப்படுகிறது. இங்கு கடலலை அரிப்புகளால் உருவான ஓங்கல், முருகைகள் மற்றும் தீவுகள் மும்பைக்கு தெற்கில் காணப்படுகின்றன. கொங்கண கடற்கரை வளைகுடாக்கள் மணற்கடற் கரைகளின் தொடர்ச்சியாகும். இதன் வட பகுதி மணற்பாங்காகவும், தென்பகுதி கரடுமுரடான பாறைகளாகவும் காணப்படுகிறது.


கர்நாடகா சமவெளி, கோவாவிலிருந்து மங்களூர் வரை சராசரி அகலம் 30 லிருந்து 50 கி.மீ. வரை நீண்டு காணப்படுகிறது. இச்சமவெளி சில இடங்களில் செங்குத்துச் சரிவை கொண்டுள்ளதால் நீர்வீழ்ச்சிகளை உருவாக்குகின்றது.

மலபார் சமவெளி, மங்களூருக்கும் கன்னியாகுமரிக்கும் நடுவே அமைந்துள்ளது. இது 50 கி.மீ. நீளமும் 25 முதல் 100 கி.மீ. வரை வேறுபடும் அகலத்தையும் கொண்டது. இங்கு சிறப்பு அம்சங்களாக ஏரிகள், கழிகள் மற்றும் காயல்கள் (backwater) காணப்படுகின்றன. வேம்பநாடு ஏரி கேரளாவின் மிகப்பெரிய ஏரியாகும். பெரும்பாலும், காயல்கள் கடற்கரைக்கு இணையாகக் காணப்படுகின்றன. கழிகளும் காயல்களும் கால்வாய்களால் இணைக்கப்பட்டு, சிறு படகுகளால் எளிதான போக்குவரத்திற்கு உதவுகின்றன.

### கிழக்கு கடற்கரை சமவெளி

கிழக்கு கடற்கரை சமவெளி மேற்கு வங்க ஆற்றுச் சமவெளியிலிருந்து கன்னியாகுமரி வரை பரவியுள்ளது. இது கிழக்கு தொடர்ச்சி மலைத்தொடருக்கும் வங்காளவிரிகுடாவிற்கும் இடையில் அமைந்துள்ளது. கிழக்கு கடற்கரை சமவெளியானது, மேற்கு கடற்கரை சமவெளியைவிட பரந்தும்,அகலமாகவும்

# தீபகற்ப இந்தியாவின் இயற்கை அமைப்பு



காணப்படுகிறது. இதன் சராசரி அகலம் 120 கி.மீ. ஆனால் முகத்துவாரங்களில் இதன் அகலம் 200 கி.மீ. வரை காணப்படுகின்றது. இது நேரான கடற்கரையையும், வரையறுக்கப்பட்ட சென்னையின் மெரினா கடற்கரை போன்ற கடற்கரைச் சமவெளியையும் கொண்டிருக்கிறது. மகாநதி மற்றும் கிருஷ்ணா ஆறுகளுக்கு இடையே காணப்படும் கடற்கரையை வடசர்க்கார் கடற்கரை எனவும் கிருஷ்ணா மற்றும் காவிரி ஆறுகளுக்கு இடையே உள்ள கடற்கரையை சோழ மண்டல கடற்கரை எனவும் அழைக்கப்படுகிறது.

உத்கல் சமவெளி ஒரிசா கடற்கரையிலிருந்து 400 கி.மீ. தூரம் நீண்டு, மகாநதி ஆற்று சமவெளியையும் உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. இதன் கடற்கரை, நேராகவும் மணற் குன்றுகளை எல்லைகளாகக் கொண்டும் காணப்படுகின்றது. 'சிலிகா ஏரி' மகாநதி ஆற்றின் தெற்கே அமைந்துள்ள இந்தியாவின் மிகப்பெரிய ஏரியாகும்.

ஆந்திரச் சமவெளி பெர்கம்பூர் மற்றும் புலிகாட் ஏரிக்கு இடையில் அமைந்துள்ளது. இச்சமவெளி, கோதாவரி, கிருஷ்ணா ஆற்றுச் சமவெளிகளால் ஆனது. ஆந்திர கடற்கரைச் சமவெளி நேராகவும் துறைமுக அமைவிடத்திற்கு ஏற்றதாகவும் உள்ளது. விசாகபட்டினம் மற்றும் மசூலிப்பட்டினம் போன்றவை குறிப்பிடத்தக்க துறைமுகங்களாகும். ஆந்திர கடற்கரைச் சமவெளியில் கொல்லேரு ஏரி அமைந்துள்ளது.

தமிழ்நாட்டுச் சமவெளி புலிகாட் ஏரியிலிருந்து கன்னியாகுமரி வரை 1076கி.மீ. நீண்டு பரவியுள்ளது. இதன் சராசரி அகலம் சுமார் 100 கி.மீ. ஆகும். வளமிக்க மண் மற்றும் மேம்படுத்தப்பட்ட நீர்பாசன வசதிகள் காவிரி ஆற்றுச் சமவெளியை தென்னிந்தியாவின் களஞ்சியமாக மாற்றியுள்ளது.

## 5. இந்தியத் தீவுகள்

இந்தியப் பெருங் கடலில் இரு பெரும் தீவுக் கூட்டங்கள் உள்ளன. அந்தமான் மற்றும் நிகோபர் தீவுகள் வங்காள விரிகுடாவிலும் இலட்சத்தீவுகள் அரபிக் கடலிலும் உள்ளன.



அந்தமான் தீவுகள்


அவைகள் இந்திய நிலப்குதியிலிருந்து வெகுதூரத்தில் அமைந்துள்ளன. அந்தமான் நிகோபார் தீவுகள் 6° வ முதல் 14° வ அட்சம் வரையிலும் 90° கி முதல் 94°கி தீர்க்கம் வரையிலும் அமைந்துள்ளன. இவை 572 சிறியதும் பெரியதுமான தீவுகளைக் கொண்டவை. இவற்றில் 38 தீவுகள் மட்டுமே வாழிடங்களாக உள்ளன. இதன் மொத்தப்பரப்பு 8249 ச.கி.மீ. அந்தமான் தீவுக் கூட்டங்களை நிகோபர் தீவுக் கூட்டங்களிலிருந்து 10° கால்வாய் பிரிக்கிறது.



இலட்சத்தீவுகள்

அந்தமான் நிகோபாரின் தென் கோடி முனையை இந்திரா முனை என்றழைக்கின்றனர். அந்தமான் தீவுகள்

## கடற்கரைச் சமவெளிகள்




ஒன்றுடன் ஒன்று இணைந்த அமைப்பாகக் காணப்படுகின்றது. அதிலுள்ள 25 தீவுகளில் மட்டுமே மக்கள் வசிக்கின்றனர். நிகோபார் தீவுக்கூட்டங்களிலும் 13 தீவுகளில் மட்டுமே மக்கள் வசிக்கின்றனர். தீவுக்கூட்டங்களில் பல மணற்பாறைகள், சுண்ணாம்புப்பாறை மற்றும் களிமண்ணால் ஆக்கப்பட்டவை. இங்குள்ள தீவுகளில் பெரும்பாலனவை எரிமலைகளால் உருவானதாகவும் சில முருகைப் பாறைகளால் ஆனவையாகவும் உள்ளது.

சில தீவுகள் அதிகபட்சம் 750 மீட்டர் உயரம் கொண்ட மலைகளாகவும் உள்ளன. இங்கு அதிக வெப்பமும் அதிக ஈரப்பதமும் கொண்ட காலநிலை இருப்பதால் அடர்ந்த காடுகளும், தென்னந்தோப்புகளும் காணப்படுகின்றன.

அரபிக்கடலில் அமைந்துள்ள இலட்சத்தீவுக் கூட்டங்களிலுள்ள 27 தீவுகளில் 11 தீவுகளில் மட்டுமே மனிதர்கள் வசிக் கின்றனர். லேக்கடிவ்ஸ், மினிக்காய் மற்றும் அமினிதிவி தீவுக் கூட்டங்களை

1973 ஆம் ஆண்டு இலட்சத் தீவுகள் என மறுபெயரிட்டு அழைத்தனர். (இலட்சத்தீவு என்பதற்கு ஒரு இலட்சம் தீவுகள் என்று பொருள்) இத்தீவுக் கூட்டங்கள் 110 ச.கி.மீ பரப்பளவில் ஆங்காங்கே சிதறிக் காணப்படுகின்றன. இலட்சத்தீவுகள் கேரளக் கடற்கரைக்கு தென்மேற்கில் 200 முதல் 500 கி.மீ தூரத்தில் அமைந்துள்ளன. இவையனைத்தும் முருகைப்பாறைகளால் உருவானவை.

## இந்திய நிலத்தோற்றமைப்பின் முக்கியத்துவம்

1. இந்தியாவின் வடபகுதியில் உள்ள இமயமலைகள் தென்மேற்கு பருவக் காற்றினைத் தடுத்து, நல்லமழைப் பொழிவையும், பனிப்பொழிவையும் நமக்குத் தருகிறது. இம்மலைகள் இல்லாதிருப்பின், இந்தியத் துணைக் கண்டத்தின் பெரும்பகுதி வெப்பமானதாகவும், வறண்ட பாலைவனமாகவும் மாறியிருக்கக்கூடும்.

2. இமயமலைகள் இந்தியத்துணை கண்டத்தின் இயற்கை எல்லையாக அமைந்துள்ளன. இங்கு பனி எப்பொழுதும் உறைந்து காணப்படுவதால் அந்நிய படையெடுப்பை தடுக்கிறது.

3. வட இந்திய சமவெளி பொருளாதார மற்றும் சமூக முக்கியத்துவம் வாய்ந்தவை. ஏனெனில் அதன் வளமிக்க வண்டல் மண், சமதளமான நில அமைப்பு, மெதுவாகச் செல்லும் வற்றாத நதிகள், சாதகமான காலநிலை போன்றவற்றால் வேளாண்மையும், வணிகமும் மேலோங்கி திகழ்கின்றன.

4. தீபகற்ப பீடபூமி கனிம வளங்களை அதிகம் பெற்றுள்ளது. இரும்பு, மாங்கனீசு, தாமிரம், பாக்ஸைட், மைக்கா, குரோமியம், சுண்ணாம்புப் பாறைகள் அதிக அளவில் கொண்டுள்ளது

5) பெரிய மற்றும் சிறிய துறைமுகங்கள் கடற்கரைப்பகுதியில் அதிக அளவில் வளர்ச்சியுற்று காணப்படுகின்றன. இவை தேசிய மற்றும் பன்னாட்டு வணிக வளர்ச்சியில் பெரும் பங்கு ஆற்றுகின்றன.

## வடிகால் – ஆறுகள் மற்றும் ஏரிகள்

ஆறுகளும் அதன்கிளை ஆறுகளும் நிலப்பகுதியின் முக்கியமான வடிகால்களாகும். ஆறுகள் நமக்கு பல வழிகளில் பயன்படுகின்றன. அது வீட்டு தேவைக்கான நீரையும், நீர்ப்பாசனத்திற்கும், போக்குவரத்திற்கும் மற்றும் நீர் விளையாட்டிற்கும் தேவையான நீரை தருவதுடன், மலைகளிலிருந்து வண்டல் படிவுகளை சமவெளிகளிலும் டெல்டா பகுதிகளிலும் படிய வைக்கிறது. இப்பகுதிகளில் உள்ள வண்டல் மண் ஒவ்வொரு முறையும் வெள்ளப் பெருக்கு ஏற்படும்போதும் புதுப்பிக்கப்படுகிறது. எனவே ஆறுகள் மனித இனத்திற்கும் மற்ற உயிரினங்களுக்கும் மிகப் பெரிய வரமாக கருதப்படுகிறது.


## ஆறுகளின் பிறப்பும், அமைவிடமும்

மலைகள் மிக அதிகமாக மழையைப் பெறுகின்றன. இதனால் பெரும்பாலான ஆறுகள் அங்கு உருவாகி கிளை ஆறுகளுடன் சேர்ந்து முதன்மை ஆறாக உருவாகி, அவைகள் வெவ்வேறு இடங்களில் அதன் போக்கில் கடலில் கலக்கின்றன. இதில் முதன்மையானவை ஆறு என்றும் மற்றவை கிளை ஆறுகள் என அழைக்கப்படுகிறது. இவை ஒன்று சேர்ந்து ஆறுகளின் அமைப்பாகிறது. வடிகால் அமைப்பு நிலத்தின் சரிவு, நில அமைப்பு, நீரின் கொள்ளவு, நீரின் வேகம் இவற்றைப் பொறுத்து கடலிலோ அல்லது உள்நாட்டு ஏரிகளிலோ கலக்கிறது.

## உள்நாட்டு வடிகால்

ஆரவல்லி மலைத் தொடருக்கு மேற்கே உள்நாட்டு வடிகால் காணப்படுகிறது. இப்பகுதியில் லூனி ஆறு ஓடுகிறது. இந்த ஆறு ஆஜ்மீருக்கு தென்மேற்கே ஆரவல்லி மலைத் தொடரில் உருவாகிறது. இவ்வாறு கோவிந்கார்க் என்னுமிடத்தை கடந்து சரசுதி ஆற்றுடன் கலக்கிறது. இந்த சரசுதி ஆறு புஸ்கர் ஏரியில் உருவாகிறது. இதற்கு இரண்டு துணை ஆறுகள் உள்ளன. அவை ஆரவல்லி மலைத்தொடரில் உருவாகிறது.

# இந்திய – ஆறுகள்


வ
சிந்து
சிந்து
ஜீலம்
செனாப்
ராவி
சட்லஜ்
பியாஸ்
கோவிந்த் சாகர்
சாங்போ
கங்கை
சாம்பார் உப்பு ஏரி
சாரதா
யமுனை
காக்ரா
கான்டக்
கோசி
பிரம்மபுத்ரா
சம்பல்
ராணா பிரதாப சாகர்
சோன்
கங்கை
காந்தி சாகர்
பெட்வா
கோவிந்த வல்லப பந்த் சாகர்
நர்மதா
தபதி
மகாநதி
பெண்கங்கா
கோதாவரி
சில்கா ஏரி
அரபிக் கடல்
நிஜாம் சாகர்
வங்காள விரிகுடா
கிருஷ்ணா
நாகார்ஜுனா சாகர்
கொல்லேறு ஏரி
லிங்கனாமக்கி நீர்த் தேக்கம்
துங்கபத்ரா
கிருஷ்ணராஜ சாகர் நீர்த் தேக்கம்
புலிகாட் ஏரி
அந்தமான் நிகோபார்
காவிரி
வேம்பநாடு ஏரி
இலட்சத் தீவுகள்
ஸ்ரீலங்கா
இந்தியப் பெருங்கடல்

## இந்தியா – ஆறுகள்

| பெயர் | நீளம் கி.மீ | பரப்பு ச.கி.மீ | ஆற்றின் பிறப்பிடம் | கலக்குமிடம் | பயனடையும் பகுதி |
|---|---|---|---|---|---|
| சிந்து | 3100 | 3,21,290 | கைலாஷ் மலைத் தொடர் | அரபிக்கடல் | இந்தியா, பாகிஸ்தான் |
| கங்கை | 2480 | 3,37,000 | அலக்நந்தா | வங்காளவிரிகுடா | உத்திரப்பிரதேசம், பீகார், மேற்குவங்கம் |
| யமுனை | 1300 | 3,59,000 | யமுனோத்ரி | வங்காளவிரிகுடா | டெல்லி, ஹரியானா, உத்திரப்பிரதேசம் |
| பிரம்மபுத்ரா | 885 | 2,40,000 | சமாயுங் பனியாறு | வங்காளவிரிகுடா | வடகிழக்கு மாநிலங்கள் |
| காவிரி | 800 | 87,900 | குடகுமலை | வங்காளவிரிகுடா | கர்நாடகம், தமிழ்நாடு |
| கோதாவரி | 146 | 3,12,812 | நாசிக்குன்றுகள் | வங்காளவிரிகுடா | ஆந்திரப்பிரதேசத்தின் தென்கிழக்குப் பகுதி |
| கிருஷ் ணா | 1400 | 2,59,000 | மகாபலேஸ்வரர் | வங்காளவிரிகுடா | மகாராஷ்டிரா, ஆந்திரப்பிரதேசம் |
| நர்மதை | 1312 | 98,796 | அமர்கண்டக் மலை | அரபிக்கடல் | மத்தியப்பிரதேசம், மகாராஷ்டிரா |
| தபதி | 724 | 65,145 | பச்மாரி மலை | அரபிக்கடல் | மத்தியப்பிரதேசம், மகாராஷ்டிரா |
| கோமதி | 805 | 30,437 | இமயமலை | வங்காளவிரிகுடா | உத்திரப்பிரதேசம் |
| காக்ரா | 1080 | 1,27,500 | சிவாலிக் மலைத் தொடர் | தார்பாலைவனப் பகுதியில் மறைகிறது | ஹரியானா, பஞ்சாப், உத்திரப்பிரதேசம் |
| மகாநதி | 858 | 1,41,600 | சாத்பூரா மலைத் தொடர் | வங்காளவிரிகுடா | சட்டிஸ்கர், ஜார்கண்ட் |
| வைகை | 240 | 7,000 | ஏலகிரி மலை | வங்காளவிரிகுடா | தமிழ்நாடு |
| பெரியாறு | 244 | 5,398 | ஏலகிரி மலை | வங்காளவிரிகுடா | தமிழ்நாடு, கேரளா |
| தாமிரபரணி | 123 | 4400 | அகத்தியர் மலை | வங்காளவிரிகுடா | தமிழ்நாடு |

இவை சுக்ரி நதி மற்றும் ஜவ்வாய் நதி ஆகும். 320 கி.மீ ஓடிய பின் லூனி ஆறு குஜராத்தின் கட்ச் பகுதியில் உள்ள ரானின் தலைப்பகுதியில் உள்ள சதுப்பு நிலப்பகுதியில் மறைகிறது. இந்த ஆறு வறண்ட தெற்கு ராஜஸ்தான் பகுதிக்கு மிகவும் நன்மை அளிக்கிறது. லூனி ஆற்றின் நீர் பாலோட்டிரா வரை சுவையாக இருந்த போதிலும், ரான்ஆப்கட்ச் பகுதியில் உப்புத்தன்மையுடன் காணப்படுகிறது.

## இமயமலையில் உருவாகும் ஆறுகளுக்கும் தீபகற்ப ஆறுகளுக்கும் உள்ள வேறுபாடுகள்

| இமயமலையில் உருவாகும் | தீபகற்ப ஆறுகள் |
|---|---|
| இமயமலையில் உருவாகும் சிந்து, கங்கை, பிரம்மபுத்திரா ஆறுகள் பனி உறைந்த மலைகளில் உருவாகின்றன. | தீபகற்ப ஆறுகளான மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, காவிரி, நர்மதா மற்றும் தபதி ஆறுகள் தீபகற்ப பீடபூமியில் உருவாகின்றன. |
| இவை பெரிய ஆற்று வடிநிலங்களையும், நீர்பிடிப்புகளையும் கொண்டவை. | இவை சிறிய நீர்பிடிப்புகளையும் சிறிய ஆற்று வடி நிலங்களையும் கொண்டவை. |
| இவை ஆழமான 'I' வடிவ குறுகியபள்ளத் தாக்குகள் வழியாக பாய்கின்றன. | இவை அகலமாக ஆழமற்ற பள்ளதாக்குகள் வழியே பாய்கின்றன. |
| இந்த ஆறுகள் வற்றாத ஆறுகளாகும். இவை பருவமழையிலிருந்தும் பனி உருகுவதாலும் நீரைப் பெறுகின்றன. | இந்த ஆறுகள் பருவ காலங்களில் மட்டுமே ஓடுகின்றன. பருவமழையை நம்பியே நீரைப் பெறுகின்றன. |
| இவைகள் வற்றாத ஆறுகளாக இருப்பதால் உதவுகின்றன. | பருவமழையிலிருந்து நீரைப் பெறு வதால் நீர்ப்பாசனத்திற்கு பயன்படுவதில்லை. |
| இவைகள் சமவெளியில் ஓடுவதால் போக்குவரத்திற்கு உதவுகின்றது. | இவை சீரற்ற பீடபூமியில் ஓடுவதால் போக்குவரத்திற்கு பயன்படுவதில்லை. |
| கங்கா–பிரம்மபுத்திரா ஆறுகள் ஆற்றுமுகத்துவராரத்தில் பெரிய வண்டல் டெல்டாக்களை உருவாக்குகிறது. | மேற்கு நோக்கி ஓடும் ஆறுகள் சிறிய கழிமுகங்களையும் சிறிய டெல்டாக் களையும் உருவாக்குகின்றன. |

| | |
|---|---|
| கிளை ஆறுகள் | ஒரு ஆறானது அருகிலுள்ள மலைப்பகுதியில் உருவாகி அது முதன்மை ஆற்றுடன் ஒன்று சேருகிறது. உதாரணமாக யமுனை ஆறு கங்கையின் கிளை ஆறு. பவானி, அமராவதி ஆகிய ஆறுகள் காவிரியின் கிளை ஆறுகள் |
| துணை ஆறுகள் | ஒரு ஆறு அதன் கடைப்பகுதியில் / கடலை சேருகின்ற பகுதிகள் முதன்மை ஆறானது பல கிளைகளாக பிரிந்து கடலில் கலக்கிறது. |
| டெல்டா | ஆற்றின் முகத்துவாரத்தில் காணப்படும் முக்கோண வடிலான வண்டல் படிவுகள் டெல்டா என்கிறோம் |
| கழிமுகம் | ஆற்று முகத்துவாரத்தில் ஓதங்களின் காரணமாக ஆற்றின் நல்ல நீரும்/கடலின் உப்பு நீரும் ஒன்று கலக்கிறது. இப்பகுதி டெல்டாபோல் இல்லாமல் ஆழமாக இருக்கும். உதாரணமாக நர்மதை ஆற்றின் கழிமுகப்பகுதி. |

## பயிற்சி

### 1. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுது.

1. இந்தியாவிற்கு ____________யில் வங்காள விரிகுடா அமைத்துள்ளது.
   அ) மேற்குதிசை  ஆ) தெற்குதிசை
   இ) தென்கிழக்குதிசை  ஈ) தென்மேற்குதிசை
2. பாக் நீர் சந்தி____________வை இந்தியாவிலிருந்து பிரிக்கிறது
   அ) ஸ்ரீலங்கா  ஆ) மியன்மார்
   இ) மாலத்தீவுகள்  ஈ) இலட்சத்தீவுகள்
3. இந்தியாவின் நடுவே செல்லும் மிக முக்கிய தீர்க்கக்கோடு____________நடுவே செல்கிறது.
   அ) அகமதாபாத்  ஆ) அலகாபாத்
   இ) ஹைதராபாத்  ஈ) ஔரங்காபாத்
4. இந்தியாவின் மிக உயரமான சிகரம் ____________.
   அ) எவரெஸ்ட் சிகரம்  ஆ) காட்வின் ஆஸ்டின்
   இ) கஞ்சன்ஜங்கா  ஈ) தவளகிரி
5. கங்கை ஆற்றின் பிறப்பிடம் ____________.
   அ) யமுனோத்ரி  ஆ) சியாச்சின்
   இ) கங்கோத்ரி  ஈ) காரக்கோரம்
6. இமயமலைகள்____________ என அழைக்கப்படுகின்றன.
   அ) பனி உறைவிடம்  ஆ) இமாச்சல்
   இ) சிவாலிக்  ஈ) இமாத்ரி

### 2. பொருத்துக.

| | |
|---|---|
| 1. புனித தலம் | சயத்ரி |
| 2. தராய் | வேம்பநாடு |
| 3. கர்நாடகாவிலுள்ள மேற்கு தொடர்ச்சி மலைகள் | தக்காணம் |
| 4. லாவா பீட பூமி | கேதார்நாத் |
| 5. கேரளாவிலுள்ள பெரிய ஏரி | சதுப்பு நிலம் |
| | சில்கா ஏரி |
| | மாளவம் |

### 3. வேறுபடுத்துக.

1. கிரீன்வீச் தீர்க்க நேரம்–இந்தியத் திட்ட நேரம்
2. மேற்கு தொடர்ச்சி மலைகள்–கிழக்கு தொடர்ச்சி மலைகள்
3. மேற்கு கடற்கரை சமவெளி–கிழக்கு கடற்கரை சமவெளி.

**4. பின்வரும் வினாக்களுக்கு குறுகிய விடையளி.**

1. இந்தியாவின் முக்கிய இயற்கை அமைப்புப் பிரிவுகள் யாவை ?
2. இமயமலைகளின் முக்கியத்துவத்தில் ஏதேனும் இரண்டினைக் கூறு.
3. இந்தியாவின் வடக்கு மலைகளிலுள்ள இரண்டு முக்கிய புனித தலங்களை குறிப்பிடுக.
4. மேற்கு கடற்கரைப் பகுதியில் ஆற்றுச் சமவெளிகளை உருவாக்காத ஆறுகளை குறிப்பிடுக.
5. இந்தியப் பெருங்கடலில் காணப்படும் தீவுக் கூட்டங்கள் யாவை ?

**4. பின்வரும் வினாக்களை ஒரு பத்தியில் விவரி.**

1. "இந்தியா ஓர் துணைக்கண்டம்"–நியாயப்படுத்து (அல்லது) காரணம் கூறுக
2. "ஒற்றுமையில் வேற்றுமை"– விவரி
3. இமயமலைகள் உருவான விதத்தினை விவரி.
4. இமயமலைகளின் முக்கியத்துவத்தை விவரி.
5. வடபெரும் சமவெளிகளைப் பற்றி குறிப்பு வரைக.
6. தீபகற்ப பீடபூமி பற்றி குறிப்பு வரைக.

**6. இந்திய அரசியல் வரைபடத்தில் பின்வருவனவற்றைக் குறிக்கவும்**

1. இந்தியாவின் இயற்கை பிரிவுகள்.
2. தார் பாலைவனம், தக்காண பீடபூமி.
3. ஆறுகள்– கங்கை, பிரம்மபுத்ரா, நர்மதா, கோதாவரி, கிருஷ் ணா.
4. மலைகள்–சிவாலிக், காரக்கோரம், லடாக், கைலாஷ், பட்காய் குன்றுகள், நீலகிரி, மேற்கு தொடர்ச்சி மலைகள், சாத்பூரா, ஆரவல்லி மலைத் தொடர்.
5. எவரெஸ்ட் சிகரம், கே–2 சிகரம், பாக் நீர் சந்தி, மன்னார் வளைகுடா, சோழமண்டலக் கடற்கரை, அந்தமான் நிகோபர் தீவுகள், கட்ச் வளைகுடா, காம்பே வளைகுடா, சோடாநாகபுரி, சுந்தரவனம், ரான் ஆப்கட்ச், மால்வா பீடபூமி, பாமீர் முடிச்சு.

**7. செய்முறைப் பயிற்சி.**

1. மிகப்பெரிய மாநிலம் எது ?
2. மிகச்சிறிய மாநிலம் எது ?
3. செறிந்த மக்கள் தொகைக் கொண்ட மாநிலம், செறிவு குறைந்த மக்கள்தொகை கொண்ட மாநிலம் எது ?
4. ஏழு சகோதரிகள் என்றழைக்கப்படும் வடகிழக்கு இந்தியாவிலுள்ள ஏழு மாநிலங்களைப் பட்டியலிடு.

# 2. இந்தியா – காலநிலை

இயற்கைச்சூழலின் அடிப்படை கூறுகளுள் ஒன்று காலநிலை. இது ஓரிடத்தின் நிலஅமைப்பு, மண், இயற்கைத் தாவரம் மற்றும் வேளாண்மை போன்றவற்றை நிர்ணயிக்கிறது. நாம் உடுக்கும் உடை, உண்ணும் உணவு வசிக்கும் இடம் ஆகியவை காலநிலையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவை. ஆனால் காலநிலை ஓரிடத்திற்கும் மற்றொரு இடத்திற்கும் மாறுபட்டு காணப்படுகிறது. இந்தியாவின் பல்வேறுபட்ட இயற்கை நிலத்தோற்றங்கள் பல்வேறு காலநிலையை உருவாக்குகின்றன. வடஇந்தியாவின் காலநிலை, தென் இந்திய காலநிலையில் இருந்து, வெப்பம், மழைப்பொழிவு போன்றவற்றில் மாறுபட்டு காணப்படுகிறது. இந்தியாவின் பல்வேறு காலநிலைகளையும் அவற்றை நிர்ணயிக்கும் காரணிகளை பற்றியும் நாம் காண்போம்.

**வானிலை மற்றும் காலநிலையை உன்னால் வேறுபடுத்திக் காண முடியுமா ?**

வானிலை என்பது ஓரிடத்தின் வளி மண்டலத்தில் உள்ள வெப்பம், அழுத்தம், காற்று, ஈரப்பதம் மற்றும் மழைப்பொழிவு ஆகியவற்றின் அன்றாட நிலையை குறிப்பது ஆகும்.

காலநிலை என்பது ஓரிடத்தின் நீண்ட நாளைய உண்மையான சராசரி வானிலையைக் குறிப்பதாகும். இதன் அளவினை கண்டறிய குறைந்தபட்சம் 35 வருட கால வானிலை பதிவுகள் அவசியம் தேவை.

ஓரிடத்தின் காலநிலையைக் கீழ்க்கண்ட காரணிகள் நிர்ணயிக்கின்றன. அவையாவன,

1. அட்சங்கள்
2. உயரம்
3. கடலிலிருந்து தூரம்
4. காற்று
5. மலைகளின் அமைவு

## 1. அட்சங்கள்

இந்தியா $8^0.4'$ வட அட்சத்திற்கும் $37^0.6$ வட அட்சத்திற்கும் இடையே அமைந்துள்ளது. $23^0.30'$ வட அட்சமான கடக ரேகை நாட்டின் குறுக்கே செல்கிறது. கடக ரேகைக்கு தெற்கே அமைந்துள்ள பகுதிகள் பூமத்திய ரேகைக்கு மிக அருகே உள்ளதால் ஆண்டு முழுவதும் அதிகமான வெப்பத்தைப் பெறுகிறது. கடகரேகைக்கு வடக்கேயுள்ள பகுதிகள் மிதவெப்பமண்டலத்தில் அமைந்துள்ளது. எனவே இப்பகுதிகள் குளிர்காலங்களில் குறைந்த வெப்பத்தைப் பெறுகிறது. உதாரணமாக, நவம்பர் மாதத்தில் $38^0$ வட அட்சத்தில் அமைந்துள்ள புதுடெல்லி $23^0$செ வெப்பநிலையையும் $8^0$ வட அட்சத்தில் அமைந்துள்ள கன்னியாகுமரி $32^0$ செ வெப்பநிலையையும் பெற்றுள்ளது.

## 2. உயரம்

புவிப்பரப்பிலிருந்து உயரே செல்லச் செல்ல 165 மீட்டர் உயரத்திற்கு $1^0$ செ வீதம் வெப்பம் குறைந்துகொண்டே செல்கிறது. எனவே உயரமான இடங்கள் சமவெளிகளைக் காட்டிலும் குளிர்ந்து காணப்படுகின்றன. உதாரணமாக சமவெளியில் கடல் மட்டதிலிருந்து 239 மீட்டர் உயரம் கொண்ட புதுடில்லியின் சராசரி வெப்பம் ஜூன் மாதத்தில் $40.2^0$ செ ஆக உள்ளது. அதே நேரத்தில் 2205 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள சிம்லாவின் வெப்பம் $23.7^0$ செ எனக் கணக்கிடப்படுகிறது.

## 3. கடலிலிருந்து தூரம்

இந்தியாவில் கடகரேகைக்கு வடக்கிலுள்ள இடங்களில் 'கண்டகாலநிலை' நிலவுகிறது. கோடைகாலத்தில் அதிக வெப்பமாகவும் குளிர் காலத்தில் அதிக குளிராகவும் உள்ள

காலநிலை ‘கண்ட காலநிலை’ என்கிறோம். இப்பகுதிகள் கடலிலிருந்து வெகு தொலைவில் அமைந்திருப்பதே இதற்குக் காரணமாகும்.

கடகரேகைக்கு தெற்கில் அமைந்துள்ள இடங்கள் மேற்கில் அரபிக் கடலாலும், கிழக்கில் வங்காளவிரிகுடாவாலும், தெற்கில் இந்தியப் பெருங் கடலாலும் சூழப்பட்டுள்ளதால் மித வெப்பக்காலநிலை காணப்படுகிறது.

### 4. காற்று

காற்று கடல் பகுதியிலிருந்து நிலப்பகுதியை நோக்கி வீசும் போது மிதமான வெப்ப நிலையும், நிலப்பகுதிகளுக்குள்ளேயே வீசும்போது வறண்ட வெப்ப நிலையும் காணப்படும். எடுத்துக்காட்டாக,

1. மேற்குக்காற்றுகள் மத்தியத் தரைக்கடலில் உருவாகி இந்தியாவின் வடமேற்கு பகுதியை நோக்கி வீசுகிறது. இக்காற்று பஞ்சாப், ஹரியானா மாநிலங்களுக்கு மழையைத் தருகிறது.

2. வெப்பமண்டல புயல்காற்று வங்காள விரிகுடாவில் உருவாகி இந்தியாவின் கிழக்கு கடற்கரையை நோக்கி வீசுகிறது. இது மிகுந்த உயிர்ச் சேதத்தையும், பொருட்சேதத்தையும் விளைவிக்கின்றன.

### ஜெட் காற்று

வளிமண்டலத்தின் உயர் அடுக்குகளில் காணப்படும் காற்றோட்டத்தினை ஜெட் காற்றோட்டம் என்கிறோம். இக்காற்றோட்டம் இந்தியாவில் பருவக் காற்றின் தொடக்கக் காலத்தையும், அது முடிவடையும் காலத்தையும் நிர்ணயிக்கிறது.

### 5. மலைகளின் அமைவு

மலைகளின் அமைவு ஒரு இடத்தின் காலநிலையை நிர்ணயிப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றன. எடுத்துக்காட்டாக,

1. வட இந்தியாவில் உள்ள உயர்ந்த இமயமலைத்தொடர், மத்திய ஆசியாவில் இருந்து இந்தியாவை நோக்கி வீசும் கடும் குளிர் காற்றைத் தடுக்கிறது.

2. மழையைக் கொண்டுவரும் தென் மேற்குப் பருவகாற்றினை இமயமலைத் தொடர் தடுத்து, காற்றில் உள்ள ஈரப் பதத்தினை வடகிழக்கு மற்றும் சிந்து கங்கை சமவெளிக்கு மழையாகப் பொழிய வழி வகுக்கின்றன.

3. ஆரவல்லி மலைத்தொடர் தென் மேற்குப் பருவக்காற்றினை தடுப்பதால் இதன் மேற்குப் பகுதி மிகக் குறைந்த மழைப்பொழிவைப் பெற்று பாலைவனமாக உள்ளது.

எல்நினோ என்பது ஐந்து முதல் பத்து வருடங்களுக்கு ஒரு முறைக் காணப்படும் ஓர் வானிலை நிகழ்வு. இது உலகின் பல் வேறு பகுதிகளிலும் வறட்சியையும், வெள்ளத்தையும் கடும் வானிலை மாற்றங்களையும் ஏற்படுத்துகிறது. இந்தியாவின் தென் மேற்கு பருவக்காற்று வீச ஆரம்பிப்பதில் இது காலதாமதத்தை ஏற்படுத்துகிறது.

### இந்தியாவின் காலநிலை

இந்தியாவின் காலநிலையிலும், நிலத் தோற்றத்திலும் மிகப்பெரும் வேறுபாடுகள் காணப்பட்ட போதிலும் இந்திய ஒற்றுமைக்கு முக்கிய காரணியாக விளங்குவது பருவக்காற்றே ஆகும். ‘மான்சூன்’ என்ற சொல் அரேபிய சொல்லான ‘மௌசிம்’ என்பதிலிருந்து வந்தது. இதன் பொருள் பருவகாலம் என்பதாகும். இச்சொல் மாலுமிகளால், பல நூற்றாண்டுகளாக அரபிக் கடலில் மாறி வரும் காற்றுத் தொகுதிகளை குறிப்பிடுவதற்கு பயன்படுத்தப்பட்டது.

இக்காற்று ஆறுமாதங்கள் தென் மேற்கு திசையிலிருந்தும், அடுத்த ஆறு மாதங்கள் வடகிழக்கு திசையிலிருந்தும் வீசுகிறது. கோடைகாலத்திற்கும் குளிர்காலத்திற்கும் இடையே தங்களது திசையை முழுவதும் மாற்றிக்கொண்டு வீசும் காற்றுகளுக்கு பருவகாற்று என்று பெயர். இப்பருவக்காற்றினால் இந்தியாவில் ‘வெப்பமண்டல பருவகாற்று’ கால நிலை நிலவுகிறது.

### வெப்பமண்டல பருவகாற்று காலநிலையின் முக்கிய அம்சங்கள்

1. பருவகாற்றினை அது வீசும் திசையை அடிபடையாகக் கொண்டு தென் மேற்குப்பருவகாற்று மற்றும் வடகிழக்கு பருவக்காற்று என இருவகைகளாகப் பிரிக்கலாம்.

2. இவை நிலம் மற்றும் கடல் வெப்பம் அடைவதால் ஏற்படும் மாறுபாட்டால் உருவாகின்றன.

3. பருவக்காலங்களை மாற்றி மாற்றி அமைப்பதே பருவக்காற்றுகளின் முக்கிய அம்சமாகும். இதுவே இந்தியாவின் காலநிலையைத் தீர்மானிக்கிறது

### பருவகாலம்

வானிலை நிபுணர்கள், பருவகாற்று மாற்றத்தில் அடிப்படையில் இந்தியாவின் காலநிலையை நான்கு வெவ்வேறு பருவ காலங்களாகப் பிரிகின்றனர்.

அவையாவன,

1. குளிர்காலம் (டிசம்பர் முதல் பிப்ரவரி வரை)
2. கோடைகாலம் (மார்ச் முதல் மே வரை)
3. தென்மேற்கு பருவகாற்று ( ஜுன் முதல் செப்டம்பர் வரை)
4. வடகிழக்கு பருவகாற்று (அக்டோபர் முதல் நவம்பர் வரை)

### 1.குளிர்காலம் (டிசம்பர் முதல் பிப்ரவரி வரை)

குளிர்காலத்தில், சூரியனின் செங்குத்து கதிர்கள் மகர ரேகையின் மீது விழுகிறது. இதனால் வட இந்திய நிலப்பகுதி மிகவும் குளிர்வடைந்து சராசரி வெப்பம் $21^0$செ குறைந்து காணப்படுகிறது. பகல் மற்றும் இரவு நேர வெப்பநிலையில் வேறுபாடு காணப்படுவதில்லை.

இதற்கிடையில் இந்தியாவின் வட மேற்கு பகுதியில் குறைந்த வெப்பம் காணப்படுவதால் அங்கு உயர் அழுத்தம் உருவாகிறது. இதற்குமாறாக தென் இந்தியாவில் அரபிக்கடல் மற்றும் வங்காள விரிகுடா ஆகிய பகுதிகளில் தாழ்வு அழுத்தம் உரு வாகிறது. இதன் விளைவாக காற்றானது உயர் அழுத்தம் பகுதியிலிருந்து தென் இந்தியாவை நோக்கி வீசுகிறது. இந்தக் காற்றுக்கு பின்னடையும் பருவக்காற்று என்று பெயர் (Retreating Monsoon) என்று பெயர். இக்காற்று நிலத்திலிருந்து கடலை நோக்கி வீசுவதால் மழை அதிகம் தருவதில்லை. ஆனால் இக்காற்று வங்காள விரிகுடாவை கடக்கும்பொழுது சிறிதளவு ஈரப்பதத்தை பெறுவதால் தமிழ்நாடு மற்றும் தெற்கு ஆந்திரப்பிரதேசத்திற்கு குளிர்கால மழையைத் தருகிறது. இதுவே பின்னடையும் பருவகாற்றின் முக்கிய அம்சம் ஆகும்.

இதேநேரத்தில் மத்தியத்தரைக்கடலில் ஒரு தாழ் அழுத்தம் உருவாகி கிழக்கு நோக்கி நகர்ந்து ஈரான் மற்றும் ஆப்கானிஸ்தானைக் கடந்து இந்தியாவை வந்தடைகிறது. இத்தாழ்வு அழுத்தம் ‘மேற்கிந்திய இடையூறுகாற்று’ என்றழைக்கப்படுகிறது. இத்தாழ் அழுத்தத்தை இந்தியாவிற்கு கொண்டு வருவதில் ஜெட் காற்றோட்டம் முக்கியப் பங்கு வகிக்கிறது

இதன் காரணமாக பஞ்சாப் மற்றும் ஹரியானா, இமாச்சலப்பிரதேசத்திற்கு மழைப்பொழிவு ஏற்படுகிறது. இம்மழை கோதுமை விளைச்சலுக்கு மிகவும் பயனளிக்கிறது. அது ஜம்மு காஷ்மீர் குன்றுகளுக்குப் பனிப்பொழிவைத் தருகிறது.

### 2. கோடைகாலம் (மார்ச் முதல் மே வரை)

கோடைக்காலம் மார்ச் மாதம் தொடங்கி மே மாதம் வரை நீடிக்கும். இப்பருவத்தில் சூரியனின் செங்குத்து கதிர்கள் கடகரேகையின் மீது விழுகிறது. இதனால் இந்தியாவின் வடபகுதியில் வெப்பத்தின் அளவு அதிகமாகிறது. வட மேற்கு இந்தியாவின் சில பகுதிகளில் பகல் நேர வெப்பம் $45^0$ செ வரை உயர்கிறது.

இந்த அதிக வெப்பம் காரணாக வட இந்தியாவில் குறைந்த காற்றழுத்தம் உருவாகிறது.

இதற்கு மாறாக, தென்னிந்திய பகுதிகளில் மிதமான காலநிலையே காணப்படுகிறது. ஏனெனில் இப்பகுதி கடலுக்கு அருகாமையில் அமைந்ததுள்ளது. இங்கு அதிகபட்ச வெப்பம் $26^0$ செ முதல் $30^0$ செ வரை வேறுபடுகிறது. வட இந்தியாவைக் காட்டிலும் இங்கு குறைந்த வெப்பம் நிலவுவதால் உயர் காற்றழுத்தம் உருவாகிறது.

வளிமண்டல அழுத்த நிலையின் காரணமாக காற்றானது தென்மேற்கிலிருந்து வடகிழக்காக அரபிக்கடல் மற்றும் வங்காள விரிகுடாவில் வீசுகிறது. இது மே மாதத்தில் மேற்குக் கடற்கரைப் பகுதிகளுக்கு முன் பருவ மழையைத் தருகிறது.

**'மாஞ்சாரல்'** (Mango showers) என்றழைக்கப்படும் இடியுடன்கூடிய மழையானது கேரளா மற்றும் கர்நாடக கடற்கரைப் பகுதிகளில் விளையும் மாங்காய்கள் விரைவில் முதிர்வதற்கு உதவுகிறது வடகிழக்கு இந்தியப் பகுதிகளில் வீசும் தலக்காற்று **'நார்வெஸ்டர்'** (Norwesters) என்றழைக்கப்படுகிறது. இத்தலக்காற்று பஞ்சாப்பில் கால்பைசாகி (பைசாகி மாத சீரழிவு) (Kalbaisagi) என்றழைக்கப்படுகிறது.

இந்தியாவின் வடக்கு மற்றும் வட மேற்கு பகுதிகளில் கோடைகாலத்தில் பகல் நேரத்தில் வீசும் வலிமையான வெப்பக்காற்று 'லூ' என்றழைக்கப்படுகிறது.

### 3. தென்மேற்கு பருவகாற்று (ஜூன் முதல் செப்டம்பர் வரை)

கோடைகாலத்திற்கு பின், தென் மேற்குப்பருவகாற்றின் தொடக்கத்துடன் மழைக்காலம் தொடங்குகிறது. அதிக வெப்பத்தால் குறைவழுத்தம் உருவாகிறது. மே மாத இறுதிக்குள் இந்தியாவின் வடமேற்கு பகுதியின் பெரும்பரப்பில் தாழ்வழுத்தம் அமைகிறது. அதே நேரத்தில் பெருங்கடல்கள் குளிர்வடைவதால் அங்கு உயர் அழுத்தம் ஏற்படுகிறது. காற்று எப்பொழுதும் உயர் அழுத்தப் பகுதியிலிருந்து தாழ்வழுத்த பகுதியை நோக்கி வீசும் என்பதை நாம் அறிவோம். எனவே காற்று கடலில் இருந்து இந்திய நிலப்பகுதியை நோக்கி வீசுகிறது. இக்காற்றையே தென் மேற்கு பருவகாற்று என்று அழைக் கிறோம்.

இக்காற்று பூமத்தியரேகையை கடக்கும்போது அதன் திசை மாற்றபட்டு தென்மேற்கு பருவகாற்றாக வீசுகிறது. இக்காற்று இந்தியப் பெருங்கடலிலிருந்து தோன்றுவதால் அதிக வெப்பத்தை தாங்கிய காற்றாக உள்ளது. கேரளாவின் தென் பகுதியை அடையும்போது பலத்த இடி மின்னலுடன் கூடிய மழையை அளிப்பதன் மூலம் தென்மேற்கு பருவகாலம் ஆரம்பிப்பதை காட்டுகிறது இதனை பருவமழை வெடிப்பு (Monsoon Burst) என்பர்.

பொதுவாக தென்மேற்கு பருவக்காற்று இந்திய தீபகற்ப அமைப்பால் இருகிளைகளாக பிரிகிறது.


அவையாவன :

1. அரபிக்கடல் கிளை
2. வங்காளவிரிகுடா கிளை

### அரபிக்கடல்கிளை

பருவகாற்றின் அரபிக்கடல்கிளை ஓர் வலிமைமிக்க காற்று. இது அதிக மழைப் பொழிவை தருகிறது. அரபிக்கடலில் இருந்து வீசும் இக்காற்றின் ஒரு பகுதி முதலில் மேற்கு தொடர்ச்சி மலை மீது மோதுகிறது. ஈரப்பதமிக்க இக்காற்று மலைச்சரிவுகளின் வழியே உயரே எழும்பி , குளிர்வடைந்து மேற்கு கடற்கரை பகுதிக்கு பலத்த மழையைத் தருகிறது. மேற்கு தொடர்ச்சி மலையின் காற்று மோதும் திசையில் அமைந்துள்ள மும்பை 150 செ.மீ. மழையையும் மேற்கு தொடர்ச்சி மலையின் மறைவிலுள்ள மழை மறைவு பிரதேசத்தில் உள்ள புனே 50 செ.மீ மழையையும் பெறுகின்றன.


# இந்தியா
## (முன்னேறும் பருவக் காற்று)




நில வரைபடத்தின் உள்ளே காணப்படுகின்ற கோடுகள் ஜூன் 1 தேதி முதல் ஜூலை 15–ம் தேதி வரை பருவக்காற்று முன்னேறிச் செல்வதை குறிப்பிடுகிறது.

### காற்று மோதும் பக்கம்

காற்று வீசும் திசையை நோக்கியுள்ள மலைச்சரிவை காற்று மோதும் பக்கம் என்கிறோம். இது அதிக மழையை பெறுகிறது.




மலையின் காற்று மோதும் பக்கம், காற்று மோதாப் பக்கம்

### காற்று மோதாப் பக்கம்

மலையின் மறுபக்கச்சரிவு காற்று வீசும் திசைக்கு மறைவாக உள்ளதால் அதனை காற்று மோதாப் பக்கம் என்கிறோம்.

### மழை மறைவுப் பகுதி

மழை மறைவுப் பகுதி, எனப்படுவது மழையின் காற்று மோதாப் பகுதியில் உள்ள மிகக் குறைந்த மழைபெறும் பகுதி மழை மறைவுப் பகுதி எனப்படும்.

இதன் இரண்டாவது பகுதி விந்திய சாத்பூரா மலைகளின் வழியே சென்று ராஜ்மகால் குன்றுகளின் மீது மோதி சோடா நாகபுரி பீடபூமிக்கு அதிக மழைப் பொழிவைத் தருகிறது.

இக்காற்றின் மூன்றாவது பகுதி ராஜஸ்தானை நோக்கி நகர்கிறது. அங்கு ஆரவல்லி மலைத்தொடர் காற்று வீசும் திசைக்கு இணையாக உள்ளது. அதனால் இக்காற்று மலை மீது மோத இயலாததால். ராஜஸ்தானுக்கு மழைப்பொழிவை தருவதில்லை. இதனால்தான் மேற்கு ராஜஸ்தானின் ஒரு பகுதி பாலைவனமாக அமைந்துள்ளது. இப்பிரிவானது இமாசலபிரதேசத்தை அடைந்து, பின் வங்காள விரிகுடா கிளைக் காற்றுடன்கலந்துவிடுகிறது. இவை சிவாலிக் குன்றுகளால் தடுக்கப்படுவதால் அவற்றின் மலையடிவாரத்தில் நல்ல மழைப்பொழிவை தருகின்றன.

### வங்காளவிரிகுடா கிளை


வங்காள விரிகுடாவில் இருந்து வீசும் இக்காற்றானது ஈரப்பதத்தை தாங்கிவரும் காற்றாகும். இது காசி, காரோ, ஜெயந்தியா குன்றுகளின் மீது மோதுகிறது. ஈரப்பதம் தாங்கிவரும் இக்காற்றானது புனல்வடிவ குன்றுகளின் மீது மோதி திடீரென மேல் எழும்புவதால் இந்தியாவிலேயே அதிக மழை பெறும் இடமான சிரபுஞ்சிக்கு கனமழையைத் தருகிறது. இக்காற்றின் ஒரு பகுதி இமயமலைகளால் தடுக்கப்பட்டு மேற்கு நோக்கி நகர்ந்து கங்கை சமவெளிக்கு மழையைத் தருகிறது. இது மேலும் மேற்கு நோக்கி நகர நகர தம்மிடமுள்ள ஈரப்பதத்தை இழப்பதால் பஞ்சாப் மற்றும் ஹரியானாவிற்கு மிகக் குறைந்த அளவு மழையைத் தருகிறது. இறுதியாக வங்காளவிரிகுடா கிளை காற்று அரபிக்கடல் கிளையுடன் சேர்ந்து இமயமலையின் அடிவாரமான சிவாலிக் குன்று பகுதிகளுக்கு அதிக மழைப் பொழிவைத் தருகின்றன. இந்த பருவத்தில் தமிழ்நாட்டில் வறண்ட நிலையே காணப்படுகிறது. ஏனெனில் இது அரபிக்கடல் கிளை காற்றுக்கு மழை மறைவுப் பகுதியிலும், வங்காள விரிகுடா கிளை காற்றுக்கு இணையாகவும் அமைந்துள்ளது.

### 4. வடகிழக்கு பருவ காற்று (அக்டோபர்–நவம்பர்)

சூரியன் மகரரேகையை நோக்கி நகர ஆரம்பிப்பதால், தென்மேற்கு பருவகாற்று வட இந்தியாவில் இருந்து செப்டம்பர் மாதம் இரண்டாவது வாரத்தில் பின்னோக்கி வர ஆரம்பிக்கிறது.

இந்திய நிலப்பகுதி வெப்பத்தை இழக்கிறது. நிலத்தின் வெப்பநிலை குறைந்து சென்றாலும் கடலின் வெப்பம் இன்னும் மிதமாகவே உள்ளது. இதனால் கடல் பகுதியில் குறைந்த அழுத்தமும், நிலப்பகுதியில் உயர் அழுத்தமும்

## இந்தியா
## (பின்னடையும் பருவக் காற்று)



ஏற்படுகிறது. இதனால் காற்று உயர் அழுத்தத்தில் இருந்து குறைந்த அழுத்தத்தை நோக்கி வீசுகிறது. அதாவது நிலத்திலிருந்து கடலை நோக்கி வீசுகிறது. இது குளிர்ந்த வறண்ட காற்று என்பதால் நிலப்பகுதிக்கு மழையைத் தருவதில்லை. ஆனால் இது வங்காளவிரிகுடாவைக் கடக்கும்பொழுது ஈரப்பதத்தை உறிஞ்சி, சோழமண்டலக் கடற்கரைக்கு கனத்த மழையைத் தருகிறது. அதனால் ஆந்திரப் பிரதேசமும், தமிழ்நாடும் குளிர்காலத்தில் நல்ல மழையைப் பெறுகின்றன. இப்பருவத்தில் வங்காளவிரிகுடாவில் அடிக்கடி புயல்கள் உருவாகி சோழமண்டல கடற்கரையை ஒட்டியுள்ள பகுதிகளுக்கு உயிர் சேதத்தையும், பொருள் சேதத்தையும் உண்டு பண்ணுகின்றன.

### பருவகாற்றின் இயல்புகள்

#### 1. ஆண்டு முழுவதும் சீரற்ற மழைப்பரவல்

நம் நாட்டின் 80% மழைப்பொழிவிற்கு காரணமாக அமைவது ஜுன் முதல் செப்டம்பர் வரை வீசும் தென்மேற்கு பருவக்காற்றே ஆகும். பருவக் காற்று வீசும் காலம் பொதுவாக 2 முதல் 4 மாதங்கள் வரை வேறுபடுகிறது. பொதுவாக பருவக்காற்று செப்டம்பர் மாதத் தொடக்கத்தில் வடமேற்கு திசையிலிருந்தும், அக்டோபர் மாத இறுதிக்குள் நாட்டின் மற்ற பகுதிகளிலிருந்தும் நவம்பர் மாதத்தில் சில பகுதிகளிலிருந்தும் பின்னோக்கிச் செல்ல ஆரம்பிக்கிறது.

#### 2. மலைகளின் செல்வாக்கு

நிலத்தோற்ற அமைப்புகள் மழையளவை பெரிதும் பாதிக்கின்றன. காற்றானது, குஜராத் மற்றும் ராஜஸ்தான் வழியாக வீசினாலும், மலைகள் குறுக்கே காணப்படாததால் மழைப்பொழிவு ஏற்படுவதில்லை. மேற்குக் கடற்கரையோரத்தில் உள்ள மேற்குத்தொடர்ச்சி மலைகளின் மீது மோதி காற்று வீசுவதால் அதிக மழைப்பொழிவைப் பெறுகிறது. எடுத்துக்காட்டாக ஷில்லாங் பீடபூமி 1270செ.மீ. அளவு ஆண்டு மழைப்பொழிவையும் மழை மறைவுப் பகுதியிலுள்ள அஸ்ஸாம் பள்ளாத்தாக்கின் மத்திய பகுதி 163.7செ.மீ. அளவு ஆண்டு மழைப் பொழிவையையும் பெறுகின்றன.

#### 3. வெப்ப மண்டலப் புயல் காற்று

மழையின் தீவிரமும், மழை பரவலும் தொடர்ச்சியாக ஏற்படும் வெப்ப மண்டல குறைவழுத்த அமைப்பால் நிர்ணயிக்கப்படுகின்றன. இவை வங்காளவிரிகுடாவின் வடபகுதியில் உருவாகி நம் நாட்டின் மேற்கு மற்றும் வடமேற்கு பகுதிகளை நோக்கி வீசுகின்றன. சராசரியாக இதுபோன்ற எட்டு வெப்ப மண்டல குறைந்த அழுத்தங்கள் ஜுன் முதல் செப்டம்பர் வரை வங்காள விரிகுடாவில் தோன்றி நிலப்பகுதியை கடந்து செல்கின்றன.

#### 4. மழைப்பொழிவின் நிலையற்ற தன்மை

ஒரு குறிப்பிட்ட மாநிலத்தின் மழைப் பொழிவைப் பற்றி பொதுவான ஒரு கருத்தாக விவரித்துக் கூறுவது கடினம். ஏனெனில் ஒரு பருவகாலத்தில் அதிக மழை பெறும் அதே பகுதி அடுத்த பருவகாலத்தில் வறட்சியை அனுபவிக்கலாம். பருவமழைத் துவக்கம் தாமதப்படலாம். ஜுலை மற்றும் ஆகஸ்டு மாதங்களில் ஒரு வாரத்திற்கோ அல்லது அதற்கு மேலோ மழை பெய்யாமலிருப்பதால் பருவமழையின் தொடர்ச்சியில் இடைவெளி ஏற்படலாம். பருவமழை வழக்கமான காலத்திற்கு முன்னரே முடிவடையலாம் அல்லது வழக்கத்தைக் காட்டிலும் நீடித்துப் பெய்யலாம்.

#### 5. நாட்டின் பொருளாதாரத்தில் பருவமழையின் பெரும் தாக்கம்

இந்திய நாட்டின் வளமை, பருவமழை பெய்வதையோ அல்லது பொய்ப்பதையோ, பொறுத்து அமைகிறது. மழையைத்தாங்கி வரும் காற்றின் திசையில் சிறிதளவே மாறுபாடு ஏற்பட்டாலும் இயல்பாக நல்ல மழைநீரைப் பெறும் பகுதிகள் கூட பாலை வனங்களாக மாறக்கூடும். உதாரணமாக குஜராத் மற்றும் தக்காணபீடபூமி

போன்றவை வறட்சியைப் பெறும் இடங்களாகும். குறைந்த மழைப்பொழிவின் காரணமாக நீர்மின்சக்தி உற்பத்தி நிலையங்கள் கடுமையாக பாதிக்கப்படுகின்றன. இதனால், தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும். மின்சக்தியின் அளவும் குறைக்கப்படுவதால் பொருளாதாரத்தில் பெரும் வீழ்ச்சி ஏற்படுகின்றது.

### கோடைகால மழை

ஒரு ஆண்டின் மழைப் பொழிவு சராசரியாக 1187 செ.மீ முதல் 25 செ.மீ வரை மாறுபடும். உலகிலேயே அதிக மழைபெறும் மௌசின்ராம் என்ற இடம் சிரபுஞ்சிக்கு மேற்கில் 16 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. இதன் சராசரி மழைப் பொழிவு 1187 செ.மீ. ராஜஸ்தானிலுள்ள 'தார்பாலைவனம்' 25 செ.மீட்டருக்கும் குறைவான மழைப்பொழிவைப் பெறுகிறது. இந்நிலையற்ற மழைப் பொழிவு சில நேரங்களில் பேரிழப்பை ஏற்படுத்துகின்றது.

### குளிர்கால மழைப்பொழிவு

தமிழ்நாட்டில் வடகிழக்கு காற்றானது வங்காளவிரிகுடாவில் அக்டோபர் மாதத்தில் உருவாகி பின்னடையும் கோடைப்பருவக்காற்றுடன் கலக்கிறது. இந்தக் காற்றோட்டமானது வங்காள விரிகுடாவைச் சுற்றிக்கொண்டு தமிழ்நாட்டின் கடற்கரையை நோக்கி வீசுகிறது. இதனால்அதிக மழைப் பொழிவை அளிப்பதுடன் ஒரு வருடத்திலேயேபெரும் இடையூறுகளையும் தரும் (முக்கியமாக அக்டோபரிலிருந்து நவம்பர் வரை) வானிலையாக அமைகிறது. கடற்கரையோரங்களில் வீசும் கனமழையுடன் கூடிய பலத்த காற்று விளைந்த பயிர்களை அழிப்பதுடன் போக்குவரத்து அமைப்பையும் பெரிதும் மாற்றி அமைக்கிறது. அதேபோல நாகப்பட்டினம் பெறும் மொத்த மழைபொழிவான 140செ.மீட்டரில் 100செ.மீ. மழையை குளிர்காலத்தில் பெறுகிறது. உள்நாட்டு பகுதிகளைவிட கடற்கரையோர பகுதிகள் அதிக மழையைப் பெறுகின்றன. உள்நாட்டை நோக்கிச் செல்ல செல்ல மழையளவு குறைகிறது. கர்நாடகாவிலுள்ள மைசூர் பீடபூமியானது 3 முதல் 4 செ.மீ மழையளவே பெறுகிறது.

### மழைப்பரவல்

நாம் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல, நாட்டின் மழைப்பரவல் இரண்டு முக்கிய காரணிகளால் நிர்ணயிக்கப்படுகிறது. அவையாவன

1. மழையைத்தாங்கி வரும் காற்றின் திசை
2. மலைகளின் அமைவு

இதன் காரணமாக நாட்டின் மொத்தப் பரப்பில் 30 சதவீதம் 15 செ.மீ. முதல் 80செமீ. வரையும், 40 சதவீதம் 80 செ.மீ. முதல் 120 செமீ. வரையும், 20 சதவீதம் 120 செ.மீ.முதல் 180 செமீ. வரையும், 10 சதவீதம் 200செ.மீ. மேல் மழையைப் பெறுகின்றன.

மழைப்பொழிவின் அடிப்படையில் நம்நாட்டை பின்வரும் 4 பிரிவுகளாக பிரிக்கலாம். அவையாவன.

### 1. மிக அதிக மழை பெறும் பகுதிகள்

200 செ.மீ.க்கும் அதிகமான மழைபெறும் கிழக்கு இமயமலையின் தெற்கு சரிவு, அஸ்ஸாம், வங்காளம், கொங்கணம் மற்றும் மலபார் கடற்கரையை உள்ளடக்கிய மேற்கு கடற்கரைப் பகுதிகள் ஆகும்.


### 2. அதிக மழை பெறும் பகுதிகள்

100 செ.மீ. முதல் 200 செ.மீ. மழைபெறும் பகுதிகளாவன. மத்திய கங்கைச்சமவெளி, மேற்குமலைத்தொடர், கிழக்கு மஹாராஷ்டிரம், மத்திய பிரதேசம் மற்றும் ஒரிசா.

### 3. மிதமான மழை பெறும் பகுதிகள்

50 செ.மீ முதல் 100 செ.மீ வரை மழைபெறும் பகுதிகள் மேல் கங்கைப் பள்ளதாக்கு, கிழக்கு ராஜஸ்தான், பஞ்சாப், கர்நாடகம், ஆந்திரப்பிரதேசம் மற்றும் தமிழ்

## இந்தியா
## மழை பிரதேசங்கள்




நாடு அடங்கிய தென் தக்காண பீடபூமிப்பகுதிகள் ஆகும்.

### 4. குறைவான மழை பெறும் பகுதிகள்

50 செ.மீ.க்கும் குறைவாக மழை பெறும் பகுதிகள் காஷ்மீரின் வடபகுதி, மேற்கு ராஜஸ்தான் , தென் பஞ்சாப் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலைகளின் மழை மறைவுப் பகுதியிலுள்ள தக்காண பீடபூமிப்பகுதிகள்.

### நீர் மேலாண்மை

நீர்மேலாண்மை என்பது கிடைக்கக் கூடிய நீர்வளத்தை நன்முறையில் மக்கள் நலனுக்காக பயன்படுத்துவதும், நீர்சீரழிவையும், நீர்தட்டுப்பாட்டையும் கட்டுப்படுத்துவது மட்டுமல்லாமல், நம் எதிர்காலத்தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் நிர்வகிப்பதும் ஆகும். நீர் ஒரு

அத்தியாவசியமான வளமாகும். மேலும் நீர் பலவகைகளில் பயன்படுகிறது. என்பதால் மண்வளம் மற்றும் நீர்வளம் இரண்டையும் ஒருங்கிணைந்த முறையில் நிர்வகிப்பது அவசியமாகிறது. நீர் மேலாண்மை அனைத்து நிலைகளிலும் பின்பற்றப்பட வேண்டியதொன்றாகும்.

நீரைச் சேமித்து பாதுகாக்கும் நடவடிக்கைகளுக்கு அடிப்படை தேவைகளாவன,

1. உள்ளூர் மக்களின் முழுமையான ஈடுபாடு, ஒத்துழைப்பு மற்றும் பங்கேற்பு மிக அவசியம்

2. வீட்டுப் பயன்பாட்டிற்கான நீரை நிர்வகிப்பதில் பெண்களின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது.


3. நீர் மேலாண்மையின் முக்கிய அம்சமாகக் கருதப்படுவது நீரை ஒரு பொருளாதாரப் பொருளாகக் கருதி, அதனை லாபகரமானதாகவும், தேவையைப் பூர்த்தி செய்யும்முறையிலும் பயன்படுத்தவேண்டும்.

4. தரமான நீரை அனைவரும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதை உறுதி செய்தல் வேண்டும்

நீரை 'மழைநீர் அறுவடை' என்ற நுட்பமுறையை பயன்படுத்தி சேமிக்கலாம்.

### மழைநீர் அறுவடை

இந்தியா, வெப்பமண்டல பருவக் காற்று காலநிலையைப் பெற்றுள்ளது. இக்காலநிலை பருவ காலங்களில் மழையைத் தருகிறது. இம்மழை சீரற்ற, நிலையற்ற முறையில் பொழிகிறது. இதனால் பெரும்பாலான நேரங்களில் மழைநீர் குறைவாகவே கிடைக்கிறது. எனவே கிடைக்கும் மழைநீரை சேமிப்பது மிகவும் அவசியமாகிறது.



நாம் இம்மழைநீரை ஆழமான நிலத்தடி நீர் மட்டத்துடன் ஊடுருவல் செய்து தேவை ஏற்படும்போது குழாய்கள் மூலம் பெற்றுக்கொள்ளலாம். மழைநீர் அறுவடை என்பது மழைநீரை நேரடியாக சேகரித்து சேமிப்பதும், நமக்கு தேவையான நீரை தரைக்கு அடியில் சேகரித்துப் பின்னர் பயன்படுத்திக்கொள்வதும் ஆகும். மழைநீர் அறுவடை மூலம் மழைநீரின் உண்மை மதிப்பினையும் அதனை சிறந்த முறையில் பயன்படுத்தும் முறையையும் நாம் புரிந்து கொள்ளலாம்.

## பயிற்சி

### அ. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.

1. இந்தியாவில் நிலவுவது__________.
   அ) மிதவெப்ப மண்டலக் காலநிலை　ஆ) வெப்ப மண்டல பருவகாற்று காலநிலை
   இ) வெப்ப மண்டலக் காலநிலை　ஈ) குளிர் காலநிலை
2. கடற்கரை பகுதிகளில் நிலவுவது __________காலநிலை.
   அ) கண்ட காலநிலை　ஆ) சமமான காலநிலை
   இ) ஈரப்பதகாலநிலை　ஈ) வெப்ப காலநிலை
3. மேற்கிந்திய இடையூறுகளால் மழைபெறும் இடங்கள்__________.
   அ) பஞ்சாப்　ஆ) மும்பை
   இ) அலகாபாத்　ஈ) சென்னை
4. தென்மேற்கு பருவகாற்று திசைக்கு இணையாக அமைந்துள்ள மலைகள்__________.
   அ) ஆரவல்லி　ஆ) சாத்பூரா
   இ) விந்தியா　ஈ) மைக்காலா
5. கோடை பருவத்தில் இந்தியாவின் வடகிழக்கு பகுதியில் வீசும் உள்ளூர் புயலின் பெயர் __________.
   அ) நார்வெஸ்டர்ஸ்　ஆ) ‘லூ’
   இ) மாந்தூரல்　ஈ) பருவகாற்று

### ஆ. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. | பருவமழை வெடிப்பு | டிசம்பர் முதல் பிப்ரவரி வரை |
| 2. | நார்வெஸ்டர்ஸ் | அக்டோபர் முதல் நவம்பர் வரை |
| 3. | நீர் சேமிப்பு நடவடிக்கைகள் | இந்தியாவின்வடக்கு மற்றும் வடமேற்கு இந்தியப் பகுதி |
| 4. | வடகிழக்கு பருவகாற்றுகாலம் | வடகிழக்கு இந்தியாவின் தலக்காற்று |
| 5. | அதிக மழை பெறும் பகுதி | ஜூன் முதல் செப்டம்பர் |
| | | மௌசின்ராம் |
| | | மக்களின் பங்கேற்பு |

## 3. வேறுபடுத்துக.

1. மலைகளின் காற்று மோதும் பக்கம் மற்றும் காற்று மோதாப்பக்கம்.
2. தென்மேற்கு பருவகாற்று மற்றும் வடகிழக்கு பருவகாற்று.
3. மேற்கிந்திய இடையூறு காற்று மற்றும் வெப்பமண்டலச் சூறாவளி.
4. வானிலை மற்றும் காலநிலை.
5. லூா மற்றும் நார்வெஸ்டர்ஸ்.

## 4. பின்வரும் வினாக்களுக்கு குறுகிய விடையளி.

1. இத்தியக் காலநிலையை நிர்ணயிக்கும் காரணிகளின் பெயர்களை எழுதுக.
2. பருவகாற்று என்பதன் பொருள் யாது ?
3. வெப்ப மண்டல பருவகாற்றுக் காலத்தின் முக்கியக் கூறுகள் யாவை ?
4. ஜெட்காற்றுகள் என்றால் என்ன ? அவை எவ்வாறு இந்தியாவின் காலநிலையை பாதிக்கிறது ?
5. மிக அதிக மழைபெறும் பகுதிகளின் பெயர்களை குறிப்பிடுக.
6. பருவகாற்று வெடிப்பு' என்பதன் பொருள் யாது ?

## 5. பின்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தியில் விடையளி.

1. இந்தியக் காலநிலையை நிர்ணயிக்கும இரண்டு கூறுகளை ஆராய்க.
2. பருவகாற்றின் (Monsoon wind) பண்புகளை எழுதுக
3. ஏதேனும் ஒரு தென்மேற்கு பருவகாற்றின் கிளையினை விவரிக்க.
4. மழைநீர் சேகரிப்பினை விளக்குக.
5. நீர்மேலாண்மை என்றால் என்ன ? நீரினை பேணிகாப்பதற்கு தேவையான அடிப்படை கூறுகள் யாவை ?

## 6. இந்திய வரைபடத்தில் பின்வருவனவற்றை குறித்து பெயர் எழுதுக.

1. தென்மேற்கு பருவகாற்று வீசும் திசை மற்றும் வடகிழக்கு பருவகாற்று வீசும் திசைகளை குறிக்கவும்.
2. 200 செ.மீ.மேல் மழைபெறும் பகுதிகள் மற்றும் 50 செ.மீ.க்கும் குறைவாக மழை பெறும் பகுதிகளை குறிக்கவும்.

# 3. இந்தியா – இயற்கை வளங்கள்

நம் அன்றாட வாழ்க்கைக்கு வளங்கள் ஓர் அடிப்படை தேவையாக அமைகின்றன. செழுமையான பல்வேறுபட்ட வளங்கள் இருப்பின், அந்நாடு வளர்ச்சியடைந்துவிட முடியும் ஆனால் இவ்வளத்தை நாம் எந்த அளவிற்கு நியதியுடன் பயன்படுத்துகிறோமோ, அந்த அளவிற்கு நாட்டின் நிலையானதொரு வளர்ச்சிக்கு உதவி புரியும். இயற்கை வளங்களை மிக அதிக அளவில் நாம் பயன்படுத்துவதால், அது சுற்றுப்புற சீர்கேடுகளை ஏற்படுத்துவதுடன், வளங்கள் விரைவில் அழிந்து போவதற்கும் காரணமாகிவிடுகின்றது. இந்தியாவின் முக்கியமான வளங்களையும், அவற்றை பாதுகாப்பதன் அவசியத்தைப் பற்றியும் காண்போம்.

## இயற்கைவளங்கள்

அன்றாட வாழ்வின் தேவைகளை நிறைவு செய்ய இயற்கையிலிருந்து பெறப்படும் அனைத்து பொருட்களையும் இயற்கை வளங்கள் என்கிறோம். நிலம், காற்று , நீர், சூரிய ஒளி, மண், கனிமங்கள் நிலக்கரி, கச்சா எண்ணெய், தாவரங்கள் மற்றும் விலங்குகள் ஆகியவை, இயற்கை வளங்களுக்கு சில எடுத்துக்காட்டுகள் ஆகும். மனிதர்கள் தாங்கள் உயிர்வாழ இவ்வளங்களை நேரடியாகவோ, அல்லது மறைமுகமாகவோ பயன்படுத்துகின்றனர்.

இயற்கை வளங்களை இரு பெரும் பிரிவுகளாக பிரிக்கலாம். அவையாவன.

1) புதுப்பிக்கத்தக்க வளங்கள்

2) புதுப்பிக்க இயலாத வளங்கள்

## 1. புதுப்பிக்கத்தக்க வளங்கள்

மீண்டும் மீண்டும் எளிதாக உற்பத்தி செய்யக்கூடிய வளங்களை புதுப்பிக்கத்தக்க வளங்கள் என்கிறோம். எடுத்துக்காட்டாக, சூரிய ஒளி, காற்று, தண்ணீர் போன்றவை தொடர்ந்து கிடைக்கக்கூடிய வளங்கள் ஆனால் அவற்றின் அளவு மனிதனின் நுகர்வினால் குறைந்து விடுகின்றன. புதுப்பிக்கத்தக்க வளங்கள் தங்களை மீண்டும் புதுப்பித்து கொள்வதற்கு எடுத்துக்கொள்ளும் காலம் ஒரு வளத்திற்கும் மற்றொரு வளத்திற்கும் வேறுபடுகிறது. எடுத்துக்காட்டாக வேளாண் பயிர்கள் மீண்டும் உற்பத்தியாவதற்கு குறைந்த காலத்தையே எடுத்துக்கொள்கின்றன. ஆனால் நீர் போன்ற வளங்கள் வேளாண்பயிர்களைக் காட்டிலும் நீண்ட காலம் எடுத்துக்கொள்கின்றன. இவற்றைக்காட்டிலும் காடுகள் போன்ற வளங்கள் புதுப்பிப்பதற்கு இன்னும் அதிக காலம் எடுத்துக்கொள்கின்றன.

## 2. புதுப்பிக்க இயலாத வளங்கள்

'பயன்பாட்டிற்குப் பிறகு மீண்டும் கிடைக்க இயலாத வளங்கள் புதுப்பிக்க இயலாத வளங்கள்' என்பர் . இவை நீண்ட புவியியல் காலத்தில் உருவாக்கப்பட்டவை.

கனிமங்கள் மற்றும் படிம எரிபொருள்கள் இவ்வகையில் அடங்கும் இவை மிகவும் மெதுவாகவே உருவாவதால், எளிதில் புதுப்பிக்க இயலுவதில்லை, நிலக்கரி மற்றும் கச்சா எண்ணெய் இதற்கு உதாரணமாகும். அதனால்தான் புதுப்பிக்க இயலாத வளங்களை கட்டுப்பாட்டுடன் பயன்படுத்தவேண்டும் என்று நாம் அடிக்கடி அறிவுறுத்தப்படுகிறோம்.

## மண்வளம்

மண் ஒரு இன்றியமையாத புதுப்பிக்கத்தக்க இயற்கை வளமாகும். இது தாவரங்களின் வளர்ச்சிக்கு ஓர் ஊடகமாகவும், புவியிலுள்ள பல்வேறு வகையான உயிரினங்களுக்கு ஆதாரமாகவும் அமைகிறது.

புவியின் மேற்பரப்பில் அமைந்துள்ள உதிரியான துகள்கள் 'மண்' எனப்படுகிறது. இது வரையறுக்கப்பட்ட

நிலையான கூட்டுப் பொருள்களாக இல்லை, மண்ணில் அடங்கியுள்ள பொருட்களாவன.

1. மக்கிய தாவரங்கள்
2. விலங்கின பொருட்கள்
3. சிலிகா, களிமண், சுண்ணாம்பு போன்ற கனிமங்கள் மற்றும்
4. இலைமக்கு எனப்படும் உயிர்ச்சத்துப் பொருட்கள்

## மண் வளமை (Soil Fertility)

தாவரங்களின் வளர்ச்சிக்கு ஆதாரமான மண்ணிலுள்ள சத்துப்பொருட்களின் அளவினைக் குறிப்பது மண்ணின் செழுமை எனப்படும். மண்ணிலுள்ள பெரும் சத்துப் பொருட்களும் மற்றும் நுண்சத்துப் பொருட்களும் மண்ணின் செழுமையை நிர்ணயிக்கின்றன. மிக நுண்ணிய சத்துக்களான கந்தகம், குளோரின், செம்பு, மாங்கனிஸ், மாலிப்தீனம், போரான், இரும்பு, கோபால்டு, துத்தநாகம், போன்றவையும்பெரிய சத்துப் பொருட்களான நைட்ரஜன், பொட்டாசியம் மற்றும் பாஸ்பேட்கள் போன்றவையும் மண்ணில் இருக்க வேண்டிய சத்துப்பொருட்களாகும். மண்ணின் உயிரி பொருட்களின் அளவு அதிகரிக்க அதிகரிக்க மண்ணின் செழுமையும் அதிகரிக்கிறது.

## முக்கிய மண் வகைகள்

இந்தியாவில் உள்ள மண்ணை, அவைகளின் பரப்பு மற்றும் வேளாண் முக்கியத்துவத்தைப் பொறுத்து ஐந்து வகைகளாகப் பிரிக்கலாம். அவையாவன.

1. வண்டல் மண்
2. கரிசல் மண்
3. செம்மண்
4. சரளை மண் மற்றும்
5. வறண்ட பாலைவன மண்.

## 1. வண்டல் மண்

வண்டல் மண் ஆற்றுப் படுகைகள் வெள்ளப்பெருக்குச் சமவெளி, டெல்டா, மற்றும் கடற்கரை சமவெளி போன்றவற்றை ஆறுகளால் படியவைக்கின்ற படிவுகளாகும். இம்மண் இந்திய வேளாண் பொருள் உற்பத்திக்கு பெரும் பங்களிக்கிறது.

வண்டல் மண் இரண்டு வகையாக பிரிக்கப்படுகிறது. அவை காதர் மற்றும் பாங்கர் ஆகும். காதர் மண் புதிதாக படியவைக்கப்பட்ட வெளிர்நிறத்துடன் கூடிய வண்டல் மணலாகும். பாங்கர் மண் களிமண் கூடிய வண்டல் மண்ணாகும். வண்டல் மண் துகள்களின் அமைப்பை பொறுத்து மாறுபடுகிறது. இது நெல், கோதுமை, கரும்பு, பருத்தி மற்றும் எண் ணெய் வித்துக்கள் பயிரிடுவதற்கு ஏற்ற மண்ணாகும். கங்கை–பிரம்மபுத்திரா தாழ்ந்த ஆற்றுச் சமவெளி சணல் பயிரிட பயன்படுகிறது.


சட்லெஜ்கங்கா, யமுனா, கண்டக், காக்ரா மற்றும் பல ஆறுகளினால், கொண்டு வரப்படும் வண்டல் மண் இப்பள்ளத்தாக்கில் காணப்படுகிறது. பஞ்சாப், ஹரியானா உத்திரப்பிரதேசம், பீகார், மேற்கு வங்காளம் போன்றவற்றின் சில பகுதிகள் இப்பள்ளத்தாக்கில் அமைந்துள்ளன. தென்னிந்தியாவில் காவிரி ஆறு அதன் படுகையில் வண்டல் மண்ணை படியவைக்கிறது.

## 2. கரிசல் மண்

கரிசல் மண் தீப்பாறைகள் சிதைவுறுவதால் உருவாகிறது. இம்மண் கோதாவரி, நர்மதா, மற்றும் தபதி ஆற்றுப் பள்ளதாக்குகளில் காணப்படுகிறது. இம்மண் சுமார் 6 மீட்டர் ஆழத்திற்கு படிந்துள்ளது. கருப்பு நிறம் முதல் பழுப்பு நிறம் வரை காணப்பட்டு வருகிறது.

பொதுவாக, சுண்ணாம்பு, இரும்பு, பொட்டாசியம், அலுமினியம், கால்சியம் மற்றும் மெக்னீசியம் கார்பனேட்டுகளை அதிகம் கொண்டதாக உள்ளது. ஆனால், பாஸ்பரஸ் நைட்ரஜன் மற்றும் உயிரி பொருட்கள் இன்றி காணப்படுகின்றனது. இம்மண் ஈரப்பதத்தை தன்னுள்

# இந்தியா
## மண் வகைகள்


ஆப்கானிஸ்தான்
பாக்கிஸ்தான்
சீனா
திபெத்
நேபாளம்
பூட்டான்
வங்காளதேசம்
இந்தியா
அரபிக் கடல்
வங்காள விரிகுடா
அந்தமான் நிகோபர்
இலட்சத்தீவுகள்
ஸ்ரீலங்கா
இந்தியப் பெருங்கடல்
வ
முக்கிய மண் வகைகளின் பரவல்
மலை மண்
வண்டல் மண்
செம்மண்
கரிசல் மண்
சரளை மண்
வறண்ட பாலைவன மண்

தேக்கிவைக்கும் சிறப்புத்தன்மை பெற்றதால் புகையிலை, எண்ணெய் வித்துக்களில் குறிப்பாக கடுகு, சூரியகாந்தி, பழங்கள் மற்றும் காய்கறிகள் விளைவதற்கு ஏற்றதாக அமைகிறது. இம்மண் பருத்தி, நெல், கோதுமை, சோளம், திணைவகைகள் மற்றும் கரும்பு முதலிய பயிர் விளைய மிகவும் ஏற்றது.

கரிசல் மண் பெருமளவில் மகாராஷ்டிரம், குஜராத், மத்திய பிரதேசத்தில் ஒரு பகுதி ஆந்திரப்பிரதேசம் மற்றும் தமிழ் நாட்டின் தென் மாவட்டங்கள் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய தக்காண பீடபூமி பகுதியில் காணப்படுகிறது.

### 3. செம்மண்

பழங்கால படிகப் பாறைகள் மற்றும் உருமாறிய பாறைகள் சிதையுறுவதால் உருவானவை செம்மண்ணாகும். இரும்புச் சத்து அதிக அளவில் காணப்படுவதால் செம்மண் சிவப்பு நிறமாக உள்ளது. இம்மண்ணின் நிறம் பழுப்புமுதல் மஞ்சள் வரை வேறுபடுகின்றது. செம்மண் நுண்துகள்களை உடையதால் ஈரப்பதத்தை தக்க வைத்துக்கொள்ள முடிவதில்லை. இம்மண் சுண்ணாம்புச் சத்து, நைட்ரஜன், பாஸ்பரஸ், போன்றவற்றை குறைவாகவே பெற்றுள்ளது. ஆனால் இம்மண்ணில் ஏற்ற உரவகைகளை இடுவதால் இவற்றை வளமிக்க மண்ணாக மாற்றலாம். கோதுமை, நெல், பருத்தி, கரும்பு மற்றும் பருப்புவகைகள் இம்மண்ணில் பயிரிடப்படுகின்றன.

தமிழ்நாட்டில் பெரும் பகுதிகள் கர்நாடகாவின் தென்பகுதி கோவா, வடகிழக்கு ஆந்திரா, மத்தியப் பிரதேசம் மற்றும் ஒரிசா ஆகிய பகுதிகளில் செம்மண் பரவி காணப்படுகிறது.

### 4. சரளை மண்

சரளை மண் வெப்ப மண்டல பருவகாற்று காலநிலையில் உருவாகின்றன. இது தீபகற்ப பீடபூமியில் பெருமளவு காணப்படுகின்றது. அதிக வெப்பமும் அதிக மழையும் மற்றும் வறண்ட காலநிலை கொண்ட பகுதிகளில் சரளை மண் உருவாகிறது. சரளை மண் நுண்துகளை கொண்டிருப்பதால் இதிலுள்ள சிலிகா வேதியியல் வினையால் துளைகளின் மூலம் நீக்கப்படுகிறது. இம்மண் கடின அமைப்பைக் கொண்டதாகவும் இதில் இரும்பு ஆக்ஸைடு இருப்பதால் சிவப்பு நிறம் கொண்டதாக காணப்படுகிறது. இம்மண்ணில் காப்பி, இரப்பர், முந்திரி, மற்றும் மரவள்ளி முதலிய பயிர்கள் பயிரிடப்படுகின்றன. இம்மண் ஆந்திரப்பிரதேசம், தமிழ்நாடு, கர்நாடகா, கிழக்கு தொடர்ச்சி மலையின் உச்சிகள் மற்றும் ஒரிசா, கேரளா மற்றும் அசாமின் சில பகுதிகளிலும் காணப்படுகிறது.

### 5. வறண்ட பாலைவன மண்

வறண்ட பாலைவன மண் வடமேற்கு இந்திய பகுதிகளான இராஜஸ்தான், குஜராத் (கட்ச்) மற்றும் தென் பஞ்சாப் ஆகிய பகுதிகளில் காணப்படுகிறது. இம்மண் இயற்கையாகவே மணலாகவும், காரச்சத்தை பெற்றதாகவும், நுண்துளை கொண்டதாகவும் உள்ளது. இம்மண் வளமில்லாத மண்ணாக இருந்தாலும் நீர்பாசன வசதியுடன் சில பகுதிகளில் வேளாண்மை செய்யப்படுகிறது. கோதுமை, நெல், பார்லி, திராட்சை மற்றும் தர்பூசணி போன்றவை விளைவிக்கப் படுகின்றன.

### மண் அரிப்பு

இயற்கை மற்றும் மனிதனின் செயல்பாடுகளால் மண்ணிலிருந்து நீக்கப்படும் மண்வளமே மண் அரிப்பு எனப்படும். மண்வளத்தை சரியாக பயன்படுத்துவது தற்போது நம் அனைவருக்கும் மிக முக்கியமாக கருதப்படுகிறது. ஏனென்றால் இது நேரடியாக நமது உணவு உற்பத்தியை பாதிக்கின்றது. ஓடும் நீர், காற்று மற்றும் மனித இனம் போன்றவை மண் அரிப்பிற்கு முதன்மை காரணிகளாக அமைகின்றன. நம்நாட்டில் பல பகுதிகளில் எடுத்துக்காட்டாக உத்திரப்பிரதேசம், ராஜஸ்தான் மற்றும் தக்காண பீடபூமி மண் அரிப்பால் பெருத்த சேதம் அடைந்துள்ளன.

மண்அரிப்பின் தன்மை மண்ணின் தன்மையையும், மண்ணின் துகள் அமைப்பையும் பொறுத்தே மாறுபடுகிறது. மேலும், காலநிலை, நிலத்தின் சரிவு, பயிரிடும் முறை மற்றும் இதர காரணிகளைப் பொறுத்தே அமைகிறது.

## நிலைநிறுத்தக்கூடிய வளர்ச்சி (Sustainable development)

நிலைநிறுத்தக்கூடிய வளர்ச்சி சுற்றுப்புற சூழ்நிலையை சீரழிக்காமல் வளர்ச்சியை மேற்கொள்வதுடன் தற்கால தேவையினை பூர்த்தி செய்வதன் பொருட்டு, எதிர்கால சந்ததியினரின் தேவைகளை பாதிக்காமல் இருப்பதே ஆகும்.

## மண்வளப்பாதுகாப்பு

மண்வளத்தை தக்கவைத்துக் கொள்ளுவதற்காக மனிதர்கள் எடுக்கும் முயற்சியே மண்வளப்பாதுகாப்பாகும். இதனால் மண்அரிப்பை முற்றிலும் தடுக்க இயலாது. ஆனால் தக்க நடவடிக்கைகளின் மூலம் மண்அரிப்பின் வேகத்தைக் குறைக்கலாம்.

## மண்வளத்தை பாதுகாக்கும் சில வழிமுறைகள்

1. ஆறுகளின் பாதைகளில் அரிப்பு ஏற்படுவதைத் தடுக்க தடுப்பணைகள் கட்டுதல்.

2. படிக்கட்டு வேளாண்மை மூலம் மண்அரிப்பைக்குறைத்தல்.

3. காண்டூர் எனப்படும் சம உயரமுள்ள இடங்களுக்கு ஏற்ப மண் அணைகளைக் கட்டுதல்.

4. அதிக மேய்ச்சலை தடை செய்தல்

5. மரங்கள் காற்றின் வேகத்தைக் குறைத்து மண் துகள்கள் காற்றில் அடித்துச் செல்வதைத்தடுக்கிறது.

6. மரங்கள், செடிகள், புற்கள் ஆகியவற்றின் வேர்களின் பிணைப்பால் மண் இறுகிவிடுகிறது. ஆகையால் மரம் வெட்டுதலை குறைத்து மரம் வளர்ப்பதை அதிகரிக்க வேண்டும்.

7. மரங்கள் புற்கள் மற்றும் புதர்கள் நீரின்ஓடும் வேகத்தை கட்டுப்படுத்துகிறது. எனவே தாவரங்களை நீக்குதல் கூடாது, எங்கெல்லாம் மரங்கள் இல்லையோ, அங்கெல்லாம் மரங்களை நடுவதற்கு முயற்சி எடுக்கவேண்டும்.

8. செயற்கை வேதி உரங்களை விளைநிலங்களுக்கு பயன்படுத்தாமல் இயற்கை உரங்களை தொடர்ந்து பயன்படுத்துவது ஒரு சிறந்த மண்வளப் பாதுகாப்பு முறையாகும்.

## இயற்கைத்தாவரம்

இயற்கைத் தாவரம் என்பது புவியின் மேற்பரப்பில் இயற்கையாகவே வளரும் தாவரங்களின் தொகுப்பு ஆகும். இவை காலநிலை, மண் மற்றும் உயிரினங்களின் செல்வாக்கினால் உருவாகுபவை.




காடுகள்

மனித இனத்திற்கு கிடைக்கக்கூடிய சிறந்த இயற்கை வளங்களுள் காடுகளும் ஒன்றாகும். இருப்பினும் இவற்றின் அளவு பல நூற்றாண்டுகளாக குறைந்து கொண்டே வருகிறது. காடுகளின் மிகப் பரந்த இடங்கள் காட்டுப் பொருட்களுக்காகவும் மக்கள் தொகை பெருக்கத்தினால் வேளாண் பயிரிடுவதற்காகவும் அழிக்கப்பட்டு வருகின்றன. இந்நிகழ்வினைக் காட்டு வளங்களின் நிலை நிறுத்தக்கூடிய வளர்ச்சிக்காக கட்டுப் படுத்தல் வேண்டும்.

## இந்தியாவின் வனவளங்கள்

இந்தியாவின் வனவளங்கள் ஒரு தனித்த சிறப்பியல்புகளை கொண்டவை. ஏனெனில் வறட்சியைத் தாங்கும்

இந்தியா
இயற்கைத் தாவரம்



முட்புதர்களிலிருந்து வெப்பமண்டல பசுமை மாறாக் காடுகள் வரை பெரும் எண்ணிக்கையிலான தாவர வகைகள் இங்கு காணப்படுகின்றன. இந்தியாவில் காடுகளின் மொத்தபரப்பளவு சுமார் 63.72 மில்லியன் சதுர கிலோமீட்டர் இந்திய பரப்பளவில் சுமார் 19.39% கொண்ட இக்காடுகள் உலகின் பெரும்பாலான நாடுகளில் உள்ள காடுகளின் பரப்பினை ஒப்பிடும்போது மிகவும் குறைவாக இருப்பதாக கருதப்படுகிறது. எனினும் இக்காடுகளின் பரப்பு சீராக பரவியிருக்கவில்லை. சில மாநிலங்களின் மொத்த பரப்பளவில் 60 % காடுகளாகவும் மற்றும் சில மாநிலங்களில் 3 % காடுகள் மட்டுமே காணப்படுகின்றன. மக்கள் தொகை பெருக்கத்தினால் ஏற்படும் விவசாய நிலங்களின் தேவை அதிகரிப்பும், நகரமயமாதலும், தொழிற்சாலை மயமாதலும் மற்றும் புதிய நகரங்கள் தோன்றுதலே காடுகளின் பரப்பளவு வெகுவாக சுருங்குவதற்கு காரணங்களாகும்.

## இயற்கைத் தாவர வகைகள்

இந்தியாவிலுள்ள இயற்கை தாவரத்தின் வளர்ச்சியை காலநிலை, வெப்பம், மழைப்பொழிவு, தரைஅமைப்பு மற்றும் மண் போன்ற புவியியல் காரணிகளால் கட்டுப்படுத்தப்படுகிறது. இக்காரணிகளின் அடிப்படையில் இந்திய இயற்கை தாவரத்தைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது. அவையாவன,

1. வெப்பமண்டல பசுமை மாறாக் காடுகள்
2. வெப்பமண்டல பருவகாற்று காடுகள்
3. குறுங்காடு மற்றும் முட்புதர் காடுகள்
4. பாலைவனத் தாவரம்
5. மாங்ரோவ் காடுகள்
6. மலைக்காடுகள்

### 1. வெப்பமண்டல பசுமை மாறாக்காடுகள்

ஆண்டு மழைப்பொழிவு 200 சென்டிமீட்டருக்கும் அதிகமான இடங்களில் பசுமை மாறாக் காடுகள் காணப்படுகின்றன. இக்காடுகளிலுள்ள மரங்கள் எப்பொழுதும் பசுமை நிறம் மாறாமலும், தங்களது இலைகளை உதிர்க்காமலும் காணப்படுகின்றன. இக்காடுகள் மிக அடர்ந்து காணப்படுவதுடன் 60 மீட்டர் உயரம் வரை வளரக்கூடிய மரங்களை கொண்டது. மரங்களின் அடர்ந்த வளர்ச்சியினால் சூரியஒளி தரைப்பகுதியை வந்து அடைய முடிவதில்லை. இதனால் வளர்ச்சி குன்றிய மரங்களாக மூங்கில்கள் பர்ன் மற்றும் கொடிகள் வளர்கின்றன.

ரோஸ் மரம், எபானி, மகோகனி, ரப்பர், சின்கோனா , மூங்கில் மற்றும் லயனாஸ் போன்ற முக்கியமான மரங்கள் இக்காடுகளில் காணப்படுகின்றன.

பசுமை மாறாக்காடுகள் பெரும்பாலும் மேற்கு தொடர்ச்சி மலையின் மேற்கு பகுதியிலும் மற்றும் அந்தமான் நிக்கோபார் தீவுகளிலும், மலையின் தாழ்ந்த சரிவுகளிலும், அஸ்ஸாம், ஒரிசாவின் சில பகுதிகளிலும் காணப்படுகின்றன.

### 2. வெப்பமண்டல பருவகாற்று காடுகள்

70 செ.மீ. முதல் 200 செ.மீ. வரை ஆண்டு சராசரி மழை பெறும்பகுதிகளில் வெப்பமண்டல பருவகாற்று காடுகள் காணப்படுகின்றன. இக்காடுகளில் உள்ள மரங்கள் வசந்தகாலத்திலும் கோடை காலத்தின் முற்பகுதியிலும் சுமார் 6 முதல் 8 வாரங்களுக்குள் வறட்சியின் காரணமாக இலைகளை உதிர்த்து விடுகின்றன. எனவே இக்காடுகளை இலையுதிர்க் காடுகள் என்றும் அழைப்பர்.

வெப்பமண்டல பருவகாற்று காடுகள் வணிகரீதியாக மிக முக்கியமானது. ஏனெனில் இவை மதிப்புமிக்க மரங்களையும் பல்வேறு விதமான காட்டுப்பொருள்களையும் நமக்கு அளிக்கிறது. இக்காடுகளின் முக்கியமான

மரங்கள் தேக்கு, சால், சி ச ம், சந்தன மரம், வேட்டில் மற்றும் வேப்பமரம் முதலியன ஆகும்.

வெப்பமண்டல பருவகாற்று காடுகள் வணிகத்திற்காக மிக அதிகமாக வெட்டப்பட்டு வருகின்றன. இவ்வகை காடுகள் வரம்பு மீறி மரங்களை வெட்டுதல் அதிகமான மேய்சலுக்கு உட்படுத்துதல் காட்டுத்தீ போன்ற உயிரின காரணிகளால் கடுமையாக பாதிக்கப்படுகின்றன. ஈரமான பருவக்காற்றுக் காடுகள் வடகிழக்கு மாநிலங்களிலும், இமயமலையின் அடிவாரங்களிலும் ஜார்காண்ட், மேற்கு ஒரிசா, சட்டீஸ்கர் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலையின் கிழக்குச் சரிவுகள் போன்ற பகுதிகளிலும் காணப்படுகின்றன. வறண்ட பருவக்காற்று காடுகள் தீபகற்ப பீடபூமியிலும், பீகார் மற்றும் உத்தரப்பிரதேசத்தின் சமவெளி பகுதிகளிலும் காணப்படுகின்றன.

### 3. குறுங்காடு மற்றும் முட்புதர்காடுகள்

இவ்வகை தாவரங்கள் 75 செ.மீ.க்கு குறைவான சராசரி மழையளவுடன் நீண்ட வறட்சியான பருவம் கொண்ட பகுதிகளில் வளருகின்றன.



பாலைவன தாவரங்கள்

இக்காடுகளில் மரங்கள் ஆங்காங்கே காணப்படுகின்றன. இம்மரங்கள் நிலத்தடியில் வெகு ஆழத்தில் உள்ள நீரை உறிஞ்சக் கூடிய நீண்ட வேர்களை கொண்டவைகளாக உள்ளன. நீர் ஆவியாதலை குறைப்பதற்கு அடர்ந்த சிறிய இலைகளை இம்மரங்கள் பெற்றுள்ளன. இவை முட்களுடன் காணப்படும் தடித்த மரப்பட்டைகளை கொண்டுள்ளன.

இங்குள்ள முக்கியமான மரங்கள் அக்கேசியா, பனை மற்றும் கள்ளி ஆகியவை. மற்ற முக்கியமான மரங்கள் கயிர், பாபூல், பலாஸ், கக்ரி, கஜீரி போன்றவையாகும். இவ்வகை தாவரங்கள் முக்கியமாக நாட்டின் வடமேற்கு பகுதியிலுள்ள அரை பாலைவனம் பகுதிகளான குஜராத், இராஜஸ்தான், மத்திய பிரதேசம், உத்திரப் பிரதேசம், தென்மேற்கு பஞ்சாப் மற்றும் மேற்கு ஹரியானா ஆகிய பகுதிகளில் காணப்படுகிறது. இது தவிர இவ்வகைக் காடுகள் மேற்கு தொடர்ச்சி மலையின் மழை மறைவு பகுதிகளான மஹாராஷ்டிரம், கர்நாடகம், ஆந்திரப்பிரதேசம் மற்றும் தமிழ் நாடு ஆகிய பகுதிகளில் உள்ளன.

### 4. பாலைவனத் தாவரம்

மழை அளவு 25 செ.மீ. குறைவாக உள்ள பகுதிகளில் பாலைவனத் தாவரங்கள் அமைந்துள்ளன. இவ்வகை தாவரங்கள் பெரும்பாலும் முட்புதர்கள் அக்கேசியா, ஈச்சமரம், மற்றும் பாபுல் போன்ற மரங்களை அடங்கியுள்ளன. இம்மரங்கள் 6 லிருந்து 10 மீ. வரை உயரமுள்ளது. ஆனால் ஆழமான வேர்களுடன், கால்நடைகளிலிருந்து தம்மை பாதுகாத்துக்கொள்வதற்கு கடினமான முட்களையும் கொண்டிருக்கின்றது.

பாபுல் மரங்கள் கோந்து பொருட்களையும் அதன் மரப்பட்டைகள் தோல் பதனிடுவதற்கும் பயன்படுகின்றன. ராஜஸ்தான், கட்ச் மற்றும் குஜராத்திலுள்ள சௌராஷ்டிரா தென்மேற்கு பஞ்சாப் மற்றும் தக்காண பீடபூமி பகுதிகளில் பாபுல் மரங்கள் வளர்கின்றன.

### 5. மாங்குரோவ் காடுகள்

மாங்ரோவ் காடுகள் கடல் ஓதங்கள் மூலம் நீரைப்பெறும் கடலோரப் பகுதிகளில் காணப்படுகின்றன. இவற்றில் சில காடுகள் மிகவும் நெருக்கமானதாகவும் ஊடுருவ முடியாததாகவும் உள்ளன.

இம்மரங்களின் அடிப்பகுதியை உயர் ஓதத்தின் போது, நீருக்கடியில் காணப்படும் எண்ணற்ற வேர்கள் தாங்கிக்கொள்கின்றன. இவ்வேர்களை தாழ்ஓதத்தின் போதுதான் நாம் காணஇயலும்.



மாங்குரோவ் காடுகள்

இவ்வகைக்காடுகள், கங்கை, மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா மற்றும் காவிரி ஆற்றின் டெல்டா பகுதிகளிலும், அந்தமான் நிகோபார் தீவுகளின் கடற்கரை பகுதிகளிலும் ஏராளமாக காணப்படுகின்றன. மேற்கு கடற்கரையின் சில பகுதிகளிலும் இக்காடுகள் காணப்படுகின்றன. மேற்கு வங்காளத்தில் இக்காடுகளை சுந்தரவனம் என அழைப்பர். இக்காடுகளின் மரங்கள் கடினமானதாகவும், வலுவானதாகவும் நீண்ட நாட்களுக்கு பயன் உள்ளதாகவும் இருப்பதால் இவற்றை படகுகள் கட்டுவதற்கு பயன்படுத்துவர். இக்காடுகள் விலை மதிப்பு மிக்க எரிபொருளாகவும் அமைகின்றன.

## 6. மலைக்காடுகள்

மலைக் காடுகளில் காணப்படும் இயற்கைத் தாவரங்கள் கடல் மட்டத்திலிருந்து உயரே செல்லச்செல்ல குறையும் வெப்பத்தினால் வளரக்கூடியவை. இவ்வகைக் காடுகளை இரு பெரும் பிரிவுகளாக பிரிக்கலாம். அவை

1. இமயமலைத்தொடரிலுள்ள மலைக்காடுகள்

2. தீபகற்ப பீடபூமி மற்றும் அங்குள்ள மலைத் தொடர்களில் காணப்படும் காடுகள்

இமயமலைத்தொடரில் 1000 மீ. உயரத்திலிருந்து 2000 மீ உயரம்வரை காணப்படுகின்றன. இங்கு ஒக், செஸ்நெட் போன்ற பசுமை மாறாத அகன்ற இலைக் காடுகள் முக்கியமாக காணப்படுகின்றன. 1500 மீட்டரிலிருந்து 3000மீ உயரம் வரை பைன், டியோடர், சில்வர் பீர், ஸ்பூருஸ், மற்றும் செடர் போன்ற ஊசியிலை மரங்கள் உள்ளன. ஊசியிலைக் காடுகள் இமய மலையின் தெற்கு சரிவுகள் மற்றும் வடகிழக்கு இந்தியா போன்ற பகுதிகளில் காணப்படுகின்றன. 3600 மீ உயரத்திற்கு மேல் ஊசியிலைக் காடுகளும் புல்வெளிகளையும் தாண்டி ஆல்பைன் தாவரங்கள் காணப்படுகின்றன. இங்கு சில்வர் ஃபிர், ஜூனிபெர்ஸ், பைன், பிர்ச்சஸ் போன்ற பொதுவகை மரங்கள் வளர்கின்றன. மிக உயரம் கொண்ட பகுதிகளில் மோசஸ் மற்றும் லிச்சன்ஸ், போன்றவையே தாவரங்களின் பகுதியாக அமைகின்றன.



மலைக்காடுகள்

தீபகற்ப இந்தியாவில் மலைக்காடுகள் மூன்று பகுதிகளில் காணப்படுகின்றன. அவை,

1. மேற்குதொடர்ச்சி மலைகள்

2. விந்திய மலைப்பகுதி

3. நீலகிரி மலைப்பகுதி

நீலகிரியிலுள்ள வெப்பமண்டலக் காடுகளை சோலாஸ் என்று உள்ளூர்

பெயரில் அழைக்கிறார்கள். இவ்வகைக் காடுகள் சாத்பூரா மற்றும் மைக்கலா மலைத்தொடர்களில் காணப்படுகின்றன. இங்கு வளரும் முக்கியமான மரங்கள் மேக்னோலியா, லாரல், சின்கோனா மற்றும் வேட்டில் போன்றவை ஆகும்.

## புல்வெளிகள்

இந்தியாவில் வளரும் புல்வெளிகளில் சவானா அல்லது ஸ்டெப்பி புல்வெளிகளுடன் ஒப்பிடஇயலாது. இருப்பினும் இந்திய புல்வெளிகள் ஈரமான மண் உள்ள தரைப்பகுதிகளிலும், உப்புப்பகுதிகளிலும்சில குன்றுப்பகுதிகளிலும் காணப்படு கின்றன. இப்புல்வெளிகளை இரு வகைகளாகப் பிரிக்கலாம்.

1. தாழ்நிலப்புல்வெளி,
2. மேட்டுநிலப் புல்வெளி.

1. தாழ்நிலப்புல்வெளி இவை 30 செ.மீ. முதல் 200 செ.மீ. வரை ஆண்டு சராசரி மழையளவும், அதிகமான கோடை கால வெப்பமும் கொண்ட பகுதிகளில் வளருகின்றன. இவ்வகைப்புல்வெளிகள் பல்வேறு மண்வகைகளிலும் வளருகின்றன. இப்புல்வெளிகள் கால்நடைகளின் வளர்ச்சிக்கு உகந்தது.

இந்திய சமவெளிகள் அமைந்துள்ள பஞ்சாப், உத்திரப்பிரதேசம், ஹரியானா, பீகார், மற்றும் வடமேற்கு அஸ்ஸாம் பகுதிகளிலும் காணப்படுகின்றன.

2. மேட்டுநிலப் புல்வெளிகள் இப்புல் வெளிகள் 100 மீ உயரத்திற்கு மேல் உள்ள இமயமலைப்பகுதிகளிலும் கர்நாடகாவிலுள்ள மேற்கு தொடர்ச்சி மலையில் காடுகள் அழிக்கப்பட்ட பகுதிகளிலும் வளருகின்றன. தென்னிந்தியாவில் சோலா காடுகளின் சிறுபகுதிகளிலும் இப்புல்வெளிகள் காணப்படுகின்றன.


மேட்டுநிலப் புல்வெளி

## காடுகளின் முக்கியத்துவம்

1. காடுகள் வீட்டுத்தேவைக்கும் வணிகத்திற்கும் தேவையான விலையுயர்ந்த மரங்களையும், தொழிற்சாலைக்கு தேவையான மூலப்பொருட்களையும் அளிக்கின்றன.

2. அரக்கு, கோந்து, பிசின், தோல் பதனீட்டுபொருட்கள், மருந்துகள், மூலிகைகள் தேன் மற்றும் நறுமணப் பொருட்கள் ஆகியவற்றை நமக்கு அளிக்கிறது.

3. வனப்பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் அந்நியசெலவாணியை ஈட்டுகிறது.

4. காடுகளில் கால்நடைகளை மேய்ப்பதன்மூலம் பால் பண்ணைப் பொருட்கள் உற்பத்திக்கு உதவிபுரிகின்றன.

5. பல காடுகள் சுற்றுலா மையங்களாக வளர்ச்சியடைந்துள்ளன.

6. காடுகள் வளிமண்டலத்திலுள்ள கார்பன்டைஆக்ஸைடை உட்கொண்டு காற்று மாசுபடுதலை கட்டுப்படுத்து கின்றன.

7. காடுகள் மண்ணரிப்பினை கட்டுப்படுத்துதல், நிலங்களை ஏற்புடையதாக்கல் மற்றும் வெள்ளப் பெருக்கினை கட்டுப்படுத்துதல் போன்றவற்றிற்கு உதவியாக உள்ளன.

8. நீர், பூமியின் உள்ளே செல்லவும் அதன் மூலம் நிலத்தடி நீரின் அளவை பராமரிக்கவும் காடுகள் பயன்படுகின்றன.

9. மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் இயற்கையான வாழிடங்களை காடுகள் அளிக்கின்றன.

10. காடுகள் காலநிலையை சீராக்குவதுடன் வெப்பம், ஈரப்பதம், மற்றும்

மழைப்பொழிவில் தமது தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

11. நாட்டின் எரிசக்திதேவையை 40 சதவீதம் காடுகள் பூர்த்திசெய்கின்றன.

இந்தியாவில் உள்ள பெருமளவு காடுகளும் விலங்கினவளங்களும், இந்திய வனத்துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அவை கீழ்க்கண்டவாறு இரண்டு வகைகளாக பிரிக்கப்படுகின்றன.

1. ஒதுக்கப்பட்ட காடுகள் (Reserve Forests) காடுகளின் மொத்தப்பரப்பில் பாதிக்கு மேலுள்ள காடுகளே ஒதுக்கப்பட்ட காடுகள் என்று அரசால் அறிவிக்கப்பட்டுள்ளன. இக்காடுகளை நிரந்தரக்காடுகள் என்றும் அழைக்கின்றனர். ஒதுக்கப்பட்ட காடுகளையும் வனவிலங்களையும் பாதுகாப்பதால் மிகவும் மதிப்பு மிக்கதாக கருதப்படுகின்றன.

2. பாதுகாக்கப்பட்ட காடுகள் (Protected Forests) வனத்துறையால் அறிவிக்கப்பட்டபடி காடுகளின் மொத்த பரப்பில் பெரும்பாலும் 3 ல் 1 பகுதி பாதுகாக்கப்பட்ட காடுகளாகும். இங்கு மரம் வெட்டுவதற்கு அனுமதி அளிக்கப்படுவதில்லை.

### காடுகளின் பாதுகாப்பும் மேலாண்மையும்

காடுகளை அழித்தலும், காடுகளை குறைப்பதும், அதிகரித்துக்கொண்டே செல்வதால் பரந்தஅளவில் மண் அரிப்பும், நிலையற்ற மழை பொழிவும், மீண்டும் மீண்டும் வெள்ளமும் ஏற்படுகின்றன. காடுகளை அழித்து காட்டு நிலப்பரப்புகளே காடுகள் சாராத பணிகளுக்கு பயன் படுத்துவதை நிறுத்துவதற்கு, 1980 ம் ஆண்டு 'வனப்பாதுகாப்புச் சட்டம்' ஏற்படுத்தப்பட்டது. 1988 ஆண்டில் மேலும் திருத்தப்பட்டு இச்சட்டத்தில் காடுகள் பாதுகாப்புச் சட்டத்திற்கு எதிராக செயல்படுபவர்களுக்கு, உரிய கடுமையான தண்டனை பற்றி கூறப்பட்டுள்ளது. அரசு கிராம சமுதாயத்தினரையும், தன்னார்வ தொண்டர்களையும் பயன்படுத்தி மறைந்துபோன காட்டுப்பகுதியை திரும்ப உருவாக்கும் முயற்சியில் ஈடுபடுத்தவேண்டும்.

### தேசிய வனக்கொள்கை

காடுகளை பாதுகாக்க திட்டங்களை உருவாக்கும் ஒரு சில உலக நாடுகளில் இந்தியாவும் ஒன்று. இந்தியா 1894–ம் ஆண்டில் தேசிய வனக்கொள்கை ஒன்றை ஏற்படுத்தியது. மீண்டும் 1952–ம் ஆண்டிலும் 1988–ம் ஆண்டிலும் இக்கொள்கை திருத்தி அமைக்கப்பட்டது.

### தேசிய வனக்கொள்கையின் முக்கிய நோக்கங்கள்

1. 33 சதவீதம் நிலப்பரப்பினை காடுகளாக மாற்றுவது (தற்போது காடுகளின் பரப்பு 20 சதவீதம்).

2. சுற்றுச்சூழலியல் சமநிலை பாதிக்கப்பட்ட இடங்களில் சூழலை நிலைநிறுத்த பராமரிப்பை மேற்கொள்வது.

3. நாட்டின் உயிரினப் பன்மையைப் பாதுகாப்பது.

4. மண்ணரிப்பு மற்றும் பாலைவன விரிவாக்கத்தை தடுத்து வெள்ளம் மற்றும் வறட்சியைக் குறைத்தல்.

5. சமூகக் காடுகள் மற்றும் பண்ணைக் காடுகள் மூலம் காடுகளின் பரப்பை அதிகரிக்கச் செய்தல்.

6. காடுகளிலிருந்து மரம் எரிபொருள் கால்நடைத் தீவனங்கள் போன்றவற்றின் உற்பத்தியைப் பெருக்குதல்.

7. மரக்கன்றுகள் நடுதல் மற்றும் மரம் வெட்டுதலை நிறுத்துதல் போன்றவற்றில் பெண்களை ஈடுபடுத்துதல்.

இவ்வாறு நம்நாட்டின் இயற்கைத் தாவரங்களை பாதுகாத்தல் நம் அனைவரின் தலையாய கடமையாகும்.

### கனிம வளங்கள்

கனிம வளங்களை இருபெரும் பிரிவுகளாக வகைப்படுத்தலாம், அவையாவன,

1. உலோகக் கனிமங்கள்

2. உலோகமல்லாத கனிமங்கள்

### 1. உலோகக் கனிமங்கள்

இவை இரும்பு செம்பு, மாங்கனீசு, பாக்சைட், மற்றும் தங்கம் போன்ற உலோகங்களைக் கொண்டுள்ளன. இவற்றை மேலும் இரும்பு சார்ந்த கனிமங்கள் மற்றும் இரும்பு சாராத கனிமங்கள் என இருவகைகளாக பிரிக்கலாம்.

### இரும்புசார்ந்த கனிமங்கள்

இவை கனிமங்களில் இரும்பு உள்ளடக்கியிருந்தால் அவற்றை இரும்பு சார்ந்த கனிமங்கள் என்கிறோம். உதாரணமாக, இரும்பு, மாங்கனீசு, நிக்கல், கோபால்ட் மற்றும் டங்ஸ்டன் போன்றவையாகும்,

இரும்பு சாராத கனிமங்களில் இரும்பு கலக்காமல் உள்ளவற்றை இரும்பு சாராத கனிமங்கள் என்கிறோம். எடுத்துக்காட்டாக தங்கம், வெள்ளி, செம்பு, பாக்சைட் போன்றவையாகும்

### 2. உலோகமல்லாத கனிமங்கள்

உலோகமல்லாத கனிமங்கள் மைக்கா, சுண்ணாம்புக்கல் ஜிப்சம், பொட்டாசியம், நிலக்கரி மற்றும் பெட்ரோலியம் ஆகும்.

### இரும்புத்தாது

நாட்டின் வளர்ச்சிக்கு ஆதாரமான வளமாக இருப்பது இரும்புத்தாது. இரும்பு நாகரீகத்தின் முதுகெலும்பு என வர்ணிக்கப்படுகிறது.

உலகின் மொத்த இரும்புத்தாது இருப்பில் 20 சதவீதம் இரும்புத்தாது இந்தியாவில் அமைந்துள்ளது. இரும்புத்தாது இருப்பில் ரஷ்யாவிற்கு அடுத்து இந்தியா இரண்டாவது இடத்தை வகிக்கிறது. இந்தியாவின் இரும்புத்தாது மிக உயர்ந்த தரம் வாய்ந்தது.

இந்தியாவில் சட்டீஸ்கர் மாநிலத்தில் துர்க் பகுதியும், ஜார்கண்ட்டில் உள்ள சிங்பும் மாவட்டம், ஒரிசாவிலுள்ள சுந்தர் கார்க், மாயூர்பஞ்ச், கியோன்ஜார் மாவட்டங்களிலும், கோவா, கர்நாடகா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் சில பகுதிகளிலும் இரும்புத்தாது காணப்படுகிறது.



இரும்புத்தாது

### மாங்கனீசு

மாங்கனீசு உற்பத்தியில் இந்தியா ஐந்தாவது இடத்தை பெற்றுள்ளது. உலகின் மாங்கனீசு படிவுகளில் 20 சதவீதம் இந்தியாவில் இருப்பதாக கணக்கெடுக்கப் பட்டுள்ளது. கடினமான துருப்பிடிக்காத இரும்பு எஃகினை தயாரிக்க மாங்கனீசு தேவையாக இருப்பதால் இரும்பு எஃகு தொழிற்சாலைகளில் மாங்கனீசு முக்கிய பங்காற்றுகிறது. உலர் மின்கலன்கள் தயாரிக்க மாங்கனீசு–டை–ஆக்ஸைடு பயன்படுகிறது.

பிளீச்சிங் தூள் மற்றும் வண்ணப்பூச்சுகள் தயாரிப்பிற்கும் மாங்கனீசு பயன்படுகிறது. மத்திய பிரதேசத்திலுள்ள பால்காட்டிலும், ஒரிசாவில் கியோஞ்சகார், போனைகார்க் பகுதியிலும், கர்நாடகத்தில் பெல்லாரி, சித்ர துர்க்கா சிமோகாவிலும், தமிழ்நாடு,



மாங்கனீசு

மகாராஷ்ரம், குஜராத், பீகார் ஆகிய மாநிலங்களிலும் கிடைக்கின்றன.

## பாக்சைட்

பாக்சைட் அலுமினியத்தின் தாது ஆகும். அலுமினியம் சிலிகேட் நிறைந்த பாறைகள் சிதைவுறுவதால் உருவாகும் லேசான உலோகமே அலுமினியம் ஆகும். இது ஒரு நல்ல எளிதில் கடத்தியாகவும் மிக வளையும் தன்மை கொண்டதாகவும் மிக லேசாக இருப்பதாலும், அதிக அளவில் தொழிற்சாலைகளுக்கு பயன்படுகிறன்றன.



பாக்சைட்

இந்தியாவில் பாக்சைட் கிடைக்கும் முக்கிய இடங்களாக சட்டீஸ்கர் மாநிலத்தில் பிலாஸ்பூர், ஒரிசா மாநிலத்தில் சம்பல்பூர் மற்றும் காலகந்தியிலும், கோவா, குஜராத், கர்நாடகா மற்றும் தமிழ்நாடு போன்றவை ஆகும்.

## தாமிரம்

தாமிரம் சிறந்த வெப்பகடத்தி யாகவும், மின் கடத்தியாகவும், இயற்கையில் காணப்படும் மற்றொரு உலோகம். மின்கருவிகள் தயாரிப்பு தொழிற்சாலைகளில் தாமிரம் பெரும் பங்காற்றுகிறது. தாமிரம் மற்ற உலோகங்களுடன் சேர்ந்து கலப்பு உலோகம் செய்யப் பயன்படுகிறது. ஜார்கண்ட் மாநிலத்திலுள்ள சிங்புமிலும், ஆந்திரப்பிரதேசத்திலுள்ள குண்டூர் மற்றும் நெல்லூரிலும், மத்திய பிரதேசத்திலுள்ள பாலகாட், ராஜஸ்தான் மற்றும் கர்நாடகா மாநிலங்களில் சில பகுதிகளிலும் தாமிரம் கிடைக்கிறது.

## மைக்கா

மைக்கா மின்சாரத்தை கடத்தாத பொருளாக இருப்பதால் மின் பொருட்கள் உற்பத்திக்கு பயன்படுகிறது. உலகில் மைக்கா உற்பத்தியில் இந்தியா 60 சதவீதம் பங்களிக்கிறது. ஆந்திரப்பிரதேசம், ஜார்கண்ட், பீகார் மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்கள் மைக்கா உற்பத்தி செய்யும் மாநிலங்களாகும்.

## கனிம வளப்பாதுகாப்பு


பயன்படுத்தக் கூடிய நிலையிலுள்ள கனிமப்பொருளின் மொத்த கன அளவு புவியோட்டின் மொத்த கன அளவில் ஒரு சதவீதம் மட்டுமே ஆகும்.

நாம் மிக வேகமாக கனிமவளங்களை பயன்படுத்தி வருகிறோம். ஆனால் கனிம வளங்கள் உருவாவதற்கு ஆகும் புவியியல் செயல்முறைகள் மிகவும் மெதுவாகவே நடைபெறுகின்றன. அதனால் கனிம வளங்கள் புதுப்பிக்கஇயலாத வளங்களாக உள்ளன. ஆகவே கனிம வளங்களை திட்டமிட்டு நிலையாக பயன்படுத்துவதற்குரிய தொடர் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். குறைந்த விலையில் கிடைக்கக்கூடிய குறைந்த தரம் வாய்ந்த தாதுக்களை பயன்படுத்த புதிய தொழில் நுட்ப முறைகளை உருவாக்குதல் வேண்டும். மேலும், உடைந்த உலோகத் துண்டுகளை மறுசுழற்சி மூலம் பயன்படுத்தியும் பதிலி உலோகத்தை பயன்படுத்தியும் எதிர்காலத்திற்காக கனிம வளங்களை பாதுகாத்தல் அவசியம்.


## எரிசக்தி வளங்கள்

எரி சக்தி நம் அன்றாட வாழ்க்கைக்கு ஒரு அவசியமான வளமாகும். இது பொருளாதார மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு இன்றியமையாத ஒரு கூறாகும். நிலக்கரி, பெட்ரோலியம், இயற்கை எரிவாயு, சூரிய சக்தி, காற்று சக்தி போன்றவை சில எரிசக்தி வளங்களாகும்.


## பாக்சைட் தாது கிடைக்கும் இடம்





## எண்ணெய் வளங்கள்



## இந்தியா – மாங்கனீசு




## இந்தியா – இரும்புத்தாது



எரிசக்தி வளங்களை புதுப்பிக்கதக்க வளங்கள் எனவும் புதுபிக்க இயலாத வளங்கள் எனவும் பிரிக்கலாம்.

## புதுப்பிக்க இயலாத எரிசக்திவளங்கள்

### 1. நிலக்கரி

இந்தியாவில் முக்கிய எரிசக்தி வளம் எரிசக்தியாகும். 67 சதவீதம் நாட்டின் எரி சக்தி தேவை நிலக்கரி மூலம் பூர்த்தி செய்யப்படுகிறது. நிலக்கரி முக்கியமாக இரும்பு எஃகு தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படுகிறது. நிலக்கரி கருப்புத் தங்கம் எனவும் அழைக்கப்படுகிறது. நிலக்கரியின் தரம் மற்றும் கார்பன் அளவின் அடிப்படையில் பல வகைகளாக பிரிக்கப்படுகிறது. அவையாவன ஆந்தரசைட், பிட்டுமினஸ், லிக்னைட் மற்றும் மரக்கரி.

நிலக்கரி சுரங்கங்களில் பெரும் பாலானவை வடகிழக்கு இந்தியாவில் அமைந்துள்ளன. இதில் மூன்றில் இரண்டு பங்கு நிலக்கரி, ஜார்கண்ட், மத்தியப்பிரதேசம், சட்டீஸ்கர் மற்றும் ஒரிசாவில் உற்பத்தியாகிறது. மீதமுள்ள ஒரு பங்கு நிலக்கரி ஆந்திரப்பிரதேசம், மேற்குவங்கம், உத்திரப்பிரதேசத்திலிருந்து கிடைக்கிறது.

### 2. பெட்ரோலியம்

கனிம எண்ணெய் என்றழைக்கப்படும் பெட்ரோலியம் படிவுப் பாறைகளிலிருந்து எடுக்கப்படுகிறது. இந்தியா 4000 மில்லியன் டன் இருப்பை பெற்றுள்ளது. ஆனால், அதில் 25 சதவீதம் மட்டுமே வெளிக்கொணர இயலும். இந்தியாவில் ஆண்டிற்கு 33 மில்லியன் டன் பெட்ரோலியம் மட்டுமே சுரங்கத்திலிருந்து பெற இயலும். 63 சதவீதம் மும்பை–ஹையிலிருந்தும், 18 சதவீதம் குஜராத்திலிருந்தும், 16 சதவீதம் அஸ்ஸாமிலிருந்தும் பெறப்படுகிறது, மீதமுள்ள 3 சதவீதம் மட்டுமே அருணாசல பிரதேசம், ஆந்திரப்பிரதேசம் மற்றும் தமிழ் நாடு போன்ற மாநிலங்களிலிருந்து கிடைக்கிறது.


மும்பை ஹை எண்ணெய் வயல்

### 3. இயற்கை எரிவாயு

இது புவியின் மேற்பரப்பில் தனியாகவோ அல்லது பெட்ரோலியத்துடன் சேர்ந்தோ காணப்படுகிறது. இந்தியா 23 பில்லியன் கனமீட்டர் இயற்கைஎரிவாயுவை பயன்படுத்துகிறது. இந்தியாவின் இயற்கை எரிவாயு இருப்பு 700 மில்லியன் க.மீ மட்டுமே ஆகும். ஆந்திரப்பிரதேசம், மகாராஷ்டிரம், குஜராத் அஸ்ஸாம், அந்தமான்–நிகோபார் தீவுகளில் பெரும்பாலான இயற்கை எரிவாயு இருப்பு காணப்படுகிறது. அந்தமான் தீவுகளில் மட்டுமே 47.6 மில்லியன்.க.மீ. இருப்பு உள்ளது. சமீபத்தில் கிருஷ்ணா, கோதாவரி வடி நிலங்களில் அதிக அளவு இயற்கை எரிவாயு இருப்பு உள்ளதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.


## மின்சக்தி

ஒரு நாட்டின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தில் மின்சக்தியின் பங்கு மிகப்பெரியதாகும். மின்சக்தி மூன்று வழிகளில் உற்பத்தி செய்யப்படுகிறது. அவை முறையே 1. அனல்மின்சக்தி, 2. நீர் மின்சக்தி, 3. அணுமின்சக்தி.

### 1. அனல் மின்சக்தி

அனல் மின்சக்தி, நிலக்கரி பெட்ரோலியம், இயற்கை எரிவாயு போன்ற வற்றிலிருந்து உற்பத்தி செய்யப்படுகிறது. அஸ்ஸாம், ஜார்க்கண்ட், உத்திரப்பிரதேசம், மேற்குவங்கம் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் அனல் மின்சக்தியை பெரிதும் சார்ந்துள்ளன. பஞ்சாப், ஹரியானா,

## இந்தியா – நிலக்கரி வளங்கள்




1. சிங்கரேலி
2. வார்தா பள்ளத்தாக்கு
3. கோதாவரி பள்ளத்தாக்கு
4. தால்ச்சர்
5 கோர்பா
6. ஜார்கண்ட்
7. பொக்காரோ
8. ஜாரியா ராஜ் மஹால்
9. ரானிக்கஞ்ச்
11. நெய்வேலி

ராஜஸ்தான், கர்நாடகா, கேரளா, ஒரிசா மற்றும் டெல்லி ஆகிய மாநிலங்கள் அனல் மின்சக்தியை உற்பத்திசெய்கின்றன. இந்தியாவின் மொத்த மின் உற்பத்தியில் 70 சதவீதம் அனல் மின் நிலையங்களிலிருந்து பெறப்படுகிறது.

### 2. நீர்மின்சக்தி

இந்தியாவின் முதல் நீர்மின் நிலையம் 1897–ஆம் ஆண்டில் டார்ஜிலிங்கில் நிறுவப்பட்டது. மற்றொரு நிலையம் 1902ஆம் ஆண்டு காவேரி ஆற்றில் உள்ள சிவசமுத்திரம் நீர்வீழ்ச்சியில் நிறுவப்பட்டது. தற்போது இந்தியாவின் 25 சதவீதம் மின்சக்தி, நீர்மின் நிலையங்களில் தயாரிக்கப்படுகிறது. நீர்மின் சக்தி இந்திய பொருளாதார வளர்ச்சிக்கு பெரிதும் உதவுகின்றன. இமாச்சலபிரதேசம், கர்நாடகா, கேரளா, ஜம்மு காஷ்மீர், திரிபுரா, மேகாலயா மற்றும் சிக்கிம் ஆகிய மாநிலங்களில் நீர்மின் சக்தி உற்பத்தி செய்யப்படுகிறது. கேரளா மின் உற்பத்திக்கு நீர் உற்பத்தி திட்டங்களையே மிகவும் சார்ந்துள்ளது.

### 3. அணுமின் சக்தி

யுரேனியம் மற்றும் தோரியம் கனிமத்திலிருந்து அணுமின்சக்தி உற்பத்தி செய்யப்படுகிறது. இக்கனிமங்கள் ஜார்கண்ட் மற்றும் ஆரவல்லி மலைத்தொடர்களில் ராஜஸ்தனிலிருந்து எடுக்கப்படுகிறது. கேரள கடற்கரையின் மண்ணில் உள்ள மோனசைட்டிலிருந்து யுரேனியம் பெறப்படுகிது. உலகின் தோரியப் படிவுகளில் இந்தியாவில் 50 சதவீதம் உள்ளது. இந்தியாவில் தாராபூர் (மகாராஷ்டிரம்), கல்பாக்கம்(தமிழ்நாடு) ராவத்பட்டா (கோட்டா–இராஜஸ்தான்) நரோரா (உத்திரபிரதேசம்) காக்ரபரா (குஜராத்) கைக்கா (கர்நாடகா) ஆகிய இடங்களில் அணுமின்சக்தி நிலையங்கள் உள்ளன. இந்தியா ஆண்டிற்கு 272 மெகாவாட் அணுமின்சக்தியை உற்பத்தி செய்கிறது.

### புதுப்பிக்கத்தக்க வளங்கள்

சக்தியின் தேவை அதிகரிக்க அதிகரிக்க, புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்களான சூரியஒளி, காற்று, ஓதங்கள் போன்றவற்றின் முக்கியத்துவமும் அதிகரித்துக்கொண்டே உள்ளது. இச்சக்தி வளங்களின் சிறப்பம்சங்களாவன.

1. எளிதாக கிடைக்கிறது
2. புதுப்பிக்கக்கூடியது
3. சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளை விக்காதது
4. மாசுகளை ஏற்படுத்தாது
5. குறைந்த உற்பத்திசெலவு
6. தொடர்ந்து கிடைக்கக்கூடியது

### சூரியசக்தி

இந்தியா அயன மண்டலத்தில் அமைந்துள்ளதால் அளவிட முடியாத சூரிய சக்தியை பெறுகின்றது. சூரிய ஒளியை நேரடியாக மின்சக்தியாக போட்டோ வோல் டாயிக் தொழில்நுட்பம் மூலம் மாற்ற முடியும். இம் முறையின் மூலம் 20 மெகவாட் சூரிய சக்தியை 1 ச.கி.மீ. பரப்பளவிற்குள் உற்பத்தி செய்யமுடியும். பொதுவாக சமையல் மற்றும் விளக்குகள் எரிவதற்கு பயன்படுத்தப்படுகிறது. பெரிய அளவில் சூரிய சக்தியில் மின் சக்தியாக மாற்றும் மையம் குஜராத்திலுள்ள பூஜ் அருகே அமைந்துள்ள மாதாபுரியாகும்.

### காற்று சக்தி

காற்றாலைகள் நம் நாட்டின் பெரும்பாலன இடங்களில் அமைந்துள்ளன. காற்றாலைகளை நிறுவுவதற்கு ஆரம்ப பொருட்செலவு அதிகமாகிறது. தமிழ்நாடு, ஆந்திரபிரதேசம், கர்நாடகா, குஜராத், கேரளா, மத்தியபிரதேசம், மகாராஷ்டிரம் போன்ற மாநிலங்களிலும் இலட்சத்தீவிலும் காற்றுசக்தி உற்பத்தி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.



காற்றாலைகள்

## உயிரி சக்தி

புதர்கள், பயிர்களிலிருந்து பெறும் கழிவு, மனிதன் மற்றும் விலங்குகளின் கழிவு போன்றவற்றைப் பயன்படுத்தி உயிரினச் சக்தி உற்பத்தி செய்யப்படுறது. இச்சக்தி கிராமப் புறங்களில் வீட்டு உபயோகத்திற்காக உற்பத்தி செய்யப் படுகிறது. மண்ணெண்ணெய் மற்றும் மரக் கரியை விட உயிரி சக்தி அதிக வெப்பத்தினை அளிக்கும்.

## ஓத சக்தி

இந்தியா 8000–9000 மெகாவாட் ஓதசக்தி திறனைக் கொண்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. காம்பே வளைகுடா 7000 மெகாவாட் சக்தி திறனைப் பெற ஏற்ற இடமாகும். மேலும் கட்ச் வளைகுடா (1000 மெகாவாட்) மற்றும் சுந்தரவனப்பகுதிகளில் (100 மெகாவாட்) இச்சக்தியை உற்பத்தி செய்யலாம்.

## அலை சக்தி

இந்தியா 40000 மெகாவாட் அலைசக்தித் திறன் கொண்டுள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. திருவனந்தபுரத்திற்கு அருகில் உள்ள 'விகின்ஜம்' என்ற இடத்தில் 150 மெகாவாட் அலை சக்தி உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு மெகாவாட் அலை சக்தி உற்பத்தி நிலையம் அந்தமான்–நிகோபர் தீவுகளிலும் நிறுவப்பட உள்ளது.

## சக்திவளங்களின் பாதுகாப்பு

பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படைத்தேவை சக்தி வளங்களாகும். நாட்டின் பொருளாதார துறைகளான வேளாண்மை, தொழிற்சாலை, போக்கு வரத்து, வர்த்தகம் போன்றவற்றிற்கும் வீட்டு உபயோகத்திற்கும் சக்தி வளங்கள் உள்ளீட்டுபொருளாக தேவைப்படுகின்றன. சுதந்திரத்திற்குபின் நம்நாட்டில் பல்வேறு வளர்ச்சி திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதனால் நாட்டின் அனைத்து பகுதிகளிலும் அனைத்து விதமான சக்தியை நுகரும் அளவு அதிகரித்துக்கொண்டே செல்கிறது.

இத்தகைய சூழ்நிலையில் சக்திவளங்களை பேணக்கூடிய தேவை ஏற்பட்டுள்ளது. சக்தி வளங்களின் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கக்கூடிய சக்தி வளங்களின் உற்பத்தி பெருக்கம், இரண்டும் பேணத்தகு சக்தி மேலாண்மையின் இரு பக்கங்களாகும். இந்தியா உலகில் குறைந்த அளவு சக்தி உற்பத்தி செய்யும் நாடுகளில் ஒன்றாக உள்ளது.

நாம் சக்தியை எச்சரிக்கையுடன் கீழ்கண்ட வழிகளில் பாதுகாக்கலாம்.

1. தனிப்பட்ட வாகனங்களைப் பயன் படுத்தாமல் பொதுத்துறை போக்குவரத்து அமைப்புகளைப் பயன்படுத்துதல்.

2. பயன் இல்லாதபோது மின் சாரத்தை நிறுத்திவைத்தல்.

3. சக்தி சேமிப்பு சாதனங்களைப் பயன்படுத்துதல்.

4 மரபு சாராத சக்தி வளங்களைப் பயன்படுத்துதல் ஏனெனில் 'சக்தி சேமித்தல் என்பது சக்தி உற்பத்தி செய்தல்' எனப்படும்.

## இயற்கை வளங்களை பாதுகாப்பதன் அவசியம்

இவ்வாறு நாம் தொடர்ந்து இயற்கை வளங்களை எடுத்துக்கொண்டேயிருப் போமானால், எதிர்காலத்தில் எவ்வித வளங்களும் கிடைக்காமல் போகலாம்.

இயற்கையைப் பாதுகாக்கும் அவசரத் தேவை தற்போது உள்ள தேவைகளில் சில பின்வருமாறு:–

1. வாழ்க்கைக்கு ஆதாரமாக விளங்கும் சூழியல் சமநிலையை பராமரித்தல்.

2. பல்வகை உயிரினங்களையும் பாதுகாத்தல்.

3. தற்காலத்திற்கும் எதிர்கால சந்ததியினருக்கும் வளங்கள் கிடைப்பதற்கு வழிவகுத்தல்.

4. மனித இனம் வாழ்வதற்கு உறுதியளித்தல்.

## பயிற்சி

### அ. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.

1. வறண்ட நிலப்பகுதியில் காணப்படும் மண் ________ ஆகும்.

   அ) பாலைமண் ஆ) சூளைமண் இ) கருப்புமண் ஈ) வண்டல்மண்

2. பருவக் காற்றுக் காடுகள் ________என்றும் அழைக்கப்படுகின்றன.

   அ) அயன மண்டல பசுமை மாறாக் காடுகள் ஆ) இலையுதிர்க் காடுகள்

   இ) மாங்குரோவ் காடுகள் ஈ) மலைக் காடுகள்

3. மோனோசைட் மணலில் காணப்படும் தாது________.

   அ) எண்ணெய் ஆ) யுரேனியம் இ) தோரியம் ஈ) நிலக்கரி

### ஆ. பொருத்துக.

| | |
|---|---|
| 1. கரிசல் மண் | நெற்பயிர் |
| 2. பழுப்பு நிலக்கரி | பருத்திப் பயிர் |
| 3. மாங்குரோவ் காடுகள் | ஒரு வகை நிலக்கரி |
| 4. புதுப்பிக்கக்கூடிய வளங்கள் | ஒருவகை இரும்பு |
| 5. புதுப்பிக்க இயலாத வளங்கள் | சூரியன் |
| | எண்ணெய் |
| | சுந்தரவனம் |

### இ. வேறுபடுத்துக.

1. அயன மண்டல பசுமை மாறாக் காடுகள் மற்றும் அயன மண்டல பருவக் காற்றுக் காடுகள்.
2. புதுப்பிக்கக்கூடியவளம் மற்றும் புதுப்பிக்க முடியாத வளம்.
3. காற்று சக்தி மற்றும் அனல்மின் சக்தி.

ஈ. பின்வரும் வினாக்களுக்கு குறுகிய விடையளி.

1. ‘இயற்கைவளம்’ என்றால் என்ன ?

2. செழுமையான மண்ணில் காணப்படும் பொருட்கள் யாவை ?

3. வெப்ப மண்டல பசுமை மாறாக் காடுகளின் ஏதேனும் நான்கு அம்சங்களை குறிப்பிடுக.

4. குறுங்காடுகள் மற்றும் முட்புதர்க் காடுகள்–பொருள் கூறுக.

5. இந்தியாவில் மைக்கா உற்பத்தியாகும் இடங்கள் யாவை ?

உ. பின்வரும் வினாக்களை ஒரு பத்தியில் விவரி.

1. காடுகளின் முக்கியத்துவத்தை விவரி.

2. இயற்கை வளங்களை பாதுகாக்க வேண்டிய அவசியத்தை விவரி.

# 4. இந்தியா – வேளாண் தொழில்

வேளாண்தொழில் இந்திய சமூக பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்தியர்களின் வாழ்விற்கும், உணவு பாதுகாப்பிற்கும் ஆதாரமாக வேளாண்மை விளங்குகிறது. நம் நாட்டின் தேசிய வருமானத்தின் பெரும் பங்கினை வேளாண் தொழில் ஈட்டித் தருகிறது. இந்தியாவின் மொத்த பணித்திறனில் பாதிக்குமேல் வேளாண் தொழிலில் ஈடுபட்டுள்ளதால் தொழில் மற்றும் வர்த்தகத் துறைகளின் வளர்ச்சி வேளாண்மை வளர்ச்சியையே சார்ந்துள்ளன.

பல்வேறு புவியியல் காரணிகளால் இந்தியாவில் வெவ்வேறு சாகுபடி முறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன. புவியியல் காரணிகள் எவ்வாறு சாகுபடி முறைகளை நிர்ணயிக்கின்றன என்பதைப் பற்றியும், வேளாண்தொழில் தேசிய வருமானத்திற்கு எவ்விதம் உறுதுணை புரிகின்றது என்பதைப் பற்றியும் இனி நாம் காண்போம்.

## வேளாண் தொழிலை நிர்ணயிக்கும் காரணிகள்

1. நிலத்தோற்றம்
2. காலநிலை
3. மண்வகை
4. நீர்

## 1. நிலத் தோற்றம்

இந்தியா, மலைகள், சமவெளிகள், பீடபூமிகள் போன்ற பல்வேறு நிலத்தோற்றங்களைக் கொண்ட நாடு, வேளாண் உற்பத்தியை அதிகரித்துத் தரும் செழுமையான வண்டல் மண் நிறைந்த சமவெளிகள் வேளாண்மைக்கு உகந்தவை. எடுத்துக்காட்டாக கங்கை மற்றும் காவிரி ஆற்றுச் சமவெளிகள்.

## 2. காலநிலை

இந்தியாவின் பெரும்பகுதி வெப்ப மண்டலத்தில் அமைந்து, வெப்பமண்டலப் பருவக்காற்று காலநிலையைப் பெற்றுள்ளது. வருடம் முழுவதும் பயிர்கள் வளர ஏற்ற சூரியசக்தி இங்கு கிடைக்கிறது. பருவமழையுடன் நீர்ப்பாசன வசதிகளும் இணைந்து அனைத்துப் பருவங்களிலும் பயிர் விளைச்சல் மேற்கொள்ள வழிவகிக்கிறது. மழைப் பொழிவின் அளவு பயிர்சாகுபடி முறையை நிர்ணயிக்கிறது. எடுத்துக்காட்டாக, கோதுமை பயிருக்கு மித வெப்பம் தேவை. ஆனால் நெற்பயிருக்கு அதிக வெப்பம் தேவை. ஆகையால், பஞ்சாப் மாநிலத்தில் கோதுமையும், தமிழ்நாட்டில் நெல்லும் பயிரிடப்படுகிறது.

## 3. மண் வகைகள்

தொழில் நுட்பம் வளர்ச்சியடைந்த போதிலும் வேளாண் சாகுபடி முறையைத் தீர்மானிக்கின்ற மிக முக்கியமான புவியியல் காரணிகளுள் ஒன்றாக மண் விளங்குகிறது. எனவே வளமிக்க வண்டல் மண், நெல் மற்றும் கரும்பு விளைச்சலுக்கும், கரிசல் மண் பருத்தி விளைவிக்கவும் ஏற்றதாக உள்ளன.

## 4. நீர்

வேளாண் தொழிலை நிர்ணயிக்கும் மற்றொரு காரணி, நீர் ஆகும். இந்தியா சமச்சீரற்ற மழையைப் பெறும் பருவக்காற்று நாடு. நீர்ப்பாசன வசதியினை நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கு தர இயலாது. ஆகையால் நீர் அதிகம் தேவைப்படும் பயிர்களில் மழை அதிகமாக பெறும் பகுதிகளிலோ அல்லது நீர்ப்பாசன வசதியுடன்கூடிய பகுதிகளிலோ பயிர் செய்யப்படுகிறது. பெருகிவரும் மக்கட் தொகையின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய மழை குறைவான பகுதிகளில் வறட்சியைத் தாங்கும் பயிர்கள் விளைவிக்கப்படுகின்றன.

## வேளாண்மையின் வகைகள்

நம் நாட்டில் நான்கு வகையான வேளாண் முறை பின்பற்றப்படுகிறது. அவையாவன:

1. பழமையான வேளாண்மை,
2. தன்னிறைவு வேளாண்மை,
3. வணிக வேளாண்மை,
4. தோட்ட வேளாண்மை.

### 1. பழமையான வேளாண்மை

பழமையான இம்முறை அதிக மழை பெறும் காடுகளில் பின்பற்றப்படுகிறது. காட்டின் ஒரு பகுதி வேளாண்மைக்காக சுத்தம் செய்யப்பட்டு இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்குப் பயிர் செய்யப்படுகிறது. பின்னரே அவ்விடத்தை விடுத்து வேறிடத்திற்குச் சென்று பயிர் செய்கின்றனர். இம்முறையை வடகிழக்கு மாநிலங்கள், மத்தியப்பிரதேசம், ஒரிசா, ஆந்திரப்பிரதேசம் மற்றும் கேரளா மாநிலங்களில் சிறிய அளவில் நடைமுறைப்படுத்துகின்றனர்.

பழமையான வேளாண் முறை பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறது. அஸ்ஸாமில் 'ஜூம்' எனவும், ஒரிசா மற்றும் ஆந்திரப்பிரதேசத்தில் 'பொடு' எனவும் மத்தியப் பிரதேசத்தில் 'மாசன்' எனவும், கேரளாவில் 'பொன்னம்' எனவும் அழைக்கப்படுகிறது.

### 2. தன்னிறைவு வேளாண்மை

இந்திய வேளாண்மையில் அதிக இடம் பெற்றுள்ள வேளாண்மை வகை தன்னிறைவு வேளாண்மை ஆகும். இதிலிருந்து கிடைக்கும் வேளாண் பொருட்களின் உற்பத்தியில் சுமார் பாதியளவு விவசாயிகளின் குடும்பத் தேவையை நிறைவு செய்வதால், மீதி அளவு அருகிலுள்ள சந்தைகளில் விற்கப்படுகின்றது. இம்முறையில் விவசாயிகள் நெல் மற்றும் கோதுமை போன்ற தானியங்களையே அதிகமாக விளைவிக்கின்றனர்.

எடுத்துக்காட்டாக, வடகங்கைச் சமவெளி, தென் காவிரி, கிருஷ்ணா, கோதாவரி மற்றும் மகாநதி சமவெளிகளில் இம்முறை காணப்படுகிறது.

இந்தியா சுதந்திரமடைந்தபின், வேளாண்மை பெரிய அளவில் முன்னேற்றம் அடைந்துள்ளது. விவசாயிகள் கிடைக்கக்கூடிய குறைந்த அளவு நிலத்தில் ரசாயன உரங்கள், எரு, கலப்பின விதை வகைகள், நவீன இயந்திரங்கள் மற்றும் நீர்ப்பாசன வசதிகளைப் பயன்படுத்தி அதிக விளைச்சலைப் பெற முயற்சிக்கின்றனர்.

தீபகற்ப இந்தியாவின் முக்கிய உணவான அரிசி 44 மில்லியன் ஹெக்டேர் நிலத்தில் விளைவிக்கப்படுகிறது. இது உலகின் அரிசி விளைவிக்கப்படும் மிகப் பெரிய பரப்பாகும். 1977ஆம் ஆண்டே அரிசி உற்பத்தியில் இந்தியா தன்னிறைவு அடைந்துவிட்டது. உயர்தர பாசுமதி அரிசி குறைந்த அளவில் ஏற்றுமதியும் செய்யப்படுகிறது.

இம்முறை வேளாண்மையை தீவிர வேளாண்மை (Intensive agriculture) என்கிறோம். இவ்வேளாண் முறை வண்டல்மண் பகுதிகளிலேயே பெரும்பாலும் நடைபெறுகிறது.

### 3. வணிக வேளாண்மை

தேவை அதிகமாகவுள்ள பயிர்களை வணிக வேளாண்மையில் விளைவிக்கின்றனர். இத்தகைய வேளாண்மையில் பயிர் அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டு அந்நிய செலாவணியை ஈட்டி தருவதற்காக வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இம்முறை பஞ்சாப், குஜராத், மகாராஷ்டிரம் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் பின்பற்றப்படுகிறது. இத்தகைய வேளாண்மையை 'பரந்த வேளாண்மை' என்றும் குறிப்பிடுவர்.

வணிக வேளாண்மைப் பயிர்கள் வேளாண் அடிப்படை தொழிற்சாலைகளுக்கு மூலப் பொருட்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. எடுத்துக்காட்டு: தானியங்கள், பருத்தி, கரும்பு, சணல் போன்றவை.

## 4. தோட்ட வேளாண்மை

இம்முறை வேளாண்மையில் மிகப் பரந்த நிலத்தில் ஒரே ஒரு பயிர் மட்டும் விளைவிக்கப்படுகிறது. தோட்டங்கள் வேளாண்மையையும் தொழிற்சாலையையும் இணைப்பவையாக அமைகின்றன. பயிரிடப்படும் இப்பகுதி பெரும்பாலும் தனியாருக்குச் சொந்தமானது. தேயிலை, காப்பி, இரப்பர் போன்றவை தோட்டப் பயிர்களாகும். இப்பயிர்கள் மலைப்பிரதேசங்களான வடகிழக்கு மாநிலங்களின் குன்றுப்பகுதிகளிலும், மேற்குவங்காளம் மற்றும் தென்னிந்தியாவில் நீலகிரி, ஆனைமலை மற்றும் ஏலமலைச் சரிவுகளிலும் பயிரிடப்படுகின்றன.



ரப்பர் மரம்

### பயிர் சாகுபடி முறைகள்

விவசாயிகள் பயிர் சாகுபடி முறையைத் தீர்மானிக்கின்றனர். இந்தியாவில் கீழே உள்ள அட்டவணையில் உள்ளவாறு பயிர்சாகுபடி முறை நடைபெறுகின்றது.

உணவுப் பயிர்கள் உற்பத்தி

1. வெப்பநிலை, மழைப்பொழிவு, மண்வகைகள் ஆகியவற்றைப் பொறுத்து பலவித உணவுப் பயிர்கள் பயிரிடப்படுகின்றன. இந்தியாவின் உணவுப் பயிர்களாவன:

| பெயர் | முறை | பயிர்கள் |
|---|---|---|
| ஒரு போகம் | ஒரு பயிர் | தேயிலை, காப்பி, கரும்பு |
| இரு போகம் | இரண்டு பயிர்கள் | கோதுமை, கடுகு |
| மூன்று போகம் | இரண்டுக்கு மேல் | பார்லி, கடுகு, கோதுமை, சோளம், கம்பு, நிலக்கடலை |

பயிர் சாகுபடி முறைகள்

### இந்திய வேளாண்மையின் பருவகாலங்கள்


வேளாண் நடவடிக்கைகள் பருவமழை பொழியத்துவங்கும் ஜூன்மாதத்தில் ஆரம்பிக்கிறது. இந்திய வேளாண்மை ஒரு ஆண்டில் மூன்று பயிர்கள் விளைவிக்கப்படுகின்றன. அவை பின்வருமாறு:

| பெயர் | விதைக்கும் பருவம் | அறுவடை காலம் | முக்கியப்பயிர்கள் |
|---|---|---|---|
| காரிஃப் | ஜுன் (பருவ மழை தொடங்கும் காலம்) | நவம்பர் மாத துவக்கம் | நெல், சோளம், பருத்தி, சணல், கரும்பு, கடலை |
| ராபி பயிர்கள் | நவம்பர் (குளிர் காலத் துவக்கம்) | மார்ச் (கோடை ஆரம்பம்) | கோதுமை, புகையிலை, கடுகு, பருப்பு வகை தானியங்கள் |
| சையத் பயிர்கள் | மார்ச் (கோடை துவக்கம்) | ஜுன் (பருவ மழை ஆரம்பம்) | பழங்கள்,காய்கறிகள், தண்ணீர் பழம், வெள்ளரிக்காய் |

இந்திய வேளாண்மையின் பருவ காலங்கள்

# நெல் விளையும் இடங்கள்






வேளாண் பருவ காலங்கள்

## நெல்

இந்தியாவின் முக்கியமான உணவுப் பயிர் நெல் ஆகும். உலகின் நெல் உற்பத்தியில் இந்தியா இரண்டாம் இடத்தை வகிக்கிறது. இந்தியாவும், சீனாவும் உலக நெல் உற்பத்தியில் 90 சதவீதத்தை உற்பத்தி செய்கின்றன. பஞ்சாப் மற்றும் ஹரியானா மாநிலங்களில் மழை குறைவாக உள்ளதால் நீர்பாசனத்தின் உதவியுடன் பயிரிடப்படுகிறது. விதை விதைத்தல், களையெடுத்தல், அறுவடை செய்தல் போன்ற பல நடவடிக்கைகளுக்கு குறைந்த சம்பளத்திற்கு அதிக தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர். சுகந்த்–5, சுக்ரதாரா–1 போன்ற வீரிய கலப்பின விதை வகைகள் ஹரியானா, டெல்லி, ஜம்மு காஷ்மீர், இமாச்சலப்பிரதேசத்தின் உயர்நிலங்கள், உத்தராஞ்சல் பகுதிகளில் பயிரிடப்படுகின்றன.

வட இந்தியாவில் மேற்கு வங்கம், பஞ்சாப், உத்திரப்பிரதேசம், பீகார் மற்றும் ஒரிசா ஆகிய மாநிலங்களிலும் தென்னிந்தியாவில் தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்களிலும் நெல் விளைவிக்கப்படுகின்றது. அதிக மக்கள் தொகையில் நெல் உற்பத்தி முழுவதும் நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்வதே போதுமானதாக உள்ளது. மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா மற்றும் காவிரிடெல்டா பகுதிகளில் ஆண்டிற்கு மூன்று முறை நெல்பயிர் சாகுபடி செய்யப்படுகிறது.

இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகம் (ICAR) 1929 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. உணவுப் பற்றாக்குறையில் இருந்த இந்தியாவை உபரி உணவு உற்பத்தி நாடாக மாற்றியதற்கு இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகம் காரணமாக விளங்குகிறது. இது தமது பண்ணைத் தொழில் நுட்பங்களை சோதனைக் கூடத்திலிருந்து விவசாய நிலங்களுக்கு துரிதமாக மாற்றியது.

## தமிழ்நாட்டில் நெல் உற்பத்தி

தமிழ் நாட்டிலுள்ள நெல் களஞ்சியம் எனப்படும் தஞ்சாவூர் மாவட்டம் நெல் உற்பத்தியில் சில சிறப்பான அம்சங்களைப் பெற்றுள்ளது.




நெல்வயல்

நெல்வளர்ச்சிக்கு எடுத்துக் கொள்ளும் காலத்தின் அடிப்படையில் சம்பா, குறுவை, தாளடி என ஒரு ஆண்டில் மூன்று வகைகளில் நெல் உற்பத்தி செய்யப்படுகிறது. சம்பா என்பது நீண்ட காலப்பயிர் இது ஐந்து முதல் ஆறு மாதங்கள் வரை வளர்கிறது. குறுவை மூன்று முதல் நான்கு மாதங்களுக்குள் வளர்கிறது. முன்னர் அறுவடை செய்யப்பட்ட நிலத்தில் உள்ள நெல் தாள்களுடன் உழுது பயிர் செய்யும் முறையை தாளடி என்று உள்ளூர் வழக்குச் சொல்லில் கூறப்படுகிறது.

## வானவில் புரட்சிகள்

| தலைப்பு | உற்பத்தி சார்ந்தது |
|---|---|
| பசுமைப் புரட்சி | வேளாண் உற்பத்தி |
| வெண்மைப் புரட்சி | பால் பொருட்கள் |
| சாம்பல் புரட்சி | முட்டை மற்றும் கோழிப் பண்ணை |
| பொன் புரட்சி | பழங்கள் உற்பத்தி |
| மஞ்சள் புரட்சி | எண்ணெய் வித்துக்கள் |
| நீலப்புரட்சி | கடல் பொருட்கள் |

## கோதுமை விளையும் இடங்கள்



நெல் பயிர் உற்பத்தி செய்யும் இம்முறை தற்போதும் நடைபெறுகிறது என்றாலும், நவீன சாகுபடி முறைகள் சில மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. இதனால் அறுவடைகாலம் கூட மாறுபடுகிறது.

### கோதுமை பயிர்

கோதுமை ஒரு முக்கிய உணவுப் பயிர் ஆகும். இந்தியாவின் வடக்கு மற்றும் வடமேற்கு மாநிலங்களில் கோதுமைப் பயிர் குளிர்காலம் மற்றும் வசந்தகாலப் பயிராகவும் பயிரிடப்படுகிறது. கோதுமை அதிக அளவில் உற்பத்தி செய்யும் மாநிலங்கள் உத்திரப்பிரதேசம், ராஜஸ்தான், மத்திய பிரதேசம், சட்டீஸ்கர், மகாராஷ்டிரம், குஜராத் மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகும். பஞ்சாப் மற்றும் ஹரியானா மாநிலங்களில் பசுமைப் புரட்சியின் தாக்கத்தினால் உற்பத்தியின் அளவு அதிகமாக இருக்கிறது. தற்சமயம் இந்தியா கோதுமை ஏற்றுமதி செய்யும் அளவிற்கு உயர்ந்துள்ளது.



கோதுமை

### தினை வகைகள்

உணவுப் பயிர் உற்பத்தி செய்வதில் நெல் மற்றும் கோதுமைக்கு அடுத்தாக தினை வகைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. வளமற்ற மண்ணிலும் இவை நன்கு வளர்கின்றன. இவை வறட்சியைத் தாங்கும் பயிர்கள். தானியப் பயிரான தினை வகைகள் நெல் மற்றும் கோதுமைக்கு இடைப்பட்ட பயிராகும். இதில் சோளம், கம்பு, கேழ்வரகு போன்றவை தினை வகைகளாகும். தினை வகைகள் செழிப்பற்ற மண்ணில் வளரக் கூடியவை. கோதுமை மற்றும் நெல்லைக் காட்டிலும் அதிகச் சத்து மிக்கவை. இவை கால் நடைகளுக்கும் தீவனமாகிறது. தினை வகைகள் எல்லா மாநிலங்களிலும் காணப்பட்டாலும் மத்தியப்பிரதேசம், ஆந்திரப்பிரதேசம், தமிழ்நாடு, உத்திரப்பிரதேசம், கர்நாடகா, ஒரிசா, பீகார், மகாராஷ்டிரம் மற்றும் குஜராத் போன்றவை முக்கியமான உற்பத்தி மாநிலங்களாக உள்ளன.


### பருப்பு வகைகள்

புரதச்சத்துமிக்க அவரையினத்தைச் சார்ந்த பயிர் வகைகளே பருப்பு வகைகள் ஆகும். பட்டாணி, துவரை போன்றவை முக்கிய பருப்பு வகைகளாகும். உளுந்து, பச்சைப் பயிறு, கொள்ளு போன்றவை இதர பருப்பு வகைகளாகும். நீர்ப்பாசன வசதி இருப்பினும் இல்லாவிடினும் எத்தகைய காலநிலையிலும் வறட்சியிலும் கூட பருப்பு வகைகள் வளரக் கூடியவை. மிதமான குளிர் காலநிலை முதல் மிதமான குறைந்த மழைப் பொழிவு–பருப்பு விளையத் தேவைப்படுகிறது. மத்தியபிரதேசம், ராஜஸ்தான், ஹரியானா, பஞ்சாப், மகாராஷ்டிரம், குஜராத், ஆந்திரபிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் அதிக அளவில் பயிரிடப்படுகிறது.


### பணப்பயிர்கள்

நம்நாட்டில் உணவுத் தானியப் பயிர்கள் மட்டுமல்லாது பல்வேறு வகை பயிர்களும் பயிரிடப்படுகின்றன. அவற்றுள் கரும்பு, பருத்தி, சணல், தேயிலை, காப்பி, எண்ணெய் வித்துக்கள், புகையிலை மற்றும் ரப்பர் போன்றவை குறிப்பிடத்தக்க வணிகப் பயிர்களாகும். அத்தகைய பயிர்கள் தொழிற் சாலைக்குத் தேவையான மூலப் பொருட்களை அளிப்பது மட்டுமன்றி ஏற்றுமதி மூலம் அந்திய செலாவணியை நம்நாட்டிற்கு ஈட்டித் தருகின்றன. ஆகையினால் இப்பயிர்கள் பணப்பயிர்கள் என்றழைக்கப்படுகின்றன. இவைகள் இந்தியப் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

## கரும்பு பயிரிடப்படும் இடங்கள்



## பருத்தி மற்றும் சணல் விளையும் இடங்கள்



## கரும்பு

கரும்பு ஒரு வெப்ப மண்டலப் பயிராகும் இது அதிக வெப்பமும் ஈரப்பதமும் கொண்ட காலநிலையில் நன்கு பயிராகின்றது. இந்தியா கரும்பு உற்பத்தியின் பிறப்பிடமாகும். கரும்பு உற்பத்தியில் பிரேசிலுக்கு அடுத்த இடத்தில் இந்தியா உள்ளது. உத்திரபிரதேசம், தமிழ்நாடு, ஆந்திரபிரதேசம், கர்நாடகா, குஜராத், மகாராஷ்டிரம், பீகார், பஞ்சாப் மற்றும் ஹரியானா ஆகியவை கரும்பு பயிரிடும் மாநிலங்களாகும்.



கரும்பு

## பருத்தி

பருத்தி இந்தியாவின் முக்கியமான இழைப்பயிர் ஆகும். இது பருத்தியாலைக்குத் தேவையான மூலப்பொருளை அளிக்கிறது. இது வெப்ப மற்றும் மித வெப்ப மண்டல காலநிலையில் நன்றாக வளர்கிறது. கரிசல் மண், பருத்தி பயிரிடுவதற்கு ஏற்ற மண் ஆகும். பருத்தி உற்பத்தியில் இந்தியா நான்காம் இடத்தை வகிக்கின்றது. குஜராத், மகாராஷ்டிரம், ஆந்திரப்பிரதேசம், கர்நாடகா, தமிழ்நாடு, மத்திய பிரதேசம், பஞ்சாப் மற்றும் ஹரியானா ஆகியவை பருத்தி அதிகமாக விளையும் மாநிலங்களாகும்.

## சணல் பயிர்

சணல் பருத்திக்கு அடுத்தப்படியாக உள்ள மிக முக்கியமான இழைப்பயிர். சணலின் மென்மை வலிமை, நீளம் மற்றும் அதன் சீரானதன்மை போன்றவற்றால் சணல்–மலிவான மற்றும் வணிகத் தேவை மிக்கதாகக் காணப்படுகிறது. சாக்குப்பைகள், கம்பளங்கள், கயிறு நூலிழைகள், போர்வைகள், சணல் துணிகள் மற்றும் தார் பாலின் தயாரிக்க சணல் தேவைப்படுகிறது.



சணல் பயிர்

சணல் பயிர் மேற்கு வங்கத்திலுள்ள கங்கா பிரம்மபுத்திரா சமவெளிகளிலும், பீகார், ஒரிசா, அஸ்ஸாம் மற்றும் மேகாலயா ஆகிய பகுதிகளில் மட்டுமே பயிராகிறது. ஏனெனில் இப்பயிருக்கு வெப்பமும் ஈரப்பதமும் கொண்ட காலநிலை தேவை. மேலும் சணல் பயிர் வளர ஒவ்வொரு ஆண்டும் புதுப்பிக்கப்படும் வண்டல் மண்ணைக் கொண்டுள்ள வெள்ளச் சமவெளிகளில் உள்ள மண், நீர்வடியும் செழிப்பான மண்ணாக இருக்க வேண்டும்.

## புகையிலை

புகையிலை 1508 ஆம் ஆண்டு போர்ச்சுக்கீசியரால் முதன் முதலாக இந்தியாவிற்கு கொண்டு வரப்பட்டது எனக் கூறுவர்.



புகையிலை

அதன் பின் இப்பயிர் படிப்படியாக நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் பயிரிடப்பட்டு வருகிறது. புகையிலை

உற்பத்தியில் இந்தியா மூன்றாவது இடத்தைப் பெறுகிறது. மற்ற இரு முன்னணி வகிக்கும் நாடுகள்–சீனா மற்றும் அமெரிக்கா ஐக்கிய நாடுகள் ஆகும். இந்தியாவில் புகையிலை உற்பத்தி செய்யும் மாநிலங்கள் தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம் மற்றும் கர்நாடகம்.

### எண்ணெய் வித்துக்கள்

உலகில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி செய்யும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று. இந்தியாவில் பாமாயில் மற்றும் ஆலிவ் எண்ணெய் தவிர எல்லாவிதமான எண்ணெய் வித்துக்களும் விளைவிக்கப்படுகின்றன. எண்ணெய் வித்துக்கள் பெரும்பாலும் வெப்ப மற்றும் மித வெப்ப மண்டலங்களில் விளைவிக்கப்படுகின்றன. நிலக்கடலை, எள், கடுகு, சூரியகாந்தி, ஆமணக்கு, தேங்காய், சோயாபீன்ஸ் போன்றவை இந்தியாவில் பயிராகும் எண்ணெய் வித்துக்கள் ஆகும். இந்திய உணவில் எண்ணெய் முக்கிய பங்கு வகிக்கிறது. எண்ணெய் வித்துக்கள் பல்வேறு பொருட்களைத் தயாரிப்பதற்கு பயன்படும் மூலப் பொருட்களாகவும், கால்நடை தீவனமாகவும், எருவாகவும் பயன்படுத்தப்படுகின்றன.

எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் முக்கிய இடம் பெறும் மாநிலங்கள் குஜராத், மகாராஷ்டிரம், தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், மத்தியபிரதேசம், ஒரிசா மற்றும் கர்நாடகம்.

### தோட்ட வேளாண்மை
### தேயிலை

தேயிலை முக்கிய பானப்பயிராகும், தேயிலைச் செடி ஆழமுள்ள, செழிப்பான மண்ணுடன் கூடிய வெப்ப மண்டல அல்லது துணை வெப்ப மண்டல காலநிலையில் பயிராகிறது. 3000 அடி முதல் 4000 அடி வரை உயரங்களுக்கு இடையேயுள்ள மலைச் சரிவுகள் இப்பயிர் வளர ஏற்றவையாகும். அஸ்ஸாம், மேற்கு வங்கம், கேரளா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் தேயிலை பயிர் உற்பத்தியில் முக்கிய இடம் வகிக்கின்றன.



தேயிலை

### காப்பி

காப்பி மிக முக்கியமான பானப் பயிர், இந்தியாவில் பயிரிடப்படும் காப்பி தரத்திற்குப் புகழ் பெற்றது. இந்தியாவின் 60% காப்பி கர்நாடகத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது. காப்பி பயிராகும் மற்ற மாநிலங்கள் தமிழ்நாடு மற்றும் கேரளா.




காப்பி

### இரப்பர்

இரப்பர் மரத்திலிருந்து எடுக்கப்படும் பால் போன்ற பொருளிலிருந்து இரப்பர் தயாரிக்கப்படுகிறது. இரப்பர் பயிரிடப்படும் பரப்பளவில் இந்தியா ஆறாவது இடத்தையும், இரப்பர் உற்பத்தியில் ஐந்தாவது இடத்தையும் பெற்றுள்ளது. இரப்பர் தோட்டங்கள் தென்னிந்தியாவில் அதிகமாகக் காணப்படுகின்றன. அவற்றுள் 95 % பரப்பு கேரள மாநிலத்தின் மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்திலும், 5% தமிழ்நாடு, கர்நாடகம், மற்றும் அந்தமான் நிக்கோபார் தீவுகளிலும் காணப்படுகின்றது.

# தேயிலை மற்றும் காப்பி பயிரிடப்படும் இடங்கள்



### பழங்கள் மற்றும் காய்கறிகள்

பழங்களும், காய்கறிகளும் மனிதனின் உணவுடன் நலவாழ்விற்குத் தேவையான தாதுக்கள், வைட்டமின்கள் மற்றும் நார் பொருட்களை வழங்குகின்றன. பழங்கள் மற்றும் காய்கறிகள் உற்பத்தியில் இந்தியா இரண்டாம் இடத்தை வகிக்கிறது. ஆப்பிள் இமாச்சலப்பிரதேசம், காஷ்மீர் மற்றும் உத்ராஞ்சல் ஆகிய மாநிலங்களிலும் வாழைப்பழம் தமிழ்நாடு மற்றும் மகாராஷ்டிர மாநிலங்களிலும் ஆரஞ்சுப்பழம் மகாராஷ்டிரம், உத்ராஞ்சல், இமாச்சலப்பிரதேசம், ஜம்மு–காஷ்மீர், ஆந்திரப்பிரதேசம், தமிழ்நாடு மற்றும் கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் அதிக அளவில் உற்பத்தியாகிறது. உலக காய்கறிகள் உற்பத்தியில் 13 சதவீதத்தை இந்தியா அளிக்கிறது.

### கால்நடை வளர்த்தலும், மீன்பிடித் தொழிலும்

கால்நடை வளர்த்தல் நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சியிலும் வீட்டின் வருமானத்திலும் முக்கிய பங்கு ஆற்றுகின்றது. நிலமற்ற விவசாயிகள், சிறு விவசாயிகள், கூலித்தொழிலாளர்கள் மற்றும் பெண்கள் போன்ற கிராமப் புறங்களில் வாழ்வோர்க்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தருகிறது.



பால் பண்ணை

கலப்பின மாடுகளின் உற்பத்தி பெருக்கத்தால் பால் உற்பத்தி உயர்ந்துள்ளது. அதைப் போலவே மரபணு முறைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தாலும், மிகச் சிறந்த வேளாண்மை முறைகளாலும் கோழிப்பண்ணை மற்றும் முட்டை உற்பத்தியில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. விவசாய உற்பத்தித்திறனில் 25% கால் நடை வளர்ப்பின் மூலம் கிடைக்கிறது என மதிப்பிடப்பட்டுள்ளது.


மீன் பிடித்தொழிலின் பங்கு மிகச்சிறியது. இருந்தபோதிலும் பல அடுக்கு மீன் வளர்த்தல் (Multi Layer Fish Culture) மூலம் கடந்த பத்தாண்டுகளில் ஆண்டு மீன் உற்பத்தி மிக அதிக வளர்ச்சியடைந்துள்ளது.

### தாவர உயிர் நுட்பவியல் வளர்ச்சி

தாவர உயிர் நுட்பவியலில் ஆய்வுகளை மேற்கொள்ளவும் மூலக உயிரியல் ( Molecular Biology) மற்றும் உயிர் நுட்பவியல் (Bio- technology) ஆகியவற்றில் கற்பித்தல் மற்றும் பயிற்சியை அளிக்கவும் 1985ஆம் ஆண்டு தேசிய ஆராய்ச்சி மையம் தொடங்கப்பட்டது.

### இந்திய வேளாண்மையில் உள்ள சவால்கள்

1. இந்திய வேளாண்மை ஒரு பருவக்காற்றின் சூதாட்டம் என வர்ணிக்கப்படுகிறது. பருவக்காற்றுகள் ஒழுங்காகவும் சீராகவும், குறித்த காலத்திலும் வீசுவதில்லை. இதனால் வேளாண்மைக்கு சாதகமான சூழ்நிலை அமைவதில்லை.



புயல் காற்று

2. பெருகிவரும் சாலைகள், ரயில் பாதைகள், மற்றும் கால்வாய்களின் கட்டுமானப் பணியால் மழைநீர் இயல்பான ஓட்டம் தடுக்கப்பட்டு அதனால் வெள்ளப் பெருக்கம் ஏற்பட்டு, இயற்கையான வடிகால் அமைப்பில் நீரோட்டத்தடை ஏற்படுகிறது. இதனால் கோடைகாலப்பயிர்கள் மிகப்பெரிய அளவில் அழிவதுடன், குளிர்காலப் பயிர்கள் பயிரிடுவதிலும் தாமதம் ஏற்படுகிறது.

3. தொழிற்சாலைகளும், குடியிருப்பு கட்டடங்களும் கட்டப்பட்டு வருவதால் வேளாண் நிலங்களின் பரப்பும் குறைந்து கொண்டே வருகிறது.



நகர் மயமாதல்

4. உலக அளவில் ஏற்பட்டுள்ள கால நிலை மாற்றங்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும், பயிர்கள், மண், கால்நடைகள் மற்றும் பூச்சிகள் போன்றவற்றில் தாக்கத்தை ஏற்படுத்துவதால் அவற்றின் மூலம் வேளாண்மையும் பாதிக்கப்படுகின்றது.

5. அதிக வேளாண்மை உற்பத்திக்காக இதுவரை மேற்கொண்ட நடவடிக்கைகளால், சுற்றுச் சூழ்நிலை மற்றும் இயற்கை வளங்கள் சீர்கேடு அடைவதால் பெரும் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. எதிர்காலத்தில் விளைபொருட்களின் அளவைப் பெருக்குவதில் மட்டுமன்றி அவற்றின் தரத்தை உறுதி செய்யும் வகையில், தொழிநுட்பம் அமைதல் வேண்டும். இதனால் வேளாண்மை உற்பத்தியில் நிலையான முன்னேற்றம் காண இயலும்.

தற்போது இந்தியா, உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றுள்ளது என்று நாம் கூறமுடியும். ஆனால், தொழிற்சாலைகள் மற்றும் சேவைத்துறைகளைக் காட்டிலும், வேளாண்துறையின் வளர்ச்சி குறைவாக உள்ளது.

எதிர்காலத்தில், இந்தியாவின் மக்கள் தொகை 2020 ஆம் ஆண்டிற்குள் சுமார் 1300 மில்லியன் அளவு உயரக்கூடும். அச்சமயத்தில் இயற்கை வளங்களை திறமையாக கையாள்வதாலும், சந்தைகளை நாடி உழவர்கள் செல்லும் நிலையை அதிகரிப்பதாலும், பொதுக்கல்வி அளிப்பதாலும் மட்டுமே, பெருகிவரும் தேவையை பூர்த்தி செய்ய இயலும்.

## பயிற்சி

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

1. நெல் அதிகமாக விளையும் மண்_______.

அ ) கரிசல்மண் ஆ) செம்மண் இ) வண்டல் மண் ஈ) சரளைமண்

2. தேயிலை மற்றும் காப்பி பயிர் அதிகமாக விளையும் இடம்_______.

அ) மலைச் சரிவுகள் ஆ) சமவெளிகள்

இ) கடற்கரைச் சமவெளிகள் ஈ) ஆற்றுப்பள்ளத்தாக்குகள்

3. வறட்சியிலும் வளரும் பயிர் ________.

அ) நெல் ஆ) கோதுமை இ) சணல் ஈ) தினைவகை

4. பருத்தி ஒரு________.

அ) உணவுப் பயிர் ஆ) பணப்பயிர் இ) தோட்டப்பயிர் இ) தினைபயிர்

5. நிலையான உணவுப் பயிர்கள்________.

அ) அரிசி மற்றும் கோதுமை ஆ) காப்பி மற்றும் தேயிலை

இ) பருத்தி மற்றும் சணல் இ) பழங்கள் மற்றும் காய்கறிகள்

## ஆ. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. | கோதுமை | மேற்கு வங்கம் |
| 2. | கரும்பு | கேரளா |
| 3. | ஆப்பிள் | உத்திரப்பிரதேசம் |
| 4. | ரப்பர் | பஞ்சாப் |
| 5. | சணல் | ஹிமாச்சலபிரதேசம் |
| | | தமிழ்நாடு |
| | | கர்நாடகம் |

## இ. வேறுபடுத்துக.

1. தன்னிறைவு மற்றும் வணிக வேளாண்மை – வேறுபடுத்துக.

2. கோடை மற்றும் குளிர்காலப்பயிர்கள் – வேறுபடுத்துக.

3. ஒரு பயிர் மற்றும் இருபயிர் சாகுபடி – வேறுபடுத்துக.

## ஈ. சுருக்கமான விடையளி.

1. வேளாண்தொழிலை நிர்ணயிக்கும் காரணிகள் யாவை ?
2. வேளாண்தொழிலின் வகைகள் யாவை ?
3. இந்தியாவின் வேளாண்காலங்கள் யாவை ?
4. தினைவகைப்பயிர்கள் எங்கு ஏன் பயிரிடப்படுகின்றன ?
5. பருத்தி விளையுமிடங்களைக் கூறுக.
6. தோட்டப்பயிர்கள் யாவை ?

## உ. ஒரு பத்தியில் விடையளி.

1. உயிரி –நுட்பத்தினைப் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள் யாவை ?

2. இந்திய வேளாண்தொழிலில் உள்ள பிரச்சினைகள் யாவை ?

## ஊ. கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழே கொடுக்கப்பட்டுள்ள பயிர்கள் விளையும் பகுதிகளைக் கோடிட்டு காட்டுக.

1. பருத்தி 2.சணல் 3.நெல் 4.தேயிலை மற்றும் காப்பி 5. கோதுமை

## எ. செயல்முறைப் பயிற்சிகள்.

நெற்பயிர் விளையும் வயல் அல்லது தேயிலைத் தோட்டம் சென்று அங்கு நடைபெறும் பயிர்தொழில் முறையினை பார்வையிட்டு, அறிக்கை தயாரிக்கவும்.

# 5. இந்தியா – தொழிலகங்கள்

ஒரு நாடு இயற்கை வளங்களை நுகரும் பொருட்களாக மாற்றுவதன் மூலம் செல்வவளம் மிக்க நாடாகிறது. ஒரு நாட்டின் செல்வச் செழிப்பானது அதிகரித்துவரும் உற்பத்தி தொழிலகங்களைச் சார்ந்துள்ளது. இந்தியா ஒரு இயற்கை வளமிக்க நாடாகும். இவ்வளங்கள் வனப்பொருட்கள், வேளாண் பொருட்கள் மற்றும் கனிமங்களை உள்ளடக்கியுள்ளது. இவற்றுள் சில வளங்களை நேரிடையாகப் பயன்படுத்த முடியும். ஆனால் சிலவற்றினை முறைப்படுத்தவேண்டும். உதாரணமாக, பருத்தியை முறைப்படுத்தி, முடிக்கப்பட்ட பொருளாக மாற்றியபின்னரே பயன்படுத்த இயலும். எனவே பருத்தி என்பது வேளாண் மூலப் பொருளாகும். அதே போன்று கச்சா எண்ணெயை முறைப்படி சுத்திகரிப்பதன் மூலம் பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய் மற்றும் உயர் பெட்ரோல் (gasoline) பெறப்படுகிறது.

இந்திய மக்களின் முக்கியத் தொழில் வேளாண் தொழிலாக இருந்த போதிலும், ஐந்தாண்டு திட்டங்களின் மூலம் தொழிலகங்கள் பெரும் வளர்ச்சி பெற்றிருப்பதுடன் மக்களுக்கு பெருமளவில் வேலைவாய்ப்பையும் வழங்கியுள்ளன. இதனால் மக்களின் வாழ்க்கைத் தரமும் உயர்ந்து கொண்டு வருகிறது.

## தொழிலக அமைவிடக் காரணிகள்

தொழிலக அமைவிடத்தை நிர்ணயிக்கும் காரணிகள் மூலப்பொருட்கள், எரிச்சக்தி, போக்குவரத்து, மனிதசக்தி, நீர்வளம், சந்தை மற்றும் அரசாங்கக் கொள்கைகள்.

## மூலப்பொருட்கள்

தொழிலகங்கள் மூலப்பொருட்கள் கிடைக்கும் இடங்களை பொறுத்து அமைக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, கரும்பாலைகள் மூலப்பொருட்கள் (கரும்பு விளை நிலம்) கிடைக்கும் இடங்களுக்கு அருகிலேயே அமைந்துள்ளன. ஏனெனில் கரும்பு எடை இழக்கும் பொருளாகும். மேலும் கரும்பினை முறைப்படுத்தலின்போது அதன் எடையில் 10 சதவீதம் மட்டுமே சர்க்கரை கிடைக்கிறது.

## எரிசக்தி

பெரும்பாலான தொழிலகங்கள் எரி சக்தி கிடைக்கும் இடங்களுக்கு அருகாமையில் அமைந்துள்ளன. மூலப் பொருட்களைப் முறைப்படுத்துவதற்கு எரிசக்தி தேவைப்படுகிறது. உதாரணமாக பொதுவாக இரும்பு எஃகு ஆலைகள், நிலக்கரி சுரங்கங்களுக்கு அருகில் உள்ளன. ஏனெனில் 1 டன் இரும்புத்தாதுவை உருக்க 5 டன்கள் நிலக்கரி தேவைப்படுகிறது.



தாமோதர் பள்ளத்தாக்கு

## போக்குவரத்து

மூலப்பொருட்களை தொழிலகங்களுக்கும், உற்பத்தியான பொருட்களை சந்தைகளுக்கும் கொண்டு செல்ல போக்குவரத்து ஒரு முக்கியமான காரணியாக செயல்படுகிறது எடுத்துக்காட்டாக, இரும்பு எஃகு ஆலைகள், மற்றும் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் இரயில் நிலையத்திற்கு அருகில் அல்லது துறைமுகத்திற்கு

அருகில் அமைக்கப்படுவதன் காரணம், அவற்றை எடுத்துச் செல்ல போக்குவரத்துச் செலவு அதிக மாகிறது.



எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம்–கொச்சி

## மனித சக்தி

கிடைக்கக்கூடிய திறன்உடைய மற்றும் திறன் அற்ற மனித சக்தி என்பது தொழிற்சாலை அமைவதற்கு ஒரு முக்கிய காரணியாகும். போதுமான அளவு திறன் அற்ற தொழிலாளர்கள் நகர பகுதிகளில் கிடைப்பதற்கு காரணம் கிராம–நகர மக்கள் இடநகர்வு ஆகும். உதாரணமாக மும்பை மற்றும் சென்னை போன்ற நகரங்கள் அருகில் உள்ள கிராமப்பகுதிகளில் இருந்து மனித சக்தியை பெறுகின்றன.

## நீர்வளம்

நீர்வளம் இரும்பு எஃகு நெசவாலைகள், ரேயான் காகிதம் போன்றவற்றிற்கு மிக அவசியமானது. எடுத்துக்காட்டாக 1 டன் எஃகினை குளிரச் செய்ய 300 டன் நீர் தேவையாகிறது. 1 டன் ரேயானுக்கு 100 டன் நீர், வெளுப்பதற்குத் தேவைப்படுகிறது. எனவே மேற்கண்ட தொழிலகங்கள் ஆறுகள், கால்வாய் அல்லது ஏரிகளுக்கு அருகில் அமைந்துள்ளன.

## சந்தை

அதிகத் தேவை மற்றும் வாங்கும் திறன் இரண்டும் சந்தையை நிர்ணயிக்கின்றன. ஆகையால் பெரும்பான்மையான தொழிலகங்கள் நுகர்வோர் அதிகமுள்ள இடங்களில் காணப்படுகின்றன. ஏனெனில் போக்குவரத்து செலவு குறைவது மட்டுமல்லாது மலிவான விலையில் பொருட்கள் கிடைக்கின்றன.

## அரசாங்கக் கொள்கைகள்

பெரும்பாலும் ஒவ்வொரு நாட்டிலும் அதன் அரசாங்க கொள்கைகள் தொழிலகங்கள் அமைவதில் முக்கிய பங்கு ஆற்றுகின்றன. மண்டல வேறுபாடுகளை களைவதற்காக மாநில அரசு குறிப்பிட்ட பகுதிகளில் தொழில் மண்டலங்களாக அடையாளப்படுத்தியுள்ளது. இத்தொழில் மண்டலங்கள் அரசு சலுகைகளை பெறுவதுடன் பின்தங்கிய பகுதிகளில் தொழிலகங்கள் வளர்ச்சி அடையவும் உதவி புரிகின்றன.

சமீபகாலங்களில் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியினால் புவியியல் காரணிகள், மனித வளம் மற்றும் எரிசக்தி தொழில்கள் அமைவிடத்தில் இவற்றின் முக்கியத்துவம் குறைந்துள்ளது. அவ்விடத்தில் புதிய காரணிகளான திறமையான மேலாண்மை, மூலதனம் மற்றும் தரமான ஏற்றுமதி பொருட்கள் ஆகியவை முக்கிய பங்கு வகிக்கின்றன.

## தொழிலகங்களின் வகைப்பாடு

மூலப்பொருட்களை அடிப்படையாகக் கொண்டு தொழிலகங்களை வேளாண் சார்ந்த தொழிலகங்கள், வனப்பொருட்கள் சார்ந்த தொழிலகங்கள் மற்றும் கனிமங்கள் சார்ந்த தொழிலகங்கள் என வகைப்படுத்தலாம்.

## வேளாண் சார்ந்த தொழிலகங்கள்

இவை வேளாண் பொருட்களை மூலப்பொருட்களாக பயன்படுத்துகின்றன. எடுத்துக்காட்டாக, பருத்தியாலைகள், சணல் ஆலைகள் மற்றும் சர்க்கரை ஆலைகளை கூறலாம்.

## பருத்தி ஆலைகள்

பருத்தி ஆலைகள் நம்நாட்டில் விளையும் பருத்தியை மூலப்பொருட்களாக பயன்படுத்துகின்றன. பருத்தியாலைகள் 14 சதவீதம் உற்பத்திப் பொருட்களையும் 35

மில்லியன் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பையும் தேசிய மொத்த உற்பத்தியில் 4 சதவீதத்தையும் வழங்குகிறது.



பருத்தி ஆலை

மகாராஷ்டிரத்திலுள்ள, மும்பை பருத்தி ஆலைகள் முன்னிலை வகிக்கின்றது. மேலும் இது இந்தியாவின் மான்செஸ்டர் என அழைக்கப்படுகிறது.

கீழ்க்கண்ட காரணிகள் மும்பை பருத்தி ஆலைகளுக்கு சாதகமாக உள்ளன.

- துறைமுகத்தின் அமைவிடம் முடிக்கப்பட்ட பொருட்களை ஏற்றுமதி செய்ய ஏதுவாக உள்ளது.
- பருத்தி விளையும் இடங்களுக்கும் ஆலைகளுக்கும் இடையில் தேவையான இரயில் மற்றும் சாலை போக்குவரத்து இணைப்பு உள்ளது.
- நூலிழை தயாரிப்பிற்கு ஈரப்பதம் கொண்ட காலநிலை உதவுகிறது.
- மூலதனப்பொருட்கள் மற்றும் நிதி வசதி எளிதாக கிடைக்கின்றன.
- பணியாட்கள் ஏராளமாக கிடைக்கின்றனர்.

பருத்தியாலைகள் செறிந்து காணப்படும் மாநிலங்கள் மகாராஷ்டிரம், குஜராத், மேற்கு வங்காளம், உத்திர பிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகும். தமிழ் நாட்டில் கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், கரூர், சென்னை, திருநெல்வேலி, தூத்துக்குடி, சேலம் மற்றும் விருதுநகர் ஆகிய இடங்கள் பருத்தியாலை மையங்களாகும்.

உலகில் பருத்தியாடை உற்பத்தி செய்யும் நாடுகளில் இந்தியா மூன்றாம் இடத்தையும், பருத்தியாடை வணிகத்தில் இரண்டாம் இடத்தையும், இந்திய தொழிற்சாலைகளில் முதல் இடத்திலும் உள்ளது.

## சணல் ஆலைகள்

சணல் உற்பத்தி இந்திய நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. இது வேளாண் மற்றும் தொழிற்துறை இரண்டிலும் அதிக அளவில் வேலைவாய்ப்பினை வழங்குகிறது. சுமார் 4 மில்லியன் விவசாயிகள் சணல் பயிரிடுவதில் ஈடுபட்டுள்ளனர். சணல் உற்பத்தியில் இந்தியா முதலிடம் வகிக்கிறது. ஏற்றுமதியில் வங்காளதேசத்திற்கு அடுத்து உள்ளது.



சணல் ஆலை

சணல் பொருட்கள், சணல் பைகள், கூடாரத்துணி, சிப்பப்பைகள், வலைப்பைகள், கோணிப்பைகள் கெட்டியான துணி மற்றும் பல. தற்பொழுது சணல் பிளாஸ்டிக் நாற்காலிகள், மின்கம்பியின் உறைகள், கம்பளியுடன் சணல் சேர்த்து துணிகள் தயாரிப்பதிலும் பயன்படுத்தப்படுகிறது. பருத்தியிழையுடன் சணல் சேர்த்து கம்பளங்கள் மற்றும் விரிப்புகள் தயாரிக்கப்படுகின்றன.

ஏறத்தாழ 90% சணல் ஆலைகள் மேற்கு வங்கத்தில் ஹுக்ளி

ஆற்றங்கரையில் அமைந்துள்ளன. சமீபகாலமாக உத்திரப்பிரதேசம், பீகார் மற்றும் ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் சணல் ஆலைகளின் பரவல் காணப்படுகின்றது.

### சர்க்கரை ஆலைகள்

சர்க்கரை ஆலைகள் இந்தியாவின் இரண்டாவது மிகப் பெரிய தொழிலாகும். சர்க்கரை ஆலைகள் கரும்பு பயிரிடப்படுமிடங்களில் அமைக்கப் படுகின்றன. ஏனெனில்,



சர்க்கரை ஆலை

- கரும்பு எடை இழக்கும் பொருளாகும்,
- கரும்புச்சாற்றில் சுக்ரோஸ் அளவு குறைவதால் அதிக நாட்கள் பாதுகாத்து வைத்திருக்க முடியாது.
- அதிக தூரத்திற்கு எடுத்துச் செல்ல முடியாது.
- கரும்பு அறுவடை மற்றும் சாறு பிழிதல் இரண்டும் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிவதால் மற்ற காலங்களில் சர்க்கரை ஆலை வேலையின்றி இருக்கும்.

இந்தியாவின் சர்க்கரை உற்பத்தியில் 70% சர்க்கரையினை உத்திரபிரதேசம் மற்றும் பீகார் மாநிலங்கள் மட்டுமே உற்பத்தி செய்கின்றன. ஆகையினால் இந்த பகுதி சர்க்கரை மண்டலம் என அழைக்கப்படுகிறது. மகாராஷ்டிரம், பஞ்சாப், ஹரியானா, கர்நாடகா, தமிழ்நாடு மற்றும் ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் சர்க்கரை ஆலைகள் அதிக அளவில் காணப்படுகின்றன.

தமிழ்நாட்டில் நெல்லிக்குப்பம், புகளூர், கோயம்புத்தூர் மற்றும் பாண்டியராஜபுரம் சர்க்கரை உற்பத்திக்கு புகழ் பெற்ற இடங்களாகும்.

இந்திய அரசாங்கம் சர்க்கரை விற்பனையில் இரட்டை விலை முறையைப் பயன்படுத்துகிறது. சர்க்கரை ஆலை தனது உற்பத்தியில் 40% அரசாங்கத்திற்கு நிர்ணயித்த விலையில் தர வேண்டும். இதனை அரசாங்கம் நியாய விலைக்கடைகள் மூலம் விநியோகிக்கிறது. மீதி 60% சர்க்கரை உற்பத்தியை ஆலை சந்தைகளில் அதிக விலையில் விற்கின்றது.

சர்க்கரை உற்பத்தியில் உலகில் இந்தியா நான்காவது இடத்தில் உள்ளது. மற்ற மூன்று நாடுகள், கியூபா, பிரேசில் மற்றும் ரஷ்யா. இந்தியா உபரி சர்க்கரையை அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஐக்கிய அரசு, இந்தோனேசியா, மலேசியா, ஈரான் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது.

### வனப் பொருட்கள் சார்ந்த தொழிலகங்கள்

இந்தியா வனவளம் நிறைந்த நாடாகும். இவ்வனப் பொருட்களை மூலப் பொருட்களாகப் பயன்படுத்தும் ஏராளமான தொழிலகங்கள் உள்ளன. அவற்றுள் காகித ஆலைகள் மிக முக்கியமானதாகும்.


### காகித ஆலை



காகித ஆலை

காகித ஆலை எல்லா நாட்டிற்கும் மிகத் தேவையான ஒரு தொழிலகம் ஆகும். இது மரக்கூழ், மூங்கில் மற்றும் சாபாய் புற்கள், உபயோகிக்கப்பட்ட காகிதங்கள்,

## இந்தியாவிலுள்ள முக்கிய பருத்தி ஆலைகள்



கரும்புச்சக்கை போன்றவற்றை மூலப்பொருட்களாகப் பயன்படுத்துகிறது. இதன் அமைவிடம் கனமான மூலப்பொருட்களை அதிக அளவிலும் சந்தையை மிகக் குறைந்த அளவிலும் சார்ந்துள்ளது.


இந்தியா காகித உற்பத்தியில் உலகின் 15 நாடுகளில் ஒன்றாக உள்ளது. காகித உற்பத்தியில் முன்னணியில் உள்ள மாநிலங்கள் மேற்கு வங்காளம், மகாராஷ்டிரம், மத்தியபிரதேசம் கர்நாடகா மற்றும் ஆந்திரப்பிரதேசம் ஆகும்.

### கனிம வளம் சார்ந்த தொழிலகங்கள்

கனிம வளம் சார்ந்த தொழிலகங்கள் உலோக மற்றும் உலோகமற்ற பொருட்களை மூலப்பொருட்களாக பயன்படுத்துகின்றன. கனிம வளம் சார்ந்த தொழிலகங்களில் முக்கியமானது இரும்பு எஃகு தொழிலகங்கள் ஆகும்.

### இரும்பு எஃகு தொழிலகங்கள் அமைவிடங்கள்

இந்தியாவில் முக்கியமான இரும்பு எஃகு தொழிலகங்கள் நிலக்கரி சுரங்கங்களுக்கு அருகிலோ அல்லது இரும்புத்தாது வெட்டியெடுக்கப்படும் இடங்களுக்கு அருகிலோ அல்லது இரண்டிற்கும் இடையிலோ அமைந்துள்ளன. பெரும்பாலான இரும்பு எஃகு தொழிலகங்கள் சோடாநாகபுரி பீடபூமி பகுதியில் அமைந்துள்ளன.



இரும்பு உருக்காலை

சோடாநாகபுரி வட்டாரத்தில், நம் நாட்டின் பெரும்பாலான இரும்பு எஃகு தொழிலகங்கள் காணப்படுகின்றன என்பதை விளக்குகின்றது.

உயர்தர இரும்புத்தாது ஜார்கண்ட், பீகார், ஒரிசா, மத்தியபிரதேசம், சட்டீஸ்கர் மற்றும் கர்நாடகா மாநிலங்களிலிருந்து பெறப்படுகிறது.

ஜார்கண்டில் ஜாரியா, சிங்பும், மேற்கு வங்கத்தில் ராணிகஞ்ச் ஆகிய இடங்களில் தரமான நிலக்கரி ஏராளமாகக் கிடைப்பதால் உயர்ரக எஃகு உற்பத்திக்கு ஏதுவாக உள்ளது.

உலோகத்தை எளிதில் உருக்கக் கூடிய இளக்கி மேற்கு வங்கம் மற்றும் ஜார்கண்ட் மாநிலங்களில் கிடைக்கிறது.

ராஞ்சியின் சுண்ணாம்புக்கல், ஜபல்பூர் மற்றும் தன்பாத்தின் சிலிக்கா, மத்திய பிரதேசத்தின் டாலமைட், பீகாரின் குவார்ட்ஸ் சுரங்கங்கள் அனைத்தும் அருகிலேயே அமைந்துள்ளன.

### இரும்பு எஃகு தொழிலகங்களின் பரவல்

இந்தியாவில்11 ஒருங்கிணைக்கப்பட்ட எஃகு தொழிலகங்களும் 150 சிறிய எஃகு ஆலைகளும் அதிக எண்ணிக்கையில் சிறிய உருளை ஆலைகளும் இருக்கின்றன.




இரும்பு தொழிலகம்

### 1.டாடா இரும்பு எஃகு தொழிலகம் (TISCO)

1907ஆம் ஆண்டில் டாடா இரும்பு எஃகு கம்பெனி ஜாம்ஷெட்பூரில் தொடங்கப்பட்டது. தற்பொழுது இது டாடா எஃகு குழுமம் (TSL) என அழைக்கப்படுகிறது.

இது, இந்தியாவில் பழமையான பெரிய ஒருங்கிணைந்த இரும்பு எஃகு

# இரும்பு எஃகு தொழிலகம்



ஆலையாகும். டாடா எஃகு நிறுவனம் உலகின் இரும்பு எஃகு உற்பத்தியில் பத்தாவது இடத்தை வகிக்கிறது.

**2. இந்திய இரும்பு எஃகு குழுமம் (IISCO)**

குல்டி, பான்பூர் மற்றும் ஹிராபூர் எஃகு ஆலைகள் ஒருங்கிணைக்கப்பட்டு இந்திய இரும்பு எஃகு நிறுவனம் 1919ஆம் ஆண்டு பர்ன்பூரில் அமைக்கப்பட்டது. இது ஒருங்கிணைக்கப்பட்ட குழுமமாகும். இந்த குழுமம் 1972ல் தேசியமயமாக்கப்பட்டு இந்திய எஃகு ஆணையத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. (SAIL - STEEL AUTHORITY OF INDIA LTD) இது எஃகு மற்றும் இரும்பினை தயாரிக்கிறது.

**3. விஸ்வேஸ்வரையா இரும்பு எஃகு நிறுவனம் (VISL)**

1923ஆம் ஆண்டு (மைசூர் எஃகு நிறுவனம்) விஸ்வேஸ்வரையா இரும்பு எஃகு நிறுவனம் தொடங்கப்பட்டது. கர்நாடகாவிலுள்ள ஷிமோகா மாவட்டத்தின் பத்ராவதி என்ற இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் முக்கியமான உற்பத்தி பொருட்கள் உலோகக்கலவை மற்றும் உயர்தர எஃகு ஆகும்.

**4.அ) இந்துஸ்தான் எஃகு நிறுவனம் – பிலாய் (HSL)**

சட்டீஸ்கர் மாநிலத்தில் துர்க் மாவட்டத்தில் பிலாய் என்ற இடத்தில் 1959ஆம் ஆண்டு பிலாய் நிறுவனம் தொடங்கப்பட்டது. உலகில் அதி நவீனமான கட்டுமான பொருட்கள் ரயில் தளவாடங்கள் இங்கு அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. கப்பல் கட்டுவதற்குத் தேவையான எஃகுத் தகடுகள் இங்கு தயாரிக்கப்படுகின்றன.

**4.ஆ) இந்துஸ்தான் எஃகு நிறுவனம் – ரூர்கேலா (HSL)**

இந்த நிறுவனம் 1959ஆம் ஆண்டு ஒரிசாவில் உள்ள சுந்தர்கார்க் மாவட்டத்தில் ரூர்கேலா என்னுமிடத்தில் தொடங்கப்பட்டது. சூடேற்றிய மற்றும் குளிரச் செய்த எஃகு உருளைகள், மின்முலாம் பூசப்பட்ட தகடுகள் மற்றும் மின் எஃகுத் தகடுகள் இங்கு அதிகமாக தயார் செய்யப்படுகின்றன.

துர்க்காப்பூர் எஃகு நிறுவனம் மேற்கு வங்கம் வர்தமான் மாவட்டத்தில் 1959–ல் அமைக்கப்பட்டது. 1962ல் இது உற்பத்

உயர்த்தப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட நவீன இரும்பு எஃகு தொழிலகமாகும். இது ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட எஃகு தொழிலகமாகும்.

### சிறிய எஃகு தொழிலகங்கள்

இவை பரவலாக காணப்படுகின்ற இரண்டாம் நிலை சிறிய தொழிலகங்களாகும். இவை 10,000 டன்களிலிருந்து 5 லட்சம் டன்கள் வரை தயாரிக்கின்றன. இவைகள் மின் உலைகளைப் பயன்படுத்தி கழிவு மற்றும் பழைய இரும்பை மூலப் பொருட்களாக பயன்படுத்துகின்றன. இரும்பினை மறு சுழற்சிக்கு பயன்படுத்துவதன் மூலம் கழிவுப் பொருட்களை பயனுடையதாகவும், இலாபகரமாகவும் மாற்ற உதவி புரிகின்றன.

மித எஃகு (MILD STEEL), உலோகக்கலவை மற்றும் கருக்காத எஃகு தயாரிக்கின்றன. ஏறத்தாழ 150 சிறு நிறுவனங்கள் 120 லட்சம் டன் எஃகினை வருடத்திற்கு உற்பத்தி செய்கின்றன. பெரும்பான்மையான சிறு நிறுவனங்கள் பெரிய நிறுவனங்களின் அமைவிடத்திலிருந்து வெகு தொலைவில் உள்ளன. ஆகையால் உள்ளூர் தேவைகளை எளிதாக பூர்த்தி செய்ய இயலும். மேலும் இவற்றிற்கு குறைந்த அளவு மூலதனம் தேவைப்படுவதால் இந்திய பொருளாதாரத்திற்கு ஏற்றவை. இத்தொழில் நடத்துவதற்கு குறைந்த அளவு இடமே போதுமானதாகும். ஆகவே இவற்றை நகரங்களில் வசதியாக அமைக்கப்படுகின்றன.

### வாகனத் தொழிலகம்

இந்தியா சுதந்திரமடைந்த பின் வாகன தொழிலகங்கள் வளர்ச்சி அடையத் தொடங்கின. முதல் வாகனத்தொழிலகம் 1947ஆம் ஆண்டு குர்லாவில்(மும்பை) பிரிமியர் ஆட்டோமொபைல் என்ற பெயரில் தொடங்கப்பட்டது. 1948ஆம் ஆண்டு இந்துஸ்தான் மோட்டார் நிறுவனம் உத்தரபாரா (கொல்கத்தா)வில் நிறுவப்பட்டது. வாகன தொழிலகம் கடந்த 30 ஆண்டுகளில் அசுர வளர்ச்சி அடைந்துள்ளது. வணிக வாகனங்கள், பயணிகள் வாகனம், இரு சக்கர மற்றும் மூன்று சக்கர வாகனங்கள் தயாரிக்கப்படுகின்றன.



வாகன தொழிலகம்


வாகன உற்பத்தி செய்யும் மையங்கள் மும்பை, சென்னை, கொல்கத்தா, டெல்லி, புனே, அகமதாபாத், லக்னோ, சதாரா மற்றும் மைசூர்.

பொருளாதார தாராளமயமாக்கல் கொள்கையினால் பல்வேறு வெளிநாட்டு முதலீட்டாளர்களின் கூட்டமைப்பில் வாகனத் தயாரிப்புத் துறையில் ஈடுபட்டுள்ளனர். உலகப் புகழ்பெற்ற நிறுவனங்களான சுசுகி, ஜெனரல் மோட்டார்ஸ், ஃபோர்டு, மிட்சுபிஷி, ஹோண்டா, தேவு, மெர்ஸிடஸ், நிஸான், மகிந்திரா மற்றும் மகிந்திரா, மில்லினியம் மோட்டார்ஸ் போன்றவைகளும் வாகன உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன.

### மின்னியல் தொழிலகம்

மின்னியல் தொழிலகம் முதன் முதலாக 1850ஆம் ஆண்டில் வானொலி தயாரிப்பை ஆரம்பித்தது. 1950ஆம் ஆண்டு இந்திய தொலைபேசி நிறுவனம் பெங்களூருவில் ஆரம்பித்த பின், இத் தொழிலகம் புத்துணர்வு பெற்றது. இத்தொழிலகம் அஞ்சல், தொலைபேசி, பாதுகாப்பு, இரயில் போக்குவரத்து, மின்சாரம், வானிலை ஆராய்ச்சி போன்றவற்றிற்கு தேவையான பொருட்களைத் தயாரிக்கிறது. மின்னியல் பொருட்கள் தயாரிப்பில் பெங்களூரு முதலிடம் வகிக்கிறது. ஆகையால்

பெங்களூரு மின்னியல் தலைநகரம் என்றழைக்கப்படுகிறது. மின்னியல் தொழிலகங்கள் காணப்படும் நகரங்கள் ஹைதராபாத், டெல்லி, மும்பை, சென்னை, கொல்கத்தா, கான்பூர், புனே, லக்னோ, ஜெய்ப்பூர் மற்றும் கோயம்புத்தூர்.



மின்னியல் பொருட்கள்

மின்னியல் தொழிலில் ஏற்பட்டுள்ள புரட்சி மக்களின் வாழ்க்கை முறையை பெரிய அளவில் மாற்றியமைத்துள்ளது. பிரபலமான மின்னியல் பொருட்கள் தொலைக்காட்சி, டிரான்சிஸ்ட்டர், தொலைபேசி, கைபேசி, கணினி, குறுவட்டு இயக்குபொறி, ஐ–பாட், பென் டிரைவ் மற்றும் பல.

### மென்பொருள் தொழிலகம்

மென்பொருள் தொழிலகம் இந்தியப் பொருளாதாரத்தில் முக்கிய தொழிலகமாக தோன்றி, வளர்ந்து வருகின்றது. நம்நாட்டில் குறைந்த ஊதியத்திற்கு கிடைக்கும் திறன்மிகு இளம் பொறியியல் வல்லுநர்கள் இத்தொழிலகம் வேகமாக வளர காரணமாகும்.

மின்னியல் துறை நாட்டின் பல்வேறு பகுதிகளில் மின்னியல் பூங்காக்களை நிறுவி வருகின்றது. முக்கிய மையங்களாவன சென்னை, கோயம்புத்தூர், திருவனந்தபுரம், பெங்களூரு, மைசூர், ஹைதராபாத், விசாகப்பட்டினம், மும்பை, புனே, புவனேஸ்வர், இந்தூர், காந்திநகர், ஜெய்ப்பூர், கொல்கத்தா, நொய்டா, மொகாலி மற்றும் ஸ்ரீநகர். தற்சமயம் 500க்கும் மேற்பட்ட மென்பொருள் நிறுவனங்கள் நம்நாட்டில் உள்ளன. இது 2011ல் 6 மில்லியன் மக்களுக்கு வேலைவாய்ப்பையும் இந்திய தேசிய வருமானத்தில் 97 சதவீதத்தையும் உற்பத்தி செய்யக்கூடும் என எதிர் பார்க்கப்படுகிறது. இப்பொழுது மென்பொருள் தொழிலகம் மென்பொருள் மற்றும் சேவையை கிட்டத்தட்ட உலகமெங்கிலும் உள்ள 95 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது. இந்திய அரசாங்கம் மென்பொருள் தொழிலக வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது.



தகவல் தொழில்நுட்ப பூங்கா

தொழிலக வளர்ச்சி, நகரமயமாதல் மற்றும் மக்கள் தொகை வளர்ச்சி, இயற்கை வளங்களின் அதிக நுகர்வு ஆகியன ஏற்கனவே புவியின் இயற்கை வளங்களின் பயன்பாட்டுத் திறனைக் கடந்து தாக்கத்தை ஏற்படுத்திவிட்டது. சந்தேகமின்றி நவீன மனிதனை அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி நம் வாழ்வினை முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் செல்கிறது. எல்லையில்லா வசதிகளையும், அனைத்தையும் எளிதாகப் பெறவும் வகை செய்துள்ளது. ஆனால் வளர்ச்சி என்ற பெயரில் நாம் வாழ்வாதாரமான இயற்கை வளங்களை அழித்து வருகின்றோம். இயற்கை வளங்கள் முற்றிலும் அழிந்து விடும் முன்னர், தீங்கு விளைவிக்கும் தொழில் நுட்பத்திலிருந்து சூழலுக்கு உகந்த தொழில்நுட்பத்திற்கு மாறுவதன் மூலம் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கலாம்.

மென்பொருள்
தொழில்நுட்ப பூங்கா



## பயிற்சி

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

1. பருத்தியாலை ஒரு________.
   அ) வேளாண்சார்ந்த தொழிலகம் ஆ) கனிமம் சார்ந்த தொழிலகம்
   இ) வனப்பொருள் சார்ந்த தொழிலகம் ஈ) மென் பொருள் தொழிலகம்
2. இந்தியாவின் மான்செஸ்டர் என்றழைக்கப்படுவது ________.
   அ) டெல்லி ஆ) சென்னை இ) மும்பை ஈ)கொல்கத்தா
3. டாடா எஃகு நிறுவனம் அமைந்துள்ள இடம் ________.
   அ) துர்காபூர் ஆ) பர்ன்பூர் இ) ஜாம்ஷெட்பூர் ஈ) பிலாய்
4. சோடாநாகபுரி பீடபூமி ________ வளத்திற்கு புகழ்பெற்றது.
   அ) இயற்கைத்தாவரம் ஆ) கனிமவளம் இ) வண்டல் மண் ஈ) பருத்தி
5. மின்னியல் தலைநகரம் என அழைக்கப்படுவது________.
   அ) கான்பூர் ஆ) கோயம்புத்தூர் இ) பெங்களூரு ஈ) மதுரை

### ஆ. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. | சணல் தொழிலகம் | உத்திரபிரதேசம் |
| 2. | வாகன தொழிலகம் | கர்நாடகா |
| 3. | மென்பொருள் தொழிலகம் | மேற்கு வங்கம் |
| 4. | இரும்புஎஃகு தொழிலகம் | தமிழ்நாடு |
| 5. | சர்க்கரை தொழிலகம் | சோட்டாநாகபுரி மண்டலம் |
| | | அஸ்ஸாம் |
| | | ராஜஸ்தான் |

### இ. வேறுபடுத்துக.

1. வேளாண்சார்ந்த மற்றும் கனிமம் சார்ந்த தொழிலகங்கள் – வேறுபடுத்துக.

### ஈ. சுருக்கமான விடையளிக்கவும்.

1. உற்பத்தி என்றால் என்ன ?
2. சணல் பொருள்கள் யாவை ?
3. தொழில் அமைவிடத்தை நிர்ணயிக்கும் காரணிகள் யாவை ?
4. வேளாண் சார்ந்த தொழிலகங்கள் யாவை ?

### உ. ஒரு பத்தியில் விடையளி.

1. இந்தியாவின் இரும்பு எஃகு தொழிலகங்களை விவரி.
2. மும்பை இந்தியாவின் மான்செஸ்டர் என்றழைக்கக் காரணம் என்ன ?

3. இந்தியாவின் சர்க்கரை ஆலைகள் பற்றி விவரி.
4. வாகனத்தொழிலகங்கள் அல்லது மென்பொருள் தொழிலகங்கள் பற்றி விவரி.

### ஊ. இந்திய வரைபடத்தில் கீழ்கண்டவற்றை குறிக்கவும்.


1. முக்கிய இரும்பு எஃகு தொழிலகங்கள்
2. மென்பொருள் தொழிலகங்கள்
3. பருத்தியாலைகள்
4. சணல் ஆலைகள்
5. சர்க்கரை ஆலைகள்

### எ. செயல்முறை பயிற்சி.

ஏதாவது ஒரு வேளாண் / கனிமம் சார்ந்த தொழிலகத்தை நிர்ணயிக்கும் காரணிகளை பட்டியலிடுக.

# 6. சுற்றுச்சூழல் பிரச்சினைகள்

சுற்றுச் சூழல் எனும் சொல் பொதுவாக இயற்சூழினை விவரிக்கும் சொல்லாகும். இயற்சூழ் எனப்படுவது நம்மைச் சுற்றியுள்ள ஒட்டுமொத்த உயிருள்ள மற்றும் உயிரற்ற கூறுகளை குறிப்பதாகும்.



இயற்கை சுற்றுச்சூழல்

## சுற்றுச்சூழல் யாருடையது ?

சுற்றுச்சூழல் அனைவருக்கும் சொந்தமானது. ஒவ்வொருவரின் தேவையை பூர்த்தி செய்யக்கூடியதே அன்றி ஒவ்வொரு மனிதனின் பேராசைகளை அல்ல. பெருகி வரும் பேராசை நம்மை மிகவும் கடினமான சூழலுக்கு வெவ்வேறு பிரச்சனைகளாக கொண்டு செல்கிறது. அதிவேகமான மக்கள் தொகை வளர்ச்சி, தொழில்மயமாதல் ஆகிய இரண்டும் பிரச்சனைகளுக்கு காரணமாய் உள்ளன. 1947ல் 300 மில்லியன் என இருந்த மக்கள் தொகை தற்பொழுது 1000 மில்லியனையும்விட அதிகமாகி உள்ளது. இத்தகைய பிரச்சனைகள் சுற்றுச் சூழலில் அழிவு, மாசடைதல் மற்றும் காலநிலை மாற்றம் என நேரடி தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. உலகம் முழுவதும் இந்த சேதத்தைச் சீர் செய்வதில் ஆர்வம் கொண்டுள்ளது. சுற்றுச்சூழல் மேம்பாடு சம்பந்தப்பட்ட அச்சுறுத்தும் கருத்துக்களை விரிவாக ஆராய்வோம்.

## சுற்றுச்சூழல் மாசடைதல்

சுற்றுச்சூழல் மாசடைதல் என்பது சுற்றுச்சூழல் பாதிப்பு அடைதல் ஆகும். இதன் காரணமாக வசதியின்மை, நிலையற்ற ஒழுங்கற்ற தன்மை ஏற்படுவதுடன் இவை தீங்கு விளைவிக்ககூடிய தாக்கங்களை, நமது புவியியற்தொகுதியிலும் மற்றும் வாழும் உயிரினங்களுக்கு இடையேயும் ஏற்படுத்துகிறது.

மாசடைதல் வேதியியல் பொருட்களோ அல்லது சப்தம், வெப்பம் மற்றும் ஒளி ஆற்றல் மூலமாகவோ ஏற்படலாம். இம்மாசு சூழலில் உள்ள சூழலையே பாதிப்புக்கு உள்ளாக்குகிறது. அவற்றுள் சில

1. காற்று மாசடைதல்
2. நீர் மாசடைதல்
3. நிலம் மாசடைதல்
4. ஒலியினால் ஏற்படும் மாசு
5. உயிரி–மருத்துவ கழிவுகளால் ஏற்படும் மாசுக்கள்
6. மின்னியல் கழிவுகளால் ஏற்படும் மாசடைதல்
7. சுரங்கம் தோண்டுவதால் ஏற்படும் மாசடைதல்

## 1. காற்று மாசடைதல்

தீங்கு விளைவிக்கக்கூடிய பொருள்கள் வெளியிடப்படுவதால் காற்று மாசடைகிறது. இது காலங்காலமாக இருந்து வருகிறது. இது மக்களின் நலவாழ்வினைப் பாதிக்கிறது. ஒவ்வொருநாளும் மனிதன் சராசரியாக 20,000 லிட்டர் காற்றை சுவாசிக்கிறான். ஒவ்வொரு முறையும் மாசடைந்த காற்றையே சுவாசிக்கிறான். தீங்கு விளைவிக்கக்கூடியவை வாயுக்களாகவோ அல்லது நுண்பொருட்களாகவோ இருக்கலாம்.

காற்றிலுள்ள மாசுக்கள் இயற்கையாலும் மற்றும் மனிதர்களாலும் உண்டாக்கப்படுகின்றன. இயற்கையில் காற்று மாசடைதல் அதிக அளவில் கிடையாது. மேலும் இவை குறைவான பாதிப்புகளையே மனிதர்களின் ஆரோக்கியதற்கும், சுற்றுச் சூழல் அமைப்பிற்கும் ஏற்படுத்துகிறது.

எரிமலை வெடிப்பு, காற்றரிப்பு, மகரந்தப் பரவல், உயிரிகளின் கூட்டுப் பொருள்கள் ஆவியாதலால் உண்டாகும் வாயு மற்றும் அணுக்கதிர்வீச்சு போன்றவைகளால் காற்று மாசடைகிறது. இயற்கையினால் மாசடையும் காற்று அதிக பாதிப்பை உண்டாக்குவதில்லை.

சமீபத்தில் ஹெலன் எரிமலை வெடிப்பில் வெளியேற்றிய புகை, ஒரு அனல் மின் நிலையம் ஒரு ஆண்டில் வெளியேற்றம் செய்யப்படும் புகை அளவு இருந்தது.

வாகனங்களிலிருந்து வெளியேறும் கார்பன், அனல் மின் நிலையங்களிலிருந்து வெளியேறும் கார்பன் புகை, தொழிலகங்கள் மற்றும் சுத்திகரிப்பு ஆலைகளிலிருந்து வெளியேறும் கார்பன் இவையனைத்தும் மனிதர்களால் ஏற்படுத்தப்படும் காற்று மாசடைதலாகும்.

காற்று மாசடைதலுக்கு 70 சதவீதம் வாகனங்கள் வெளியேற்றும் புகையே காரணம். வாகனங்கள் சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கா வண்ணம் அமைதல் வேண்டும். இதற்கு பாரத் II மற்றும் III தரச்சான்று அளிக்கப்படுகிறது.

பாரத் நிலை I – IV வாகனப்புகை நிலை விதிகள் தானியங்கி வாகனங்களிலிருந்து வெளியேறும் மாசுக்கள் மற்றும் மற்றைய வாகனங்களில் இருந்து வெளியேறும் மாசுக்களை ஒழுங்குபடுத்துவதில் கவனம் செலுத்துகிறது.

நிலக்கரியைப் பயன்படுத்தும் மின் நிலையங்களிலிருந்து கந்தக–டை–ஆக்ஸைடு வெளியேறுகிறது. மோட்டார் வாகனங்களிலிருந்து நைட்ரஜன் ஆக்ஸைடு வெளியாகுகிறது. கீழே கொடுக்கப்பட்டுள்ளவை முக்கிய காற்று மாசுக்களாகும். கந்தக–டை–ஆக்ஸைடு, நைட்ரஜன் ஆக்ஸைடு, கார்பன் மோனோ ஆக்ஸைடு மற்றும் அங்கக வேதியியல் பொருட்கள் ஆவியாதல் மூலம் வளிமண்டலத்தில் நுழைகின்றன. கார்பன் புகை அதிக அளவில் வெளியேற்றும் நாடுகளில் இந்தியா 5வது இடத்தில் உள்ளது.

உலகில் நிகழ்ந்த தொழிலக பேரழிவில், 1984ஆம் ஆண்டு டிசம்பர் போபால் வாயுக் கசிவு மிக மோசமான வருந்தத்தக்க நிகழ்வாகும். இதில் 8000 மக்கள் உயிரிழந்தனர்.



காற்று மாசடைதல்

காற்றில் உள்ள மாசுக்களை சுவாசிப்பதன் மூலம் மனிதர்களுக்கு தீங்கு விளைவிக்கிறது. அத்துடன் நீர், உணவு மற்றும் தோல் மூலம் ஊடுருவி தொற்றுநோயை உண்டாக்குகிறது. காற்றில் உள்ள மாசுக்கள் இரத்தக்குழாய் மற்றும் மூச்சுக்குழல் மூலம் உள்ளே நுழைந்து மனிதர்களுக்கு சுவாசக் கோளாறு, நுரையீரல்நோய், ஒவ்வாமை இதயநோய் போன்றவற்றிற்கு காரணமாகிறது.

**மாசுக் காற்றினால் ஏற்படும் தீமைகள்**
**ஓசோன் அடுக்கு சீரழிவு**

ஓசோன், வளிமண்டலத்தில் புவியின் மேற்பரப்பிலிருந்து 24–40கி.மீ. உயரத்திற்கு மெல்லிய படலமாகக் காணப்படும். ஓசோன் படலம் தீமை விளைவிக்கும் சூரியனின் புற ஊதாக்கதிர்களைக் கிரகிக்கிறது. ஓசோன்

படலத்தை குளிர்சாதனப் பொருட்களில் பயன்படுத்தும் குளோரோ புளுரோ கார்பன் சேதப்படுத்தி வருகிறது.

அண்டார்டிக்கா கண்டத்திலுள்ள ஓசோன் கண்காணிப்பு நிலையங்கள் சராசரியாக 30% – 40% ஓசோன் அளவு இழந்துள்ளதாக கண்டறிந்துள்ளன. 1% ஓசோன் இழப்பு 2% சதவீத புற ஊதாக்கதிர் வீசலுக்குக் காரணமாகிறது. இதன் காரணமாக நோய் எதிர்ப்பு சக்தி குறைவு, கண்நோய் மற்றும் தோல் புற்றுநோய் ஏற்படுகின்றன.

## உலக வெப்பமயமாதல்

பசுமை வீடு வாயுக்கள் என அழைக்கப்படும் கார்பன்டை ஆக்ஸைடு, மீத்தேன், நீராவி, குளோரோ புளுரோ கார்பன் போன்றவற்றால் வளிமண்டலத்தில் வெப்பதேக்கம் ஏற்படுகிறது. அதிகரித்துக் கொண்டு வரும் வெப்பத்தால் உலகில் பருவ மாற்றங்கள் ஏற்படுகின்றன.



உலக வெப்பமயமாதல்

வெப்பம் அதிகரிப்பு, துருவங்களிலுள்ள பனியை உருகச் செய்கிறது. இதனால் கடல் மட்டம் உயருகிறது. கடல் மட்டம் உயர்வதால் கடற்கரையோரங்களில் நிலப்பயன்பாடு மாறுகிறது. கடற்கரை அமைப்பு, துறைமுக வசதி மற்றும் நீர்மேலாண்மை ஆகிய வற்றிற்கு ஆபத்தை ஏற்படுத்துகிறது. உலகவெப்பமயமாதல் வேளாண்மையைப் பாதிக்கிறது.

## அமில மழை

அமில மழை 1852 ல் முதன் முதலில் அமிலமழை கண்டறியப்பட்டது. வாகனங்களிலிருந்தும், நிலக்கரி எரிக்கப்படுதல் மூலமாகவும் வெளியேறும் கண்ணுக்குத் தெரியாத வாயுக்கள் மூலம் அமில மழை ஏற்படுகிறது. இது மிகப்பெரிய சுற்றுச் சூழல் பிரச்சினையாகும்.

அமிலமழைக்குக் காரணமான வாயுக்கள் கந்தக–டை–ஆக்ஸைடு மற்றும் நைட்ரஜன் ஆக்ஸைடு ஆகும். இவை நீராவியோடு சேர்ந்து ஆக்ஸிஜன் மற்றும் சூரிய ஒளியால் நீர்த்த கந்தக மற்றும் நைட்ரிக் அமிலமாக மாறுகிறது. இந்தக் கலவை மழையாகும்போது அமில மழை எனப்படுகிறது. தீ மற்றும் பொருள்கள் அழுகுவதால் ஏற்படும் வாயுக்கள் இயற்கை காரணிகளாகும். இவை காற்றில் நைட்ரஜன் ஆக்ஸைடை அதிகரிக்கச் செய்கின்றன.

அமில மழையால் இயற்தொகுதியில் ஏற்படும் பாதிப்புகள் பின்வருமாறு,

அமில மழையினால் கடலிலுள்ள மிக நுண்ணிய உயிரிகளான பிளாங்டன் உயிர்வாழ இயலாது. மீன் உணவான பிளாங்டன் இல்லாவிட்டால் கடல்வாழ் உயிரினங்கள் பாதிக்கப்படும். மேலும் உணவுச் சங்கிலியும் பாதிக்கப்படும்.

கடல்வெப்பம் அதிகரித்தால் பவளப் பாறைகளின் வளர்ச்சி பாதிக்கப்படும். பவளப் பாறைகள் கடல்நீரிலுள்ள கார்பனை சுண்ணாம்புக் கட்டுகளாக மாற்றி கார்பனின் அளவை கட்டுப் பாட்டிற்குள் வைத்திருக்கின்றன. மேலும் $10^{\circ}$செல்சியஸ் வெப்பத்திற்கு மேல்தான் முருகைகள் வளர்கின்றன.

மற்ற இயற்தொகுதிகளான காடுகள் மற்றும் பாலைவனங்களும் அமில மழையால் பாதிக்கப்படுகின்றன. உயிரினபன்மை இழப்பு மற்றும் இனமறைவுகள் இதனால் ஏற்படுகின்றன.

மண்ணில் அமில மழை விழும்போது மண்ணின் சத்து அரிக்கப்படுகிறது.

இவ்வாறு இது இயற்கை தாவரங்களையும் பாதிக்கின்றன.

மாண்ட்ரியல் மற்றும் வியன்னாவில் 30 நாடுகள் பங்கேற்ற கூட்டத்தில் குளோரா ஃபுளுரோ கார்பன் பயன்பாட்டினைக் குறைத்து ஓசோன் படலத்தை பாதுகாப்பது என்ற முடிவு எடுக்கப்பட்டது.

அனைத்து வகை மழைப் பொழிவிலும் அமிலம் கலப்பதால் அவை, இயற்கை மற்றும் மனிதர்களால் உருவாக்கப்பட்ட அனைத்திலும் பாதிப்பை ஏற்படுத்தி அழித்துவிடுகிறது.

தீங்கு விளைவிக்கும் வாயுக்கள் மழைநீரோடு பூமிக்கு வரும்போது கடல்நீர், ஏரிகள், ஓடைகள் ஆகியவற்றில் அமிலத்தன்மை அதிகமாகி விடுகிறது. இது நீர்வாழ் உயிரினங்களைப் பாதிக்கிறது. கடலில் அமிலமழைப் பொழிவின் காரணமாக இலட்சத்தீவு மற்றும் அந்தமான் தீவுகளிலுள்ள 70% பளவப்பாறைகள் அழிந்து விட்டன. காடுகளில் மேல் அமில மழைபொழியும் போது காடுகள் பாதிக்கப் படுகின்றன.

### அமில மழையை கட்டுப்படுத்த மேற்கொள்ளும் நடவடிக்கைகள்

கந்தகத்தை சுத்திகரிக்கும் இயந்திரங்களை தொழிலகங்களில் நிறுவுவதன் மூலமும், நிலக்கரியைப் பயன் படுத்த புதிய வழிமுறைகள் கண்டறிவதன் மூலம் அமில மழையைக் குறைக்கலாம் என சூழியல் வல்லுநர்கள் கருதுகின்றனர்.

எரிசக்தியினை குறைவாக பயன் படுத்துவதன் மூலம் கழிவினைக் குறைக்கலாம். தீங்கு விளைவிக்காத எரிசக்தி உற்பத்திக்கு மாறலாம்.

### நச்சுப்புகை (Smog)

புகையும், மூடுபனியும் கலந்த கலவையே நச்சுப்புகை எனப்படும். இது புகை மட்டும் இருட்டான வளிமண்டலத்திற்கு காரணமாகும். பார்வைக் குறைவான மற்றும் மந்தமான சூழ்நிலையை உருவாக்கும்.

இது பல காரணங்களால் உருவாகிறது. வாகனப்புகை, தீ, கழிவுமேலாண்மை, எண்ணெய் உற்பத்தி, தொழிற்சாலை கழிவு, வர்ணக்கலவை மற்றும் வர்ணப்பூச்சு ஆகியன முக்கிய காரணிகளாகும். நச்சுப்புகையில் உள்ள மாசுக்கள் கார்பன் மோனாக்ஸைடு, தூசு, அழுக்குத் துகள், ஓசோன் போன்றவை. சூரிய ஒளியில் ஹைடிரோகார்பன் மற்றும் நைட்ரஜன் ஆக்ஸைடை சேர்வதால் இது உருவாகிறது.



நச்சுப்புகை

நச்சுப்புகையினால் (Smog) நுரையீரல் நோய் மற்றும் நிமோனியா ஏற்படுகிறது. நச்சுப்புகை நகரங்களுக்கு மட்டும் பிரச்சனை அல்ல. காற்றினால் மற்ற பகுதிகளுக்கும் எடுத்துச் செல்லப் படுகிறது. நச்சுப்புகையினால் வேளாண்மையும் பாதிக்கப்படுகிறது.

### காற்று மாசடைதலை எவ்வாறு குறைக்கலாம்?

1. வாகனங்களைப் பயன்படுத்தாமல் அருகிலுள்ள கடைகளுக்கு நடந்து செல்லலாம்.

2. முடிந்த போதெல்லாம் மிதிசக்கர வண்டியைப் பயன்படுத்தலாம்.

3. அரசு போக்குவரத்துக்களைப் பயன்படுத்தலாம்

4. பள்ளிக்குச் செல்ல பள்ளி வாகனத்தை மாணவர்கள் பயன்படுத்தலாம்.

5. அலுவலகம் செல்ல மற்றும் திரும்ப குழுவினரோடு ஒரே காரில் செல்லலாம்.

6. ஏரோசோல் (AEROSOL) பயன்பாட்டினைக் குறைக்கலாம்.

7. வீட்டைச்சுற்றி மரங்களை வளர்க்கலாம்.

8. குளிர்சாதன அறையினை குடும்ப உறுப்பினர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம்

9. தேவையில்லாதபோது குளிர்சாதனங்களை நிறுத்தி வைக்கலாம்.

10. உலர்ந்த இலை தழைகளை எரிக்காமல் உரக்குழியில் போடலாம்

11. நீங்கள் பயன்படுத்தும் வாகனங்களை அடிக்கடி புகை சோதனை செய்யலாம்

12. காரீயமற்ற பெட்ரோலியத்தைப் பயன்படுத்தலாம்

13. கார்களில் வினையூக்கி (CATALYST) கருவிகளைப் பொருத்தலாம்

## 2. நீர் மாசடைதல்

நீர் மாசடைதல் என்பது வேதியியல், இயற்பியல் அல்லது உயிரியல் மாற்றம் நன்னீரின் தரத்தில் ஏற்படுவதாகும். அதைப் பயன்படுத்தும் அல்லது அதில் வாழும் உயிரினங்களுக்குத் தீங்கினை விளைவிக்கும்.

### மழைநீர் மாசுக்கள்

நீர் மாசடைய பல காரணங்கள் உள்ளன. **முதலாவது – நோய்க்கான காரணிகள்:** பாக்டீரியா, வைரஸ் கிருமிகள், புரோட்டோஸோவா மற்றும் ஒட்டுண்ணிகள் புழுக்கள் ஆகியன. கழிவு நீர் மூலமும், சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் மூலமும் பரவுகின்றன.

இரண்டாவது **ஆக்ஸிஜன் உறிஞ்சும் பாக்டீரியா** – இவை பொருள்களை அழுகச் செய்வதன் மூலம் ஆக்ஸிஜனைப் பெறுகின்றன, இவ்வகை பாக்டீரியாக்கள் அதிக அளவில் நீர் நிலைகளில் காணப்படுகின்றன, இவை மீன் போன்ற நீர்வாழ் உயிரிகளை இறப்பதற்குக் காரணமாகின்றன.

மூன்றாவது – **நீர் மாசுக்கள்** நீரில் கரையக்கூடிய உயிரற்ற மாசுக்கள் அமிலங்கள், உப்பு மற்றும் நச்சு உலோகங்கள் போன்றவை ஆகும் நீர் எண்ணற்ற வேதியியல் கூட்டுப் பொருட்களால் மாசடைகிறது. (எ–டு) எண்ணெய், பிளாஸ்டிக், பூச்சிக்கொல்லி போன்றவைகளால் மாசடையும் நீர், மனிதர்கள் மற்றும் நீர்வாழ் விலங்கினங்களுக்கும் தீங்கு விளைவிக்கக் கூடியதாகும்.



நீர் மாசடைதல்

நீர் மாசுக்களை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எளிதாகக் கொண்டு செல்கிறது. ஒவ்வொரு ஆண்டும் 6,356,000 டன்கள் கழிவுநீர், குப்பை மற்றும் சேறு உலகிலுள்ள பெருங்கடல்களில் கொட்டப்படுகின்றன, கங்கை நதியோரம் 400 மில்லியன் மக்கள் வாழ்கின்றனர். 20,00,000 மக்கள் கங்கையில் தினமும் புனித நீராடுகின்றனர். ஆனால் கங்கையில் இரசாயனக்கழிவுகள், சாக்கடை மற்றும் மனித மிருகக் கழிவுகளும் கொட்டப் படுகின்றன.

தேசிய கங்கை ஆற்றுவடிநிலம் ஆணையம் ரூ500 கோடி தேசிய சுத்திகரிப்பு ஆற்றல் நிதியிலிருந்து (NCEF) கங்கை ஆற்றைச் சுத்தம் செய்யப் பயன் படுத்துகிறது.

மாசடைந்த நீர், நீர்நிலை சூழ் தொகுதியை பாதிக்கிறது. இயற்கை உணவுச் சங்கிலியையும் இது பாதிக்கிறது. காரீயம், காட்மியம் ஆகிய மாசுக்களை சிறிய உயிரினங்கள் உணவுடன் சேர்த்து

உட்கொள்கின்றன. இந்த உயிரினங்கள் மீன்கள் மற்றும் கூடு மீன்களுக்கு உணவாகின்றன. இவற்றை மனிதர்கள் உண்பதால் வயிறு சம்பந்தமான எண்ணற்ற நோய்களுக்கு ஆளாகின்றனர். இவ்வாறு உணவு சங்கிலிக்குள் மாசுக்கள் புகுந்து விடுகின்றன.

நச்சுப்பொருட்கள் ஏரிகள், ஓடைகள், கடல்களில், கரைசலாகக் கலந்து விடுகின்றன. இவை நீர்நிலைகளைப் பாதிக்கின்றன. மேலும் நிலத்தில் ஊடுருவி நிலத்தடி நீரையும் மாசுபடுத்தி விடுகிறது.

### மிகையூட்ட வளமுறுதல்

மனிதர்கள் அதிக உற்பத்திக்காகப் பயன்படுத்தும் உர வகைகள் நீரில் அடித்துச் செல்லப்பட்டு நீர்நிலைகளைச் சென்றடைவதை **மிகையூட்ட வளமுறுதல்** என்கிறோம். இவை ஓடைகள் மற்றும் ஏரிகளில் அதிகமாக காணப்படுகிறது. இவ்வகை உரங்களினால் பாசிகள் அதிக அளவில் நீர்நிலைகளில் வளர்கின்றன, எனவே சூரிய ஒளி ஊடுருவ முடியாது.

இதன் விளைவாக நீரிலுள்ள குறைந்த வீரியம் உள்ள பாக்டீரியா அதிக வீரிய முள்ளதாகி, நீரிலுள்ள ஆக்ஸிஜனை முழுவதுமாக எடுத்துக் கொள்கிறது. அதனால் நீரிலுள்ள உயிரினங்கள் அழிந்து விடுவதோடு, உற்பத்தி பெருக்கமும் குறைந்து விடுகிறது.

### 3. நிலம் மாசடைதல்

நகரக்கழிவுகள் ஓரிடத்தில் கொட்டப் படுவதாலும், சாக்கடை அடைபட்டு, உடைபட்டு இருப்பதாலும் பூச்சிக்கொல்லி பயன்படுத்துவதாலும் எண்ணெய் மற்றும் எரிபொருள் கொட்டப்படுவதாலும், தொழிலகக் கழிவுகள் நேரடியாக மண்ணில் கலப்பதாலும் நிலம் மாசடைகிறது.

### நிலம் மாசடைவதை எவ்வாறு தடுக்கலாம் ?

வீட்டுக்கழிவுகளை மறுபயன்பாடு மற்றும் மறுசுழற்சி செய்யலாம். இரசாயனக் கழிவுகளை குடியிருப்புப் பகுதியிலிருந்து தொலைவில் கொட்டலாம். இரசாயனக் கழிவுகளையும் மறுசுழற்சி மூலம் பயன்படுத்தலாம்.



நிலம் மாசடைதல்

### 4. ஒலி மாசடைதல்

மனிதர்கள் அல்லது இயந்திரங்களினால் ஏற்படும் ஒலி செயல்பாடுகளுக்கு இடையூறாக உள்ளது. மனித, விலங்குகளின் சமநிலையை பாதிக்கிறது. இதனை ஒலி மாசடைதல் என்கிறோம்.

தேவையற்ற சப்தம் மனிதர்களது ஆரோக்கியம் மற்றும் மனநிலையைப் பாதிக்கும். அதிகமான அழுத்தம், படபடப்பு, கேட்கும் திறன் குறைதல், அதிக மன அழுத்தம் போன்ற தீமைகளை அதிக ஒலி ஏற்படுத்துகிறது.

### ஒலி மாசடைதலைக் கட்டுப்படுத்தல்

பசுமை மண்டலங்களை உருவாக்குவதன் மூலம் ஒலி அளவைக் குறைக்கலாம். நெடுஞ்சாலை ஓரங்களிலும், மக்கள் கூட்டம் அதிகமுள்ள இடங்களிலும் டெசிபல் மீட்டர் கருவிகளைப் பொருத்தலாம், வீடுகள், பள்ளிகள், மருத்துவமனை போன்ற இடங்களில் மதிற்சுவரை ஒட்டி மரங்கள் வளர்க்கலாம்.

### 5. உயிரி – மருத்துவக் கழிவுகள்

இவை உயிருக்கு ஆபத்தான நோய்களைப் பரப்பக் கூடியது. 2010ஆம் ஆண்டு ஏப்ரல் மாத தொடக்கத்தில் டெல்லி மருத்துவமனையில் கதிரியக்க சிகிச்சையாகப் பயன்படுத்தப்பட்ட

இயந்திரத்தை (COBALT-60-A) கழிவுப்பொருட்கள் கொட்டும் இடத்திற்கு அனுப்பினார். கதிரியக்க இயந்திரத்தினால் அங்கு வேலை செய்தவர்களுக்கு இறப்பு ஏற்பட்டது,

## 6. மின்னியல் கழிவுகள்

இந்தியாவில் 3,80,000 டன்கள் மின்னியல் கழிவுகள் உற்பத்தியாகின்றன. தொலைக்காட்சிப் பெட்டிகள், கைபேசி, கணினி, குளிர்சாதனப் பெட்டி, அச்சு இயந்திரங்கள் போன்றவை இவற்றுள் அடங்கும். சுற்றுச்சூழல் மாசடைதலில் இதன் பங்கு அதிகமாகி உள்ளது.



மின்னியல் கழிவுகள்


## 7. சுரங்கக் கழிவுகள்

சுற்றுச்சூழல் மாசடைதலுக்கு சுரங்கங்கத் தொழிலும் முக்கிய காரணமாகும். மகாநதி நிலக்கரிச் சுரங்கங்கள் நாள் ஒன்றுக்கு 25 கோடி லிட்டர் நீரை பிராமனி நதியிலிருந்து எடுத்துப் பயன்படுத்தியபின், ஆயிரக்கணக்கான காலன் கழிவு நீரை நாதிர் நதியில் விடுகின்றனர்.

இந்தக் கழிவுநீரில் சாம்பல், எண்ணெய், கன உலோகங்கள், மசகு எண்ணெய், பாஸ்பரஸ், அம்மோனியா, யூரியா மற்றும் கந்தக அமிலம் ஆகியவை உள்ளன. ராஜஸ்தானிலுள்ள ஆரவல்லி குன்றுகளிலிருந்தும், ஹரியானா பகுதியிலுள்ள பெரிய அளவிலான சுரங்கத் தொழில்களால் 90% காடுகள் அழிக்கப்படுகின்றன. கிணறுகள் வறண்டு விடுகின்றன, வேளாண்மை பாதிக்கப்படுகின்றது.

## உயிரின பன்மை

சுரங்கங்களுக்கான நிலங்களை கையகப்படுத்துவது உயிரின பன்மையை பாதிக்கிறது. உயிரின பன்மையின் வேறுபாட்டின் அளவு அச்சூழ் தொகுதியில் வாழ்கின்ற உயிரினங்களை பொருத்தே அமைகிறது. இப்புவி கோளம் முழுவதும் சுற்றுச் சூழலில் ஏற்பட்டுள்ள வேகமான மாற்றத்திற்கு சுரங்கங்கள் மற்றும் அணைக்கட்டுதல் போன்ற நடவடிக்கைகள் இன மறைவிற்கு காரணமாகின்றன.




நிலைநிறுத்த வளர்ச்சி

இந்தியாவின் பெரும்பாலான சுற்றுச் சூழல் பிரச்சனைகளுக்கு மிக அதிக மக்கள் அடர்த்தியே காரணமாகும். இதனால் நாம் அனைவருமே இவற்றிக்கு பொறுப்பாகும். எனவே, நாம் நம்முடைய சுற்றுச்சூழலை பாதுகாத்து சுகாதாரத்தை நிலை நிறுத்தவேண்டும். இது எவ்வாறு சாத்தியமாகும் என்றால்:

திறமையான மற்றும் சுற்றுச் சூழலோடு இணைந்து செல்கின்ற நுட்பத்தினைப் பயன்படுத்த வேண்டும்.

நாம் நமக்கே உரிய வேளாண்மை நடவடிக்கைகளையும் மண் மற்றும் நீர் பாதுகாப்பு முறைகளையும் கையாளவேண்டும்.

சுற்றுச் சூழல் பாதுகாப்பு நிலைநிறுத்தத்தில் சமுதாய பங்களிப்பு என்பது மிகவும் இன்றியமையாத ஒன்றாகும்.

## பயிற்சி

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது.

1. ஓடைகளிலும், ஏரிகளிலும் இயற்கை சத்து அதிகரிப்பது________.

அ) நீர் மாசடைதல் ஆ) மிகையூட்ட வளமுறுதல்

இ) காற்று மாசடைதல் ஈ) ஒலிமாசடைதல்

2. இயற்கை காற்று மாசடைவதற்கு முக்கியக் காரணம் ________.

அ) வாகன புகை ஆ) எரிமலை வெடிப்பு

இ) அனல்மின்சக்தி நிலையம் ஈ) நீர் மின்சக்திநிலையம்

3. நீர் மாசடைவதை________என்றழைக்கிறோம்.

அ) ஒலி மாசடைதல் ஆ) காற்று மாசடைதல்

இ) நிலமாசடைதல் ஈ) நீர் மாசடைதல்

### ஆ. வேறுபடுத்துக.

1. நீர் மாசடைதல் – நிலம் மாசடைதல்
2. காற்று மாசடைதல் – ஒலி மாசடைதல்

### இ. சுருக்கமான விடையளி

1. நீர் மாசடைதல் என்றால் என்ன ?
2. காற்று மாசுக்களைப் பட்டியலிடுக.
3. ஒலி மாசடைதல் என்றால் என்ன ?
4. நீர் மாசடைய முக்கிய காரணிகள் யாவை ?
5. உயிரனப் பன்மை என்றால் என்ன ?
6. உயிரி மருத்துவக் கழிவு மாசடைதலுக்கு எவ்வாறு காரணமாகிறது ?
7. மின்னியல் கழிவு என்றால் என்ன ?

### ஈ. ஒரு பத்தியில் விடை எழுது.

1. அமில மழையின் விளைவுகள் யாவை ?
2. நச்சுப்புகை என்றால் என்ன ? அதன் விளைவுகள் யாவை ?
3. காற்றுமாசடைதல் குறிப்பு வரைக.

# 7. வணிகம், போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு

இந்தியா அழகான நிலத்தோற்றத்தையும் அபரிமிதமான வளங்களையும் மிகப்பரந்த நிலபரப்பையும் கொண்ட நாடு. ஆனால் வளங்களின் பரவல் சீரற்றிருப்பதால் நாட்டின் ஒரு பகுதியில் உபரியான வளங்களும் மற்றொரு பகுதியில் பற்றாக்குறையும் காணப்படுகிறது. இதனால் வணிகம் என்ற செயல் முறை மூலம் உபரியாக உள்ள பொருட்களை பற்றாக்குறையாக உள்ள இடங்களுக்கு எடுத்துச் செல்ல நேரிடுகிறது. எனவே வணிகம் என்பது சேவைகளை வாங்கும், விற்கும், அல்லது பண்டமாற்றம் செய்யும் செயல் முறையாகும்.வணிக வளர்ச்சி நாட்டின் பொருளாதாரம் செழிப்பாக வளர வழிகோலுகிறது. ஆனால் வணிகம், வணிக வளர்ச்சியோ நல்ல வளர்ச்சிபெற்ற சந்தையையும், முன்னேறிய போக்குவரத்து வழிகளையும், தகவல் தொடர்பையும் பொருத்தே அமைகிறது. எனவே இவற்றின் ஒட்டுமொத்த வளர்ச்சியே ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைகின்றன.

பொதுவாக வணிகம் இருவகைப்படும். அவை உள்நாட்டு வணிகம் மற்றும் பன்னாட்டு வணிகம் ஆகும். ஒரு நாட்டின் எல்லைக்குள் நடைபெறுகின்ற வணிகத்தை உள்நாட்டு வணிகம் அல்லது உள்ளூர் வணிகம் என்பர். உள்நாட்டு வணிகத்தில் நிலவழி போக்குவரத்து முக்கிய பங்காற்றுகிறது. மேலும் இவ்வணிக முறையில் அந்நாட்டின் காகித நாணயத்தை பயன்படுத்தி நடைபெறுகிறது. இவ்வணிகமுறை நாட்டின் வளர்ச்சியை சீராக நடைபெற வழிவகுக்கிறது.

எடுத்துக்காட்டாக, அஸ்ஸாமிலிருந்து தேயிலை, கர்நாடகத்திலிருந்து காப்பி, கேரளாவிலிருந்து வாசனைப் பொருட்கள், ஜார்கண்ட், ஒரிசா, மேற்கு வங்கத்திலிருந்து கனிமங்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் கிடைக்க வழி செய்யப்படுகிறது.

### பன்னாட்டு வணிகம்

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளுக்கு இடையே நடைபெறும் வணிகம் பன்னாட்டு வணிகம் அல்லது வெளிநாட்டு வணிகம் ஆகும். பன்னாட்டு வணிகத்தில் கடல்வழி போக்குவரத்து முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும் இவ்வணிக முறையில் அந்நிய செலவாணி பயன்படுத்தப்படுகிறது. நாட்டின் பொருளாதாரம் பெருவளர்ச்சி பெற பன்னாட்டு வணிகம் உதவுகிறது.

பன்னாட்டு வணிகம், மேலும் இரு பிரிவுகளாக வகைப்படுத்தலாம். அவையாவன 1.நேரிணை வணிகம், 2.பல்கிளை வணிகம்.

### நேரிணை வணிகம்

இரு நாடுகளுக்கிடையே உடன்பாட்டின்படி நடைபெறும் வணிகம் நேரடி வணிகம் என்றழைக்கப்படுகிறது. இவ்வணிகத்தில் பொருட்களின்மாற்றம் நாடுகளுக்கிடையே நடைபெறுகிறது. ஒரு நாடு தனக்குத் தேவையான பொருட்களை வேறு ஒரு நாட்டிடமிருந்து இறக்குமதி செய்கின்றது. அதற்குப் பதிலாக தன்னிடம் உள்ள அதேமதிப்புள்ள உபரி உற்பத்திப் பொருளை அந்த நாட்டிற்கு ஏற்றுமதி செய்கிறது.

### பல்கிளை வணிகம்

பல நாடுகளுக்கிடையே நடைபெறும் வணிகம் பல்கிளை வணிகம் எனப்படும். ஒரு நாடு தன்னிடம் உபரியாக உள்ள பொருளைத் தேவைப்படும் நாட்டிற்கு ஏற்றுமதி செய்து விட்டு வரும் வருவாயில் வேறொரு நாட்டிடம் இருந்து தனக்குத் தேவையான பொருட்களை இறக்குமதி செய்து கொள்ளுதல் பல்கிளை வணிகம் எனப்படும்.

இவ்வணிகத்தை எளிதாக நடைமுறைப்படுத்திட OPEC. ASEAN. மற்றும் SPATA போன்ற வணிக கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் வணிகம் எளிதாக நடைபெறுகிறது. இம்முறை சிக்கலானதாக இருந்தாலும் வணிகத்தில் ஈடுபடும் அனைத்து நாடுகளும் வணிக ஒப்பந்தத்தில் கையொப்பமிடும்போது ஒரு சிறந்த வணிகமாக நிலைபெறுகிறது.

## வணிகத்தின் கூறுகள்

ஏற்றுமதி மற்றும் இறக்குமதி இவ்விரண்டும் வணிகத்தின் முக்கிய கூறுகளாகும். ஏற்றுமதி என்பது நம் நாட்டின் உபரிப்பொருட்களையும், சேவைகளையும் அந்நிய செலவாணிக்காக வெளிநாட்டிற்கு விற்பதாகும். இந்தியா ஏறத்தாழ 7500 விதமான பொருட்களை உலகின் சுமார் 190 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது.

இறக்குமதி என்பது நமக்குத் தேவையான பொருட்களையும், சேவைகளையும் வெளிநாட்டிலிருந்து வாங்குவதாகும். சுமார் 6000 விதமான பொருட்களை 140 நாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறது. நாணய மதிப்பிற்கும் இறக்குமதியாகும் பொருட்களின் நாணய மதிப்பிற்கும் இடையே உள்ள வேறுபாடே வணிகச் சமநிலை எனப்படும். ஏற்றுமதியாகும் பொருட்களின், மதிப்பு இறக்குமதியாகும் பொருட்களின் மதிப்பை விட அதிகமிருந்தால் அதனை சாதகமான வணிகச் சமநிலை என்கிறோம். எடுத்துக்காட்டு ஜப்பான். மாறாக இறக்குமதியாகும் பொருட்களின் மதிப்பு ஏற்றுமதியாகும் பொருட்களின் மதிப்பைவிட அதிகமாக இருந்தால் பாதகமான வணிகச் சமநிலை என்கிறோம். எடுத்துக்காட்டு இந்தியா. ஒருநாட்டின் நாணய மதிப்பு அந்நாட்டின் வணிகச் சமநிலையைப் பொறுத்தே அமைகிறது.

## இந்தியாவின் ஏற்றுமதி பொருட்கள்

### 1. விவசாயப் பொருட்கள்

தானியங்கள், பருப்புவகைகள், தேயிலை, காப்பி, வாசனைப் பொருட்கள், கொட்டைகள், விதைகள், சர்க்கரை, வெல்லம், பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள், இறைச்சி மற்றும் இறைச்சி பொருட்கள்.

### 2.தாதுக்கள் மற்றும் கனிமங்கள்

இரும்புத்தாது, நிலக்கரி, மாங்கனீசு, மைக்கா, பாக்சைட், போன்றவை,

### 3. தோல் மற்றும் தோல் பொருட்கள்

கைப்பை, பணப்பை, காலணிகள், வார்ப்புபட்டை, கையுறை முதலியன

### 4. இரசாயன பொருட்கள்

மருந்துகள், அழகு சாதனப் பொருட்கள், ரப்பர், கண்ணாடி போன்றவை.

### 5. நவரத்தின கற்கள் மற்றும் ஆபரணங்கள்

விலையுயர்ந்த ஆபரணக்கற்கள், தங்கம், தங்க நகைகள், அலங்கார மற்றும் பழமையான ஆபரணங்கள்.

### 6. இயந்திரப் பொருட்கள்

இரும்பு எஃகு, மின்னியல் பொருட்கள் கணினி மென்பொருள் போன்றவை.

### 7. ஆடைகள் மற்றும் கைவினைப் பொருட்கள்

ஆயத்த ஆடைகள், பருத்தி, இழைகள், ஜரிகைப் பொருட்கள் போன்றவை.

## இந்தியா இறக்குமதி செய்யும் பொருட்கள்

போக்குவரத்து சாதனங்கள், இயந்திர கருவிகள், மின்னியல் மற்றும் மின் இயந்திரங்கள் கோதுமை, மருந்துகள், பெட்ரோலியம், உரங்கள், செய்தித்தாள்.

1950–51 ல் இந்தியாவின் ஏற்றுமதி மதிப்பு 607 கோடி ரூபாய் ஆகும். ஆனால் 2008 – 2009ல் இந்தியா ஏற்றுமதி செய்த பொருட்களின் மதிப்பு ரூ.7,66,935 கோடிகளாகும். 1950–51ல் இறக்குமதி பொருட்களின் மதிப்பு 581 கோடி ரூபாய்

ஆகும். ஆனால் 2008–2009 ஆண்டில் இறக்குமதியான பொருட்களின் மதிப்பு ரூ.13,05,503 கோடி ரூபாய் ஆகும். பற்றாக்குறை ரூ. 5,38,568 கோடிகளாகும்.

இந்தியாவின் பன்னாட்டு வணிகம் உலகச்சந்தையில் இந்தியப் பொருளாதாரம் வளர்ந்து வருவதைப் பிரதிபலிக்கிறது. இந்திய பன்னாட்டு வணிகத்தை உயர்த்தும் நோக்கோடு 2004ஆம் ஆண்டிலிருந்து இந்திய அரசாங்கம் தாராள வணிகக் கொள்கையை பின்பற்றி வருகிறது.

### இந்திய அரசின் வணிகக் கொள்கையின் சிறப்பு அம்சங்கள்

பொருட்களின் விற்பனை இரு மடங்கு பெருகி உள்ளது.

புறநகர் பகுதிகளிலும், கிராமப்பகுதி களிலும் வேலைவாய்ப்பினை ஏற்படுத்த கவனம் செலுத்தப்படுகிறது.

வணிகத்திற்கான விதிமுறைகள் தளர்த்தப்பட்டுள்ளதுடன் சுங்கவரி குறைக்கப்பட்டுள்ளது.

இந்தியா உலக வணிக மையமாகக் உருவாக வேண்டும் என்பதில் தனிக்கவனம் செலுத்தப்படுகிறது.

பழங்கள், காய்கறிகள், மலர்கள் மற்றும் சில வனப் பொருட்கனை ஏற்றுமதி செய்ய சிறப்பு விவசாய உற்பத்தி வளர்ச்சி திட்டம் விசேஷ் கிருஷீ உபாஜ்யோஜனா அறிமுகப்படுத்தப்பட்டது.


### இந்தியப் போக்குவரத்து அமைப்பு

ஒரு நாட்டின் வளர்ச்சி பொருட்களின் உற்பத்தி மற்றும் சேவைகளை மட்டுமின்றி வலுவான போக்குவரத்து அமைப்புகளையும் சார்ந்திருக்கிறது. பொருட்களின் உற்பத்திக்கு தேவையான மூலப்பொருட்களை உற்பத்தி இடத்திற்கும் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை சந்தைக்கும் எடுத்துச் செல்ல உறுதுணை புரிகின்றன. சமுதாய பிணைப்பை முன்னேற்றவும் பொருளாதார செழிப்பை விரைவுபடுத்தவும் நெருக்கமான போக்குவரத்து, வழித்தடங்கள் முக்கியமானவை. இவை நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதுடன் நாடுகளுக்கிடையே ஒற்றுமையை பலப்படுத்துகிறது. துரித போக்குவரத்து வழிகளாலும், வளர்ச்சியடைந்த தகவல் தொடர்பு அமைப்பினாலும் இந்தியா மற்ற உலக நாடுகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது.

### சாலை போக்குவரத்து

இந்தியாவின் சாலை வழிப்போக்குவரத்து செலவுமிக்க, திறனுடைய, மிகச் சிறந்த போக்குவரத்து வழியாகும். இது நாட்டின் பல்வேறு பகுதிகளை அதிக சாலைகளால் ஒன்றிணைக்கும் எளிய வழியாகும். நம் நாட்டின் நீள அகலத்திற்கேற்ப சாலை போக்குவரத்து பரந்து, விரிந்து அமைக்கப்படுகிறது.

சாலைகள் நாட்டின் எல்லாத் தரப்பினரும் பயன்படுத்தக்கூடியது. இந்திய சாலை வழிப்போக்குவரத்து 3.314 மில்லியன் கி.மீ. நீளம் கொண்டு உலகின் இரண்டாவது பெரிய சாலை போக்குவரத்தாக அமைந்துள்ளது. கிராமசாலைகள், மாவட்ட சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள, தேசிய



நெடுஞ்சாலைகள, தங்க நாற்கர உயர்தர நெடுஞ்சாலை, விரைவு நெடுஞ்சாலைகள், எல்லையோர சாலைகள் மற்றும் பன்னாட்டு நெடுஞ்சாலைகள் என வகைபடுத்தப்பட்டு உள்ளன.

### கிராம சாலைகள்

கிராமசாலைகள் பல்வேறு கிராமங்கள், நகரங்களுடன் இணைக்கும் சாலைகளாகும். இச்சாலைகள் கிராம பஞ்சாயத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்தியா வில் 26,50,000 கி.மீ நீளமுள்ள கிராமசாலைகள் காணப்படுகின்றன

### மாவட்ட சாலைகள்

மாவட்ட சாலைகள் கிராமங்களை மாவட்டத்தின் தலைநகரங்களுடன் இணைக்கின்றன. இவற்றை மாநகராட்சிகளும் நகராட்சிகளும் பராமரிக்கின்றன. இந்தியாவில் மாவட்ட சாலைகள் 4,67,763கி.மீ. நீளத்திற்கு அமைந்துள்ளன.

### மாநில நெடுஞ்சாலைகள்

மாநில நெடுஞ்சாலைகள் மாநிலத்தின் தலைநகரத்துடன் பல்வேறு மாவட்டத் தலைநகரங்களை இணைகிறது. மாநில பொதுப்பணி துறையால் அமைக்கப்பட்டு, பராமரிக்கப்படுகின்றன. மாநில நெடுஞ்சாலைகள் 1,31,899 கி.மீ நீளத்திற்கு இந்தியாவில் அமைந்துள்ளன. மாநில நெடுஞ்சாலைகளுக்கு எடுத்துக் காட்டாக, கடலூர் சித்தூர் சாலையைக் கூறலாம்.

### தேசிய நெடுஞ்சாலைகள்

மாநில தலைநகரங்களை தேசிய தலைநகரத்துடன் இணைக்கும் சாலைகளே, தேசிய நெடுஞ்சாலைகளாகும். இவை நம்நாட்டின் முதன்மை சாலை அமைப்புகளாக உள்ளன. இவற்றை மத்திய பொதுப்பணித்துறை பராமரித்து வருகிறது. இந்தியாவில் 707548.கி.மீ. தூரத்திற்கு தேசிய நெடுஞ்சாலைகள் அமைந்துள்ளன. உதாரணமாக தேசிய நெடுஞ்சாலை 47 என்பது தமிழ் நாட்டையும் கேரளாவையும் இணைக்கும் தேசிய நெடுஞ்சாலையாகும். இதன் மொத்த நீளமாக 650 கி.மீ , 224 கி.மீ. நீளமுள்ள சாலைகள் தமிழ்நாட்டு மாநிலத்திற்குள் செல்கின்றன.



தேசிய நெடுஞ்சாலை –7

தேசிய நெடுஞ்சாலையில் குறைவான நீளமுடைய NH47. இது 5.9 கி.மீ நீளமுடையதாகும்– எர்ணாகுளம்–கொச்சி துறைமுகத்தை இணைப்பதாக உள்ளது.

அதிக நீளமுடைய தேசிய நெடுஞ்சாலை NH7. இது உத்திரப்பிரதேசத்திலுள்ள வாரணாசியிலிருந்து, கன்னியாகுமரி வரை செல்கிறது. இதன் நிளம் 2,369 கி.மீ. இந்நெடுஞ்சாலை ஜபல்பூர், நாக்பூர், ஹைதராபாத் மற்றும் பெங்களூரு ஆகிய மாநகரங்களை இணைக்கிறது.

### தங்க நாற்கர சிறப்பு நெடுஞ்சாலைகள்

இந்திய அரசினால் ஆரம்பிக்கப்பட்ட மாபெரும் சாலை வளர்ச்சித்திட்டமாக தங்க நாற்கர சிறப்பு தேசிய நெடுஞ் சாலைகள் அமைகின்றன. இவை ஏறத் தாழ



சென்னை –பெங்களூர் தங்க நாற்கர சாலை

14,846கி.மீ. நீளத்திற்கு இந்தியாவின் முக்கிய நகரங்களை இணைக்கும் சாலைகளாக அமைந்துள்ளன.

இவற்றில் அடங்கியுள்ள முக்கிய வழிகளாவன:

### ஆறுவழி சிறப்புச் சாலைகள்

சுமார் 5846 கி.மீ தூரத்திற்கு அமைக்கப்பட்டுள்ளது. சென்னை, மும்பை, டெல்லி, கொல்கத்தா ஆகிய மாநகரங்களை இணைக்கிறது.

### வடதென் பகுதிகளை இணைக்கும் சாலைகள்

ஸ்ரீநகரையும் கன்னியாகுமரியையும் இணைக்கிறது. கிழக்கு மேற்கு பகுதிகளை இணைக்கும் சாலைகள் சில்சார்– போர்பந்தரை இணைக்கிறது. இவற்றின் மொத்த நீளம் 7300 கி.மீ.

முக்கிய துறைமுகங்களை தங்க நாற்கர சாலைகளுடனும், முக்கிய இணைசாலைகளுடனும் 363 நீளத்திற்கு இணைக்கிறது. தங்க நாற்கர சிறப்பு தேசிய இணைப்பு நெடுஞ்சாலைகளின் முக்கிய நோக்கம் 'வேகம்', 'பாதுகாப்பு' மற்றும் 'நேரச்சேமிப்பு' இவை பயணநேரத்தை குறைத்து மாநகரங்களை நெருக்கமாக இணைப்பதற்காக அமைக்கப்பட்டவை. இச்செயல் திட்டங்கள் அனைத்தும் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தில் செயல்படுத்தப் பட்டு வருகிறது. இச்செயல் திட்டத்திற்கு அதிக முதலீட்டை ஈடுபடுத்த வேண்டியிருப்பதால் அரசு தனியார் நிறுவனங்களிடம் முதலீடு செய்யவும், நெடுஞ்சாலையை மேம்படுத்தி பராமரிக்கும் பொறுப்பையும் கொடுத்துள்ளது. 'கட்டு, செயல்படுத்து மாற்று' (Build, Operate and Transfer – BOT) என்ற கருத்தின் அடிப்படையில் ஒப்பந்தம் செய்யப்பட் டுள்ளது. தனியார் நிறுவனங்கள் தங்கள் ஒப்பந்த காலத்திற்குள் கட்டுமானச் செலவு செய்ததையும், லாபத்தையும் பெற்றபின், அரசிடம் பொறுப்புகளை ஒப்படைத்துவிடும்.

### விரைவுவழிச்சாலைகள்

விரைவு வழிச்சாலைகள் என்பது மேம்படுத்தப்பட்ட தொழில் நுட்பத்துடன் கூடிய உயர்தர இந்திய சாலை வலையமைப்பு ஆகும். இவை 200 கி.மீ. தூரத்திற்கு அதிகமான நீளமான ஆறு வழிச் சாலைகளாகும். எடுத்துக்காட்டு மும்பாயிலிருந்து புனே செல்லும் விரைவு வழிச்சாலை.



மும்பை – புனே விரைவு வழிச்சாலை


### எல்லையோரச்சாலைகள் (Border roads)

எல்லையோர சாலைகள் நம் நாட்டின் வடக்கு மற்றும் வடகிழக்கு எல்லைகளில் அமைக்கப்பட்டுள்ளது. இந்திய அரசு 1960ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட எல்லையோர அமைப்பு (Border roads Organisation) இச்சாலைகளைப் பராமரிக்கிறது. இவ்வமைப்பு (BRO) தேசியவளர்ச்சிக்கும் தேசிய ஒற்றுமைக்கும் ஒரு அடையாள சின்னமாகவும், தேசிய பாதுகாப்பினை பராமரிப்பதற்கும் இந்தியாவின் ஓர் பிரிக்கமுடியாக கூறாகவும் கருதப்படுகிறது. இவ்வமைப்பு 46,780 கி.மீ. நீளங்கொண்ட சாலைகள் கடினமான நில அமைப்புகளில் உள்ளது.

### உங்களுக்குத் தெரியுமா ?

எல்லையோர சாலை அமைப்பால் BRO உலகத்திலேயே உயரமான இடத்தில் (4270மீ. உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது) மனாலியையும்(இமாச்சலப் பிரதேசம்)

# இந்திய
# தேசிய நெடுஞ்சாலைகள்



காஷ்மீரிலுள்ள லே என்ற இடத்தையும் இணைத்துள்ளது.

### பன்னாட்டு நெடுஞ்சாலை

இது நம் நாட்டை, அண்டை நாடுகளுடன் இணைக்கிறது. இதனால் அண்டை நாடுகளுடன் சுமுகமான உறவு வளர்கிறது.

### இரயில் போக்குவரத்து

இரயில் போக்குவரத்து பயணி மற்றும் சரக்குகளை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்லும் மிகச் சிறந்த போக்குவரத்து சாதனமாகும். நாட்டின் தொலைவில் உள்ள மக்களை இணைக்கிறது. இது வணிகம், கல்வி, சுற்றுலா மற்றும் தேசிய ஒற்றுமையை வளர்க்கிறது.

இரயில் போக்குவரத்து முதன் முதலில் 1853 ஆம் ஆண்டு தொடங்கியது. 1947 ஆம் ஆண்டு வரை 42 இரயில் போக்குவரத்து தொகுதிகள் 37 தனியார் நிறுவ னங்களால் நிர்வகிக்கப்பட்டன. 1951 ஆம் ஆண்டு அனைத்தும் தேசியமயமாக்கப்பட்டு இந்திய இரயில்வே என ஒருங்கிணைக்கப்பட்டது.



ரயில்போக்குவரத்து

### அறிந்து கொள்வோம்

முதல் நீராவி இரயில் மும்பைக்கும் தானேக்கும் இடையே 1853–ஆம் ஆண்டு 34 கி.மீ. தூரத்திற்கு அமைக்கப்பட்டது.

போபால் – சதாப்தி இரயில் இந்தியாவிலேயே அதிவிரைவு இரயில் ஆகும். இது மணிக்கு 150 கி.மீ. வேகத்தில் போபால் சந்திப்பு–புதுதில்லி இடையே செல்கிறது.

இந்திய ரயில்போக்குவரத்து வலை ஆசியாவில் மிகப்பெரியது. உலகில் இரண்டாவது பெரியதாகும். இது குறுக்கிலும் நெடுக்கிலுமாக 63, 273 கி.மீ 7025 இரயில் நிலையங்களை இணைக்கிறது.

ரயில் போக்குவரத்து தினந்தோறும் 20 மில்லியன் பயணிகளையும் 2 மில்லியன் டன்னுக்கும் மேற்பட்ட சரக்குகளையும் ஏற்றிச்செல்கிறது. டெல்லியை தலைமையிடமாகக் கொண்ட இரயில் போக்குவரத்து அங்கிருந்து எல்லாத் திசைகளிலும் உள்ள துறைமுகங்கள், விமான நிலையங்கள் மற்றும் பெருநகரங்களையும் இணைக்கிறது. இரயில் போக்குவரத்து வலையானது பல்வேறு வகையான இருப்புப் பாதைகள் . 1.அகலப்பாதை 2. மீட்டர்பாதை 3. குறுகிய பாதைகளில் செயல்படுகிறது.

### இந்திய இரயில் போக்குவரத்து 17 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

| மண்டலங்கள் | தலைமையிடங்கள் |
|---|---|
| 1. மத்திய ரயில்வே | மும்பை |
| 2. கிழக்கு ரயில்வே | கொல்கத்தா |
| 3. கிழக்கு மத்திய ரயில்வே | பாட்னா |
| 4. கிழக்கு கடற்கரை ரயில்வே | புவனேஸ்வர் |
| 5. கொங்கன் ரயில்வே | நவிமும்பை |
| 6. வடக்கு ரயில்வே | டெல்லி |
| 7. வடமேற்கு ரயில்வே | ஜெய்ப்பூர் |
| 8. வடக்கு மத்திய ரயில்வே | அலகாபாத் |
| 9. வடகிழக்கு | கோரக்பூர் |
| 10. வடகிழக்கு எல்லையோர ரயில்வே | மாலிகான் |
| 11. தெற்கு எல்லையோர ரயில்வே | சென்னை |
| 12. தெற்கு மத்திய ரயில்வே | செகந்தராபாத் |
| 13. தென்கிழக்கு ரயில்வே | கொல்கத்தா |
| 14. தென்கிழக்கு மத்திய ரயில்வே | பிலாஸ்பூர் |
| 15. தென்மேற்கு ரயில்வே | ஹூப்ளி |
| 16. மேற்கு ரயில்வே | மும்பை |
| 17. மேற்கு மத்திய ரயில்வே | ஜபல்பூர் |

### இந்திய இரயில் போக்குவரத்து தொகுதியில் இயற்கையமைப்பின் பங்கு

இந்தியாவின் இயற்கை அமைப்பு இரயில் போக்குவரத்து அமைப்பில் பெரும் பங்கு வகிக்கிறது.

❖ கரடுமுரடான நிலப்பரப்பைக் கொண்ட இமயமலை பகுதிகளில் இரயில் பாதை அமைப்பது மிகவும் கடினமான

செயல் இருப்பினும் மூன்று இரயில் பாதைகள் மட்டுமே காணப்படுகின்றன.

❖ மேற்கு ராஜஸ்தானின் வறட்சி, பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கில் அடிக்கடி ஏற்படும் வெள்ளம், வடகிழக்கு இந்தியாவின் அடர்ந்த காடுகள் மற்றும் கரடு முரடான தரையமைப்பு போன்றவற்றால் இப் பகுதிகளில் குறைந்த எண்ணிக்கையில் இரயில் பாதைகள் அமைய வழி வகுத்துள்ளது.

❖ வடஇந்திய சமவெளி வளமிக்க வண்டல்மண் கொண்ட சமநிலம், அதிக மக்கள் தொகை கொண்டது. வளர்ச்சி பெற்ற விவசாய நிலங்களும், தொழில கப்பகுதிகளும் நிறைந்துள்ளன. அதனால் இப்பகுதி அடர்ந்த இரயில் பாதை வலையமைப்பை கொண்ட பகுதியாக அமைந்துள்ளது.

❖ தீபகற்ப இந்தியா மேடுபள்ளங்களைக் கொண்ட பீடபூமிப் பகுதியை உடையது. எனவே, மிதமான இரயில் வலையமைப்பே காணப்படுகின்றது.

### புறநகர் இரயில் போக்குவரத்து

மும்பை, சென்னை, கொல்கத்தா மற்றும் டெல்லி ஆகிய பெருநகரங்களில் புறநகர் இரயில் போக்குவரத்திற்கென தனியாக இரயில் பாதைகள் உள்ளன. கான்பூர், ஹைதராபாத் மற்றும் புனே நகரங்களில் புறநகர் இரயில்களுக்கான தனி இரயில் பாதைகள் இல்லை. அவை நீண்டதூரம் செல்லும் இரயில்கள் செல்லும் பாதையையே பகிர்ந்து கொள்கின்றன. புறநகர் இரயில்கள் புறநகர் பகுதி மக்களை நகரத்தோடு இணைக்கின்றன. அவை பெரும்பாலும் மின்சார இரயில்களாகும். (EMU) அவைகள் சாதாரணமாக ஒன்பது பெட்டிகளைக் கொண்டிருக்கும். கூட்ட நேரங்களில் நெரிசலைத் தவிர்ப்பதற்கு கூடுதலாக பெட்டிகள் இணைக்கப்படுகின்றன.

### மெட்ரோ இரயில்கள் (Mass Rapid Transit System – MRTS) சென்னை

மெட்ரோ இரயில் என்பது உயரத்தில் அமைக்கப்பட்ட இரயில்பாதையில் செல்பவை. மெட்ரோ இரயில்கள் மைய அரசால் நிர்வகிக்கப்படும். இவை தெற்கு இரயில் மண்டலத்தால் இயக்கப்படுகிறது. தற்சமயம், சென்னை கடற்கரையிலிருந்து வேளச்சேரி வரை 25 கி.மீ. தூரத்திற்கு (17– இரயில் நிலையங்கள்) செல்கிறது.

### இந்திய பொருளாதரத்தில் இரயில் போக்குவரத்தின் பங்கு

அதிக எடையுள்ள பொருட்களை பெருமளவில் எடுத்துச் செல்ல இரயில் போக்குவரத்து உதவி புரிகிறது.(இரும்பு, எஃகு, எண்ணெய், கட்டுமானப் பொருட்கள், நிலக்கரி மற்றும் உலோக மூலப் பொருட்கள்)




மெட்ரோ இரயில் போக்குவரத்து

வேறுபாடு இல்லாத தேசிய சந்தை, சமமான விலை, உள் மற்றும் வெளிநாடுகளுடன் வணிக வளர்ச்சி ஆகியவற்றிற்கு இரயில் போக்குவரத்து உதவி புரிகிறது.

வறட்சி காலங்களில் அத்தியாவசியப் பொருட்களை விரைவாக கொண்டு செல்ல இரயில் போக்குவரத்து மிகவும் உதவியாக உள்ளது.

நிர்வாகம் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டில் இரயில் போக்குவரத்து பெரும் பங்கு வகிக்கிறது.

# இந்திய
# இருப்புப் பாதைகள்



## குழாய் வழி போக்குவரத்து

முற்காலத்தில் நீரை நகரங்களுக்குக் கொண்டு செல்ல குழாய்வழி போக்குவரத்து பயன்படுத்தப்பட்டது. தற்போது, எண்ணெய் மற்றும் வாயுக்களைக்கொண்டு செல்ல பயன்படுகின்றன. எண்ணெய் மற்றும் இயற்கைவாயு (Oil Field) தளங்களிலிருந்து சுத்திகரிக்கப்படாத எண்ணெய் மற்றும் இயற்கை வாயுவை சுத்திகரிப்பு ஆலைகளுக்கும் இரசாயன உரத் தொழிலகங்களுக்கும், அனல் மின்நிலையங்களுக்கும் எடுத்துச்செல்ல குழாய் வழி போக்குவரத்து பயன்படுகிறது.

## குழாய் போக்குவரத்தின் பயன்கள்

கரடுமுரடான தரைப்பகுதியிலும் நீருக்கடியிலும் குழாய்வழி போக்குவரத்தை அமைக்க இயலும்.

குழாய் போக்குவரத்தை அமைப்பதற்கு முதலில் ஆகும் செலவு அதிகம். ஆனால் தொடர்ந்து பாராமரிப்பதற்கும் இயக்குவதற்கும் செலவு குறைவாகும்.

இது தங்குதடையற்ற போக்குவரத்தை உறுதி செய்வதுடன் கப்பலில் ஏற்றி இறக்கும்போது ஏற்படும் இழப்பையும் மற்றும் தாமதத்தையும் குறைக்கிறது

இதனை இயக்குவதற்கு குறைந்த அளவே எரிபொருள் தேவைப்படுகிறது.

நம்நாட்டில் மூன்று முக்கியமான குழாய் வழிப்போக்குவரத்து வலை காணப்படுகின்றது.

1. மேல் அஸ்ஸாம் எண்ணெய் கிணறுகளிலிருந்து கௌஹாத்தி, பரூனி, அலகாபாத் வழியாக உத்திரபிரதேசத்திலுள்ள கான்பூர் வரை செல்லும் குழாய் போக்குவரத்து.

2. குஜராத்திலுள்ள சலாயாவிலிருந்து விராம்கம், மதுரா, டெல்லி, சோனிபாத் வழியாக பஞ்சாபிலுள்ள ஜலந்தர் வரை செல்லும் குழாய் போக்குவரத்து

3. எரிவாயு குழாய் போக்குவரத்து– குஜராத்திலுள்ள ஹஜிராவிலிருந்து மத்திய பிரதேசத்தின் விஜய்ப்பூர் வழியாக உத்திரபிதேசத்திலுள்ள ஜெகதிஷ்பூர் வரை செல்லும் குழாய் போக்குவரத்து.

இவற்றைத் தவிர மும்பை கடலிலுள்ள 'மும்பை ஹை' எண்ணெய் கிணறுகளிலிருந்து மும்பைக்கும், மும்பையிலிருந்து புனேக்கும் இடையில் அமைந்துள்ள குழாய்வழிகளும் இதில் அடங்கும்

## நீர்வழிப் போக்குவரத்து



தேசிய நீர்வழி எண் – 3

நீர்வழிப்போக்குவரத்து, மலிவான போக்குவரத்து ஆகும். அதிக எடையுள்ள கனமான பொருள்களை குறைந்த செலவில் கொண்டு செல்ல தகுந்த வழி– நீர்வழியாகும். எரிபொருள் சிக்கனமாகவும் சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிக்காமலும் உள்ள போக்குவரத்து ஆகும். நீர் வழிப்போக்குவரத்து, உள்நாட்டு போக்குவரத்து மற்றும் கடல்வழிப்போக்குவரத்து என இரு வகைப்படும்.

## இந்தியாவின் உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து

இந்தியா, ஆறுகளையும், கால்வாய்களையும் மற்றும் காயல்களையும் உள்ளடக்கிய பெரும் வலையமைப்பைக் கொண்டதாகும். நீர்வழிப்போக்குவரத்து மொத்தம் 14,500 கி.மீ. தூரம் நடை பெறுகிறது. அதில் 5685 கி.மீ. தூரம்

ஆறுகளிலும் 400 கி.மீ. தூரம் கால்வாய்களிலும் எந்திரப்படகுகள் மூலம் நடைபெறுகிறது. இந்திய நீர்வழி ஆணையம் 5 தேசிய நீர்வழிகளை கண்டறிந்துள்ளது.

தேசிய நீர்வழி எண். 1. கங்கையில் உள்ள அலகாபாத் – ஹால்டியா பாதை

தேசிய நீர்வழி எண்.2. பிரம்மபுத்திராவில் உள்ள சையதியா–துபரி பாதை

தேசிய நீர்வழி எண். 3. மேற்குகடற் கரையில் சம்பக்கார கால்வாய் மற்றும் உத்யோக மண்டல்கால்வாய் – கொல்லம்– கோட்டாபுரம் பாதை

தேசிய நீர்வழி எண். 4. கிருஷ்ணா, கோதாவரி ஆறுகளில் உள்ள சீராபாத், விஜயவாடா பாதை, காக்கிநாடா– புதுச்சேரி பாதை, பத்ராசலம் ராஜமுந்திரிப் பாதை

தேசிய நீர்வழி எண். 5. மகாநதி, பிராமணி ஆறுகளின் தல்ச்சார்–தம்மாரா பாதை, கிழக்குக் கடற்கரை கால்வாய் மங்கல்காடி – பாரதீப் வரை நீடித்திருக்கிறது.

## கடல்வழிப் போக்குவரத்து

இந்தியாவின் கடற்கரையின் மொத்த நீளம் 7516 கி.மீ ஆகும். இதில் 13 பெரிய துறைமுகங்களும் 187 நடுத்தர மற்றும் சிறிய துறைமுகங்களும் கொண்டு அமைந்துள்ளது. இத்துறைமுகங்களின் வழியாக 95 சதவீத வெளிநாட்டு வணிகம் நடைபெறுகிறது. பெரிய துறைமுகங்கள் அனைத்தும் மத்திய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள துறைமுக பொறுப்புக் கழகத்தால் நிர்வகிக்கப்படுகின்றன. நடுத்தர மற்றும் சிறிய துறைமுகங்கள் மாநில அரசால் நிர்வகிக்கப்படுகின்றன.

மேற்கு கடற்கரையில் அமைந்துள்ள பெரிய துறைமுகங்கள் கண்ட்லா, மும்பை, ஜவஹர்லால் நேரு, மர்மகோவா, புது மங்களூர் மற்றும் கொச்சி ஆகியனவாகும். கிழக்கு கடற்கரையில் அமைந்துள்ள பெரிய துறைமுகங்கள் தூத்துக்குடி, சென்னை, எண்ணூர், விசாகப்பட்டினம், பிரதீப், ஹால்தியா மற்றும் கொல்கத்தா ஆகியவை.

இந்தியா கப்பல் கட்டும் தொழிலில் ஆசியாவில் இரண்டாம் இடத்திலும், உலகில் 16வது இடத்தையும் பெறுகிறது இந்தியாவில் நான்கு முக்கிய கப்பல் கட்டும் தளங்கள் உள்ளன.



சென்னை துறைமுகம்

அவையாவன:

1. இந்துஸ்தான் கப்பல்கட்டும் தளம் – விசாகப்பட்டினம்

2. கார்டன் ரீச் தொழிற்சாலை – கொல்கத்தா

3. மேசகான்டாக் – மும்பை


4.கொச்சி கப்பல் கட்டும் தளம்– கொச்சி

இந்திய அரசு துறைமுகத்துறையில் தனியார் முதலீடு செய்வதற்கான விதிமுறைகளை வழங்கியுள்ளது. இந்திய துறைமுகச் சட்டம் 1908 மற்றும் துறைமுகச் சட்டம் 1963 இவை இரண்டும் தனியார் முதலீடு செய்வதற்கு வழி கோலின.

## வான்வழிப் போக்குவரத்து

வான்வழி போக்குவரத்து விரைவான, விலையுயர்ந்த, வசதியான மற்றும் நவீன போக்குவரத்தாகும். அவைகள் பயணிகள், சரக்குகள் மற்றும் அஞ்சல் ஆகியவற்றை ஏற்றிச் செல்கின்றன. இது உள்ளூர் மற்றும் பன்னாட்டு நகரங்களுடன் இணைக்கிறது. உயர்ந்த மலைகள், பாலைவனங்கள் மற்றும்

# முக்கிய கடல் மற்றும் வான் வழிப் பாதைகள்



அடர்ந்த காடுகள் போன்ற இடங்களையும் எளிதில் இணைக்கவல்லது. முதல் வான்வழிப் போக்குவரத்து இந்தியாவில் 1911ஆம் ஆண்டு தொடங்கியது. ஆனால்



உண்மையான தொடக்கம் 1932ல் ஜே.ஆர்.டி.டாடா அவர்களால் டாடா ஏர்லைன்ஸ் தொடங்கப்பட்டது. இது 1946ஆம் ஆண்டு ஏர் இந்தியா என்று பெயர் மாற்றப்பட்டு, பின்னர் 1953ல் வான்வழி போக்குவரத்து தேசியமயமாக்கப்பட்டது. இந்தியன் ஏர்லைன்ஸ் உள்நாட்டு போக்குவரத்திற்கும் ஏர் இந்தியா வெளிநாட்டு போக்குவரத்திற்கும் ஏற்படுத்தப்பட்டது. இவ்விரண்டு வான்வழி நிறுவனங்கள் மட்டுமே இந்திய வான்வழிச் சேவையை 1986–ஆம் ஆண்டு வரை மேற்கொண்டு வந்தன. பின்னர் தாராளமயமாக்கல் கொள்கையினால் பல தனியார் வான் வழி நிறுவனங்களும் இதில் இணைந்து கொண்டன.



சென்னை விமான நிலையம்

2007ஆம் ஆண்டு இந்திய அரசு ஏர் இந்தியா மற்றும் இந்தியன் ஏர்லைன்ஸ் நிறுவனங்களை ஒன்றிணைத்து நேஷனல் ஏவியேஷன் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா லிமிடெட் என்ற பெயரில் உருவானது.

NACIL(National Aviation Company of India Limited) பன்னாட்டு விமான சேவைகளையும் NACIL உள்நாட்டு மற்றும் ஆசியா நாடு தென்கிழக்கு மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் செல்லும் விமானங்களை இயக்கிவருகிறது. 159 வானூர்திகளையும் போயிங் விமானங்களையும் இது இயக்குகிறது. இந்திய நகரங்களை உலகின் பெரும்நகரங்களுடன் இணைப்பதில் இது முக்கியப் பங்கு வகிக்கிறது. NACILஐத் தவிர தனியார் நிறுவனங்களான கிங்பிஷர், ஸ்பைஸ் ஜெட், இண்டர்குளோப் ஏவியேஷன் போன்றவை உள்நாட்டு வான் வழி சேவைகளைச் செய்து வருகின்றன.



பவான் ஹான்ஸ்

இந்திய விமான நிலைய பொறுப்பு ஆணையம் ( Airport Authority of India ) 1995 ல் அமைக்கப்பட்டது. இது உலகத் தரத்திற்கு இந்திய விமான நிலையங்களுக்குப் பாதுகாப்பை அளிப்பதற்கு நிறுவப்பட்டது. தற்சமயம் 129 விமான நிலையங்களை இயக்கிவருகிறது. இதில் 17 பன்னாட்டு விமான நிலையங்கள் ஆகும்.

பவான் ஹான்ஸ்ஹெலிகாப்டர் லிமிடெட் என்ற பொதுத்துறை நிறுவனம் எண்ணெய் மற்றும் எரிவாயு கழகத்தின் கடல் சார்ந்த பணிகளுக்கு ஹெலிகாப்டர் சேவையை அளிக்கிறது. மேலும்

இந்நிறுவனம் பல்வேறு மாநில அரசுகளுக்கும் சேவை புரிகிறது. குறிப்பாக, வடகிழக்கு மாநிலங்களிலுள்ள எளிதில் செல்ல முடியாத பகுதிகளையும் தொடர்பு கொள்ளச் செய்கிறது.

## தகவல் தொடர்பு

தகவல்கள், எண்ணங்கள், கருத்துக்களின் பரிமாற்றம் இவற்றை உள்ளடக்கியதே தகவல் தொடர்பு என்கிறோம். தகவல் தொடர்பு சமூக பொருளாதார தொடர்புகளை மேம்படுத்த உதவுகிறது. மேலும் இது கலாசார ஒற்றுமையை அதிகரிக்க உதவுகிறது. தனிநபர் தகவல் தொடர்பு என்பது இரு நபர்களுக்கு இடையே தகவல்களைப் பரிமாறிக்கொள்வதாகும்.

தனிநபர் தகவல் தொடர்பு:

1. அஞ்சல்
2. தந்தி
3. தொலைபேசி
4. கைபேசி
5. பிரதிகள்

## 1. அஞ்சல் சேவை

இந்திய அஞ்சல் சேவை 1857 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இன்று உலகில் மிகப்பெரிய வலைப்பின்னலாக உருவாகியுள்ளது. வெளிநாடுகளுக்கும், உள்நாட்டிலுள்ள கிராமங்களுக்கும் அஞ்சல் களையும், கட்டுகளையும் அனுப்பப் பயன்படுகிறது. அஞ்சலில் முதல் வகுப்பு மற்றும் இரண்டாம் வகுப்பு அஞ்சல் என இருவகைகள் உள்ளன. முதல் வகுப்பு அஞ்சலில் அஞ்சல் அட்டை, உள்நாட்டு அஞ்சல் மற்றும் அஞ்சல் உறைகள் அடங்கும். இரண்டாம் வகுப்பு அஞ்சலில் புத்தகக்கட்டுகள், பதிவு செய்யப்பட்ட செய்தித்தாள் மற்றும் பருவ இதழ்கள் (periodicals ) அடங்கும். இவை அஞ்சல் சேவையில் இரு இடங்களுக்கு இடையில் எவ்வித கூடுதல் கட்டணமும் இன்றி வான்வழியாகவும் எடுத்து செல்லப்படுகிறது.

அஞ்சல் மூலமாக பொருள்கள் அனுப்புவதற்கும் (VPP) மின்னணு அனுப்பும் சேவை, உடனடி பணம் அனுப்பும் சேவை, மின்னஞ்சல், மின்னணு கட்டண சேவை, துரிதகட்டுகள் மற்றும் துரித அஞ்சல் நிலவழியாக எடுத்துச் செல்லப்படுகின்றன.

**உங்களுக்குத் தெரியுமா ?**

1,55,618 அஞ்சல் அலுவலகங்களுடன் இந்தியா மிகப் பெரிய அஞ்சல் வலையமைப்பினை பெற்றுள்ளது.

## 2. தந்தி.

தொலைவிடங்களுக்கு எழுத்து மூலம் விரைவாக செய்திகளை அனுப்பும் முறைக்கு தந்தி என்பர். இம்முறையில் அஞ்சல் சேவையைக் காட்டிலும் வெகுவிரைவாக செய்திகள் அனுப்பப்படுகின்றன.

## 3. தொலைபேசி

தொலைபேசி என்பது வாய்வழி தகவல் தொடர்பு முறையாகும். வணிக வளர்ச்சிக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்தது. இதனால் தொலைவில் உள்ளவர்களையும் தொடர்புகொண்டு நேரடியாக பேசமுடியும். உள்நாட்டில் உள்ளவர்களோடு தொடர்புகொள்ள (STD) எஸ்.டி.டி. வெளிநாட்டில் உள்ளவர்களோடு தொடர்பு கொள்ள ஐ.எஸ்.டி.(ISD)யும் பயன்படுத்தப்படுகின்றன. தொலைபேசி அனைவராலும் விரும்பப்படுகின்ற ஒரு சாதனமாகும். ஏனெனில் உடனடியாக தொடர்பு கொள்ள ஏதுவாகிறது.

## 4. கைபேசி

இன்றைய உலகில் மிகவும் புகழ் பெற்ற சாதனம் கைபேசியாகும். ஏனெனில் இது எந்த நேரத்திலும் எந்த இடத்திற்கும் தொடர்பு கொள்ள வழிவகுக்கிறது. கைபேசியின் தேவை அதிகரித்துக் கொண்டு வருகிறது. பொதுத் தொலைபேசி வலையமைப்பினால் உலகமெங்கிலும் உள்ள மக்கள் கைபேசியைப் பயன்படுத்த முடிகிறது.

விலையுயர்ந்த கைபேசியில் செய்திகளை மட்டுமன்றி, எழுத்து மற்றும் வரைதல் மூலமாகவும், காட்சி பதிமங்களையும் பரிமாறிக்கொள்ளலாம். கைபேசியிலிருந்து மற்றொரு கைபேசிக்கு செய்திகளை அனுப்பும் முறைக்கு குறுஞ்செய்தி சேவை (SMS) என்பர். குறுஞ்செய்திகள் ஒரு கைபேசியிலிருந்து மற்றொரு கைபேசிக்கு அல்லது ஒரு குறிப்பிட்ட புவிப்பகுதிக்குள் உள்ள அனைத்து கைபேசிக்கும் ( Group SMS) அனுப்பலாம்.

### 5. பிரதிகள்

பிரதி அஞ்சல் என்பது ஒரு மின்னணு கருவியாகும். தகவல்கள் எழுதப்பட்டு, அச்சடிக்கப்பட்ட அல்லது கோட்டுப் படங்கள் அல்லது வரை படங்கள் ஆகியவற்றை தொலைபேசி மூலம் உடனடியாக அனுப்பவோ, பெறவோ முடிகிறது. இணையதள பிரதி என்பது, பதிவேடுகளை இணையதள உதவியுடன் அனுப்புவதாகும்.

### மக்கள் தொடர்பு சாதனம்

மக்கள் தகவல் தொடர்பு என்பது ஒரே நேரத்தில் மில்லியன் கணக்கான மக்கள் தகவல்களைப் பெறுவதாகும். பல்வேறு தேசிய கொள்கைகளையும், செயல் திட்டங்களையும் பற்றி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த மக்கள் தகவல் தொடர்பு பயன்படுகிறது. ஒருவருக்கொருவர் தகவல் பரிமாற்றம் செய்வதற்கு பல வழிகள் உள்ளன.

1. வானொலி
2. தொலைக்காட்சி
3. செய்தித்தாள்
4. இணையதளம்

### 1. வானொலி

இந்தியாவில் 1927 ஆம் ஆண்டு முதல் வானொலி ஒலிபரப்பட்டது. 1936ஆம் ஆண்டு 'அகில இந்தியா வானொலி' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 1957 முதல் ஆகாசவாணி என்றழைக்கப்படுகிறது. இது சக்தி வாய்ந்த ஊடகமாகக் கருதப்பட்டது. இதன் மூலம் மக்களுக்கு நல வாழ்வு, சுற்றுச்சூழல் பராமரிப்பு, குடும்பநலத்திட்டம், அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் போன்றவற்றைப் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தப் பயன்படுகிறது.

### 2. தொலைக்காட்சி

இந்தியாவில் தொலைக்காட்சி 'தூர்தர்ஷன்' என அழைக்கப்படுகிறது. உலகிலேயே மிகப்பெரிய வலையமைப் பாகும். தொலைக்காட்சி அனைத்துத் தரப்பு மக்களையும் சென்றடையும் வண்ணம் தேசிய, மண்டல மற்றும் உள்ளூர் என மூன்று வகையான நிகழ்ச்சிகளை ஒளிபரப்பாகிறது. நேரடி ஒளிபரப்பின் மூலம் முக்கியமான தேசிய மற்றும் வெளிநாட்டு நிகழ்ச்சிகளை நேயர்களுக்கு எடுத்துச் செல்கிறது. இது பல்வேறு வயதினருக்கும் ஏற்ற வகையில் கேளிக்கை, கல்வி, விளையாட்டு, சுகாதாரக்கேடுகள் பற்றிய நிகழ்ச்சிகளை ஒளிபரப்புகிறது.

### 3. செய்தித்தாள்

செய்தித்தாள் எல்லோராலும் பொதுவாக பயன்படுத்தப்படும் சக்திவாய்ந்த தகவல் தொடர்பு சாதனமாகும். இது உள்நாட்டு மற்றும் பன்னாட்டு நிகழ்ச்சிகளைப் பற்றி வெளியிடுகிறது. செய்தித்தாள் இந்தியா போன்ற மக்களாட்சி நடைபெறும் நாடுகளில் மக்களின் கருத்துக்களையும் எண்ணங்களையும் அறிந்துகொள்ள சக்தி வாய்ந்த கருவியாக பயன்படுத்தப் படுகிறது.

### 4. இணையதளம்

இணையதளம் என்பது கணினிகளின் மிகப்பரந்த வலையமைப்பாகும். இது உலகின் பல்வேறு வணிக நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களையும் இணைக்கிறது. இணையதளம் ஆயிரக்கணக்கான கணினி வலைத்தலங்களை ஒன்றுடன் ஒன்று இணைக்கும் வலைப்பின்னல் அமைப்பாகும். இது உலகமெங்கிலும் உள்ள கணினி பயன்படுத்துவோர்கள் செய்திகளையும் தகவல்களையும் பல்வேறு

விதத்தில் பெறவும், அனுப்பவும் பயன்படுத்தப்படுகிறது.

ஆரம்பத்தில் எழுத்துப்பூர்வமான செய்திகளை மின்னணு செய்தியாக (E-mail) அனுப்பவும், பெறவும் பயன்படுத்தப்பட்டது. ஆனால், தற்சமயம் இது பல்வேறு ஊடகங்களை (Multimedia) அடிப்படையாகக்கொண்டு படங்கள் , பதிமங்கள், காட்சி, குரல் போன்றவற்றின் மூலம் வெளியிடுகிறது. இணையதளத்தின் முக்கிய சேவையாக இருப்பவை 1. மின்னணு அஞ்சல், 2. உலகளாவிய வலைத்தலம் (www.) மற்றும் 3. இணையதள தொலைபேசி.

### தகவல் தொடர்பு வலையமைப்பின் பயன்கள்

தகவல் தொடர்பின் திறனை மேம்படுத்தியுள்ளது

உலகின் பல்வேறு இடங்களிலுள்ள மக்களின் தகவல் பரிமாற்றத்திற்குப் பயன்படுகிறது.

வணிகத்தின் பெரும் வளர்ச்சிக்கு வழிகாட்டுகிறது

சமுதாயத்திலுள்ள பல்வேறு சமூக பொருளாதார பிரச்சினைகளை அரசு கையாளுவதற்கு உதவுகிறது

மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியுள்ளது

தகவல் யுகத்திற்கான வழியைத் திறந்திருக்கிறது

கல்வியை ஒளிபரப்பும் செயற்கைக் கோள் மூலம் கல்வியை மேம்படுத்தியுள்ளது.

கடந்த பத்தாண்டுகளில் தகவல் யுகம் அசுர வேகத்தில் பயனளித்துள்ளது. பல்வேறுபட்டதிறன்களைக் கொண்ட ஊடகங்கள் (அச்சு மற்றும் மின்னியல்) மிக வேகமாக வளர்ந்துள்ளன. மேலும் அவைகள் நாட்டின் பொருளாதார, சமுதாய வளர்ச்சியில் பெரும் பங்காற்றுகின்றன.

## பயிற்சி

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

1. ஒரு நாட்டின் எல்லைக்குள் நடைபெறும் வணிகம்________.

   அ) பல்கிளை வணிகம் ஆ) பன்னாட்டு வணிகம்

   இ) உள்நாட்டுவணிகம் ஈ) பண்டமாற்று வணிகம்

2. வணிகக் கூட்டமைப்புகள் ________ வணிக வளர்ச்சியை எளிதாக்குகின்றன.

   அ) பல்கிளை வணிகம் ஆ) நேரிணைவணிகம்

   இ) உள்நாட்டு வணிகம் ஈ) பன்னாட்டு வணிகம்

3. நம் நாட்டில் குறைந்த செலவு மற்றும் அனைவராலும் பயன்படுத்தப்படும் போக்குவரத்து________.

   அ) வான்வழி ஆ) சாலைவழி இ) நீர் வழி ஈ) குழாய் வழி

4. இந்திய இரயில் போக்குவரத்தின் தலைமையகம் உள்ள இடம்________.

   அ) மும்பை ஆ) டெல்லி இ) நாக்பூர் ஈ) திருச்சி

5. வேகம் மற்றும் விலை உயர்ந்த நவீன போக்குவரத்து________.

   அ) வான்வழி ஆ) சாலை வழி இ) நீர்வழி ஈ) இரயில்வழி

## ஆ. பொருத்துக.

| | |
|---|---|
| 1. கிராமச் சாலைகள் | டெல்லி |
| 2. மாவட்ட சாலைகள் | மும்பை |
| 3. மத்திய இரயில்வே | சென்னை |
| 4. தெற்கு இரயில்வே | பஞ்சாயத்து |
| 5. வடக்கு இரயில்வே | நகராட்சி |
| | மாநகராட்சி |
| | ஹைதராபாத் |

## இ. வேறுபடுத்துக.

1. தேசிய நெடுஞ்சாலைகள்–மாநில நெடுஞ்சாலைகள்
2. ஏற்றுமதி –இறக்குமதி
3. உள்நாட்டு வணிகம் – பன்னாட்டு வணிகம்
4. சாலை வழி – இரயில்வழி
5. வான் வழி – நீர்வழி

## ஈ. சுருக்கமான விடையளி.

1. வணிகம் என்றால் என்ன ? வணிகத்தின் வகைகள் யாவை ?
2. இந்தியாவின் வெளிநாட்டு வணிகக்கொள்கை 2004–ன் முக்கிய அம்சங்கள் யாவை ?
3. வணிகம், போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு இம்மூன்றும் ஒன்றுக்கொன்று போட்டியிடுவதாக அமைந்துள்ளது எவ்வா று ?
4. எல்லையோர சாலைகளின் முக்கியத்துவம் யாது ?
5. இந்திய இரயில் போக்குவரத்து அமைப்பில் இயற்கை எவ்வாறு பங்கு வகிக்கிறது ?
6. புறநகர் ரயில் போக்குவரத்து பற்றிக் குறிப்பு வரைக.
7. குழாய் போக்குவரத்தின் நன்மைகள் யாவை ?
8. நம் நாட்டின் முக்கிய குழாய் போக்குவரத்தைக் குறிப்பிடுக.
9. தகவல் போக்குவரத்து வலையமைப்பின் நன்மைகள் யாவை ?

## உ. ஒரு பத்தியில் விடை தருக.

1. இந்திய வணிகத்தைப் பற்றி குறிப்பாக ஏற்றுமதி மற்றும் இறக்குமதி பற்றி விவரி.
2. இந்தியச் சாலைகளின் வகைகளை விவரி.
3. தனிநபர் தகவல் தொடர்பு இந்தியாவில் எவ்வாறு உள்ளது ? விவரி.

## ஊ. கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்கண்டவற்றை குறிக்கவும்.

1. வடதென் பகுதிகளை இணைக்கும் சாலைகள்.
2. கேரளா மற்றும் ஒரிசாவிலுள்ள துறைமுகங்கள்.
3. மும்பை மற்றும் டெல்லியை இணைக்கும் சாலை.
4. மிக நீளமான இரு தடுப்புள்ள தேசிய நெடுஞ்சாலை.
5. கொங்கண் ரயில் போக்குவரத்தின் தலைமையகம்.
6. நான்கு பெருநகரங்களின் சர்வதேச விமானநிலையங்கள்.
7. சென்னை மற்றும் டெல்லியை இணைக்கும் இரயில் பாதை.
8. மும்பை மற்றும் கொல்கத்தாவிற்கு இடையேயுள்ள இரயில்பாதை.

## எ. செயல் முறைப் பயிற்சி.
## வரைபடத்தைப் பயன்படுத்தி கீழ்கண்ட இடங்களை குறிக்கவும்.

1. இந்திய இரயில்வேயின் தலைமையகம்.
2. இந்தியாவின் முக்கிய துறைமுகங்கள்.
3. இந்தியாவின் பன்னாட்டு விமான நிலையங்கள்.

# 8. தொலை நுண்ணுணர்வு

புவியியல் என்பது புவியைப் பற்றிய குறிப்பாக, புவியின் மேற்பரப்பு, வளிமண்டலம், தாவரங்கள், விலங்குகள் மற்றும் மனிதர்களைப் பற்றிய படிப்பாகும். புவியியல் என்பது நிலபடம் பற்றிய படிப்பு என்று மக்களில் பலர் எண்ணுகின்றனர். அது முற்றிலும் சரியல்ல. ஏனெனில் புவியியல் மனிதர்களின் இயற்கைச் சூழலையும், கலாச்சார சூழலில் அது ஏற்படுத்துகின்ற தாக்கத்தையும் விவரிக்கின்றது. பார்ப்பதற்கும் தொடுவதற்கும், முகர்வதற்கும், கேட்பதற்கும், நாம் புலன்களைப் பயன்படுத்துகிறோம். இப்புலன்கள் யாவும் நம் அருகிலுள்ள பொருட்களைப் பற்றி அறிய உதவுகின்றன. ஆனால் புவியியல், புவியின் பரப்புசார் தகவல்களை உள்ளடக்கியது. நில அளவை மூலம் ஒரு வட்டாரத்தின் வளங்கள் பற்றிய விவரங்களை சேகரிக்க பல மாதங்கள் ஆகலாம். அடர்ந்த காடுகள், கரடுமுரடான நிலத்தோற்றம், பாலைவனங்கள் மற்றும் முன்னறிவிக்க முடியாத வானிலை ஆகியவை நில அளவைக்குள்ள தடைகளாகும். இருந்த போதிலும், சமீப காலங்களில் அதிகமாகியுள்ள இயற்கைச் சீரழிவுகள், கால நிலையில் ஏற்பட்டுள்ள பெரிய மாற்றங்கள், பாலைவனமாதல் மற்றும் உயிரினப்பன்மையின் இழப்புகள், புவியின் மேற்பரப்பினை தொடர்ந்து கண்காணித்தல் அவசியமாக்கிவிட்டது. குறுகிய காலத்தில், நிலத்தில் காலடி வைக்காமலே எந்தவொரு பகுதியின் வளத்தைப் பற்றிய விவரங்களைச் சேகரிக்க உதவும் மிகச்சிறந்த நுட்பம் தொலை நுண்ணுணர்வு நுட்பமாகும்.

**தொலை நுண்ணுணர்வு என்றால் என்ன ?**

| | |
|---|---|
| தொலை | – தூரம் |
| நுண்ணுணர்வு | – தகவல்களைப் பெறுதல் |

புவியின் எந்த ஒரு பொருளையும் நேரடியாகத் தொடர்பு கொள்ளாமல் புவியின் விவரங்களை தொலைவிலிருந்து சேகரிப்பது தொலை நுண்ணுணர்வாகும்.


மனிதர்களும், மற்ற விலங்கினங்களும் தொலைவில் உள்ள பொருட்களைப் பற்றி அறிய பார்த்தல், நுகர்தல் அல்லது கேட்டல் என்ற உணர்வுகளைப் பயன்படுத்துகின்றன. புவியியலாளர்கள் தொலை நுண்ணுணர்வு நுட்பத்தினைப் பயன்படுத்தி புவியின் பாறைக்கோளம், நீர்க்கோளம், வளிக்கோளம் மற்றும் உயிர்க்கோளம் ஆகியவற்றினை அளவிடுகின்றனர்.



புவியியலாளர்கள் தொலை உணர்விகள் (sensors) என்ற கருவிகளைப் பயன்படுத்தி புவியைப் பற்றிய விவரங்களைச் சேகரிக்கின்றனர். இக்கருவிகள் பொருட்களைத் தொடாமல் விவரங்களைச் சேகரிக்கவும் பதியவும் செய்பவை. இவ்வுணர்விகள் ஹெலிகாப்டர்கள், விமானங்கள் அல்லது செயற்கைக் கோளில் பொருத்தப்பட்டு, வேண்டிய தகவல்கள் பெறப்படுகின்றன. இத்தகவல்கள் பொருட்களின் மீது பட்டு பிரதிபலிக்கின்ற அல்லது திருப்பி அனுப்பப்படுகின்றன சூரிய ஒளியின் மின்காந்த அலைகளை பதிவு செய்வதன் மூலம் பெறப்படுகின்றன.

## தொலை நுண்ணுணர்வின் ஆரம்பம்

வான்வழிப் புகைப்படங்கள், தொலை நுண்ணுணர்வு நுட்பத்தின் ஆரம்பமாகும். மேப்பியலாளர்கள் வான்வழிப் புகைப்படங்களைப் பயன்படுத்தி வரைபடம் வரைந்தனர். 1858ஆம் ஆண்டு பிரஞ்சு மேப்பியலாளர்கள் பலூன்களையும் புகைப்படக் கருவிகள் பொருத்தப்பட்ட விமானங்களையும் பயன்படுத்தி நிலத்தோற்றங்களை சாய்கோணத்தில் படம் பிடித்தனர்.



பலூன்

முதல் உலகப்போரில் போர் நடைபெற்ற இடத்தினைப் புகைப்படம் எடுக்க விமானங்கள் பயன்படுத்தப்பட்டன.



வான்வழிப் பதிமம்

இப்புகைப்படங்கள் எதிரிநாட்டின் ராணுவ நடமாட்டத்தைக் கண்காணிக்கவும், நிலையை அறிந்து கொள்ளவும் எடுக்கப்பட்டன. போருக்குப்பின் வான்வழிப் பதிமங்கள் ஆக்கப்பூர்வமான பணிகளுக்குப் பயன்படுத்த எடுக்கப்பட்டது. மேப்பியலாளர்கள் வேறு வேறு கோணங்களில் எடுக்கப்பட்ட புகைப்படங்களை ஒப்பிட்டு பார்த்து குறிப்பிட்ட எல்லைக்குட்பட்ட பரப்பினை சரியான விவரங்களைக் கொண்ட வரைபடங்களை உருவாக்கும் திறமை பெற்றிருந்தனர். வெவ்வேறு கோணங்களில் எடுக்கப்பட்ட படங்களை ஒப்பிட்டு, சரியான அளவைகளைத் தீர்மானிக்கின்ற முறைக்குப் புகைப்பட அளவை என்று பெயர். வான்வழிப் படங்களைப் பயன்படுத்தி வரையப்படுகின்ற நிலவரை படங்கள் அல்லது மேப்பிற்கு செங்குத்து வரைபடங்கள் (orthophotomap) எனப்படுகின்றன.

1960களில் தொலை நுண்ணுணர்வு நுட்பத்துறையில் செயற்கைக்கோளைப் பயன்படுத்திய பின் ஒரு புரட்சி ஏற்பட்டது. செயற்கைக்கோளின் உயரத்திலிருந்து புவியின் பெரும் பரப்பை புகைப்படம் எடுக்க முடிகிறது. முதல் வானிலைச் செயற்கைகோள் (TIROS-1- Television and Infrared Observation Satellite) அமெரிக்க ஐக்கிய நாட்டு அரசால் விண்ணில் ஏவப்பட்டது. 1970 ஆம் ஆண்டு புவி வள நுட்ப செயற்கை கோள் (ERTS) ஏவப்பட்டதன் மூலம் தொலை நுண்ணுணர்வு நுட்பத்துறையில் இரண்டாவது புரட்சி ஏற்பட்டது. 1975ல் இதன் தொடர்ச்சி லேண்ட்சாட் எனப் பெயரிடப்பட்டது.




TIROS-1 செயற்கைக்கோள்

செயற்கைக்கோளை தொலை நுண்ணுணர்வு நுட்பத்துறையில் பயன்படுத்திய பின் தனியார்

நிறுவனங்களும் தங்கள் கருவிகளை விண்ணில் ஏவத் தொடங்கின. 1986ல் பிரெஞ்சு நாட்டின் ஸ்பாட் செயற்கைகோள் (SPOT) தன் பணியினைத் தொடங்கியது. ஐந்து பிரெஞ்சு செயற்கை கோள்கள் விண்ணில் ஏவப்பட்டு 10 மில்லியனுக்கு மேல் பதிமங்களை எடுத்துள்ளன.

## தொலை நுண்ணுணர்வின் பகுதிகள்

தொலை நுண்ணுணர்வுத் தொகுதி நான்கு பகுதிகளைக் கொண்டது. அவையாவன.





1. இலக்கு
2. ஆற்றல் மூலம்
3. பிரதிபலிக்கும் வழி மற்றும்
4. உணர்வி

எந்தப் பொருளைப் பற்றி தகவல் பெற விரும்புகிறோமோ அதனை இலக்கு என்கிறோம். புவியின் பொருட்களை நேரடியாக தொடர்பு கொள்ளாமல், தகவல்களை சேகரித்து பதிவு செய்வது இத்தொகுதியின் வேலையாகும். ஆற்றல் மூலமாகக் கருதப்படுவது சூரியனாகும். சூரியன் மின்காந்த ஒளிக்கற்றைகளை புவிக்கூறுகளுக்கு வழங்குகிறது. இவ்வாற்றல் இருவகையாக பிரிக்கப்படுகிறது.

இயற்கை முறை மற்றும் செயற்கை முறை. இயற்கை முறை என்பது சூரிய ஒளியில் பொருட்களின் பிரதிபலிப்பு, செயற்கை முறையில் ரேடார் கருவி மூலம் பெறப்படும் ஒலியை பிரதிபலிப்பது ஆகும் இவற்றுள் மிகக் குறுகிய அலைநீளம் கொண்ட காமா கதிர்கள் முதல் ரேடியோ அலைகள் வரை உள்ளன. இலக்கின் பண்பையும் பிரதிபலிப்பையும் பொறுத்து மின் காந்த அலைகள் இலக்குடன் செயல்படுகிறது. புவிக்கூறுகளின் மீது விழும் சூரிய ஒளியானது மீண்டும் வளி மண்டலத்திற்கு திருப்பி அனுப்பப்படுகிறது. இவ்வாறு பிரதிபலிப்பின் மூலம் இலக்கைப் பற்றிய தகவல்கள் உணர்விகளுக்கு அனுப்பப்படுகிறது. உணர்வி என்ற கருவி மின்காந்த ஒளிக்கற்றைகளை கண்டறிகிறது. உணர்விகள் பெறுகின்ற ஆற்றலை அடிப்படையாகக் கொண்டு துரித உணர்விகள் மற்றும் மந்த உணர்விகள் என வகைப்படுத்தப் படுகின்றன. மந்த உணர்விகள்

### தொலை நுண்ணர்வின் தொகுதிகள்



இயற்கையான வெப்ப ஆற்றல் பிரதிபலிப்பதை கண்டறிகிறது. எடுத்துக்காட்டாக, சூரிய ஒளியில் நமக்குப் பிடித்தவற்றை புகைப்படக் கருவி மூலம் படம் பிடிப்பதைப் போன்றது. துரித உணர்விகள் இலக்கிலிருந்து குறியீடுகளை வெளிப்படுத்தி பிரதிபலித்து ஆற்றலையும் அளக்க செய்கிறது. எடுத்துக்காட்டு– ரேடார் கருவி.

### தொலை நுண்ணுணர்வுத் தொகுதிகள்

#### 1. சூரியன் ஒரு ஆற்றல் வளம் (A)

தொலை நுண்ணுணர்வில் மிகத் தேவையான ஒன்று சூரிய ஆற்றல். இவ்வாற்றல் பொருட்களை ஒளிரச் செய்கிறது. அதன் மூலம் பொருட்களுக்குத் தேவையான மின்காந்த ஆற்றலை வழங்குகிறது.

#### 2. சூரிய ஆற்றலுடன் வளிமண்டலக் கூறுகளின் இடைச்செயல் (B)

சூரிய ஆற்றல் ஆதாரத்திலிருந்து இலக்கிற்கு வந்தடையுமுன் பல்வேறு வளிமண்டலக் கூறுகளை சந்தித்து இடைச்செயல் புரிகின்றது. அதாவது மின்காந்தத் தொகுப்பில் ஒரு பகுதியினை வளிமண்டலத்தில் உள்ள வாயுக்கள் கிரகிக்கின்றன. இதே செயல் மீண்டும் புவிப்பரப்பிலிருந்து பிரதிபலிக்கும் போதும் நடைபெறுகிறது.

#### 3. புவிப்பரப்புத் தோற்றங்களுடன் சூரிய ஒளியின் இடைச்செயல் (C)

சூரிய ஆற்றல் இலக்கினை நோக்கி வளி மண்டலத்தின் வழியே வருகிறது. இலக்குடன் செயல் புரிகிறது. இச்செயல் இலக்கின் தன்மையையும், கதிர்களின் தன்மையையும் பொருத்து அமைகிறது.

#### 4. தகவல் அல்லது புள்ளி விபரம் சேகரிப்பு (D)

இலக்கிலிருந்து ஆற்றல் சிதறவோ அல்லது வெளிப்படும் பொழுது உணரி(இலக்கின் வெகு தூரத்திலிருந்து) மின் காந்த அலைகளை சேகரித்து பதிவு செய்து கொள்கிறது.

#### 5. பதிமத்தை முறைப்படுத்துதல் (E)

சேகரிக்கப்பட்ட மின்காந்த அலைகளை மின் குறியீடுகளாக மாற்றி புவிநிலையத்திற்கு அனுப்புகின்றன. உணரிகளிலிருந்து பெறப்படும் மின்குறியீடுகள் பல்வேறு பதிம எண்ணாக மாற்றப்படுகின்றன.

#### 6. விவரணம் செய்தல் (F)

முறைப்படுத்தப்பட்ட செயற்கைக் கோள் பதிமங்களைப் பகுப்பாய்வு செய்து தகவல் தொகுப்பினை பயன்படுத்தல்.

#### 7. பயன்பாடுகள் (G)

தொலை நுண்ணுணர்வின் மூலம் பெறப்பட்ட புதிய தகவல்கள் பல்வேறு சூழ் நிலைகளால் எழுகின்ற பிரச்சினைகளுக்கு தீர்வாக அமைகின்றன.

### தொலை நுண்ணுணர்வின் பயன்கள்

1. பரந்து விரிந்த நிலப்பரப்பினைப் பற்றிய விவரங்களை சுருக்கமாக அளிக்கின்றன.

2. அணுக முடியாத புவிப்பகுதியின் விவரங்களை தொலை நுண்ணுணர்விகளின் மூலம் கண்டறியலாம். எடுத்துக்காட்டாக ஆப்பிரிக்காவிலுள்ள அடர்ந்த காடுகள்.



3. புவிப்பகுதியின் விவரங்களை எளிதாகவும், வேகமாகவும், சரியாகவும், தொடர்ந்தும் திரட்டித் தருகிறது. எடுத்துக்காட்டாக, விவசாயிகளுக்குத் தேவையான தகவல்களான பயிர்களைத் தாக்கும் பூச்சிகள் மற்றும் நோய்களைத் திரட்டி தருகிறது.

4. நாட்டு நலத் திட்டங்கள் தீட்டவும், தீட்டிய திட்டங்களை முழுமையாக செயல்படுத்தவும் உதவுகிறது. எடுத்துக்காட்டாக இயற்கைச் சீற்றங்களான சுனாமி, வறட்சி, வெள்ளம், புயல் ஏற்படும் இடங்களை கண்டறியவும் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் அளிக்கவும். மறு சீரமைப்பு வரை எல்லாச் செயல்களிலும் பயன்படுகிறது.

5. மேப்பியலாளர்கள், மக்களடர்த்தி, மண்வகை போன்ற கருத்து நிலவரைபடங்களை மிகத் துல்லியமாகவும், விரைவாகவும் வரைய ஏதுவாயுள்ளன.

## புவித் தகவல் தொகுதி

புவித் தகவல் தொகுதிகள் கணினி, மென் கட்டளைத் தொகுப்பு மற்றும் பரப்புசார் புள்ளி விவரங்கள் ஒருங்கிணைக்கப்பட்ட தொகுப்பாகும். இத்தொகுப்புகள் புவிசார்பு தகவல்களைத் திரட்டவும், சேமிக்கவும், வகைப்படுத்தவும், பார்த்து அறியச் செய்யவும், கையாளவும், நிகழ்காலம் வரை சரி செய்யவும், பகுப்பாய்வு செய்யவும் பயன்படுகின்றன.

## புவித் தகவல் தொகுதியின் முக்கிய அம்சங்கள்




ஒரு புவித் தகவல் தொகுதி கணினியினால் வரையப்பட்ட மேப்பையும் புள்ளி விவரப் பேழையையும் இணைக்கிறது. இந்த விளக்கப்படம் புவித்தகவல் தொகுதியின் மூன்று துணைத் தொகுதிகளை விளக்குகிறது.

### 1. இடு பொருள்

உள்ளீட்டுத் தொகுதி சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்களை உள்ளீடு பொருளாகப் பகுப்பாய்விற்கு பயன்படுத்துகிறது.

2. கணினி வன்பொருள் மற்றும் மென் கட்டளைத் தொகுதி, இவை இரண்டும் புள்ளி விவரங்களை சேகரித்தும் பகுப்பாய்வு செய்தும் விவரப்பேழையாக மாற்றி, பின் பரப்புசார்ந்த புள்ளி விவர பேழையை உருவாக்குகிறது. இவ்விரண்டு பேழைகளையும் தொடர்புபடுத்த நாம் வரைய வேண்டிய நிலவரைப் படத்தைப் பெறுகிறோம்.

3. வெளியீட்டுத் தொகுதியானது அச்சிடப்பெற்ற வரைபடங்களையும், பதிமங்களையும் மற்றும் இதர வெளியீட்டு விவரங்களையும் அளிக்கிறது.

## புவித்தகவல்தொகுதிகளின் பயன்பாடுகள்

1. சுரங்கங்கள் தோண்டுவதற்கும் மற்றும் கனிமவளங்களை கண்டறியும் நடவடிக்கைளுக்கு புவித் தகவல் தொகுதி பயன்படுகிறது.

2. மின்சக்தி நிறுவனங்கள் புவித் தகவல் தொகுதியைப் பயன்படுத்தி குறிப்பிட்ட பகுதியில் மின் சக்தியின் அளவு மற்றும் மின் கம்பியின் வலையமைப்பை கண்காணிக்கவும், ஆராயவும் பயன்படுத்துகிறார்கள்.

3. போக்குவரத்து நிறுவனங்கள் புவித் தகவல் தொகுதியை பயன்படுத்தி மிகக் குறைந்த தூரமுடைய மற்றும் தங்களுடைய பொருட்களை விரைவில் கொண்டு சென்று அதனால் நேரத்தை மிச்சப்படுத்துகிறார்கள்.

4. புவித் தகவல் தொகுதியைப் பயன்படுத்தி குற்றங்களை ஆராய்ந்து அதிகமாக குற்றங்கள் நடைபெறும் விதங்களையும், பகுதிகளையும் நிலவரை படத்தில் குறிக்கின்றனர்.

5. சூழியல் நிபுணர்கள் இனங்களின் பரவல் மற்றும் வாழிடங்களை அடையாளம் காட்டுவதற்கும் பயன்படுத்துகின்றனர்.

## உலக அமைவிடங்கள் கண்டறியும் தொகுதி (Global Positioning System)

உலக அமைவிடங்கள் கண்டறியும் தொகுதி புறவெளி சார்ந்த உலகளாவிய செயற்கைக்கோள் வழிநடத்தும் தொகுதி ஆகும். இது அமைவிடம், வேகம் மற்றும் காலம் ஆகியவற்றைப் பற்றிய தகவல்களை எல்லா நேரமும், எல்லா காலநிலைகளிலும் 24 செயற்கைகோள்கள் அமெரிக்க ஐக்கிய நாட்டினரின் பாதுகாப்பு படையினரால் வடிவமைக்கப்பட்டு இயக்கப்பட்டு வருகின்றன. 1973ஆம் ஆண்டு உலக அமைவிடங்கள் கண்டறியும் தொகுதி பழைய முறைகளிலிருந்த குறைகள் நீக்கப்பட்டு பயன்பாட்டுக்கு வந்தது. இது உலக அமைவிடங்கள் கண்டறியும் தொகுதிகளுக்கான 24 செயற்கைக்கோள்கள் புவியை வலம் வந்து கொண்டிருக்கின்றன. உலக அமைவிடங்கள் கண்டறியும் தொகுதி (GPS) சார்ந்து மூன்று பெரும்பிரிவுகள் உள்ளன. பரப்புப் பிரிவு, கட்டுப்பாட்டுப் பிரிவு மற்றும் பயன்படுத்துவோர் பிரிவு என மூன்று வகைப்படும்.

**பரப்புப்பிரிவு** 24 முதல் 32 செயற்கைகோள்களை உள்ளடக்கியது. இச்செயற்கைக்கோள்கள் புவிவலப் பாதையில் வலம் வருகின்றன. புவிவலப் பாதையில் செயற்கைகோளை ஏவுவதற்கு திறனை உயர்த்தும் கருவிகள் (BOOSTERS) பொருத்தப்பட்டுள்ளன.

**தலைமை பின் தொடர் வசதி** (RECEIVING CENTRE) மாற்று தலைமை பின் தொடர் வசதி (ALTERNATE RECEIVING CENTRE) தலைமைக் கட்டுப்பாட்டுத்தளம் வலப்பாதை புள்ளிவிவரங்களையும், அண்டை வெளிவாகனங்கள் ரேடியோ சங்கேதங்களையும் உலக அமைவிடங்கள் கண்டறியும் தொகுதி பெறுவான்களுக்கு அனுப்பி வைக்கின்றன.

**பயன்படுத்துபவர் பிரிவு** உலக அமைவிடங்கள் கண்டறியும் தொகுதி பெறுவான்களையும் (RECEIVERS) பயன் படுத்தும் மக்களையும் உள்ளடக்கியது. இராணுவம், பொதுமக்கள், வர்த்தகம் மற்றும் அறிவியல் காரணங்களுக்காக உலக அமைவிடங்கள் கண்டறியும் தொகுதி பயன்படுத்தப்படுகிறது.

## உலக அமைவிடங்கள் கண்டறியும் தொகுதி (GPS) அடிப்படைக் கருத்து

உலக அமைவிடங்கள் கண்டறியும் தொகுதி (GPS) பெறுவான்கள் அமைவிடம் மற்றும் அலைப்பரவல் விவரங்கள், செயற்கைகோள்களில் பொருத்தப்பட்டிருக்கும் துல்லிய கடிகாரங்களைச் சார்ந்து எல்லா நிலையங்களுக்கும் அனுப்புகின்றன.



உலக அமைவிடங்கள் கண்டறியும் தொகுதி

செயற்கைகோள்களில் இருந்து வரும் சங்கேதங்கள், அமைவிடம், காலம் மற்றும் வேகம் என 3 பரிமாணங்களை கணக்கிட குறைந்தது 3 செயற்கைகோள்களாவது தேவைப்படும். மிகச்சிறிய தவறு கடிகாரத்தினால் ஏற்பட்டால் கூட பெருந்தவறாக மாறிவிடும் ஏனெனில் செயற்கைக்கோளின் வேகம் சரியான அமைவிடம் காட்டுவதை பாதிக்கும். அதனால் பெறுவான்கள் 4 அல்லது அதற்கு மேல் அமைவிடம் மற்றும் காலம் இவற்றில் பிரச்சினைகள் ஏற்படாமல் அண்டவெளி வாகனங்களான செயற்கைகோள்களைப் பயன்படுத்துகின்றன.

## உலக அமைவிடங்கள் கண்டறியும் தொகுதி (GPS) பயன்பாடுகள்

உலக அமைவிடங்கள் கண்டறியும் தொகுதி (GPS) இரட்டைப் பயன்பாடு கொண்டதாகக் கருதப்படுகிறது. ஏனெனில் ராணுவம் மற்றும் பொதுமக்களுக்கும் பயன்படுகிறது.

நில அளவை, மேப் வரைதல், கடல் வழி போக்குவரத்து கைபேசி மற்றும் GEO FENCING ஆகியவற்றில் (GPS) பொதுமக்கள் பயன்படுத்துகின்றனர். பாதுகாப்பு காரணங்களான வழிநடத்துதல், ஏவுகணை, மீட்புப்பணி, எதிரி நாட்டின் ராணுவ பலம் இவற்றிற்காகவும் பயன்படுகின்றன.

கடல் பாதுகாப்பு காரணங்களுக்கான வழி நடத்துதல், ஏவுகணை, தேடுதல் மற்றும் மீட்புப் பணி, எதிரி நாட்டு இராணுவ பலம் போன்றவற்றை அறிய உதவுகிறது.

வர்த்தகம், அறிவியல் பயன்பாடுகள், பாதைகள், மேற்பார்வை போன்ற விவரங்களில் முக்கியமான கருவியாக பயன்படுத்தப்படுகிறது. உலக அமைவிடம் கண்டறியும் தொகுதி துல்லியமாக நேரத்தை காட்டுவதால், அன்றாட நடவடிக்கைகளில் வங்கி, கைபேசி கட்டுப்பாட்டு மையங்கள், ஆற்றல் கட்டுப்பாட்டு தொகுதிகள், விவசாயிகள் ஆகியோரால் பயன்படுத்தப்படுகிறது.

நில அளவை செய்வோர், புவி அமைப்பியலாளர்கள் தங்கள் பணிகளை திறமையாகவும், பாதுகாப்பாகவும், சிக்கனமாகவும், துல்லியமாகவும் செயல்பட தகவல்களை தந்து உதவுகிறது.




### பயிற்சி

**அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது.**

1. வான்வழி புகைப்படங்களைப் பயன்படுத்தி வரையப்படும் வரைபடங்கள்__________.

   அ) செங்குத்து ஆ) வான்வழி இ) இயற்கை ஈ) அரசியல்

2. பொருளை கண்டுபிடிக்கும் வழிமுறையை__________ என்றழைக்கிறோம்

   அ) இலக்கு ஆ) மூலம் இ) உணரி ஈ) பதிமம்

3. மின்காந்தம் பிரதிபலிப்பதை கண்டறியும் கருவி

   அ) இலக்கு ஆ) உணரி இ) பொருள் ஈ) புகைப்பட கருவி

**ஆ. வேறுபடுத்துக.**

1. வான்வெளி படங்கள், செயற்கைகோள் படங்கள்
2. புவித்தகவல் தொகுதி, உலகஅமைவிடம் கண்டறியும் தொகுதி

## இ. பொருத்துக.

| | |
|---|---|
| 1. நில அளவை | அமெரிக்க ஐக்கிய நாடுகள் |
| 2. தொலைநுண்ணுணர்வு | ஏராளமான வழிகள் |
| 3. காற்றில் மிதக்கும் பலூன் | முறையான வான்வழி நிழற்படம் |
| 4. விமானம் | பிரஞ்சு மேப்பியலாளர்கள் |
| 5. டிஐஆர்ஓஎஸ் (TIROS) | குறுகிய காலம் |
| | புவி தகவல் தொகுதி |
| | உலக அமைவிடங்கள் கண்டறியும் தொகுதி |

## ஈ. சுருக்கமான விடையளி.

1. தொலை நுண்ணுணர்வு என்றால் என்ன ?
2. நில அளவையின் குறைபாடுகள் யாவை ?
3. தொலைநுண்ணுணர்வின் பகுதிகள் யாவை
4. புவித்தகவல்தொகுதி – வரையறு.
5. புவித்தகவல்தொகுதியின் இரண்டு பயன்பாடுகளைக் குறிப்பிடுக.
6. உலக அமைவிடங்கள் கண்டறியும் தொகுதியின் பயன்கள் யாவை ?

## உ. பத்தியில் விடையளி.

1. தொலை நுண்ணுணர்வு நுட்பத்தினை விவரி.
2. தொலை நுண்ணுணர்வு நுட்பத்தின் தொகுதிகளை விவரி.
3. தொலை நுண்ணுணர்வு நுட்பத்தினைப் பயன்படுத்தும் முறையினை விவரி.

## குடிமையியல்

# 1. இந்தியாவும் உலக அமைதியும்

இந்தியா ஆகஸ்ட் 15, 1947 ஆம் ஆண்டு விடுதலை பெறும் வரை ஒரு சார்பு நாடாக விளங்கியது. எனவே உலக விவகாரங்களில் எத்தகைய முக்கியப் பங்கும் வகிக்கவில்லை. விடுதலைக்குப்பிறகு, உலக விவகாரங்களில் தீவிரமாகவும், தன்னிச்சையாகவும் ஈடுபட்டு வருகிறது. இதன் மூலம் மிகக் குறுகிய காலத்தில் உலக அரங்கில் தனக்கென ஒரு தனி இடத்தைப் பெற்றுத் திகழ்கிறது. இந்தியா அமைதியை அடிப்படையாகக் கொண்ட நாடு. எனவே உலகில் அமைதியை நிலைநாட்ட தொடர்ந்து பாடுபட்டு வருகிறது. சர்வதேச அரங்கில் அமைதி, பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.



உலக அமைதி சின்னம்

### உலக அமைதியை மேம்படுத்துபவர்

இந்தியா பல்வேறு உலகப் பிரச்சனைகளை தீர்த்து வைப்பதில் முக்கிய பங்காற்றி வருகிறது. இதன் மூலம் அமைதி மற்றும் பாதுகாப்பை நிலைநாட்டி வருகிறது. இந்தியாவின் பெரும் முயற்சியினால் கொரியா மற்றும் இந்தோ–சீனாவில் அமைதி நிலைநாட்டப்பட்டது. இது போன்று இஸ்ரேல், இங்கிலாந்து மற்றும் பிரான்சு போன்ற நாடுகள் எகிப்தை தாக்கியபோது உலகப்போர் ஏற்படும் ஆபத்து தோன்றியது. ஆனால் தகுந்த நேரத்தில் இந்தியா தலையிட்டு போரைத் தவிர்த்தது.

### பஞ்ச சீலம்

இந்தியா 'ஒரு மாபெரும் அமைதியை உருவாக்கும் நாடு' என்றழைக்கப்படுகிறது. இந்தியாவின் பிரதமராக இருந்த ஜவஹர்லால்நேரு அமைதிக்காக 5 அம்சக்கொள்கையினை வெளியிட்டார். அவை 'பஞ்ச சீலம்' என அழைக்கப்படுகிறது. அவை

1. ஒவ்வொரு நாடும் பிற நாடுகளின் ஒற்றுமை மற்றும் இறையாண்மையை மதிக்க வேண்டும்

2. எந்த ஒரு நாடும் பிற நாட்டை தாக்கக்கூடாது.

3. ஒரு நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில், பிற நாடுகள் தலையிடக்கூடாது

4. அனைத்து நாடுகளும் சமத்துவம் மற்றும் பரஸ்பரநல்லுறவு கொண்டிருக்க வேண்டும்

5. ஒவ்வொரு நாடும் பிற நாடுகளுடன் அமைதியான முறையில் இணங்கியிருத்தல் வேண்டும்.

இப்பஞ்சசீலக் கொள்கை உலக அரங்கில் இந்தியாவின் பெருமையை மேலும் உயர்த்துகிறது.

### ஆயுதக்குறைப்பு மற்றும் அணு ஆயுதங்கள்

உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சி உலக அமைதி மூலம் மட்டுமே அடைய முடியும். உலக அமைதி இந்திய பொருளாதார வளர்ச்சிக்கு மட்டுமன்றி, வளரும் நாடுகளின் வளர்ச்சிக்கும் அவசியமானதாகும்.

உலக நாடுகளில் சில பெரும் ஆபத்தை விளைவிக்கும் அணுகுண்டு

மற்றும் ஹைட்ரஜன் குண்டுகள் போன்றவற்றை உருவாக்கி வருகின்றன. இதனைத் தடுக்கவில்லையென்றால், உலகம் அழிக்கப்பட்டுவிடும். எனவே இந்தியா அணு ஆயுத உற்பத்தியை கடுமையாக எதிர்த்ததோடு மட்டுமன்றி, அணுஆயுத உற்பத்திக்கு எதிராகவும் குரலெழுப்பி வருகிறது.



அணு சோதனை தடை ஒப்பந்தம்

ஐ.நா பொதுச் சபையில் 1956–ஆம் ஆண்டு ஆயுதக் குறைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்த முதல் நாடு இந்தியா ஆகும். 1963–ஆம் ஆண்டு அணு ஆயுதத் தடை ஒப்பந்தம் உருவாவதற்கும் இந்தியா முக்கியப் பங்காற்றியது.

### அணி சேராக் கொள்கை

இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு, உலக நாடுகள் இரண்டு பகைமை அணிகளாக பிரிந்தன. அமெரிக்காவின் தலைமையில் ஒரு அணியும், ரஷ்யாவின் தலைமையில் மற்றொரு அணியும் உருவாகின. இந்த இரண்டு அணிகளும் தங்களது செல்வாக்கை நிலைநாட்ட பல முயற்சிகளில் இறங்கின. இதனால் உலகில் பதற்ற நிலை மற்றும் அமைதியின்மை ஏற்பட்டன. இந்த இரண்டு அணிகளிலும் சேராமல் இந்தியா நடுநிலை நாடாக (அணிசேரா நாடாக) விளங்கி வருகிறது. இந்த இரண்டு அணிகளுக்கிடையில் கருத்து வேறுபாடுகள் தோன்றிய சமயத்தில் இந்தியா அவற்றை தீர்க்கும் முயற்சியில் ஈடுபட்டு தொடர்ந்து உலகில் அமைதியை நிலைநாட்டி வருகிறது.

### மாபெரும் உதவியாளர்

அடிப்படையில் இந்தியா குடியேற்றக் கொள்கைக்கு எதிரானது. உலகநாடுகள் பிறநாடுகளின் பிடியிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்வதற்கு இந்தியா பெரும் ஆதரவு நல்கி வருகிறது. ஹாலந்து நாட்டின் பிடியிலிருந்து இந்தோனேசியா விடுதலை பெறுவதற்கு பெரிதும் உதவிபுரிந்தது. இதே போன்று எகிப்து சூடான், இந்தோ–சீனா, கானா, மொராக்கோ மற்றும் வங்காளதேசம் போன்ற நாடுகளில் நடைபெற்ற தேசிய இயக்கத்திற்கு இந்தியா முழு ஆதரவைக் கொடுத்தது.

### இராணுவ ஒப்பந்தங்களுக்கு எதிரானது

தற்கால உலகில், உலக நாடுகள் ராணுவ ஒப்பந்தங்கள் மற்றும் எதிர் ஒப்பந்தங்களை செய்துகொள்வதில் அதிக கவனம் செலுத்தி வருகின்றன. இதன் விளைவாக தற்பொழுது நேட்டோ, சீட்டோ, சென்ட்டோ, பாக்தாத் மற்றும் வார்சா போன்ற ஒப்பந்தங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால் இந்த ஒப்பந்தங்களில் எதிலும் இந்தியா சேரவில்லை. மேலும், இந்த ஒப்பந்தங்களுக்கு கடும் எதிர்ப்பும் தெரிவித்து வருகிறது.

### அடக்கு முறை மற்றும் அநீதிக்கு எதிரானது

உலகில் எந்தப்பகுதியிலும் அடக்கு முறை மற்றும் அநீதி இழைக்கப்படுமேயானால், இந்தியா அதற்கு உடனடியாக தனது எதிர்ப்பைத் தெரிவிக்கிறது. பிரான்சு அல்ஜீரியாவிற்கு எதிராக ஆக்கிரமிப்பை மேற்கொண்டபோதும், இங்கிலாந்து சைபிரஸ்–க்கு எதிராகவும், ரஷ்யா ஹங்கேரிக்கு எதிராகவும் ஆக்கிரமிப்பை மேற்கொண்ட போதும் இந்தியா அந்நாடுகளை வன்மையாகக் கண்டித்தது. இதுபோன்று சீனா ஐ.நா. சபையில் உறுப்பினராவதற்கு இந்தியா தனது ஆதரவை தெரிவித்தது. இதன் மூலம் அநீதிக்கு எதிராக இந்தியா தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

## ஐ.நா–வின் தீவிர ஆதரவாளர்

இந்தியா ஐ.நா–வின் தீவிர ஆதரவாளராக தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. ஐ.நா–வின் கொள்கைகளுக்கு முழு ஆதரவு கொடுப்பதோடு, அக்கொள்கை வெற்றிபெறவும் அதன்மூலம் உலக அமைதியை நிலைநாட்டவும் தொடர்ந்து பாடுபட்டு வருகிறது.

## இன ஒதுக்கல் கொள்கைக்கு எதிரானது

இன ஒதுக்கல் கொள்கை என்பது ஆப்பிரிக்காவில் பின்பற்றப்பட்ட இன வேறுபாட்டுக் கொள்கையாகும்.



நெல்சன் மண்டேலா

உலகில் அனைத்துப் பகுதியில் வாழும் மக்களும் சமமானவர்கள் என்ற கொள்கை இந்தியாவின் அயல்நாட்டு கொள்கைக்கு அடிப்படையாகத் திகழ்கிறது. தென் ஆப்பிரிக்காவில் வெள்ளையர்கள், ஆப்பிரிக்க குடிமக்களுக்கு சம உரிமை வழங்க மறுத்தனர். இப்பிரச்சனையை 1946–ஆம் ஆண்டு ஐ.நா பொதுச் சபையில் இந்தியா முதன் முதலில் எழுப்பியது. இந்தியா வழங்கிய தொடர் ஆதரவு மற்றும் நெல்சன் மண்டேலாவின் தொடர் போராட்டம் காரணமாக 1990–ஆம் ஆண்டு இன ஒதுக்கல் கொள்கை முடிவுக்கு வந்தது.

நெல்சன் மண்டேலா ஆப்பிரிக்க தேசிய காங்கிரசின் தலைவரானார். தென் ஆப்பிரிக்காவில் காணப்பட்ட இனப் பிரச்சனைக்கு எதிராகப் பாடுபட்டார். 26 ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டார். பின்னர் 1994ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்க குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## வட்டாரக் கூட்டமைப்பு

அமைதியை நிலைநாட்ட, வட்டாரக் கூட்டமைப்பை ஏற்படுத்தும் முயற்சியில் இந்தியா ஈடுபட்டது. இதன் விளைவாகத் சார்க் அமைப்பு தோன்றியது. தெற்கு ஆசிய நாடுகளில் பிராந்தியக் கூட்டமைப்பு முதல் கூட்டம் டிசம்பர் 7, 1985ஆம் ஆண்டு வங்காளத்தில் டாக்கா நகரில் நடைபெற்றது. வங்காளதேசத்தைச் சேர்ந்த ஆஷான், சார்க் அமைப்பின் முதல் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றார். வங்காளதேசம், பூடான், இந்தியா, மாலத்தீவு, நேபாளம், பாகிஸ்தான், இலங்கை ஆகிய ஏழு நாடுகள் உறுப்பு நாடுகளாக இடம் பெற்றன. தற்போது ஆப்கானிஸ்தான் இதில் 8–வது உறுப்பு நாடாக சேர்ந்துள்ளது.

பூடான் தலைநகர் திம்புவில் 2010–ஏப்ரல் 28 மற்றும் 29–ல் சார்க் அமைப்பின் 16வது மாநாடு நடைபெற்றது.

சார்க்கின் உறுப்பு நாடுகள் தங்களுக்குள் பரஸ்பர நல்லுறவின் அடிப்படையில் போக்குவரத்து, கடித சேவை, சுற்றுலா, வானியல், சுகாதாரம், வேளாண்மை மற்றும் கிராமப் புணரமைப்பு மற்றுத் தகவல் தொடர்பு போன்றவற்றில் உதவி செய்து கொள்ளுதல் என்ற அடிப்படையில் செயல்பட்டு வருகின்றன.

## அண்டை நாடுகளுடன் நல்லுறவு
## இந்தியா – பாகிஸ்தான்

இந்தியா பாகிஸ்தானிடையே கடந்த காலங்களில் பகைமை நிலவி வந்த போதிலும், அவற்றை முறியடித்து இருநாடுகளும் நல்லுறவை ஏற்படுத்த முயற்சி மேற்கொண்டு வருகின்றன. மார்ச் 16, 1999 டெல்லி– லாகூர் இடையே பேருந்து

போக்குவரத்து தொடங்கப்பட்டு இரு நாடுகளிடையே நெருக்கம் ஏற்பட்டது. ஈரான், பாகிஸ்தான், இந்தியா இடையே எரிவாயு குழாய் இணைப்பு மேற்கொள்ள முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



வாகா எல்லை

### இந்தியா – சீனா

1949–ஆம் ஆண்டு சீனா குடியரசானதை முதலில் அங்கீகரித்த நாடு இந்தியா. இதனைத் தொடர்ந்து இரு நாடுகளும் தங்களது பொருளாதாரத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முயற்சி மேற்கொண்டன. ஐ.நாவில் சீனா உறுப்பு நாடாகச் சேருவதற்கு இந்தியா தனது ஆதரவை நல்கியது. இதற்கு ஐ.நாவின் பாதுகாப்புக் குழுவில் நிரந்தர உறுப்பு நாடாக இந்தியா இடம்பெற சீனா ஆதரவு நல்கியது.

### இந்தியா – இலங்கை

இலங்கை புத்தமதத்தை அடிப்படையாகக் கொண்ட நாடு. மௌரியப் பேரரசர் அசோகர் தனது மகள் மற்றும் மகனை இலங்கைக்கு அனுப்பி புத்த மதத்தை பரப்பினார். இதனைத் தொடர்ந்து இருநாடுகளுக்குமிடையில் வியாபார உறவு ஏற்பட்டது. இலங்கைக்கு இந்தியா தொடர்ந்து தனது ஆதரவை வழங்கி வருகிறது. இந்த உறவு அமைதியான முறையில் தொடர்ந்து நீடித்து வருகிறது.

### இந்தியா – வங்காளதேசம்

முன்னாள் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியின் பெருமுயற்சி மற்றும் ஆதரவினால் பாகிஸ்தானிடமிருந்து 1971–ஆம் ஆண்டு வங்காளதேசம் பிரிந்து தனி நாடாகியது. 1972–ஆம் ஆண்டு இவ்விரு நாடுகளுக்கிடையில் நட்புறவு, ஒத்துழைப்பு மற்றும் அமைதி பராமரிப்பிற்கான 25 வருட ஒப்பந்தம் ஒன்று டாக்கா நகரில் செய்து கொள்ளப்பட்டது. கங்கை நீரைப் பகிர்ந்து கொள்வது தொடர்பாக ஏற்பட்ட பராக்கா அணை கட்டும் பிரச்சனைக்கு அமைதியான முறையில் தீர்வு காணப்பட்டது. இந்தியா தொடர்ந்து வங்காள தேசத்திற்கு உற்ற நண்பனாகத் திகழ்ந்து வருகிறது.

### சூயஸ் கால்வாய்

1956–ஆம் ஆண்டு எகிப்து நாட்டு அரசர் நாசர் சூயஸ் கால்வாயை தேசிய மயமாக்கினார். இதனை எதிர்த்து பிரான்சு, இங்கிலாந்து மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகள் எகிப்தின் மீது படையெடுத்தன. இந்தியாவின் தலையீட்டால் போர் தவிர்க்கப்பட்டு, அமைதி நிலைநாட்டப்பட்டது.



சூயஸ் கால்வாய்

### காங்கோ

இது ஒரு ஆப்பிரிக்க நாடு. 1960–ஆம் ஆண்டு, இங்கு உள்நாட்டுப்போர் வெடித்தது. ஐ.நா சபை இப்பிரச்சனைக்குத் தீர்வு காணும்படி இந்தியாவைக் கேட்டு கொண்டது. இதனைத் தொடர்ந்து படைத்–தளபதி K.N. இராஜா தலைமையில் இந்திய அமைதிப்படை காங்கோவிற்கு அனுப்பப்பட்டு அங்கு அமைதி நிலைநாட்டப்பட்டது.

**சைப்ரஸ்**

தீவிர கிறித்துவர்கள் மற்றும் துருக்கி முஸ்லீம்கள் இடையே சைப்பிரஸ் தீவில் உள்நாட்டுப் போர் தோன்றியது. இந்திய படைத் தளபதி திம்மையா தலைமையில் ஐ.நா.அமைதிப் பாதுகாப்புப் படை ஒன்று அனுப்பப்பட்டது. இவரது தீவிர முயற்சியால் சைப்ரஸ் தீவில் அமைதி நிலைநாட்டப்பட்டது.

இந்தியா வன்முறையற்ற மற்றும் அஹிம்சை கொள்கைகள் மூலம் மகாத்மா காந்தியின் தலைமையில் விடுதலை அடைந்தது. விடுதலைக்குப்பிறகு உலக நாடுகளிடையே அமைதி மற்றும் நிலைப்பாட்டை நிலைநிறுத்த கடுமையாக பாடுபட்டுவருகிறது.

## பயிற்சி

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. இந்தியா அதிகப்படியான நம்பிக்கையை கொண்டிருப்பது

அ) போர் ஆ) அமைதி இ) அன்பு ஈ) பகைமை

2. பண்டித ஜவஹர்லால் நேருவின் அமைதிக்கான ஐந்து அம்ச கொள்கைகள்.

அ) சுதேசி ஆ) புதிய பயனுரிமை இ) பஞ்சசீலம் ஈ) இனவெறி

3. அணு ஆயுத தடைச் சட்டம் கையெழுத்தான ஆண்டு

அ) 1963 ஆ) 1993 இ) 1936 ஈ) 1998

4. அணு ஆயுத குறைப்பு தீர்மானத்தை ஐ.நா. பொது சபையில் இந்தியா கொண்டு வந்த ஆண்டு

அ) 1963 ஆ) 1956 இ) 1995 ஈ) 1976

5. இன ஒதுக்கல் கொள்கை முடிவிற்கு வந்த ஆண்டு

அ) 1990 ஆ) 1991 இ) 1890 ஈ) 1989

6. சார்க் அமைப்பின் முதல் பொதுச் செயலாளர்

அ) ஜின்னா ஆ) ஆஷான் இ) கோபி ஆனன் ஈ) காந்தி

### ஆ. சுருக்கமாக விடையளி.

1. உலக அமைதியை நிலைநாட்டுவதில் இந்தியாவின் பங்கை விளக்கு.
2. உலக அமைதி ஒரு அவசியமானது ஏன் ?
3. பஞ்சசீலத்தின் ஐந்து கொள்கைகள் யாவை ?
4. இன ஒதுக்கல் கொள்கை பற்றி ஒரு குறிப்பு வரைக.
5. சார்க் நாடுகள் பரஸ்பர நல்லுறவை நிலைநாட்ட குறிப்பிட்ட பகுதிகள் பெயரை குறிப்பிடுக.
6. இந்தியா–ஐ.நா.வின் ஆதரவாளர் – இக்கூற்றை நியாயப்படுத்து.

### இ. பத்திவினா.

1. பஞ்சசீலம் மற்றும் அணிசேராக் கொள்கை பற்றி எழுதுக.
2. சார்க் அமைப்பு பற்றி சிறு குறிப்பு எழுதுக.

# 2. மக்களாட்சி

## மக்களாட்சி

மக்களாட்சி முறை அல்லது ஜனநாயக முறை சமீப காலங்களில் சிறந்த அரசாங்க முறையாக கருதப்படுகிறது. ஆனால் எதேச்சதிகார ஆட்சி முறையிலிருந்து மக்களாட்சி முறை மாற்றம் எளிதாக நிகழவில்லை. பல போராட்டங்கள் இந்த மாற்றத்தை உருவாக்கின. பல பெரும் போராட்டங்களுக்கு பிறகு மக்கள் தங்கள் அதிகாரத்தை செயல்படுத்தும் உரிமையைப் பெற்றனர்.

## மக்களாட்சி விளக்கம்

மக்களாட்சிக்குப் பலர் பலவிதமான விளக்கங்களை வழங்கியுள்ளனர். சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்னர் ஹெரோடட்டஸ் என்பவரால் மக்களாட்சி என்ற சொல் முதன்முதலாக பயன்படுத்தப்பட்டது. ஆங்கிலத்தில் Democracy என்ற வார்த்தை கிரேக்க சொல்லான Demos மற்றும் Cratia என்ற சொற்களிலிருந்து பெறப்பட்டதாகும்.

Demos என்றால் மக்கள் என்றும் Cratia என்றால் அதிகாரம் அல்லது ஆட்சியைக் குறிக்கும்.எனவே மக்களாட்சி என்பது மக்கள் அதிகாரத்தைக் குறிக்கிறது. சுருங்கக்கூறின் , மக்களாட்சி என்பது ஒரு அரசாங்க முறையாகும். இதில் மக்கள் நேரிடையாகவோ அல்லது தங்கள் பிரதிநிதிகள் மூலமாகவோ தங்கள் அதிகாரத்தை செலுத்தும் ஆட்சி முறையாகும். அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் கருத்துப்படி, ஜனநாயகம் என்பது 'மக்களால் மக்களுக்காக மக்களே ஆட்சிசெய்வது' ஆகும். பேராசிரியர் ஷீலே கருத்துபடி, 'ஜனநாயகம் என்பது ஒரு அரசாங்க முறையாகும். இதில் அனைத்து மக்களும் பங்கு பெறுகின்றனர்' எனக் குறிப்பிடுகிறார்.

## மக்களாட்சியின் வகைகள்

மக்களாட்சி முறை 1) நேரடி மற்றும் 2) மறைமுக மக்களாட்சி என இரு வகைப்படும்.

**மக்களாட்சி (அ) ஜனநாயகம்**

**நேரடி மக்களாட்சி**

மக்கள் நேரடியாக மக்களாட்சி முறையில் பங்கேற்பர்.

பண்டைய கிரேக்கம் மற்றும் ரோமானிய நாகரிகத்தில் நடைபெற்று வந்தது.

பண்டைய இந்தியாவில், கிராம பஞ்சாயத்து முறையில் நேரடி மக்களாட்சி நடைபெற்றன.

**மறைமுக மக்களாட்சி**

மக்கள் நேரடியாக பங்கு பெறுவதை விடுத்து தங்கள் பிரதிநிதிகள் மூலம் பங்கு பெறுகின்றனர்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அரசாங்கத்தை உருவாக்கி நடத்துவர்.

பெரும்பாலான நாடுகளில் மறைமுக மக்களாட்சி முறை பின்பற்றப்படுகிறது.

அரசியல் கட்சிகள் ஆட்சி முறையில் பெரும் பங்கு வகிக்கின்றன.

## மக்களாட்சியின் நன்மைகள்

தற்கால உலகில் ஜனநாயக முறை சிறந்த அரசாங்க முறையாகும். இது பல்வேறு நன்மைகளை கொண்டுள்ளது. சிறந்த அரசாங்கம் அமைய வழி ஏற்படுகிறது. மக்கள் உரிமைகளுக்குப் பாதுகாப்புக் கிடைக்கிறது. சமத்துவம் நிலைநாட்டப்படுகிறது. மக்கள் கல்வி அறிவு பெற உதவுகிறது. நாட்டு நலன் மேம்படுகிறது. அமைதியான முறையில் அரசாங்க மாற்றத்தை ஏற்படுத்துகிறது. ஜனநாயகம் போர் ஆயுதங்களை நம்பாமல் வாக்குப்பெட்டியை நம்புகிறது. ஜனநாயக ஆட்சி முறையில் புரட்சிகள் மற்றும் கிளர்ச்சிகளுக்கு இடமில்லை.

## மக்களாட்சியின் தீமைகள்

ஜனநாயக முறை ஒழுங்கற்ற அரசாங்கம் அமைய வழிவகுக்கிறது. தகுதிக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளில் பெரும்பான்மையினர் அறியாமை மிக்கவர்களாகவும், தகுதியற்றவர்களாகவும் மற்றும் அனுபவமற்றவர்களாகவும் உள்ளனர். அதிக செலவினைக் கொண்ட அரசாங்கம் அமைய வழிசெய்கிறது. தனிநபர் அல்லது சிறுபான்மையினருக்கு முக்கியத்துவம் வழங்கப்படுவதில்லை. இது கட்சி முறை அரசாங்க முறைக்கும், வகுப்பு கலவரங்களுக்கும் வழி செய்கிறது.

## மக்களாட்சியின் முக்கியத்துவம்

ஜனநாயக முறையின் கீழ் மக்கள் தங்கள் பிரதிநிதிகளை சுதந்திரமாக தேர்ந்தெடுக்கின்றனர். இதனால் மக்கள் மதிக்கப்படுகின்றனர். மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு பாதுகாப்பு கிடைக்கிறது. குறிப்பாக வாழும் உரிமை மற்றும் சுதந்திர உரிமைக்கு அரசியலமைப்பு உத்திரவாதம் வழங்குகிறது. ஜனநாயகத்தில் அனைத்து முடிவுகளும் பெரும்பான்மை அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது. இம்முறை மக்கள் நலனை மேன்மையடையச் செய்கிறது. சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவம் போன்ற கொள்கைகள் ஜனநாயகத்திற்கு அடிப்படையாகத் திகழ்கின்றன.

## அரசியல் கட்சிகள்

ஜனநாயக ஆட்சி முறைக்கு கட்சி முறை முதன்மையான தேவையாகும். அரசாங்கம் சுமூகமாக நடைபெற கட்சிகள் வழிசெய்கின்றன. ஏனெனில் ஜனநாயக முறையின்படி பெரும்பான்மை பெற்றுள்ள கட்சியே அரசாங்கத்தைக் நடத்துகிறது. அதே சமயத்தில் எதிர்கட்சி, ஆளுங்கட்சியின் தவறுகளை சுட்டிக்காட்டி அதிகாரத்தை தவறான வழிகளில் செலுத்தவிடாமல் செய்கிறது. ஆளுங்கட்சி ஆட்சியுரிமையைப் பெற்றுள்ளது, எதிர்கட்சி அரசாங்கத்தை எதிர்க்கும் உரிமையைக் கொண்டுள்ளது. மேலும், ஆளுங்கட்சியின் குறைபாடுகள் மற்றும் கொள்கைகளை விமர்சனமும் செய்கிறது. ஒருமித்த கருத்துடைய மக்களால் அரசியல் அதிகாரத்தைப் பெறும் நோக்கில் உருவாக்கப்பட்ட அமைப்பே அரசியல் கட்சியாகும்.

## அரசியல் கட்சிகளின் செயல்பாடுகள்

ஜனநாயக அரசியலில், அரசியல் கட்சிகள் பல்வேறு கடமைகளை ஆற்றுகின்றன. இவை ஜனநாயக முறை நிலைத்திருக்கவும், சிறப்பாக செயல்படவும் பெரிதும் உதவுகின்றது.

பொதுக் கொள்கைகளை உருவாக்குதல்.

தேர்தலில் போட்டியிடுதல்.

மக்களுக்கு கல்வி அறிவு புகட்டுதல்.

அரசாங்கத்தை நடத்துவது மற்றும் விமர்சிப்பது.

அரசுக்கும் மக்களுக்கும் பாலமாக திகழ்வது.

மக்களை ஒன்று திரட்டுவது அல்லது இணைக்கும் அமைப்பாக செயல்படுதல் ஆகிய கடமைகளை செய்கின்றன.

### கட்சி முறையின் வகைகள்

அரசியல் கட்சிகளை ஜனநாயக முறையில் மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.




அவை முறையே பல கட்சி முறை என்பனவாகும்.

### 1. ஒரு கட்சி முறை

இம் முறையின் கீழ் ஒரே ஒரு கட்சி மட்டும் இருக்கும். இதுவே மக்களாலும் அரசியலமைப்பாலும் அங்கீகரிக்கப்பட்டதாக இருக்கும். எத்தகைய எதிர்ப்பும் இன்றி அரசியலதிகாரத்தைப் பெற்று செயல்படுத்தும். மற்ற கட்சிகள் செயல்படாது.

எ.கா. கியூபா மற்றும் சீனா

### ஒரு கட்சி முறையின் நிறைகள்

அவசரக் காலங்களில் அல்லது ஆபத்தான காலங்களின் ஒரு கட்சி முறை திறமையாகவும் சுதந்திரமாகவும் விரைவில் செயல்பட்டு ஆவனச் செய்ய முடியும்.

ஒரு கட்சி முறையில் முடிவுகள் விரைவில் எடுக்கப்படும் வாய்ப்புகள் உள்ளன. செலவினங்கள் சிக்கனமாகவும் அமையும்.

நாட்டின் பெருமைகளை பெருமளவு உயர்த்துகிறது.

### ஒரு கட்சி முறையின் குறைகள்

ஒரு கட்சி முறையில் தேசிய அளவிலான விவாதங்கள் நடைபெற இயலாது.

ஒரு கட்சி முறையில் அரசியல் உரிமைகளும், அடிப்படை உரிமைகளும் சாதாரண சுதந்திரங்களும் மறுக்கப்படுகின்றன.

ஒரு கட்சி முறை திறமையற்றதாக இருந்தால் நாட்டின் வளர்ச்சி மற்றும் முன்னேற்ற நடவடிக்கைகள் மிகவும் பாதிக்கப்படும்.

ஒரு கட்சி முறை ஏதேச்சதிகாரம் மற்றும் சர்வாதிகார முறை போன்றவற்றிற்கு வழிவகுக்கிறது.

### 2. இரு கட்சி முறை

இருகட்சி முறையில் ஒரு கட்சி ஆளுங்கட்சியாகவும மற்றொரு கட்சி எதிர்கட்சியாகவும் இருக்கும். இம்முறையில் ஒரு கட்சி அரசாங்கத்தை நடத்தும். எதிர் கட்சி ஆளுங்கட்சியின் செயல்பாடுகள் மற்றும் குறைகளை சுட்டிக்காட்டி அரசாங்கத்தைக் கட்டுப்படுத்தும். எ.கா. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மற்றும் இங்கிலாந்தில் இரு கட்சி முறை செயல்பட்டு வருகிறது.

அமெரிக்காவில் ஜனநாயகம் மற்றும் குடியரசு என இரு கட்சிகளும், இங்கிலாந்தில் தொழிலாளர்கள் கட்சி மற்றும் கன்சர்வேடிவ் (பழமைவாத கட்சி) என இரு கட்சிகளும் இயங்கி வருகிறது.

### இருகட்சி முறையின் நிறைகள்

இரண்டு கட்சிகள் இருப்பதால், மக்களுக்கு ஆளும் கட்சியைத் தேர்ந்தெடுப்பது எளிதாக இருக்கிறது.

எதிர்கட்சி ஆளும் கட்சியை விழிப்போடு செயல்பட வைக்கிறது.

### இருகட்சி முறையின் குறைகள்

இரு கட்சி முறையில் இரண்டு கட்சிகளும் மோசமாக இருக்குமேயானால் மூன்றாவது கட்சியை தேர்ந்தெடுக்கும் வாய்ப்பே இல்லை. இம்மோசமானவைகளில் ஒன்றையே தேர்ந்தெடுக்க வேண்டி வரும்.

இவ்விருகட்சிகளும் தங்களுக்குள்ளேயே ஒரு விதமான உடன்பாட்டிற்கு வந்தால் மக்கள் முட்டாளாக்கப்படுவார்கள். அதனால் கட்சியின் தவறுகள் மற்றும் ஊழல்களை மறைக்க வழிகள் உண்டு.

### 3. பலகட்சி முறை

இம்முறையின் கீழ் இரண்டிற்கு மேற்பட்ட கட்சிகள் இருக்கும். பல கட்சி முறைக்கு இந்தியா மற்றும் பிரான்சு சிறந்த உதாரணம்.

### பல கட்சி முறையின் நன்மைகள்

பல கட்சிகள் இருப்பதால் ஒவ்வொரு கட்சியும் ஆட்சியைப் பிடிக்கும் ஆர்வத்தில் நல்ல திட்டங்களை சிந்தித்து செயல்படுத்த முடியும்.

இரண்டு கட்சிகளில் உள்ள தலைவர்களை மட்டுமே நம்பியிராமல், புதிய கருத்துகளையும் புதிய கோணத்தில் பிரச்சனைகளை தீர்க்கும் சக்தியுள்ள புதிய தலைவர்களையும் தேர்வு செய்ய முடியும்.

### பல கட்சி முறையின் குறைகள்

பல கட்சிகளில் ஊழல், பிராந்திய உணர்வு, ஒரு சார்புடைமை முதலியவற்றை ஊக்குவிக்கக் கூடும்.

ஆளும் கட்சி மக்களின் நன்மையைக் கருதாமல், தன் ஆட்சியாளர்களின் நன்மையைக் கருத வாய்ப்புண்டு.

ஒரு கட்சியிலிருந்து மற்றொரு கட்சிக்குத் தாவுகின்ற கட்சித் தாவல் நடைபெறுவதின் மூலம் அரசின் நிலைத் தன்மைக்கு ஊறு ஏற்படும்.

### இந்தியாவின் அரசியல் கட்சிகள்

இந்திய அரசியல் கட்சிகளை இரு வகைகளாகப் பிரிக்கலாம். ஒரு வகையினர் தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்கள்; மற்றொரு வகையினர் மாநிலக் கட்சியைச் சேர்ந்தவர்கள்.

### தேசியக் கட்சிகள்

இந்தியத் தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்டு, நாடாளுமன்றத் தேர்தலில் பதிவு செய்யப்பட்ட வாக்குகளில் நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களில் 6 சதவீத வாக்குகளைப் பெறும் கட்சிகள் தேசிய கட்சிகள் என்றழைக்கப்படும். (உ.ம்) காங்கிரஸ், பா.ஜ.க.

தேசியக் கட்சிகள்

### மாநிலக் கட்சிகள்

மாநில சட்டசபைத் தேர்தலில் பதிவு செய்யப்பட்ட வாக்குகளில் 6 சதவீத வாக்குகளைப் பெற்று குறைந்த பட்சம் இரண்டு இடங்களைக் கைபற்றும் கட்சிகள் மாநிலக் கட்சிகள் (அ) பிராந்தியக் கட்சிகள் என்றழைக்கப்படும். இக்கட்சிகளும் தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்டவையாகும். (உ.ம்) தி.மு.க., அ.தி.மு.க மற்றும் தெலுங்குதேசம்.

**நம் நாட்டில் உள்ள சில தேசிய மற்றும் மாநிலக் கட்சிகளைக் குறிப்பிடுக.**

மாநிலக் கட்சிகள்

### தேர்தல்

மக்களாட்சியின் வெற்றி என்பது ஒரு நாட்டில் குறிப்பிட்ட இடைவேளைக்கு பிறகு நடத்தப்படும் தேர்தலைப் பொறுத்து அமைந்துள்ளது. இத்தேர்தல்கள் மூலமே மக்கள் ஆளும் கட்சியின்

செயல்பாடுகளை மதிப்பிட முடியும். இதன் மூலம் ஊழல் புரிகின்ற அரசியல் வாதிகளை விடுத்து, அவர்களுக்கு வாக்களிக்காமல் மற்றவர்களை ஆராய்ந்து தேர்ந்தெடுக்க முடியும். இவைகளை நடைமுறைப்படுத்த எல்லா ஜனநாயக நாடுகளும் வயது வந்தோர் வாக்குரிமை என்பதை நடைமுறைப்படுத்தி பின்பற்றி வருகின்றன.



மின்னனு வாக்கு இயந்திரம்

### வாக்குரிமை

இந்தியாவில் 18 வயது நிரம்பியவர்கள் தேர்தல்களில் வாக்குகளைச் செலுத்த உரிமையுள்ளவராகிறார்கள். 25 வயது நிரம்பிய இந்தியக் குடிமகன் தேர்தலில் போட்டியிடவும் அனுமதிக்கப்படுகிறார்.

### இந்தியாவில் தேர்தல் முறைகள்

இந்தியாவில் குடிமக்கள் நேரடித்தேர்தல் மூலமாகவோ (அ) மறைமுகத் தேர்தல் மூலமாகவோ தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கின்றனர்.

### I. நேரடித் தேர்தல் முறை

குடிமக்கள் தாங்களே நேரடியாக வாக்களித்து தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் முறை நேரடித் தேர்தல் முறை எனப்படும்.

இந்தியாவில் சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை இம்முறையிலேயே ஆகும்.

### II. மறைமுகத் தேர்தல் முறை

குடிமக்கள் நேரடியாக தங்களது வாக்குகளை செலுத்தாமல், தங்களின் பிரதிநிதிகளைக் கொண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை மறைமுகத் தேர்தல் முறையாகும்.

நாடாளுமன்ற மேல்சபை உறுப்பினர்கள், குடியரசுத் தலைவர் மற்றும் குடியரசுத் துணைத் தலைவர் இம்முறை மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

இவ்விரு முறைகள் தவிர வேறு சில முறைகளிலும்தேர்தல் நடத்தப்படுகின்றன. அவை பின்வருவன,

### இடைத் தேர்தல்கள்

சில சமயங்களில் ஏதாவது ஒரு தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர் மரணமடையலாம், அல்லது பதவியை விட்டு விலகலாம். அத்தகையச் சூழ்நிலையில் அந்தத் தொகுதிகளில் மட்டும் தேர்தல் நடைபெறும். இவ்வாறு நடைபெறும் தேர்தல்களுக்கு இடைத் தேர்தல்கள் என்று பெயர்.

### இடைப் பருவத் தேர்தல்கள்

சிலசமயங்களில் நாடாளுமன்றமோ, அல்லது மாநில சட்ட சபைகளோ அது செயல்படுவதற்குரிய ஆண்டுகள் முழுமையும் (தற்போது ஐந்தாண்டுகள்) பல்வேறு காரணங்களால் செயல்பட முடியாது இடையில் கலைக்கப்பட்டால், மீண்டும் அவற்றுக்குத் தேர்தல் நடத்தப்படும். இதற்கு இடைத் தேர்தல்கள் என்று பெயர்.

### எதிர்கட்சிகளின் பங்குகள்

மக்களாட்சியின் வெற்றி என்பது எதிர்கட்சிகளின் செயல்பாட்டை ஒட்டியே அமைகிறது. மக்களாட்சியில் எல்லா கட்சிகளுக்கும் பெரும்பான்மை கிடைப்பது அரிதாகும். இச்சமயங்களில் குறைந்த இடங்களைப் பெற்ற அரசியல் கட்சிகள் எதிர்கட்சிகளாகும். லோக் சபாவில் ஆளுங்கட்சிக்கு அடுத்தபடியாக இடங்களைப் பெறும் கட்சி அங்கீகரிக்கப்பட்ட எதிர்கட்சியாகும். எதிர் கட்சித் தலைவர் ஆளுங்கட்சி அமைச்சருக்கு சமமான அதிகாரங்களைப் பெற்றுள்ளார். அரசியல் சட்டப்படி வரையறுக்கப்பட்ட அதிகாரங்களைப் பெற்ற ஆளும் கட்சிகள் எவ்வாறு

முக்கியமானதாகக் கருதப்படுகிறதோ, அது போலவே எதிர்க்கட்சிகளின் பங்கும் மக்களாட்சியில் இன்றியமையாததாகும்.

ஆளும் கட்சிகள் ஏதேச்சதிகார மனப்பான்மையுடன் செயல்படாமல் இருக்கவும், அவர்களின் அதிகாரங்களை வரையறுத்திடவும், அவர்களைக் கண்காணிக்கவும் எதிர்கட்சிகள் முக்கிய பணிகளை மேற்கொள்கின்றன. இவர்களது முக்கிய பணி ஆளும் கட்சி கொள்கைகளை விமர்சிப்பதாகும். மேலும் ஆளும் கட்சிக் கொள்கைகளின் விமர்சனங்களை சட்ட மன்றங்களுக்கு வெளியே இருந்து பத்திரிகை மற்றும் இதர ஊடகங்களை ஈர்ப்பதும் இவர்களது வேலையாகும்.

எதிர்கட்சிகளுக்கு அரசாங்கத்தின் செலவினங்களை அறிந்து கொள்ள முழு உரிமையிருக்கின்றது. கேள்வி நேரங்களில், ஆளும் கட்சியினரை விமர்சிப்பதன் மூலம், தவறான முறையில் ஆளுங்கட்சியினர் அதிகாரங்களை பயன்படுத்துவதற்கு எதிர்கட்சியினர் தடைக்கற்களாக இருக்கின்றனர்.

**மக்களாட்சி ஒரு தேசத்திற்கு எவ்வாறு உதவுகிறது ?**

இந்திய அரசியல் சாசனம், மக்களாட்சி கொள்கையினை அடிப்படையாகக் கொண்டது. இந்தியா பாராளுமன்ற ஜனநாயக முறையைக் கொண்டது. இந்திய அரசியல் சாசனம் இரண்டு விதமான அரசாங்கங்களைப் பற்றி குறிப்பிடுகின்றது. ஒன்று மத்திய அல்லது நடுவண் அரசு மற்றொன்று மாநில அரசு ஆகும். மத்திய அரசிற்கு



தேர்தலில் வாக்களித்தல்

தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களை பாராளுமன்ற உறுப்பினர்கள் எனவும், மாநில அரசிற்கு தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களை சட்டமன்ற உறுப்பினர்கள் எனவும் அழைக்கிறோம். இவை தவிர உள்ளாட்சி அமைப்புகள் கிராமங்களையும், நகரங்களையும் நிர்வகிக்கின்றன.

## தேர்தல் ஆணையம்

மக்களின் பிரதிநிதிகளை, நாடாளுமன்றத்திற்கும், மாநில சட்டசபைகளுக்கும் தேர்ந்தெடுக்கும் செயலை நடத்தி முடிக்க, ஒரு தேர்தல் ஆணையம் இந்திய அரசியல் அமைப்புச் சட்டப்படி அமைக்கப்பட்டுள்ளது. இது ஒரு சுதந்திரமான அமைப்பாகும். இவ்வாணையம் புதுடில்லியைத் தலைமையிடமாகக் கொண்டு செயலாற்றி வருகிறது. இவ்வாணையத்தை **'நிர்வாச்சன் சதன்'** என்றும் அழைப்பர். இந்திய தேர்தல் ஆணையம் மூன்று நபர்களைக் கொண்டது. ஒரு தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் அவருக்கு இணையான இரண்டு உறுப்பினர்கள் தேர்தல் ஆணையர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இம் மூவரும் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுவர் இவர்களது பதவிக்காலம் ஆறு ஆண்டுகளாகும். இதில் தலைமைத் தேர்தல் ஆணையர், உச்ச நீதிமன்ற நீதிபதிகளுக்கு இணையான அதிகாரம் பெற்றவராவார்.




இந்திய தலைமைத் தேர்தல் அலுவலகம்

**இந்தியாவின் தலைமைத் தேர்தல் ஆணையர் யார் ?**

### தலைமைத் தேர்தல் அதிகாரி

ஒவ்வொரு மாநிலங்களிலும் ஒரு தலைமைத் தேர்தல் அதிகாரி உள்ளார். இவரை மாநில அரசாங்கத்தின் ஒப்புதலோடு குடியரசுத் தலைவர் நியமனம் செய்கிறார். மாநில தேர்தல் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வது இவரது வேலையாகும்.

தமிழகத்தின் தலைமைத் தேர்தல் அதிகாரி யார் ?

### தேர்தல் ஆணையத்தின் பணிகள்

தேர்தல் ஆணையம் பல்வேறு முக்கிய பணிகளை ஆற்றிவருகிறது. அவை

1. அரசியல் கட்சிகளுக்கு அங்கீகாரம் அளிப்பது.

2. தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளுக்கும், தனி வேட்பாளர்களுக்கும் தேர்தல் சின்னங்களை ஒதுக்குவது.

3. வாக்களிக்கும் நாட்களையும் வாக்குகள் எண்ணப்படும் நாட்களையும் அறிவித்தல் மற்றும் தேர்தல் இறுதி முடிவுகளை அறிவிப்பது.

நமது தாய்நாடு அதிகமான மக்கள் தொகையைக் கொண்ட உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடாகும். பல்வேறு இக்கட்டான சூழ்நிலைகளைக் கடந்து இந்தியா ஜனநாயக நெறிமுறைகளைக் காப்பாற்றுவதில் வெற்றி பெற்றுள்ளது. ஜனநாயக முறை வெற்றிகரமாக செயல்பட எல்லா கட்சிகளும், தனிப்பட்டவர்களும் நல்ல முறையில் ஒத்துழைக்க வேண்டும். அது போல தேர்தலின் பொழுது ஒவ்வொருவரும் தனது வாக்குரிமையைச் சரியாகப் பயன்படுத்தி தான் விரும்பும் அரசாங்கத்தை தேர்ந்தெடுப்பதை தம் தலையாய கடமையாகக் கொள்ளவேண்டும்.

## பயிற்சி

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. தற்காலத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற அரசாங்க முறை.
   அ) குடியாட்சி ஆ) உயர் குடியாட்சி இ) மக்களாட்சி ஈ)சர்வதிகாரம்
2. நேரடி மக்களாட்சி பழங்காலத்தில் நடைமுறையில் இருந்தது
   அ) கிரீஸ் ஆ) இத்தாலி இ) சார்டினியா ஈ) சைப்ரஸ்
3. தெலுங்கு தேசம் எனப்படுவது
   அ) மாநில கட்சி ஆ) தேசிய கட்சி இ) சர்வதேச கட்சி ஈ) கலாச்சார கட்சி
4. ஒரு நாட்டில் இரண்டு கட்சி முறை இருக்குமேயானால் அதற்கு பெயர்.
   அ) ஒரு கட்சி முறை ஆ) இருகட்சி முறை
   இ) பலகட்சி முறை ஈ) வட்டாரக் கட்சி முறை
5. எதிர் கட்சி தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அந்தஸ்து
   அ) காபினட் அமைச்சர் ஆ) இணை அமைச்சர்
   இ) மாநில அமைச்சர் ஈ) அமைச்சரவை அமைச்சர்
6. தேர்தலில் போட்டியிட தேவையான வயது
   அ) 20 ஆ) 18 இ) 25 ஈ) 35

7. மத்தியில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை கொண்ட அமைப்பு

அ) சட்டமன்றம் அ) உச்ச நீதி மன்றம்

இ) பொதுக்கட்சிகள் அவை ஈ) பாராளுமன்றம்

8. தேர்தல் ஆணையருக்கு இணையாக அதிகாரம் கொண்டிருப்பவர்

அ) உச்ச நீதி மன்ற நீதிபதி ஆ) உச்ச நீதிமன்றம்

இ) மாவட்ட நீதிபதி ஈ) மாஜிஸ்ரேட்

9. மாநில தேர்தல் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்பவர்

அ) தலைமை தேர்தல் ஆணையர் ஆ) தலைமை தேர்தல் அதிகாரி

இ) உச்ச நீதி மன்ற நீதிபதி ஈ) உயர் நீதிமன்ற நீதிபதி

10. தேர்தல் ஆணையம் அமைந்துள்ள இடம்

அ) மதராஸ் ஆ) மும்பை இ) முராதாபாத் ஈ) டெல்லி

## ஆ. சுருக்கமான விடையளி.

1. ஜனநாயம் பற்றி ஆபிரகாம்லிங்கனின் கருத்தை எழுதுக.
2. தேசியக் கட்சிகள் யாவை ?
3. அரசியல் கட்சிகள் என்றால் என்ன ?
4. அரசியல் கட்சிகளின் பணிகளை குறிப்பிடுக.
5. ஒற்றைக் கட்சி முறையின் நன்மைகளை எழுது.
6. தேர்தல் ஆணையத்தின் பணிகள் கற்றி சுருக்கமாக குறிப்பு தருக.

## இ. பத்திவினா.

1. ஜனநாயத்தின் வகைகள் மற்றும் முக்கியத்துவம் பற்றி விளக்குக.
2. தேர்தல் முறையை பற்றி குறிப்பிட்டு, அவற்றைப் பற்றி விளக்கம் தருக.
3. ஜனநாயகத்தில் எதிர்கட்சியின் பங்கினை விளக்குக.

## 3. வேற்றுமையில் ஒற்றுமை

இந்தியா, புவியியல், மதம், மொழி, இன மற்றும் கலாச்சார வேறுபாடுகளை கொண்ட ஒரு பரந்த நாடு. இந்தியாவில் மிக உயர்ந்த மலைகள், தாழ்ந்த கடற்கரைச் சமவெளிகள், வளமிக்க சமவெளிகள், பாலைவனம், பசுமைக் காடுகள், வறண்ட முட்புதர் காடுகள் மற்றும் பலவகையான தாவரங்கள், விலங்குகள் மற்றும் பண்பாடுகளைக் கொண்ட நாடு. இவ்வாறான பன்முக வேறுபாடுகளுக்கிடையே நாம் ஒற்றுமையை காத்து வருகிறோம். நமது பழமையான வரலாறும், வளமையான கலாச்சாரமுமே இந்த ஒற்றுமைக்கு காரணமாகும்.

### மதம்

இந்தியாவில் நூறு கோடிக்கும் மேற்பட்ட மக்கள் சாதி, மதம், மொழி, மற்றும் இனத்தால் பலபிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளனர். இத்தகைய பிரிவுகளால் இந்தியா மனித இனத்தைப் பற்றி படிக்கக் கூடிய அருங்காட்சியகமாகவும், ஆய்வகமாகவும் திகழ்கிறது. எனவே இந்தியாவை "மனித இனங்களின் அருங்காட்சியகம்" எனக் கூறுவது சரியே.



சமய அடையாளங்கள்

இந்தியா பல மதங்களின் பிறப்பிடமாகவும், சில மதங்களின் வாழ்விடமாகவும் விளங்குகிறது. இந்தியாவின் பழமையான மதம் வேத சமயமாகும். கி.பி முதலாம் நூற்றாண்டில் கிறிஸ்துவ மதம், யேசுவின் சீடர் செயிண்ட் தாமஸ் என்பவரால் கொண்டு வரப்பட்டது. இந்தியாவை விட்டு வெளியேற்றப்பட்ட பாரசீகர்களால் பாரசீக மதமான ஜொராஸ்டிரிய மதம் இந்தியாவில் பரப்பப்பட்டது. இந்தியாவை கைப்பற்றிய இஸ்லாமியர்கள், தங்களது மதமான இஸ்லாம் மதத்தை இந்தியாவில் காலூன்றச் செய்தனர். இம் மதங்களைத் தவிர புத்தமதம், சமண மதம், சீக்கிய மதங்களும் இந்தியாவில் தோன்றின. இத்தகைய சமய வேறுபாடுகள் நம்மிடையே இருந்தபோதிலும் நமது சமய சகிப்புத்தன்மையால் சமய பூசல்களுக்கு இடமளிப்பதில்லை.

இந்திய மக்கள் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஹிந்தி, உருது, சமஸ்கிருதம், குஜராத்தி மற்றும் வங்காளம் மேலும் பல அந்நிய, வட்டார மொழிகளை பேசுகின்றனர்.

இந்தியாவில் ஏறத்தாழ 845 மொழிகள் பேசப்படுகின்றன. அவற்றுள் 22 மொழிகள் அலுவலக மொழிகளாக அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. தேவநாகிரி வடிவிலான இந்தி, தேசிய மொழியாக தேர்வு செய்யப்பட்டுள்ளது. ஆங்கிலம் நடைமுறை மொழியாக பயன்படுத்தப்படுகிறது.

இணைப்புக் கருவியான மொழி, தற்சமயம் பிரிவினை வாதத்தை தூண்டும் கருவியாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. நம் மொழியை போன்றே பிற மொழிகளையும் உயர்வாக கருதினால், அவை நம்முடைய முன்னேற்றம், வளர்ச்சி, சகோதரத்துவத்திற்கு உதவியாக அமையும்.

## இலக்கியம்

இந்திய மொழிகளின் வளர்ச்சி இந்திய இலக்கியங்கள் உன்னத நிலையை அடைய உதவுகின்றன. சமஸ்கிருதம் மற்றும் பிற இந்திய மொழிகள் நமது எண்ணத்தையும், சிந்தனையையும் வளர்க்க உதவுகின்றன. இராமாயணமும், மகாபாரதமும் இந்தியாவின் இருபெரும் இதிகாசங்களாகும். திருவள்ளுவரால் இயற்றப்பட்ட திருக்குறள் தமிழின் மிகச் சிறந்த நூலாக கருதப்படுகிறது. பகவத் கீதை இந்துக்களின் புனித நூலாகும். உமறுபுலவரின் சீறாப்புராணம் இறைதூதர் முகம்மது நபியின் வாழ்க்கையைப் பற்றி கூறுகிறது. வீரமாமுனிவரால் இயற்றப்பட்ட தேம்பாவணி கிறித்துவ மதத்துடன் தொடர்புடையது.

## விழாக்கள்

இந்தியாவில் இந்துக்களின் விழாக்களான தீபாவளி, நவராத்திரி, விநாயகர் சதுர்த்தி, பொங்கல், சித்திரை திருவிழா, ஆடிவெள்ளி, வைகுண்ட ஏகாதசி, ஸ்ரீ ராம நவமி மற்றும் கும்பமேளா ஆகியவை அனைவராலும் கொண்டாடப்படும் முக்கிய விழாக்களாகும்.



தீபாவளி

கிறித்துமஸ் மற்றும் புத்தாண்டை கிறித்துவர்கள் கொண்டாடுகின்றனர். மிலாடி நபி மற்றும் ரம்ஜான் போன்ற விழாக்களை முஸ்லீம்கள் கொண்டாடுகின்றனர்.



பொங்கல் விழா

புத்த மதத்தினர் புத்த பூர்ணிமாவையும், சமணர்கள் மகாவீர் ஜெயந்தியும், சீக்கியர்கள் குருநானக் ஜெயந்தியும் கொண்டாடுகின்றனர். இவ்வாறாக, பல்வேறான சமய விழாக்கள், பல்வேறுபட்ட மக்களால் கொண்டாடப்படுவதால் சமயசகிப்புத்தன்மை ஏற்படுகிறது. இருப்பினும் அனைத்து சமய மக்களும் பக்தியாலும், சகிப்புத்தன்மையாலும் மட்டுமே கடவுளை அடையமுடியும் என நம்புகின்றனர்.

## பழக்கவழக்கங்கள் மற்றும் பாரம்பரியம்

இந்திய பாரம்பரியம், விருந்தோம்பல், ஈகை, நட்பு , அன்பு, சுயநலமற்றத்தன்மை, நீதி, நன்னடத்தை ஒழுக்கம், உண்மை, அமைதி, கருணை, சமய உணர்வு பெற்றோர் மற்றும் பெரியோரை மதித்தல் மற்றும் சகிப்புத் தன்மையை வலியுறுத்துகிறது. மேற்கூறிய பண்புகள், வேற்றுமைகளை மறந்து, மக்கள் ஒற்றுமையுடன் வாழ உதவுகின்றன.

## கலை மற்றும் கட்டடக்கலை

பழங்காலந் தொட்டே கட்டடகலையில் இந்தியா புகழ் பெற்று விளங்கிவருகிறது. இவை இன்றும், இன்றையச் சூழலுக்கு ஏற்றவாறு வளர்ந்து வருகின்றன. அஜந்தா

மற்றும் எல்லோரா ஓவியங்கள் உலகப் புகழ் பெற்றவை. காந்தாரக் கலையும், சிற்பங்களும் இந்தியாவின் சிற்பக் கலை பெருமையை பறைசாற்றுகின்றன. இந்தியக்கோவில்கள் இந்திய கட்டடக் கலைக்கு சிறந்த சான்றுகளாக விளங்குகின்றன.



புத்தர் சிலை

வட இந்தியர்கள் தென்னிந்தியாவிலுள்ள கோவில்களுக்கும், தேவாலயங்களுக்கும், மசூதிகளுக்கும் புனித யாத்திரைகள் மேற்கொள்கின்றனர். அதே போன்று தென்னிந்தியர்கள் வட இந்தியாவிலுள்ள காசி, மதுரா, ரிஷிகேஷ் மற்றும் ஹரித்துவார் போன்ற புனித இடங்களுக்கு யாத்திரை மேற்கொள்கின்றனர். இந்த புனித தலங்கள் இந்தியர்களிடையே ஒற்றுமையை வளர்க்கும் மையங்களாக திகழ்கின்றன.

## இசை மற்றும் நடனம்

இந்தியாவில் தோன்றிய கர்நாடகம் மற்றும் இந்துஸ்தானி இசை முறைகள் பெரும்பாலான மக்களால் விரும்பி கற்கப்படுகின்றன. பரத நாட்டியம், குச்சுப்புடி, கதக்களி, மணிப்புரி மற்றும் ஒடிசி போன்றவை இந்தியாவின் புகழ் பெற்ற நடனக் கலைகளாகும். பல்வேறு நாட்டுப்புற நடனங்களும், மக்களால் விரும்பி போற்றி பாதுகாக்கப்படுகின்றன. பல வழிகளில் இந்தியாவின் பல்வேறு நடனம் மற்றும் இசைக்கலைகள் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் வளர்க்க பெரிதும் உதவுகின்றன.



பரதநாட்டியம்

## தேசிய ஒருமைப்பாடு

புவியியல் அமைப்பு, அதனையொட்டிய மக்களின் வாழ்க்கைமுறை, பலதரப்பட்ட பழக்கங்கள், சமய நம்பிக்கைகள், மொழி, உணவு, உடைகள் போன்றவற்றால் மக்கள் வேறுபடுகின்றனர். இருப்பினும், இந்தியாவின் பாரம்பரியத்தினால் ஒன்றுபடுகின்றனர். மனிதாபிமானம், சமய உணர்வு, சகோதரத்துவம், நட்பு, அனைத்து மதத்தையும் சகித்துக்கொள்ளும் தன்மை போன்றவை இந்தியர்கள் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுடன் வாழ வழிசெய்கின்றன.

அனைவரும் பாரதத் தாயின் பிள்ளைகள் என்ற எண்ணம் மற்றும் உணர்வு, இந்தியர்கள் அனைவரும் சகோதர, சகோதரிகள் என்ற எண்ணம் போன்றவை இந்திய ஒருமைப்பாட்டை வளர்க்க பெரிதும் உதவுகின்றன. இது தவிர தேசியச் சின்னங்கள், தேசியக்கொடி மற்றும் தேசிய கீதம் போன்றவையும் தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கின்றன. ஒன்றுபட்டால் வாழ்வு, பிரிந்தால் வீழ்ச்சி என்ற உணர்வு இந்திய ஒருமைப் பாட்டிற்கு வழிவகுக்கிறது. இத்தகைய இந்திய ஒற்றுமை சிந்துசமவெளி காலத்திலிருந்து இன்றுவரை இந்திய கலாச்சாரத்தால் நிலை நாட்டப்பட்டு வருகிறது.

## பயிற்சி

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. நமது நாட்டின் பழம் பெரும் சமயம்.
   அ) வேத சமயம் ஆ) கிறித்துவ சமயம்
   இ) இஸ்லாம் ஈ) ஜொராஸ்டிரிய சமயம்
2. இந்தியாவில் அங்கீகரிக்கப்பட்ட அலுவலக மொழிகள்
   அ) 25 ஆ) 23 இ) 22 ஈ) 27
3. மொழி என்பது
   அ) போக்குவரத்து ஆ) நீர்பாசனம்
   இ) இணைப்புக் கருவி ஈ) உணர்வுப்பூர்வமானது
4. தேம்பாவணியோடு தொடர்புடையது
   அ) இந்து மதம் ஆ) சீக்கிய மதம் இ) கிறித்துவ மதம் ஈ) இஸ்லாம்
5. புத்த பூர்ணிமா கொண்டாடுபவர்கள்
   அ) இந்தியர்கள் ஆ) முஸ்லீம்கள்
   இ) சமணர்கள் ஈ) புத்த மதத்தினர்
6. ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டை வளர்ப்பதில் முக்கிய பங்கு வகிப்பது.
   அ) இசை மற்றும் நடனம் ஆ) கலை மற்றும் கட்டிடக்கலை
   இ) உணவு மற்றும் பழக்கங்கள் ஈ) ஆடை மற்றும் பழக்க வழக்கங்கள்

### ஆ. சுருக்கமாக விடையளி.

1. மனித இனத்தின் அருங்காட்சியகம் என இந்தியர்கள் அழைக்கப்படுவதேன்.
2. இந்தியாவிலுள்ள சில சமயங்களின் பெயர்களை குறிப்பிடுக.
3. நமது பழக்க வழக்கங்கள் மற்றும் பாரம்பரியம் எவ்வாறு ஒற்றுமையை வளர்க்கிறது.
4. இந்தியாவின் கலை மற்றும் கட்டிடக்கலைப் பற்றி நீவீர் அறிவது என்ன ?
5. இந்தியாவின் இசை மற்றும் நடனம் பற்றி சிறு குறிப்பு தருக.

### இ. பத்திவினா.

1. வேற்றுமையில் ஒற்றுமையை பராமரிப்பதில் மொழி மற்றும் இலக்கியம் எவ்வாறு உதவி புரிகின்றன என்பதை விளக்குக.
2. தேசிய ஒருமைப்பாடு பற்றி எழுதுக.

# 4. நுகர்வோர் உரிமைகள்

ஒரு பொருளை முழுமையாகப் பயன்படுத்துபவரே நுகர்வோர் ஆவார். ஒரு பொருளை விலைகொடுத்து வாங்கும்போதோ அல்லது அதனை உபயோகிக்கும் போதோ நாம் நுகர்வோர் ஆகிறோம். சில நேரங்களில் கடை உரிமையாளர் தரமற்ற பொருட்களையோ அல்லது பொருளை விலை கூடுதலாகவோ அல்லது சேவை குறைவாகவோ கொடுத்து நம்மை ஏமாற்றுகிறார்.

## நுகர்வோர் ஏமாற்றப்படும் விதங்கள்

சிக்கனமான முறையில் வியாபாரத்தை விரிவாக்கும் நோக்கில் பல விதமான பொருட்கள் நமக்கு சந்தைகளில் மலிவான விலையில் கிடைக்கின்றன. நமக்கு பொது நிறுவனங்களாகிய காப்பீடு, போக்குவரத்து, மின்சாரம், நிதி மற்றும் வங்கியின் மூலம் சேவைகள் கிடைக்கின்றன. நமது தேவைகள் மற்றும் சேவைகள் விளம்பரங்களின் மூலமாக நிறைவு செய்யப்படுகிறது.



பல சரக்கு கடை

நுகர்வோரை கவரும் பொருட்டு, அவர்களுக்குத் தேவையான விவரங்கள் அடங்கிய விளம்பரங்களை பெருந்தொகையை செலவு செய்து நிறுவனங்கள் வெளியிடுகின்றன. ஆனால் பொருட்களில் உற்பத்தி பற்றிய விவரங்களை வெளியிடுவதில்லை. இதனால் பொருட்களைப் பற்றிய உண்மை நிலையினை அறிந்து கொள்ள முடியவில்லை. எனவே நுகர்வோர் சில நேரங்களில் ஏமாற்றப்பட்டு, வியாபாரிகளால் துன்புறுத்தப்படுகிறார்கள்.



மின் கருவி கடை

உற்பத்தியாளர்களும், வியாபாரிகளும் பல விதங்களில் நுகர்வோரை ஏமாற்றி வருகின்றனர்.

சந்தைகளில் விற்கப்படும் பொருட்களின் அளவு மற்றும் எடை சரியாக இருப்பதில்லை. சந்தைகளில் சில சமயங்களில் தரம் குறைந்த பொருட்கள் விற்கப்படுகின்றன. காலாவதியான மருந்து, மாத்திரைகளை விற்பனை செய்வதும், தரமற்ற வீட்டு உபயோகப் பொருட்களை விற்பனை செய்வதும் பொதுவான குறைகளாக நுகர்வோரால் கருதப்படுகிறது.

பொருட்களில் அதன் உண்மையான விலையை விட கூடுதலான விலையில் விற்கப்படுகிறது. பொருட்களின் உண்மையான உற்பத்தியாளர்களின் பெயரில் போலியான பொருட்கள் விற்கப்படுகின்றன.

## நுகர்வோரின் உரிமைகள்

நுகர்வோரின் உரிமைகள் இந்திய சட்டத்தில் தொகுத்தளிக்கப்பட்டுள்ளது. இதனை வியாபார சமூகத்தினர் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும்.

### உரிமைகள்

நுகர்வோரின் பொருட்கள் அவர்களது வாழ்க்கைக்கும், அவர்களது சொத்திற்கும் பாதிப்பினை ஏற்படுத்தும் வேளையில் அவர்கள் அந்தப் பொருட்களைக் குறித்தும் அவர்களது சேவைகள் குறித்தும் தங்களது எதிர்ப்பினைத் தெரிவிக்கும் உரிமை பெற்றுள்ளனர். பொருட்களின் தரம், அளவு, தன்மை, அதனுடைய உண்மை நிலை, பொருட்களின் விலை ஆகியவை குறித்த உண்மையான நிலைகளை, தெளிவாக நுகர்வோர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். பல வகையான பொருட்களை நியாயமான விலையில் பெறுவதற்கான வாய்ப்பும் வசதிகளும் செய்து கொடுக்கப்படுவது, தனிப்பட்ட வியாபாரிடமிருந்து நுகர்வோர், பொருளை வாங்கும் போது அந்தப் பொருள் தரமானதாகவும், நியாயமான விலையில் இருக்கிறது என்று சொல்வதற்கும் உரிமை பெற்றுள்ளார். நுகர்வோரின் நலன்கள், சம்பந்தப்பட்ட துறைகள் மூலம் தீர்வு செய்யப்பட வேண்டும். தவறான வியாபார முறைகள் குறித்தோ அல்லது நுகர்வோர் தாங்கள் சுரண்டப்படுகின்ற வேளையிலோ, தங்களுக்குச் சரியான தீர்ப்பு கிடைக்கும் வகையில் நுகர்வோர் தங்களது குறைகளை எடுத்துக்கூறி தீர்வைப் பெற்றுக் கொள்ளலாம். நுகர்வோரின் நலனுக்கான பொருட்கள் பற்றிய தகவல்கள் அடங்கிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். 2005 ஆம் ஆண்டு அக்டோபர் 12ம் நாள் தகவல் அறியும் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதனால் பொது நிறுவனங்கள் சார்ந்த அனைத்து நடவடிக்கைகளையும் அறிந்து கொள்வது பொது மக்களின் அடிப்படை உரிமையாகும்.

### தகவல் அறியும் சட்டத்தின் நோக்கங்கள்

ஒளிவு மறைவற்ற நேர்மையான, நம்பகத்தன்மையான செயல்பாடுகளில் பொது நிறுவனங்கள் செயல்படுதல் வேண்டும். பொது நிறுவனங்களின் செயல்பாடுகளை அறிந்து கொள்ள பொது மக்களுக்கு வாய்ப்பளிக்கப்படுகிறது.

மத்திய, மாநில, மாவட்ட மற்றும் உள்ளாட்சி அமைப்புகளைச் சார்ந்த பஞ்சாயத்துக்கள் மற்றும் நகராட்சி அமைப்புகள் போன்ற அனைத்து விவரங்களையும் அறிந்து கொள்ளும் பொருட்டு தகவல் அறியும் உரிமைச்சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. தனியார் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள், அரசாங்கம் மற்றும் பொதுமக்களின் நிதியைக் கையாளும் நிறுவனங்கள் இச்சட்டத்திற்கு உட்பட்டது. இந்நிறுவனங்களைச் சார்ந்த அனைத்து தகவல்களையும் எழுத்து மூலமாகவோ அல்லது ஆவணங்களைப் பெறுகின்ற உரிமையோ ஒவ்வொரு குடிமகனின் உரிமை ஆகும். இத்தகைய உரிமை, இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் அடிப்படை உரிமையாகச் சேர்க்கப்பட்டுள்ளது. பொது நிறுவனங்களிடமிருந்து நுகர்வோர் தங்களுக்குத் தேவையான தகவல்கள் அறிய வகை செய்யும் சட்டம் மக்களின் அடிப்படை உரிமையென பாராளுமன்றத்தால் சட்டமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

### நுகர்வோரின் பாதுகாப்பு நடவடிக்கைகள்

நுகர்வோரின் தேவைகளைப் பாதுகாக்கும் பொருட்டு அரசு மூன்று வழிமுறைகளை வகுத்துள்ளது

1. சட்டம் சார்ந்த நடவடிக்கைகள்

நுகர்வோர் பாதுகாக்கும் சட்டத்தை ஏற்படுத்துதல்

2. நிர்வாகம் சார்ந்த நடவடிக்கைகள்

பொது விநியோக முறையில் அத்தியாவசியப் பொருட்கள் விநியோகித்தல்

3. தொழில் நுட்பம் சார்ந்த நடவடிக்கைகள்

பொருட்களின் தரம் பாதுகாக்கப்படல்

### அ. நுகர்வோர் உரிமைகள் சார்ந்த சட்டங்கள்

**1986–ம்** ஆண்டு நுகர்வோரைப் பாதுகாக்கும் பொருட்டு, அரசால் இயற்றப்பட்ட சட்டம் நுகர்வோர்

பாதுகாப்புச் சட்டம் என்று அழைக்கப்படுகிறது. நுகர்வோர் நலன்களை பாதுகாக்கும் பொருட்டு மத்திய, மாநில அரசுகளில் தனித்தனி துறைகள் செயல்பட்டு வருகிறது. இந்தச் சட்டத்தின் மூலம் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தில் உள்ள அம்சங்கள் விவரிக்கப்பட்டுள்ளன.

### சட்டப்படி புகார் செய்யும் முறைகள்

புகார் அளிப்பதற்கென்று தனி முறைகள் எதுவும் இல்லை. நுகர்வோர், ஒரு வியாபாரியினாலோ அல்லது உற்பத்தியாளராலோ ஏமாற்றப்படும் பொழுது, ஒரு வெள்ளைத்தாளில் தனது புகாரை எழுதி தாக்கல் செய்யலாம். பொருள் சம்பந்தமான ரசீதுகள், உத்திரவாதம், பாதுகாப்பு நகல்கள் ஆகியவற்றை அத்துடன் சேர்த்து இணைத்து மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும். நுகர்வோர் வேறு எந்த வழக்கறிஞர் உதவியை நாடவேண்டிய அவசியமில்லை. நுகர்வோர் தாமே இந்த விவகாரம் தொடர்பாக நுகர்வோர் நீதிமன்றத்தில் வழக்காடலாம்.

இந்த சட்டத்தின் முக்கியமான அம்சம் மூன்று அடுக்குகளாக தேசிய அளவில், மாநில அளவில் மற்றும் மாவட்ட அளவில் விசாரணைகள் மேற்கொள்ள நுகர்வோர் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தேசிய அளவில்: தேசிய நுகர்வோர் கழகம் (டெல்லி)

மாநில அளவில்: மாநில நுகர்வோர் கமிஷன்

மாவட்ட அளவில்: மாவட்ட அமைப்பு

### ஆ. பொது விநியோக முறை

பொது நிர்வாக முறையின் கீழ் அனைத்து ஏழைகளுக்கும் உணவுப் பொருட்கள் வழங்கப்படுவதை உறுதிசெய்வது, உணவுப்பொருட்கள் கடத்தல்களையும், பதுக்கல்களையும் தடுப்பது, வியாபாரிகள் அதிக விலைக்கு பொருட்களை விற்பதையும் தடுப்பதற்காக பொது விநியோக முறை வலுப்படுத்தப்பட வேண்டும்.

### இ. தரமான உற்பத்தியைப் பெருக்குதல்

நுகர்வோரின் நலன் கருதி தரமற்ற பொருட்கள் மற்றும் தவறான பொருட்கள் விற்கப்படுவதை தடுக்கும் பொருட்டு அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இந்தியாவில், பொருட்களின் தரத்தைக் குறிக்கும் பொருட்டு அதன் மீது இந்திய தரக்குழுமம் குறியீடு (BIS) மற்றும் அக்மார்க் குறியீடு குறிக்கப்பட்டுள்ளன. இதில் தொழில் சார்ந்த மற்றும் நுகர்வோர் பொருட்களின் மீது BIS என்றும் விவசாயம் சார்ந்த பொருட்களின் மீது அக்மார்க் முத்திரையும் பொறிக்கப்படுகிறது.

இந்தியாவில் இருப்பதைப் போன்று உலகில், பொருட்களின் தரத்தை உறுதி செய்வதற்கு உலகத்தர அமைப்பு (ISO) 1947 ஆம் ஆண்டு ஜெனிவாவில் துவக்கப்பட்டது. இது ஒரு அரசு சாரா நிறுவனமாகும். உலக அளவில் பொருட்களின் தரத்தை அறிந்து கொள்ளும் பொருட்டு இதன் செயல்பாடுகள் அமைந்துள்ளன.

உணவுப் பொருட்கள் சம்பந்தப்பட்ட உலகத் தரத்தினை அறிந்து கொள்ளும் பொருட்டு கோடாக்ஸ் அலுமென்டேஷன் கமிஷன் (Codex Alimentation Commission) நிறுவப்பட்டது. இந்த நிறுவனம் (CAC), 1963 ஆம் ஆண்டு இத்தாலியில் ரோம் நகரில், உணவு மற்றும் வேளாண்மைத் துறை நிறுவனம் (FAO) மற்றும் உலக சுகாதார நிறுவனம் (WHO) போன்றவற்றை நிறுவியது. இந்த நிறுவனம் உணவுப் பொருட்களின் தரத்தை உயர்த்துவதிலும், பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவதற்கான வழிமுறைகள், ஆலோசனைகள், சர்வதேச அளவில் உணவுப் பொருட்கள் வியாபாரம் செய்யப்படும் வழிமுறைகள் பற்றிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 24–ம் தேதி, இந்திய தேசிய நுகர்வோர் தினமாக அனுசரிக்கப்படுகிறது. அந்த நாளில் தான் 1986–ம் ஆண்டு இந்தியப் பாராளுமன்றம் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தினை இயற்றியது. ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 15–ம் நாள் 'உலக நுகர்வோர் தினம்' அனுசரிக்கப்படுகிறது. 1962ஆம் ஆண்டு இதே நாளில் தான் நுகர்வோரின் உரிமைகள் அடங்கிய நகல் அமெரிக்க காங்கிரஸ் சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. எனவே அந்த நாள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாளாகக் கருதப்படுகிறது.

ரால்ஃப்நாடார் என்பவர் நுகர்வோர் இயக்கத்தின் தந்தை என்று கருதப்படுகிறார்.

### 'கோப்ரா' வின் தோற்றம்

நுகர்வோரின் குறைகளை வெளிப்படுத்தும் உரிமையின் காரணமாக நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் (COPRA) 1986–ஆம் ஆண்டு இந்தியாவில் இயற்றப்பட்டது. இச்சட்டம் நுகர்வோரின் மகாசாசனம் என்று அழைக்கப்படுகிறது.

### நுகர்வோரை பாதுகாக்கும் வகையில் தமிழக அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள்

அனைத்து வகையான கல்வி நிறுவனங்களிலும் நுகர்வோர் கழகங்கள் அமைக்கப்படுதல், கிராமப்புறங்களில் நுகர்வோர் பற்றிய விழிப்புணர்வை மகளிர் சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி மன்ற பிரதிநிதிகள் மூலம் ஏற்படுத்தப்படுகிறது. நகர்புறங்களில் குடியிருப்பு நல சங்கங்களின் மூலம் அறிமுகப்படுத்தப்படுகிறது. கருத்தரங்கம் மற்றும் பொது பணிமனையின் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுதல். 'தமிழ்நாடு நுகர்வோர் கவசம்' என்ற மாத இதழின் மூலம் மக்களுக்கு விழிப்புணர்வு உண்டாக்கப்படுகிறது. நுகர்வோர் பற்றிய விழிப்புணர்வு வானொலி, தொலைக்காட்சி மற்றும் குறும்படங்களின் மூலம் பொது மக்களுக்கு பிரச்சாரம் செய்யப்படுகிறது. குடிமக்களை மதிப்புள்ள நுகர்வோராக உருவாக்கும் பொருட்டு தமிழக அரசுடன் இணைந்து பல நுகர்வோர் சங்கங்கள் நுகர்வோருக்குத் தேவையான அறிவினையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்தி வருகின்றன.



நியாயவிலைக் கடை

### பல்வேறு நாடுகளிலுள்ள நுகர்வோர் சட்டங்கள்

#### அமெரிக்க ஐக்கிய நாடுகள்

அமெரிக்காவில், நுகர்வோர் நலன்களைப் பாதுகாக்கும் பொருட்டு மத்திய, மாநில அளவில் பல வகையான சட்டங்களை இயற்றப்பட்டுள்ளன. அவைகள் 'கூட்டமைப்பு நியாய கடன் வசூல் முறைச் சட்டம்' (The Federal Fair Debt Collection Practices Act) 'நியாய கடன் அறிக்கைச் சட்டம்' (Fair Credit Reporting Act), 'உண்மை கடனளிப்புச் சட்டம்' (Truth in Lending Act) போன்றவைகளாகும். மாநில அளவில் பல துறைகள் உருவாக்கப்பட்டு, நுகர்வோரின் நலன்களை பாதுகாக்கும் பொருட்டு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

#### ஐக்கிய பேரரசு (UK)

ஐரோப்பிய கூட்டமைப்பில் ஐக்கிய பேரரசு ஒரு அங்கமாக உள்ளது. ஐரோப்பிய கூட்டமைப்பில் உள்ள நுகர்வோர் பாதுகாப்புச் சார்ந்த சட்டங்களை செயல்படுத்துகிறது. இது நுகர்வோரின் பாதுகாவலனாகவும் செயல்படுகிறது.

### ஜெர்மனி

நுகர்வோரின் உரிமைகள் மற்றும் பாதுகாக்கும் பொறுப்பு ஒரு கூட்டாட்சி அமைச்சரவை மந்திரிக்கு அளிக்கப்பட்டுள்ளது.

### நுகர்வோர் சட்டத்தின் நிறைகள்

1.விழிப்புணர்வு ஏற்படுத்துதல் – நுகர்வோர் சட்டம் மக்களிடையே பொருட்களின் விலை, தரம் மற்றும் சேவை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.

2. சமூகம் பற்றியவை – பொருட்களின் உற்பத்தி மற்றும் சேவை பிறரைப் பாதிக்காமல் இச்சட்டம் செயல்படுகிறது.

3. சுற்றுச்சூழல் பற்றியது – நுகர்வோரின் பொருள் பயன்பாட்டால் சுற்றுச்சூழலில் ஏற்படும் விளைவுகளை அறிந்து கொள்ள உதவுகிறது.

### நுகர்வோர் சட்டத்தின்குறைகள்

1. பல வழிகளில் நுகர்வோர் கவர்ச்சிகரமான விளம்பரங்களின் மூலமாகப் பாதிக்கப்படுகின்றனர்



சமூக விழிப்புணர்வு

2. விற்பனையாளர்கள் நுகர்வோரின் பலவீனங்களைப் புரிந்து கொண்டு அதற்கேற்றாற்போல் பொருட்களை மாற்றுதல், பரிசு கொடுத்தல், குலுக்கல் நடத்துதல் போன்றவைகள் மூலம் நுகர்வோர்களை ஏமாற்றுகின்றனர். இதனால் ஏற்படும் பிரச்சனைகளை ஏராளமானோர் நுகர்வோர் மன்றங்களுக்கு கொண்டு செல்வதில்லை.

3. நுகர்வோர் ஒரு ராஜாவைப் போல் இருந்தாலும் அவர்கள் அநேக நாடுகளில் பலவழிகளில் ஏமாற்றப்படுகிறார்கள்.



சுற்றுச் சூழல் விழிப்புணர்வு

4. மக்களுக்கு நுகர்வோர் உரிமைகள் மற்றும் பொருட்கள் பற்றிய போதுமான விழிப்புணர்வு இல்லை.

### நுகர்வோருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய நடப்புத் திட்டங்கள்

உயர் அதிகாரிகளுக்கு, தலைவர்களுக்கு உரிய பயிற்சிகள், கலந்துரையாடல்கள் மூலமாகவும் மற்றும் பொதுக் கல்வி நடவடிக்கைகள் மூலமாகவும் கொடுக்கப்பட வேண்டும்.

### பிற நடவடிக்கைகள்

நுகர்வோர் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பிற நடைமுறைகள்

- வர்த்தகக் கண்காட்சி.
- நுகர்வோர் விழா.
- சுயஉதவிக் குழுக்களுக்கும், பஞ்சாயத்து குழுக்களுக்கும் நுகர்வோர் விழிப்புணர்வு குறித்த பயிற்சி கொடுத்தல்.
- கூட்டு ஆர்வலர்கள்.
- குடியிருப்போர் நலச் சங்கங்கள் மூலம் நுகர்வோர் உரிமைகள் குறித்து கருத்தரங்கம் / பயிற்சி நடத்துதல்.
- வியாபார நோக்கமற்ற பணிமனைகள் நடத்துதல்
- வங்கிக்கடன் அட்டைகள் வாயிலாக கருத்தரங்கங்கள்.

• கைபேசி மூலம் கருத்தரங்கங்கள் நடத்துதல் போன்றவற்றின் மூலம் நுகர்வோர் உரிமைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் மூலம் அரசாங்கம், மக்களிடையே நுகர்வோர் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தி வருகின்றன.

## பயிற்சி

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. ஒரு பொருளை முழுவதுமாக பயன்படுத்துவோர்.

   அ) உற்பத்தியாளர் ஆ) நுகர்வோர்

   இ) கடைக்காரர் ஈ) விவசாயி

2. நுகர்வோரை ஏமாற்றுபவர்கள்

   அ) மரவேலை செய்பவர்கள் ஆ) விவசாயி

   இ) தையல்காரர் ஈ) வியாபாரி

3. தகவல் அறியும் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது

   அ) அக்டோபர் 12, 2005 ஆ) அக்டோபர் 21, 2005

   இ) அக்டோபர் 12, 2006 ஈ) அக்டோபர் 21, 2006

4. உலக நுகர்வோர் தினமாக கொண்டாடப்படுவது.

   அ) மார்ச் 15 ஆ) மார்ச் 16 இ) மார்ச் 14 ஈ) மார்ச் 11

5. நுகர்வோரின் மகா சாசனம்

   அ) உலக சுகாதார நிறுவனம் ஆ) நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்

   இ) எக்ஸ்னோரா ஆ) உணவு மற்றும் வேளாண்மைக் கழகம்

6. நுகர்வோருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தக்கூடிய திட்டங்களில் ஒன்று

   அ) வன மகா உட்சவம் ஆ) ஆப்பரேஷன் 21

   இ) வர்த்தக கண்காட்சி ஈ) ராஜராஜன் 1000

### ஆ. சுருக்கமான விடையளி.

1. நுகர்வோர் எவ்வாறு ஏமாற்றப்படுகின்றனர் ? ஏதேனும் இரண்டு முறைகளை குறிப்பிடுக.
2. கோப்ரா தோற்றம் பற்றி சிறு குறிப்பு வரைக.
3. நுகர்வோர் ஏமாற்றப்படுவதை தடுக்க தமிழக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் ஏதேனும் இரண்டைப் பற்றி எழுதுக.

### இ. பத்திவினா.

1. நுகர்வோர் உரிமைகள் பற்றி எழுதுக.
2. நுகர்வோரைப் பாதுகாக்க தமிழக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?



# பொருளியல்

## 1. நாட்டு வருமானம்

### அறிமுகம்

நாம் சமுதாயத்தில் மக்களை செல்வந்தர்கள், நடுத்தர வர்க்கத்தினர் மற்றும் ஏழைகள் என தனிநபர் வருமானத்தின் அடிப்படையில் வகைப்படுத்துகிறோம். அதுபோல உலக நாடுகளை அவற்றின் நாட்டு வருமானத்தின் அடிப்படையில் வளர்ந்த நாடுகள் மற்றும் வளர்ந்து வரும் நாடுகள் என இருவகைகளாகப் பிரிக்கிறோம். ஒரு நாட்டின் வருமானம் அந்நாட்டின் பொருளாதார வளர்ச்சியைக் குறிக்கும் குறியீடுகளில் ஒன்றாக அமைகிறது. ஒரு நாட்டின் வருமானம் அந்நாடு மேற்கொள்ளும் அனைத்து பொருளாதார நடவடிக்கைகளைப் பொறுத்தே தீர்மானிக்கப்படுகிறது. எனவே நாட்டு வருமானம் என்றால் என்ன? அதன் அடிப்படைக் கூறுகள் யாவை? கணக்கிடும் முறைகள் மற்றும் நாட்டு வருமானத்தை அறிவதன் அவசியம் போன்றவற்றைப் பற்றி நாம் இனி காண்போம்.

## நாட்டு வருமானம்

**வரையறை:** நாட்டு வருமானம் என்பது "ஒரு நாட்டில் ஓராண்டு காலத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பின் அளவையே ஆகும். நாட்டு வருமானம்" "மொத்த நாட்டு உற்பத்தி" (GNP–Gross National Product) என்றும் அழைக்கப்படுகிறது. எனவே, நாட்டு வருமானம் என்பது ஒரு நாட்டின் மொத்த வருமானத்தைக் குறிக்கும் சொல்லாகும்.

பொருட்கள் என்பது உற்பத்தி செய்யப்பட்ட கார்கள், இரு சக்கர வாகனங்கள், கப்பல்கள், இரயில் என்ஜின்கள், பேனா, பென்சில், அரிசி, கோதுமை, மற்றும் சமையல் எண்ணை போன்ற பொருட்களைக் குறிக்கும்.

பணிகள் என்பது மருத்துவர், பொறியாளர், ஆசிரியர் மற்றும் கைவினைஞர்கள் போன்றவர்களின் பணிகளாகும்.

## அடிப்படைக் கருத்துக்கள்

### 1. மொத்த நாட்டு உற்பத்தி

(GDP)–(Gross Domestic Product) ஒரு நாட்டில் ஓராண்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் பணிகளின் மதிப்பும், அந்நாட்டு மக்கள் ஓராண்டில் ஈட்டிய வருமானமும், வெளிநாட்டு முதலீட்டின் மூலம் கிடைக்கும் இலாபமும் சேர்ந்ததே மொத்த நாட்டு உற்பத்தியாகும்

### 2. மொத்த உள்நாட்டு உற்பத்தி

(GNP-Gross National Product) ஒரு நாட்டின் புவியியல் எல்லைக்குள் ஓர் ஆண்டில் அந்நாட்டிற்கு சொந்தமான உற்பத்திக் காரணிகளால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பைக் குறிக்கும்.

உற்பத்திக் காரணிகள் என்பது நிலம், உழைப்பு, மூலதனம் மற்றும் தொழிலமைப்பைக்குறிக்கும்.

### 3. நிகர நாட்டு உற்பத்தி

(NNP- Net National Product) மொத்த நாட்டு உற்பத்தியில் இருந்து தேய்மானச் செலவை கழித்தபின் கிடைக்கும் பண மதிப்பு நிகர நாட்டு உற்பத்தியாகும்.

**நிகர நாட்டு உற்பத்தி=மொத்த நாட்டு உற்பத்தி (–) தேய்மானச் செலவு**

உற்பத்தியில் மூலதனப் பொருட்களின் (இயந்திரங்கள்) பழுதை சரி செய்ய மேற்க் கொள்ளப்படும் செலவினங்கள் தேய்மானச் செலவு என்றழைக்கப்படுகிறது.

### 4. நிகர உள்நாட்டு உற்பத்தி

(NDP–Net Domestic Product) மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இருந்து தேய்மானச் செலவை கழித்தால் கிடைப்பது நிகர உள்நாட்டு உற்பத்தி.

நிகர உள்நாட்டு உற்பத்தி = மொத்த உள்நாட்டு உற்பத்தி(–)தேய்மானச் செலவு.

### 5.தலா வருமானம்(Percapita Income)

நாட்டு வருமானத்தை அந்நாட்டின் மொத்த மக்கள் தொகையால் வகுக்க கிடைக்கும் ஈவு தலா வருமானம் என்றழைக்கப்படுகிறது. மக்களின் வாழ்க்கைத்தரத்தை அளக்கப் பயன்படும் கருவி தலா வருமானமாகும். தலா வருமானம் உயர்ந்தால் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்ததாகக் கருதப்படும்.

$$\text{தலா வருமானம்} = \frac{\text{மொத்த உள்நாட்டு உற்பத்தி}}{\text{நாட்டின் மக்கள் தொகை}}$$

**நாடுகளின் தலா வருமானம் ஒப்பீடு**

| நாட்டின் பெயர் | தலா வருமானம் (அமெரிக்க டாலரில்) |
|---|---|
| ஜப்பான் | 47490 |
| அமெரிக்க ஐக்கிய நாடுகள் | 46040 |
| இங்கிலாந்து | 42740 |
| ஜெர்மனி | 38860 |
| பிரான்ஸ் | 38500 |
| இத்தாலி | 33540 |
| பிரேசில் | 4870 |
| சீனா | 2360 |
| இலங்கை | 1540 |
| இந்தியா | 950 |
| பாக்கிஸ்தான் | 870 |
| வங்காளதேசம் | 470 |

ஆதாரம்: உலக வங்கி அறிக்கை

## நாட்டு வருமானத்தைக் கணக்கிடும் முறைகள்

ஒரு நாட்டின் நாட்டு வருமானத்தை கீழ்க்கண்ட முறைகளில் கணக்கிடலாம்.

1. உற்பத்தி முறை.
2. வருமான முறை.
3. செலவினமுறை.

### 1. உற்பத்தி முறை

நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் மற்றும் பணிகளின் ஒட்டு மொத்த மதிப்பை கணக்கில் எடுத்துக் கொண்டு இம்முறையில் நாட்டு வருமானம் கணக்கிடப்படுகிறது.

### 2. வருமான முறை

இம்முறையில் நாட்டில் உள்ள அனைத்து மக்களின் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படுகிறது.

### 3. செலவின முறை

இம்முறையில் மக்களின் நுகரும் பொருட்களுக்கான செலவு, முதலீடு, சேமிப்பு மூன்றின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.

இந்தியாவில் பொதுவாக உற்பத்திமுறை மற்றும் வருமான முறையில் நாட்டுவருமானம் கணக்கிடப்படுகிறது.

## நாட்டு வருமானக் கணக்கீட்டில் காணப்படும் பிரச்சனைகள்

### 1. கருப்புப் பணம்

கருப்புப் பணம் என்பது கணக்கில் காட்டப்படாத பணமாகும். சட்டத்திற்குப் புறம்பான வழிகளில் ஈட்டப்பட்ட வருவாய் ஆகும். மேலும் கருப்புப்

பணமானது ஒட்டு மொத்த சமுதாயத்தை பாதிப்பதுடன் பொருளாதார வளர்ச்சியையும் பாதிக்கிறது. எனவே கருப்புப் பணமானது நாட்டு வருமானத்தை குறைத்து மதிப்பிட வழிவகை செய்கிறது.

### 2. பணம்சாரா பொருளாதாரம்

கிராமப் பகுதிகளில் பெரும்பாலான பரிமாற்றங்கள் முறையற்ற பண்டமாற்று முறையில் நடை பெறுகிறது. இம்முறை பணம்சாரா பொருளாதாரம் என்று அழைக்கப்படுகிறது. எனவே இத்தகைய பணம்சாரா பொருளாதாரம் நாட்டு வருமானக்கணக்கீட்டை உண்மை அளவைவிட குறைத்து மதிப்பீடுகிறது.

### 3. இருமுறை கணக்கிடுதல்

இருமுறை கணக்கிடுதல் என்பது பண்டங்கள் உற்பத்தியில் இடுபொருட்களின் மதிப்பு இரண்டுமுறை கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதாகும். இடுபொருட்களின் மதிப்பு முதலிலும் பின் முடிவுற்ற பண்டங்களின் மதிப்பிலும் சேர்ந்து கணக்கிடப்படுவதாகும். இதனால் நாட்டு வருமானக் கணக்கீடு உண்மை நிலையை பிரதிபலிப்பதில்லை.

### 4. நம்பத்தகுந்த புள்ளி விபரங்கள் இன்மை

வேளாண்மைத்துறையில் திரட்டப்படும் வருமானம் குறித்த புள்ளி விபரங்கள் நம்பகத்தன்மை அற்றதாகக் காணப்படுகிறது. இதனால் நாட்டு வருமானக் கணக்கீடு நம்பகத்தன்மை அற்றதாகவும், அறிவியல் தன்மை கொண்டதாகவும் இல்லை.

### 5. இல்லதரசிகளின் பணிகள்

வீட்டு வேலைகள், வீட்டைப் பராமரித்தல், சமூகப் பணிகள் போன்றவற்றின் மதிப்பை நாட்டு வருமானம் கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை. நாட்டு வருமான மதிப்பீட்டில் நம் நாட்டுப் பெண்கள் வீட்டில் மேற்கொள்ளும் மதிப்பு மிக்க பணிகள் நாட்டு வருமானக் கணக்கீட்டில் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை.

### 6. சமூகப் பணிகள்

நாட்டு வருமானக் கணக்கீடு தானே முன்வந்து செய்பவர்களின் பணிகள் மற்றும் ஊதியமில்லாத சமூகப் பணிகளின் மதிப்பையும் புறக்கணித்துவிட்டது. பல்லாயிரக்கணக்கான ஏழைகள், ஆதரவற்றோர், அனாதைகள் மற்றும் நோயாளிகள் ஆகியோருக்கு அன்னை தெரசா ஆற்றிய மதிப்பு மிக்க புனிதப் பணியானது நாட்டு வருமானக் கணக்கீட்டில் சேர்த்துக் கொள்ளப்பட வில்லை.

### நாட்டு வருமானத்தைப்பற்றி அறிந்து கொள்வதன் அவசியம்

1. ஒரு நாட்டின் பொருளாதார செயல்பாடுகளின் நிலையை கணக்கிட பயன்படுகிறது.

2. ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் பணிகளின் மதிப்பை அறியப் பயன்படுகிறது.

3. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் போக்கையும் வேகத்தையும் மற்றும் முந்தைய ஆண்டுகள் மற்றும் மற்ற நாடுகளுடன் நாட்டு வருமானத்தை ஒப்பிட்டுப் பார்க்கவும் பயன் படுகிறது.

**4.** நாட்டு வருமானத்தில் முதன் மைத்துறை, இரண்டாம் துறை மற்றும் பணிகள்துறை பங்களிப்பின் அமைப்பை அறியப்பயன்படுகிறது.

**5.** பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்கவேண்டி அரசு கொள்கைகளை வகுக்கவும் திட்டமிடவும் பயன்படுகிறது.

முதன்மைத் துறை என்பது வேளாண்மை, வனத்துறை, மீன் பிடித்தல் மற்றும் சுரங்கங்கள் போன்றவற்றைக் குறிக்கும்.

இரண்டாம் துறை என்பது உற்பத்தி, மின்சாரம் போன்றவையாகும்.


பணிகள் துறை என்பது செய்தி, தொலைத் தொடர்பு, போக்குவரத்து, வணிகம், வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள் மற்றும் கட்டுமானத் துறையைக் குறிக்கும்.

இந்திய நாட்டு வருமானத்தில் துறைகளின் பங்களிப்பு

| துறைகள் | விழுக்காடு |
|---|---|
| முதன்மை துறை | 15.8 |
| இரண்டாம் துறை | 25.8 |
| பணிகள் துறை | 58.4 |

ஆதாரம்: மத்திய புள்ளியியல் நிறுவனம்

இந்தியாவில் நாட்டு வருமானத்தின் போக்கு (விழுக்காடு)




ஆதாரம்: மத்திய புள்ளியியல் நிறுவனம்

### பொருளாதார முன்னேற்றத்தில் அரசின் பங்கு

நவீன காலங்களில் அரசின் பங்கு முற்றிலும் மாறுபட்டுள்ளது. பழங்காலங்களில் அரசின் தலையிடாக் கொள்கையே (Laissez- faire) அதிகம் நடைமுறையில் இருந்தது. பழங்கால அரசுகள் ஏறத்தாழ காவல் அரசுபோல (Police State) செயல்பட்டன. சட்டம் ஒழுங்கை பாதுகாத்தல், நீதி வழங்குதல், மற்றும் அந்நிய நாட்டுப் படை எடுப்பில் இருந்து நாட்டைப் பாதுகாத்தல் போன்ற

பணிகளை மட்டுமே அரசு மேற்க் கொண்டு வந்தது. அண்மைக்காலத்தில் அரசுகள் மக்களின் தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றும் நலம் நாடும் அரசுகளாகச் செயல்பட்டு வருகின்றன.

தலையிடாக் கொள்கை (Laissez–faire) என்பது அரசு பொருளாதார செயல்பாடுகளில் ஈடுபடாமல் இருப்பது ஆகும்.

**அரசின் பணிகள் கீழ்க்கண்டவை ஆகும்.**

### 1. பாதுகாப்புப் பணிகள்

ஒரு நாட்டில் அமைதி நிலவினால் மட்டுமே பொருளாதார முன்னேற்றம் அடைய இயலும் எனவே மக்களை அந்நிய நாட்டு படை எடுப்பு மற்றும் உள் நாட்டு கலவரங்களில் இருந்து பாதுகாப்பதோடு மட்டும் அல்லாமல் சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பது அரசின் முதன்மைப் பணியாகும்.

### 2. நிர்வாகப் பணிகள்

மக்கள் பணியாற்றுவதற்கு சட்ட மன்றம், நிர்வாகம் மற்றும் நீதித்துறை மூன்றும் அரசின் முக்கிய அலகுகளாகச் செயல்படுகிறது.

### 3. சமூகப்பாதுகாப்புப் பணிகள்

அரசானது சமூகப்பாதுகாப்புப் பணிகளாக ஏழைகள், உடல் நலமற்றோர் மற்றும் வேலையற்றோர்களுக்கு நிவாரண உதவிகளை அளிக்கிறது.

### 4. பொருளாதாரப்பணிகள்

வேளாண்மை வணிகம் மற்றும் தொழிற்வளர்ச்சிக்காக பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்க் கொள்கிறது.

எனவே பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்த அரசு பல்வேறு பணிகளை மேற்க்கொண்டு வருகிறது.

## பயிற்சி

**அ) சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுது.**

1. நாட்டு வருமானத்தின் மற்றொரு பெயர் ____________.

   அ) உண்மை வருமானம் ஆ)பணவருமானம்

   இ)மொத்த நாட்டு உற்பத்தி ஈ) பெயரளவு வருமானம்

2. நாட்டு வருமானத்தை கணக்கிடும் வழிமுறைகள் ____________.

   அ) 2 முறைகள் ஆ) 3 முறைகள் இ) 4 முறைகள் ஈ) 5 முறைகள்

3. நிகர நாட்டு உற்பத்தி என்பது ____________.

   அ) மொத்த நாட்டு உற்பத்தி (–) தேய்மானம்

   ஆ) நிகரநாட்டுஉற்பத்தி (–) தேய்மானம்

   இ) தலாவருமானம் (–)தேய்மானம்

   ஈ) மொத்த உள்நாட்டு உற்பத்தி (–) தேய்மானம்

4. இந்தியாவின் தலா வருமானம் ____________.

அ) 220 டாலர்கள் ஆ)950 டாலர்கள்

இ)2930 டாலர்கள் ஈ) 600 டாலர்கள்

5. முதன்மைத்துறை என்பது ____________.

அ) வணிகம் ஆ) கட்டமைப்புத்துறை

இ) வேளாண்மைத்துறை ஈ) தொலைத்தொடர்புத்துறை

6. நாட்டு வருமானக்கணக்கீடு என்பது ____________.

அ) மொத்த பணமதிப்பு

ஆ)உணவுதானிய உற்பத்தியின்மொத்த மதிப்பு

இ) தொழில் பண்டங்களின் மொத்த மதிப்பு

ஈ) பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு

7. செலவின முறையில் நாட்டு வருமானம் என்பது ____________.

அ) உற்பத்தியின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது

ஆ) வருமானத்தின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது

இ) செலவின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது

ஈ) சேமிப்பின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது

8. வருமானமுறையில் நாட்டு வருமானம் என்பது ____________.

அ) செலவின் அடிப்படையில் கணக்கிடப்படுவது

ஆ) வருமானத்தின் அடிப்படையில் கணக்கிடப்படுவது

இ) சேமிப்பின் அடிப்படையில் கணக்கிடப்படுவது

ஈ) முதலீட்டின் அடிப்படையில் கணக்கிடப்படுவது

9. தலா வருமானம் சுட்டிக்காட்டுவது ____________.

அ)மக்களின் செல்வநிலையை ஆ) மக்களின் ஏழ்மைநிலையை

இ)மக்களின் வாழ்க்கைத்தரத்தை ஈ)மக்களின் கல்வி நிலையை

10. இந்திய நாட்டு வருமானத்தில் முதன்மைத்துறையின் பங்களிப்பு __________

அ) 15.8% ஆ) 25.8% இ) 58.4% ஈ) 12.8%

## ஆ) பின்வரும் வினாக்களுக்கு சிறுகுறிப்பு வரைக.

1. நாட்டு வருமானத்தை வரையறு.
2. நிகரநாட்டு வருமானத்தை எவ்வாறு கணக்கிடுவாய் ?
3. வருமானமுறையில் நாட்டு வருமானம்–சிறுகுறிப்பு வரைக.
4. தலா வருமானம் என்றால் என்ன ?
5. நாட்டு வருமானத்தை அறிவதன் அவசியம் இரண்டினை எழுது.
6. பணிகள் துறை என்றால் என்ன ?
7. தலையிடாக்கொள்கை –சிறுகுறிப்பு வரைக
8. நலம் நாடும் அரசுகளின் பாதுகாப்பு பணிகள் குறித்து எழுது.
9. மொத்த உள்நாட்டு உற்பத்தியை வரையறு.
10. நிகர உள்நாட்டு உற்பத்தி என்றால் என்ன ?

## இ) பின்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தியளவில் விடையளி.

1. நாட்டு வருமானத்தின் இரண்டு அடிப்படை கருத்துக்களை விவரி.
2. நாட்டு வருமானத்தை அறிவதன் அவசியம் யாது ?
3. நலம்நாடும் அரசுகளின் பணிகளை விவரி.
4. நாட்டு வருமானத்தை கணக்கிடும் முறைகளை விவரி.

## உ) செய்முறை பயிற்சி.

தமிழ்நாட்டின் தலா வருமானத்தை கண்டறிக.

# 2. விடுதலைக்குப்பின் இந்தியப் பொருளாதாரம்

## அறிமுகம்

இப்பாடத்தில் இந்தியப் பொருளாதாரத்தின் இயல்புகளையும், பிரிட்டிஷ் ஆட்சியின் போதும் விடுதலைக்குப் பிறகும் இந்தியாவின் பொருளாதா நிலை குறித்துக் அறிய இருக்கிறோம்.

## பிரிட்டிஷ் ஆட்சியில் இந்தியப் பொருளாதாரத்தின் நிலை

இந்தியப்பொருளாதாரம் கிராமப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. வேளாண்மை முக்கிய தொழிலாகக் காணப்பட்டதுடன் 70 விழுக்காடு மக்கள் வேளாண்மையை நம்பி வாழ்ந்தார்கள் ஒவ்வொரு கிராமமும் தங்களுக்கு தேவையான பண்டங்களை தாங்களே உற்பத்தி செய்து கொண்டன. பண்டங்கள் முழுதும் உள்ளுர் அங்காடியிலேயே விற்பனை செய்யப்பட்டன. வெளியூர் அங்காடிகளுக்கு பண்டங்கள் விற்பனைக்கு அளிக்கப்படவில்லை. அருகில் உள்ள கிராமங்களுடன் வர்த்தக தொடர்புகள் காணப்படவில்லை.

இந்தியாவில் வணிகம் மற்றும் தொழில் துறையானது நகரங்களை மையமாக கொண்டு செயல்பட்டன. இந்தியாவில் முக்கிய தொழிலாக ஜவளித்தொழில் காணப்பட்டது. கைவினைபொருட்கள் உற்பத்தியில் இந்தியா தலை சிறந்து விளங்கியது.

காளிகோ துணிகள் உற்பத்தியில் வங்காளமும், பட்டு நெசவில் பெனாரஸ்சும், கைத்தறியில் தமிழ் நாடும், சால்வை தயாரிப்பில் காஷ்மீரும், மரத்திலான பொருட்கள் தயாரிப்பில் லூதியானாவும் புகழ் பெற்றிருந்தன.

பிரிட்டிஷ் அரசு இந்தியாவை ஆட்சி செய்த பொழுது கிராமப் பொருளாதாரம் நலிவடைந்தது. இங்கிலாந்தின் தொழிற்புரட்சியானது இந்தியாவை இங்கிலாந்தின் வணிக மற்றும் பொருளாதார நலனுக்கு பயன்படுத்திக் கொண்டதுடன் இங்கிலாந்தின் மூலப் பொருட்களின் தேவையை ஈடுகட்டும் அமைப்பாக காணப்பட்டது. போக்குவரத்து, தொலைத்தொடர்பு, வேளாண்மை மற்றும் கல்வியில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் இந்தியப் பொருளாதாரத்தை நலிவடையச் செய்வதாகவே அமைந்தது.

## பிரிட்டிஷ் ஆட்சியின் முக்கிய விளைவுகள் கீழ்கண்டவையாகும்

1. கிராமப் பொருளாதாரத்தின் வீழ்ச்சி
2. இந்திய கைவினைப் பொருட்களின் புகழ் மங்கியது.
3. புதிய நிலஅமைப்புமுறை தோற்றம்.

எனினும் பிரிட்டிஷ் ஆட்சியானது இந்தியாவின் இயற்கை வளங்களை இங்கிலாந்தின் தொழிற் வளர்ச்சிக்கு முழுமையாகப் பயன்படுத்திக் கொண்ட போதிலும், பிரிட்டிஷ் ஆட்சி ஒருங்கிணைந்த இந்தியா தோன்றுவதற்கு காரணமாக அமைந்தது.

## விடுதலைக்குப்பின் இந்தியப் பொருளாதாரம்

நாட்டு விடுதலைக்குப்பின் இந்தியப் பொருளாதாரத்தை வளர்ச்சியடைச் செய்வதையே தலைவர்களும், திட்ட வல்லுநர்களும் முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தனர். முன்னாள் பிரதமர் ஜவகர்லால்நேரு கிராமப் பொருளாதாரத்தை வலுப்படுத்த விரும்பினார். எனவே வேளாண்மை, நீர்பாசனம் மற்றும் மின் உற்பத்தி திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்தார். விரைவான பொருளாதார வளர்ச்சியை அடைய பொதுத்துறையும் தனியார் துறையும் ஒருங்கினைந்து செயல்படும் கலப்புப் பொருளாதாரத்தை நடைமுறைபடுத்த நேரு தீர்மானித்தார்.

எனவே விரைவான பொருளாதார வளர்ச்சிக்கு ஐந்தாண்டுத் திட்டங்களே சிறந்தது என்று பரிந்துரைத்தார்.

ஐந்தாண்டுத் திட்டங்கள் முன்னாள் சோவியத் நாட்டில் இருந்து பெறப்பட்ட கருத்தமைவாகும். சோவியத் நாட்டில் ஏழாண்டுத்திட்டங்களே நடைமுறையில் இருந்தன.

இந்தியாவில் ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்ற இந்திய திட்டக்குழு 1950 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இந்தியப் பிரதமர் திட்டக்குழுவின் தலைவராகச் செயல்படுகிறார். திட்டக்குழுவின் பணிகளை ஒருங்கிணைக்க முழு நேர அளவில் செயல்படும் துணைத் தலைவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

## இந்திய ஐந்தாண்டுத் திட்டங்களின் முக்கிய நோக்கங்கள்

இந்திய ஐந்தாண்டுத் திட்டங்களின் முக்கிய நோக்கங்கள் பின் வருமாறு.

1. நாட்டு வருமானத்தை அதிகரித்தல்.

2. வருமான மற்றும் செல்வப்பகிர்வில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை குறைத்தல்.

3. வறுமையை ஒழித்தல்.

4. புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்.

5. வேளாண்மை உற்பத்தி மற்றும் தொழில் உற்பத்தியில் உள்ள இடர்பாடுகளை நீக்குதல்.

ஐந்தாண்டுத் திட்டங்களை செயல் படுத்த மாநில அரசுகளின் ஒத்துழைப்பைப் பெற வேண்டி தேசிய வளர்ச்சிக்குழு அமைக்கப்பட்டது. (National Development Council) இக்குழுவில் மாநில முதலமைச்சர்கள் உறுப்பினர்களாக செயல்படுகிறார்கள்.

இந்தியாவில் இதுவரை பத்து ஐந்தாண்டுத்திட்டங்கள் முடிவுற்றுள்ளது. பதினோராவது ஐந்தாண்டுத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## பதினோராவது ஐந்தாண்டுத் திட்டம் (2007–2012)

பதினோராவது ஐந்தாண்டுத் திட்டம் ஏப்ரல் 2007 தொடங்கப்பட்டது. இத்திட்ட காலம் 2007 முதல் 2012 வரையாகும்.

## பதினோராவது திட்டத்தின் நோக்கங்கள்

1. நீர்பாசன வசதிகள், கிராமங்கள் மின்மயமாதல் மற்றும் கிராமச் சாலைகளை மேம்படுத்த அரசு முதலீட்டை அதிகரித்தல்.

2. மின்சாரம் மற்றும் உரங்களுக்கான மானியத்தைக் குறைத்தல்.

3. வேளாண் ஆராய்ச்சியை ஊக்கப் படுத்துதல்.

4. சுற்றுச் சூழல் பாதுகாப்பை உறுதி செய்தல்.

5. வேலை வாய்ப்புகளை விரிவாக்குதல்.

6. கிராமபுற கட்டமைப்பு வசதிகளை பெருக்குதல்.

7. வறுமையை ஒழித்தல்.

8. தொடக்ககல்வியில் இடை நிற்றலை குறைத்தல்.

வேளாண் மற்றும் தொழில் வளர்ச்சியே நாட்டுப் பொருளாதாரத்தின் முக்கிய காரணிகளாய் அமைவதால் அவற்றைப் பற்றி நாம் காண்போம்.

## வேளாண் முன்னேற்றமும் உணவு உற்பத்தியும்

வேளாண்மை நம் நாட்டு பொருளாதாரத்தின் முதுகெலும்பாக திகழ்கிறது. நமது நாட்டின் நாட்டு வருவாயில் 40 விழுக்காடு வேளாண்மையில் இருந்தே பெறப்படுகிறது. எனவே, அரசு வேளாண் முன்னேற்றத்திற்கு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது.

## பசுமைப்புரட்சி

1967 ஆம் ஆண்டு இந்தியாவில் பசுமைப் புரட்சி அறிமுகப்படுத்தப்பட்டது. இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம் பசுமைப்புரட்சி என்ற செயல்முறையை நிலச்சீர்திருத்தம், அதிக விளைச்சல் தரும் வீரியமுள்ள விதைகள் பயன்பாடு மற்றும் மேம்படுத்தப்பட்ட பாசனவசதிகள் மூலமாக அறிமுகப்படுத்தியது.



பசுமை புரட்சியின் விளைவு

## நிலச்சீர்திருத்தம்

நில உச்சவரம்பு, இடைத் தரகர்களின் ஆதிக்கத்தை நீக்குதல் மற்றும் நிலக்குத்தகை போன்றவற்றிற்கான நிலச்சீர்திருத்தச் சட்டங்களை அரசு விரைவாகச் செயல்படுத்தி வேளாண் வளர்ச்சிக்கு அடிகோலியது. இதன் தொடர்பாக ஆச்சார்ய வினோபாவேயின் பூமிதான இயக்கம் நினைவு கூறத்தக்கது. பூமிதான இயக்கத்தின் மூலமாக மில்லியன் ஏக்கர் கணக்கான நிலங்கள் பெரும் நிலச்சுவான்தாரர்களிடம் இருந்து தானமாகப் பெறப்பட்டு நிலமில்லா ஏழை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.



ஆச்சார்ய வினோபாவே

## அதிக விளைச்சல் தரும் விதைகளை பயிரிடும் திட்டம்

பசுமைப் புரட்சி என்பதே கோதுமை மற்றும் அரிசி போன்ற உணவுப் பயிர்கள் உற்பத்தியை அதிகரிப்பதற்காக மிகுந்த விளைச்சல் தரும் வீரியமுள்ள விதைகளைப் பயன்படுத்துவதாகும். மேலும் அதிக விளைச்சல் தரும் வீரியமுள்ள விதைகளை பயிரிட நீர்ப்பாசன வசதிகள், இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக் கொல்லி மருந்துகளும் தேவைப்படுகின்றன.

பசுமைப்புரட்சியின் விளைவாக இந்தியாவின் பெரும்பான்மையான மாநிலங்களில் உணவு உற்பத்தி அதிகரித்தது. இதனால் இந்தியா உணவு உற்பத்தியில் தன்னிறைவை அடைந்தது. அதிக விளைச்சல் தரும் விதைகளை பயன்படுத்துவதற்கு இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனமும் இந்திய வேளாண் பல்கலைக்கழகங்ளான லூதியானா, பந்த்நகர் மற்றும் கோயம்புத்தூர் முக்கிய காரணமாகும்.

## தொழில்துறை



இந்துஸ்தான் கப்பல் கட்டும் தளம்–விசாகப்பட்டினம்

தொழிற்முன்னேற்றத்திற்காக பொதுத் துறையின் கீழ் பல தொழிற்நிறுவனங்கள் தொடங்கப் பட்டன. இந்துஸ்தான் கப்பல் கட்டும் தளம், சிந்திரி உரத்தொழிற்சாலை, ரயில் பெட்டி இணைப்புத் தொழற்சாலை மற்றும் காகித ஆலைகள் முக்கிய பொதுத்துறை தொழிற்நிறுவனங்களாகும். மேலும் கனரக தொழிற்சாலைகள், இயந்திர கட்டுமானத் தொழில்கள், இரும்பு வார்ப்பு தொழிற்சாலைகள், பெட்ரோலியம் மற்றும் வேதியியல் உரத்தொழில்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.

பொதுத்துறை நிறுவனங்கள் அரசால் நடத்தப்படுகின்றன. எ.கா. நெய்வேலி

பழுப்பு நிலக்கரி நிறுவனம், (NLC) பாரத் மிகுமின் நிறுவனம் (BHEL) பாரத் சஞ்சார் நிகாம் நிறுவனம் (BSNL) மற்றும் ஏர்–இந்தியாவாகும். தனியார் நிறுவனங்கள் தனியாரால் நிறுவகிக்கப்படுகின்றன. (எ.கா) அசோக் லேலண்டு, டிவிஎஸ் நிறுவனங்கள், கோத்ரெஜ் மற்றும் டிஐ சைக்கிள் ஆகும்.

## பொருளாதார சீர்திருத்தங்கள் 1991

இந்தியப் பொருளாரத்தில் 1991–ஆம் ஆண்டு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். 1991–ம் ஆண்டு உருவாக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கையின் நோக்கங்களை அடைய பல்வேறு பொருளாதார நடைமுறைகள் அறிமுகப்பத்தப்பட்டன.

தொழில்மயமாதலை விரைவுபடுத்த தொழில்உரிமம் வழங்கும் முறை இரத்து, அயல் நாட்டு முதலீட்டை வரவேற்றல் மற்றும் பொதுத்துறை, தனியார் துறையின் ஒருங்கிணைந்த செயல்பாடு போன்ற செயல்பாடுகளை அரசுமேற்க்கொண்டது.

பொருளாதார சீர்திருத்தின் காரணமாக அயல்நாட்டு முதலீடு இந்தியாவில் பன்மடங்காக அதிகரித்தது. பன்னாட்டு நிறுவனங்களான (Multinational Corporation) நோக்கியா, போர்டு, குண்டாய் மற்றும் எல் அண்டு டி போன்ற நிறுவனங்கள் இந்தியாவில் தொழில் நிறுவனங்களை தொடங்குவதன் மூலமாக முதலீடுகளை மேற்கொண்டன.

பன்னாட்டு நிறுவனங்கள் என்பது பலநாடுகளில் தங்களது தொழிற் நிறுவனங்களை தொடங்கி நடத்தி வரும் அமைப்புகளாகும்.

மேலும் சிறு தொழில்கள் மற்றும் குடிசைத் தொழில்கள் வளர்ச்சியடைய பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டன.

குடிசைத் தொழில் என்பது குடும்ப உறுப்பினர்களால் உள்ளுர் அங்காடியில் விற்பனை செய்வதற்க்காக பழமையான உற்பத்திமுறைகளால் நடத்தப்படும் தொழிலமைப்பாகும் எ.கா. கைத்தறி மற்றும் கயிறு திரித்தல்.



குடிசைத் தொழில்கள்

சிறு தொழில் நிறுவனங்கள் என்பது ஏறத்தாழ சிறு தொழிற்சாலைகளாகும். இவை பெரிய தொழிற்நிறுவனங்களைச் சார்ந்தே அமைந்துள்ள தொழில் அமைப்பாகும். எ.கா. திருச்சி மற்றும் இராணிப் பேட்டையில் அமைந்திருக்கும் பாரதமிகு மின் நிறுவனத்தைச் சார்ந்துள்ள (BHEL) சிறுதொழிற்சாலைகளாகும்.

பொருளாதார சீர்திருத்தின் குறிப்பிடத்தக்க அம்சங்கள் கீழ்க்கண்டவையாகும்;

1. தாராள மயமாதல்.
2. தனியார் மயமாதல்.
3. உலக மயமாதல்.

## 1. தாராளமயமாதல்

தாராளமயதால் என்பது தனியார் துறை தொழில் நிறுவனங்களுக்கான விதிமுறையும் கட்டுப்பாடுகளையும் திரும்பப் பெறுவதாகும். இக்கொள்கையின் மூலமாக பொதுத்துறை நிறுவனங்கள் மட்டுமே செயல்பட ஒதுக்கப்பட்ட தொழில்களில் தனியார்துறையும் செயல்படஅனுமதி வழங்கப்பட்டது. எ.கா. மின் உற்பத்தியில் தனியார் துறையும் செயல்பட அனுமதி வழங்கப்பட்டது.

## 2. தனியார் மயமாதல்

பொதுத் துறை நிறுவனங்களை தனியார் உடைமையாக்குவதே தனியார் மயமாதலாகும். மேலும் பொதுப்பயன்பாட்டு பணிகளில் தனியார் துறையும் செயல்பட அனுமதிப்பதாகும்.

## 3. உலக மயமாதல்

ஒரு நாட்டின் அங்காடியை பன்னாட்டு அங்காடியுடன் தொடர்புபடுத்துவதே உலகமயமாதலாகும். அதாவது, மூலப்பொருட்களை பல நாடுகளிலிருந்து பெற்று பண்டங்களை உற்பத்தி செய்து உலக நாடுகளுக்கு விற்பனைக்கு அனுப்பிவைப்பதே உலகமயமாதல் ஆகும்.

## அறிவியல் தொழில் நுட்பம்

இந்திய பொருளாதாரத்தில் அறிவியல் தொழில் நுட்பம் ஒரு முக்கிய அம்சமாகும். அறிவியல் தொழில் நுட்பத்தில் உலக நாடுகளிடையே இந்தியா முக்கிய இடத்தில் உள்ளது. குறிப்பாக அனுசக்தி, விண்வெளி ஆராய்ச்சி, வானவியல், விண் இயற்பியல், பேராழி ஆய்வு, உயிரி–தொழில் நுட்பம் மற்றும் வேதியியல் துறையில் சிறப்பான நிலையை அடைந்துள்ளது.

## அணு சக்தி திட்டங்கள்



அணுமின் நிலையம் கல்பாக்கம்

அதிகரித்து வரும் மின்சார தேவைகளை நிறைவு செய்ய அனுமின்சக்தி திட்டங்களே தீர்வு என்பதை 1954 ஆண்டிற்கு முன்னரே அரசு அறிந்து கொண்டது. எனவே அனுசக்தி தொழில் நுட்பங்களை மின் உற்பத்தி, வேளாண்மை, மருத்துவம் மற்றும் தொழிற்துறை ஆகிய அமைதிப்பணிகளுக்கு பயன்படுத்துவதையே முக்கிய கொள்கையாகக் கொண்டிருந்தது. தற்பொழுது இந்தியாவில் 17 அணுமின் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

## விண்வெளி ஆராய்ச்சி

விண்வெளியில் செயற்கைக் கோள்களை செலுத்தும் ஆறு நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும். இந்திய விண்வெளித்துறையின் கீழ் செயல்படும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் செயற்கைக்கோள்கள் மற்றும் தொலை நுண்ணர்வு (Remote Sensing) போன்றவற்றில் ஆராய்ச்சிகளை மேற்க்கொண்டுவருகிறது.



செயற்கைக்கோள் ஏவப்படுதல்

இந்தியாவில் முதன்முதலாக 1975–ம் ஆண்டு ஆர்யபட்டா என்கிற செயற்க்கைக்கோள் விண்ணில் செலுத்தப்பட்டது. கடந்த 60 ஆண்களில் இதுவரை 50 செயற்கைக் கோள்கள் வானில் வெற்றிகரமாகச் செலுத்தப்பட்டுள்ளது. 2008–ம் ஆண்டு சந்திராயன்–I விண்கலம் நிலவிற்கு வெற்றிகரமாக செலுத்தப்பட்டு நிலவில் நீர் இருப்பதை கண்டறிந்தது.

## பேராழி இயல் ஆய்வு



கடல்வாழ் உயிரினங்கள்

இந்திய கடலாய்வுத்துறை கடல்வாழ் உயிர்னங்கள் மற்றும் உயிரற்ற வளங்களை பாதுகாக்கவும், சுற்றுச்சூழலை பேணவும்

ஆராய்ச்சிகளை மேற்க்கொண்டு வருகிறது.

### உயிரி – தொழில்நுட்பம்

உயிரி தொழில்நுட்பத் துறையில் குறிப்பிடத்தக்க ஆராய்ச்சிகள் இந்தியாவில் மேற்க்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக வேளாண்மை, நலவாழ்வு, கால்நடை அறிவியல், சுற்றுசூழல், தொழிற்துறை போன்றவற்றில் ஆராய்ச்சிகளின் மூலமாக குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது. எ.கா. காலராவிற்கான வாய் வழி தடுப்பு மருந்து.

### தொலை தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பம்

தொலை தொடர்பு வசதிகளை அளிப்பதில் இந்தியா உலக நாடுகளிடையே பத்தாவது இடத்தில் உள்ளது. இந்தியாவில் 77.93 மில்லியன் தொலைபேசி தொடர்புகளும் 1.79 மில்லியன பொது தொலைபேசி நிலையங்களும் உள்ளன. 65.2 கோடி கைபேசி பயன்பாட்டாளர்கள் கைபேசிகளை பயன்படுத்துகிறார்கள். மேலும் 1 மில்லியன் கைபேசிகள் மாதந்தோறும் பெறப்படுகின்றன.

### தகவல் தொழில்நுட்பம்

கணிணி பயன்பாட்டின் மூலம் தகவல் மேலாண்மைக்கு கணிணிகளையும் மென்பொருட்களையும் பயன்படுத்து வதையே தகவல் தொழில்நுட்பம் என்கிறோம். இந்தியாவில் பெங்களூர், ஹைதராபாத் மற்றும் சென்னை முக்கிய தகவல் தொழில் நுட்ப மையங்களாகும். மென்பொருள் ஏற்றுமதியின் மூலமாக இந்தியாவிற்கு பெருவாரியான அன்னியச் செலாவணியாக கிடைகின்றது. மேலும் இந்திய இளைஞர்களுக்கு பெருவாரியான வேலை வாய்ப்புகளை வழங்குகின்றது. இன்போஜிஸ், விப்ரோ, எச்.சி.எல், காக்கனிசாண்ட் போன்றவை இந்தியாவின் முன்னனி தகவல் தொழில் நுட்ப நிறுவனங்களாகும்.



தகவல் தொழில்நுட்ப கோபுரம்

### இந்தியாவில் கல்வி வளர்ச்சி

2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்தியாவில் எழுத்தறிவு பெற்றோர் எண்ணிக்கை 64.8 விழுக்காடாகும். ஆண்களில் எழுத்தறிவு பெற்றோர் எண்ணிக்கை 75.25 விழுக்காடு ஆகும். பெண்களில் எழுத்தறிவு பெற்றோர் எண்ணிக்கை 53.67 விழுக்காடு ஆகும். இந்தியாவில் எழுத்தறிவு பெற்றோர் எண்ணிக்கை 560.68 மில்லியன்களாகும்.

இந்தியாவில் கேரள மாநிலத்தில் தான் மிக அதிகமாக 90 விழுக்காடு கல்வியறிவு பெற்றவர்கள் உள்ளார்கள். மிகக்குறைவான 47 விழுக்காடு எழுத்தறிவு பெற்ற மாநிலம் பீகாராகும். தமிழ் நாட்டில் எழுத்தறிவு பெற்றோர். 73.5 விழுக்காடாகும்.

### தொடக்கக்கல்வி

இந்திய அரசு 14 வயது வரை குழந்தைகளை பள்ளியில் சேர்ப்பதற்க்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுவருகிறது. சிறார் தொழிலாளர்கள் வேலைக்கமர்த்தப்படுவது தடை செய்யப்பட்டுள்ளது. தொடக்கப்பள்ளிகளில் 80 விழுக்காடு அரசு பள்ளிகளாகவோ அல்லது அரசின் உதவியோடோ செயல்பட்டுவருகிறது. 14 வயதிற்குட்பட்டோற்கான இலவசக்கட்டாயக் கல்வி 2009–ம் ஆண்டு சட்டத்தினபடி (Right of Children to Free and Compulsory Education Act of 2009) 14 வயதிற் குட்பட்டோருக்கு இலவச கட்டாயக்கல்வி அளிக்கப்பட்டு வருகிறது. மாவட்டத் தொடக்கல்வி மற்றும்

அனைவருக்கும் கல்வி (Sarva Siksha Abyan) திட்டங்களின் மூலம் திறன் மேம்பாட்டிற்கு பயிற்சி அளிப்பதன் வாயிலாக மாணவர் சேர்க்கை வீதம் அதிகரித்துள்ளது.

### இடைநிலைக் கல்வி

14 முதல் 18 வயது வரையிலான மாணவர்கள் பயிலும் இடைநிலைக் கல்வியில் 88.5 மில்லியன் மாணவர்கள் கல்வி கற்று வருகிறார்கள். இடைநிலைக் கல்வியின் சிறப்பியல்பாகத் திகழ்வது மேல்நிலைக் கல்வியில் தொழிற் கல்வி சேர்க்கப்பட்டுள்ளதாகும். மேலும் இடைநிலை கல்வி மேம்பாட்டிற்காக அனைவருக்கும் இடைநிலைக்கல்வி (Rastriya Madhyamic Siksha Abyan) திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

### உயர்கல்வி

உயர்கல்வி வழங்குவதில் சீனா மற்றும் அமெரிக்க நாடுகளுக்கு பிறகு இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது. உயர்கல்வி வழங்குவதில் பல்கலைக் கழக மானியக் குழு (University Grants Commission) முக்கிய பங்காற்றுகிறது. இந்தியாவில் 2009–ஆம் ஆண்டு வரை 20 மத்திய பல்கலைக் கழகங்களும் 215 மாநில பல்கலைக் கழகங்களும் 100 நிகர்நிலை பல்கலைகழகங்களும், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த 13 நிறுவனங்களும் செயல்பட்டுவருகின்றன. மேலும் 16000 கல்லூரிகளும் பெண்களுக்கென்று தனியாக 1800 கல்லூரிகளும் செயல்பட்டு வருகின்றன. உயர்கல்வியில் அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறைக் கல்விக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

உலகப் புகழ் வாய்ந்ததாக இந்திய தொழில் நுட்ப நிறுவனமும் (I.I.T–Indian Institute of Technology) இந்திய மேலாண்மை நிறுவனமும் (I.I.M–Indian Institute of Management) விளங்கி வருகின்றது. மைய மற்றும் மாநில அரசுகள் கல்வி வளர்ச்சிக்கு தேவையான நிதி ஆதாரங்களை வழங்கிவருவதுடன் பொருளாதார வளர்ச்சி அடைய அனைத்து தரப்பு மக்களும் கல்வி கற்க வேண்டும் என்பதை முக்கிய நோக்கமாக கொண்டுள்ளது.

### தமிழ்நாட்டின் சமூக, பொருளாதார முன்னேற்றங்கள்

சமூக பொருளாதார முன் னேற்றத்தில் தமிழ்நாடு இந்தியாவில் மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது.

### 1. கல்வி

#### அ. தொடக்க கல்வி

தொடக்கக்கல்வி முன்னேற்றத்திற்கு முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் திரு.கு.காமராசரே முக்கிய காரணமாவார். தொடக்கக்கல்வியில் அனைத்து குழந்தைகளும் பள்ளிக்குச் செல்லும் வாய்ப்பு முழுவதுமாக வழங்கப்பட்டுள்ளது. அனைத்து கிராமங்கள் மற்றும் குடியிருப்புகளில் தொடக்கப்பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. அனைத்து மாணவர்களையும் பள்ளியில் சேர்ப்பதற்கும், இடைநிற்றலை தவிர்ப்பதற்கும் மற்றும் கல்வியில் முழு முன்னேற்றம் அடையவும் தமிழகஅரசு சத்துணவு மற்றும் இலவச பேருந்து வசதி ஆகியவற்றை வழங்கி வருகின்றது.

சத்துணவு திட்டத்தின் கீழ் பள்ளிகளியே தினந்தோறும் உணவு தயாரிக்கப்படுவதுடன் வாரத்திற்கு ஐந்து நாட்கள் முட்டையும் வழங்கப்படுகிறது. மேலும் தொடக்கக் கல்வி முன்னேற்றத் திற்காக தமிழ்நாடு அரசு மைய அரசுடன் இணைந்து அனைவருக்கும் கல்வி திட்டத்தை (Sarva Siksha Abhiyan) செயல்படுத்தி வருகிறது.

### ஆ. இடைநிலைக்கல்வி

தொடக்கக்கல்வியையும் உயர் கல்வியையும் இணைக்கும் பாலமாக இடைநிலைக் கல்வி விளங்குகின்றது. மாணவர்கள் ஊக்கத்துடன் கல்வி கற்க பதினோராம் வகுப்பு மாணவர்களுக்கு இலவச மிதி வண்டிகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு மடிக்கணினி (LapTop) வழங்கப்படுகிறது. வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கு ஏதுவாக கணினிக்கல்வியும் தொழிற் கல்வியும் (Vocational Educational) வழங்கப்பட்டு வருகின்றது. இடைநிலைக் கல்வியை அனைவரும் பெறுவதற்காகவும் அனைத்து மாணவர்களையும் சமுதாய பொறுப்புணர்வுடன் பொருளாதாரநிலையில் உயர்வடையச்செய்யவும் மத்திய அரசின் அனைவருக்கும் இடைநிலைக்கல்வி (Rastriya Madhyamic Siksha Abyan) திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### இ. ஆசிரியர் கல்வி

தமிழ் நாட்டில் 30 மாவட்டங்களில் ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் (District Institute of Education and Training ) செயல்பட்டு வருகின்றது. கல்வி கற்பித்தலில் பணி தொடர்பான திறன்களுக்கு பயிற்சி வழங்கி சிறந்த ஆசிரியர்களை உருவாக்க பயிற்சி அளிக்கப்பட்டுவருகின்றது.

### ஈ. உயர்கல்வி

உயர்கல்வி வழங்குவதில் தமிழ்நாடு இந்தியாவில் முன்னணி மாநிலமாக திகழ்கிறது. நலிவுற்ற, கிராமப்புற மாணவர்களை முழுமையாக கல்லூரிகளில் சேர்த்து அவர்கள் தொடர்ந்து கல்வி பெறும் வாயப்பினை வழங்குகின்றது. அரசின் முக்கிய நோக்கமே உயர்கல்வியில் 11.72 சதவீதமாக உள்ள உயர்கல்வி சேர்க்கை விகிதத்தை 2020–ஆம் ஆண்டில் 25% உயர்த்துதல் ஆகும்.

## 2. வேளாண்மை

தமிழக மக்களின் வாழ்வாதாரமாக விளங்குவது வேளாண்மையாகும். தமிழ் நாட்டின் முக்கிய உணவுப் பயிர்கள் நெல், சோளம், கம்பு மற்றும் கேழ்வரகாகும்.

தமிழ்நாட்டின் முக்கிய வணிகப் பயிர்கள் கரும்பு, பருத்தி, சூரியகாந்தி, தேங்காய், முந்திரி, எள் மற்றும் நிலக்கடலையாகும். முக்கிய தோட்டப் பயிர்கள் காப்பி, தேயிலை, ஏலக்காய் மற்றும் இரப்பராகும். தமிழ்நாட்டின் வேளாண் உற்பத்தி நிலசீர்திருத்தம் மற்றும் புதிய வேளாண் முறைகளினாலும் அதிகரித்து வருகிறது.

## 3. தொழில் முன்னேற்றம்

தமிழ் நாடு அரசு தொழில் முன்னேற்றத்தை ஊக்கப்படுத்தி வருகிறது. சிமெண்ட், ஜவுளி, சர்க்கரை, பெட்ரோலியம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்றவை தமிழ் நாட்டின் மிக முக்கிய பெருந்தொழில்களாகும்.

## 4. மின்சாரம்

தமிழ்நாட்டின் மின் உற்பத்தி நிலையங்கள் கீழ்க் கண்டவையாகும்.

### 1. அனல்மின் உற்பத்தி



அனல் மின் நிலையம்–நெய்வேலி

தமிழ்நாட்டில் எண்ணூர், தூத்துக்குடி, நெய்வேலி, மற்றும் மேட்டூரில் அனல் மின் உற்பத்தி நிலையங்கள் உள்ளன.

**2. நீர்மின் நிலையங்கள்**

தமிழ்நாட்டில் நீர்மின் நிலையங்கள் மேட்டூர், குந்தா, பெரியார் அணை, கோதையாறு அணை, பைக்காரா, சிங்காரா மற்றும் மாயாரில் அமைந்துள்ளன.

**3. அணு மின் சக்தி உற்பத்தி**

அணுமின் சக்தி உற்பத்தி நிலையங்கள் கல்பாக்கத்திலும் கூடங்குளத்திலும் அமைந்துள்ளன.

**4. காற்று மின் சக்தி**

மரபுசாரா மின் உற்பத்தியில் காற்று மின் சக்தி தமிழ்நாட்டில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் காற்றாலைகள் உள்ளன.



காற்றாலை மின் உற்பத்தி

5. உயிரி பொருட்கள் எரிசக்தி (Bio-Mass Energy) இது ஒரு மரபு சாரா மின் உற்பத்தி முறையாகும். இம்முறையில் தருமபுரி மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் மின் உற்பத்தி நடைபெறுகிறது.

உயிரி பொருட்கள் எரிசக்தியானது வேளாண்பொருட்களின் கழிவிலிருந்து பெறப்படுகிறது.

தமிழ்நாட்டில் அதிகரித்து வரும் மின்தேவையை ஈடுகட்ட 8315 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. தேசிய அனல்மின் கழகமும் (National Thermal Power Corporation Ltd) தமிழ்நாடு மின்சார வாரியம் ஆகியவற்றின் கூட்டு முயற்சியாக திருவள்ளூர் மாவட்டதில் வல்லூரில் அனல்மின் நிலையத்தை அமைத்து வருகிறது. இத்திட்டங்கள் தமிழ் நாட்டின் மின் தேவையை நிறைவு செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**போக்குவரத்து**

தமிழ் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு சாலை போக்குவரத்து வசதிகளே முக்கிய காரணமாகும். மேலும் இந்தியா முழுமையும் இரயில் போக்குவரத்தால் இணைக்கப்பட்டுள்ளது. புதிய இருப்புப்பாதை அமைப்பதற்கான ஆய்வுப் பணிகளநடைபெற்று வருகின்றன. சென்னையில் எம்.ஆர்ட்டி.எஸ் (Mass Rapid Transit System) மற்றும் சென்னை பெருநகர ரெயில் திட்டத்தின் (Chennai Metro Rail Project) மூலமாக போக்குவரத்து திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டின் மிகப் பெரிய துறைமுகங்கள் சென்னை, எண்ணூர் மற்றும் தூத்துக்குடியாகும்.



சென்னை துறைமுகம்

சிறிய துறைமுகங்கள் கடலூர் மற்றும் நாகப்பட்டினமாகும். தமிழ்நாட்டின் விமானநிலையங்கள் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலம் மற்றும் தூத்துக்குடி ஆகியவையாகும்.

மைய மற்றும் மாநில அரசுகளின் முயற்சியால் வேளாண் மற்றும் தொழிற்துறையில் இந்தியா விரைவான பொருளாதார வளர்ச்சி பெற்று வருகிறது. எதிர் காலங்களில் இந்தியா "வல்லரசாக" உருவாகும் என்பதில் ஐய்யம் இல்லை.

## பயிற்சி

### அ) சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுது .

1. இந்தியாவில் ஐந்தாண்டுத்திட்டம் என்ற கருத்தமைவு

அ) சோவியத் இரஷ்யாவிலிருந்து பெறப்பட்டது.

ஆ) அமெரிக்க ஐக்கிய நாடுகளிலிருந்து பெறப்பட்டது

இ) இங்கிலாந்து நாட்டிலிருந்து பெறப்பட்டது

ஈ) ஐக்கிய அரபு நாடுகளிலிருந்து பெறப்பட்டது

2. பதினோறாவது ஐந்தாண்டுத் திட்டகாலம்

அ) 1956–61 அ) 1997–2002 இ) 2002–2007 ஈ) 2007–2012

3. இந்தியத் திட்டக்குழுவின் தலைவர்

அ)குடியரசுத்தலைவர் ஆ) பிரதமர்

இ) நிதியமைச்சர் ஈ)குடியரசுத் துணைத்தலைவர்

4. இந்தியாவில் திட்டக்குழு அமைக்கப்பட்ட ஆண்டு

அ)1962 ஆ)1950 இ)1956 ஈ) 1949

5. இந்தியப்பிரதமர் நேரு இந்தியப் பொருளாதாரம்

அ) கலப்பு பொருளாதாரமாக அமைய விரும்பினார்

ஆ)சமதர்ம பொருளாதாரமாக அமைய விரும்பினார்

இ) முதலாளித்துவ பொருளாதாரமாக அமைய விரும்பினார்

ஈ) பணப் பொருளாதாரமாக அமைய விரும்பினார்

6. பசுமை புரட்சி நடைமுறைபடுத்தப்பட்ட ஆண்டு

அ) 1967 ஆ) 1977 இ) 1987 ஈ) 1957

7. பூமிதான இயக்கத்தை தொடங்கியவர்

அ)ஜெயபிரகாஷ் நாரயண் ஆ) ஜவஹர்லால்நேரு

இ) ஆச்சார்யவினோபாவே ஈ) டாக்டர் ராஜேந்திர பிரசாத்

8. இந்தியப் பொருளாதாரத்தில் முக்கியத்துவம் வாய்ந்த ஆண்டு

அ) 1981 ஆ)1991 இ) 2001 ஈ) 2010

9. செயற்கைக்கோள் மற்றும் தொலைதொடர்புத்துறை ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு பொறுப்புவகிக்கும் நிறுவனம்

அ) இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம்

ஆ) இந்திய மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம்

இ) இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம்

ஈ) இந்திய அறிவியல் மற்றும் தொழில் நுட்ப ஆராய்சி நிறுவனம்

10. 2001 ஆம் ஆண்டு மக்கட்தொகை கணகெடுப்பின் படி எழுத்தறிவு பெற்றோர் எண்ணிக்கை

அ) 64.8% ஆ) 65.8% இ) 66.8% ஈ) 67.8%

**ஆ) கீழ்க்கண்ட வினாக்களுக்கு சிறு குறிப்பு வரைக.**

1. பதினோறாவது ஐந்தாண்டு திட்டத்தின் மூன்று நோக்கங்களை எழுது
2. பசுமைபுரட்சி குறித்து சிறு குறிப்பு வரைக
3. கலப்புப்பொருளாதாரம் என்றால் என்ன ?
4. பன்னாட்டு நிறுவனங்கள் – சிறுகுறிப்பு வரைக
5. குடிசைத்தொழில் – சிறுகுறிப்பு வரைக
6. தாராளமயமாதல் என்றால் என்ன ?
7. தனியார்மயமாதல் என்றால் என்ன ?
8. உலகமயமாதல் – சிறுகுறிப்பு வரைக
9. தமிழ்நாடு அரசின் ஏதேனும் நான்கு நலத்திட்டங்களை எழுது
10. தமிழ்நாட்டின் போக்குவரத்து முன்னேற்றம் குறித்து சிறுகுறிப்பு வரைக

**இ) கீழ்க்கண்ட வினாக்களுக்கு ஒரு பத்தியில் விடை எழுது.**

1. பதினோறாவது ஐந்தாண்டு திட்டத்தின் நோக்கங்களை விவரி
2. பசுமைப் புரட்சியை விளக்கு
3. 1991 ஆம் ஆண்டின் பொருளாதார சீர்திருத்தத்தை விவரி
4. தமிழ் நாட்டில் நடைமுறை படுத்தப்படும் அரசு நலத்திட்டங்களை எழுது
5. தமிழ்நாட்டின் மின்சக்தி திட்டங்களை விவரி.

**ஈ) செய்முறைப் பயிற்சி.**

உனது பகுதியில் உள்ள முக்கிய வேளாண் பயிர்களை கண்டறிக.